# ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்

எனும் நூலின் சுருக்கம்

சுருக்கியவர்

அஷ்ஷேக் முஹம்மத் பின் ஸுலைமான் பின் அப்துல்லாஹ் அல்முஹன்னா

அணிந்துரை

அஷ்ஷேக் அப்துல் அஸீஸ் பின் மர்ஸூக் அத்தரீபீ

# مختصر

# جامع

# العلوم والحكم


لابن رجب الحنبلي رحمه الله

اختصره وعلق عليه:
محمد بن سليمان بن عبد الله المهنا

قدم له وعلق عليه :
الشيخ المحدث: عبد العزيز بن مرزوق الطريفي

بسم الله الرحمن الرحيم

# அணிந்துரை

## ஹதீஸ் துறை அறிஞர் அப்துல் அஸீஸ் அத்தரீபீ

தனது மார்க்கத்தின்பால் எமக்கு வழிகாட்டி, தனது அத்தாட்சி ஆதாரங்கள் மூலம் எமது உள்ளத்தை ஒளிபெறச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லா புகழும். அவன் காட்டிய அந்நேர்வழியை பற்றிப் பிடிக்கவும், அவன் எமக்களித்துள்ள பேருபகாரம், அருட்கொடைகள் நிலைத்திருக்கவும் கண்ணியமான அவனிடமே வேண்டுகிறோம்.

குறைந்த சொற்களில் அதிக கருத்துக்களை உள்ளடக்கியிருப்பதன் மூலம் வஹீ (இறைச் செய்தி) தனித்து நிற்கின்றது. இதனைத்தான் நபி (ஸல்) அவர்கள் தனது பொன்மொழியில் “ஜவாமி உல் கலிம்” (ஒருங்கிணைந்த பொருள்களைத்தரும் சொற்றொடர்) எனஅடையாளப்படுத்தியுள்ளார்கள். (புஹாரி 2977)

இது போன்று சிறப்பான இரத்தினச் சுருக்கத்தைக் கொண்டு வருவது மனித சக்தியால் இயலாத காரியம் என்பதில் (வஹியில்) உடன்படும், முரண்படும் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துள்ளனர். இது ஈருலக நலவுகளையும் தன்னகத்தே கொண்டது. அவ்வார்த்தைகள் நிலைமைக்கு ஏற்ப சேர்ப்பு மற்றும் உள்ளடக்கத்தில் மாறுபடுகின்றது. இவ்வொருங்கிணைந்த சொற்றொடர்கள் அல்குர்ஆன், ஸுன்னா இரண்டிலும் சரிசமமாக உள்ளது. ஏனெனில் இரண்டுமே வஹீயாகும். “அவர் மனோஇச்சைப்படி பேசுவதில்லை. அது அவருக்கு அறிவிக்கப்படும் வஹியேயன்றி வேறில்லை.” (அந்நஜ்ம் : 3, 4)

ஸுன்னாவில் சில பொன்மொழிகள் உள்ளன. அறிஞர்கள் தொகுத்தல், நூலுருப்படுத்தல், விரிவுரை செய்தல், கருத்துரைத்தல் என பல கோணங்களில் அவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர். அவை கருத்துச் செறிவுள்ள இரத்தினச் சுருக்கமான வார்த்தைகள். அதிலுள்ள பொருளணி, அணி இலக்கணம், சொல்லணி, கருத்துச் சுருக்கம், மொழிநடை, சொற்பொழிவு, இலக்கியம் போன்றவற்றை விவரிக்க ஆரம்பித்தால் பேனா மைகள் தீர்ந்திடும் அளவிற்கு குறைந்த சொற்களில் நிறைய கருத்துக்கள் உள்ளதைக் காணலாம்.

இது முஹம்மதிய சமூகத்தின் தனித்துவமாகும். இவ்வொருங்கிணைந்த சொற்றொடர்களில் பல அறிவுத் தகவல்கள் உள்ளன. "அவன் தான் நாடுவோருக்கு ஞானத்தை வழங்குகின்றான். எவர் ஞானம் கொடுக்கப் படுகின்றாரோ அவர் நிச்சயமாக அதிக நன்மைகள் வழங்கப்பட்டவராவார். சிந்தனையுடையோர் தான் படிப்பினை பெறுவார்கள்" (அல்பகரா : 269) எனவே அல்குர்ஆன், ஸுன்னா ஆகிய இரண்டு அறிவுகளும் கொடுக்கப்பட்டவர் முன்னோர்களுக்கு வழங்கப்படாத வேத அறிவுகள் கொடுக்கப்படுகின்றார். ஏனெனில் அவர்களைப் பார்த்து அல்லாஹ் "(நபியே) உயிர் எனும் 'ரூஹ்' குறித்து உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். அதற்கு நீர், 'ரூஹ்' என் இரட்சகனின் கட்டளைப்படியே இருக்கின்றது என்று கூறுவீராக! (அது குறித்து) சொற்ப அறிவே நீங்கள் வழங்ப்பட்டிருக்கின்றீர்கள்" (அல்இஸ்ரா : 85) என்று கூறுகின்றான். நபிமொழிகளின் குறைந்த சொற்களானது அதிக அறிவுகளைக் கொண்டுள்ளன.

மேற்கண்ட வகை நபிமொழிகளைத் தனியாகத் தொகுத்த நூற்களில் இமாம் யஹ்யா பின் ஷரபுந் நவவீ (ரஹ்) அவர்கள் எழுதிய "அல்அர்பஊன பீ மபானில் இஸ்லாமி வகவாஇதில் அஹ்காம்" எனும் 40 நபிமொழித் தொகுப்பு முக்கியமானதாகும். இத்துறையில் இமாமவர்களின் இந்நூல்தான் மையக் கல்லாகும். பேரறிஞர்கள் முதல் சிறிய மாணவர்கள் வரை அனைவரும் இதனை விளங்குவதிலும் மனனம் செய்வதிலும் கவனம் செலுத்தியுள்ளனர். இமாம் அபூ அம்ர் இப்னுஸ் ஸலாஹ் (ரஹ்) அவர்கள் தொகுத்த 26 நபிமொழிகளை உள்ளடக்கிய "அல்அஹாதீஸுல் குல்லிய்யா" எனும் நூலே இதன் மூல நூலாகும். இமாம் நவவீ அவர்கள் மேலும் 16 நபிமொழிகளை இணைத்து 42 ஆக அதிகரித்துள்ளார்கள்.

இதற்கு முன்னரும் இமாம்களான இப்னுல் முபாரக், இப்னுஸ் ஸுன்னீ போன்றோர் இவ்வாறான ஒருங்கிணைந்த சொற்றொடர்களை உள்ளடக்கிய நபிமொழிகளைத் தொகுத்துள்ளனர். எனினும் தெரிவு முறையிலும், பலத்திலும் இமாம் நவவி அவர்கள் மிகைத்து விட்டார்கள். அவர்கள் பதிந்துள்ள சில நபிமொழிகளின் கருத்துகளில் அனைத்து அறிஞர்களும் ஏகோபித்திருந்தாலும் அவற்றில் சில முரண்பாடுகள் உருவாகாமலில்லை.

அறிஞர்கள் இந்நூலில் அதிகம் கவனம் செலுத்தியுள்ளனர். இது போன்ற எந்தவொரு சிறு நூலிற்கும் எழுதப்படாத அளவு 100 க்கும் மேற்பட்ட நூல்களும், கருத்துரைகளும் இந்நூலிற்குக் கிடைத்துள்ளன. இத்தகைய படைப்புக்களில் பெறுமதி வாய்ந்த, அதிகமான சட்டங்கள், ஸலபுகளின் அதிகமான செய்திகள்,

அறிவிப்பாளர் வரிசை, கருப்பொருள் ஆய்வுகள் போன்றவற்றை உள்ளடக்கிய முன்னுதாரணமான நூலாக இமாம் இப்னு ரஜப் அல்ஹன்பலீ (ரஹ்) அவர்கள் எழுதிய “ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்” எனும் நூல் திகழ்கின்றது.

நூலாசிரியரைப் பற்றி அறிந்தவர் அந்நூலில் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப் படமாட்டார். ஒரு பொருள் அதன் மூலத்திற்கே மிக ஒப்பாகின்றது. அதிலிருந்து வரும் விடயங்கள் ஆச்சரியமில்லை. ஏனெனில் இமாமவர்கள் ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை, கருப்பொருள் இரண்டையும் கற்றுத் தேர்ந்த, ஏனைய அறிவிப்பாளர்களை விமர்சிக்கும் தகுதி பெற்றவர். ஹதீஸ் கலையின் நுட்பமான, உள்ரங்கமான விடயங்களை அறிவதில் அவருக்கு நிகராக யாரும் அவருக்குப் பின்னால் வரவில்லையென்று கூறினாலும் மிகையாகாது. சிறந்த சமூகங்களாகிய ஸலபுகளின் கூற்றுக்கள், அவர்கள் வாழ்ந்த காலப்பகுதி ஊர், ஒவ்வொருவரினதும் துறை போன்ற அனைத்தையும் துறை போகக் கற்றவர். இவர் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) அவர்களின் பாதையில் அடியெடுத்து வைத்து, அவர்களுடைய கைத்தடியாலேயே இதைப் பறிப்பவர். இவருடைய “ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்” எனும் இந்நூல் இதற்கு சிறந்த சான்றாகும். யார் தான் இவரை நெருங்க முடியும்?

இந்நூலின் மூலம் பலர் கற்றுப் பயனடைந்துள்ளனர். அளவில் பெரிதாயினும் ஓரிடம் கூட அறிவியல் தகவலின்றில்லை. நூலாசிரியர் சில விடயங்களை விரிவாகப் பேசியிருப்பது பொதுமக்கள், மற்றும் ஆரம்ப நிலை மாணவர்களால் முழுப் பயனையும் அடைய முடியாமல் போய்விட்டது. அதனைப் பார்ப்பவரெல்லாம் முழுப்பலனையும் அடைந்தவரல்லர். ஆனால் விவேகமுள்ளவன் இந்நூலில் எப்பக்கம் பிரட்டினாலும் பயனடைவான்.

ஹதீஸ்களிலுள்ள கலைச் சொற்களை விளக்குவதில் நூலாசிரியரின் கரைகண்ட ஆய்வு, அதற்கான சான்றுகளை அல்குர்ஆன், ஸுன்னா மற்றும் ஸலபுகளின் கூற்றுக்களிலிருந்து பெறுதல், ஹதீஸ் இடம்பெறும் நூல்களைக் குறிப்பிடுதல், மற்றும் அதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிதல், மொழியியல் நுட்பங்கள், சட்டவியல் வரையறை, விதிமுறைகள் போன்றவற்றில் கடைபிடிக்கும் அருமையான, துல்லியமான விரிவாக்கத்தின் மூலம் இந்நூல் தனித்து நிற்கின்றது. அத்துடன் நூலாசிரியரின் ஸ்திரத்தன்மை, ஆழ்ந்த செயலீடுபாடு, அனைத்துத் துறைகளிலும் உள்ள விசாலமான அறிவு என்பதனையும் மேற்கண்ட நூலின் உள்ளடக்கம் சுட்டிக்காட்டுகின்றது.

ஆரம்ப நிலை கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையவும் துறை சார்ந்தவர்களுக்கு குறிப்பேடாக இருக்கவும் இது போன்ற விரிவான நூற்கள் நூலாசிரியரின் குறிக்கோள் சிதைவடையாத விதத்தில் சுருக்கப்படும் தேவையிலுள்ளன. இது அனைவரும் திறன்படச் செய்யும் காரியமல்ல. மூல நூற்கள் புதுமையான படைப்புகள் வேறுபடுவதைப் போன்று அந்நூற்களிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்ட சுருக்க நூற்களும் வேறுபடுகின்றன. ஏன், திறமையற்றவர்களுக்கு நூலுருப்படுத்தத் தொடங்குவதை விட சுருக்க நூற்கள் கடினமானதாக உள்ளன.

ஒரு நூலின் சுருக்கம் என்பது அதன் வார்த்தைகள், எழுத்துக்கள் குறைவதல்ல. மாறாக சுருக்குபவர் செய்ய வேண்டியது வார்த்தைகள் கருத்துக்களில் மூடல் நிலை ஏற்படாதளவு குறைப்பதும், (வசனத்தின்) ஒரு பகுதி மூலம் முழுமையாகப் புரிய வைக்க முடியுமாயின் மீதியை நீக்குவதும்தான். புரிய வைக்கும் அளவைக் காண மேலதிகமான வார்த்தைகளை விரிவுபடுத்துதலானது மக்கள் தேவைகள் வேறுபடக்கூடிய மேலதிகப் பதிவுகளாகும். நூல்ச்சுருக்கத்தில் கருத்துத் தெளிவு, இலகு நடை ஆகியன காணப்படாவிட்டால் அது முறையற்ற திணிப்பாகவும், அன்னல் பின்னலாகவும் தான் இருக்கும். அத்துடன் அதனைப் புரிய செலவிடும் நேரத்தை மூல நூலைப் புரிய செலவிட்டிருந்தால் பல பயன்பாடுகளை எட்டியிருக்கலாம். இது போன்ற சுருக்கங்களைத் தேடியலைவது கால நேரத்தை வீணடிப்பதாகும்.

புரிந்து கொள்ள முடியாத சுருக்கமான நூற்களை மக்கள் சார்ந்திருப்பது, வார்த்தை, தகவல்கள் குறைந்த நூற்களை மனனமிவிடுவதுடன் போதுமாக்கிக் கொள்வது, புதிர்களை அவிழ்ப்பதிலும், மூடலான விடயத்தை விளங்குவதிலும் நேரத்தை வீணடிப்பது, தொடர்ந்து வாசிக்கும் போது குறுகிய காலத்தில் திறனைப் பெற முடியுமான, தெளிவான ஆதாரங்களுள்ள விசாலமான கருத்துக்களுள்ள பெரிய விரிவுரை, அடிப்படை நூற்களைப் பிரித்துப் பார்க்காமலிருப்பது, முன்னைய அறிஞர்களின் நூற்களைப் புறக்கணிப்பது போன்றனவே அறிவு மங்கிடவும், திறமை குன்றிடவும் பிரதான காரணம் என பிரபலமான பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனை நேரடியாக அனுபவித்தவர்கள் தான் அறிந்து கொள்வார்கள்.

நூல்களை சுருக்கும் பணியில் ஈடுபடுபவர் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்வது அவசியமாகும். தனிச் சொற்கள் என்ற ரீதியில் அவற்றிற்கிடையே தராதரம், வேறுபாடு கிடையாது. மாறாக அடுத்து வரும் வார்த்தையுடன் நாம் தெரிவு செய்த வார்த்தை ஒத்துப் போகின்றதா?

என்பதில் தான் வேறுபாடு ஏற்படுகின்றது. சில படைப்பாளிகளின் நிலை என்னவெனில் எவ்வாறு வசனமமைப்பது? எதை நீக்கி எதை சேர்ப்பது? போன்ற எதுவும் அறியாதவர்களாகவே முன்சென்ற, மற்றும் சமகால அறிஞர்களின் நூல்களை சுருக்குகின்றனர்.

மனிதர்களுக்கு உறவுத் தொடர் இருப்பது போன்று பேச்சிற்கும் தொடர்மொழி இருப்பதை அறியாமலிருக்கின்றனர். ஒரு பிள்ளைக்குத் தந்தை இருக்கும் போது பாட்டனின் இனிசெல்லை சேர்ப்பது முடியுமாயிருந்தாலும் குறையாகவே பார்க்கப்படுகின்றது. அதிகமானோர் ஒரு விடயத்தில் அனுமதிக்கும், பரிபூரணத்துவமின்மைக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை.

இது போன்றவர்களின் சிந்தனையை ஆட்கொள்வது நூலின் பக்கங்களையும் வரிகளையும் எண்ணுவதே தவிர கருத்துக்கள் பரிபூரணமாக முழுமை அடைந்துள்ளனவா? என்பதல்ல. இவர்களின் நிலையானது தாமும் நூல்களை சுருக்குபவர்கள், எழுத்தாளர்கள் என்ற பட்டியலில் இடம்பெற வேண்டும் என்ற பேரவாவில் கல்லை எறிந்து விட்டு விதையை வாக்களிப்போர் போன்றாகும். இது போன்றவர்களிடம் பெரும்பாலும் போட்டி மனப்பான்மை தான் மிகைத்திருக்கும்.

இச்சுருக்கங்களில் கண்ணோட்டம் விடுபவர் சிலதை ஏற்று மற்றும் சிலதை மறுதலிப்பதைக் காணலாம். இதனால்தான் முன்னோர்கள் இதில் தேவையற்றிருந்தார்கள். ஏனெனில் இவை அறிவை அதன் ஊற்றுக் கண்ணிலிருந்து கிளர்ந்தெடுப்பதையும், அதன் ஆழத்திலிருந்து ஆய்வு செய்வதையும் விட்டும் திசை திருப்பி விடுகின்றன. உள்ளத்தால் அறிந்து, தனது சிந்தனையைப் பயன்படுத்தி, ஆழமாக சிந்தித்து அதில் கரை கணடவர்களைத் தவிர யாரும் இதனைத் திறன்படச் செய்ய மாட்டார்கள். அதுவும்கூட சுலபமான காரியமல்ல. மாறாக இது ஒரு கடினமான குறிக்கோள், சுலபமற்ற இலட்சியம்.

அறிவை அதன் அசல் ஊற்றிலிருந்து உறிஞ்சி எடுப்பதை பேரறிஞர்கள் போதிப்பது வழக்கம். சாக்கடை தண்ணீர் அதன் பெயரளவில் இருந்தாலும் நீரின் அசல் தன்மையை மாற்றிவிடும். அறிவில் அசல் ஊற்றுக்கள் (மூல நூல்கள்) தான் உள்ளத்திற்கு மிகச் செழுமையானவை. சத்தியத்திற்கு மிக இனிதானது. மொழிநடைப் பற்றாக்குறைக்கு மிகக் களங்கமற்றதாகும்.

சுருக்க நூல்களிலிருந்து எடுப்பதை நான் அதிகம் ஆதரிக்காமல் இருந்து வந்தேன். உள்ளம் அதனை ஏற்க மறுத்தது. திறமை மிக்க அறிஞர் முஹம்மது பின் ஸுலைமான் அல்முஹன்னா அவர்கள் இமாம் இப்னு

ரஜப் அல்ஹன்பலீ எழுதிய 'ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்' எனும் நூலின் சுருக்கத்தை என்னிடம் காண்பித்தார்கள். அதை நான் வாசித்ததும் ஏற்கனவே இத்துறையை விட்டும் விலகியிருந்ததற்குப் பதில் நெருங்கிவர வைத்தது. மறுத்ததற்குப் பின் ஏற்க வைத்தது. ஏற்கனவே இவரிடமுள்ள திறமை, அனுகூலம் போன்றவற்றை நான் அறிந்து வைத்திருந்தேன். அதை இறையச்சம், உளத்தூய்மை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகத் தான் நான் நினைக்கின்றேன். அல்லாஹ் தான் அவருக்குப் போதுமானவன்.

இச்சுருக்கவுரை நூல் சிறந்த ஒரு படைப்பாகும். துறை சார்ந்தவர்கள் தனது அறிவை மீட்டிப் பார்க்கவும், இலகு நடையுடன் பல கருத்துக்களை உள்ளடக்கியுள்ளதால் பள்ளிவாயல்களில் தொழுகைகளுக்குப் பின்னால் பொதுமக்களுக்கு வாசிக்கவும் உகந்ததாகும்.

அல்லாஹ் இதன் மூல நூலிலிருந்து பயனளித்தது போன்று, அதன் சுருக்கவுரையாகிய இந்நூலிலிருந்தும் பயனளிப்பானாக! அல்லாஹ் தான் உதவி செய்பவன், பலப்படுத்துபவன், நெறிப்படுத்துபவன்.

***அப்துல் அஸீஸ் பின் மர்ஸூக் அத்தரீபீ***

*1430 / 08 / 01*

# முன்னுரை

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிப்பவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலாதும் ஸலாமும் எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார் தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

இமாம் இப்னு ரஜப் அல்ஹன்பலீ (ரஹ்) அவர்கள் எழுதிய "ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்" எனும் நூலின் சுருக்கமே இந்நூலாகும். இமாம் நவவீ (ரஹ்) அவர்களின் நாற்பது நபிமொழிகளின் தொகுப்பு எனும் நூலின் சிறந்த, விசாலமான விரிவுரை நூலே ஜாமிஉல் உலூமி வல்ஹிகம். எனவே தான் இஸ்லாத்தின் உயிர் நாடிகளைப் பொதிந்துள்ள அந்த நாற்பது நபிமொழிகளையும் விளங்குவதற்கும், விளக்குவதற்கும் இந்நூலையே பிரதான உஷாத்துணையாக அனேகமான அறிஞர்கள் கருதியுள்ளனர்.

நான் சிறு பிராயத்தில் கல்வி பயிலும் போதே என்னுடைய ஆசான்கள் இந்நூலை அதிகமாக மெச்சுவதை செவிமடுத்துள்ளேன். அதில் நிறைய அறிவுகளும், சிதறிய பல முத்துக்களும் உள்ளதாகக் கூறுவர். அப்போதிலிருந்தே எனதும் சக மாணவர்களினதும் உள்ளங்கள் இந்நூலை வாசித்து அதன் கடலிலிருந்து முத்துக்களையும் அறிவு, விளக்கங்களையும் வெளியே எடுத்துவிட வேண்டுமென அவாக் கொண்ட வண்ணம் இருந்தன. அதனை வாசிக்க ஆரம்பித்ததிலிருந்து தொடர்ந்து பயணிக்கத் தடையாக இருந்த ஒரே விடயம் ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கு விளங்காதளவு மூடலாக சில ஆய்வுகளும் கருத்துக்களும் காணப்பட்டமையே. அதேவேளை நூலாசிரியர் அவர்கள் ஆழமாகத் தெளிவுபடுத்துவதிலும் சிறந்த தரமான கருத்துக்களை முன்வைப்பதிலும் அலாதியான திறமை வழங்கப்பட்டவர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கு அறிஞர்களின் பிரதான நூல்களின் ஆழத்திற்குச் செல்ல நீண்ட நேரமும் பாரிய முயற்சியும் தேவைப் படுகின்றது.

கல்வியைத் தேட ஆரம்பித்து சில வருடங்களின் பின் மீண்டும் இந்நூலை வாசிக்க ஆரம்பித்தேன். மூடலான அந்த கருத்துக்களும் தெளிவற்றிருந்த அந்த பிரச்சினைகளும் இலகுவாக விளங்க முடியுமாயிருந்ததால் கல்விப் பாதை எனும் ஏணியில் படிப்படியாகச் செல்வதன் அவசியத்தை அறிந்து கொண்டேன்.

அத்துடன், கல்வியை நேசிக்கும் என்னுடைய பல சகோதரர்களுக்கு அறிஞர்களிடம் செல்லவோ, மார்க்கப் பாடசாலைகளில் சேரவோ வாய்ப்பின்மையாலும், நூல்களை வாசிப்பதில் பொறுமையின்மையாலும் இந்நூலில் உள்ள பொக்கிஷங்கள் அந்த நேசர்களை விட்டும் கைதவறிப் போகக் கூடாது என்பதாலும் இந்நூலை பொதுமக்கள் விளங்கும் விதத்தில் சுருக்க உறுதி பூண்டேன். அனைவரும் தமக்குப் போதியளவு அறிவு, நலவு மற்றும் நேர்வழியை இந்நூலில் கண்டுகொள்வர். அழகான முறையில் இது வார்க்கப்பட்டுள்ளதால் இதனை வாசிப்போர் சுருக்கத்தையன்றி மூலநூலைத் தான் வாசிக்கின்றோம் என உணர்வார்கள்.

இந்நூலை சுருக்குவதுடன் அதிலுள்ள நபிமொழிகள் இடம்பெறும் நூல்கள், அதற்கு அறிஞர்கள் வழங்கியுள்ள தரங்கள் போன்றவற்றையும் இணைத்துள்ளேன். அத்துடன் ஒரு சில இடங்களில் எனது கருத்துரையையும் பதிந்துள்ளேன். பின்னர் ஹதீஸ் கலை அறிஞர் அஷ்ஷேக் அப்துல் அஸீஸ் பின் மர்ஸூக் அத்தரீபீ அவர்களிடம் கொடுத்தேன். அவர் அதனை வாசித்து, அடிக்குறிப்புக்களையும் மீள் பரிசீலனை செய்து அணிந்துரை வழங்கியதுடன் தனது கருத்துரையையும் வழங்கியுள்ளார்கள்.[1] அல்லாஹ் அவருக்கு என் சார்பாகவும் வாசகர் சார்பாகவும் நற்கூலி வழங்குவானாக![2]

எங்கள் இரட்சகனே! எங்களிடமிருந்து இப்பணியை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீயே செவியுறுபவனும், நன்கறிந்தவனுமாவாய். இன்னும் எம்மை மன்னிப்பாயாக! நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்பவனும் நிறைந்த அன்புடையோனுமாவாய். எங்களதும், பெற்றோர்கள், நேசர்கள் அனைவரினதும் பாவங்களை மன்னிப்பாயாக!

எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலாதும் ஸலாமும் உண்டாவதாக!

எழுதியவர்: **முஹம்மத் பின் ஸுலைமான் பின் அப்துல்லாஹ் அல்முஹன்னா, ரியாத்,**

***மின்னஞ்சல் : Almohanna.m@gmail.com***

***தொலைபேசி: 00966505490525***

---

*1.அஷ்ஷேக் தரீபியின் கருத்துரைகள் அவரது பெயருடன் காணப்படும்.*

*2.இந்நூலை சுருக்குவதில் எனது வழிமுறை : நூலாசிரியரின் வார்த்தையில் விளங்க முடியுமான அனைத்தையும் சேர்த்து விட்டு மீதியை அனைவரும் விளங்குவதற்கு இலகுவாக நீக்குவதாகவும். மூலநூலின் மூன்றில் ஒரு பகுதியளவிற்கு இந்நூல் அமைந்துள்ளது.*

# இமாம் இப்னு ரஜப் அல்ஹன்பலியின் வாழ்க்கை வரலாறு

இவர் இமாம் அப்துர் ரஹ்மான் பின் அஹ்மத் பின் ரஜப் அல்பக்தாதீ அத்திமஷ்கி அல்ஹன்பலீ (ரஹ்) ஆவார். மார்க்க சட்டக்கலை மேதையாகவும் பல்துறை அறிஞராகவும் திகழ்ந்தார்கள்.

அறிவு, மனன சக்தி துறவறம், பேணுதல், சிறந்த ஆக்கத்திறன் அனைத்திலும் போற்றப்படும் இமாமாக இருந்தார்கள்.

இராக் நாட்டிலுள்ள பக்தாத் நகரில் ஹிஜ்ரி 736ல் பிறந்த இவர் சிறுபிராயத்திலேயே தனது தந்தையுடன் சிரியா நாட்டின் டமஸ்கஸ் நகருக்கு வசிப்பிடத்திற்காக வந்தார்கள். இமாம் இப்னுல் கையிம் (ரஹ்) மற்றும் அவரது படிநிலையிலுள்ள அறிஞர்களிடம் கல்வி கற்றார்கள். இவர் ஸலபுக் கொள்கையைச் சார்ந்தவராகவும் பகுத்தறிவைக் காண அறிவிப்புகளுக்கு முக்கியத்துவமளிப்பவராகவும், பிக்ஹுத் துறையில் ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றுபவராகவும் இருந்தார்கள். அத்துடன் மார்க்க சட்டக்கலை வல்லுனர், அல்குர்ஆன் விரிவுரையாளர், இலக்கண மேதை, வரலாற்றாசிரியர் என பன்முகங் கொண்டவராக இருந்த இமாமவர்கள் ஹதீஸ் துறையில் அதன் அறிவிப்பாளர் வரிசை பற்றிய நுணுக்கமான கலைகளில் ஓர் அடையாளமாகவே திகழ்ந்துள்ளார்கள்.

பல்துறைகளில் பல நூல்களை எழுதியுள்ளார்கள். இவர்கள் கால்பதித்த ஒவ்வொரு துறையில் இவர்களது நூல்தான் முன்னிலை வகிக்கின்றது என்றால் மிகையாகாது. அவற்றுள் சில வருமாறு :

**01.** **பத்ஹுல் பாரீ.** இது ஸஹீஹுல் புஹாரியின் விரிவுரை நூலாகும். இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்) அவர்களுக்கு முன்னரே இவர்கள் “பத்ஹுல் பாரீ” எனும் பெயரில் நூல் எழுதியுள்ளார்கள். எனினும் இமாமவர்களால் இதனை முழுமைப்படுத்தக் கிடைக்கவில்லை. ஜனாஸா பற்றிய பாடம் வரையிலேயே விரிவுரை எழுதியுள்ளார்கள். 10 பாகங்களில் அச்சிடப்பட்டுள்ள இந்நூல் நுணுக்கத்திலும் தரத்திலும் உச்ச எல்லையைத் தொட்டுவிட்டது என்றே கூறலாம்.

**02.** ***ஸுனன் திர்மிதியின் விரிவுரை.*** 20 பாகங்களில் இந்நூல் உள்ளதாக இமாம் இப்னு ஹஜர் கூறியிருந்தாலும் அதன் இறுதி இரண்டு பாகங்களும் தான் "ஷரஹ் இலலுத் திர்மிதி" எனும் பெயரில் அச்சில் உள்ளது.

**03.** ***"தக்ரீருல் கவாஇத் வதஹ்ரீருல் பவாஇத்"*** என்னும் நூல் "கவாஇது இப்னு ரஜப்" எனும் பெயரில் நான்கு பாகங்களில் அச்சிடப்பட்டுள்ளது. பிக்ஹு நூலின் அற்புதங்களில் இதுவும் ஒன்றாகும்.

**04.** ***"லதாஇபுல் மஆரிப்"*** பருவகால வணக்க வழிபாடுகள் மற்றும் சட்டதிட்டங்களில் இந்நூலே பிரதான துணையாதாரமாகும்.

**05.** ***"ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்"*** இது இமாம் நவவி (ரஹ்) அவர்களின் 40 நபிமொழித் தொகுப்பின் விரிவுரை நூலாகும். இரண்டு பாகங்களிலுள்ள இது இஸ்லாமிய நூல்களில் சிறந்த, பிரபலமான நூலாகும்.

தனது 59வது வயதில் ஹிஜ்ரி 795ல் டமஸ்கஸில் இமாமவர்கள் மரணித்தார்கள்.

அதே டமஸ்கஸைச் சேர்ந்த இமாம் இப்னு நாஸிருத்தீன் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார் : இமாமவர்களின் மண்ணறையை அகழ்ந்த நபர் என்னிடம் கூறினார் : இமாம் இப்னு ரஜப் அவர்கள், தான் மரணிக்க சில நாட்களுக்கு முன்னர் என்னிடம் வந்து மையவாடியில் ஓர் இடத்தைக் காட்டி, அங்கு ஒரு மண்ணறை தோண்டுமாறு பணித்தார்கள். நானும் தோண்டி முடிந்ததும் அதில் இறங்கி ஒரு பக்கம் சாய்ந்து உறங்கிப் பார்த்தார்கள். பின்பு இது நன்றாக உள்ளது எனக் கூறி விட்டு சென்றார்கள்.

மேலும் கூறினார்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக சில நாட்கள் கடந்ததும் அதே மண்ணறைக்கு இமாமவர்கள் பேழையில் ஜனாஸாவாக சுமந்து வரப்பட்டார்கள். நான் அதிலேயே அவர்களை அடக்கம் செய்தேன்.

# ஹதீஸ் : 01

## செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே

عن عُمَرَ - رَضِيَ اللهُ عَنْهُ - قَال: سَمِعْتُ رَسُولَ اللهِ - ﷺ - يَقُولُ:

«إِنمَا الأَعْمَالُ بِالنِّيّاتِ، وَإِنمَا لِكُلِّ امْرِئٍ مَا نَوَى، فَمَنْ كَانَتْ هِجْرَتُهُ إِلَى اللهِ وَرَسُولِهِ فَهِجْرَتُهُ إِلَى اللهِ وَرَسُولِهِ، وَمَنْ كَانَتْ هِجْرَتُهُ لدُنْيَا يُصِيبُهَا أَوْ امْرَأَةٍ يَنْكِحُهَا فَهِجْرَتُهُ إِلَى مَا هَاجَرَ إِلَيْهِ»، رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***“செயல்கள் அனைத்தும் எண்ணங்களைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தான் எண்ணியதன் பயனையே அடைகின்றான். ஆகவே ஒருவர் இறைவனுக்காகவும் அவனது திருத்தூதருக்காகவும் ஹிஜ்ரத் செய்வாரேயானால் அது அல்லாஹ்வுக்காகவும் அவனது திருத்தூதருக்காகவுமே இருக்கும். ஒருவர் ஹிஜ்ரத் செய்வது சில உலக இலாபங்களுக்காக என்றால், அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காகத் தான் என்றால் அவர் அதற்கான பலனையே அடைவார்.***

*அறிவிப்பவர் : உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (54), முஸ்லிம் (1907)*

### விரிவுரை :

*இந்நபிமொழியின் வலுவான ஒரே அறிவிப்பாளர் வரிசை பின்வருமாறு: யஹ்யா பின் ஸஈத் அல்அன்ஸாரி - முஹம்மத் பின் இப்ராஹீம் அத்தைமி – அல்கமா பின் வக்காஸ் அல்லைஸி - உமர் பின் கத்தாப் (ரலி). இதுவன்றி வேறு எந்த அறிவிப்பாளர் வரிசையும் இந்நபிமொழியில் வலுவானதாக இல்லையென இமாம் அலீ பின் மதீனீ மற்றும் சிலர் கூறுகின்றனர்.*

*இமாம் கத்தாபீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : இந்நபிமொழி அபூ ஸஈத் அல்குத்ரீ(ரலி) போன்றோர் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் மேற்கண்ட அறிவிப்பாளர் வரிசை மாத்திரம் தான் வலுவானது என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடுபட்டதாக நான் அறியவில்லை.*

*பல்வேறு அறிவிப்பாளர் வரிசை மூலமாக இந்நபிமொழி அறிவிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எனினும் ஹதீஸ் துறை அறிஞர்களிடம் அவற்றில் எதுவும் வலுவான தரத்தை அடையவில்லை.*

இந்நபிமொழி ஸஹீஹானது என்பதில் அனைவரும் ஏகோபித்துள்ளனர். அனைவரும் ஏற்றுக் கொண்டுமுள்ளனர்[1]. இந்நபிமொழியைக் கொண்டு தான் இமாம் புஹாரி (ரஹ்) தனது ஸஹீஹை ஆரம்பித்துள்ளார்கள். அல்லாஹ்விற்காக செய்யப்படாத எந்த ஒரு செயலும் ஈருலகிலும் பயனற்ற, செல்லுபடியற்றதாகி விடும் என்பதை சுட்டிக் காட்டும் விதத்தில் ஸஹீஹுல் புஹாரிக்கான ஆரம்ப உரை போன்று வைத்துள்ளார்கள்.

இதனால் தான் அப்துர் ரஹ்மான் பின் மஹ்தீ (ரஹ்) கூறினார்: தலைப்புக்கள் அடிப்படையில் நான் நூல் இயற்றினால் ஒவ்வொரு பாடத்திலும் உமர் (ரலி) அவர்களின் இந்நபிமொழியை வைத்திருப்பேன்.

மேலும் கூறினார்கள்: நூல் இயற்ற விரும்புபவர் மேற்கண்ட நபிமொழியை வைத்து ஆரம்பிக்கட்டும்[2].

மார்க்க விடயங்கள் சுழன்று கொண்டிருக்கும் நபிமொழிகளில் இதுவும் ஒன்றாகும். இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறினார்கள் : இந்நபிமொழி அறிவின் மூன்றிலொரு பகுதியாகும்.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) கூறினார்கள் : இஸ்லாத்தின் அடிப்படைகள் மூன்று நபிமொழிகளைச் சார்ந்துள்ளன. உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் "செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே" எனும் நபிமொழி, ஆஇஷா (ரலி) அறிவிக்கும் "யார் இந்த மார்க்கத்தில் அதில் இல்லாதவற்றைப் புதிதாக உருவாக்குகின்றாரோ அது தட்டப்பட்டுவிடும்" எனும் நபிமொழி, நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்களுடைய "ஹலால் தெளிவானது, ஹராமும் தெளிவானது" எனும் நபிமொழி ஆகியனவாகும்.

இமாம் அபூ தாவூத் (ரஹ்) "ஒவ்வொரு கலையிலும் அடிப்படை நபிமொழிகள் நான்காகும்" என்று கூறிவிட்டு, மேற்கண்ட இமாம் அஹ்மதின் கூற்றிலுள்ள முதலாம், மூன்றாம் நபிமொழிகளுடன் "தனக்குத் தேவையற்ற விடயத்தை விடுவதே முஸ்லிமுக்கு அழகு" எனும் நபிமொழியையும், "உலகில் பற்றற்று இரு. அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களிடம் தேவையற்று இரு. அவர்கள் உன்னை நேசிப்பார்கள்" எனும் நபி மொழியையும் கூறியுள்ளார்கள்.

---

1. அனைவராலும் ஏற்கப்படும் நபிமொழிக்கு இமாம் அஹ்மத் போன்ற சில அறிஞர்கள் "முதவாதிர்" எனக் கூறியுள்ளனர். இது அமுல்படுத்துவதிலும், பிரபல்யத்திலும் தான் முதவாதிராகும். அறிவிப்பாளர் வரிசையிலல்ல. கருத்தில் முதவாதிராக இருப்பது அறிவிப்பாளர் வரிசையில் முதவாதிராக இருப்பதை விட பலமானது. ***(அப்துல் அஸீஸ் தரீபி)***

2.இந்நபிமொழி பற்றி மிகவும் விரிவாகப் பேசியவர் "புலூகுல் ஆமால் பீ ஷரஹி இன்னமல் அஃமால்" எனும் தனது நூலில் இமாம் ஸுயூத்தி (ரஹ்) ஆவார். ***(அப்துல் அஸீஸ் தரீபி)***

ஸ்பைன் நாட்டைச் சேர்ந்த அபுல் ஹஸன் அல்மஆபிரி எனும் அறிஞர் இந்நான்கு விடயங்களையும் கவிதையில் வடித்துள்ளார்கள்.[1]

“إنما الأعمال بالنيات” என்ற வாசகம் மற்றொரு அறிவிப்பில் “الأعمال بالنيات” என இடம் பெற்றுள்ளது. இரண்டுமே “எண்ணத்தை கொண்டு தான்” என்ற வரையறுக்கப்பட்ட கருத்தையே வேண்டி நிற்கின்றன.

**“செயல்கள் எண்ணங்களைக் கொண்டுதான்”**

இதன் கருத்து பற்றி அறிஞர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

பிற்கால அறிஞர்களில் பலர் : எண்ணங்களை கொண்டு தான் “செல்லுபடியாகும்”, “கணிக்கப்படும்”, “ஏற்கப்படும்” எனும் கருத்தைக் கொண்டுள்ளனர். இதன்படி இங்கு செயல்கள் என்பது நிய்யத் அவசியமான மார்க்க செயற்பாடுகளையே குறிக்கின்றது.

மற்றுமொரு சாரார் : பொதுவாக செயல்கள் எனக் கூறுகின்றனர். இதன்படி எண்ணங்களைக் கொண்டு தான் “உருவாகின்றன”, “நடைபெறுகின்றன” போன்ற கருத்துக்களைக் கூறலாம்.

மேலும் “செயற்களில் நல்லது, தீயது, அல்லது ஏற்கப்படுவது, மறுக்கப்படுவது, அல்லது கூலி வழங்கப்படுவது, வழங்கப்படாதது என்பன எண்ணங்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன” என்றும் கூறலாம்.

**“ஒவ்வொரு மனிதனும் தான் எண்ணியதன் பயனையே அடைகின்றான்”**

மனிதன் தான் செய்த செயல்கள் மூலம் எதை நாடுகின்றானோ அதுவே கிடைக்கின்றது. அவன் நலவு நாடினால் நலவும், கெடுதி நாடினால் கெடுதியும் கிடைக்கும்.

நிய்யத்[2] (எண்ணம்) அறிஞர்களிடம் இரு அர்த்தங்களில் பயன்படுத்தப் படுகின்றன.

**01.** வணக்க வழிபாடுகளை வேறுபிரித்தல். உதாரணமாக தொழுகையில் ளுஹரையும் அஸரையும் வேறுபிரித்தல், நோன்பில்

---

1. உமர் (ரலி) அவர்களின் இந்நபிமொழி இஸ்லாத்தின் மூன்றிலொரு பகுதி என்பதில் இமாம்களான அப்துர் ரஹ்மான் பின் மஹ்தி, ஷாபிஈ, அஹ்மத், இப்னுல் மதீனீ, அபூ தாவூத், திர்மிதி, தாரகுத்னீ, ஹம்ஸதுல் கினானீ ஆகியோர் ஏகோபித்துள்ளனர். மற்றும் சிலர் நான்கில் ஒரு பகுதி எனக் கூறியுள்ளனர். மீதமுள்ளவற்றில் தான் கருத்து வேறுபாடுபட்டுள்ளனர்.

2. நிய்யத் எனும் சொல் பழங்களின் விதைக்குப் பயன்படுத்தும் “நவா” எனும் அரபு மூலச் சொல்லிலிருந்து வந்ததாகும். நான்கு அறிஞர்களின் ஏகோபித்த கருத்தின் பிரகாரம் எச்சந்தர்ப்பத்திலும் நிய்யத் வாயினால் மொழியலாகாது. இமாம் ஷாபிஈ இடத்தில் தொழுகையில் மாத்திரம் மொழியலாம். அதனை அவர்களுடைய மாணவர் ராபீஃ வாயிலாக இமாம் இப்னுல் முக்ரிஃ தனது முஃஜமில் பதிந்துள்ளார்கள். ஆனால் அதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. ஸலபுகளின் வழிமுறை சத்தமிட்டு மொழியாமலிருப்பதாகும். **(அப்துல் அஸீஸ் தரீபி)**

*ரமழான் நோன்பையும் ஏனைய நோன்புகளையும் வேறுபிரித்தல், அல்லது வணக்கத்தையும் வழக்கத்தையும் வேறுபடுத்திக் காட்டுதல். உதாரணமாக: கடமையான குளிப்பையும் சுத்தத்திற்காகக் குளிப்பதையும் வேறுபிரித்தல்.*

**02.** *செயலின் மூலம் நாடப்படுபவரை வேறுபிரித்தல். அது அல்லாஹ் மாத்திரமா? அல்லது வேறு ஒருவரா? அல்லது அல்லாஹ்வும் வேறு ஒருவருமா? என வேறுபடுத்துவதாகும். முன்சென்ற ஸலப் அறிஞர்களின் பேச்சுக்களில் இந்த இரண்டாவது வகையே அதிகமுள்ளன. "நிய்யத்" என்ற வார்த்தையல்லாமல் அதே அர்த்தத்தில் வேறுபல வார்த்தைகளுடன் அல்குர்ஆனில் இவ்வகை நிய்யத் இடம் பெற்றுள்ளது.*

*ஸுன்னாவிலும், ஸலபுகளின் பேச்சுக்களிலும் இது அதிகமதிகம் காணப்படுகின்றது. "நீங்கள் உங்கள் வாரிசுகளைத் தன்னிறைவுடையவர்களாக விட்டுச் செல்வது, அவர்களை மக்களிடம் கையேந்தும்படி ஏழைகளாக விட்டுச் செல்வதை விட நல்லதாகும். நீங்கள் செய்த (நல்ல) செலவு எதுவாயினும் தருமமேயாகும். நீங்கள் உங்கள் மனைவியின் வாயில் இடுகிற ஒரு கவளம் (உணவு) கூட (தருமமேயாகும்). (அறிவிப்பவர் : ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி 2742, முஸ்லிம் 1628)*

*ஸுபைத் அல்யாமீ (ரஹ்) கூறுகின்றார்கள் : "ஆதாரங்கள் உட்பட அனைத்திலும் என்னிடம் நிய்யத் இருப்பதை நான் விரும்புகின்றேன்". மேலும் கூறினார்கள்: "குப்பை கொட்டப் போவது உட்பட அனைத்திலும் நிய்யத் வைத்துக்கொள்".*

*ஸுப்யான் அஸ்ஸௌரீ (ரஹ்) கூறினார்கள் : "எனது நிய்யத்தைத் தவிர நான் வேறெதற்கும் கடுமையாக சிகிச்சை மேற்கொண்டதில்லை".*

*அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் (ரஹ்) கூறினார்கள்: "எத்தனையோ சிறிய செயல்கள் உள்ளன. நிய்யத் அவற்றைப் பெரிதாக்கி விடுகின்றது. மறுபுறம் எத்தனையோ பெரிய செயல்கள் உள்ளன. நிய்யத் அவற்றை சிறிதாக்கி விடுகின்றது.[1]*

*புழைல்பின்இயாழ்(ரஹ்) அவர்கள் "உங்களில்அழகிய செயலுடையவர் யார் என்பதை சோதிப்பதற்காக" (அல்முல்க் : 02) எனும் வசனத்திற்கு விளக்கமளிக்கையில் "உளத்தூய்மையுடன், சரியாகச் செய்யப்படுபவை"*

*1.அறிஞர்கள் கூறுகின்றனர் : நிய்யத் அறிஞர்களின் வியாபாரமாகும். அதாவது எண்ணங்கள் எனும் சந்தையில் சரியாக பெருக்கத் தெரியாத, அனைத்து செயல்களிலும் நிய்யத்தை வரவழைக்கத் தெரியாத எத்தனையோ பேரைக் காண இவர்கள் அதிக கூலி வழங்கப்படுகின்றனர்.* ***(அப்துல் அஸீஸ் தரீபி)***

எனக் கூறினார்கள். மேலும் கூறினார்கள்: “ஒரு செயல் உளத்தூய்மையுடன் இருந்து சரியாக இல்லாவிட்டாலோ, சரியாக இருந்து உளத்தூய்மையுடன் இல்லாவிட்டாலோ இரண்டும் முழுமையடையும் வரை அது ஏற்கப்பட மாட்டாது. அல்லாஹ்வுக்காக இருந்தால் அது தூய்மையானது. நபிவழிக்கு உடன்பட்டிருந்தால் அது சரியானதாகும்”.

**ஆகவே ஒருவர் இறைவனுக்காகவும் அவனது திருத்தூதருக்காகவும் ஹிஜ்ரத் செய்வாரேயானால் அது அல்லாஹ்வுக்காகவும் அவனது திருத்தூதருக்காகவுமே இருக்கும். ஒருவர் ஹிஜ்ரத் செய்வது சில உலக இலாபங்களுக்காக என்றால், அல்லது ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதற்காகத் தான் என்றால் அவர் அதற்கான பலனையே அடைவார்.**

செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே அமையும். மனிதனுடைய நல்ல, தீய எண்ணத்தைப் பொறுத்துத் தான் அவனது செயல்களின் பிரதிபலன் கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்திய நபியவர்கள், நிய்யத்கள் வேறுபடுவதன் மூலம் முடிவுகளும் வேறுபடுவதற்கான ஒரே உதாரணத்தை இரு கோணங்களிலும் தெளிவுபடுத்துகின்றார்கள். இதன் மூலம் இதுபோன்று தான் அனைத்து உதாரணங்களும் எனச் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

அல்லாஹ், ரஸூலை நேசித்ததற்காக முஸ்லிம் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து செல்பவர் அவர் உண்மையிலேயே அல்லாஹ், ரஸூலிற்காகத் தான் செல்கின்றார். அது அவருக்கு கௌரவமாகும்.

இதனால் தான் நிபந்தனை, அதற்கான பிரதிபலன் இரண்டிற்கும் ஒரே வார்த்தையுடன் சுருக்கிக் கொண்டுள்ளார்கள். ஏனெனில் ஹிஜ்ரத் பயணத்தின் போது வைக்கும் எண்ணம் தான் ஈருலகிலும் விரும்பிய முடிவாகும். அதுதான் அல்லாஹ், ரஸூலிற்காக செயற்படுதல் ஆகும்.[1]

உலக நோக்கம் அல்லது ஒரு பெண்ணை அடைவதற்காக வேண்டி யாருடைய ஹிஜ்ரத் அமைகின்றதோ அதற்குரிய பலனே கிடைக்கும்.

إليه هاجر ما إلى எனும் வார்த்தையில் அவன் எதிர்பார்த்த உலக நோக்கத்தைத் தாழ்த்தியே கூறப்பட்டுள்ளது. முதல் வார்த்தையில் கூறியது போன்று நிபந்தனை, பிரதிபலன் இரண்டிற்கும் ஒரே சொற்றொடரைக் கூறவில்லை.

---

*1.தீய ஊர்களை, மக்களை வெறுப்பதை விட தீய கொள்கைகளையும், சிந்தனைகளையும் வெறுப்பதே மகத்தானது. ஏனெனில் இரண்டாவதை செயற்படுத்தவே முதலாவது விதியாக்கப்பட்டுள்ளது.* ***(அப்துல் அஸீஸ் தரீபி)***

*உம்மு கைஸ் என்ற பெண்ணுக்காக ஹிஜ்ரத் செய்தவரின் சம்பவத்தின் பின்னணியில் தான் நபி (ஸல்) அவர்கள் இச்செய்தியைக் கூறினார்கள் என்பது தான் மக்கள் மத்தியில் பிரபலமானது. இக்கால அறிஞர்களில் அதிகமானோரும் இதனைக் கூறியுள்ளனர். எனினும் இதற்கான வலுவான ஆதாரம் எதனையும் நாம் காணவில்லை. அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்.*[1]

*ஹஜ், ஜிஹாத் போன்ற இதர அமல்களும் ஹிஜ்ரத்தைப் போன்று தான். அவை செல்லுபடியாவதும் நிராகரிக்கப்படுவதும் நிய்யத்திலேயே தங்கியுள்ளது. "ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'ஒருவர் போரில் கிடைக்கும் செல்வங்களுக்காகப் போரிடுகிறார்; மற்றொரு மனிதர் புகழுக்காகப் போரிடுகிறார்; இன்னொரு மனிதர் தன் வீரத்தைப் பிறர் பார்க்கட்டும் என்பதற்காகப் போரிடுகிறார். (இவர்களில்) இறைவழியில் போரிடுபவர் எவர்?" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், '(இவர்களில் எவருமே இறைவழியில் போரிடுபவராக இல்லை.) அல்லாஹ்வின் (ஏகத்துவ) வாக்கு மேலோங்க வேண்டும் என்பதற்காகப் போரிடுகிறவரே இறைவழியில் போரிடுபவராவார்" என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பவர்: அபூ மூஸா அல்அஷ்அரீ (ரலி), ஆதாரம் : புஹாரி 2810, முஸ்லிம் 1904)*

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (பின்வருமாறு) கூறியதை நான் கேட்டுள்ளேன் என அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்:*

*மறுமை நாளில் மக்களில் முதல் முதலில் தீர்ப்பு வழங்கப்படுபவர் யாரெனில், இறைவழியில் உயிர்த் தியாகம் செய்தவரே ஆவார். அவர் இறைவனிடம் கொண்டுவரப்படும் போது, அவருக்குத் தான் வழங்கியிருந்த அருட் கொடைகளை இறைவன் எடுத்துரைப்பான். அவற்றை அவர் அறிந்துகொள்வார். பிறகு, "அந்த அருட்கொடைகளில் நீ எவ்விதம் செயல்பட்டாய்?" என்று இறைவன் கேட்பான். அவர், "(இறைவா!) உனக்காக நான் அறப்போரில் ஈடுபட்டு என் உயிரையே தியாகம் செய்தேன்" என்று பதிலளிப்பார்.*

*இறைவன், "(இல்லை) நீ பொய் சொல்கிறாய். (நீ எனக்காக உயிர்த் தியாகம் செய்யவில்லை.) மாறாக, "மாவீரன்" என்று (மக்களிடையே) பேசப்படுவதற்காகவே நீ போரிட்டாய். அவ்வாறு சொல்லப்பட்டுவிட்டது. (உனது நோக்கம் நிறைவேறிவிட்டது)" என்று கூறுவான். பிறகு*

---

*1. மேற்கண்ட சம்பவம் ஸுனன் ஸஈத் பின் மன்ஸூர் எனும் நூலில் வலுவான அறிவிப்பாளர் வரிசையுடன் இடம்பெற்றுள்ளது. எனினும் அதில் இச்சம்பவத்தின் பின்னணியில் தான் நபியவர்கள் மேற்கண்ட நபிமொழியைக் கூறினார்கள் என்று இடம்பெறவில்லை. (பார்க்க : இமாம் இப்னு ஹஜரின் பத்ஹுல் பாரீ 1/16). இதனடிப்படையில் நூலாசிரியர் இச்சம்பவத்தின் பின்னணி தான் இந்த நபிமொழி என்பதை மறுத்தார்களே தவிர சம்பவத்தின் அடிப்படையை மறுக்கவில்லை.*

இறைவனின் கட்டளைப்படி முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, அவர் நரகத்தில் எறியப்படுவார்.

பிறகு கல்வியைத் தாமும் கற்று அதைப் பிறருக்கும் கற்பித்தவரும் குர்ஆனைக் கற்றுணர்ந்தவருமான (மார்க்க அறிஞர்) ஒருவர் (இறைவனிடம்) கொண்டு வரப்படுவார். அவருக்குத் தான் வழங்கியிருந்த அருட்கொடைகளை இறைவன் எடுத்துரைப்பான். அவற்றை அவர் அறிந்து கொள்வார். பிறகு “அந்த அருட்கொடைகளில் நீ எவ்விதம் செயல்பட்டாய்?” என்று இறைவன் கேட்பான். அவர், “(இறைவா!) கல்வியை நானும் கற்று, பிறருக்கும் அதை நான் கற்பித்தேன். உனக்காகவே குர்ஆனை ஓதினேன்" என்று பதிலளிப்பார்.

அதற்கு இறைவன், “(இல்லை) நீ பொய் சொல்கிறாய். (எனக்காக நீ கல்வியைக் கற்கவுமில்லை; கற்பிக்கவுமில்லை.)”அறிஞர்" என்று சொல்லப்பட வேண்டும் என்பதற்காகவே நீ கல்வி கற்றாய்; “அழகாக ஓதுபவர்" என (மக்களிடையே) பேசப்படுவதற்காகவே நீ குர்ஆனை ஓதினாய். அவ்வாறு சொல்லப்பட்டு விட்டது (உனது நோக்கம் நிறைவேறி விட்டது)" என்று கூறுவான். பிறகு இறைவனின் கட்டளைப்படி முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, அவர் நரகத்தில் எறியப்படுவார்.

பிறகு இறைவன் தாராளமான வாழ்க்கை வசதிகளும் அனைத்து விதமான செல்வங்களும் வழங்கியிருந்த பெரிய செல்வந்தர் ஒருவர் இறைவனிடம் கொண்டுவரப்படுவார். அவருக்குத் தான் வழங்கியிருந்த அருட்கொடைகளை இறைவன் எடுத்துரைப்பான். அவற்றை அவர் அறிந்துகொள்வார். பிறகு, “அந்த அருட்கொடைகளில் நீ எவ்விதம் செயல்பட்டாய்?” என்று இறைவன் கேட்பான். அதற்கு அவர், “நீ எந்தெந்த வழிகளில் எல்லாம் பொருள் செலவழிக்கப்படுவதை விரும்புகிறாயோ, அந்த வழிகளில் எதையும் விட்டுவிடாமல் அனைத்திலும் நான் உனக்காக எனது பொருளைச் செலவிட்டேன்" என்று பதிலளிப்பார்.

அதற்கு இறைவன், “(இல்லை) நீ பொய் சொல்கிறாய் “இவர் ஒரு கொடையாளி" என (மக்களிடையே) பேசப்படுவதற்காகவே நீ இவ்வாறு (செலவு) செய்தாய். (உன் எண்ணப்படி) அவ்வாறு சொல்லப்பட்டுவிட்டது. (உனது எண்ணம் நிறை வேறிவிட்டது)" என்று கூறிவிடுவான். பிறகு இறைவனின் கட்டளைப்படி முகம் குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, அவர் நரகத்தில் எறியப்படுவார். (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் 1905.)

உளத்தூய்மையின்றி கல்வி கற்பது பற்றி பலத்த எச்சரிக்கை நபிமொழிகளில் வந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

*அல்லாஹ்விற்காகத் தேடப்பட வேண்டிய கல்வியை உலக ஆதாயங்களை அடைவதற்காகக் கற்பவர் சுவனத்தின் வாடையைக் கூட நுகரமாட்டார்.*[1]

*மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் பாமரர்களுடன் தர்க்கிப்பதற்காகவோ, அறிஞர்களை மடக்குவதற்காகவோ, மக்களை தன் பக்கம் ஈர்ப்பதற்காகவோ கல்வி கற்கிறாரோ அவரை அல்லாஹ் நரகில் நுழைவிக்கிறான்.*[2]

*பொதுவாகவே அல்லாஹ் அல்லாதவர்களுக்காக அமல்கள் செய்வது பற்றி எச்சரிக்கை வந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உயர்வு, பதவி, மார்க்கம், பூமியில் அதிகாரம் ஆகியவற்றை இந்த சமூகத்திற்கு நற்செய்தியாகக் கூறுங்கள். அவர்களில் யார் மறுமைக்குரிய அமலை உலக நோக்கத்திற்காக செய்கின்றாரோ அவருக்கு மறுமையில் எவ்விதப் பங்குமில்லை.*[3]

*அல்லாஹ் அல்லாதோருக்காகச் செய்யப்படும் அமல்கள் பல வகைப்படுகின்றன.*

*சிலவேளை உலக ஆதாயங்களுக்காக நயவஞ்சகர்கள் தமது தொழுகையின் போது இருப்பதைப் போல பிறருக்குக் காட்டுவதற்காக முழுமையான முகஸ்துதியுடன் செயற்படுதல். இது ஒரு முஃமினுடைய கடமையான தொழுகை, நோன்புகளில் பெரும்பாலும் வெளிப்படமாட்டாது. ஸகாத், ஹஜ் போன்ற வெளிப்படையான, அல்லது பிறருடன் தொடர்புபடும் அமல்களில் சிலவேளை வெளிப்பட வாய்ப்புள்ளது. ஏனெனில் இது போன்றவற்றில் உளத்தூய்மை வரவழைப்பது மிகச் சிரமமானதாகும்.*

*இந்த அமல் அழியக்கூடியது என்பதில் எந்த முஸ்லிமும் ஐயம் கொள்ளமாட்டான். அதனைச் செய்தவன் அல்லாஹ்வின் கோபத்திற்கும் தண்டனைக்கும் உள்ளாவான்.*

*இன்னும் சிலவேளை அல்லாஹ்விற்காகச் செய்யப்படும் அமலில்*

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், ஆதாரம் அஹ்மத் (8573), அபூ தாவூத் (3664), இப்னு மாஜா (252), இமாம்களான இப்னு ஹிப்பான் (78), ஹாகிம் (287) ஆகியோர் இந்நபிமொழி ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர். அத்துடன் ஹாபிழ் இராகீ தனது இஹ்யாவிற்கான ஹதீஸ் ஆய்வு நூலிலும் (1/178) அஷ்ஷேக் அல்பானி மிஷ்காதுல் மஹாபீஹ் நூலிற்கான கருத்துரையிலும் இந்நபிமொழியை வலுப்படுத்தியுள்ளனர்.*

*2. அறிவிப்பவர் : கஃப் பின் மாலிக் (ரலி), ஆதாரம் : திர்மிதீ (2654), ஹாகிம் (292). இதன் அறிவிப்பாளர் வரிசை பலவீனமானதாகும்.*

*3. அறிவிப்பவர் : உபை பின் கஃப் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (21611), இமாம்களான இப்னு ஹிப்பான் (405), ஹாகிம் (7957), அஷ்ஷேக் அல்பானி தனது ஸஹீஹுல் ஜாமிஃவில் (2825) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர்.*

முகஸ்துதி கலந்துவிடுகின்றது. அந்த அமலின் ஆரம்பத்திலிருந்தே முகஸ்துதி கலந்திருந்தால் அவைஅழிந்து செல்லுபடியற்றதாகிவிடும் என்பதையே வலுவான ஆதாரங்கள் அறிவிக்கின்றன.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் கூறினான்” : “நான் இணையாளர்களை விட்டும் இணை கற்பித்தலை விட்டும் அறவே தேவையற்றவன். யாரேனும் என்னுடன் பிறரையும் இணையாக்கி (எனக்காகவும் பிறருக்காகவும்) நற்செயல் புரிந்தால், அவனையும் அவனது இணைவைப்பையும் (தனியே) விட்டுவிடுவேன்”.(1)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவ்வித ஐயமும் இல்லாத மறுமை நாளில் முன்னோர்கள், பின்வந்தோர் அனைவரையும் அல்லாஹ் ஒன்று சேர்த்தால் ஒரு அழைப்பாளி சத்தமிட்டு பின்வருமாறு அழைப்பார்: அல்லாஹ்விற்காகச் செய்த அமலில் யார் இணை வைக்கிறாரோ அதற்குரிய கூலியை அந்த நபரிடமே சென்று பெற்றுக் கொள்ளட்டும். ஏனெனில் அல்லாஹ் பங்குதாரர்கள் அனைவரை விடவும் இணைவைப்பை விட்டும் தேவையற்றவன்.(2)

அமலின் ஆரம்பத்தில் அல்லாஹ்விற்காக என்றிருந்து இடையில் முகஸ்துதி வந்து, அது ஊசலாட்டமாக இருந்து உடனே சுதாகரித்துக் கொண்டு அதனைத் தடுத்தால் அவருக்கு எவ்விதப் பாதிப்புமில்லை என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அந்த ஊசலாட்டம் அவருடன் தொடர்ந்திருந்தால் அந்த அமலை அழித்து விடுமா? அல்லது ஆரம்ப நிய்யத்தை வைத்துக் கூலி வழங்கப்படுமா? என்பதில் ஸலப் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுள்ளது. அதனை இமாம்களான அஹ்மத், இப்னு ஜரீர் தபரீ போன்றவர்கள் கூறிவிட்டு, அந்த அமல் முறியமாட்டாது. முதலாவது நிய்யத்தின் அடிப்படையில் கூலி வழங்கப்படும் என்ற கருத்தை வலுப்படுத்தியுள்ளார்கள்.

கருத்து வேறுபாடு தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற அதன் ஆரம்பமும் முடிவும் ஒன்றோடொன்று தொடர்புள்ள வணக்க வழிபாடுகளில் தான். குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல், செலவளித்தல்,

---

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2985).

2. அறிவிப்பவர் : அபூ ஸஈத் பின் அபீ புழாலா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (1680), திர்மிதி (3154). அவர்கள் இது ஹஸன் கரீப் எனும் தரத்திலுள்ளதாக கூறியுள்ளதுடன் அஷ்ஷேக் அல்பானீயும் பல இடங்களில் இதனை ஹஸன் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். (பார்க்க : ஸஹீஹுல் ஜாமிஃ 482)

கற்பித்தல் போன்ற ஒன்றோடொன்று தொடர்பற்ற வணக்கங்கள் இடையில் முகஸ்துதி ஏற்படுவதால் தொடர்பு அறுந்து விடும். மீண்டும் நிய்யத்தைப் புதுப்பிக்க வேண்டியுள்ளது என இமாம் இப்னு ஜரீர் (ரஹ்) கூறியுள்ளார்கள்.[1]

அமல்கள் உளத்தூய்மையுடன் இருந்து, பின் அல்லாஹ் முஃமின்களின் உள்ளத்தில் அவரைப் பற்றிய நற்புகழை ஏற்படுத்தி, அந்த அல்லாஹ்வின் அருளை நினைத்து மகிழ்ந்தால் அதனால் எவ்விதப் பாதிப்பும் ஏற்படமாட்டாது. இந்தக் கருத்தில் ஒரு நபிமொழியும் வந்துள்ளது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், “ஒரு மனிதர் நற்செயல் புரிகிறார். அதற்காக அவரை மக்கள் பாராட்டிப் பேசுகின்றனர். இதைப் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?” என்று கேட்கப்பட்டது.

அல்லாஹ்வின்தூதர்(ஸல்) அவர்கள், “அது இறை நம்பிக்கையாளருக்கு முன் கூட்டியே வரும் நற்செய்தியாகும்" என்றார்கள்.[2]

உளத்தூய்மை, முகஸ்துதி பற்றிய பேச்சை இந்த அளவுடன் சுருக்கிக் கொள்வோம். இதில் போதுமான அளவு பயனுள்ளது.

சுருக்கமாகக் கூறின், ஸஹ்ல் பின் அப்துல்லாஹ் (ரஹ்)வின் பின்வரும் வார்த்தை எவ்வளவு அழகானது! உளத்தூய்மையை விட மிகக் கடினமான எந்தவொன்றும் உள்ளத்திற்கு இல்லை. ஏனெனில் அதில் உளத்தூய்மைக்கு எவ்விதப் பங்குமில்லை.

யூஸுஃப் பின் ஹுஸைன் அர்ராஸீ (ரஹ்) கூறுகின்றார்கள் : உலகில் மிக அரிதான பொருள் உளத்தூய்மையாகும். எனது உள்ளத்தில் இருந்து முகஸ்துதியை நீக்க நான் எவ்வளவோ சிரமப்படுகின்றேன். அது வேறொரு விதத்தில் மீண்டும் முளைக்கின்றது.

ஸுஃப்யான் பின் உயைனா (ரஹ்) கூறுகின்றார்கள் : முத்தரிப் பின் அப்துல்லாஹ் (ரஹ்) பின்வரும் பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள் : இறைவா! நான் உன்னிடம் பாவ மீட்சி பெற்று விட்டு, மீண்டும் அதையே செய்வதில் இருந்து உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். உனக்காகத் தான் செய்வேன் என என் மீதே நான் கடமையாக்கி விட்டு, பின் அதை நிறைவேற்றாமல்

1.நிய்யத் மாறியதால் கூலி நின்றுவிடும். அதற்குமுன் செய்தவற்றிற்கு நன்மை வழங்கப்படும். உதாரணம் : பள்ளிகள், வைத்தியசாலைகள், கல்வி நிலையங்கள் போன்றவற்றை நிர்வகித்தல். **(அப்துல் அஸீஸ் தரீபி)**

2. அறிவிப்பவர் : அபூ தர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2642).

இருப்பதையிட்டு உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். உனக்கென நான் நினைத்துக் கொண்டு செய்த அமலில் முகஸ்துதி கலந்ததையிட்டு உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன்.(1)





*1. இதே கருத்தில் நபிமொழியொன்றும் உள்ளது. மஃகல் பின் யஸார் (ரலி) கூறுகின்றார்கள் : நான் அபூ பக்ர் (ரலி) அவர்களுடன் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது நபியவர்கள் : “அபூபக்ரே! உங்களிடம் இணை வைப்பானது எறும்பு ஊர்வதை விட மறைவானது” என்றார்கள். அதற்கு அபூபக்ர் : அல்லாஹ்வுடன் இன்னொரு கடவுளை ஏற்படுத்துவது தானே இணைவைப்பு? எனக் கேட்டார்கள். நபியவர்கள் : எனது உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன் மீது சத்தியமாக இணை வைப்பானது எறும்பு ஊர்வதை விட மிக மறைவானது. நான் உங்களுக்கு ஒரு விடயத்தைக் காட்டித்தரவா? அதை நீர் கூறினால் இணைவைப்பில் குறைவு, அதிகம் அனைத்தும் நீங்கிவிடும். இறைவா! நான் அறிந்து கொண்டே உனக்கு இணைவைப்பதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நான் அறியாதவற்றிலிருந்து உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன். (இமாம் புஹாரியின் அதபுல் முப்ரத் 716. இது ஸஹீஹானது)*

# ஹதீஸ் – 02

## இஸ்லாம், ஈமான், இஹ்ஸான்

عَنْ عُمَرَ بنِ الخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ:

« بَيْنَمَا نَحْنُ جُلُوسٌ عِنْدَ رَسُولِ اللهِ ﷺ ذَاتَ يَوْمٍ، إِذْ طَلَعَ عَلَيْنَا رَجُلٌ شَدِيدُ بَيَاضِ الثِّيَابِ، شَدِيدُ سَوَادِ الشّعْرِ، لَا يُرَى عَلَيْهِ أَثَرُ السّفَرِ، وَلَا يَعْرِفُهُ مِنّا أَحَدٌ. حَتى جَلَسَ إِلَى النبِيّ ﷺ . فَأَسْنَدَ رُكْبَتَيْهِ إِلَى رُكْبَتَيْهِ، وَوَضَعَ كَفيْهِ عَلَى فَخِذَيْهِ، وَقَالَ: يَا مُحَمدُ أَخْبِرْنِي عَنْ الْإِسْلَامِ. فَقَالَ رَسُولُ اللهِ ﷺ: الْإِسْلَامُ أَنْ تَشْهَدَ أَنْ لَا إِلَهَ إِلا اللهُ وَأَن مُحَمدًا رَسُولُ اللهِ، وَتُقِيمَ الصلَاةَ، وَتُؤْتِيَ الزكَاةَ، وَتَصُومَ رَمَضَانَ، وَتَحُج الْبَيْتَ إِنْ اسْتَطَعْت إِلَيْهِ سَبِيلًا.قَالَ: صَدَقْت . فَعَجِبْنَا لَهُ يَسْأَلُهُ وَيُصَدِّقُهُ! قَالَ: فَأَخْبِرْنِي عَنْ الْإِيمَانِ. قَالَ: أَنْ تُؤْمِنَ بِاللهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ، وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ. قَالَ: صَدَقْت. قَالَ: فَأَخْبِرْنِي عَنْ الْإِحْسَانِ.قَالَ: أَنْ تَعْبُدَ اللهَ كَأَنك تَرَاهُ، فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنهُ يَرَاك. قَالَ: فَأَخْبِرْنِي عَنْ الساعَةِ. قَالَ: مَا الْمَسْئُولُ عَنْهَا بِأَعْلَمَ مِنْ السائِلِ. قَالَ: فَأَخْبِرْنِي عَنْ أَمَارَاتِهَا. قَالَ: أَنْ تَلِدَ الْأَمَةُ رَبتَهَا، وَأَنْ تَرَى الْحُفَاةَ الْعُرَاةَ الْعَالَةَ رِعَاءَ الشاءِ يَتَطَاوَلُونَ فِي الْبُنْيَانِ. ثُمّ انْطَلَقَ، فَلَبِثْتُ مَلِيا، ثُمّ قَالَ لِي : يَا عُمَرُ أَتَدْرِي مَنْ السائِلُ؟. قُلْتُ: اللّهُ وَرَسُولُهُ أَعْلَمُ. قَالَ: فَإِنهُ جِبْرِيلُ أَتَاكُمْ يُعَلِّمُكُمْ دِينَكُمْ». رَوَاهُ مُسْلِم

*உமர் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் :* ***ஒரு நாள் நாங்கள் எல்லோரும் நபி (ஸல்) அவர்களுடன் உட்கார்ந்திருந்தோம். அப்போது எங்கள் முன் ஒருவர் வந்து நின்றார். அவருடைய ஆடைகள் மிகைத்த வெளுமையுடன் காணப்பட்டன. அவருடைய தலைமுடி மிகைத்த கருமை நிறத்துடன் காணப்பட்டது. பயணம் செய்ததற்கான அறிகுறிகள் எதுவும் அவரிடம் காணப்படவில்லை. எங்களில் யாருக்கும் அவரைத் தெரியாது. அவர் நடந்து சென்று நபி (ஸல்) அவர்களின் முன் அமர்ந்தார். அவரது முழங்கால்களை நபி (ஸல்) அவர்களின் முழங்கால்களுடன் சேர்த்தும் இரு கைகளைக் தனது கால்களின் மீது வைத்தும் அமர்ந்தார்.***

***பின்னர் நபி (ஸல்) அவர்களை நோக்கி 'முஹம்மதே, இஸ்லாத்தைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்றார். நபி (ஸல்) அவர்கள் 'இஸ்லாம்***

என்பது உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லையென்றும், முஹம்மது இறைவனின் தூதர் என்றும் சாட்சியம் கூறுவது, தொழுகையை நிறை வேற்றுவது, ஸகாத் கொடுப்பது, ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது, உங்களால் முடிந்தால் ஹஜ் செய்வது இவைகளாகும் என்றார்கள். இதற்கு அவர் நீங்கள் சரியாகவே சொன்னீர்கள் என்றார். நாங்கள் அவர் அப்படி வினவியது குறித்தும் அவரே உண்மைப்படுத்தியது குறித்தும் ஆச்சரியம் கொண்டோம்.

பின்னரவர் 'ஈமான் குறித்து எனக்குச் சொல்லுங்கள்' என்றார். 'அது அல்லாஹ்வின் மீதும் அவனது வானவர்கள், அவனது வேதங்கள், அவனது தூதர்கள், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொள்வதும், நல்லவைகளும் தீயவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும் என்றும் நம்புவதுமாகும்" என்பதாக நபி (ஸல்) அவர்கள் பதில் அளித்தார்கள். இதைக் கேட்ட அவர் நீங்கள் சரியாகவே சொன்னீர்கள் என்றார்.

தொடர்ந்து அவர் 'இஹ்ஸான் (உளத்தூய்மை) பற்றி எனக்குச் சொல்லுங்கள்' என்றார். 'நீங்கள் அல்லாஹ்வை பார்க்காத போதும் அவனை நேரில் பார்ப்பது போன்று வணங்குவதாகும். நீங்கள் அவனைப் பார்க்காத போதிலும் அவன் மெய்யாகவே உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றான்" எனச் சொன்னார்கள்.

பின்னர் அவர் 'எனக்கு நியாயத் தீர்ப்பு நாள் குறித்துச் சொல்லுங்கள்' என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'இந்தக் கேள்வி கேட்கப்படுபவர் கேட்பவரை விட அதிகமாக அறிந்தவர் அல்லர்" என்றார்கள். (அதாவது அல்லாஹ் மாத்திரமே அதன் நேரத்தை அறிவான்).

பின்னர் அவர் அதன் அடையாளங்கள் குறித்து எனக்குச் சொல்லுங்கள் என்றார். நபி (ஸல்) அவர்கள் சொன்னதாவது, 'அடிமைப்பெண் தனது எஜமானியைப் பெற்றெடுப்பாள். மேலும் காலணிகளில்லாத, முறையான ஆடைகளற்ற, வறியவர்களான ஆடுமேய்ப்போர் ஆடம்பரமாக கட்டிடங்களைக் கட்டுவதில் போட்டி போட்டுக் கொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள்'.

பிறகு அவர் போய் விட்டார். நான் அங்கேயே தாமதித்தேன். பிறகு நபி (ஸல்) அவர்கள், 'உமரே கேள்விகளைக் கேட்டவர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" எனக் கேட்டார்கள். 'அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்றாக அறிவார்கள்" என்றேன் நான். நபி (ஸல்) அவர்கள், அவர் ஜிப்ரீல் (அலை) ஆவார். அவர் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தைக் கற்றுத் தருவதற்காக வந்தார்" என்று கூறினார்கள்.

ஆதாரம் : முஸ்லிம் *(08)*

**விரிவுரை :**

உமர் (ரலி) அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படும் இந்த நபிமொழி புஹாரியல்லாமல் முஸ்லிமில் மாத்திரமே இடம்பெற்றுள்ளது. இதே செய்தி சில வார்த்தை மாற்றங்களுடன் அபூஹுரைரா (ரலி) அவர்கள் வாயிலாக புஹாரி, முஸ்லிம் இரண்டிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்க்கத்தின் சகல பகுதிகளையும் விவரிப்பதால் இது மகத்தான ஒரு நபிமொழியாகும். அதனால் தான் நபியவர்கள் இறுதியில் இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் போன்றவற்றின் தரங்களை விவரித்த பின் “அவர் ஜிப்ரீல் (அலை) ஆவார். அவர் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை கற்றுத் தருவதற்காக வந்தார்” எனக் கூறினார்கள். மூன்றையும் மார்க்கமாகவே ஆக்கியுள்ளார்கள்.(1)

இஸ்லாம் என்பதை வெளிரங்கமான உறுப்புக்களால் செய்யப்படும் அமல்களென தெளிவுபடுத்தினார்கள். அதில் முதலாவது உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி கூறுவதாகும். இது நாவினால் செய்யும் அமலாகும். பின்பு தொழுகையை நிறைவேற்றுதல், ஸகாத் வழங்கல், ரமழானில் நோன்பு நோற்றல், சக்தியுள்ளவர்கள் ஹஜ் செய்தல் என்பனவாகும்.

அவை தொழுகை, நோன்பு போன்ற உடலியல் வணக்கங்கள், ஸகாத் போன்ற பொருளியல் வணக்கம், மக்காவிலிருந்து தூரமாக இருப்போருக்கு ஹஜ் போன்ற உடல், பொருள் இரண்டும் கலந்த வணக்கம் என வகைப்படுகின்றன.

இங்கே நபியவர்கள் இஸ்லாம் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதன் செயல்களில் அடிப்படைகளையே கூறியுள்ளார்கள். அவை இந்நூலில் மூன்றாம் இலக்க நபிமொழியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஈமான் என்பதை நபியவர்கள் இந்நபிமொழியில் உள்ரங்கமான நம்பிக்கைகளைக் கொண்டே விவரித்துள்ளார்கள். “அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், வேதங்களையும், தூதர்களையும் மறுமை நாளையும், விதியையும் நீ நம்புவதாகும்” என்றார்கள்.

இந்த அடிப்படை ஐந்து அம்சங்களையும் அல்லாஹ் தனது வேதத்தில் பல இடங்களில் கூறியுள்ளான்.

---

1. கல்வி, மற்றும் சில நலன்களுக்காக ஒருவர் மாறு வேடத்தில் வரலாம் என்பதற்கு இது ஆதாரமாக உள்ளது. **(அப்துல் அஸீஸ் தரீபி)**

*“இத்தூதர் தனது இரட்சகனிடமிருந்து தனக்கு இறக்கப்பட்டதை நம்பிக்கை கொண்டுள்ளார். முஃமின்களும் (நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள்) அனைவரும் அல்லாஹ்வையும், அவனது வானவர்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் நம்பிக்கை கொண்டுள்ளனர். ‘அவனது தூதர்களில் எவருக்குமிடையில் வேறுபாடு காட்டமாட்டோம். நாம் செவியேற்றோம். கட்டுப்பட்டோம். எங்கள் இரட்சகனே! உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடமே மீளுதல் உள்ளது’ என்றும் கூறுகின்றனர். (பகரா : 285)*

*கிழக்கு, மேற்குப் பக்கம் உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது (மட்டும்) நன்மையாகாது. மாறாக அல்லாஹ்வையும், இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் நம்புவோரும், தான் விரும்பும் செல்வத்தை (அல்லாஹ்வுக்காக) நெருங்கிய உறவினர், அனாதைகள், வறியோர், வழிப்போக்கர், யாசிப்போர் (ஆகியோருக்கும்) அடிமைகளை விடுதலை செய்வதற்கும் வழங்கி, தொழுகையை நிலைநாட்டி ஸகாதைக் கொடுப்போரும், வாக்குறுதி அளித்தால் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும், வறுமை, துன்பம், போர் என்பவற்றின் போது சகித்துக் கொள்வோருமே நன்மை செய்பவர்கள். அவர்கள்தாம் உண்மை உரைத்தவர்கள். அவர்களே பயபக்தியாளர்கள். (பகரா : 177)*

*அவர்கள் மறைவானவற்றை நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் நிலை நாட்டுவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (நல்லறங்களில்) செலவும் செய்வார்கள். (நபியே! இன்னும் அவர்கள் உமக்கு இறக்கப்பட்டதையும், உமக்கு முன்னர் இறக்கப்பட்டவற்றையும் நம்பிக்கை கொள்வார்கள். மேலும், மறுமையையும் உறுதியாக நம்புவார்கள். (பகரா : 3,4)*

*இறைத் தூதர்களை நம்புதல் என்பது அவர்கள் அறிவித்த : வானவர்கள், நபிமார்கள், வேதங்கள், மறுமை, விதி, இன்னும் அல்லாஹ்வின் பண்புகளில் அவர்கள் விரிவாகத் தெளிவுபடுத்தியவை, மறுமை நிகழ்வுகளான மீஸான், ஸிராத், சுவனம், நரகம் என அனைத்தையும் நம்புதல் அவசியமாகும்.*

*விதியையும் - நலவாயினும் கெடுதியாயினும் - ஈமானின் அம்சங்களில் சேர்த்துள்ளார்கள். இந்த வார்த்தைக்காகத் தான் இப்னு உமர் (ரலி) அவர்கள் விதியை மறுப்போருக்கான பதிலாக இந்நபிமொழியைத் தனது தந்தை வாயிலாக அறிவித்தார்கள். அவர்கள் உலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் ஏற்கனவே நிர்ணயிக்கப்படாமல் எதேச்சையாக*

திடீரெனத்தான் நடக்கின்றன என வாதிடுவோராகும். அவர்களுடன் இப்னு உமர் (ரலி) அவர்கள் கடுமையாக நடந்து கொண்டது மாத்திரமின்றி தமக்கும் அவர்களுக்குமிடையில் எவ்விதத் தொடர்பும் இல்லையென அறிவித்தார்கள். விதியை நம்பாமல் எந்தவொரு அமலும் ஏற்கப்படமாட்டாது எனவும் அறிவித்தார்கள்.

**ஐயம் :** இந்நபிமொழியில் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தையும் ஈமானையும் வேறுபடுத்தி வெளிப்படையான அமல்களை ஈமானில் சேர்க்காமல் இஸ்லாத்தில் சேர்த்துள்ளார்கள். ஆனால் ஸலப் அறிஞர்கள் அமல்களை ஈமானை விட்டும் வேறு பிரித்துப் பார்ப்பவர்களைக் கடுமையாகச் சாடியுள்ளார்களே?

**பதில்:** உண்மை அதுதான். அமல்கள் ஈமானில் சேர்வதற்கான சான்றுகள் அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் உண்டு.

நம்பிக்கையாளர்கள் யாரெனில், அல்லாஹ்வைப் பற்றி ஞாபகமூட்டப் பட்டால் அவர்களது உள்ளங்கள் நடுங்கும். அவனது வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் அது அவர்களுக்கு நம்பிக்கையை அதிகரிக்கும். மேலும், அவர்கள் தமது இரட்சகன் மீதே முழுமையாக நம்பிக்கை வைப்பார்கள். அவர்கள் தொழுகையை நிலை நாட்டுவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கிய வற்றிலிருந்து (நல்லறங்களில்) செலவும் செய்வார்கள். (அல்அன்பால் : 2,3)

அப்துல் கைஸ் குழுவினரிடம் நபி (ஸல்) அவர்கள் ‘நான்கு காரியங்களை உங்களுக்கு ஏவுகிறேன். அவையாவன : அல்லாஹ்வை நம்புதல், அல்லாஹ்வை நம்புதல் என்றால் என்னவென்று தெரியுமா? என வினவினார்கள். பின், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று உறுதியாக நம்புவது, தொழுகையை நிலைநாட்டுவது, ஸகாத் கொடுத்து வருவது, கனீமத் (போரில் வென்ற பின் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட) பொருட்களில் ஐந்தில் ஒரு பகுதியை பொதுமக்கள் நன்மைக்காக) என்னிடம் ஒப்படைத்து விடுதல்” என்று கூறினார்கள். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி 523, முஸ்லிம் 17)

இவ்வாறான சான்றுகளுக்கும், ஜிப்ரில் (அலை) அவர்கள் இஸ்லாம், ஈமான் பற்றி வினவிய போது நபியவர்கள் இரண்டையும் வேறு பிரித்து வெளிப்படையான அமல்களை ஈமானல்லாமல் இஸ்லாத்துடன் சேர்த்ததற்குமிடையில் ஓர் அடிப்படையை உறுதிப்படுத்துவதன் மூலம் முரண்பாடு தெளிவாகி, இணக்கப்பாட்டை ஏற்படுத்தலாம். அதாவது : சில பெயர்கள் உள்ளன. அவை தனித்து வரும் போது அதன் பல கூறுகளைப் பொதிந்திருக்கும். அதே பெயர்ச் சொல் மற்றுமொரு பெயருடன் சேர்ந்து

வரும்போது அதன் சில கூறுகளையே இது குறிக்கும். ஏனையதை மற்றைய பெயர்ச் சொல் குறிக்கும். உதாரணமாக பகீர், மிஸ்கீன் எனும் சொற்களைக் குறிப்பிடலாம். ஒரு வசனத்தில் பகீர் எனும் வார்த்தை மாத்திரம் தனித்து வந்தால் அங்கு மிஸ்கினுடைய அர்த்தமும் உள்ளடங்கி பொதுவாக ஏழை எனும் அர்த்தம் கொடுக்கப்படும். பகீர், மிஸ்கின் இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் கூறப்பட்டால் முதலாவது பரம ஏழைக்கும் இரண்டாவது எளியவர்களுக்கும் கூறப்படும்.

அதே போன்று தான் இஸ்லாமும் ஈமானும் இரண்டும் தனித்தனியாக வந்தால் ஒன்று மற்றதன் அர்த்தத்தையும் சேர்த்தே அறிவிக்கும். இந்நபிமொழி போன்று இரண்டும் ஒரே சந்தர்ப்பத்தில் வந்தால் ஈமான் என்பது மார்க்கத்தின் நம்பிக்கைப் பகுதிக்கும் இஸ்லாம் என்பது வெளிப்படை அமல்களுக்கும் கூறப்படும்.

இந்த நுணுக்க விவரத்தின் மூலம் ஈமான் இஸ்லாம் பற்றிய விடயத்தில் உறுதியான ஒரு தெளிவு வெளிப்படுகின்றது. எனவே இஸ்லாமும் ஈமானும் தனித்தனியாக வரும் பட்சத்தில் பொதுவாக மார்க்கம் நாடப்படும். இரண்டிற்குமிடையில் வேறுபாடில்லை. சேர்ந்து வரும்போது முன்னர் கூறிய அடிப்படையில் வேறுபாடு ஏற்படும்.[(1)]

**"நீங்கள் அல்லாஹ்வை நேரில் பார்ப்பது போல் வணங்குங்கள்"**

இந்த வார்த்தை ஓர் அடியான் இவ்வாறு தான் அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அது அவனது நெருக்கத்தை வரவழைத்து, அவனை நேரில் காண்பது போன்று எண்ணுவதாகும். அது உள்ளச்சம், பயம், மரியாதை, கண்ணியம் போன்றவற்றைத் தோற்றுவிப்பதுடன் வணக்கத்தில் நலவு நாடி, அதனை அழகாகவும் பரிபூரணமாகவும் செய்யும் முயற்சியையும் தோற்றுவிக்கின்றது.

**"நீ அவனை நேரில் காணாவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றான்."**

இதற்கு பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

முன்னைய வார்த்தைக்கான காரணமாக இவ்வார்த்தை உள்ளதெனக் கூறப்படுகின்றது. ஏனெனில் தனது வணக்கத்தில் அல்லாஹ்வைக் கவனித்து அவனை நேரில் காண்பது போல் அவனது நெருக்கத்தை உள்ளத்தில் வரவழைப்பதற்கு ஏவப்பட்டால் அது அவனுக்கு சிரமமாகி

1. இதுதான் இந்த விடயத்தில் ஆதாரங்களுக்கு மிக நெருக்கமான இணக்கப்பாடாகும். இதனை நூலாசிரியர் தனது "பத்ஹுல் பாரி"யில் கூறியுள்ளார்கள். (பார்க்க 1/120)

விடுகின்றது. எனவே அவனை அல்லாஹ் பார்க்கின்றான். அவனது அனைத்து இரகசிய, பகிரங்க விடயங்களையும் அறிகின்றான் என்பதன் மூலம் முதல் கட்டளைக்கு உதவி தேடுகின்றான்.

யாருக்கு அல்லாஹ்வை நேரில் காண்பது போன்று வணங்குவது சிரமமோ அவர்கள் அல்லாஹ் தம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற எண்ணத்துடன் வணங்கட்டும். அவன் இவரைப் பார்ப்பதையிட்டு வெட்கப்படட்டும் என்பதே இதன் அர்த்தம் எனவும் கூறப்பட்டுள்ளது. ஓர் அறிஞர் பின்வருமாறு கூறுகின்றார் : அல்லாஹ் உன்னைப் பார்ப்பது மிக எளிதானது என்பதையிட்டு அவனை அஞ்சிக் கொள்.

மற்றுமொரு அறிஞர் கூறுகின்றார்: அல்லாஹ் உம்மீது கொண்டுள்ள சக்தியின் அளவு நீ அவனை அஞ்சிக் கொள். அவனுக்கு உம்மீது உள்ள நெருக்கத்தின் அளவு நீ அவனுக்கு மாறு செய்வதற்கு வெட்கப்படு.

ஸலபுகளில் ஓர் அறிஞர் பெண்மணி கூறுகின்றார்கள்: அல்லாஹ்வை நேரில் பார்ப்பவர் போன்று அமல் செய்பவர் அவனை அறிந்து மகானாவார். அல்லாஹ் அவனைப் பார்க்கின்றான் என்ற எண்ணத்தில் அமல் செய்பவர் உளத் தூய்மையுடையவனாவார். இதன் மூலம் வணக்கத்தின் இரு நிலைகளையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

**1. இஹ்லாஸுடைய நிலை (உளத்தூய்மை) :** இது ஓர் அடியான் அல்லாஹ் தன்னைப் பார்த்து, அறிந்து கொண்டிருக்கின்றான், நெருக்கமாக உள்ளான் எனும் எண்ணத்தை வரவழைப்பதாகும். ஓர் அடியான் அமல் செய்யும் போது இதனை உள்ளத்தில் வரவழைத்து, அதன்படி செயல்பட்டால் அவர் அல்லாஹ்விற்காக உளத்தூய்மையுடன் இருக்கின்றான். ஏனெனில் இது ஒருவன் தனது அமல்களில் அல்லாஹ் அல்லாதவர்களைத் திரும்பிப் பார்த்தல், அவர்களை நாடுதல் போன்றவற்றை விட்டும் தடுக்கின்றது.

**2. காட்சி நிலை** : இது அடியான் தனது உள்ளத்தால் அல்லாஹ்வைக் காண்பது போன்ற நினைவில் அமல் செய்வதாகும். அது ஈமான் மூலம் உள்ளம் ஒளிருவதும், உள்ளுணர்வு ஞானத்தில் ஊடுருவிச் சென்று மறைவானவையெல்லாம் நேரில் காண்பது போன்ற உணர்வு ஏற்படுவதுமாகும்.

ஜிப்ரீல் (அலை) அவர்கள் தொடர்பான இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள இஹ்ஸான் எனும் நிலை இதுதான். உள்ளுணர்வு ஊடருத்தும் வலிமைக்கேற்ப இந்நிலையில் மக்கள் வேறுபடுவார்கள்.

*அல்குர்ஆனில் “வானங்களிலும் பூமியிலும் உள்ள உயரிய பண்பு அவனுக்கே உரியது” (அர்ரூம் : 27) எனும் வசனத்தில் கூறப்பட்டுள்ள “அல்மஸலுல் அஃலா” (உயர்வான பண்பு) என்பதை இஹ்ஸான் எனும் இந்தக் காட்சி நிலையென சில அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர்.*

*அதே போன்று தான் “அல்லாஹ் வானங்கள் மற்றும் பூமியின் பிரகாசமானவன். அவனது பிரகாசத்தின் உதாரணம் ஒரு மாடத்தைப் போன்றதாகும். அதிலே ஒரு விளக்கு உள்ளது.” (அந்நூர் : 35) எனும் வசனமும், அதாவது “;முஃமினின் உள்ளத்தில் அவனது பிரகாசத்தின் உதாரணம்” என்பதே அர்த்தமாகும். இக்கருத்தையே உபை பின் கஃப் (ரலி) மற்றும் ஸலப் அறிஞர்கள் கூறியுள்ளனர்.*

***மறுமை பற்றிக் கூறுங்கள் என ஜிப்ரீல் (அலை) கேட்டபோது கேள்வி கேட்டவரை விட கேட்கப்பட்டவர் இவ்விடயத்தில் அறிவாளி கிடையாது என நபியவர்கள் பதிலளித்தார்கள்.***

*அதாவது மறுமை ஏற்படும் நேரம் பற்றிய விடயத்தில் அனைத்து படைப்பினங்களும் சமமே. இதைப் பற்றிய அறிவை அல்லாஹ் தன்னிடம் மறைத்து வைத்துள்ளான் என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது. நபி (ஸல்) அவர்கள், ‘மறைவானவற்றின் திறவுகோல் ஐந்தாகும்” என்று கூறிவிட்டு, பிறகு ‘நிச்சயமாக, மறுமை (நாள் எப்போது வருமென்பது) பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது” என்று தொடங்கும் (திருக்குர்ஆன் லுக்மான் : 34 வது) இறை வசனத்தை ஓதினார்கள். (புஹாரி : 4778)*

***“அதன் அடையாளத்தைப் பற்றிக் கூறுங்கள்”***

*அதாவது மறுமை நெருங்குவதை அறிவிக்கும் அடையாளங்களாகும். நபி (ஸல்) அவர்கள் மறுமைக்கான இரண்டு அடையாளங்களை இந்த நபிமொழியில் கூறியுள்ளார்கள்.*

1. ***அடிமைப் பெண் அவளது எஜமானியைப் பெற்றெடுப்பாள்.***

*இது எதிர்காலத்தில் பல பிரதேசங்கள் வெற்றி கொள்ளப்பட்டு, அடிமைகள் அதிகமாக வரவழைக்கப்பட்டு அவர்கள் மூலமாகக் குழந்தைகள் பெறுவதையே சுட்டிக்காட்டுகின்றது. தாய் தனது எஜமானிற்கு எப்போதும் அடிமையாக இருப்பாள். அவன் மூலம் பெற்றெடுத்த பிள்ளை அவனது தரத்தில் இருக்கும். ஏனெனில் எஜமானின் பிள்ளை எஜமானின் தரத்தில்தான் இருக்கும். எனவே அடிமை பெற்றெடுத்த அந்தப் பிள்ளை அவனது தாயின் எஜமானுடைய தரத்திலேயே இருக்கின்றான்.*

**2. காலணிகளற்ற, முறையான ஆடைகளற்ற, வறுமையான ஆட்டிடையர்கள் ஆடம்பரமான மாளிகைகள் கட்டுவதில் போட்டி போடுவார்கள்.**

இந்த நபிமொழியில் உள்ள “ஆலத்” “ஃபிட” எனும் அரபு வாசகம் வறியவர்களைக் குறிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : “வறுமையுடையவராக உம்மை அவன் கண்டு தேவையற்றவராக ஆக்கவில்லையா?” *(அழ்ழுஹா : 08)*

அதாவது அடிமட்டத்தில் இருந்த மக்கள் தலைவர்களாக மாறி, அவர்களது செல்வங்கள் பெருகி, கட்டிடங்களைக் கட்டுவதிலும், அலங்கரிப்பதிலும், முழுமைப்படுத்துவதிலும் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.[1]

இந்த நபிமொழியில் கூறப்பட்டுள்ள மறுமையின் அடையாளங்களின் சாரம்சம் தகுதியற்றவர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுவதாகும். நபியவர்களிடம் மறுமை பற்றிக் கேட்ட நபருக்கு “பொறுப்பு தகுதியற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் மறுமையை எதிர்பாருங்கள்” என்றார்கள்.[2]

இவையனைத்தும் இறுதிக் காலத்தில் யதார்த்தங்கள் தலைகீழாகப் புரள்வதையும், விடயங்கள் எல்லாம் மாற்றமடைவதையுமே பறை சாற்றுகின்றது.

---

*1.* மேற்கண்டவை அரபு நாடுகளில் வெளிப்பட்ட அடையாளங்களாகும். வஹீயில் கூறப்படும் மறுமையின் அடையாளங்கள் அரபு சமூகத்திலும், அரபு நாடுகளிலும் தான் நிகழும். **(அப்துல் அஸீஸ் தரீபி)**

*2.* அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி *(59)*

# ஹதீஸ் - 03

## இஸ்லாத்தின் தூண்கள்

عَن عَبْدِ اللهِ ابْنِ عُمَرَ رضي الله عنه قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُوْلُ:

((بُنِيَ الإِسْلَامُ عَلَى خَمْسٍ: شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ، وَإِقَامِ الصَّلَاةِ، وَإِيتَاءِ الزَّكَاةِ، وَحَجِّ البَيْتِ، وَصَوْمِ رَمَضَانَ)).رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : '**இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிறுவப்பட்டுள்ளது. அவை, அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது தூதர் ஆவார்கள் என்றும் சான்று பகர்தல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் கொடுத்தல், ஹஜ் செய்தல், ரமழான் மாதம் நோன்பு நோற்றல் ஆகியவையாகும்”***

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (08), முஸ்லிம் (16)*

**விரிவுரை :**

*இஸ்லாம் இந்த ஐந்து விடயங்கள் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதே இந்நபிமொழியின் நாட்டமாகும். அவை ஒரு கட்டிடத்திற்குரிய அடிப்படைத் தூண்களைப் போன்றதாகும்.*

***இவ்வார்த்தையின் நோக்கம் :*** *இஸ்லாத்தை ஒரு கட்டிடத்திற்கு ஒப்பாக்குவதாகும். அக்கட்டிடத்தின் தூண்கள் இந்த ஐந்து விடயங்களாகும். இவையன்றி கட்டிடம் நிலைத்திருக்க மாட்டாது. இஸ்லாத்தின் ஏனைய விடயங்கள் கட்டிடத்தைப் பூரணப்படுத்துபவையே. அதில் ஒன்று குறைந்தால் கட்டிடத்தில் குறை ஏற்படுமே தவிர அது நிலைத்திருக்கும். விழமாட்டாது. ஆனால் இந்த ஐந்து தூண்களையும் இழப்பதால் சந்தேகமின்றி இஸ்லாம் நீங்கி விடுகின்றது. அதேபோன்று இரு ஷஹாதத் கலிமாக்கள் மாத்திரம் குறைவதாலும் இஸ்லாம் நீங்கி விடுகின்றது.*

தொழுகையைப் பொறுத்த வரை அதை விடுபவன் இஸ்லாத்தை விட்டும் வெளியாகி விடுகின்றான் என்பதற்கான சான்றுகள் பல நபிமொழிகளில் வந்துள்ளன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (விசுவாசியான) மனிதனுக்கும் இணைவைப்பு இறை நிராகரிப்பு ஆகியவற்றிற்குமிடையில் உள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும்.(1)

இதே நபிமொழி புரைதா (ரலி)(2), ஸவ்பான் (ரலி), அனஸ் (ரலி) போன்றோர் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முஆத் (ரலி) அவர்கள் அறிவிக்கக்கூடிய செய்தியில் (இந்நூலின் 29ஆவது நபிமொழி) : ''இந்த விடயத்தின் உச்சம் இஸ்லாமாகும். அதன் தூண் தொழுகையாகும்'' என்றார்கள். தொழுகையை நபியவர்கள் ஒரு காட்சிக் கூடம் நிலைத்திருக்க இன்றியமையாத தூணைப் போன்று ஆக்கியுள்ளார்கள். தூண் இல்லாவிடில் கூடாரம் நிலைத்திருக்காது வீழுந்து விடும். உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள் : தொழுகையை விட்டவனுக்கு இஸ்லாத்தில் பங்கேதுமில்லை.(3)

அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : தொழுகையைத் தவிர வேறு எந்தவொரு செயலையும் விடுவதை குப்ராக நபித்தோழர்கள் பார்ப்பதில்லை.(4)

தொழுகையை விடுபவன் காபிர் என்ற கருத்தில் தான் முன்னால் அறிஞர்கள், பின்வந்தோரில் அதிகமானோர் உள்ளனர். அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் (ரஹ்), இமாம் அஹ்மத், இஸ்ஹாக் பின் ராஹவைஹி போன்றோர் அவர்களில் சிலராவர். அதிலும் இமாம் இஸ்ஹாக் அவர்கள் அனைத்து அறிஞர்களும் ஒருமித்திருப்பதாகக் கூறுகின்றார்கள்.(5)

இதுதான் பெரும்பான்மையான ஹதீஸ் அறிஞர்களுடையவும் கருத்து என முஹம்மத் பின் நஸ்ர் அல்மர்வஸீ (ரஹ்) கூறுகின்றார்கள்.

---

1.அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (82)

2.அது எங்களுக்கும் அவர்களுக்குமிடையில் உள்ள உடன்படிக்கை தொழுகையாகும். யார் அதனை விடுகிறாரோ அவர் காபிராவார் எனும் பிரபலமான நபிமொழியாகும். (ஆதாரம் : அஹ்மத் (23403), திர்மிதி (2621), நஸாஈ (462), இப்னு மாஜா (1079). இது ஸஹீஹான நபிமொழியாகும்.

3.அறிவிப்பவர் : மிஸ்வர் பின் மஹ்ரமா (ரலி), ஆதாரம் : முவத்தா (51)

4.நூல் : திர்மிதி (2622). இதன் அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹானதாகும்.

5.இக்கருத்தில் ஸஹாபாக்கள் ஒருமித்திருப்பது போன்று தாபிஈன்களும் ஒருமித்துள்ளனர் என அய்யூப் அஸ்ஸிக்தியானீ (ரஹ்) அவர்களைத் தொட்டும் ஹம்மாத் என்பவர் வாயிலாக இமாம் மர்வஸீ (ரஹ்) அறிவித்துள்ளார்கள். இமாம் அய்யூப் (ரஹ்) கூறுகின்றார்கள். தொழுகையை விடுவது குப்ராகும். அதில் நாம் கருத்து வேறுபாடுபடமாட்டோம். **(அப்துல் அஸீஸ் தரீபி)**

(தொழுகை மாத்திரமல்ல) இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் வேண்டுமென்றே எதனை விட்டாலும் அவன் காபிராகிவிடுகின்றான் என்ற கருத்திலும் சிலர் இருக்கின்றனர். இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களுடைய ஒரு அறிவிப்பாக இது பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவரது மத்ஹபைச் சேர்ந்த சிலரும், மாலிக் மத்ஹப் அறிஞர் இப்னு ஹபீப் என்பவரும் இக்கருத்தைக் கொண்டுள்ளனர்.[1]

நோன்பு, ஹஜ், தொழுகை, ஸகாத்தை மாத்திரம் விடுவதும் குப்ராகும் என இமாம் அஹ்மத் அவர்களின் ஓர் அறிவிப்புள்ளது.[2]

ஜிஹாத் சிறந்த அமல்களில் ஒன்றாக இருந்தும் இப்னு உமர் (ரலி) அவர்களின் இந்நபிமொழியில் கூறப்படாததற்கு இரு காரணங்களைக் கூறலாம்.

1. ஜிஹாத் பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப் பிரகாரம் பர்ழு கிபாயாவாகிய சமூகக் கடமையாகும். ஆனால் இந்த ஐந்தும் பர்ழு ஐனாகிய தனிநபர் கடமையாகும்.

2. ஜிஹாத் மறுமை வரை நீடிக்கமாட்டாது. மாறாக நபி ஈஸா (அலை) அவர்கள் இறங்கியதும் இஸ்லாத்தைத் தவிர வேறு மதமேதும் இருக்கமாட்டாது.[3] அப்போது போர் முடிவுற்று ஜிஹாதின் தேவையிருக்காது. ஆனால் இந்த ஐந்து தூண்களும் மறுமை வரும் வரை முஃமின்களுக்குக் கடமையானதாகும்.

---

1. ஒரே நாளில் ஓரிரு தொழுகையை விட்டவன் அதனைத் தொடர்ச்சியாக முழுமையாக விடும் வரை காபிராக மாட்டான் என்பதே வலுவான கருத்தாகும். –அல்லாஹ் அறிந்தவன்- ஐவேளைத் தொழுகைகளையும் ஏற்று விட்டு இரண்டையாவது தொடர்ந்து தொழுபவன் முஸ்லிமாகவே இருப்பான். எவ்வாறாயினும் முழுமையான இணை வைப்பாளனை விட இவன் பாவத்தில் குறைந்தவன் தான். அதற்கு ஆதாரமாக முஸ்னத் அஹ்மதில் (20287) பின்வரும் செய்தியைக் கூறலாம். நஸ்ர் பின் ஆஸிம் (ரலி) கூறுகின்றார் : எங்களில் ஒருவர் நபியவர்களிடம் வந்து இரண்டு தொழுகைகளை மாத்திரம் தொழுவதற்கு பைஅத் செய்வதற்கு விரும்பிய போது நபியவர்களும் அவ்வாறே பைஅத் வழங்கினார். எவ்வாறாயினும் தகுந்த காரணமின்றி ஒரு வேளைத் தொழுகையைக் கூட விடுபவன், அல்லது பிற்போடுபவன் மார்க்கத்தில் அதற்கிருக்கும் மகத்துவத்தினால் விபச்சாரம் புரிபவன், மது அருந்துபவனை விட பாவத்தில் கடுமையானவனாவான். (அப்துல் அஸீஸ் தரீபி)

2. இதுபற்றி விரிவாக அறிய நூல் ஆசிரியரின் பத்ஹுல் பாரீ (1/20-25) நூலை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

3. ஜிஹாதும், அதற்குரிய காரணங்களும், அதனைக் கடமையாகக்குபவையும் மறுமை வரை நீடிப்பது தான் அடிப்படையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என்னுடைய சமுதாயத்தில் ஒரு கூட்டத்தினர் மறுமை வரை சத்தியத்திற்காகப் போராடி மேலோங்கிச் சென்று கொண்டே இருப்பார்கள். (அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (247). இதே நூலில் முஆவியா (ரலி) அவர்கள் வாயிலாகவும் இச்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ஈஸா (அலை) அவர்களது வருகைக்குப் பின் நடைபெறும் போர் மறுமையின் ஒரு பகுதியாகக் கணிக்கப்படும். இதுபற்றி விரிவான ஒரு நபிமொழி அபூதாவூதில் (2484) இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அவர்கள் வாயிலாக நபியவர்கள் கூறியதாக பின்வரும் செய்தி பதியப்பட்டுள்ளது : எனது சமுதாயத்தில் ஒரு கூட்டம் தம்மை எதிர்த்தவர்களுடன் போரிட்டு மேலோங்கிச் சென்று கொண்டே இருப்பார்கள். எதுவரையெனில் அவர்களில் இறுதியானவர் தஜ்ஜாலுடன் போரிடும் வரை (தொடர்ந்து கொண்டே இருப்பார்கள்) **(அப்துல் அஸீஸ் தரீபி).**

## ஹதீஸ் – 04

### மனித படைப்பின் படித்தரமும் இறுதி முடிவும்

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: حَدثَنَا رَسُولُ اللهِ ﷺ -وَهُوَ الصادِقُ الْمَصْدُوقُ-:

"إن أَحَدَكُمْ يُجْمَعُ خَلْقُهُ فِي بَطْنِ أُمِّهِ أَرْبَعِينَ يَوْمًا نُطْفَةً، ثُم يَكُونُ عَلَقَةً مِثْلَ ذَلِكَ، ثُم يَكُونُ مُضْغَةً مِثْلَ ذَلِكَ، ثُم يُرْسَلُ إلَيْهِ الْمَلَكُ فَيَنْفُخُ فِيهِ الروحَ، وَيُؤْمَرُ بِأَرْبَعِ كَلِمَاتٍ: بِكَتْبِ رِزْقِهِ، وَعَمَلِهِ، وَأَجَلِهِ، وَشَقِيٍّ أَمْ سَعِيدٍ؛ فَوَ الذِي لَا إلَهَ غَيْرُهُ، إن أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنةِ حَتى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إلا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النارِ فَيَدْخُلُهَا. وَإِن أَحَدَكُمْ لَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ النارِ حَتى مَا يَكُونُ بَيْنَهُ وَبَيْنَهَا إلا ذِرَاعٌ فَيَسْبِقُ عَلَيْهِ الْكِتَابُ فَيَعْمَلُ بِعَمَلِ أَهْلِ الْجَنةِ فَيَدْخُلُهَا."
رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*உண்மையே பேசிய, உண்மைபடுத்தப்பட்டவருமான நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'நிச்சயமாக உங்கள் ஒவ்வொருவரது படைப்பும் தனது தாயின் வயிற்றில் நாற்பது நாட்கள் விந்துவாக ஒருங்கிணைக்கப்படுகிறது. பின்னர் இதே கால அளவிற்கு அட்டை போன்று இரத்தக்கட்டியாகவும், பின்னர் இதே கால அளவிற்கு ஒரு துண்டு சதையாகவும் இருக்கின்றது. பின்னர் அந்தக் கருவுக்கு ஒரு வானவர் அனுப்பப்பட்டு, அவர் ரூஹ் (உயிர்) ஊதுவார். அத்துடன் அவர் நான்கு விடயங்கள் குறித்து கட்டளையிடப்படுகின்றார். அதன் வாழ்வாதார அளவு, ஆயுட்காலம், செயற்பாடுகள், அவன் பாக்கியசாலியா? துர்ப்பாக்கியசாலியா? என்பவற்றை எழுதக் கட்டளை இடப்படுகின்றார். எவனையன்று வணக்கத்திற்குரியவர் எவருமில்லையோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக உண்மையிலேயே உங்களில் ஒருவர் சுவர்க்கத்திற்கும் அவருக்குமிடையில் ஒரு முழம் அளவு தூரமே இருக்கின்ற வகையில் சுவர்க்க வாசியைப் போல் நடந்து கொள்வார். ஆனால் அவருக்காக எழுதப்பட்டிருப்பது அவரை முந்திக் கொள்கிறது. ஆதலால் அவர் நரக வாசியைப் போல் நடந்து கொள்ள ஆரம்பித்து, அதனால் அவர் நரகத்தில் நுழைகின்றார்.*

**இன்னும் உங்களில் ஒருவர் நரகத்திற்கும் அவருக்குமிடையில் ஒரு முழம் அளவு தூரமே இருக்கும் வகையில் நரக நெருப்புக்கு இரையாகும் விதத்தில் நடந்து கொள்கிறார். ஆனால் அவருக்காக எழுதப்பட்டிருப்பது அவரை முந்திக் கொள்கிறது. இதனால் அவர் சுவர்க்கவாசியைப் போல் நடக்க ஆரம்பித்து அவர் சுவர்க்கத்தில் நுழைகின்றார்.**

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : புஹாரி (3208), முஸ்லிம் (2643.)*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி புஹாரி, முஸ்லிம் இரு கிரந்தங்களிலும் இடம்பெறுகின்ற, இந்த சமூகத்தவர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபிமொழியாகும்.*

*கருவறையில் சிசு 120 நாட்களில் மூன்று கட்டங்கள் படிப்படியாக மாறுபடுவதை இந்நபிமொழி சுட்டிக் காட்டுகின்றது. முதல் 40 நாட்களில் விந்துவாகவும், இரண்டாவது 40 நாட்களில் கருவறைச் சுவரில் ஒட்டிக் கொள்ளக்கூடிய இரத்தக் கட்டியாகவும் மூன்றாவது 40 நாட்களில் சதைப் பிண்டமாகவும் வளர்ச்சியடைகின்றது. 120 நாட்களுக்குப் பின் ஒரு வானவர் கருவறையில் உயிர் ஊதிவிட்டு மேற்கண்ட நபிமொழியில் கூறப்பட்டுள்ள நான்கு கட்டளைகளையும் எழுதப்படும்.*

*பல கட்டங்களாக சிசு வளர்ச்சியடைந்து மாற்றமடைவதை அல்லாஹ் தனது திருமறையில் பல இடங்களில் கூறியுள்ளான்:*

*“மனிதர்களே! (மரணித்த பின்) எழுப்பப்படுவதில் நீங்கள் சந்தேகத்தில் இருந்தால் (அறிந்து கொள்ளுங்கள்) நிச்சயமாக நாம் தான் மண்ணிலிருந்தும், பின்னர் இந்திரியத் துளியிலிருந்தும், பின்னர் (கருவறைச் சுவரில்) ஒட்டிக் கொள்ளக் கூடியதிலிருந்தும், பின்னர் வடிவமைக்கப்பட்டதும், வடிவமைக்கப்படாததுமான சதைப் பிண்டத்திலிருந்தும் உங்களைப் படைத்தோம். உங்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே (இதை விபரிக்கின்றோம்). குறிப்பிட்ட காலம் வரைக்கும் நாம் நாடுபவற்றைக் கருவறைகளில் தரிபடுத்துகின்றோம்.” (ஹஜ் : 05)*

*விந்துவாக, இரத்தக் கட்டியாக, சதைக் கட்டியாக இருக்கும் இம்மூன்று கட்டங்களை அல்குர்ஆனின் பல இடங்களில் கூறியுள்ளான். பிறிதொரு வசனத்தில் இது பற்றி மேலதிகமாக சில செய்திகளையும் குறிப்பிட்டுள்ளான்.*

நிச்சயமாக நாம் மனிதரைக் களி மண் எனும் மூலத்திலிருந்து படைத்தோம். பின்னர் பாதுகாப்பான ஓரிடத்தில் அவனை நாம் இந்திரியத் துளியாக வைத்தோம். பின்னர் இந்திரியத் துளியை (கருவறைச் சுவரில்) ஒட்டிக்கொள்ளக் கூடியதாகப் படைத்தோம். பின்னர், (கருவறைச் சுவரில்) ஒட்டிக்கொள்ளக் கூடியதை சதைப் பிண்டமாக்கினோம். பின்னர், சதைப் பிண்டத்தை எலும்பாக்கி, எலும்பை சதையால் போர்த்தினோம். பின்னர், அவனை வேறொரு படைப்பாக ஆக்கினோம். படைப்பாளர்களில் மிகச் சிறந்தவனான அல்லாஹ் பாக்கியமுடையவனாவான். (அல்முஃமினூன் : 12-14)

உயிர் ஊதப்பட முன்னால் மனித படைப்பு தாண்டிவரும் ஏழு நிலைகளையே இங்கு அல்லாஹ் கூறியுள்ளான். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மனிதன் ஏழிலிருந்து படைக்கப்பட்டுள்ளான் என்று கூறிவிட்டு மேற்கண்ட வசனத்தை ஓதுவார்கள்.

பிக்ஹ் கலை அறிஞர்களில் சிலர் ஒரு பெண் தனது வயிற்றிலிருக்கும் சிசுவிற்கு உயிர் ஊதப்படாமலிருக்கும் வரை கருக்கலைப்பு செய்யலாம் என அனுமதி வழங்கியுள்ளனர். அதனை "அஸ்ல்" (உடலுறவின் போது பெண் குறிக்குள் விந்தை செலுத்தாமல் வெளியே விட்டு விடும் செயல்) ஆக ஆக்கியுள்ளனர். எனினும் இது பலவீனமான கருத்தாகும். ஏனெனில் சிசு என்பது உருவான ஒரு கரு. சிலவேளை மனித தோற்றம் கூட வந்திருக்கலாம். ஆனால் "அஸ்ல்" முறையில் கரு அறவே உருவாகியிருக்க மாட்டாது.

எமது (ஹன்பலி) மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் கரு இரத்தக் கட்டியின் நிலையை அடைந்தால் அதனைக் கலைக்க முடியாது என தெளிவாகக் கூறியுள்ளனர். ஏனெனில் அது உருவான ஒரு குழந்தையாகத்தான் பார்க்கப்படுகின்றது. ஆனால் விந்து அவ்வாறல்ல. அது இன்னும் குழந்தையாக ஆரம்பிக்கவில்லை. சிலவேளை கருத் தரிக்காமலேயே இருக்கவும் வாய்ப்புள்ளது.[1]

**"உண்மையாக வணங்கப்படும் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்களில் ஒருவர் சுவனத்தின் அமலாக அமல் செய்து….."**

---

1. உயிர் ஊதப்பட முன்னாலும் வறுமைக்கு அஞ்சி கருக்கலைப்பு செய்வது கூடாது. ஏனெனில் அது அல்லாஹ்வைப் பற்றிய தவறான எண்ணத்தின் வெளிப்பாடே. இணை வைப்பாளர்களுக்கு மத்தியில் வசிக்க வேண்டுமென்ற அச்சம், அல்லது வைத்தியர்களால் சிசுவிற்கு குறைகள், அல்லது ஊனம் இருப்பதாக உறுதிப்படுத்தல், அல்லது தாயின் ஆரோக்கியம் போன்ற நலன்களுக்காக கருக்கலைப்பு செய்வதில் தவறேதுமில்லை. **(அப்துல் அஸீஸ் தரீபி).**

*இது இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களின் வார்த்தை இந்நபிமொழியுடன் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.[1] இக்கருத்து நபியவர்களாலும் பல அறிவிப்பாளர் வரிசைகளுடன் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அமல்கள் ஏற்கப்படுவதெல்லாம் (மனிதனின்) இறுதி முடிவை வைத்துத்தான்.[2]*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு மனிதர் நீண்ட காலம் சுவர்க்கவாசிகளின் (நற்)செயலைச் செய்துகொண்டே வருவார். பிறகு அவரது செயல் நரகவாசிகளின் செயலாக முடிக்கப்படும். ஒரு மனிதர் நீண்ட காலம் நரகவாசிகளின் (தீய)செயலைச் செய்துகொண்டே வருவார். பிறகு அவரது செயல் சுவர்க்கவாசிகளின் செயலாக முடிக்கப்படும்.[3]*

*நபி (ஸல்) அவர்களும் இணைவைப்பாளர்களும் (கைபர் போரில்) சந்தித்துப் போரிட்டனர். நபி (ஸல்) அவர்கள், (அன்றைய தினத்தின் போரை முடித்துக் கொண்டு) தம் படையினரிடமும், மாற்று அணியினர் அவர்கள் தம் படையினரிடமும் திரும்பிய போது, நபி (ஸல்) அவர்களின் தோழர்களிடையே ('குஸ்மான்' என்றழைக்கப்பட்ட) ஒருவர் இருந்தார். அவர், பிரிந்து சென்ற (போரிடாத) எவரையும், (படையிலிருந்து விலகி) தனியாகப் போரிட்ட எவரையும் விட்டுவிடாமல் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று தம் வாளால் (வீராவேசமாக) வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது, 'இன்றைய தினம் இன்னவர்(உத்வேகத்துடன் போரிட்டு) தேவையை நிவர்த்தித்தது போன்று வேறெவரும் நம்மில் தேவை தீரப் போரிடவில்லை'' என்று (மக்களால்) பேசப்பட்டது. அப்போது நபி (ஸல்) அவர்கள், 'அவர் நரகவாசிகளில் ஒருவர்'' என்று கூறினார்கள். அப்போது மக்களில் (அக்ஸம் இப்னு அபில் ஜவ்ன் என்ற) ஒருவர், 'நான் (பின்தொடர்ந்து) அவருடன் செல்லப் போகிறேன்'' என்று கூறினார். (அவ்வாறே) அந்த மனிதருடன் இவரும் புறப்பட்டார்.*

*அவர் நிற்கும் போதெல்லாம் அவருடன் இவரும் நின்றார். அவர் விரைந்து சென்றால் அவருடன் இவரும் விரைந்து சென்றார். அந்த (குஸ்மான் என்ற) மனிதர் (அப்போரில் ஒரு கட்டத்தில்) கடுமையாக*

---

*1. அதாவது இவ்வார்த்தை நபியுடையதல்ல. மாறாக இப்னு மஸ்ஊத் (ரலி) தனது கருத்தை நபிமொழியின் இறுதியில் இணைத்துள்ளார்கள். இவ்வாறு நபிமொழியுடன் அறிவிப்பாளர் ஒருவர் தனது கருத்தை இணைத்து, கேட்பவர் இதுவும் நபிமொழி தான் என நினைக்குமளவு வேறுபடுத்தாமல் இருப்பதை ஹதீஸ் கலையில் “இத்ராஜ்” எனப்படுகின்றது. (அல்பாஇஸுல் ஹஸீஸ் பக் 61)*

*2.அறிவிப்பவர் : ஸஹ்ல் பின் ஸஃத் (ரலி), ஆதாரம் : புஹாரி (6602).*

*3.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2651)*

காயப்படுத்தப்பட்டார். அதனால் அவர் அவசரமாக இறந்து போக விரும்பி தன்னுடைய வாளை (அதன் கீழ் பகுதியை) பூமியில் வைத்து, அதன் கூரான மேல் பகுதியைத் தன் மார்புகளுக்கிடையில் வைத்து, பிறகு அந்த வாளின் மீது தன் உடலை அழுத்திக் கொண்டு தற்கொலை செய்தார். (பின்தொடர்ந்து சென்ற) அந்த மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'தாங்கள் இறைத்தூதர் என்று நான் உறுதி கூறுகிறேன்'' என்றார். நபி (ஸல்) அவர்கள், 'என்ன அது?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், 'இவர் நரகவாசிகளில் ஒருவர் என்று ஒரு மனிதரைப் பற்றித் தாங்கள் சற்று முன்பு கூறினீர்களல்லவா? அதை மக்கள் பெரிதாகக் கருதினர். எனவே நான், 'அவர் விடயத்தில் உங்களுக்கு நான் பொறுப்பு'' என்று (மக்களிடம்) கூறிவிட்டு அவரைத் தேடி நான் புறப்பட்டேன். (அவரைக் கண்டுபிடித்து பின்தொடர்ந்து சென்றேன்.) பிறகு அவர் மிகக் கடுமையாக (எதிரிகளால்) காயப்படுத்தப்பட்டார். எனவே, அவர் அவசரமாக இறந்து போக விரும்பி, தன்னுடைய வாளின் (கீழ்) முனையை பூமியில் (நட்டு) வைத்து அதன் மேல்முனையைத் தன் மார்புகளுக்கிடையில் வைத்துத் தன்னை அந்த வாளின் மீது அழுத்திக் கொண்டு தற்கொலை செய்தார்'' என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'மக்களின் வெளிப்பார்வைக்கு ஒருவர் சொர்க்கவாசிகளின் (நற்) செயலைச் செய்து வருவார். ஆனால், (உண்மையில்) அவர் நரகவாசிகளில் ஒருவராக இருப்பார். இன்னொரு மனிதர் மக்களின் வெளிப்பார்வைக்கு நரகவாசிகளின் (தீய) செயலைச் செய்து வருவார். ஆனால், (உண்மையில்) அவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார்'' என்று கூறினார்கள்.[1]

மற்றுமொரு அறிவிப்பில் இமாம் புஹாரி ''அமல்கள் ஏற்கப்படுவதெல்லாம் மனிதனின் இறுதி முடிவை வைத்துத்தான்'' எனும் வார்த்தையை அதிகரித்துள்ளார்.[2]

''**மக்கள் பார்வையில்**'' எனும் நபியவர்களுடைய வார்த்தை உள்ரங்கத்தில் அவனது செயல் முரணாக இருக்குமென்பதையே சுட்டிக்காட்டுகின்றது. ஓர் அடியானிடம் மக்கள் மன்றிற்குத் தெரியாமலிருக்கும் உள்ரங்கமான மோசமான ஒரு செய்தி அல்லது ஒரு காரணத்தின் விளைவாகவே அவனது இறுதி முடிவு மோசமாகின்றது. அவனிடம் மறைவாக இருக்கும் அத்தீய செயல் மரணத்தின் போது தீய முடிவை அவனுக்கு ஏற்படுத்துகின்றது.[3]

---

1.அறிவிப்பவர் : ஸஹ்ல் பின் ஸஃத் (ரலி), ஆதாரம் : புகாரி (4202), முஸ்லிம் (112).

2.ஸஹ்ல் (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பை இமாம் புஹாரி சற்றுமுன் கூறியது போன்று (6607) எனும் இலக்கத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

3.இரகசியமாகச் செய்யும் வணக்கங்களை அதிகப்படுத்துவது இறுதித் தருவாயில் ஸ்திரத் தன்மையுடன்

அதேபோன்று தான் ஒரு மனிதன் நரகத்திற்குரிய அமலாக அமல் செய்து கொண்டிருப்பான். அவனிடம் மறைவான நல்ல செயல் ஒன்று இருக்கும். அவனது வாழ்நாளின் இறுதிக் காலத்தில் அந்த நல்ல செயல் மிகைத்து அவனுக்கு நல்ல முடிவை ஏற்படுத்துகின்றது.

அப்துல் அஸீஸ் பின் அபீ ரவ்வாத் (ரஹ்) கூறுகின்றார்கள் : மரண வேளையில் லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமா சொல்லிக் கொடுக்கப்படும் ஒரு மனிதரிடம் சென்றேன். அவர் இறுதியாக கூறிய வார்த்தை இக்கலிமாவை மறுப்பதாகவே இருந்தது. அதே நிலையிலேயே அவர் மரணித்துவிட்டார். அவரைப் பற்றி நான் வினவிய போது அவர் மதுப் பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார் எனத் தெரியவந்தது. அதற்குப் பின் "பாவங்களை பயந்து கொள்ளுங்கள், அவை தான் இந்த மனிதனை இந்நிலைக்குத் தள்ளியுள்ளன" என அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறிக் கொண்டே இருப்பார்.

இமாம் ஸுஃப்யான் அஸ்ஸவரீ[1)] (ரஹ்) அதிகமாகக் கலக்கமடைந்து அழுவார்கள். எனது வீட்டில் நான் துர்ப்பாக்கியவனாக எழுதப்பட்டிருப்பேனோ என அஞ்சுகிறேன் என்பார்கள். மரணத்தின் போது ஈமான் எடுக்கப்பட்டுவிடுமோ என அஞ்சுகிறேன் என அழுவார்கள்.

மாலிக் பின் தீனார் (ரஹ்) இரவு முழுதும் தனது தாடியைப் பிடித்தவாறு: இறைவா! சுவர்க்கவாதியையும், நரகவாதியையும் நீ அறிந்து வைத்திருக்கிறாய். இரண்டில் எந்த வீட்டில் இந்த மாலிக் இருப்பான்? என வினவிக் கொண்டிருப்பார்கள்.

இதனால் தான் ஸஹாபாக்களும், பின்வந்த ஸலப் அறிஞர்களும் தம்மிடம் நயவஞ்சகம் வந்துவிடக் கூடாது என அஞ்சிக் கொண்டே இருப்பார்கள்.[(2)] அவர்கள் இவ்விடயத்தில் அதிக பதற்றத்துடனும் கலக்கத்துடனும் இருப்பார்கள். ஒரு முஃமின் எப்போதும் சிறிய வகை நயவஞ்சகம் தன்னிடம் ஏற்பட்டு மரணத்தருவாயில் அது மிகைத்து, பெரிய நயவஞ்சகத்தின் பால் இட்டுச் சென்று விடக்கூடாது என அஞ்சி கொண்டே இருப்பார்கள். ஏற்கனவே கூறப்பட்டது போன்று தீய செயல்கள் தீய முடிவை ஏற்படுத்தும்[(3)]

---

இருக்க முக்கிய காரணமாகின்றது **(அப்துல் அஸீஸ் தரீபி).**

1.இமாம் ஸுஃப்யான் அஸ்ஸவ்ரீ (ரஹ்) ஹிஜ்ரி 161ம் ஆண்டு மரணித்த பிரபலமான ஓர் இமாமாவார்.

2.ஸலப் அறிஞர்கள் இவ்வாறு நயவஞ்சகத்தைப் பயந்தார்கள் என்பது பற்றிய ஒரு நீண்ட ஆய்வை நூலாசிரியரின் "பத்ஹுல் பாரி" எனும் நூலில் (1/177) காணலாம். அவற்றில் சிலதை இந்நூலின் 48 வது ஹதீஸில் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

3.இறுதி முடிவுகள் பற்றி அழகாகவும் விரிவாகவும் எழுதப்பட்ட நூல் கலாநிதி ஸய்யித் ஹுஸைன் அல்பானி

நபி (ஸல்) அவர்கள் : “உள்ளங்களைப் பிரட்டும் இறைவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் ஸ்திரப்படுத்தி வைப்பாயாக! என அதிகமாகப் பிரார்த்திப்பார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே! உங்களையும், நீங்கள் கொண்டு வந்த இந்த மார்க்கத்தையும் ஏற்றுக் கொண்டுவிட்டோம். இதற்குப் பின்னாலும் எங்கள் விடயத்தில் அஞ்சுகின்றீரா? என வினவப்பட்டது. அதற்கு நபியவர்கள் : ஆம் நிச்சயமாக உள்ளங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் இரண்டு விரல்களுக்கிடையில் உள்ளன. அவன் நாடியவாறு அவற்றைப் பிரட்டி விடுவான் என்று கூறினார்கள்.(1)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக மனிதர்களின் உள்ளங்கள் அனைத்தும் ரஹ்மானின் இரண்டு விரல்களுக்கிடையே உள்ளன. அவன் நாடியவாறு அவற்றைத் திருப்பி விடுவான். பின்பு “உள்ளங்களைத் திருப்பும் இறைவனே! எமது உள்ளங்களை உனக்கு வழிப்படுவதன் பக்கம் திருப்பி விடு! எனப் பிரார்த்தித்தார்கள்.(2)

இதே கருத்தில் பல நபிமொழிகள் உள்ளன.





எழுதிய “ஸக்புல் இப்ராத் பில் கப்ரி வல்மௌதி வஸ்ஸகராத்” எனும் நூலாகும். அதில் நல்ல பல தகவல்களை நூலாசிரியர் அழகாகத் தொகுத்துள்ளார். அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்குவானாக!

1.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (12107), திர்மிதி (2410), அவர் இதனை ஹஸன் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். இமாம் இப்னு அபீ ஆஸிமின் “அஸ்ஸுன்னா” (225) நூலின் ஹதீஸ்களை ஆய்வு செய்யும் போது அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

2. அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள், ஆதாரம் : முஸ்லிம் (2654)

# ஹதீஸ் – 05

## நூதனம் பற்றிய எச்சரிக்கை

عَنْ عَائِشَةَ رضي الله عنها قَالتْ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ:

((مَنْ أَحْدَثَ فِيْ اَمْرِنَا هذَا مَا لَيْسَ مِنْهُ، فَهُوَ رَدٌّ)) رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

وَفِيْ رِوَايَةٍ لِمُسْلِمٍ: ((مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا، فَهُوَ رَدٌّ)).

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***“நம்முடைய இந்த விடயத்தில் (தீனில்) அதில் இல்லாததை நுழைப்பவர்களின் செயலானது நிராகரிக்கப்படக்கூடியதாகும்”.***

*அறிவிப்பவர் : அன்னை ஆஇஷா (ரலி), ஆதாரம் : புஹாரி (2697), முஸ்லிம் (1718).*

*முஸ்லிமின் மற்றுமொரு அறிவிப்பில் (1718) பின்வருமாறு இடம் பெற்றுள்ளது : “****நம்முடைய விடயத்தோடு (மார்க்கப் போதனைகளோடு) ஒத்துப் போகாத ஒரு செயலை எவராவது செய்யின் அது ஏற்றுக் கொள்ளப்படாது ஒதுக்கப்படும்****”.*

### விரிவுரை :

*இந்த நபிமொழி இஸ்லாத்தின் பிரதான அடிப்படைகளுள் ஒன்றாகும். “செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே” எனும் நபிமொழி அமல்களின் உள்ரங்கத்திற்கான அளவுகோல் போன்று இந்நபிமொழி அந்த அமல்களின் வெளிரங்கத்திற்கான அளவுகோலாகும்.*

*அல்லாஹ்வுக்காக செய்யப்படாத எந்த அமலிற்கும் கூலி வழங்கப்படமாட்டாது போன்று அல்லாஹ், ரஸூலின் கட்டளைப் பிரகாரம் இல்லாத எந்தவொரு அமலிற்கும் கூலி வழங்கப்பமாட்டாது. தட்டப்பட்டுவிடும். அல்லாஹ், ரஸூல் அனுமதிக்காத, புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்து செயல்களுக்கும் மார்க்கத்தில் எள்ளளவும் பெறுமதியில்லை.*

*நபி (ஸல்) அவர்கள் தனது குத்பாக்களில் : “வார்த்தைகளில் மிக உண்மையானது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டல்களில் மிகச்*

*சிறந்தது முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலாகும். விடயங்களில் மிகக் கெட்டது (மார்க்கம் என்ற பெயரில்) புதிதாக உருவாக்கப்பட்டவையாகும்.[1] புதிதாக உருவாக்கப்பட்ட (பித்அத்) பற்றி நாம் இர்பாழ் பின் ஸாரியா (ரலி) அறிவிக்கும் நபிமொழியை (இந்நூலின் 28ம் நபிமொழி) கூறும் போது விளக்குவோம். அங்கு மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்படுபவை, தட்டப்படுபவை பற்றி பேசுவோம். -இன்ஷா அல்லாஹ்-*

*இந்த நபிமொழியின் நேர்மறை விளக்கம் மார்க்க வரையறைக்கு உட்படாதஅனைத்துஅமல்களும்தட்டப்படும்என்பதைஅறிவிப்பதுடன்[2] மார்க்க வரையறைக்கு உட்பட்டதாக இருந்தால் அது ஏற்கப்படும் என்பதை இந்நபிமொழியின் எதிர்மறை விளக்கம் அறிவிக்கின்றது.*

*நபிமொழியில் இடம் பெற்றுள்ள "أمرنا" எனும் அரபு வாசகத்தின் விளக்கம் மார்க்கம், ஷரீஅத் என்பதாகும்.*

*எனவே இந்நபிமொழியின் அர்த்தம் மார்க்க வரையறைக்கு வெளிப்பட்டு செய்யப்படும் எந்தவொரு அமலும் நிராகரிக்கப்பட்டு விடும் என்பதாகும்.*

*மற்றுமொரு அறிவிப்பில் இடம் பெற்றுள்ள "ليس عليه أمرنا" எனும் வார்த்தை அனைத்து அமல்களும் ஷரீஆ சட்டத்தின் கீழே அமைய வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. ஏவல், விலக்கல் உட்பட அமல்களைத்தீர்மானிப்பதுஷரீஆசட்டங்களாகும்.அதற்குட்பட்டதாகவும், நேர்பாடாகவும்அமையும்அமல்கள்ஏற்கப்படும்.மற்றதுநிராகரிக்கப்படும்.*

***நாம் செய்யும் அமல்கள் இருவகைப்படுகின்றன :***

1. *வணக்கங்கள்.*
2. *கொடுக்கல் - வாங்கல்கள்*

*வணக்கங்களில் அல்லாஹ், ரஸூலின் சட்டத்திற்கு முழுமையாக வெளிப்பட்டுச் சென்றால் அவை நிராகரிக்கப்பட்டு விடும். அதனைச் செய்தவன் "அல்லாஹ் அனுமதிக்காததை அவர்களுக்கு மார்க்கமாக ஆக்கக்கூடிய இணை தெய்வங்கள் அவர்களுக்கு இருக்கின்றனவா?" (ஷூரா : 21) எனும் வசனத்திற்கு உட்பட்டவன் ஆவான்.*

---

*1.அறிவிப்பாளர் : ஜாபிர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (867).*

*2.இது மார்க்கத்தில் புதிதாக உருவாக்குவதையே குறிக்கின்றது. ஆடை, வாகனம், வீடு போன்ற உலக விடயங்களிலல்ல.* ***(அப்துல் அஸீஸ் தரீபி).***

எனவே அல்லாஹ்வும் ரஸூலும் வழக்கமாக ஆக்காத ஒன்றின் மூலம் அவனை நெருங்க முற்பட்டால் அவனது வணக்கம் செல்லுபடியற்று நிராகரிக்கப்படும். கஃபாவில் கைதட்டுவதையும், சீட்டு வழிப்பதையும் தொழுகையாக ஆக்கிக் கொண்டவர்களுடைய நிலையையே இவனுடைய நிலையும் ஒத்திருக்கின்றது.

மேலும் இவன் பொழுதுபோக்குப் பாடல்களைக் கேட்டல், நடனமாடுதல், இஹ்ராம் அல்லாத நேரத்தில் தலை திறத்தல் போன்றவற்றின் மூலம் அல்லாஹ்வை நெருங்க முயற்சிப்பவன் போன்றாகும்.

ஒரு செயல் ஒரு சந்தர்ப்பத்தில் வணக்கமாவதால் அதே செயல் எல்லா சந்தர்ப்பத்திலும் வணக்கமாக மாட்டாது. ஒரு மனிதர் வெயிலில் நின்று கொண்டிருப்பதை அவதானித்த நபியவர்கள் அதுபற்றி வினவினார்கள். அந்த நபர் உட்காராமல் நின்று கொண்டே இருப்பதாகவும், நிழல் பெறாமல் வெயிலிலே நிற்பதாகவும், நோன்பு பிடிப்பதாகவும் நேர்ந்திருப்பதாகக் கூறப்பட்டது. நபியவர்கள் அந்த நபருக்கு உட்காருமாரும், நிழல் பெறுமாறும், நோன்பைப் பூரணப்படுத்துமாறும் பணித்தார்கள்.[1] நின்ற நிலையில் இருப்பது தொழுகை, அதான், அரபாவில் துஆக் கேட்டல் போன்ற சந்தர்ப்பங்களில் வணக்கமாக இருந்தாலும் இங்கு நபியவர்கள் நின்று கொண்டிருப்பதையோ இஹ்ராம் அணிந்தவர் வெயிலில் நிற்பதையோ வணக்கமாக்கவில்லை. எனவே ஒரு செயல் சில சந்தர்ப்பங்களில் வணக்கமாவதால் எல்லா சந்தர்ப்பங்களிலும் வணக்கமாக மாட்டாது என்பது தெளிவாகின்றது. ஷரீஅத் எமக்கு வழிகாட்டிய பிரகாரமே இவற்றை தீர்மானிக்க வேண்டும்.

அதேபோன்று தான் தடை செய்யப்பட்ட ஒன்றை வணக்கமாகச் செய்வதும். உதாரணமாக பெருநாள் தினத்தில் நோன்பு நோற்றல், தடை செய்யப்பட்ட நேரத்தில் தொழுதல் போன்வற்றைக் கூறலாம்.

மார்க்கத்திலுள்ள ஒரு செயலை செய்யும் போது அதில் மார்க்கத்தில் இல்லாததை சேர்த்தால், அல்லது இருக்கின்றதைக் குறைத்தால் அவன் அதன் அளவிற்கேற்ப மார்க்கத்திற்கு முரணானவனாகக் கருதப்படுவான்.

1.அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : புகாரி (6704)

# ஹதீஸ் – 06

## ஹராமும் ஹலாலும்

عَنِ النُّعْمَانِ بْنِ بَشِيرٍ رَضِيَ الله عَنْهُ قَالَ : سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ ، يَقُولُ :
((إِنَّ الْحَلَالَ بَيِّنٌ ، وَإِنَّ الْحَرَامَ بَيِّنٌ ، وَبَيْنَهُمَا أُمُوْرٌ مُشْتَبِهَاتٌ لَا يَعْلَمُهُنَّ كَثِيرٌ مِنَ النَّاسِ ، فَمَنِ اتَّقَى الشُّبُهَاتِ اسْتَبْرَأَ لِدِينِهِ، وَعِرْضِهِ ، وَمَنْ وَقَعَ فِي الشُّبُهَاتِ وَقَعَ فِي الْحَرَامِ، كَالرَّاعِي يَرْعَى حَوْلَ الْحِمَى ،يُوشِكُ أَنْ يَرْتَعَ فِيهِ. أَلَا وَإِنَّ لِكُلِّ مَلِكٍ حِمًى ، أَلَا وَإِنَّ حِمَى اللهِ مَحَارِمُهُ ، أَلَا وَإِنَّ فِي الْجَسَدِ مُضْغَةً ، إِذَا صَلَحَتْ ، صَلَحَ الْجَسَدُ كُلُّهُ ، وَإِذَا فَسَدَتْ ، فَسَدَ الْجَسَدُ كُلُّهُ ، أَلَا وَهِيَ الْقَلْبُ)).
رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِم

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***ஹலாலும் (ஆகுமானவை) தெளிவானது. ஹராமும் (தடை செய்யப்பட்டவைகள்) தெளிவானது. இவ்விரண்டிற்குமிடையே (இவை ஹலாலானவையா?, அல்லது ஹராமானவையா? என்ற) சந்தேகத்திற்கிடமான விடயங்களுமுண்டு. அவற்றை மக்களில் அதிகமானோர் அறியாதிருக்கின்றனர். சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்ந்து கொண்டவர் தனது மார்க்கத்திற்கும், மானத்திற்கும் பாதுகாப்பு எடுத்துக் கொண்டுவிட்டார். அதில் விழுந்தவர் ஹராத்தில் விழுந்து விட்டவராவார். அனுமதிக்கப்படாத ஒரு பாதுகாப்பு அரணிற்கருகில் தனது கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் அவை தடுக்கப்பட்ட அப்பகுதிக்குள் சென்று மேய்ந்து விடக் கூடிய அச்சத்திற்கு எந்நேரமும் ஆளாகிக் கொண்டிருக்கும் ஓர் மேய்ப்பாளனுக்கு அவர் ஒப்பாகின்றார். ஒவ்வோர் அரசனுக்கும் சொந்தமான ஒரு பாதுகாப்பு அரண் எல்லை உண்டு. அல்லாஹ்வின் பாதுகாப்பு அரண் (எல்லை), அவன் (அனுமதிக்காத) (ஹராமான) காரியங்களாகும். உடலில் ஒரு சதைப் பகுதி உண்டு. அது சீராகி விடுமானால் உடல் முழுவதும் சீராகி விடுகின்றது. அது கெட்டு விடுமாயின் உடல் முழுவதும் கெட்டு விடுகின்றது. அந்த சதைப் பகுதி இதயமாகும்.***

*அறிவிப்பவர் : அபூஅப்துல்லாஹ் அன்நுஃமான் இப்னு பஷீர் (ரலி), ஆதாரம் : புஹாரி (52), முஸ்லிம் (1599).*

**விரிவுரை :**

**“ஹலாலும் தெளிவானது, ஹராமும் தெளிவானது, இவ்இரண்டிற்குமிடையே சில சந்தேகத்திற்கிடமான விடயங்களுமுண்டு. அவற்றை மக்களில் அதிகமானோர் அறியாதிருக்கின்றனர்.”**

மேற்கண்ட வசனத்தின் விளக்கம் : கலப்பற்ற ஹலால் தெளிவானது. அதில் எவ்வித தெளிவற்ற நிலையும் இல்லை. அதேபோன்று தான் கலப்பற்ற ஹராமும். எனினும் இரண்டிற்கும் மத்தியில் சில விடயங்கள் உள்ளன. அவை தடுக்கப்பட்டதா? அனுமதிக்கப்பட்டதா? என்பதில் மக்கள் தெளிவற்ற நிலையில் உள்ளனர். ஆனால் அறிவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இதில் குழப்பநிலை ஏற்படமாட்டாது. இரண்டில் எவ்வகையைச் சேர்ந்தது என அவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள்.

கலப்பற்ற ஹலாலிற்கு சில உதாரணங்கள் : தாவரங்கள், பழங்கள், கால்நடைகளில் நல்லவற்றை உண்ணுதல், நல்ல பானங்களை அருந்துதல், பருத்தி, கம்பளி, உரோமம் போன்றவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட நல்ல ஆடைகளை அணிதல், திருமணம் செய்தல், முறையான வியாபாரம், அனந்தரம், நன்கொடை, யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பொருள் போன்றவற்றின் மூலம் உரித்தான அடிமைப் பெண்களுடன் உறவு கொள்ளல் போன்றனவாகும்.

கலப்பற்ற ஹராத்திற்கு சில உதாரணங்கள் : இறந்தவை, இரத்தம், பன்றி இறைச்சி போன்றவற்றை உண்ணுதல், மது அருந்துதல், தடை செய்யப்பட்ட உறவினர்களைத் திருமணம் செய்தல், ஆண்கள் பட்டாடை அணிதல், வட்டி, சூது, தடைசெய்யப்பட்ட வியாபாரம் மூலம் ஈட்டப்பட்ட பொருளீட்டல்கள், களவு, பறிமுதல், ஏமாற்று போன்றவற்றால் எடுக்கப்பட்ட பணங்களைப் பயன்படுத்தல் போன்றனவாகும்.

சந்தேகத்திற்கிடமானவை : குதிரை, கோவேறுக் கழுதை, கழுதை, உடும்பு போன்ற ஹலாலா? அல்லது ஹராமா? என கருத்துவேறுபாடு உள்ளவற்றை உண்ணுதல், மதுவல்லாமல் அதிக போதையூட்டக் கூடிய கருத்து வேறுபாடுள்ள பானங்களை அருந்துதல், வேட்டைப் பிராணிகளுடைய தோலால் தயாரிக்கபட்ட கருத்து வேறுபாடுள்ள

ஆடைகளை அணிதல், “ஈனாஃ”[1] “தவர்ருக்”[2] போன்றசந்தேகத்திற்கிடமான வியாபார முறைகளால் ஈட்டிய சம்பாத்தியங்கள் போன்றன. இதுபோன்றவற்றையே இமாம்களான அஹ்மத், இஸ்ஹாக் பின் ராஹவைஹி போன்றோர் சந்தேகத்திற்கிடமானவற்றிற்கு உதாரணமாகக் கூறியுள்ளனர்.[3]

சுருக்கம் என்னவெனில் : அல்லாஹ் தனது நபிக்கு வேதத்தை அருளி, அதில் சமூகத்திற்குத் தேவையான ஹராம், ஹலால் சட்டங்களைத் தெளிவு படுத்தியுள்ளான். “அனைத்தையும் தெளிவுபடுத்தக் கூடியதாகவும், நேர்வழியாகவும், அருளாகவும், முஸ்லிம்களுக்கு நன்மாராயமாகவும் நாம் இவ்வேதத்தை உம்மீது இறக்கி வைத்துள்ளோம்” (அந்நஹ்ல் : 89). “அவர்களுக்கு ஏவப்பட்ட, விலக்கப்பட்ட ஒவ்வொரு விடயமுமாகும்” என முஜாஹித் (ரஹ்) கூறியுள்ளார்கள். ஸூரா நிஸாஃவின் இறுதியில் பொருளீட்டல், திருமணம் பற்றிய பல சட்டங்களை விளக்கிவிட்டு பின்வருமாறு கூறுகின்றான் : “நீங்கள் வழி தவறாதிருப்பதற்காக அல்லாஹ் (இவ்வாறு) உங்களுக்குத் தெளிவு படுத்துகின்றான். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாவான்” (அந்நிஸாஃ : 176). அல்குர்ஆனில் சிக்கலான விடயங்களைத் தெளிவுபடுத்த நபியவர்களைப் பொறுப்புச் சாட்டியுள்ளான். “(அவ்வாறே) மனிதர்களுக்கு இறக்கப்பட்டதை நீர் அவர்களுக்குத் தெளிவு படுத்துவதற்காகவும் அவர்கள் சிந்திப்பதற்காகவும் நாம் உமக்கு இவ்வேதத்தை இறக்கினோம்” (அந்நஹ்ல் : 44). இம்மார்க்கத்தை நபியவர்களுக்கும், சமூகத்திற்கும் முழுமைப்படுத்தாமல் அல்லாஹ் நபியவர்களின் உயிரைக் கைப்பற்றவில்லை. இதனால் தான் நபியினது மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் பின்வரும் வசனத்தை இறக்கினான். “இன்றைய தினம் உங்களது மார்க்கத்தை உங்களுக்கு நான் முழுமைப்படுத்தி

1. ஈனாஃ : இது வட்டி முறையிலான ஒரு வியாபாரமாகும். வியாபாரி ஒருவர் வாடிக்கையாளரிடம் ஒரு பொருளை தவணைக் கடனுக்காக விற்றுவிட்டு அதனை செலுத்த முன், அதே வாடிக்கையாளரிடம் மீண்டும் அதே பொருளை குறைந்த விலைக்கு உடனடிப் பணத்திற்காக வாங்கும் வியாபார முறையே “அல் ஈனாஃ” எனப்படுகின்றது.

2. தவர்ருக் : மேற்கண்ட “ஈனாஃ” வியாபார முறையுடன் தொடர்புடையதே தவர்ருக் என்பதாகும். எனினும் இதில் அதே வியாபாரிக்கு மீண்டும் விற்காமல் மூன்றாம் நபருக்கு விற்பதாகும். இதனை அறிஞர்கள் அனுமதித்துள்ளனர்.

3. மார்க்கத்தில் ஒட்டுமொத்த அனைவருக்கும் சந்தேகத்திற்கிடமானது என ஏதுமில்லை. மாறாக மனிதர்களைப் பொறுத்துதான் முடிவெடுக்கப்படுகிறது. சிலருக்கு சந்தேகத்திற்கிடமானது மற்றும் சிலரிடத்தில் தெளிவானதாக உறுதியானதாக இருக்கும். இவ்வாறு சந்தேகத்திற்கிடமானவை என நினைக்கும் விடயங்களைத் தீர ஆராயும் போது ஒன்றோ அவை சில அறிஞர்களிடம் தெளிவானவையாக இருக்கும். அல்லது அந்த விடயம் மார்க்க சட்ட திட்டங்களுடன் தொடர்பற்றதாக இருக்கும். **(அப்துல் அஸீஸ் தரீபி).**

*விட்டேன். எனது அருட்கொடைகளையும் உங்கள் மீது பூரணப்படுத்தி விட்டேன். மேலும் நான் இஸ்லாத்தையே உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்'' (அல்மாஇதா : 03).*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களை நான் தெளிவான வெண்மையான பாதையில் விட்டுச் செல்கின்றேன். அதன் இரவும் பகலைப் போன்று ஒளிமயமானது. அழியக்கூடியவனைத் தவிர யாரும் அப்பாதையை விட்டும் திசை திரும்பிச் செல்லமாட்டான்.[1]

அபூதர் அல் கிபாரி (ரலி) கூறுகின்றார்கள் : வானத்தில் சிறகடித்துப் பறக்கும் எந்தப் பறவையாயினும் அது பற்றிய சட்டத்தை நபி (ஸல்) அவர்கள் எங்களுக்குக் கூறிவிட்டே மரணித்தார்கள்.[2]

இந்நபிமொழியில் இடம்பெறும் "ثَلَاثٌ" என்ற அரபு வாசகத்திற்கு இமாம் அஹ்மத் (ரஹ்) இரு விளக்கங்கள் கொடுத்துள்ளார்கள்.

**1.** தெளிவான ஹராம், ஹலால் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட நிலை. அதனை யார் தவிர்ந்து கொள்கிறாரோ அவர் தனது மார்க்கத்திற்கு பாதுகாப்பு எடுத்துக் கொண்டுவிட்டார்.

**2.** ஹராமும் ஹலாலும் ஒன்றரக் கலந்தவை. இதிலிருந்து கலப்புப் பணம் உள்ளவருடன் கொடுக்கல் வாங்கல் செய்வதன் சட்டம் உருவாகின்றது. ஹராமான பணம் மிகைத்தால் சிறிதளவு பயன்படுத்துவதைத் தவிர அவற்றை தவிர்ந்து கொள்ள வேண்டுமெனக் கூறியுள்ளார்கள். ஹலாலான பணம் மிகைத்தால் அவருடன் கொடுக்கல் வாங்கல் செய்து அதிலிருந்து உண்ணுவது ஆகுமாகும். எது மிகைக்கின்றது என்பதில் தெளிவற்ற நிலை இருந்தால் அதுதான் "ثَلَاثٌ" ஆகும். அதனைத் தவிர்ந்து கொள்வதே பேணுதலாகும்.

ஹராமான பணம் கலக்கப்பட்டு, அதிலிருந்து தான் உணவு அளிக்கப்படுகின்றது என்பது பற்றித் தெளிவாக அறியாவிட்டால் அவ்வுணவை உண்ண ஸலப் அறிஞர்களில் சிலர் சலுகை அளித்துள்ளனர். பகிரங்கமாக வட்டி உண்ணும், அசுத்தமான பணத்தைத் தவிர்ந்து கொள்ளாத அயல் வீட்டுக்காரரர் விருந்துக்கு அழைத்தால் செல்வது பற்றி இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் வினவப்பட்ட போது : "நீங்கள்

---

*1. அறிவிப்பவர் : இர்பாழ் பின் ஸாரியா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (17142), இப்னு மாஜா (43), அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனத் தனது "ஸஹீஹ் இப்னு மாஜா" (41) எனும் நூலில் கூறியுள்ளார்கள்.*

*2.அறிவிப்பவர் : அபூதர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (21361), அபூதர் அவர்களிடமிருந்து இச்செய்தியை அறிவிப்பவர்கள் "தைம் கோத்திரத்தைச் சேர்ந்த சிலர்" எனப் பொதுவாக அடையாளம் காணப்படாமல் கூறப்பட்டுள்ளதால் இதனை தொடர்பறுந்த செய்திகளாகவே பார்க்கப்படுகின்றது.*

பதிலளியுங்கள். விருந்து உங்களுக்கு. பாவம் அவருக்கு'' என பதிலளித்ததாக ஸஹீஹான அறிவிப்புக்களில் இடம்பெற்றுள்ளது. இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களும் இச்செய்தியை வலுப்படுத்தியுள்ளார்கள். எனினும்அதே நபித்தோழர்அறிவித்த ''பாவம் உள்ளம் மிகைத்தவற்றிற்குத் தான்'' எனும் செய்தி இதற்கு முரண்படுகின்றது.

குறிப்பிட்ட ஹராமான பணத்திலிருந்துதான் செய்யப்பட்டதாக உறுதியானால் அதனைப் பயன்படுத்துவது ஹராமாகும். இமாம் இப்னு அப்தில் பர் போன்றவர்கள் இதனை இஜ்மாஃ (ஒருமித்த கருத்து) எனக் கூறியுள்ளார்கள்.

வட்டிப் பணத்தால் ஒருவரும், சூதுப் பணத்தால் மற்றொருவரும் கடன் அடைப்பது பற்றி முஹம்மது பின் ஸீரீன் (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட போது பரவாயில்லை என பதிலளித்ததாக இமாம் (ஃ)கல்லால் (ரஹ்) ஆதாரப்பூர்வமான அறிவிப்பாளர் வரிசையுடன் அறிவித்துள்ளார்கள்.

**"சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்ந்து கொண்டவர் தனது மார்க்கத்திற்கும், மானத்திற்கும் பாதுகாப்பு எடுத்துக் கொண்டுவிட்டார். அதில் விழுந்தவர் ஹராத்தில் விழுந்து விட்டவராவார்.".**

சந்தேகத்திற்கிடமான விடயங்களில் நபியவர்கள் மக்களை இரு வகையாகப் பிரித்துள்ளார்கள்.

**1.** தனக்குத் தெளிவில்லாத காரணத்தால் அவற்றைத் தவிர்ந்து கொள்பவர். இவர் தனது மார்க்கத்திற்கும், மானத்திற்கும் பாதுகாப்பு எடுத்துக் கொண்டுவிட்டார்.[1]

அதாவது தனது மார்க்கத்திற்கும், மானத்திற்கும் எவ்வித குறைகளோ கலங்கமோ ஏற்படாமல் இருக்க முயற்சிப்பதே ''பாதுகாப்பு எடுத்துக் கொள்வது'' என்பதன் விளக்கமாகும். இதன் மூலம் சந்தேகத்திற்கிடமானவற்றை செய்தவர் தன்னை பிறர் குறை காண்பதற்கும், குத்து வார்த்தை பேசவும் உட்படுத்தி விட்டார் என்பது புரிகின்றது. தன்னை ஐயத்திற்குட்படுத்தியவர் பிறர் தன் மீது தீய எண்ணம் வைப்பான். கடிந்து கொள்ள வேண்டாம்.

1.பிறரின் தூண்டுதல்களுக்கு அஞ்சி ஹராமானவற்றையும், சந்தேகத்திற்கிடமான வற்றையும் விடுவது ஆகுமானது என்பதற்கு இது ஆதாரமாக உள்ளது. என்றாலும் தடுக்கப்பட்ட ஒன்றை நிய்யத் இன்றி தவிர்ந்து கொள்வதால் எவ்வித நன்மையும் கிடைக்க மாட்டாது. பாவங்களை விடுவதற்கான உந்துதலாக மார்க்க ரீதியான வெறுப்புணர்ச்சியை விட இயல்பான வெறுப்புணர்ச்சி பலமாக இருப்பதில் ஆட்சேபனையில்லை. ஆனால் வணக்க ரீதியாகத் தவிர்ந்து கொள்வதாக இருந்தால் அதில் நிச்சயமாக மார்க்க ரீதியான வெறுப்புணர்ச்சி அவசியமாகும். மேலதிகமாக இயல்பான வெறுப்புணர்ச்சியும் சேர்ந்து கொள்வதில் ஆட்சேபனை இல்லை. **(அப்துல் அஸீஸ் தரீபி).**

**2.** தன்னிடம் ஒரு விடயம் தெளிவில்லாமல் இருக்கும் போதே அதனைச் செய்பவர். இவர் ஹராத்தில் விழுந்து விட்டதாக நபியவர்கள் கூறியுள்ளார்கள். இதனை இரு முறைகளில் விளக்கலாம்.

**1.** தெளிவில்லாமல் இருக்கும் போதே அதனைச் செய்யும் போது படிப்படியாக கால ஓட்டத்தில் ஹராத்திலேயே விழ வழிவகுக்கின்றது என்பதாகும்.

**2.** ஹராமா? அல்லது ஹலாலா? என்ற தெளிவற்ற நிலையில் ஒருவர் ஒரு செயலைச் செய்யும் போது யதார்த்தத்தில் அது ஹராமாக இருக்க வாய்ப்புள்ளதால் உத்தரவாதமின்றி அவரை அறியாமலேயே ஹராத்தில் விழ நேரிடுகின்றது.

யதார்த்தத்தில் ஹலாலாக இருந்தும் மக்கள் சந்தேகத்திற்கிடமானதாகக் கருதும் ஒரு விடயத்தை செய்வதில் தவறேதுமில்லை. எனினும் மக்கள் தவறாக எண்ணுவார்களென அச்சம் கொண்டால் அதனை விடுவது தனது மானத்தில் பாதுகாப்பெடுப்பதாக அமையுமானால் அவ்வாறு விடுவது சிறந்ததாகும்.

நபி (ஸல்) அவர்கள் தனது மனைவி ஸபிய்யா (ரலி) அவர்களுடன் நின்று கொண்டிருப்பதை அவதானித்த நபரிடம் அவர் சந்தேகிக்க முன் “இவர் (வேறு யாருமில்லை) ஸபிய்யா பின்து ஹுயையைத் தான்”[1] என்றார்கள்.

அனஸ் (ரலி) அவர்கள் ஜும்ஆவிற்காக வெளிப்பட்டு சென்ற போது மக்கள் தொழுது முடிந்து வீடு திரும்பியதைப் பார்த்து வெட்கப்பட்டார்கள். பிறர் காணாத ஓரிடத்தில் நுழைந்தார்கள். மேலும் “மக்களிடம் வெட்கப்படாதவன் அல்லாஹ்விடமும் வெட்கப்படமாட்டான்” என்றார்கள்.[2]

**“அனுமதிக்கப்படாத ஒரு பாதுகாப்பு அரணிற்கருகில் தனது கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் அவை தடுக்கப்பட்ட அப்பகுதிக்குள் சென்று மேய்ந்து விடக் கூடிய அச்சத்திற்கு எந்நேரமும் ஆளாகிக் கொண்டிருக்கும் ஓர் மேய்ப்பாளனுக்கு அவர் ஒப்பாகின்றார். ஒவ்வோர் அரசனுக்கும் சொந்தமான ஒரு பாதுகாப்பு அரண் எல்லை உண்டு. அல்லாஹ்வின் பாதுகாப்பு அரண் (எல்லை), அவன் (அனுமதிக்காத) (ஹராமான) காரியங்களாகும்”.**

---

1.அறிவிப்பவர் : அன்னை ஸபிய்யா பின்து ஹுயையைய் (ரலி), ஆதாரம் : புகாரி (2035), முஸ்லிம் (2175).

2.அறிவிப்பவர் : முத்தரிப் பின் உத்பா (ரஹ்), ஆதாரம் : தபரானியின் அல்முஃஜமுல் அவ்ஸத் (7159). இதில் தனக்கு அறிமுகமில்லாத நபர்கள் இருப்பதாக இமாம் அல்ஹைஸமீ (ரஹ்) தனது மஜ்மஉஸ் ஸவாஇத் எனும் நூலில் (8/17) கூறியுள்ளார்கள்.

*இது சந்தேகத்திற்கிடமானவற்றை செய்பவனுக்கு நபியவர்கள் கூறிய ஓர் உதாரணமாகும். அவன் ஹராத்திலே விழ நெருங்கி விட்டான் என்றார்கள். ஹராமானவற்றை, பிறரை நெருங்கவிடாமல் போடப்படும் மன்னர்களின் பாதுகாப்பு அரண்களுக்கு நபியவர்கள் ஒப்பிட்டுள்ளார்கள். அல்லாஹ் இத்தடைகளைப் பாதுகாத்து அதனருகில் நெருங்க வேண்டாமென தனது அடியார்களைத் தடுத்துள்ளான். அதனருகில் மேய்ச்சலில் ஈடுபடும் பிராணிகள் தான் அரணிற்குள்ளும் சென்று மேய்ச்சலில் ஈடுபட அதிக வாய்ப்புள்ளது. அதேபோன்று தான் ஹலாலானதைத் தாண்டி சந்தேகத்திற்கிடமானவற்றில் நுழைந்தவர் மிக நன்றாகவே நெருங்கி விட்டவர் போலாகும். கலப்பற்ற ஹராத்தில் விழுவதற்கு மிகப் பொருத்தமானவன் இவனையன்றி யாரோ! எப்பொழுதும் தடுக்கப்பட்டவைகளை விட்டுத் தூரமாகி தனக்கும் அதற்கும் மத்தியில் ஒரு தடுப்பை வைத்துக் கொள்வது மனிதனுக்கு அவசியமாகும்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லா பின் யஸீத் (ரலி) வாயிலாக பின்வரும் செய்தி இடம்பெற்றுள்ளது : ஆட்சேபனை உள்ளவற்றிலிருந்து முன்னெச்சரிக்கையாக இருப்பதற்காக ஆட்சேபனை இல்லாதவற்றையும் விடும் வரை ஓர் அடியான் முழுமையான பக்தியுள்ளவனாகி விட முடியாது.([1])*

*ஹராத்திற்கு அஞ்சி ஹலாலானவற்றில் அதிகமானதை விடும் வரை பயபக்தி உள்ளவர்களிடம் இறையச்சம் இருந்து கொண்டே இருக்கும் என ஹஸன் அல்பஸரீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.*

*தனக்கும் ஹராமானவற்றுக்கும் இடையில் ஹலாலானவற்றின் மூலம் தடுப்புபொன்றை ஏற்படுத்தி பாவம், மற்றும் அதில் சந்தேகமானதை விட்டு விடும் வரை ஓர் அடியான் ஈமானின் யதார்த்தத்தை அடையமாட்டான் என ஸுஃப்யான் பின் உயைனா (ரஹ்) கூறுகின்றார்.*

*1.அறிவிப்பவர் : அதிய்யா அஸ்ஸஃதீ (ரலி) அவர்கள், ஆதாரம் : திர்மிதீ (2451), இப்னுமாஜா (4215). இதன் அறிவிப்பாளர் வரிசை பலவீனமானதாகும். (இந்நூலை சுருக்கியவர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : இந்நபிமொழியின் அறிவிப்பாளரை நூலாசிரியர் குறிப்பிடும் போது அதிய்யா அஸ்ஸஃதீ (ரலி) என்ற ஸஹாபியைக் கூறாமல் இடையில் வரும் அப்துல்லாஹ் பின் யஸீத் என்பவருடைய பெயரைக் கூறியிருப்பது அவரின் காரணமாகத் தான் இந்நபிமொழி பலவீனமடைகின்றது என்பதை சுட்டிக்காட்டுவதற்காக இருக்கலாம். இமாம் அஹ்மத் இவரைப் பற்றி : "இவரது செய்திகள் இட்டுக்கட்டப்பட்டவை" என்றும், இமாம் ஜவ்ஸஜானி "இவரது செய்தி முரண்பாடான மிக பலவீனமானதாகும்" என்றும் கூறியுள்ளனர். (இமாம் தஹபியின் மீஸானுல் இஃதிதால் 2/526), மேலும் ஆறு ஹதீஸ் நூட்களிலும் வேறு எங்கும் இந்த நபிமொழியைத் தவிர இந்நபருடைய வேறு செய்திகள் ஏதும் இடம் பெறவில்லை என்பது மற்றுமொரு விடயமாகும். (இமாம் மிஸ்ஸியின் தஹ்தீபுல் கமால் 16/319)*

**“உடலில் ஒரு சதைப் பகுதி உண்டு. அது சீராகி விடுமானால் உடல் முழுவதும் சீராகி விடுகின்றது. அது கெட்டு விடுமாயின் உடல் முழுவதும் கெட்டு விடுகின்றது. அந்த சதைப் பகுதி இதயமாகும்”**

*ஓர் அடியானின் அனைத்து உறுப்புக்களினதும் அசைவுகள் சீராகுவதும், ஹராமானனவற்றைத் தவிர்ந்து கொள்வதும், சந்தேகத்திற்கிடமானவற்றைப் பயந்து கொள்வதும் அவனது இதய அசைவு சீராவதன் மூலமே சாத்தியப்படுகின்றது.*

*அல்லாஹ்வின் நேசம், அவன் நேசிப்பவற்றின் மீதான நேசம், அல்லாஹ்வின் அச்சம், அவன் வெறுப்பவற்றில் விழுவது பற்றிய அச்சம் போன்றவற்றைத் தவிர வேறு விடயங்களை விட்டும் ஓர் அடியானின் உள்ளம் தூய்மையானதாக இருந்தால் சகல உறுப்புக்களின் அசைவுகளும் சீராகி விடும். அதன் மூலம் தடுக்கப்பட்டவை, சந்தேகத்திற்கிடமானவை போன்றவற்றில் வீழ்ந்திடாமல் தவிர்ந்து கொள்ளும் பக்குவம் உருவாகின்றது.*

*மனோ இச்சை குடிகொண்டு, அல்லாஹ் வெறுத்தாலும் அது விரும்பும் விடயங்களை வேண்டி நிற்கும் தீய உள்ளமாக இருந்தால் அவரது ஏனைய உறுப்புக்கள் அனைத்தினதும் செயற்பாடுகள் கெட்டுவிடும். மனோ இச்சையின் படி அனைத்துப் பாவங்கள், ஐயங்களின் பக்கமும் வெளிப்பட்டுச் செல்லும்.*

*தூய உள்ளம் மாத்திரம் தான் அல்லாஹ்விடத்தில் பயனளிக்கும். “அல்லாஹ்விடம் தூய உள்ளத்துடன் வருபவரைத் தவிர அந்நாளில் செல்வமோ பிள்ளைகளோ பயன்தராது” (அஷ்ஷுஅரா : 88,89). எனவே தூய உள்ளம் என்பது : தீயவை, வெறுக்கத்தக்கவைகளை விட்டும் பரிசுத்தமடைந்த உள்ளமாகும். அதில் நேசம், அவன் நேசிப்பவரின் மீதான நேசம், அல்லாஹ்வின் பயம், அவனை விட்டும் தூரப்படுத்துபவை பற்றிய பயம் போன்றன மாத்திரமே குடியிருக்கும்.*

*அல்லாஹ்வைப் பற்றிய அறிவு, அவனது மகத்துவம், நேசம், பயம், மரியாதை, எதிர்பார்ப்பு, அவன் மீது பொறுப்புச் சாட்டுதல் ஆகியன உள்ளங்களில் குடி கொள்ளாமல் அவை சீராக மாட்டாது. இவைதான் ஓரிறைக் கொள்கையின் (தௌஹீத்) யதார்த்தமாகும். இதுதான்* لا إله إلا الله *வுடைய விளக்கமுமாகும். உள்ளங்கள் வணங்கக்கூடிய, அறியக்கூடிய, நேசிக்கக்கூடிய, அஞ்சக்கூடிய இறைவன் இணை, துணையற்ற அந்த ஒரேயொரு இறைவனான அல்லாஹ்வாக இருக்காமல் அவை சீராக மாட்டாது.*

கட்டுப்படுதலா? அல்லது மாறு செய்தலா? என்பதை ஆராயாமல் ஒரு விடயத்தை நான் எனது கண்களால் பார்த்ததும் இல்லை, நாவால் மொழிந்ததுமில்லை, கையால் பிடித்ததுமில்லை, காலால் முன்னோக்கியதும் இல்லை. அது அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுதலாக இருந்தால் முன்னோக்கிச் செல்வேன். மாறு செய்வதாக இருந்தால் பின்வாங்கி விடுவேன் என இமாம் ஹஸனுல் பஸரீ கூறியுள்ளார்கள்.

இதுபோன்றவர்களுடைய உள்ளங்கள் சீரடைந்து, அல்லாஹ்வுக்காக முழுமையாக மாறிவிட்டதும் அவர்களது ஏனைய உறுப்புகளும் சீரடைந்து அல்லாஹ்வுக்காகவும் அவனது பொருத்தம் உள்ள விடயத்திற்காகவும் மாத்திரம் தான் செயற்படும்.

# ஹதீஸ் – 07

## மார்க்கம் என்பது நலவு நாடுதல்

عَنْ تَمِيمٍ الدَّارِيِّ رَضِيَ الله عَنْهُ أَنَّ النَّبِيَّ ﷺ ، قَالَ :
"الدِّينُ النَّصِيحَةُ" ثلاثًا قُلْنَا : لِمَنْ يَا رَسُوْلَ اللهِ؟ قَالَ : لِلهِ وَلِكِتَابِهِ وَلِرَسُولِهِ وَلِأَئِمَّةِ الْمُسْلِمِينَ وَعَامَّتِهِمْ" رَوَاهُ مُسْلِم

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***மார்க்கம் என்பது நலவு நாடுதலாகும். யாருக்கு? என நாம் வினவிய போது நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் : அல்லாஹ், அவனது வேதம், அவனது தூதர், முஸ்லிம்களின் தலைவர் இன்னும் முஸ்லிம் பொதுமக்கள் ஆகியோருக்கு நலவு நாடுதலாகும்.***

*அறிவிப்பவர் : அபூ ருகையா தமீம் இப்னு அவ்ஸ் அத்தாரீ (ரலி), ஆதாரம்: முஸ்லிம் (55).*

### விரிவுரை :

இந்த நபிமொழிக்கு முக்கியத்துவம் ஒன்று உள்ளதென இமாம் அபூ நுஐம் (ரஹ்) கூறினார்கள்.

இது மார்க்கத்தின் நான்கில் ஒரு பகுதியென இமாம் முஹம்மது பின் அஸ்லம் அத்தூஸீ (ரஹ்)[1] கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : முஸ்லிம்களின் விடயத்தில் கவனம் செலுத்தாதவர்கள் அவர்களைச் சார்ந்தவர்களல்லர். காலையிலும் மாலையிலும் அல்லாஹ்வுக்கும், அவனது தூதர், வேதம், தலைவர், பொதுவான முஸ்லிம்களுக்கு நலவு நாடதவர்கள் அவர்களைச் சார்ந்தவர்கள் அல்லர்.[2]

---

*1. இவர் ஷேகுல் இஸ்லாம் இமாம் முஹம்மத் பின் அஸ்லம் அத்தூஸி (ரஹ்) அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த பிரபலமான இமாமாவார். பல சோதனைகளைக் கடந்தவர். உலக மோகமின்றி, வணக்கத்தில் அதிக ஈடுபாடுள்ளவர். இவர்களது மாணவர் இமாம் இப்னு குஸைமா இவர்களுக்கு “இச்சமூகத்தின் இரட்சகனைச் சார்ந்தவர்” என சிறப்புப் பெயர் சூட்டியுள்ளார். அத்துடன் இமாம் அஹ்மத் போன்றவர்களுடன் ஒப்பிடக் கூடியவராகவும் இருந்தார்கள். அவர்கள் மரணித்து ஒரு வருடத்தின் பின் இவர்கள் ஈரானிலுள்ள நைஸாபூர் எனும் ஊரில் ஹிஜ்ரி 242ல் மரணித்தார்கள்.*

*2.அறிவிப்பவர் : ஹுதைபா பின் யமான் (ரலி), ஆதாரம் : இமாம் தபரானியின் அல்முஃஜமுல் அவ்ஸத் (7469),*

இமாம் கத்தாபீ (ரஹ்) கூறுகின்றார் : (இந்நபிமொழியில் உள்ள) "نَصِيحَة" என்ற வார்த்தை ஒரு வசனத்தின் அர்த்தத்தையே பறைசாற்றுகின்றது. பிறருக்கு நலவு நாடுவதையே நஸீஹத் எனப்படுகின்றது. மொழியியல் ரீதியில் "نُصْح" என்ற பதத்திற்கு தூய்மைப்படுத்தி பிரித்தெடுத்தல் என்று பொருளாகும். தேன் வதையிலிருந்து தூய்மையான தேனைப் பிரித்தெடுப்பதற்கும் இச்சொல்லே பயன்படுத்தப்படுகின்றது.

இமாம் அபூ அம்ரு இப்னு ஸலாஹ் (ரஹ்) கூறுகின்றார்கள் : நாட்டம், செயல் அனைத்திலும் நல்ல வழிகளைத் தெரிவு செய்து நலவு நாடுபவர் உபகாரம் புரிவதை ஒருங்கிணைக்கும் சொல்லே "நஸீஹத்" ஆகும்.

**அல்லாஹ்வுக்கு நலவு நாடுதல் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கின்றது :** அவனை ஒருமைப்படுத்தல், பரிபூரணமான மகத்துவமான பண்புகளால் அவனை வர்ணித்தல், அவற்றுக்கு முரணான குறைபாடுள்ள பண்புகளை விட்டும் அவனைத் தூய்மைப்படுத்தல், அவனுக்கு மாறு செய்வதைத் தவிர்த்து, அவனுக்கு கட்டுப்படுதல், இஹ்லாஸுடன் அவனை நேசித்தல், அவனுக்காகப் பிறரை நேசித்து, அவனுக்காகவே வெறுத்தல், அவனை நிராகரித்தவனை எதிர்த்துப் போராடுதல், இன்னும் அதுபோன்ற விடயங்களை மேற்கொள்வதுடன், அவற்றின்பால் மக்களை அழைத்தல், தூண்டுதல் போன்றனவாகும்.

**வேதத்திற்கு நலவு நாடுதல் :** அதனை ஏற்றல், கண்ணியப்படுத்தல், தூய்மைப்படுத்தல், உரிய முறையில் ஓதுதல், அதன் ஏவல், விலக்கல்களைத் தாண்டாதிருத்தல், அதன் கலைகள், உதாரணங்களைக் கற்று, வசனங்களை ஆராய்ந்து, மக்களை அதன்பால் அழைத்தல், தூண்டுதல் போன்றன இதில் அடங்கும்.

**இறைத்தூதருக்கு நலவு நாடுதல் :** இதுவும் முன்னதைப் போன்றுதான். அவர்களையும், அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தையும் நம்புதல், அவரை கண்ணியப்படுத்தி மதித்தல், கட்டுப்படுதல், அவர்களது ஸுன்னாவை உயிர்ப்பித்தல், அது தொடர்பான கலைகளில் கவனம் செலுத்தி, அவற்றை பரத்துதல், அவர்களையும் ஸுன்னாவையும் எதிர்ப்போரை நாமும் எதிர்த்தல், நேசிப்போரை நாமும் நேசித்தல், அன்னாரது பண்புகளையும் ஒழுக்க விழுமியங்களையும் நாமும் கடைபிடித்தல், அன்னாரது குடும்பத்தார், தோழர்களை நேசித்தல் போன்றன இதில் அடங்கும்.

---

*அல்முஃஜமுஸ் ஸகீர் (2/20), அஷ்ஷேக் அல்பானீ தனது ஸில்ஸிலா அழ்ழஈபாவில் (312) இதனை பலவீனப் படுத்தியுள்ளார்கள்.*

**முஸ்லிம் தலைவர்களுக்கு நலவு நாடுதல் :** சத்தியத்தை நிலைநாட்ட உதவுதல், அதில் அவர்களுக்குக் கட்டுப்படல், அதை அவர்களுக்கு நினைவூட்டல், மீறும் பட்சத்தில் நளினமாகவும், மென்மையாகவும் எடுத்துச் சொல்லல், அவர்களுக்கு எதிராக கிளர்ந்தெழாமலிருத்தல், அவர்களது அனுகூலத்திற்காகப் பிரார்த்தனை புரிதல் போன்றன இதில் உள்ளடங்கும்.

**முஸ்லிம் பொது மக்களுக்கு நலவு நாடுதல் :** அவர்களுக்கு நல்லவற்றின் பால் வழிகாட்டுதல், அவர்களது ஈருலக விடயங்களைப் போதித்தல், குறைகளை மறைத்தல், தேவைகளை நிவர்த்தி செய்தல், எதிரிக்கு எதிராக அவர்களுக்கு உதவுதல், பாதுகாத்தல், அவர்களுக்கு மோசடி செய்தல் பொறாமை கொள்ளுதல் போன்றவற்றைத் தவிர்த்தல், தனக்கு விரும்புவதை அவர்களுக்கும் விரும்புதல், தான் வெறுப்பதை அவர்களுக்கும் வெறுத்தல் போன்றன இதில் அடங்கும். இவற்றைத் தான் நூலாசிரியர் கூறியுள்ளார்கள்.

முஸ்லிம்களுக்கு ஏற்படும் நோவினைகளைத் தடுத்தல், வறியவர்களை முற்படுத்துதல், அறிவீனர்களுக்கு அறிவூட்டுதல், சொல், செயல் ரீதியாக நெறி பிறழ்ந்து செல்பவர்களை சத்தியத்தின்பால் மீள அழைக்கும் போது மென்மையைக் கடைபிடித்தல், நலவை ஏவி, தீமையைத் தடுக்கும் போது தனக்கு உலகில் சில கெடுதிகள் நடந்தாலும் பொருட்படுத்தாமல் அவர்களுடைய குற்றச் செயல்களை அகற்றுவதற்காக நளினமாக நடந்து கொள்ளல் போன்றனவும் முஸ்லிம்களுக்கு நலவு நாடுவதில் உள்ளதாகும். ஸலபுகளில் ஒருவர் கூறுகின்றார் : என்னுடைய சதைகள் கத்தரிக்கோலால் வெட்டப்பட்டாயினும் படைப்பினங்கள் அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதை நான் விரும்புகின்றேன்.

உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கூறுவார்கள் : உங்கள் விடயத்தில் நான் அல்லாஹ்வின் வேதத்தின் அடிப்படையில் செயற்பட்டிருக்க வேண்டுமெனவும் நீங்களும் அதனை வைத்து செயற்பட வேண்டுமெனவும் நான் ஆவல் கொள்கிறேன். உங்கள் விடயத்தில் நான் ஸுன்னாவை அமுல்படுத்தும் போதெல்லாம் எனது ஓர் உறுப்பு விழுவதைப் போன்றுள்ளது. இறுதியாக எனது உயிரும் போய்விடும்.

எம்மிடம் ஆலோசனை கேட்டு வருபவர்களுக்கு சரியான ஆலோசனை வழங்குவது தான் நலவு நாடுவதில் மகத்தானதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களிடம் ஒருவர் தனது சகோதரனைப் பற்றி ஆலோசனை கேட்டால் அவருக்கு ஆலோசனை வழங்குங்கள்.[(1)]

*1.அறிவிப்பவர் : ஹகீம் பின் அபீ யஸீத் தனது பாட்டனைத் தொட்டும், ஆதாரம் : அஹ்மத் (15455).*

புழைல் பின் இயாழ் (ரஹ்) கூறுகின்றார்கள் : அதிகமாகத் தொழுது நோன்பு நோற்பவர் எங்களிடத்தில் பெரிய இடத்தை அடைந்து கொள்ளமாட்டார். மாறாக தாராள மனதுடன், தூய உள்ளத்துடன் சமூகத்திற்கு நலவு நாடுவோரே பெரிய இடத்தை அடைந்து கொள்கின்றனர்.

எந்த அமல் சிறந்தது என அப்துல்லாஹ் இப்னுல் முபாரக் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது "அல்லாஹ்வுக்கு நலவு நாடுதல்" என்றார்கள்.

மஃமர் பின் ராஷித் (ரஹ்) கூறுகின்றார் : உனது விடயத்தில் அல்லாஹ்வை அஞ்சுவோரே உனக்கு அதிக நலவு நாடுபவர் எனக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது.

ஸலபுகள் ஒருவருக்கு உபதேசம் செய்ய விரும்பினால் இரகசியமாகத் தான் செய்வார்கள். மேலும் தனது சகோதரருக்கு இரகசியமாக உபதேசம் செய்வதே நலவு நாடுவதாகும். மக்கள் மத்தியில் அவருக்கு உபதேசம் செய்வது அவரை மானபங்கப் படுத்துவதாகும் என ஸலபுகள் கூறுவார்கள்.

புழைல் (ரஹ்) கூறினார்கள் : முஃமினின் குறைகள் மறைக்கப்பட்டு உபதேசிக்கப்படுவான். பாவியின் குறைகள் மானபங்கப் படுத்தப்பட்டு இழிவாக்கப்படுவான்.

அப்துல் அஸீஸ் பின் அபீ ரவ்வாத் (ரஹ்) அவர் கூறுகின்றார் : முன்னோர்கள் தனது சகோதரனிடம் ஒரு குறையைக் கண்டால் மிருதுவாக ஏவுவார்கள். அவர்களது ஏவல், விலக்கல்களுக்கு நன்மை வழங்கப்படும். ஆனால் இப்போதுள்ள இவர்கள் தனது தோழனின் மானத்தைக் கீறிக் கிழித்து, அவனை மேலும் சினமூட்டி, மானபங்கப் படுத்துகின்றனர்.

---

இந்நபிமொழியில் சில விமர்சனங்கள் உள்ளன. மாற்றீடாக முஸ்லிமில் (2162) இடம்பெறும் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கும் பின்வரும் நபிமொழியைக் கூறலாம் : ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஆறு. அதில் "அவன் உன்னிடம் ஆலோசனை கேட்டால் ஆலோசனை வழங்கு" என இடம்பெற்றுள்ளது.

## ஹதீஸ் – 08

### ஒரு முஸ்லிமின் கண்ணியம்

عن ابنِ عُمَرَ رَضِيَ اللهُ تَعالَى عَنْهُمَا أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ :

((أُمِرْتُ أَنْ أُقَاتِلَ النَّاسَ حَتَّى يَشْهَدُوا أَن لاَ إلهَ إلاَّ اللهُ ، وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ ، وَيُقِيمُوا الصَّلاَةَ ، وَيُؤتُوا الزَّكَاةَ ، فإذَا فَعَلُوا ذَلِكَ، عَصَمُوا مِنِّي دِمَاءَهُم وَأَمْوَالَهُمْ ، إلاَّ بِحَقِّ الإسْلاَمِ ، وَحِسَابهُم عَلَى اللهِ تعالَى )). رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்றும் உறுதி கூறும் வரையிலும், தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தை கொடுக்கும் வரையிலும் நான் மக்களை எதிர்த்துப் போராடும்படி கட்டளையிடப் பட்டுள்ளேன். இவைகளை நிறைவேற்றுபவர்கள் இஸ்லாத்தின் சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களைச் செய்யாதவரை அவர்கள் தமது உயிர், உடமைகளை என்னிடமிருந்து பாதுகாத்துக் கொண்டு விட்டார்கள். அவர்களுடைய விசாரணை அல்லாஹ்விடமே உள்ளது.***

*அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (52), முஸ்லிம் (1599).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி புஹாரி, முஸ்லிம் இரண்டிலும் இடம்பெறுகின்றது. எனினும் இறுதியில் இடம்பெறும் “இஸ்லாத்தின் உரிமைகளைத் தவிர” எனும் வாசகம் புஹாரியில் மாத்திரமே இடம்பெற்றுள்ளது.*

*இதே செய்தி நபியவர்களைத் தொட்டும் பலவிதங்களில் அறிவிக்கப் பட்டுள்ளது.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்றும் உறுதி கூறும் வரையில் நான் மக்களை எதிர்த்துப்*

போராடும்படி கட்டளையிடப் பட்டுள்ளேன். இவ்விரண்டையும் உறுதி கூறி, எம்மைப் போன்று தொழுது, எமது கிப்லாவையே முன்னோக்கி, நாம் அறுப்பவற்றை உண்டால் இஸ்லாத்தின் சட்டப்படி தண்டனைக்குரிய செயல்களைச் செய்யாதவரை, அவர்களுடைய உயிரும், உடைமையும் எமக்கு ஹராமாகி விடுகின்றன.(1)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று யார் (உறுதிமொழி) கூறி, (மக்களால்) வழிபாடு செய்யப்படும் இதர தெய்வங்களை நிராகரித்துவிடுகிறாரோ அவரது உடைமையும் உயிரும் பாதுகாப்புப் பெற்றுவிடும். அவரது (அந்தரங்கம் குறித்த) விசாரணை அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது.(2)

தொழுகை, நோன்பு, ஸகாத், ஹிஜ்ரத் போன்ற கடமைகள் விதியாக்கப்பட முன்னரே இந்த சட்டமென இமாம் ஸுப்யான் பின் உயைனா (ரஹ்) கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பலவீனமான கருத்து என்பதுடன் இது ஸுப்யான் (ரஹ்) அவர்களது கூற்றுத்தானா? என்பதிலும் ஆட்சேபனை உள்ளது. ஏனெனில் இந்த நபிமொழியை அறிவித்தவர்களில் பெரும்பாலானோர் மதீனாவில் இஸ்லாத்தில் இணைந்தவர்கள். அதிலும் சிலர் தாமதமாக இஸ்லாத்தில் இணைந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**“தமது உயிர் உடமைகளை என்னிடமிருந்து பாதுகாத்துக் கொண்டு விட்டார்கள்”**

மேற்கண்ட இவ்வார்த்தையை நபியவர்கள் கூறும் போது இஸ்லாத்தை ஏற்காதவர்களுடன் போரிடுமாறும். அவர்களைக் கொல்லுமாறும் பணிக்கப்பட்டிருந்தார்கள் என்றே தெளிவாகின்றது. இதுவெல்லாம் நபியவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றதன் பின்னாலேயே கூறப்பட்டன. நபியவர்கள் இஸ்லாத்திற்கு வர விரும்பும் அனைவரிடமும் இரு ஷஹாதாக்களை மாத்திரம் ஏற்றுக் கொண்டு விட்டு, அவர்களை முஸ்லிமாக அங்கீகரித்து, உயிர் உடமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். لا إله إلا الله என்ற கலிமாவை மொழிந்த ஒருவரை வாளால் வெட்டிக் கொன்ற உஸாமா (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் கடுமையாகக் கண்டித்தார்கள்.(3)

---

1.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (392).

2.அறிவிப்பவர் : அபூ மாலிக் அல்அஷ்ஜஈ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (23).

3. அறிவிப்பவர் : உஸாமா (ரலி), ஆதாரம் புஹாரி (4269), முஸ்லிம் (96).

இமாம் முஹம்மது பின் நஸ்ர் அல்மர்வஸீ (ரஹ்) அனஸ் (ரலி) வாயிலாக மிகவும் பலவீனமான அறிவிப்பாளர் வரிசையைக் கொண்டு பின்வரும் செய்தியை அறிவிக்கின்றார்கள் : "நபியவர்கள் இஸ்லாத்தை ஏற்றவர்களிடமிருந்து தொழுகை, ஸகாத்தை தவிர வேறெதனையும் எதிர்பார்க்க வில்லை". இச்செய்தி ஆதாரபூர்வமற்றதாகும். ஒரு வாதத்திற்காக அது ஆதாரபூர்வமானதென வைத்துக் கொண்டாலும் நபியவர்கள் இஸ்லாத்தில் தொழுகை, ஸகாத்தை விடுவதற்கு யாருக்கும் அங்கீகாரமளிக்கவில்லை என்பதே இதன் கருத்தாகும்.

மேற்கண்டவற்றின் மூலம் இது தொடர்பான செய்திகளுக்கு மத்தியில் இணக்கப்பாடான ஒரு முடிவு தெளிவாகின்றது. ஒருவன் இரு ஷஹாதாக்களையும் மொழிந்தவுடன் அவன் முஸ்லிமாக மாறி உயிர், உடமைகளுக்கு உத்தரவாதம் கிடைக்கின்றது. அவன் தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து இஸ்லாமிய சட்ட திட்டங்களை அமுல்படுத்தினால் முஸ்லிம்களுடைய அனைத்து சட்டங்களும் சலுகைகளும் அவன் விடயத்தில் அமுலாகும். இதில் ஏதாவதொன்றை அமுல்படுத்த மறுத்து, அவர்கள் கூட்டமாக இருந்தால் அவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கப்படும். இவ்வாறு கூட்டமாக தொழுகை, ஸகாத்தை விட்டும் பின்வாங்குவோருக்கு எதிராக போரிடுவதற்கு பின்வரும் இறைவசனங்கள் ஆதாரமாக அமைகின்றன.

*"ஆனால் அவர்கள் (இணைவைப்பிலிருந்து) மீண்டு, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து வந்தால் அவர்களது வழியில் விட்டு விடுங்கள்" (தெளபா : 05).*

*"அவர்கள் (இணைவைப்பிலிருந்து) மீண்டு, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து வந்தால், அவர்கள் இம்மார்க்கத்தில் உங்களுக்குச் சகோதரர்களாவர்" (தெளபா : 11).*

நபி (ஸல்) அவர்கள் ஒரு கூட்டத்திற்கு எதிராக தாக்குதல் நடத்த எத்தனித்தால் அதிகாலை வரை காத்திருப்பார்கள். அதான் ஒலி கேட்டால் விட்டுவிடுவார்கள். இல்லாவிடில் தாக்குவார்கள்.[1]

### "அவர்களுடைய விசாரணை அல்லாஹ்விடமே உள்ளது".

அதாவது தொழுகையை நிலைநாட்டுவதுடன் சேர்த்து இரு ஷஹாதாக்களும் மரண தண்டனைக்குரிய குற்றத்தை செய்யாமலிருக்கும் வரை ஒரு மனிதனின் உயிர், உடமைகளைப் பாதுகாக்கும். மறுமையில் அவனுக்குரிய விசாரணை அல்லாஹ்விடமே உள்ளது. அவன் உண்மையாளனாக இருந்தால் அவனை

1.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : புகாரி (610), முஸ்லிம் (382).

அல்லாஹ் சுவனத்தில் நுழைவிப்பான். அவன் பொய்யனாக இருந்தால் நரகின் அடித்தளத்தில் இருக்கும் நயவஞ்சகனாவான்.

ஒரு "ஸின்தீக்"[1] -நயவஞ்சகன்- இஸ்லாத்திற்கு மீளுவதாக வெளிப்படையாகக் கூறினால் அவனுடைய தௌபா ஏற்கப்படும் என்பவர்கள் இந்நபிமொழியை ஆதாரமாகக் கொள்கின்றனர். அவனிடமிருந்து நயவஞ்சகம் வெளிப்பட்ட உடனே அவனைக் கொலை செய்ய முடியாது என இவர்கள் கருதுகின்றனர். நபி (ஸல்) அவர்கள் சிலர் நயவஞ்சகர்கள் என்று தெரிந்தும் வெளிப்படையாக முஸ்லிம்களின் சட்டங்களையே அவர்களுக்கும் அமுல்படுத்தினார்கள். இக்கருத்தையே இமாம்களான ஷாபிஈ, அஹ்மத் -ஓர் அறிவிப்பில்- போன்றோர் ஆதரிக்கின்றனர். இதுதான் அதிகமானோரின் கருத்தென இமாம் கத்தாபீ கூறியுள்ளார்.[2]

1.ஸின்தீக் என்பது பாரசீக மொழிச் சொல்லாகும். பிரகாசம் நலவுகளையும், இருள் கெடுதிகளையும் படைப்பதாக என்னும் டைஸன், மானீ, மஸ்தக் போன்றோரைப் பின்பற்றியோரே ஸின்தீகுகள் எனப்படுகின்றனர். இஸ்லாம் வருவதற்கு முன்னால் பாரசீகர்களால் இவர்களில் அதிகமானோர் கொலை செய்யப்பட்டும், விரட்டப்பட்டும் அழிக்கப்பட்டார்கள். பிற்காலத்தில் நாஸ்திகர்கள், நயவஞ்சகர்கள், மதத்துரோகிகள் "ஸின்தீக்" என அழைக்கப்பட்டனர். **(அப்துல் அஸீஸ் தரீபி).**

2.இமாம் மாலிக், இமாம் அஹ்மத் -மற்றொரு அறிவிப்பில்- ஸின்தீகின் தௌபா ஏற்கப்பட மாட்டாது எனும் கருத்திலுள்ளனர்.

(இந்நூலை சுருக்கியவர் கூறுகின்றார்) நான் கூறுகின்றேன் : அதாவது அவனுடைய தௌபா இவ்வுலகில் ஏற்கப்படமாட்டாது. அவனைக் கொல்வது அவசியமாகும். மறுமையில் அல்லாஹ் தனது அடியார்களில் தௌபாவில் உண்மையாக நடந்து கொள்ளும் போது அவர்களின் அனைத்துப் பாவங்களையும் மன்னிக்கின்றான். "இது அல்லாஹ்விடமிருந்துள்ள அருளும் பாக்கியமுமாகும். அல்லாஹ் நன்கறிந்தவன். ஞானமிக்கவன்" (ஹுஜுராத் : 08) ஸின்தீகின் தௌபா பற்றி மேலும் அறிய இமாம் நவவியின் "ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம்" எனும் நூலைப் (1/207) பார்க்கவும்.

# ஹதீஸ் – 09

## இலகுவை எடுத்து, சிரமத்தை விடுதல்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ:
"مَا نَهَيْتُكُمْ عَنْهُ فَاجْتَنِبُوهُ، وَمَا أَمَرْتُكُمْ بِهِ فَأْتُوا مِنْهُ مَا اسْتَطَعْتُمْ، فَإِنمَا أَهْلَكَ الَّذِينَ مِنْ قَبْلِكُمْ كَثْرَةُ مَسَائِلِهِمْ وَاخْتِلَافُهُمْ عَلَى أَنْبِيَائِهِمْ. رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நான் உங்களுக்கு எதைத் தடை செய்திருக்கின்றேனோ அதனை முழுமையாகத் தவிர்ந்து கொள்ளுங்கள். நான் உங்களுக்கு எதை ஏவியுள்ளேனோ அதனை முடியுமானளவு செய்யுங்கள். அளவுக்கு அதிகமான கேள்விகளைக் கேட்டதும், தங்களுக்காக அனுப்பப்பட்ட இறைத்தூதர்களோடு ஒத்துப் போகாததுமே உங்களுக்கு முன்னால் இருந்தவர்களை அழிவுக்கு ஆட்படுத்தியது.*

*அறிவிப்பவர் : அபூஹுரைரா, அப்துர் ரஹ்மான் இப்னு ஸக்ரு (ரலி), ஆதாரம் : புஹாரி (6777), முஸ்லிம் (1337).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழியின் மேற்கண்ட வார்த்தை முஸ்லிமில் மாத்திரமே இடம்பெறுகின்றது. இந்நபிமொழிக்கான பின்னணிக் காரணம் இதே ஸஹீஹ் முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது.*

*அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது : நபி (ஸல்) அவர்கள் (ஒரு முறை) எங்களிடையே உரையாற்றினார்கள். அப்போது, “மக்களே! அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜை விதியாக்கிவிட்டான். எனவே, ஹஜ் செய்யுங்கள்" என்றார்கள். அப்போது ஒரு மனிதர், “ஒவ்வோர் ஆண்டிலுமா (ஹஜ் செய்ய வேண்டும்), அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (பதிலளிக்காமல்) அமைதியாக இருந்தார்கள். அவர் மூன்று முறை அவ்வாறே கேட்டபோது, நபி (ஸல்) அவர்கள், “நான் “ஆம்" என்று சொல்லிவிட்டால் அது (ஒவ்வோர் ஆண்டிலும்) கடமையாகிவிடும். பின்னர் உங்களால் அதை நிறைவேற்ற முடியாமலாகிவிடும்" என்று கூறிவிட்டு, “நான் எதை (செய்யுங்கள்*

என்றோ, செய்ய வேண்டாமென்றோ ஒன்றும் கூறாமல்) உங்களு(டைய முடிவு)க்கு விட்டுவிட்டேனோ அதை(ப் பற்றி எதுவும் கேட்காமல்) நீங்களும் விட்டு விடுங்கள். உங்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் அழிந்ததெல்லாம், அவர்கள் தங்கள் இறைத்தூதர்களிடம் அதிகமாகக் கேள்வி கேட்டதாலும் அவர்களுடன் கருத்து மாறுபாடு கொண்டதாலும்தான். நான் ஒன்றைச் செய்யுமாறு உங்களுக்கு நான் கட்டளையிட்டால், அதை உங்களால் முடிந்த அளவிற்குச் செய்யுங்கள். ஒன்றைச் செய்ய வேண்டாமென உங்களுக்கு நான் தடை விதித்தால் அதை(ச் செய்யாமல்) விட்டுவிடுங்கள்" என்றார்கள்.

**"நான் உங்களை எதில் விட்டேனோ அதிலேயே நின்று கொள்ளுங்கள். அளவுக்கு அதிகமான கேள்விகளைக் கேட்டதும், தங்களுக்காக அனுப்பப்பட்ட இறைத்தூதர்களோடு ஒத்துப் போகாததுமே உங்களுக்கு முன்னால் இருந்தவர்களை அழிவுக்கு ஆட்படுத்தியது".**

மேற்கண்ட வாசகம் அதிக கேள்விகள் கேட்பதை கண்டிக்கின்றது. தனது ஏவல்களை எடுத்தும், விலக்கல்களைத் தவிர்ந்தும் கொள்வதால் அதிக கேள்விகள் கேட்கும் தேவை ஏற்படாது என நபியவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். "நான் உங்களுக்கு ஒன்றைத் தடுத்தால் முழுதாக தவிர்ந்து கொள்ளுங்கள். ஒன்றை ஏவினால் முடியுமான அளவு எடுத்து நடவுங்கள்" என்றார்கள்.

வஹீயைத் தேடி, அதை விளங்க முயற்சிப்பதும், தகவலாக இருந்தால் உண்மைப்படுத்துவதும், செயல்முறை சார்ந்த விடயங்களாக இருந்தால் அதில் ஏவல்களை எடுத்து நடக்கவும் விலக்கல்களைத் தவிர்ந்து கொள்ளவும் முழு முயற்சி செய்வதுதான் ஒரு முஸ்லிம் கவனம் செலுத்த வேண்டிய விடயமாகும். வேறு சிந்தனைகளில் கவனம் சிதறாமல் இருத்தல் வேண்டும்.

ஏவல், விலக்கல்களை செவிமடுக்கும் போது அவனது சிந்தனை அவ்வாறு நடந்தால்? இவ்வாறு நடந்தால்? என நிகழவும் நிகழாமல் இருக்கவும் சாத்தியமுள்ள விடயங்களைக் கற்பனை பண்ணுவதும் இந்த நபிமொழியில் இடம் பெற்றுள்ள தடைக்குள் அடங்கும். நிறைவேற்ற வேண்டிய கடமைகளை தொடர்வதில் தாமதத்தை ஏற்படுத்தும்.

இப்னு உமர் (ரலி) அவர்களிடம் ஒரு மனிதர் ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவது பற்றிக் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் அதனைத் தொட்டு முத்தமிடுவதை நான் கண்டுள்ளேன் என்றார்கள். அம்மனிதர் என்னால் முடியாமல் போனால்? அல்லது சன நெருக்கடி இருந்தால்? என வினவ, இது போன்ற கேள்விகளை (உமது) யமனில் வைத்துவிட்டு வாரும். நான்

நபி (ஸல்) அவர்கள் அதனைத் தொட்டு முத்தமிடுவதைக் கண்டுள்ளேன் என்றார்கள்.(1)

இப்னு உமர் (ரலி) அவர்களின் நோக்கம் என்னவெனில் ஸுன்னாவைப் பின்பற்றுவதில்தான் எமது எண்ணம் இருக்க வேண்டுமே தவிர இயலாமை, அசாத்தியம் பற்றி முன்னரே கற்பனை பண்ணி சிந்திக்க அவசியமில்லை என்பதே. இவ்வாறான சிந்தனை எமது உறுதியில் தளர்வை ஏற்படுத்திவிடும். மார்க்கம் கற்பதும் கேள்வி கேட்பதும் அமுல்படுத்தும் நோக்கிலாக இருந்தால் தான் அது போற்றப்படும். விவாதத்திற்காகவும், தர்க்கத்திற்காகவும் அல்ல.

இதன் காரணத்தினால் தான் நபித்தோழர்களும், தாபிஈன்களும் ஒரு நிகழ்வு நடக்கு முன் அதனைப் பற்றிக் கேட்பதை வெறுக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவற்றுக்கு பதிலும் அளிக்க மாட்டார்கள்.

ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்களிடம் ஒரு விடயம் பற்றி வினவப்பட்டால் "அது நிகழ்ந்து விட்டதா?" என கேட்பார்கள். இல்லையெனில் நிகழும் வரை அதனை விட்டுவிடுங்கள் என்பார்கள்.

மஸ்ரூக் (ரஹ்) கூறுகின்றார்கள் : நான் உபை பின் கஃப் (ரலி) அவர்களிடம் ஒரு விடயத்தைப் பற்றிக் கேட்டேன். "அது நிகழ்ந்து விட்டதா?" எனக் கேட்க, நான் இல்லை என்றேன். அது நிகழும் வரை எம்மை ஓய்வெடுக்க விடுங்கள். அது நிகழ்ந்தால் அது பற்றி ஆய்வு செய்து கூறுகின்றோம் என்றார்கள்.

இமாம் ஷஃபீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : அம்மார் (ரலி) அவர்களிடம் ஒரு மார்க்க சட்டம் பற்றி கேட்கப்பட்டது. "அது நிகழ்ந்து விட்டதா?" என வினவ "இல்லை" என்றார்கள். அது நிகழும் வரை எங்களை விட்டு விடுங்கள். நிகழ்ந்தால் அது பற்றி முயற்சி செய்து ஆராய்ந்து கூறுகின்றோம் என்றார்கள்.

இமாம் மாலிக் (ரஹ்) கூறுவதைத் தான் கேட்டதாக அப்துல்லாஹ் பின் வஹ்ப் (ரஹ்) கூறுகின்றார்கள் : "அறிவில் தர்க்கிப்பது உள்ளத்தை வன்நெஞ்சமாக்கும், தீவிர வெறுப்பைத் தோற்றுவிக்கும்".

மைமூனீ (ரஹ்) கூறுகின்றார் : இமாம் அஹ்மதிடம் ஒரு விடயம் கேட்கப்பட்டால், "அது நிகழ்ந்து விட்டதா? அதன் மூலம் நீங்கள் சோதிக்கப்பட்டு விட்டீரா?" எனக் கேட்பார்கள்.

---

1.நூல் : புஹாரி (1611), திர்மிதி (861).

சுருக்கமாகக் கூறின், இந்த நபிமொழியில் நபியவர்கள் ஏவியதை எடுத்தும், விலக்கல்களைத் தவிர்ந்து கொள்வதிலேயே ஒருவன் ஈடுபட்டால் அவன் ஈருலகிலும் வெற்றி பெறுவான். அதற்கு மாற்றம் செய்து உள்ளத்தில் ஏற்படும் ஊசலாட்டங்களிலும், தான் அழகாகக் கருதுவதிலும் ஈடுபட்டால் நபியவர்கள் எச்சரித்த, அதிக கேள்விகள், நபிமார்களுடன் முரண்பாடு, தூதர்களுக்கு கட்டுப்படாமை போன்ற காரணங்களினால் அழிந்த வேதக்காரர்களின் அதே குழியில் விழுந்து விடுவான்.

***“நான் ஒன்றைச் செய்யுமாறு உங்களுக்கு நான் கட்டளையிட்டால், அதை உங்களால் முடிந்த அளவிற்குச் செய்யுங்கள். ஒன்றைச் செய்ய வேண்டாமென உங்களுக்கு நான் தடை விதித்தால் அதை(ச் செய்யாமல்) விட்டுவிடுங்கள்”.***

விலக்கல் ஏவலை விடக் கடுமையானதென இந்த நபிமொழியிலிருந்து சில அறிஞர்கள் கூறியுள்ளனர். ஏனெனில் தடை செய்யும் போது சிறிதளவாயினும் செய்வதற்கு அனுமதியளிக்காது முழுமையாகத் தடுத்துள்ளார்கள். ஆனால் ஏவலைப் பொறுத்தவரை அதனை முடியுமானளவு செய்யுமாறு தான் பணித்துள்ளார்.[1]

அதேபோன்று தான் மற்றும் சில அறிஞர்களின் பின்வரும் கூற்றும் : நல்ல விடயங்களை நல்லவன், தீயவன் அனைவரும் செய்வர். ஆனால் பாவங்களை உண்மையாளர்களைத் தவிர யாரும் விடமாட்டார்கள்.

அன்னை ஆஇஷா (ரலி) கூறுகின்றார்கள் : “விடாமுயற்சியுள்ள நல்லோரை முந்த விரும்புபவர் பாவங்களை விடட்டும்”.

ஹஸன் அல்பஸரீ (ரஹ்) கூறினார்கள் : அல்லாஹ் தடுத்ததை விடுவதை விட சிறந்த எந்தவொன்றைக் கொண்டும் வணக்கசாலிகள் அவனை வணங்கவில்லை.

நன்மை செய்வதை விட பாவத்தை விடுவது சிறந்தது எனக் கூறப்பட்டிருப்பது ஸுன்னத்தான அமல்களைத்தான் என்பது தெளிவாகின்றது. இப்னு உமர் (ரலி) அவர்களுடைய பின்வரும் வார்த்தை இதற்கு சான்று பகர்கின்றது : ஒரு வெள்ளிக் காசின் (திர்ஹம்) ஆறில் ஒரு பகுதியை ஹராத்திலிருந்து தடுப்பது அல்லாஹ்வின் பாதையில் செலவிடப்படும் ஒரு இலட்சம் காசை விட சிறந்தது.

---

1. ஏனெனில் ஒன்றைச் செய்யாமல் விடுவதுதான் அடிப்படையாகும். அதற்காக உறுதியெடுக்க அவசியமில்லை. எனவே “முடியுமானளவு” என்று அதில் கூற வேண்டிய அவசியமில்லை. செயல்கள் தான் இடையிலே உருவாகக்கூடியது. அதற்குத்தான் மன உறுதியும் தேவைப்படுகின்றது. அனைவராலும் ஒன்றை செய்யாமல் விடமுடியும். ஆனால் அனைவராலும் ஒன்றை செய்ய முடியுமெனக் கூற முடியாது.

*உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறுகின்றார் : இரவு முழுதும் நின்று வணங்கி, பகலில் நோன்பு நோற்று, அவற்றைக் கலந்து செய்வதல்ல இறையச்சம் (தக்வா). மாறாக அல்லாஹ் கடமையாக்கியதை செய்வதும், அவன் தடுத்ததை விடுவதுமே இறையச்சமாகும். அதனுடன் மேலதிகமாக அமல்கள் செய்தால் அது இன்னும் நன்றாக இருக்கும்.*

*மேற்கண்ட அறிஞர்களுடைய பேச்சின் சுருக்கம், ஹராத்தைத் தவிர்ந்து கொள்வது -அது குறைவாக இருந்தாலும்- உபரியான வணக்கங்களை அதிகப்படுத்துவதை விடச் சிறந்ததாகும். ஏனெனில் ஹராத்தைத் தவிர்ப்பது கடமையாகும் (பர்ழ்). இது ஸுன்னத்தாகும்.*[1]

*1.தடுக்கப்பட்டவைகளும் வணக்கங்களும் அதன் வலிமை, மகத்துவத்திற்கேற்ப ஒன்றுக் கொன்று பரிகாரமாக அமையக்கூடியவை. கடமையான வணக்கங்களின் கூலி நிலைத்திருப்பது தடுக்கப்பட்டவைகளுடன் சேர்த்து கடமையானவற்றைச் செய்வதை விட சிறந்தது. ஏனெனில் கடமையானவைகளுடனேயே தடுக்கப்பட்டவை வருமென்றிருந்தால் உபரியான வணக்கங்களுடன் அவை வருவதை அறவே நிறுத்த முடியாது.*

# ஹதீஸ் – 10

## ஹலாலான சம்பாத்தியம் அவசியமானது

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَال رَسُولُ اللهِ ﷺ:

"إن اللهَ طَيِّبٌ لَا يَقْبَلُ إلا طَيِّبًا، وَإِن اللهَ أَمَرَ الْمُؤْمِنِينَ بِمَا أَمَرَ بِهِ الْمُرْسَلِينَ فَقَال تَعَالَى: "يَا أَيها الرسُلُ كُلُوا مِنْ الطيِّبَاتِ وَاعْمَلُوا صَالِحًا"، (المؤمنون: ٥١) وَقَال تَعَالَى: "يَا أَيها الذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ" (البقرة: ١٧٢) ثُم ذَكَرَ الرجُلَ يُطِيلُ السفَرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُد يَدَيْهِ إلَى السمَاءِ: يَا رَبِ! يَا رَب! وَمَطْعَمُهُ حَرَامٌ، وَمَشْرَبُهُ حَرَامٌ، وَمَلْبَسُهُ حَرَامٌ، وَغُذِّيَ بِالْحَرَامِ، فَأَنى يُسْتَجَابُ لَهُ؟." رَوَاهُ مُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் தூயவன், அவன் தூய்மையானதையே ஏற்றுக் கொள்வான். அல்லாஹ் தனது தூதர்களிடம் எதைச் செய்யும்படி பணித்தானோ, அதையே நம்பிக்கையாளர்களையும் செய்யும்படி கட்டளையிட்டுள்ளான். "தூதர்களே! தூய்மையானவற்றை நீங்கள் உண்டு, நல்லறமும் புரியுங்கள்" (முஃமினூன் : 51). "நம்பிக்கை கொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கியதில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்" (அல்பகரா : 172). என்றும் கூறியுள்ளான். பின்னர் நபி (ஸல்) அவர்கள் நீண்ட பிரயாணம் செய்யும், தலைவிரி கோலமாக, மாசுபடிந்தவராக இருக்கும் ஒரு மனிதரைக் கூறினார்கள். அவர் தனது கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி 'இறைவனே இறைவனே!" என கதறுகிறார். ஆனால் அவரது உணவு ஹராமானதாக இருக்கின்றது, அவர் அருந்தும் பானம் ஹராமானதாக இருக்கின்றது. அவரது உடை ஹராமானதாக இருக்கின்றது. அவரது மொத்த வாழ்க்கையே ஹராமான வழியில் தான் இருக்கின்றது. இந்த நிலையில் எவ்வாறு அவருக்கு பதிலளிக்கப்படும்?*

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1015).*

**விரிவுரை :**

*இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள "طيّب" (தய்யிப்) எனும் அரபு வாசகத்தின் பொருள் தூய்மையானது என்பதாகும். அதாவது அல்லாஹ் அனைத்து வித குறைபாடுகளை விட்டும் தூய்மையானவன் என்பதாகும்.*

இது பின்வரும் இறைவசனத்தைப் போன்றாகும். "தூய்மையான பெண்கள் தூய்மையான ஆண்களுக்கும், தூய்மையான ஆண்கள் தூய்மையான பெண்களுக்கும் உரியவர்களாவர். அவர்கள் கூறுவதை விட்டும் இவர்கள் நிரபராதிகளாவர்" (அந்நூர் : 26). அதாவது கீழ்த்தரமான அசிங்கமான குணங்கள் செயல்களை விட்டும் அவர்கள் தூய்மையானவர்கள்.

**"தூய்மையானதையே ஏற்றுக்கொள்வான்"**

அதாவது அல்லாஹ் தர்மங்களில் தூய்மையான, ஹலாலானவற்றை மாத்திரமே ஏற்றுக் கொள்வான்.

மேற்கண்ட வார்த்தை இதைவிட பரந்துபட்ட பொருளைக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. அதாவது அமல்களில் முகஸ்துதி, தற்பெருமை, தீய எண்ணங்களை விட்டும் தூய்மையானதையே ஏற்றுக் கொள்வான். பொருளாதாரத்தில் தூய்மையான ஹலாலானதையே ஏற்றுக் கொள்வான். ஏனெனில் தூய்மை எனும் வாசகம் சொல், செயல் நம்பிக்கை அனைத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இவை ஒவ்வொன்றும் தூய்மையானது, அசுத்தமானது என இரு வகைப்படுகின்றன.

ஒரு முஃமினின் செயல்கள் நல்லதாக மாறுவதில் அவனது நல்ல ஆகார முறை பெரும் பங்காற்றுகின்றது. அதன் மூலம்தான் அவனது அமல்கள் வளர்ச்சியடைகின்றன. ஹலாலான உணவை உண்ணாமல் எந்தவொரு அமலும் ஏற்கப்படவோ வளர்ச்சியடைவோ மாட்டாது என இந்த ஹதீஸில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஹராமானவற்றைப் புசிப்பது அமல்களை பாலாக்கி ஏற்றுக் கொள்ளப்படுவதையும் தடுத்துவிடும். இந்த அடிப்படையை போதித்து விட்டு தூதர்களுக்கு ஏவிய விடயத்தையே முஃமின்களுக்கும் ஏவியுள்ளதாக நபியவர்கள் கூறுகின்றார்கள்.

"தூதர்களே! தூய்மையானவற்றை நீங்கள் உண்டு, நல்லறமும் புரியுங்கள்" (முஃமினூன் : 51).

"நம்பிக்கை கொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கியதில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்" (அல்பகரா : 172).

இதன் அர்த்தம் என்னவெனில் இறைதூதர்கள், அவர்களது சமூகத்தினர் அனைவரும் ஹலாலான உணவை உண்ணும் படியும் நற்காரியங்கள் செய்யவும் ஏவப்பட்டுள்ளார்கள். ஆகாரம் ஹலாலாக இருக்கும் போது செயல்கள் நல்லதாகி, ஏற்கப்படும். அது ஹராமாக இருந்தால் எவ்வாறு ஏற்கப்படும்?

ஹராமான உணவுடன் அமல்கள் ஏற்கப்படமாட்டாது என்பதைத் தெளிவுபடுத்தவே நபியவர்கள் துஆவை ஓர் உதாரணமாகக் கூறியுள்ளார்கள். துஆவே ஏற்கப்படமாட்டாதென்றால் அமல்கள் எவ்வாறு ஏற்கப்படும் என்பதே இதன் கருத்தாகும்.

வுஹைப் பின் வர்த் (ரஹ்) கூறுகின்றார் : நீ இந்த மேகத்தின் இடத்தில் (உயர்ந்து) நின்றிருந்தாலும் உனது வயிற்றினுள் செல்வது ஹராமா? ஹலாலா? எனப் பார்க்கும் வரை அது உனக்கு எவ்விதப் பயனுமளிக்காது.

ஹராமான பொருளால் தர்மம் செய்வதும் ஏற்கப்படமாட்டாது. நபி (ஸல்) அவர்கள்கூறினார்கள்: வுழூவின்றி தொழுகையையும், மோசடியினால் வழங்கப்படும் தர்மத்தையும் அல்லாஹ் ஒருபோதும் ஏற்கமாட்டான்.[(1)]

ஹராமான பணத்தில் தர்மம் செய்தல் அநாதையின் பணத்தில் விதவைக்கு ஆடையணிவிப்பது போன்றென அபுத் தர்தாஃ (ரலி), யஸீத் பின் அபீ மைஸரா (ரலி) போன்றோர் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸனுல் பஸரீ(ரஹ்) கூறுகின்றார்கள்: ஏழைக்கு இரக்கப்பட்டு தர்மம் கொடுப்பவனே நீ அநியாயம் செய்தவனுக்கு (முதலில்) இரக்கம் காட்டு.

ஒரு ஜனாதிபதி அல்லது அவரது அமைச்சர்களில் ஒருவர் பொது நிதியிலிருந்து தமக்கு உரிமையில்லாததை எடுத்து, அதிலிருந்து தர்மம் செய்தால், அடிமையை உரிமையிட்டால், பள்ளிவாசல் கட்டினால் அல்லது மக்கள் பயனடையும் விதத்தில் செலவு செய்தால் அவர் பறிமுதல் செய்த பணத்திலிருந்து தர்மம் கொடுத்தவர் போன்றாவார் என இப்னு உமர் (ரலி) அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. பஸராவிற்கு கவர்னராக இருந்த அப்துல்லாஹ் பின் ஆமிருக்கும் இவ்வாறு தான் அவர்கள் கூறினார்கள். அந்த கவர்னரின் மரண வேளையில் மக்கள் சூழ நின்று கொண்டு அவருடைய தயாளத்தன்மை, உபகாரம் போன்றவற்றைப் புகழ்ந்து கூறிக் கொண்டிருந்தார்கள். இப்னு உமர் (ரலி) அவர்களோ மௌனித்திருந்தார்கள். அவர்களிடம் ஏதாவது கருத்துரைக்கும் படி வேண்டப்பட்ட போது "மோசடியிலிருந்து கொடுக்கப்படும் தர்மத்தை அல்லாஹ் ஏற்கமாட்டான்" எனும் நபிமொழியை அறிவித்துவிட்டு அந்த கவர்னரைப் பார்த்து "நீர் பஸராவிற்குப் பொறுப்பாக இருந்துள்ளீர்" என்றார்கள்.

அஸத் பின் மூஸா (ரஹ்) "அல்வரஃ" என்னும் நூலில் கூறுகின்றார்கள் : நாம் எளிதாக்கிக் கொடுக்கும் தண்டனைகள், ஏற்படுத்திக் கொடுக்கும் தண்ணீர் ஊற்றுக்கள் இவைகளால் எமக்கு கூலி கிடைக்குமா? என

1.அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (224).

மேற்கூறப்பட்ட இப்னு ஆமிர் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் வினவிய போது ஒரு தீயது மற்ற தீயதிற்குப் பரிகாரமாக மாட்டாது என்பது உமக்குத் தெரியாதா? என பதிலளித்தார்கள்.

இதே இப்னு ஆமிர் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் (உரிமையில்லாமல் எடுக்கப்பட்ட பணத்தால்) அடிமை உரிமையிடுவது பற்றிக் கேட்ட நேரத்தில் : ஹஜ்ஜுக்குச் செல்லும் ஒருவரின் ஒட்டகத்தைப் பறிமுதல் செய்து அதில் ஜிஹாத் செய்வது போன்று தான் உமது செயற்பாடும். அது ஏற்கப்படுமா? என்பதை நீரே தீர்மானித்துக் கொள்வீராக! என்றார்கள்.

மக்களுடைய உரிமைகளை முறையாக கொடுக்கும் ஒரு நீதமான ஆட்சியாளர், அப்பொது நிதியிலிருந்து அவர்களுக்குத் தேவையான பள்ளிவாசல், பாடசாலை, மருத்துவமனை போன்றவற்றை நிர்மாணிப்பது ஆகுமானதாகும்.

**“பின்பு நீண்ட பிரயாணம் செய்யும் தலைவிரி கோலமாக, மாசுபடிந்தவராக இருக்கும் ஒரு மனிதரைக் கூறினார்கள்.....”**

இதில் நபியவர்கள் பிரார்த்தனையின் ஒழுங்கு முறைகள், அது ஏற்கப் படுவதற்கும் தட்டப்படுவதற்குமான காரணிகள் போன்றவற்றை சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

**பிரார்த்தனை ஏற்படுவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள் :**

**1.** நீண்ட பிரயாணம். பொதுவாக எந்தப் பிரயாணமாக இருந்தாலும் அதில் துஆ ஏற்கப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மூன்று பிரார்த்தனைகள் உள்ளன. அவற்றுக்கு எவ்வித ஐயமுமின்றி பதிலளிக்கப்படும். அநீதியிழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை, பிரயாணியின் பிரார்த்தனை, தந்தை மகனுக்காக கேட்கும் பிரார்த்தனை.[(1)]

பிரயாணம் நீளும் அளவு துஆவும் ஏற்கப்பட அதிக வாய்ப்புள்ளது. ஏனெனில் நீண்ட பயணத்தில் மனச்சோர்வு, தனிமை, சிரமங்கள் போன்றன உருவாக வாய்ப்புள்ளது. இது போன்ற மனச்சோர்வு துஆ ஏற்கப்பட பாரிய ஒரு காரணமாகும்.

**2.** ஆடையில் மாசுபடிதல், தோற்றத்தில் தலைவிரி கோலம் என எளிமையான தோற்றம் ஏற்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தலைவிரி கோலமான, மாசுபடிந்த நிலையில், இத்துப்போன இரு ஆடைத்

---

*1. அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : அபூதாவுத் (1536), இப்னு மாஜா (1752), திர்மிதி (3448), இதில் “மகனுக்கு எதிராக தந்தை கேட்கும் பிரார்த்தனை” என இடம் பெற்றுள்ளது. இமாம் திர்மிதி மற்றும் அஷ்ஷேக் அல்பானீ (ஸஹீஹுத் தர்கீப் (3132) இதனை “ஹஸன்” தரத்தில் உள்ளதாகக் கூறுகின்றனர்.*

துண்டுகளுடன் இருக்கும் சிலர் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்விடம் சத்தியமிட்டுக் கேட்டால் அவனும் உடனே நிறைவேற்றி விடுவான்.[1]

**3.** இரு கைகளையும் வானின் பக்கம் உயர்த்துதல் : இதுவும் துஆ ஏற்கப்படுவதற்கான ஒழுங்குமுறைக் காரணிகளில் ஒன்றாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ் வெட்கமுள்ள தயாளன். ஒரு மனிதன் தனது இரு கைகளையும் அவனிடம் உயர்த்திப் பிரார்த்திக்கும் போது அவ்விரண்டையும் வெறுமையாகத் திருப்பி அனுப்ப வெட்கப்படுகிறான்.[2] மழை வேண்டிப் பிரார்த்திக்கும் போது தனது அக்குளின் வெண்மைப் பகுதி தெரியுமளவு இரு கைகளையும் உயர்த்துவார்கள். பத்ர் போரின் போது தனது மேலாடை தோள் புயத்திலிருந்து விழுமளவு இணை வைப்பாளர்களுக்கு எதிராக உதவி தேடிப் பிரார்த்தனை புரிந்தார்கள்.

**துஆவின் போது கை உயர்த்துவது பற்றி நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் பல விதங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன :**

**1.** தனது ஆள்காட்டி விரலால் மாத்திரம் சுட்டிக் காட்டுவார்கள். இது பெரும்பாலும் மிம்பரில் செய்வார்கள். சில போது வாகனத்தில் ஏறிய போதும் கூட செய்திருக்கின்றார்கள்.

இதுதான் பிரார்த்தனையில் இஹ்லாஸைக் குறிப்பிடுவதாகும் என இப்னு அப்பாஸ் (ரலி) மற்றும் சிலர் கூறியுள்ளனர். இமாம் முஹம்மத் பின் ஸீரீன் (ரஹ்) அவர்கள் : "நீர் அல்லாஹ்வைப் புகழும் போது ஒரு விரலால் சுட்டிக்காட்டு" என்றார்கள்.

**2.** இரு கைகளையும் உயர்த்தி, உள்ளங்கையை தனது முகத்தின் பக்கமும் புறக்கையை கிப்லாத்திசையிலும் வைத்துக்கொள்வார்கள். இது இறைஞ்சுதலின் ஒரு பகுதி என சில ஸலப் அறிஞர்கள் கூறியுள்ளனர்.

**3.** இரண்டாவது முறைக்கு மாற்றமான முறை. (உள்ளங்கையை கிப்லாத் திசையிலும், புறக்கையை தனது முகப் பக்கமும் வைத்துக் கொள்வார்கள்). இது அல்லாஹ்விடம் புகலிடம் கோரி பாதுகாப்புத் தேடும் முறையென அறிஞர்கள் கூறுகின்றனர்.

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2622) எனினும் முஸ்லிமின் அறிவிப்பில் "இத்துப்போன இரு ஆடைகள்" எனும் வார்த்தை இடம் பெறவில்லை. அது இப்னு மாஜாவில் (6483)ல் இடம் பெற்றுள்ளது.*

*2.அறிவிப்பவர் : ஸல்மான் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (23714), அபூதாவூத் (1488), திர்மிதி (3556), இப்னுமாஜா (3865), இப்னு ஹிப்பான் (876), ஹாகிம் (1830), அஷ்ஷேக் அல்பானீ (ஸஹீஹுத் தர்கீபில் 1635) ஆகியோர் ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர்.*

**4.** இரு கைகளையும் உயர்த்தி உள்ளங்கையை வானின் பக்கம் வைத்துக் கொள்வார்கள். இது தான் முறையான துஆவென இப்னு உமர் (ரலி), அபூ ஹுரைரா (ரலி), இப்னு ஸீரீன் (ரஹ்) போன்றோர் கூறுகின்றனர்.

**5.** முன்னர் கூறியதற்கு மாற்றமாக வைத்தல். (புறக்கையை வானின் பக்கம் வைத்தல்)

நபி (ஸல்) அவர்கள் மழை தேடிப் பிரார்த்திக்கும் போது தனது புறக்கையை வானை நோக்கி வைத்தார்களென அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.([1]) மற்றுமொரு அறிவிப்பில் : இரு கைகளையும் விரித்து புறப் பகுதியை வானை நோக்கி வைத்தார்கள் என இடம் பெற்றுள்ளது.([2])

**6.** அல்லாஹ்வின் பரிபாலனத்துவத்தை திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அவனிடம் அலட்டிக் கேட்டல். இவ்வாறு “பு” (இரட்சகன்) எனும் பரிபாலனத்துவத்தை எடுத்துக் காட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்திக் கேட்பது துஆ ஏற்கப்பட அதிக வாய்ப்புள்ள சந்தர்ப்பமாகும். அல்குர்ஆனில் உள்ள பிரார்த்தனைகளைக் கூர்ந்து கவனித்தால் அதில் பெரும்பாலானவை “ரப்பு” என்ற வார்த்தை மூலமே ஆரம்பிக்கப்படுவதைக் காணலாம்.

“எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இவ்வுலகில் நல்லதையும், மறுமையில் நல்லதையும் தந்தருள்வாயாக! மேலும் நரக வேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!” (பகரா : 201).

“எங்கள் இரட்சகனே! எங்களுக்கு முன்சென்றோர் மீது சுமத்தியது போன்ற சிரமத்தை எம்மீது நீ சுமத்தி விடாதிருப்பாயாக! எங்கள் இரட்சகனே எதில் எமக்கு சக்தி இல்லையோ அதை எம்மீது சுமத்தி விடாதிருப்பாயாக!” (பகரா : 286).

“எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நீ நேர்வழி காட்டிய பின்னர் எங்கள் உள்ளங்களை தடம்புறளச் செய்து விடாதே!” (ஆல இம்ரான் : 08).

துஆக் கேட்கும் போது “யா ஸய்யிதீ” எனக் கூறுபவர்களைப் பற்றி இமாம் மாலிக் அவர்களிடம் வினவப்பட்ட போது, நபிமார்கள் தமது துஆக்களில் கூறியது போன்று “யா ரப்பு” எனக் கூறட்டும் என்றார்கள்.

துஆ ஏற்கப்படுவதற்கான காரணங்கள் இத்தனை இருந்தும் அதற்கு பதிலளிக்கத் தடையாக இருப்பது பற்றி நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது உணவு, உடை அனைத்திலும் தாராளமாக

1. நூல் : முஸ்லிம் (895)

2.நூல் : அஹ்மத் (13536)

ஹராம் கலந்திருத்தலாகும். நபி (ஸல்) அவர்கள் ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடம் "உனது உணவை தூய்மைப்படுத்திக் கொள். துஆக்கள் ஏற்கப்படும்" என்று கூறினார்கள்.([1]) எனவே ஹலாலானவற்றை உண்பது, குடிப்பது, அணிவது துஆ ஏற்கப்படுவதற்கான காரணமாகும்.

**"எவ்வாறு அவருக்கு பதிலளிக்கப்படும்?"**

இது ஆச்சரியத்துடனும், சாத்தியமற்றதைக் காட்டும் முகமாகவும் கேட்கப்படும் கேள்வியாகும்.

சிலவேளை பாவங்கள் செய்வதும், கடமைகளை விடுவதும் கூட துஆ ஏற்கப்படத் தடையாக அமையலாம். மேலும் நன்மைகள் செய்வது துஆ ஏற்கப்படும் வாய்ப்பைத் தோற்றுவிக்கலாம். இதனால் தான் குகையில் சிக்கிய அந்த மூவரும் தாம் செய்த நற்காரியங்களை வைத்து துஆக் கேட்ட போது பதிலளிக்கப்பட்டது.[(2)]

உணவிற்கு உப்பு போதிய அளவு அவசியமென்பது போன்று துஆவிற்கு நன்மைகள் போதியளவு அவசியமாகும்.

பாவங்களின் மூலம் வழிகளை அடைத்து விட்டு துஆ ஏற்கப்படத் தாமதமாகின்றதே எனக் கூற வேண்டாம் என்று ஸலப் அறிஞர் ஒருவர் கூறியுள்ளார்.

ஒரு கவிஞர் இக்கருத்தை அரபுக் கவிதையாக வடித்துள்ளார். அதன் கருத்து வருமாறு :

ஒவ்வொரு துன்பத்தின் போதும் நாம் இறைவனை அழைக்கின்றோம். துன்பம் நீங்கியதும் அவனை மறக்கின்றோம்.

துஆ ஏற்கப்படும் வழிகளை பாவத்தினால் அடைத்து விட்டு அது ஏற்கப்பட வேண்டும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

*1.அறிவிப்பவர் : ஸஃத் (ரலி), ஆதாரம் : தபரானியின் அல்முஃஜமுல் அவ்ஸத் (6491). இமாம் ஹைஸமி தனது மஜ்மஉஸ் ஸவாஇத் நூலில் (10/291), இமாம் தப்ரானி தனது அல்முஃஜமுஸ் ஸகீரில் அறிவித்துள்ளதாகவும், அதில் தான் அறியாத சிலர் இடம் பெற்றிருப்பதாகவும் கூறுகின்றார்கள். இந்நபிமொழி பலவீனமாக இருந்தாலும் ஸஃத் (ரலி) துஆ ஏற்கப்படுவோரில் ஒருவர் என்பது பிற அறிவிப்புக்கள் மூலம் உறுதியான விடயமாகும். (பார்க்க : ஸியரு அஃலாமிந் நுபலா 1/111)*

*2.அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (3465), முஸ்லிம் (2743).*

# ஹதீஸ் – 11

## உறுதியை எடுத்து, சந்தேகத்தை விடுதல்

عن الحَسَنِ بنِ عَلِيٍّ سِبْطِ رَسُولِ الله ﷺ وَرَيْحَانَتِهِ رضي الله عنه قال :

حَفِظْتُ مِنْ رَسُولِ اللهِ ﷺ : "دَعْ مَا يَرِيْبُكَ إِلَى مَا لاَ يَرِيبُكَ" رواه النسائي والترمذي – وقال: "حسن صحيح"

**“உங்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற ஒன்றை விட்டு விட்டு அதற்குப் பதிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டு நான் நினைவில் இருத்திக் கொண்டேன் எனஅபூ முஹம்மத் ஹஸன் இப்னு அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.**

*ஆதாரம் : திர்மிதி (2518), நஸாஈ (5711).*

**விரிவுரை :**

*தெளிவற்ற, சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்ந்து கொள்வதே இந்நபிமொழியின் கருத்தாகும். ஏனெனில் கலப்பற்ற ஹலாலான விடயத்தில் ஒரு முஃமினின் உள்ளத்தில் கலக்கமோ, தடுமாற்றமோ, ஐயமோ தோன்றமாட்டாது. மாறாக அதில் உள்ளம் நிம்மதியடைந்து அமைதியுறும். சந்தேகத்திற்கிடமானவற்றில் தான் மேற்கண்ட ஐயம், கலக்கம், தடுமாற்றம் எல்லாம் ஏற்படுகின்றது.*

**புழைல் (ரஹ்) கூறுகின்றார் :** *பேணுதலை மக்கள் சிரமமாகக் கருதுகின்றனர். இரு விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் வரும் பட்சத்தில் அதில் கடினமானதையே நான் தெரிவு செய்வேன். உனக்கு சந்தேகத்துக்குரியதை சந்தேகமில்லாவற்றின் பக்கம் விட்டுவிடு.*

*ஹஸ்ஸான் பின் ஸினான் (ரஹ்) கூறுகின்றார்கள் : “பேணுதலை விட இலகுவானது ஏதுமில்லை. உனக்கு ஏதாவதொன்றில் சந்தேகம் ஏற்பட்டால் அதை நீ விட்டுவிடு”.*

ஹஸ்ஸான் (ரஹ்) போன்றோருக்குத் தான் பேணுதல் இலகுவாக அமைகின்றது.

நீங்கள் பிரச்சினையாகப் பார்க்காத விடயத்திற்காகவே முஹம்மது பின் ஸீரீன் (ரஹ்) நாற்பதாயிரம் காசுகளை விட்டுக் கொடுத்தார்களென ஹிஷாம் பின் ஹஸ்ஸான் (ரஹ்) கூறுகின்றார்கள்.

யஸீத் பின் ஸுரைஃ (ரஹ்) தனது தந்தையின் அனந்தரச் சொத்திலிருந்து ஐந்து இலட்சங்களைத் தவிர்ந்து கொண்டார்கள். காரணம் அவர் அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டமையே. யஸீத் (ரஹ்) மரணிக்கும் வரை பாயிழைத்து தனது வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்வார்கள்.

(பிறரால்) வேட்டையாடப்பட்ட மாமிசத்தை இஹ்ராம் நிய்யத் வைத்த ஒருவர் புசிக்கலாமா? என ஆஇஷா (ரலி) அவர்களிடம் வினவப்பட்ட போது (ஹஜ்ஜுடைய இந்த) காலம் சில நாட்கள் தான். உனக்கு சந்தேகம் என்றால் விட்டுவிடு என பதிலளித்தார்கள்.

கருத்து வேற்றுமையிலிருந்து முழுமையாக வெளிப்பட்டு (அவ்வாறானதைத்) தவிர்ந்து கொள்வது தான் சிறந்ததும், சந்தேகத்திற்கிடமானவற்றை விட்டும் அதிக தூரத்தில் இருப்பதுமாகும் என இந்த நபிமொழியிலிருந்து ஆதாரம் எடுக்க வாய்ப்புள்ளது. என்றாலும் இது பொதுவான ஒரு விதியல்ல என்பதே எமது மத்ஹபுடையவும் வேறு பல அறிஞர்களுடையவும் கருத்தாகும். ஏனெனில் முரண்பாடற்ற நபியவர்களால் வழங்கப்பட்ட சலுகைகளும் கருத்து வேற்றுமையான விடயங்களும் உள்ளன. அவ்வாறான சலுகைகளை விடுவதை விட எடுப்பதே சிறந்தது. சில வேளை அச்சலுகை பற்றி சில அறிஞர்களுக்குத் தகவல் கிடைக்காமலிருக்க, அவர்கள் தவிர்ந்து கொண்டிருக்கலாம்.

இங்கு நாம் ஒரு விடயத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும். சந்தேகத்திற்கிடமான விடயங்களைத் தவிர்ந்து கொள்வதில் அதிக கவனம் செலுத்துவது மார்க்க விடயங்களில் சீராக இருந்து, மேலதிகமாக இறையச்சம், பேணுதல் போன்றவற்றில் சந்தேகம் ஏற்படுவோருக்கே பொருந்தும். வெளிப்படையாகவே மார்க்கத் தடைகளை மீறி விட்டு பின் நுட்பமான சந்தேகங்களில் பேணுதலாக இருக்க விரும்புவோருக்கு இது பொருந்தாது. மாறாக அது போலியான பேணுதலாகவே அமையும். அதனால் தான் கொசுவின் இரத்தத்தைப் பற்றி மார்க்கத் தீர்ப்பு கேட்ட ஈராக் நாட்டைச் சேர்ந்தவரைப் பற்றி இப்னு உமர் (ரலி) அவர்கள் “நபியவர்களின் பேரப்பிள்ளை ஹுஸைனைக் கொன்று விட்டு கொசுவின் இரத்தத்தைப் பற்றி என்னிடம் கேட்கின்றார்கள். நபியவர்களோ

(ஹஸன், ஹுஸைனைப் பற்றி) "அவர்கள் இருவரும் இவ்வுலகில் நான் அதிகமாக நேசிப்பவர்கள்" எனக் கூறியுள்ளார்கள்" எனக் கடிந்து கொண்டார்கள்.[1]

பிஷ்ர் பின் ஹாரிஸ் (ரஹ்) அவர்களிடம் ஒரு மனிதர் பின்வருமாறு கேட்டார் : ஒரு மனிதனிடம் மனைவியிருக்க, அவனுடைய தாய் அவளை விவாகரத்துச் செய்ய ஏவினால் என்ன செய்வது எனக் கேட்டார். அம்மனிதர் வழமையாக தாய்க்கு எல்லா விதத்திலும் பணிவிடை செய்து இந்த விவாகரத்து மாத்திரம் தான் மீதமிருக்கும் என்றிருந்தால் அவர் அதனையும் செய்யட்டும். ஆனால் இந்த விவாகரத்தின் மூலம் தாய்க்குப் பணிவிடை செய்வதாகக் கூறிவிட்டு பின், தாயை அடித்துத் துன்புறுத்துவதாக இருந்தால் இந்த விவாகரத்து தேவையில்லை என பிஷ்ர் (ரஹ்) பதிலளித்தார்கள்.

கீரை வாங்கும் ஒருவர் அதனைக் கட்டும் கயிறையும் சேர்த்துத் தான் தரவேண்டும் என நிபந்தனையிடுவது பற்றி இமாம் அஹ்மதிடம் வினவப்பட்ட போது "இது என்ன கேள்வி? (யார் இதனைக் கேட்டார்?) என வினவினார்கள். இது இப்ராஹீம் பின் அபீ நுஜமின் கேள்வி எனக் கூறப்பட்டது. உண்மையில் இப்ராஹீமுடைய கேள்வியாக இருந்தால் அது சரி தான். அவர் போன்ற (பேணுதலுள்ள)வர்களுக்கு இது போன்றன தெளிவற்றதாகத் தான் இருக்கும் என்றார்கள்.

இவ்வளவு பேணுதலில்லாதோர் இது போன்ற அற்பமான பிரச்சினைகளைக் கேட்பதைத் தான் இமாமவர்கள் கண்டித்தார்கள். பேணுதல் உச்ச நிலையிலுள்ளவர்களுக்கு இது போன்ற ஐயங்கள் தோன்றத்தான் செய்யும். இமாம் அஹ்மத் அவர்களே இந்தளவு நுணுக்கமான பேணுதலைக் கடைபிடித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு தடவை வெண்ணைக் கட்டி வாங்க ஒருவரைப் பணித்தார்கள். அவர் அதனை ஒரு காகிதத்தில் வைத்து கொண்டு வந்தார். இமாமவர்கள் அக்காகிதத்தை வியாபாரிக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள். இமாமவர்கள் எழுதும் போது மை தீர்ந்துவிட்டால் தோழர்களிடம் கேட்டுப் பெறமாட்டார்கள். மாறாக தன் கைவசம் மைக் குப்பியை எடுத்து வருவார்கள்.

இமாமவர்களின் மையினால் ஒருவர் எழுத அனுமதி கோரிய போது : நீர் எழுதும், இது இருள் சூழ்ந்த பேணுதல் என்றார்கள். மற்றுமொருவர் அனுமதி கேட்க "இந்தளவுக்கு என்னுடையவோ உன்னுடையவோ

1. நூல் : புஹாரி (3753)

பேணுதல் வந்து சேரவில்லை'' என சிரித்தவாறு கூறினார்கள். இது இமாம் அஹ்மத் அவர்கள் பணிவின் அடிப்படையில் கூறியதாகும். அவ்வாறில்லாமல் இமாமவர்கள் இந்தளவு பேணுதலுடன் தான் இருந்தார்கள். வெளிப்படையான வெறுக்கப்பட்டவைகளில் பொடுபோக்காக இருந்து, தீர ஆராயாமல் சந்தேகத்திற்கிடமானவற்றைச் செய்யும் பேணுதலற்றவர்களை இமாமவர்கள் கண்டிப்பார்கள்.

# ஹதீஸ் – 12

## பயனுள்ளவற்றில் ஈடுபடல்

عَنْ أَبِي هُرَيْرَةَ - رضى الله عنه - عَنِ النَّبِيِّ - ﷺ - قَالَ:

"مِنْ حُسْنِ إِسْلَامِ اَلْمَرْءِ: تَرْكُهُ مَا لَا يَعْنِيهِ" حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ اَلتِّرْمِذِيُّ وَغَيْرُهُ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***ஒருவர் நல்ல முஸ்லிமாய் இருப்பதன் ஒரு பகுதி அவர் தனக்குச் சம்பந்தமில்லாததை விட்டு விடுவதாகும்.***

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : திர்மிதி (2317).*

**விரிவுரை :**

*இந்நபிமொழியை இமாம்களான திர்மிதி (2317) இப்னுமாஜா (3976) ஆகியோர் பின்வரும் அறிவிப்பாளர் வரிசை மூலம் அறிவித்துள்ளனர் : அவ்ஸாஈ - குர்ரா பின் அப்திர்ரஹ்மான் - ஸுஹ்ரீ - அபூஸலமா - அபூ ஹுரைரா (ரலி). இமாம் திர்மிதி இதனைத் தனி அறிவிப்பாளர் வரிசை மூலம் அறிவிக்கப்பட்டுள்ள "கரீப்" வகையைச் சேர்ந்ததாகும் எனக் கூறியுள்ளார்கள்.*

*இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் இதனை ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அதற்கு நேர்பாடாக இமாம் இப்னு அப்தில் பர்ர் (ரஹ்) அவர்களும் "ஸுஹ்ரியின் வாயிலாக நம்பகமான அறிவிப்பாளர்கள் கொண்டு அறிவிக்கப்பட்ட செய்தியாகும்" எனக் கூறியுள்ளார்கள்.*

*ஆனால் அதிகமான அறிஞர்கள் மேற்கண்ட அறிவிப்பாளர் வரிசை (அபூ ஹுரைராவைத் தொட்டும் அபூ ஸலமாவுடைய அறிவிப்பு) தவறானது எனவும் "ஸுஹ்ரீ – அலீ பின் ஹுஸைன் - நபி (ஸல்)" என்ற நபித்தோழர் கூறப்படாத "முர்ஸல்" வகையைச் சேர்ந்த இந்த அறிவிப்பே சரியானது எனவும் கூறியுள்ளனர்.*

*இந்த இரண்டாவது அறிவிப்பாளர் வரிசை தான் (அலீ பின் ஹுஸைன் - நபி (ஸல்) என்ற முர்ஸலான அறிவிப்பு) வலுவானதென இமாம்களான அஹ்மத், யஹ்யா பின் மஈன், புஹாரி, தாரகுத்னீ போன்றவர்கள் கூறியுள்ளனர்.*

இந்த நபிமொழி நபித்தோழர் பெயர் கூறப்படாத "முர்ஸல்" என்பதே சரியான கருத்தாகும்.[1]

மார்க்க ஒழுக்க விழுமியங்களில் இந்த நபிமொழி பிரதான அடிப்படையாகவுள்ளது.

யாரிடத்தில் இஸ்லாம் அழகாக இருக்கின்றதோ அவர் தமக்குத் தேவையற்ற சொல், செயல்களை விட்டு விட்டு தேவையானதில் மாத்திரம் கவனத்தை செலுத்துவார்கள்.

தேவை என்பது ஒன்றில் அதிக கரிசனை எடுப்பதாகும். அதனையே இந்நபிமொழியில் இடம்பெற்றுள்ள "வுஃனு" எனும் வார்த்தை குறித்து நிற்கின்றது.

ஒரு மனிதனுடைய இஸ்லாம் அழகாகி விட்டதன் அர்த்தம் தடுக்கப்பட்டவை, வெறுக்கப்பட்டவை, சந்தேகத்திற்கிடமானவை, தேவையற்ற விடயத்தில் தலையிடுதல் போன்றவற்றைத் தவிர்ந்து கொள்வதாகும். இவையெல்லாம் இஸ்லாம் பரிபூரணமடைந்து, இஹ்ஸான் எனும் உயர் அந்தஸ்தை அடைந்த முஸ்லிம்களுக்குத் தேவையற்ற விடயங்களாகும்.

தேவையற்ற விடயங்களை விடுதல் மூலம் அதிகமாக நாடப்படுவது நாவை வீணான பேச்சுக்களிலிருந்து பாதுகாப்பதாகும். தனது பேச்சையும், அமலையும் கணக்கிட்டுப் பார்ப்பவர் தேவையற்ற விடயங்களிலிருந்து பேச்சைக் குறைத்துக் கொள்வார் என கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறியுள்ளார்கள். அது உண்மைதான். அதிகமானோர் தமது பேச்சையும், செயற்பாடுகளையும் கணக்கிடுவதில்லை. அதனால் பேணுதலின்றி அளவுகடந்து பேசி விடுகின்றனர்.

மனிதர்கள் தமக்கிடையே பேசிக்கொள்ளும் அதிகமான இரகசியங்களில் எவ்வித நலவுமில்லையென அல்லாஹ் மறுத்துக் கூறுகின்றான். "தர்மம், அல்லது நன்மையானவற்றை, அல்லது மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றை ஏவுகின்றவனைத் தவிர, அவர்களின் இரகசியப் பேச்சுக்களில் அதிகமானதில் எவ்வித நன்மையும் இல்லை" (அந்நிஸா : 114).

உமர் பின் கைஸ் அல்முஅல்லாஈய் (ரஹ்) கூறுகின்றார் : லுக்மான்

1.நூலாசிரியர் இப்னு ரஜப் (ரஹ்) உட்பட மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுப் பிரகாரம் இது முர்ஸலான நபிமொழி என்பதே வலுவானதாகும். அவ் அறிஞர்களுடன் சேர்த்து இமாம்களான திர்மிதி, உகைலி, பைஹகீ போன்றோரும் இக்கருத்தைக் கூறியுள்ளனர்.

*(அலை) அவர்களைச் சுற்றி மக்கள் உட்கார்ந்திருக்க அவ்விடத்தால் ஒரு மனிதர் கடந்து சென்றார். அவர் லுக்மானைக் கண்டதும் : நீர் இன்னாருடைய அடிமை தானே? என வினவ, 'ஆம்' என்றார்கள். நீர் இன்னின்ன மலையடிவாரத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர் தானே? எனக் கேட்க, அதற்கும் 'ஆம்' என்றார்கள். இந்த (நல்ல) நிலமைக்கு எவ்வாறு முன்னேறினீர்? என வினவ, உண்மையும், தேவையற்ற விடயத்தில் தலையிடாமல் அதிக மௌனம் சாதிப்பதும் என்றார்கள்.*

*ஒரு நபித்தோழர் மரணப்படுக்கையில் இருக்கும் போது சிலர் அவரை சந்திக்கச் சென்றதும், அவரது முகம் ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு காரணத்தை வினவினர். இரண்டு விடயங்கள் தான் எனக்கு மிக நம்பிக்கைக்குரிய அமலாக இருந்தது. தேவையற்ற விடயங்களில் பேசமாட்டேன். முஸ்லிம்கள் பற்றி தவறான எண்ணங்களில் எனது உள்ளம் ஈடேற்றமாக இருந்தது. என அந்நபித்தோழர் பதிலளித்தார்.*[1]

*1. நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதும், சமாதானம் ஏற்படுத்துவதும், மக்களை நல்வழிப்படுத்துவதும் மனிதத் தேவைகளில் மிக முக்கியமானதாகும். இவற்றை விடுவதற்கு இந்த நபிமொழியை யாரும் ஆதாரமாகக் காட்ட முடியாது. இந்நபிமொழியில் கூறப்பட்டிருப்பது தேவையற்ற சொல், செயல், பார்வைகளையே. ஆனால் மேற்கண்ட சீர்திருத்த செயற்பாடுகள் தேவையானவையே.* ***(அப்துல் அஸீஸ் அத்தரீபீ).***

## ஹதீஸ் – 13

### ஈமானிய சகோதரத்துவம்

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النبِيِّ ﷺ قَالَ:

"لَا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتى يُحِب لِأَخِيهِ مَا يُحِب لِنَفْسِهِ." رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***தனக்கென விரும்புவதை, தனது சகோதரருக்கும் விரும்பாவதரை உங்களில் எவரும் உண்மையான நம்பிக்கையாளராக மாட்டார்.***

*அறிவிப்பவர் : அபூ ஹம்ஸா அனஸ் இப்னு மாலிக் (ரலி), ஆதாரம் : புஹாரி (13), முஸ்லிம் (45).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி புஹாரி, முஸ்லிம் இரண்டிலும் இடம்பெற்றுள்ளது. இதே நபிமொழி அஹ்மதில் பின்வரும் வாசகத்துடன் இடம்பெற்றுள்ளது: "தனக்கு விரும்பும் நலவுகளை பிறருக்கும் விரும்பாதவரை ஓர் அடியான் ஈமானின் யதார்த்தத்தை அடையமாட்டான்".*

*இந்த அறிவிப்பு புஹாரி, முஸ்லிமில் இடம்பெறும் அறிவிப்பை விளக்குகின்றது. ஈமான் கொள்ளமாட்டார் என்பதன் அர்த்தம் ஈமானில் முழுமையடைய மாட்டார் என்பதேயாகும்.*

*இதன் நோக்கம் ஈமானில் அவசியமான பகுதி தான் விரும்புவதைத் தனது முஃமினான சகோதரருக்கும் விரும்புவதுடன், தான் வெறுப்பதை அவருக்கும் வெறுப்பதாகும். இப்பண்பு ஒருவனிடத்திலிருந்து நீங்கி விட்டால் அவனது ஈமான் குறைந்துவிடும்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (நரக) நெருப்பிலிருந்து ஒதுக்கப்பட்டு, சொர்க்கத்தில் அனுமதிக்கப்பட யார் விரும்புகிறாரோ அவர் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கும் நிலையிலேயே இறப்பு அவரைத் தழுவட்டும்.*

தமக்கு எது கிடைக்க வேண்டும் என்று விரும்புவாரோ அதையே மக்களுக்கும் அவர் விரும்பட்டும்.(1)

நபி (ஸல்) அவர்கள் (என்னிடம்), "அபூதர்! உம்மை நான் பலவீனமானவராகவே காண்கிறேன். எனக்கு நான் விரும்புவதையே உமக்கும் விரும்புகிறேன். இருவருக்குக்கூட நீர் தலைமை ஏற்காதீர். அநாதையின் சொத்துக்கு நீர் பொறுப்பேற்காதீர்" என்று சொன்னார்கள்.(2)

இவர்களிடத்திலிருந்த பலவீனம் காரணமாகவே நபியவர்கள் அவர்களுக்கு இதனைத் தடுத்தார்கள்.

முஹம்மது பின் வாஸிஃ (ரஹ்) அவர்கள் தனது கழுதையொன்றை விற்றுக் கொண்டிருந்தார்கள். இதனை எனக்கு விரும்புகிறீரா? என ஒரு மனிதர் இவர்களிடம் கேட்க, நான் விரும்பாத பொருளை விற்பதில்லை என பதிலளித்தார்கள். தனக்கு விரும்பாததைப் பிறருக்கும் விரும்பமாட்டார் என்பதையே இச்செய்தி அறிவிக்கின்றது.(3)

நாம் வீற்றிருக்கும் அனஸ் (ரலி) அவர்களின் இந்நபிமொழி ஒரு முஃமின் தனது சகோதர முஃமின் மகிழ்வுறுவதைப் பார்த்து மகிழ்வுறுவான். தனக்கு விரும்புவதைத் தான் பிறருக்கும் விரும்புவான் என்பதை அறிவிக்கின்றது. பொறாமை, வஞ்சகம், மோசடி போன்ற தீய குணங்களை விட்டும் தூய்மையான உள்ளங்களாலேயே இவை சாத்தியப்படும். ஏனெனில் பொறாமைக்காரன் பிறர் நலவுகளில் தனக்கு ஈடாவதையோ, தன்னை விட முன்னேறுவதையோ ஒருபோதும் விரும்ப மாட்டான். அவன் எப்போதும் தனக்கு மட்டும் தான் அனைத்து நலவுகளும் கிடைக்க வேண்டுமென அவாக் கொள்வான். இது ஈமானுக்கு முரணானது. ஈமான் எதிர்பார்ப்பதெல்லாம் அல்லாஹ்வுடைய அருள்களை அனைத்து முஃமின்களும் குறையாமல் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பது தான்.

அழகில் தன்னை யாரும் மிகைத்து விடக் கூடாது என ஆசை வைப்பது வெறுக்கப்பட்டதல்ல என்பதை பறைசாற்றும் நபிமொழியொன்றும் இடம்பெற்றுள்ளது. இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

---

1.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1844). இது நீண்ட ஹதீஸின் ஒரு பகுதியாகும்.

2.அறிவிப்பவர் : அபூ தர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1826).

3.இதைவிட ஆச்சரியம் என்னவெனில், ஜரீர் பின் அப்துல்லாஹ் அல்பஜலீ (ரலி) அவர்களுடைய அடிமை அவர்களுக்காக 300 காசுகளுக்கு ஒரு குதிரை வாங்கி வந்தார். அதனைக் ஜரீர் கண்டதும் அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. இதன் பெறுமதி அறியாமல் விற்றவன் ஏமாந்து விட்டானோ என அஞ்சி அவனிடம் சென்றார்கள். இக்குதிரை நாம் கொடுத்த விலையைக் காண பெறுமதி வாய்ந்தது எனக் கூறி 800 காசுகள் வரை அவனுக்கு அதிகப்படுத்திக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். (பத்ஹுல் பாரீ 1/168)

நான் நபி (ஸல்) அவர்களிடம் வரும்போது அங்கு மாலிக் பின் முராரத் அர்ரஹாவீ (ரலி) அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். நான் நெருங்கும் போது அவர் : "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் காண்பது போன்று எனக்கு அழகு வழங்கப்பட்டுள்ளது. இதனை விட செருப்பு நாரளவாயினும் பிறருக்கு கொடுக்கப்படுவதை நான் விரும்பவில்லை. இது பாவமில்லையா? எனக் கேட்டுக் கொண்டிருந்தார். நபியவர்கள் : இல்லை, அது பாவமில்லை. சத்தியத்தை மறைப்பதும் -மற்றுமொரு அறிவிப்பில் : அறியாதிருப்பதும்- மக்களை இழிவாகக் கருதுவதுமே பாவச் செயலாகும் என்றார்கள்.[1] பிறர் தன்னை விட அழகில் மிகைப்பதை வெறுப்பது பாவமோ, பெருமையோ அல்ல என மறுத்துரைத்தார்கள். மனோ இச்சைக்கு மாற்றமாக வரும்போது சத்தியத்தை ஏற்காமல் பெருமையடிப்பதே உண்மையான பாவமும் அகங்காரமும் ஆகுமென நபியவர்கள் விளக்கமளித்தார்கள்.

இதனால் தான் ஸலப் அறிஞர் ஒருவர் : "பணிவு என்பது யாரிடமிருந்து சத்தியம் கிடைத்தாலும் -அவர் சிறியவராயினும் சரி- அதனை ஏற்பதாகும்" எனக் கூறியுள்ளார்.

சிறியவரோ, பெரியவரோ, தான் நேசிப்பவரோ, வெறுப்பவரோ யாரிடமிருந்தாவது சத்தியம் கிடைக்கும் பட்சத்தில் அதனை ஏற்போர் பணிவுள்ளவராவார். அகங்காரத்தின் காரணமாக ஏற்க மறுப்பவரே தற்பெருமையுள்ளவராவார்.

மக்களை இழிவாகக் கருதுவது என்பது தன்னைப் பூரண கண் கொண்டும், பிறரைக் குறைக் கண் கொண்டும் பார்ப்பதாகும்.

சுருக்கமாகக் கூறின் தான் விரும்புவதைப் பிற முஃமின்களுக்கு விரும்புவதும், தான் வெறுப்பதை அவர்களுக்கு வெறுப்பதும் ஒவ்வொரு முஃமின் மீதும் கடமையாகும். தனது சகோதர முஃமினிடம் ஏதாவது மார்க்கக் குறைபாட்டைக் கண்டால் அதனை முறையாக சீர்திருத்த முனைய வேண்டும்.

ஒருவருக்கு அல்லாஹ் பிறரைக் காண விஷேட அருளை வழங்கி, மார்க்க நோக்கத்திற்காக அல்லாஹ்வின் அருளை சொல்லிக்காட்டும் அடிப்படையில், நன்றி செலுத்துவதில் தான் அஜாக்கிரதையாக இருப்பதாக நினைத்துக் கொண்டு (பெருமையின்றி) அந்த அருளை

1.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (3644), ஹாகிம் (7367). மேற்கண்ட சம்பவமின்றி இந்த நபிமொழி ஸஹீஹ் முஸ்லிமில் (91) பின்வரும் வாசகத்தில் இடம்பெற்றுள்ளது : "அல்லாஹ் அழகானவன். அழகை அவன் நேசிக்கின்றான். பெருமை என்பது சத்தியத்தை ஏற்க மறுப்பதும், மக்களை இழிவாகப் பார்ப்பதுமாகும்".

பிறரிடம் சொல்லிக்காட்டுவதில் தவறேதுமில்லை. இப்னு மஸஊத் (ரலி) அவர்கள் "என்னை விட அல்லாஹ்வின் வேதத்தை அறிந்தவர்கள் யாருமில்லை" என்றார்கள். அல்லாஹ் இவருக்கு மாத்திரம் வழங்கியுள்ள தனிச் சிறப்பில் மக்களும் பங்கெடுக்க வேண்டுமென விரும்புவதை மேற்கண்ட முறையில் சொல்லிக்காட்டுவது ஒருபோதும் தடுக்காது. "நான் அல்லாஹ்வின் வசனத்தைக் கடந்து செல்லும் போது அவ்வசனம் பற்றி நான் அறிந்திருப்பதை ஏனைய மக்களும் அறிய வேண்டுமே என ஆசைப்படுவேன்" என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். "என்னுடைய கருத்தாக குறிப்பிட்ட ஒரு செய்தி கூறப்படாமல் மக்கள் அனைவரும் இந்தக் கல்வியைக் கற்க வேண்டுமென ஆசை கொள்கின்றேன்" என இமாம் ஷாபிஈ (ரஹ்) கூறினார்கள்.

உத்பா எனும் அடிமையொருவர் தான் நோன்பு திறக்கும் போது யாராவது பார்த்துவிட்டால் "எனக்குக் கிடைக்கும் நன்மையில் நீங்களும் பங்கெடுக்க உங்களிடமுள்ள தண்ணீர், பேரீத்தம்பழம் ஏதாவதொன்றை எடுத்து வாருங்கள். நான் அதில் நோன்பு திறக்கின்றேன்" என்பார்கள்.

## ஹதீஸ் – 14

### முஸ்லிமின் உயிர் கண்ணியமானது

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُوْدٍ رضي الله عنه، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ:

" لاَ يَحِلُّ دَمُ امْرِئٍ مُسْلِمٍ إِلاَّ بِإِحْدَى ثَلاَثٍ الثَّيِّبُ الزَّانِي وَالنَّفْسُ بِالنَّفْسِ وَالتَّارِكُ لِدِينِهِ الْمُفَارِقُ لِلْجَمَاعَةِ". رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***திருமணமாகியும் விபச்சாரத்தில் ஈடுபடக் கூடிய மனிதன், ஒரு உயிருக்கு உயிர், மார்க்கத்தைத் துறந்து சமுதாயத்தை புறக்கணித்து விடுபவர் ஆகிய மூன்று சூழ்நிலைகளைத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் ஒரு முஸ்லிமின் இரத்தம் சட்டபூர்வமாக சிந்தப்படலாகாது.***

*அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : புஹாரி (6878), முஸ்லிம் (1676).*

**விரிவுரை :**

*இந்நபிமொழி புஹாரி, முஸ்லிமில் பின்வரும் அறிவிப்பாளர் வரிசையினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது : அல்அஃமஷ் - அப்துல்லாஹ் பின் முர்ரத் - மஸ்ரூக் - இப்னு மஸ்ஊத் (ரலி).*

*முஸ்லிமுடைய அறிவிப்பில் "தனது மார்க்கத்தை துறப்பவன்" என்பதற்குப் பதிலாக "இஸ்லாத்தைத் துறப்பவன்" என இடம்பெற்றுள்ளது.*

*இதே கருத்தில் பல நபிமொழிகள் வந்துள்ளன.*

*இதில் கூறப்பட்டுள்ள அனைத்துமே மரண தண்டனைக்குரிய குற்றம் என்பதில் அனைத்து முஸ்லிம்களும் ஏகோபித்துள்ளனர்.*

*திருமணம் முடித்த பின் செய்யும் விபச்சாரத்திற்குரிய தண்டனை மரணிக்கும் வரை கல்லெறிதலாகும் என்பதில் அனைத்து முஸ்லிம்களும் ஒருமித்துள்ளனர். நபி (ஸல்) அவர்கள் மாஇஸ் (ரலி), காமிதிய்யாப் பெண்மணி ஆகியோருக்கு இத்தண்டனை நிறைவேற்றியுள்ளார்கள்.*[1]

---

*1. மாஇஸ் என்பவர் : மாஇஸ் பின் மாலிக் அல்அஸ்லமீ (ரலி)*

அல்குர்ஆனில் சட்டம் அமுலிலிருக்க வசனம் மாத்திரம் மாற்றப்பட்டதில் இதுவும் ஒன்றாகும். “திருமணம் செய்த ஆணும், திருமணம் செய்த பெண்ணும் விபச்சாரத்தில் ஈடுபட்டால் அல்லாஹ்வின் தண்டனையாக அவ்விருவரையும் அவசியம் கல்லெறிந்து கொன்று விடுங்கள். அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவன். ஞானமிக்கவன்.[1]

உயிருக்கு உயிர் என்பதன் அர்த்தம் ஒரு மனிதன் எந்தவொரு உரிமையுமின்றி வேண்டுமென்றே இன்னொரு மனிதனைக் கொன்றால் அதற்குப் பலியாக கொலையாளி கொல்லப்பட வேண்டும் என்பதாகும். இச்சட்டம் அல்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது.

*“உயிருக்கு உயிர், கண்ணுக்குக் கண், மூக்குக்கு மூக்கு, காதுக்குக் காது, பல்லுக்குப் பல் என்றும், காயங்களுக்குச் சமமான அளவு (காயம்) என்றும் பழிவாங்குதல் உண்டு என அ(த்தவ்ரா)தில் அவர்களுக்கு நாம் விதியாக்கியிருந்தோம்”. (அல்மாஇதா : 45).*

*“நம்பிக்கை கொண்டோரே! சுதந்திரமானவனுக்கு (கொலைசெய்த) சுதந்திரமானவன், அடிமைக்காக (கொலைசெய்த) அடிமை, பெண்ணுக்காக (கொலைசெய்த) பெண் (என்ற அடிப்படையில்) கொலை செய்யப்பட்டோர் விடயத்தில் பழிவாங்குவது உங்கள் மீது விதியாக்கப்பட்டுள்ளது”. (அல்பகரா : 178)*

### “மார்க்கத்தைத் துறந்து சமூகத்தைப் புறக்கணித்து விடுபவர்”

இதன் விளக்கம் இஸ்லாத்தைத் துறந்து, மதம் மாறி, முஸ்லிம்களின் கட்டமைப்பை விட்டும் தனித்து செயற்படுபவர் ஆகும். முஸ்லிம்களில் கொல்லப்பட வேண்டியோர் பட்டியலில் முர்தத்தான இவனை (ஏனைய காபிர்களிலிருந்து) விதிவிலக்களிக்கக் காரணம் அவன் ஏற்கனவே இருந்த இஸ்லாமாகும். அதை விட்டுவிட்டாலும் அவன் விடயத்தில் இஸ்லாமிய

---

காமிதிய்யா : ஜுஹைனாக் கோத்திரத்தின் கிளைகளில் ஒன்றான “காமித்” குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண். இரு சம்பவங்களும் வெவ்வேறானது. மாஇஸ் (ரலி)யின் சம்பவம் புஹாரி, முஸ்லிம் இரண்டிலும் இடம்பெற்றுள்ளது. காமிதிய்யாப் பெண்ணின் சம்பவம் முஸ்லிமில் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. முஸ்லிமின் (1695)ம் இலக்கத்தில் இரு சம்பவங்களும் ஒரே நபிமொழியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

1.அறிவிப்பவர் : உபைய்யு பின் கஃப் (ரலி), ஆதாரம் : இப்னு ஹிப்பான் (4428), அதில் பின்வருமாறு உள்ளது : ஸூரா அஹ்ஸாபில் எத்தனை வசனங்கள் உள்ளன? என உபைய் பின் கஃப் (ரலி) அவர்கள் ஸுர் பின் ஹுபைஷ் (ரலி) அவர்களிடம் வினவ, அவர் 73 வசனங்கள் என பதிலளித்தார். “அல்லாஹ்வின் மீது சத்தியமாக இது ஸூரா பகராவிற்கு நிகராக இருந்தது. அதில் நாம் ரஜ்முடைய (கல்லெறிந்து கொள்வது பற்றிய) வசனத்தையும் ஓதினோம் : “திருமணம் செய்த ஆணும் திருமணம் செய்த பெண்ணும் விபச்சாரத்தில் ஈடுபட்டால் அல்லாஹ்வின் தண்டனையாக அவ்விருவரையும் அவசியம் கல்லெறிந்து கொன்று விடுங்கள். அல்லாஹ் யாவற்றையும் மிகைத்தவனும், ஞானமிக்கவனும் ஆவான்” என்று உபைய்யு (ரலி) அவர்கள் கூறினார்கள். இச்செய்தியின் ஒரு பகுதி புஹாரியில் இடம் பெற்றுள்ளது.

சட்டம் அமுல்படுத்தப்படும். இதனால் தான் அவனிடம் பாவமீட்சி பெற்று மீண்டும் இஸ்லாத்தில் இணைய வேண்டப்படுகின்றது. அத்துடன் சிலவேளை இரு ஷஹாதாக்களையும் ஏற்று, இஸ்லாத்தை வாதாடும் நிலையிலேயே மார்க்கத்தைத் துறந்து சமூகத்தைப் புறக்கணிக்கும் நிலைகளும் உருவாகின்றது. உதாரணமாக :

இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றை மறுத்தல், அல்லாஹ் மற்றும் இறைத்தூதருக்கு ஏசுதல், வானவர்கள், நபிமார்களில் சிலரை மறுத்தல், குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஏனைய வேதங்களைத் தெரிந்து கொண்டே மறுத்தல், அல்குர்ஆன் பிரதியை இழிவுபடுத்தி குப்பைகளில் எறிதில் போன்ற மார்க்கத்தை விட்டும் வெளிப்படுத்தும் செயல்களால் இஸ்லாத்தைத் துறக்க நேரிடலாம்.

பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப் பிரகாரம் இதில் ஆண், பெண் என்ற வேறுபாடில்லை.

“மார்க்கத்தைத் துறந்து, சமூகத்தைப் புறக்கணிப்பவர்” எனும் வார்த்தை அவர் பாவமீட்சி பெற்று இஸ்லாத்திற்கு மீண்டால் கொல்லப்படமாட்டார் என்பதை அறிவிக்கின்றது. ஏனெனில் மீண்டவர் முர்தத்தாகவோ, சமூகத்தைப் புறக்கணிப்பவராகவோ இல்லை.

# ஹதீஸ் – 15

## நல்ல வார்த்தை மற்றும் விருந்தாளி, அயலவரின் உரிமைகள்

عن أَبِيْ هُرَيْرَةَ رضي الله عنه، أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ :

"مَنْ كَانَ يُؤْمِنُ بِاللهِ وَاليَومِ الآخِرِ ، فَلْيَقُلْ خَيْراً أَوْ لِيَصْمُتْ، وَمَنْ كَانَ يُؤْمِنُ باللهِ وَاليَومِ الآخِرِ ، فَلْيُكْرِمْ جَارَهُ ، وَمَنْ كَانَ يُؤْمِنُ باللهِ وَاليَومِ الآخِرِ ، فَلْيُكْرِمْ ضَيْفَهُ."رَوَاهُ البُخَارِيُّ وَمُسْلِمٌ

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : **அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் பேசினால் நல்லதைப் பேசட்டும். அல்லது மௌனித்திருக்கட்டும். அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகிறவர் தனது அயல் வீட்டாரை கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும்.**

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6018), முஸ்லிம் (47).*

**விரிவுரை :**

"யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ"[1] அவர் இன்ன, இன்னதைச் செய்யட்டும் போன்ற வார்த்தைப் பிரயோகம் அந்த விடயங்கள் அனைத்தும் ஈமானில் உள்ளது என்பதைக் காட்டுகின்றது.

அமல்களும் ஈமானின் ஒரு பகுதி தான் என்று ஏற்கனவே கூறப்பட்டது. ஈமானின் அமல்கள் சிலவேளை அல்லாஹ்வுடைய கடமைகளுடன் தொடர்புபடுகின்றன. உதாரணமாக : கடமையை நிறைவேற்றுதல், தடை செய்யப்பட்டதை விட்டுவிடுதல். நல்லதைப் பேசுவதும் இல்லாவிடில் மௌனித்திருப்பதும் இவ்வகையைச் சார்ந்ததாகும்.

இன்னும் சிலவேளை அடியார்களின் உரிமைகளுடன் தொடர்புள்ளதாக இருக்கும். உதாரணமாக : விருந்தாளிகளையும், அயல் வீட்டாரையும் கண்ணியப்படுத்துதல், அவர்களுக்கு நோவினை செய்யாதிருத்தல். இம்மூன்று விடயங்களைக் கொண்டும் ஒரு முஃமின் பணிக்கப்படுகின்றான்.

---

1. இதன் அர்த்தம் : பரிபூரணமான முழுமையான ஈமானாகும். **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ)**

## 1. பேசினால் நல்லதைப் பேசுதல் அல்லது மௌனித்தல்

*அஸ்வத் பின் அஸ்ரம் அல்முஹாரிபீ (ரலி) அவர்கள் நபியவர்களிடம் தனக்கு உபதேசிக்குமாறு வேண்டினார்கள். "உனது நாவைக் கட்டுபடுத்த உன்னால் முடியுமா?" என நபியவர்கள் வினவ, "எனது நாவைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் எதையும் கட்டுப்படுத்த என்னால் முடியாது" என பதிலளித்தார்கள். மீண்டும் நபியவர்கள் "உனது கையைக் கட்டுபடுத்த உன்னால் முடியுமா?" என வினவ, "எனது கையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் எதையும் கட்டுப்படுத்த என்னால் முடியாது" என பதிலளித்தார்கள். "அப்படியாயின் உனது நாவால் நல்லதையே பேசு. உனது கையால் நல்லதையே செய்" என நபியவர்கள் உபதேசித்தார்கள்.*[1]

*நாவு சீராக இருப்பது ஈமானில் ஒரு பகுதியென நபிமொழிகளில் வந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் அடியானின் உள்ளம் சீராகும் வரை அவனது ஈமான் சீராகாது. அவனது நாவு சீராகும் வரை அவனது உள்ளம் சீராகாது.*[2]

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மௌனித்தவர் தப்பிவிட்டார்.*[3]

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் அடியார் (பின்விளைவைப் பற்றி யோசிக்காமல்) ஒரு வார்த்தை பேசிவிடுகிறார். அதன் காரணமாக அவர் கிழக்குக்கும் மேற்குக்கும் இடையிலான தொலைவைவிட அதிகமான தூரத்தில் நரகத்தில் விழுகிறார்.*[4]

---

*1.நூல் : தபரானி (817), அஷ்ஷேக் அல்பானீ தனது ஸில்ஸிலா ஸஹீஹாவில் (1506) இந்நபிமொழியை அறிவிப்பாளர் வரிசையும் கூறிவிட்டு : "இது பலமான அறிவிப்பாளர் வரிசை, இதன் அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்கள்" எனக் கூறியுள்ளார்கள்.*

*2.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் : (13048) அதன் இறுதியில் : "ஒரு மனிதன் அவனது அயலவன் இவனது அநியாயங்களை விட்டும் அபயமடையும் வரை சுவனம் நுழைய மாட்டான்" என்று இடம்பெற்றுள்ளது. (நூலை சுருக்கியவர் கூறுகின்றார்:) நான் கூறுகின்றேன் : இந்நபிமொழியை அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீபில் (554, 2765) ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.*

*3.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி), ஆதாரம் : அஹ்மத் (6481), திர்மிதீ (2501). இதன் அறிவிப்பாளர் வரிசையில் அப்துல்லாஹ் பின் லஹீஆ இடம்பெறுகின்றார். இதனால் இமாம் இராகீ அவர்கள் தனது "தஃரீஜு அஹாதீஸில் இஹ்யா"வில் (2526) பின்வருமாறு கூறுகின்றார் : "இதனை இமாம் திர்மிதி பலவீனமான அறிவிப்பாளர் வரிசையுடன் அறிவித்துள்ளார்கள். இச்செய்தி தபரானியில் ஏற்றுக் கொள்ள முடியுமான அறிவிப்பாளர் வரிசையுடன் உள்ளது".*

*4.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் புஹாரி (6477), முஸ்லிம் (2988).*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு மனிதன் பெரிதாகப் பொருட்படுத்தாத ஒரு வார்த்தையைப் பேசுகின்றான். அது அவனை நரகில் எழுபது வருடங்கள் தள்ளி விடுகின்றது.*[1]

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஓர் அடியார் அல்லாஹ்வின் திருப்திக்குரிய ஒரு வார்த்தையை சர்வசாதாரணமாக (அதன் பலனைப் பற்றிப் பெரிதாக யோசிக்காமல்) பேசுகிறார். அதன் காரணமாக அல்லாஹ் அவரின் அந்தஸ்துகளை உயர்த்தி விடுகிறான். ஓர் அடியார் அல்லாஹ்வின் கோபத்துக்குரிய ஒரு வார்த்தையை சர்வசாதாரணமாக (அதன் பின்விளைவைப் பற்றி யோசிக்காமல்) பேசுகிறார். அதன் காரணமாக அவர் நரகத்தில் போய் விழுகிறார்.*[2]

### “பேசினால் நல்லதைப் பேசட்டும். அல்லது மௌனித்திருக்கட்டும்”

*நபியவர்கள் நல்லதைப் பேசுமாறும், முடியாவிட்டால் வாய்மூடி இருக்குமாறும் ஏவியுள்ளார்கள். இதன் மூலம் பேசுவதும் பேசாமலிருப்பதும் சமன் என்ற நிலையில் எந்த வார்த்தையும் இல்லை என்பது தெளிவாகின்றது. ஒன்றோ நல்ல வார்த்தை, அதை மொழியும் படி ஏவப்படும். அல்லது தீயதாக இருக்கும். அதை மொழியாமல் மௌனிக்கும் படி ஏவப்படும். அல்லாஹ் கூறுகின்றான் : “வலப்புறமும் இடப்புறமும் அமர்ந்து, எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதுவதை (நபியே! நீர் எண்ணிப் பார்ப்பீராக!). (எழுதுவதற்கு) தயாரான கண்காணிப்பாளர் அவனிடம் இருந்தேயன்றி எந்த ஒரு வார்த்தையையும் அவன் மொழிவதில்லை”. (காப் : 17,18). ஒரு மனிதனின் வலது புறத்திலிருப்பவர் நன்மைகளையும், இடது புறத்திலிருப்பவர் தீமைகளையும் பதிவார்கள் என்பதில் அனைத்து ஸலப் அறிஞர்களும் ஒருமித்துள்ளனர். இதே செய்தி நபியவர்கள் கூறியதாக அபூ உமாமா (ரலி) அவர்கள் வாயிலாக பலவீனமான அறிவிப்பாளர் வரிசையுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. “வலது புறத்தில் இருப்பவர் நன்மைகளை பதியக்கூடியவர்” என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.*[3]

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (7215), திர்மிதி (2314), இப்னு மாஜா (3970) அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹுத் தர்கீப் வத்தர்ஹீபில் (2875) ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.*

*2. அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6478).*

*3. அறிவிப்பவர் : ஹுதைபா (ரலி), ஆதாரம் : இப்னு அபீ ஷைபா (7454) இச்செய்தி மர்பூஃஆகவும் (நபியின் கூற்று) மவ்கூபாகவும் (நபித்தோழரின் கூற்று) அறிவிக்கப்பட்டுள்ளது. மவ்கூபான அறிவிப்பு ஸஹீஹானது என்பதில் ஐயமில்லை. மரபூஃஆன அறிவிப்பில் அபூ பக்ர் பின் அய்யாஷ், ஆஸிம் பின் அபிந்நஜூத் போன்ற மனன சக்தியில் விமர்சனத்துக்குரியவர்கள் இருப்பதால் இதனை நபியின் கூற்றாக அறிவிப்பதில் ஆட்சேபனை உண்டு. (நூலை சுருக்கியவர்).*

பேசக்கூடிய அனைத்தும் பதியப்படுமா? அல்லது நன்மை, தீமை சம்பந்தப்பட்ட பேச்சு மாத்திரம் பதியப்படுமா? என்பதில் பரவலான இரு கருத்துக்களும் உள்ளன.

இப்னு அப்பாஸ் (ரலி) கூறியதாக அலீ பின் அபீ தல்ஹா (ரஹ்) கூறுகின்றார்: நன்மை, தீமை அனைத்தும் பதியப்படும். எந்தளவுக்கெனில் ''உண்டேன், பருகினேன், சென்றேன், வந்தேன்'' போன்ற வார்த்தைகளும் பதியப்பட்டு பிரதி வியாழக்கிழமை சொல், செயல் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டு நன்மை, தீமை பற்றிய பேச்சு வைக்கப்பட்டு, மீதி எறியப்பட்டு விடும். அதனைத் தான் பின்வரும் வசனம் கூறுகின்றது : ''அல்லாஹ் (அதில்) நாடுவதை அழிக்கவும், நிலைக்கவும் செய்கின்றான். 'உம்முல் கிதாப்' (எனும் தாய் ஏடு) அவனிடமே இருக்கின்றது'' (அர்ரஃத் : 39).

யஹ்யா பின் அபீ கஸீர் (ரஹ்) கூறுகின்றார் : ஒருவர் கழுதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது அது இடறி இவரை விழச் செய்தது. உடனே இவர் ''கழுதை அழியட்டும்'' என்றார். வலது புறத்திலிருக்கும் வானவர் நான் பதிய இது நன்மையில்லையே என்றார். இடது புறத்திலிருப்பவர் நான் பதிய இது தீமையும் இல்லையே என்றார். அல்லாஹ் வலது புறத்தவர் பதியாத அனைத்தையும் பதியுமாறு இடது புறத்தவருக்கு கட்டளையிட்டான். எனவே மேற்கண்ட வார்த்தை இடது புறத்திலிருப்பவர் பதிந்து கொண்டார்.

நன்மை அல்லாத அனைத்து வார்த்தைகளும் -அவற்றுக்குத் தண்டனை இல்லாவிடினும்- தீமையாகும் என்பதே மேற்கண்ட சம்பவத்திலிருந்து தெளிவாகின்றது. சிலவேளை தண்டிக்கப்படாத தீமைகளும் உள்ளன. இன்னும் சிலவேளை பெரும் பாவங்களைத் தவிர்ந்து கொண்டதன் காரணமாக இத்தீமைகள் மன்னிக்கப்படவும் வாய்ப்புள்ளன. என்றாலும் அதனைச்செய்தகாலம்வீணாகிப்போனதால்அவன்நஷ்டமடைகின்றான். அதன் விளைவாக மறுமையில் அவன் கவலையும், கைசேதமும் அடைவான். இதுவும் ஒருவகைத் தண்டனையாகவே உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வை நினைவு கூறாத ஒரு சபையிலிருந்து விடைபெற்றுச் செல்பவர்கள் நாற்றம் வீசும் ஒரு கழுதைப் பிணத்தைச் சுற்றி இருந்து விட்டு பிரிந்து செல்வோரைப் போலன்றி அவர்கள் செல்லவில்லை. அது அவர்களுக்கு கைசேதமாகவே அமையும். இதே நபிமொழியின் திர்மிதி அறிவிப்பில் பின்வருமாறு உள்ளது : அல்லாஹ்வை நினைவு கூர்ந்து தமது நபியின் மீது ஸலவாத் சொல்லாமல் விடைபெறும் எந்த சபையினருக்கும் அது குறையாகவே அன்றி

இருக்கமாட்டாது. (அல்லாஹ்) நாடினால் அதற்காக அவர்களைத் தண்டிப்பான். நாடினால் மன்னிப்பான்.[1]

மறுமையில் மனிதனுக்கு அவனது வாழ்நாளின் ஒவ்வொரு மணி நேரமும் எடுத்துக் காட்டப்படும். அதில் அவன் அல்லாஹ்வை நினைவு கூறாமல் கழித்த ஒவ்வொரு மணி நேரத்தையும் பார்த்து கைசேதப்பட்டுக் கொண்டிருப்பான் என ஸலப் அறிஞர்களில் ஒருவர் கூறியுள்ளார்.

இதிலிருந்து அத்தியவசியத் தேவையின்றி நன்மையல்லாத பேச்சுக்களிலிருந்து தவிர்ந்து மௌனம் சாதிப்பதே மிகச்சிறந்தது என்பதை அறியலாம்.

மேலும் அவசியமற்ற பேச்சுக்களை அதிகரிப்பது உள்ளத்தில் வன்நெஞ்சத்தைத் தோற்றுவிக்கும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வை நினைவு கூர்தலன்றி பேச்சை நீங்கள் அதிகரிக்க வேண்டாம். ஏனெனில் அல்லாஹ்வை நினைவு கூர்வதலன்றி பேச்சை அதிகரிப்பது உள்ளத்தை வன்நெஞ்சமாக்கும். மக்களில் அல்லாஹ்வை விட மிகத் தூரமானவன் வன்நெஞ்சக்காரனாகும்.[2]

அபூ பக்கர் (ரலி) அவர்கள் தனது நாவைப் பிடித்து "இதுதான் என்னை இந்தளவிற்கு இட்டுச் சென்றது" என்பார்கள்.

"யாருடைய பேச்சு அதிகரிக்குமோ அவருக்கு தவறுகளும் அதிகரிக்கும். தவறுகள் அதிகரித்தவருக்குப் பாவங்களும் அதிகரிக்கும். பாவங்கள் அதிகரித்துவருக்குப் பொருத்தமான இடம் நரகம்தான்" என உமர் ரலி அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது சத்தியமாக இப்புவியில் நீண்ட நாட்கள் சிறையிலடைக்கப்பட மிகத் தகுதியானது நாவுதான் என இப்னு மஸ்ஊத் (ரலி) கூறினார்கள்.

ஞானத்தின் தலையாயது மௌனம்தான் என அனைத்து ஞானிகளும் ஒருமித்துள்ளனர் என வஹ்ப் பின் முனப்பிஹ் (ரஹ்) கூறினார்கள்.

இது முடிவுறாத நீண்ட ஒரு பாடமாகும்.

---

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (9843), அபூ தாவூத் (4855), திர்மிதி (3380), மற்றும் அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹுல் ஜாமிஇல் (5607, 5750) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர்.

2.அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : திர்மிதி (3411), இதில் இப்ராஹீம் பின் அப்தில்லாஹ் பின் ஹாதப் என்பவர் இடம்பெறுகிறார். இவரின் காரணமாகவே அஷ்ஷேக் அல்பானீ இந்நபிமொழியைத் தனது ஸில்ஸிலா லஈபாவில் (920) பலவீனப் படுத்தியுள்ளார்கள்.

இதன் நோக்கம் என்னவெனில் நபியவர்கள் நல்லவற்றைப் பேசுமாறும் ஏனையவற்றை விட்டும் மௌனிக்குமாறும் பணித்துள்ளார்கள். பேசுவதும், மௌனிப்பதும் பொதுவாக ஏவப்பட்டதொன்றல்ல. மாறாக நல்லதைப் பேச வேண்டும். தீயதை விட்டும் மௌனிக்க வேண்டும் என்பதே இங்கு நோக்கமாகும். தீய வார்த்தைகள், தேவையற்ற பேச்சுக்களை விட்டும் மௌனிப்பதை முன்னோர்கள் பாராட்டக் கூடியவர்களாக இருந்துள்ளனர். ஏனெனில், அது உள்ளத்திற்கு மிகச் சிரமமானதாகும். அதனால்தான் அதிகமானோர் அதில் சிக்கி விடுகின்றனர். தேவையற்றதை விட்டும் மௌனிப்பதற்காக ஸலப் அறிஞர்கள் கடுமையான பிரயத்தனம் மேற்கொள்வார்கள்.

அஹ்னப் பின் கைஸ் (ரஹ்) அவர்களது சபையில் மக்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். சிலர் மௌனம்தான் சிறந்ததெனக் கூற மற்றும் சிலர் பேச்சு தான் சிறந்ததெனக் கூறினர். அஹ்னப் பின் கைஸ் (ரஹ்) கூறினார்கள்: “பேச்சு தான் சிறந்தது. ஏனெனில் மௌனத்தால் பிறர் பயனடைய மாட்டார்கள். ஆனால் அழகான பேச்சை செவிமடுப்பவர்கள் பயனடைவர்”.

உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களிடம் ஓர் அறிஞர் “மௌனிக்கும் அறிவாளியும், பேசும் அறிவாளியும் ஒன்றுதான்” என்று கூறினார். அதற்கு கலீபா அவர்கள் : “மறுமையில் பேசும் அறிவாளி தான் சிறந்த நிலையில் இருப்பாரென எதிர்பார்க்கின்றேன். ஏனெனில் இவருடைய பேச்சில் மக்களுக்குப் பயனுள்ளது. மௌனம் அவருக்கு மாத்திரம் தான் பயனளிக்கும்” என்று கூற, “அமீருல் முஃமினீன் அவர்களே பேச்சால் ஏற்படும் பித்னாவைப் பற்றி தாங்கள் என்ன கருதுகின்றீர்?” என அவ் அறிஞர் வினவினார். உடனே கலீபா அவர்கள் கடுமையாக அழுது விட்டார்கள்.

மற்றுமொரு தடவை உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஒரு பிரசங்கம் நிகழ்த்தினார்கள். மக்கள் மனம் அதில் இளகிப் போய்விட்டது. உடனே பிரசங்கத்தை நிறுத்தி விட்டார்கள். பிரசங்கத்தை முழுமைப்படுத்துங்கள். அதன் மூலம் அல்லாஹ் மக்களுக்குப் பயனளிப்பான் என்று கேட்கப்பட்ட போது நிச்சயமாக பேச்சு ஒரு பித்னாவாகும். வெறும் வாய்ப்பேச்சை விட செயல்முறையே ஒரு முஃமினுக்கு மிகப் பொருத்தமாகும் என்றார்கள்.

நீண்ட நாட்களுக்கு முன்னர் கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களைக் கனவில் கண்டேன். இதுபற்றி அவர்கள் பேசுவதைக் கேட்டேன். இது விடயத்தில் நானும் அவர்களுடன் கருத்துப் பரிமாறியதாக

எண்ணுகிறேன். நல்லதைப் பேசுவது மௌனிப்பதை விட சிறந்தது என்பதை கலீபா அவர்களின் பேச்சிலிருந்து விளங்கிக் கொண்டேன். பேச்சின் இடையில் கலீபா ஸுலைமான் பின் அப்துல் மலிக் அவர்களைப் பற்றிய பேச்சும் வந்ததாக நினைவிருக்கின்றது. இவ்விடயத்தை அவர்களுக்கும் கலீபா உமர் அவர்கள் கூறினார்கள்.

"மௌனம் அறிவின் நித்திரையாகும். பேச்சு அதன் விழிப்பாகும். ஒன்றில்லாமல் மற்றது முழுமையடையாது" என கலீபா ஸுலைமான் அவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பேச்சு, மௌனம் இரண்டுமே அவசியமாகும்.

எகிப்தின் பிரபல சட்டக்கலை வல்லுனரும் ஞானியுமான உபைதுல்லாஹ் பின் அபீ ஜஃபர் அவர்களின் எவ்வளவு அழகான வார்த்தை ஒன்றுள்ளது! "ஒரு மனிதர் ஒரு சபையில் பேசிக் கொண்டிருக்கும் போது அது அவருக்கு மகிழ்ச்சியளித்தால் உடனே பேச்சை நிறுத்திக் கொள்ளட்டும். அச்சபையில் மௌனமாக இருந்து, அது அவருக்கு மகிழ்ச்சியளித்தால் அவர் பேசட்டும்" என்றார்கள்.

இது அழகான ஒரு கருத்தாகும். அவ்வாறு இருப்பவருடைய பேச்சும் மௌனமும் அவரது மனோ இச்சைக்கும், அகமகிழ்விற்கும் மாற்றமாகவே செயற்படுகின்றன. இவ்வாறானவர்களுக்கே அல்லாஹ்வுடைய அனுகூலமும் கிடைத்து, அவரது பேச்சு, மௌனம் இரண்டிலும் அவனது நெறிப்படுத்தலும் கிடைக்கின்றது. ஏனெனில் அவரது பேச்சு, மௌனம் இரண்டுமே அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றது.

### 2. அயலவர்களை கண்ணியப்படுத்துதல் :

அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். இன்னும் பெற்றோர்கள், நெருங்கிய உறவினர்கள், அனாதைகள், வறியவர்கள், உறவினர்களான அயலவர்கள், அந்நிய அயலவர்கள், அருகிலுள்ள நண்பர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் அடிமைகள் ஆகியோர்களுடன் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பெருமையடித்து, கர்வம் கொள்வோரை நேசிக்கமாட்டான்" (அந்நிஸா : 36).

இவ்வசனத்திலுள்ள அயலவர் பற்றி அல்குர்ஆன் விரிவுரையாளர்களுக்கு இடையில் பல கருத்துக்கள் உள்ளன.

1. உறவினர்களான அயலவர்களும் அந்நிய அயலவர்களும்.

2. சிலர் மனைவியை உறவினர்களான அயலவர்களிலும் வேறு சிலர் அந்நிய அயலவர்களிலும் சேர்த்துள்ளனர்.

**3.** பயணத் தோழரை அந்நிய உறவினர்களில் சிலர் சேர்த்துள்ளனர்.

**4.** வேறு சிலர் உறவினர்களான அயலவர் என்பது முஸ்லிம் அயலவரும், அந்நிய அயலவர் என்பது முஸ்லிமல்லாத அயலவர் என்றும் கூறியுள்ளனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அயலவர்கள் மூன்று வகையினராகும். ஓர் உரிமையுள்ள அயலவர் -இவர்தான் குறைந்தபட்ச உரிமையுள்ள அயலவராவார்- இரு உரிமைகளுள்ள அயலவர். மூன்று உரிமைகளுள்ள அயலவர். ஓர் உரிமையுள்ள அயலவர் முஸ்லிமல்லாத அயலவர். அவருக்கு உறவினர் என்ற உரிமையில்லை. அயலவர் என்ற உரிமை மட்டுமே உள்ளது. இரு உரிமைகள் உள்ளவர் முஸ்லிமான அயலவராவார். அவருக்கு இஸ்லாம், அயலவர் என்ற இரு உரிமைகள் உண்டு. மூன்று உரிமைகளுள்ளவர் உறவுக்கார முஸ்லிம் அயலவராவார். அவருக்கு இஸ்லாம், குடும்ப உறவு, அயலவர் என மூன்று உரிமைகள் உண்டு.[1]

இந்தச் செய்தி அறிவிப்பாளர் தொடர்புள்ள, தொடர்பறுந்த பல முறைகளில் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் விமர்சனத்திற்கு உட்பட்டவையே என்பதும் குறிப்பிடத்தக்கது.

**5.** உறவுக்காரர் என்பது அருகிலுள்ள அயலவரும் அந்நிய அயலவர் என்பது சற்று தொலைவிலுள்ள அயலவர் என்ற கருத்தும் உண்டு.

ஆஇஷா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் எனக்கு இரண்டு அயலவர்கள் உள்ளனர். யாருக்கு அன்பளிப்புக் கொடுக்கலாம்? என வினவினார்கள். "அவர்களில் உமது வாயிலுக்கு நெருக்கமாக இருப்பவருக்குக் கொடுக்கவும்" என்றார்கள்.[2]

அயலவர்களின் எண்ணிக்கையில் 40 பேர், சுற்று வட்டத்திலுள்ள 40 பேர் என ஸலப் அறிஞர்களிடம் இரு கருத்துக்கள் உள்ளன. நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் தனது அயலவரை முறைப்பட்ட போது "40 வீடுகள் அயலவர்களாகும்" என அறிவிக்கும் படி தோழர்களில் ஒருவரிடம் பணித்ததாக இமாம் ஸுஹ்ரீ (ரஹ்) அறிவிக்கின்றார்கள். அதற்கு விளக்கமளிக்கும் போது நாலா புறமும் 40 வீடுகள் என இமாம் ஸுஹ்ரி கூறினார்கள்.

---

1. அறிவிப்பவர் : ஹுதைபா (ரலி), ஆதாரம் : பஸ்ஸார் (1896). அஷ்ஷேக் அல்பானீ தனது ழஈபுல் ஜாமிஇல் (2674) இதனை பலவீனமெனக் கூறியுள்ளார்கள். நூலாசிரியரின் வார்த்தையும் அதனையே சுட்டிக் காட்டுகின்றது.

2. நூல் : புஹாரி (6020).

அருகிலுள்ள நண்பர் என்பதற்கு சிலர் மனைவி என்றும், இப்னு அப்பாஸ் (ரலி) மற்றும் சிலர் பயணத் தோழர் என்றும் விளக்கமளித்துள்ளனர். அதனால் ஊரிலுள்ள தோழர்களை இவர்கள் புறக்கணித்து விட்டார்கள் என்பதல்ல. பயணத் தோழருக்கே உரிமைகள் உள்ளனவென்றால் ஊரிலுள்ள நிரந்தர தோழர்களுக்கு எம்மாத்திரம்!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (எங்கே) அயல் வீட்டாரை எனக்கு வாரிஸாக்கி விடுவாரோ என்று கூட நான் எண்ணும் அளவிற்கு அயல் வீட்டார் குறித்து என்னிடம் (வானவர்) ஜிப்ரீல் அறிவுறுத்திக் கொண்டேயிருந்தார்.[(1)]

தேவையின் போது உதவுவதும் இவ்வசனத்தில் ஏவப்பட்டுள்ள உபகாரத்திலுள்ளதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அயலவர் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிரம்ப உண்ணுபவன் பரிபூரண முஃமினல்ல".[(2)]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அபூ தர்ரே! நீர் கறிக்குழம்பு சமைத்தால் அதில் நீரை அதிகப்படுத்தி அயலவர்களையும் கவனித்துக் கொள்வீராக![(3)]

### 3. விருந்தினர்களை கண்ணியப் படுத்துதல் :

அதாவது முறையாக அவர்களை உபசரிப்பதாகும்.

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும். விருந்தினருக்கு அளிக்கும் கொடை என்பது, ஒரு பகல் ஓர் இரவு (உபசரிப்பது) ஆகும். விருந்துபசாரம் மூன்று தினங்களாகும். அதற்கு மேலுள்ள (உபசரிப்பான)து தர்மமாக அமையும் (உபசரிக்கும்) அவரைச் சிரமப்படுத்தும் அளவுக்கு அவரிடம் தங்குவது விருந்தாளிக்கு அனுமதிக்கப்பட்டதன்று.[(4)]

---

1. அறிவிப்பவர்கள் : ஆஇஷா (ரலி), இப்னு உமர் (ரலி) ஆகியோர், ஆதாரம் : புஹாரி (6014, 6015), முஸ்லிம் (2624, 2625).

2.அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : ஹாகிம் (2166), அவர்களும் அஷ்ஷேக் அல்பானியும் இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர். (ஸஹீஹுல் ஜாமிஃ (5382).

3.அறிவிப்பவர் : அபூதர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2625).

4.அறிவிப்பவர் : அபூ ஷுரைஹ் (ரலி), ஆதாரம் : புஹாரி (6135), முஸ்லிம் (48). புஹாரியின் அறிவிப்பில் இறுதியில் : "அவரை சங்கடத்திற்குள்ளாக்கும் வரை அங்கேயே தரித்து நிற்பது ஆகுமகாது" என இடம்பெற்றுள்ளது.

நபி (ஸல்) அவர்கள், “விருந்துபசாரம் மூன்று தினங்களாகும். ஒரு பகல் ஓர் இரவு (விருந்துபசாரம்) அவருடைய கொடையாகும். ஒரு முஸ்லிமான மனிதர், தம் சகோதரரிடம் அவரைப் பாவத்தில் தள்ளும் அளவுக்குத் தங்கியிருப்பதற்கு அனுமதி இல்லை" என்று கூறினார்கள். மக்கள், “அவரைப் பாவத்தில் தள்ளுதல் எப்படி, அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், “அவ(ர் தம் சகோதர)ரிடம் தங்கி இருப்பார். ஆனால், விருந்துபசாரம் செய்யுமளவுக்கு அவரிடம் எதுவுமே இருக்காது" என்று கூறினார்கள்.(1)

மேற்கண்ட நபி மொழிகளில் விருந்தாளிக்கு செய்ய வேண்டிய கடமை ஒரு நாள் என்றும் பொதுவாக விருந்தோம்பல் மூன்று நாட்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. கடமையான விருந்தோம்பலுக்கும் பொதுவான விருந்தோம்பலுக்கும் இடையில் நபியவர்கள் பிரித்துக் காட்டியுள்ளார்கள். கடமையான பகுதியை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இந்த வலியுறுத்தல் வேறு சில நபிமொழிகளிலும் வந்துள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : விருந்தாளியை ஓர் இரவு உபசரிப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். வீட்டு முற்றத்தில் ஒருவர் காலையில் விருந்தாளியாக வந்தால் இவருக்கு (வீட்டு உரிமையாளராகிய) அவர் கடனாளியாகி விட்டார். விரும்பினால் கடனை நிறைவேற்றட்டும். விரும்பினால் நிறைவேற்றாமலிருக்கட்டும்.(2)

நாங்கள் 'இறைத்தூதர் அவர்களே! தாங்கள் எங்களை ஒரு சமூகத்தாரிடம் அனுப்பி வைக்கிறீர்கள். நாங்களும் (அங்கு) சென்று அவர்களிடம் தங்குகிறோம். ஆனால், அவர்கள் எங்களை உபசரிக்க மறுக்கின்றனர்கள். அவ்வாறெனில், அது குறித்து தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?” என்று கேட்டோம். அதற்கு நபி (ஸல்) அவர்கள் எங்களிடம், 'நீங்கள் ஒரு சமூகத்தாரிடம் செல்ல, அவர்கள் விருந்தினர்களுக்கு வேண்டிய வசதிகளை உங்களுக்குச் செய்து தர ஏற்பாடு செய்தால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்றால் அவர்களிடமிருந்து விருந்தினர்களான உங்களுக்குத் தேவையான விருந்தினர் உரிமையை (நீங்களே) எடுத்துக் கொள்ளுங்கள்” என்று பதிலளித்தார்கள்.(3)

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) கூறுகின்றார் : விருந்தோம்பல் செய்யாதவர் முஹம்மத் (ஸல்) அவர்களையோ, இப்ராஹீம் (அலை) அவர்களையோ சார்ந்தவரல்லர்.

---

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (48).

2. அறிவிப்பவர் : மிக்தாம் பின் மஃதீகரிப் (ரலி), ஆதாரம் அபூ தாவூத் (3750), இப்னு மாஜா (3677), அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹு தர்கீபி வத்தர்ஹீபில் (2592) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

3. அறிவிப்பவர் : உக்பா பின் ஆமிர் (ரலி), ஆதாரம் : புஹாரி (6137), முஸ்லிம் (1727).

மேற்கண்ட ஆதாரங்கள் ஒரு நாளைக்கு விருந்தளிப்பது அவசியமென்பதை அறிவிக்கின்றது. இதுவே இமாம்களான லைஸ் பின் ஸஃத் (ரஹ்), அஹ்மத் (ரஹ்) ஆகியோரின் கருத்தாகும். விருந்தளிக்க மறுத்தால் அதனைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். ஏனெனில் இது விருந்தாளிக்கு செய்ய வேண்டிய கடமையாகும். அவ்வாறு தர மறுக்கும் பட்சத்தில் விருந்தாளிக்கே அதனை எடுக்க முடியுமா? அல்லது நீதிபதியிடம் முறைப்பட்டு, அதன் மூலம் பெற வேண்டுமா? என்பதில் இமாம் அஹ்மதிடமிருந்து இரு அறிவிப்புக்கள் உள்ளன.

இரண்டாம், மூன்றாம் நாட்கள் விருந்தோம்பலின் பரிபூரணமாகும். முதல் நாள் மாத்திரமே கடமையென்பது இமாம் அஹ்மதின் கருத்தாகும். மேலும் அவர்கள் : “நபியவர்கள் கடமையான விருந்தோம்பலுக்கும் பொதுவான விருந்தோம்பலுக்கும் இடையில் வேறுபிரித்துக் காட்டியுள்ளார்கள். கடமையான பகுதி மிகவும் வலியுறுத்தப்பட்டதாகும்” என்றார்கள்.

முதல் நாளில் தானும், தன் குடும்பத்தினரும் உண்ணும் மிகச் சிறந்த உணவை விருந்தாளிக்கும் கொடுத்து உபசரிப்பதில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும். ஏனைய இரு நாட்களில் வழமையான உணவுகளைக் கொடுக்கலாம் என இமாம் ஹுமைத் பின் ஸன்ஜவைஹி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

எனினும் இக்கருத்தில் ஆட்சேபனையுள்ளது. விருந்தாளிக்காக எம்மிடமில்லாததைத் தேடி எம்மையே வருத்திக் கொள்வதைத் தடுத்தார்களென ஸல்மான் அல்பாரிஸீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.(1) தன்னிடமில்லாததைத் தேடி விருந்தளிப்பது தடை செய்யப்பட்டிருப்பதானது தன்னிடமுள்ளதை வைத்தே விருந்தாளியை உபசரிப்பது கடமை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ஏதும் இல்லாவிடில் கடமை நீங்கிவிடும்.

---

1. நூல் : அஹ்மத் (23733), இதன் அறிவிப்பாளர் வரிசை பலவீனமானது. இது தொடர்பாக ஸல்மான் (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட பல செய்திகளை இமாம் ஸுயூதீ (ரஹ்) தனது “அத்துர்ருல் மன்ஸூர்” எனும் நூலில் 38ம் அத்தியாயத்தின் இறுதியில் கூறியுள்ளார்கள்.

# ஹதீஸ் –16

## கோபப்படாதே! சுவனம் உண்டு

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَجُلًا قَالَ لِلنبِيِّ ﷺ : أَوْصِنِي.

قَالَ: "لَا تَغْضَبْ"، فَرَدَّدَ مِرَارًا، قَالَ: "لَا تَغْضَبْ." رَوَاهُ البُخَارِيُّ.

*நபி (ஸல்) அவர்களிடம் 'எனக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்' என ஒரு மனிதர் கூறினார்.* ***நபியவர்கள், 'நீர் கோபப்படாதீர்" என பதிலளித்தார்கள். அம்மனிதர் மீண்டும், மீண்டும் கேட்டார். நபி (ஸல்) அவர்கள் 'நீர் கோபப்படாதீர்" என்றே கூறினார்கள்.***

*அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6116).*

**விரிவுரை :**

*இந்த மனிதர், நற்காரியங்கள் அதிகமாயிருந்து அவற்றை மனனமிட முடியாதென்ற அச்சம் காரணமாக, அவை அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஓர் உபதேசத்தைத் தனக்கு வழங்குமாறு வேண்டினார். கோபப்பட வேண்டாமென நபியவர்கள் அவருக்கு உபதேசித்தார்கள். அதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்க, நபியவர்களும் அதே பதிலையே வழங்கினார்கள். கோபம்தான் அனைத்துக் கெடுதிகளினதும் உறைவிடம், அதனைத் தவிர்ப்பதில் தான் அனைத்து நலவுகளும் உள்ளன என்பதையே இது அறிவிக்கின்றது.*

*இக்கேள்வியை நபியிடத்தில் கேட்டவர் அபுத்தர்தாஃ (ரலி) அவர்களாக இருக்கலாம். அவர்கள் கூறுகின்றார்கள் : அல்லாஹ்வின் தூதரே! சுவனத்தில் நுழைவிக்கும் ஓர் அமலை எனக்குக் கூறுங்கள் என நான் வினவ, "கோபப்படாதே உனக்கு சுவனமுண்டு" என நபியவர்கள் பதிலளித்தார்கள்.*[1]

*ஜாரியா பின் குதாமா (ரலி) அவர்கள்தான் நபியிடத்தில் இவ்வாறு கேட்டதாக முஸ்னத் அஹ்மதில் ஒரு செய்தி பதிவாகியுள்ளது. இதிலிருந்து*

*1.நூல் : அல் முஃஜமுல் அவ்ஸத் (2374) .*

கேள்வி கேட்டவர் ஜாரியா (ரலி) அவர்கள்தான் என்ற கருத்தும் இங்கு மிகைக்கின்றது. ஜாரியா (ரலி) அவர்கள் நபியிடத்தில் கேட்டதாகத்தான் இதன் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் ஹிஷாம் பின் உர்வா கூறியதாக இமாம் யஹ்யா அல்கத்தான் வாயிலாக இமாம் அஹ்மத் கூறியுள்ளார்கள்.

யஹ்யா மேலும் கூறுகின்றார் : இந்த ஜாரியா என்பவர் நபியவர்களின் காலத்தை அடையாதவர் என்றே அறிஞர்கள் கூறுகின்றனர்”. இவர் ஸஹாபியல்ல என்ற கருத்தையே இமாம் இஜ்லீ போன்றோரும் கூறியுள்ளனர்.

தன்னிடம் உபதேசிக்குமாறு வேண்டியவரிடம் “நீர் கோபப்படாதீர்” என நபியவர்களுடைய கூற்றை இரு விதங்களில் நோக்கலாம் :

**1.** நற்குணங்களைத் தோற்றுவிக்கும் காரணிகளை ஏவுதல். ஏனெனில் இந்நற்குணங்களை மனிதன் தன்னகத்தே கொண்டு, அவனிடம் வழமை போன்று மாறிவிட்டால் கோபம் ஏற்படும் போது அதனை தடுக்கும் உந்துசக்தியாக இந்நற்குணங்கள் அமையும்.

**2.** கோபம் ஏற்பட்டால் அதன் படி நீ செயல்படாதே என்பது மற்றுமொரு விளக்கமாகும். மாறாக கோபத்தின் படி செயற்படுவதைத் தடுக்க நீ முயற்சி செய். கோபத்தைத் தூண்டும் செயல்களை ஒரு மனிதன் செய்யாமலிருக்க முழு முயற்சி செய்தால் அதன் தீங்குகள் அவனை விட்டும் விலகிச் சென்று விடுகின்றது. சிலவேளை கோபம் கூட வேகமாகத் தனிந்து அமைதியாகி விடுவான். அப்போது கோபமே ஏற்படாதவனைப் போன்றே இருப்பான்.

அதிக கோபம் கொள்பவர்களுக்கு அதனைத் தடுக்கவும், அவர்களை அமைதிப்படுத்துவதற்குமான காரணிகளை மேற்கொள்ளுமாறு நபியவர்கள் ஏவுவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அருகில் இரண்டு பேர் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டார்கள். அப்போது நாங்கள் நபி (ஸல்) அவர்கள் அருகில் அமர்ந்து கொண்டிருந்தோம். அவர்களில் ஒருவரின் முகம் சிவந்து விட்டிருக்கக் கோபத்துடன் தம் தோழரைத் திட்டிக் கொண்டிருந்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'எனக்கு ஒரு (பிரார்த்தனை) வார்த்தை தெரியும். அதை இவர் சொல்வராயின் இவருக்கு ஏற்பட்டுள்ள கோபம் போய்விடும். 'அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்” (சபிக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறேன்) என்பதே அச்சொல்லாகும்” என்று கூறினார்கள். எனவே, மக்கள்

அம்மனிதரிடம், நபி (ஸல்) அவர்கள் சொல்வதை நீர் செவியேற்கவில்லையா? என்று கூறினார். அந்த மனிதர், 'நான் பைத்தியக் காரனல்ல'' என்றார்.[1]

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நின்ற நிலையில் உங்களில் ஒருவருக்குக் கோபம் ஏற்பட்டால் அவர் உட்கார்ந்து கொள்ளட்டும். அவ்வாறும் கோபம் தனியாவிட்டால் ஒரு பக்கம் சாய்ந்து கொள்ளட்டும்.[2]

நின்று கொண்டிருப்பவர் பழிவாங்கத் தயாராக இருப்பவர். உட்கார்ந்திருப்பவர் அதில் சற்று தூரமானவர். சாய்ந்திருப்பவர் அதைவிட தூரத்திலிருப்பவர். எனவே பழிவாங்கும் சந்தர்ப்பத்தை விட்டும் தூரமாகுமாறு நபியவர்கள் ஏவியுள்ளதாகவும் மேற்கண்ட நபிமொழிக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

“கோபம் தனிந்து பொருந்திக் கொள்ளும் போது கவலைப்பட்டதே தவிர நான் அதிகம் கோபம் கொண்டதுமில்லை. கோபத்தினால் பேசியதுமில்லை'' என்ற அறிஞர் முவர்ரிக் அல்இஜ்லீயின் கூற்று எவ்வளவு அழகானது!

ஒருநாள் கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் கோபித்தார்கள். அப்போது அவருடைய மகன் அப்துல் மலிக் (ரஹ்) அவர்கள் தனது தந்தையைப் பார்த்து : “அமீருல் முஃமினீனே! அல்லாஹ் உங்களுக்கு இவ்வளவு அருட்கொடைகளையும் தந்து உங்களை சிறப்பித்துமா நீங்கள் இப்படிக் கோபப்படுகிறீர்?'' என வினவினார்கள். அதற்குத் தந்தை : அப்துல் மலிக்கே! நீர் கோபப்படுவதில்லையா? என வினவினார். கோபம் தோன்றாதபடி நான் மீண்டும் மீண்டும் அதனைக் கட்டுப்படுத்தாவிட்டால் உள்ளமும் இடம் கொடுத்திருக்கமாட்டாது எனக் கூறினார்கள்.

இவர்கள்தான் கோபத்தின் போது தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்கள். உர்வா பின் முஹம்மத் அஸ்ஸஃதீ (ரஹ்) ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது அவர் இவரை சினமூட்டி விட்டார். உடனே

---

1.அறிவிப்பவர் : ஸுலைமான் பின் ஸுரத் (ரலி), ஆதாரம் : புகாரி (6115), முஸ்லிம் (261).
“நான் பைத்தியகாரனல்ல'' எனும் அம்மனிதனின் வார்த்தை பற்றி இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) பின்வருமாறு கூறுகின்றார் : இவர் ஒன்றோ காபிராக அல்லது நயவஞ்சகராக இருப்பதுதான் மிகப் பொருத்தமாகும். அல்லது நிதானமிழக்கும் அளவு கோபம் மிகைத்திருக்கலாம். அதனால் தான் தனது உச்சக்கட்ட கோபத்தை தனிக்கும் வழியைக் காண்பித்த நபியவர்களை இவ்வளவு தீய பதிலால் கடிந்து கொண்டுள்ளார். இவர் நாகரீகம் அறியாத கிராமவாசி எனவும் ஒரு கருத்துள்ளது. பைத்தியம் பிடித்தவர்கள் மாத்திரம் தான் ஷைத்தானை விட்டும் பாதுகாப்புத் தேடுவதாக அவர் எண்ணியிருக்கலாம். (பத்ஹுல் பாரீ 10/ 482)

2.அறிவிப்பவர் : அபூ தர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (21348), அபூ தாவூத் (4782), அஷ்ஷைக் அல்பானீ இதனை பலவீனமானது (ழஈபுத் தர்கீப் வத்தர்ஹீப் 1645) எனக் கூறியுள்ளார்கள்.

எழுந்து சென்று வுழூச் செய்து வந்தார்கள். பின், நபியவர்கள் கூறியதாக எனது பாட்டனார் வாயிலாக எனது தந்தை கூறினார் : கோபம் ஷைத்தானிடமிருந்து வருகின்றது. ஷைத்தான் நெருப்பிலிருந்து படைக்கப்பட்டுள்ளான். நெருப்பை நீர்தான் அனைக்கும். உங்களில் ஒருவர் கோபித்தால் வுழூச் செய்து கொள்ளட்டும்.[1]

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மல்யுத்தம் புரிபவனல்ல உண்மையான வீரன். கோபத்தின் போது தன்னைக் கட்டுப்படுத்துபவனே உண்மையான வீரனாவான்.[2]

மேலும் கூறினார்கள் : கோபத்தின் படி செயற்பட முடியுமாக இருந்தும் அதனைக் கட்டுப்படுத்துபவனை மறுமையில் அல்லாஹ் ஒட்டுமொத்தப் படைப்பினங்களுக்கு மத்தியில் அழைத்து ஹூருல்ஈன் கன்னியர்களில் விருப்பமானவர்களைத் தெரிவு செய்யும்படி பணிப்பான்.[3]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் அடியான் விழுங்கும் கோபத்தை விட அல்லாஹ்வுக்கு விருப்பமான மிடர் எதுவுமில்லை. அல்லாஹ்விற்காக கோபத்தை மெல்லும் அடியானுடைய உள்ளத்தை அவன் ஈமானால் நிரப்பி விடுகின்றான்.[4]

ஒன்று நடக்கும் என்று அஞ்சும் போது அதை தடுப்பதற்காகவோ, அல்லது நடந்த பின் அதனைச் செய்தவனுக்கு எதிராக பழிவாங்கவோ உந்தப்படும் போது ஏற்படும் இரத்தக் கொதிப்பே கோபமாகும்.

---

*1.அறிவிப்பவர் : அதிய்யா அஸ்ஸஃதீ (ரலி), ஆதாரம் : அஹ்மத் (1798), அபூ தாவூத் (4784), அஷ்ஷைக் அல்பானீ இதனை பலவீனமானது எனக் கூறியுள்ளார். (ழஈபுத் தரகீப் வத்தர்ஹீப் (1647), ஸில்ஸிலா ழஈபா (582).)*

*2.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6114), முஸ்லிம் (2609), நபியவர்கள் மல்யுத்தம் புரிபவருக்கு இந்நபிமொழியில் “الصُّرَعَة” எனும் சொல்லைப் பயன்படுத்தி உள்ளார்கள். அடுத்தவர்களைத் தன் பலத்தால் வீழ்த்துவோரையே இச்சொல் குறித்து நிற்கின்றது. தனது கோபத்தைக் கட்டுப்படுத்தி, அதன் பிரதிபலிப்புக்கள் வெளியே தோன்றாமல் கவனித்துக் கொள்பவனே உண்மையான வீரனென நபியவர்கள் கூறியுள்ளார்கள். (அந்நிஹாயா பீ கரீபில் ஹதீஸ் 3/25).*

*3.அறிவிப்பவர் : முஆத் பின் அனஸ் அல்ஜுஹனீ (ரலி), ஆதாரம் : அஹ்மத் (15637), அபூ தாவூத் (4777), திர்மிதி (2021), -அவர்கள் இதனை ஹஸன் கரீப் எனக் கூறியுள்ளார்கள்-, இப்னு மாஜா (4186) .*

*4.அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (3015), இமாம் இப்னு கஸீர் தனது தப்ஸீரில் (3:134) வசனத்தில் இதனைக் கூறிவிட்டு இது விமர்சனத்திற்குரியவர்களற்ற ஹஸன் தரத்திலுள்ள செய்தியாகும் எனக் கூறியுள்ளார்கள்.*
*இதே கருத்தில் இப்னு உமர் (ரலி) அவர்கள் வாயிலாக பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : “அல்லாஹ்வுக்காக ஓர் அடியான் மெல்லும் கோபத்தை விட பாரிய கூலியுள்ள எந்த மிடரும் இல்லை”. (நூல் : இப்னு மாஜா 4189). இமாம் ஹைஸமி தனது “ஸவாஇத்”ல் இதன் அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹ் என்றும், அஷ்ஷைக் அல்பானீ : பல அறிவிப்பாளர் வரிசை மூலம் இது ஸஹீஹாகின்றது எனவும் கூறியுள்ளனர். (ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப் 2752) .*

தனது அல்லது பிறரது மார்க்க விடயத்தில் ஏற்படும் நோவினைகளைத் தடுக்கவும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தோரைப் பழிவாங்கவுமே ஒரு முஃமினுடைய கோபம் இருக்க வேண்டும்.

இதுதான் நபி (ஸல்) அவர்களுடைய நிலையாக இருந்தது. அன்னார் தனக்காக ஒரு போதும் பழிதீர்க்க மாட்டார்கள். ஆனால் மார்க்க வரம்புகள் மீறப்பட்டால் அன்னாரது கோபத்திற்கு முன் எதுவும் நிலைக்காது.

அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்யும் போதே தவிர வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நபியவர்கள் தனது கையால் எந்தவொரு பணியாளருக்கோ, பெண்ணுக்கோ அடித்ததில்லை. இதோ அனஸ் (ரலி) அவர்கள் நபியவர்களுக்குப் பத்து வருடங்களாக பணிவிடை செய்து வந்தார்கள். எச்சந்தர்ப்பத்திலும் நபியவர்கள் இவர்களைப் பார்த்து, செய்த ஒன்றிற்கு ஏன் செய்தாய்? என்றோ, செய்யாத ஒன்றிற்க்கு அதை செய்திருக்கலாமே? என்றோ கூட கேட்டதில்லை.[1]

மேலும் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : நான் நபியவர்களுக்கு 10 வருடங்கள் பணிவிடை செய்துள்ளேன். அல்லாஹ்விடமிருந்து வரும் அனைத்தையும் அன்னார் பொருந்திக் கொள்வதனால் அவர்கள் (நான் செய்யும் காரியங்களில்) எதில் உடன்பட்டார்கள், எதில் முரண்பட்டார்கள் என்பதை அறவே நான் அறியமாட்டேன்.[2]

நபியவர்களது குணங்கள் பற்றி அன்னை ஆஇஷா (ரலி) அவர்களிடம் வினவப்பட்ட போது "அன்னாருடைய குணம் அல்குர்ஆனாகவே அமைந்திருந்தது" என பதிலளித்தார்கள்.[3] அதாவது அதன் ஒழுக்கங்களைக் கடைபிடித்து, அதன் குணங்களைத் தானும் எடுத்துக் கொண்டார்கள். குர்ஆன் ஆதரிப்பதில் அன்னாரது பொருத்தமும் இருக்கும். குர்ஆன் தூற்றுவதில் அன்னாரது கோபமும் இருக்கும்.

நபி (ஸல்) அவர்கள் அதிக வெட்க சுபாவம் உள்ளவர்கள் என்பதால் தான் வெறுக்கக்கூடியவற்றைக் கொண்டு யாரையும் முன்னோக்க மாட்டார்கள். இவ்விடயம் அன்னாருக்கு விருப்பமில்லாதது என்பது அன்னாரது முகத்திலேயே தெரிந்துவிடும். நபி (ஸல்) அவர்கள் அறையில் முடங்கியிருக்கும் குமரிப் பெண்ணை விட அதிக வெட்கமுள்ளவராக

1. நூல் : புஹாரி (6038), முஸ்லிம் (2309).

2. இமாம் தபரானியின் முஃஜமுல் அவ்ஸத் (9148). இதன் அறிவிப்பாளர்களில் நான் அறியாதவர்களும் உள்ளனர் என இமாம் ஹைஸமி கூறியுள்ளார். (மஜ்மஉஸ் ஸவாஇத் 9/16).

3. நூல் : முஸ்லிம் (746).

இருந்தார்கள். அன்னார் வெறுக்கத்தக்க ஒரு செயலைக் கண்டால் அதனை அன்னாரது முகத்திலேயே அறிந்து கொள்வோம் என அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.[(1)]

“இந்தப் பங்கீடு அல்லாஹ்வின் பொருத்தத்தைக் கொண்டதல்ல” என்று நபியவர்களின் பங்கீட்டு முறையைப் பற்றி ஒருவர் கூறியதை இப்னு மஸ்ஊத் (ரலி) அன்னாரிடம் எத்திவைத்த போது கோபத்தால் நபியவர்களின் முகம் மாறியது. “நபி மூஸா இதைவிட அதிகமாக நோவினை செய்யப்பட்டு, பொறுமையாக இருந்தார்கள்” என்ற வார்த்தையைத் தவிர மேலதிகமாக எதனையும் நபியவர்கள் கூறவில்லை.[(2)]

அல்லாஹ் வெறுக்கும் ஒன்றை நபியவர்கள் கண்டால் அல்லது கேட்டால் கோபப்படுவார்கள். மௌனம் காக்காமல் எடுத்துச் சொல்வார்கள். அன்னார் அன்னை ஆஇஷா (ரலி) அவர்களின் வீட்டினுள் நுழைந்ததும் உருவப்படங்கள் பொறிக்கப்பட்ட திரைச்சீலை இருப்பதைக் கண்டு அன்னாரது முகத்தின் நிறம் மாறி, அதனைக் கிழித்தார்கள். மேலும் இதுபோன்று உருவம் அமைப்பவர்கள் தான் மறுமையில் கடுமையான தண்டனைக்குரியவர்கள் எனக் கூறினார்கள்.[(3)]

குறிப்பிட்ட ஓர் இமாமிற்குப் பின்னால் மக்கள் தொழுவதற்குப் பின்வாங்கும் அளவிற்கு நீட்டித் தொழுகை நடத்தும் ஓர் இமாமைப் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டதும் நபியவர்கள் கடுமையாக கோபித்தார்கள். மக்களுக்கு உபதேசித்து, தொழுகையை இலகுபடுத்துமாறும் பணித்தார்கள்.[(4)]

பள்ளியினுள் கிப்லாத் திசையில் உமிழ்நீரைக் கண்டதும் சினம் கொண்டு அதனை சுரண்டிவிட்டு நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : “உங்களில் ஒருவர் தொழும்போது அல்லாஹ் அவரின் முன்னிலையிலேயே இருக்கின்றான். எனவே தொழுகையில் தனது முன்னிலையில் உமிழ வேண்டாம்.”[(5)]

---

1. நூல் : புஹாரி (3369), முஸ்லிம் (2320).

2.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : புஹாரி (5749), முஸ்லிம் (1062).

3.நூல் : புஹாரி (5758), முஸ்லிம் (2107).

4.அறிவிப்பவர் : அபூ மஸ்ஊத் அல்அன்ஸாரி (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (466). இது ஒரு சம்பவத்தின் ஒரு பகுதியாகும்.

5.அறிவிப்பவர்கள் : இப்னு உமர் (ரலி), அனஸ் (ரலி), அபூ ஸஈத் (ரலி), அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (720), முஸ்லிம் (547, 548, 551).

"கோபம், பொருத்தம் அனைத்து நிலைகளிலும் உண்மையே பேசுவதற்கு சந்தர்ப்பத்தைத் தருவாயாக!" என நபியவர்கள் பிரார்த்திப்பார்கள்.[1] ஒரு மனிதன் கோபம், பொருத்தம் அனைத்து நிலைகளிலும் உண்மையே பேசுவான் என்பது மிகவும் அரிதானதாகும். அநேகமானோர் கோபத்தின் போது நிதானமிழந்தே பேசுவார்கள்.





1.அறிவிப்பவர் : அம்மார் பின் யாஸிர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (18324), நஸாஈ (1306), அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார். (ஸஹீஹுல் ஜாமிஃ 1301)

## ஹதீஸ் –17

### செய்வன திருந்தச் செய்வோம்

عَنْ أَبِي يَعْلَى شَدَّادِ بْنِ أَوْسٍ رَضِيَ اللهُ عَنْهُ عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ:

"إِنَّ اللهَ كَتَبَ الْإِحْسَانَ عَلَى كُلِّ شَيْءٍ، فَإِذَا قَتَلْتُمْ فَأَحْسِنُوا الْقِتْلَةَ، وَإِذَا ذَبَحْتُمْ فَأَحْسِنُوا الذبْحَةَ، وَلْيُحِدَّ أَحَدُكُمْ شَفْرَتَهُ، وَلْيُرِحْ ذَبِيحَتَهُ." رَوَاهُ مُسْلِم

*நபி(ஸல்) அவர்கள்கூறினார்கள்:* ***நிச்சயமாக அல்லாஹ், செய்வனவற்றை திருந்தச் செய்யும்படி பணித்திருக்கின்றான். ஆகவே நீங்கள் கொன்றால், நன்றாகக் கொல்லுங்கள். நீங்கள் அறுத்தால் நன்றாக அறுங்கள். உங்களில் ஒவ்வொருவரும் தங்களது கத்தியை கூர்மையாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அறுக்கும் மிருகங்களின் கஷ்டங்களை எளிதாக்குங்கள் (குறையுங்கள்).***

*அறிவிப்பவர் : அபூ யஃலா ஷத்தாத் இப்னு அவ்ஸ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1955).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி அனைத்திலும் இஹ்ஸான் (உபகாரம், நலவு செய்தல், திருந்தச் செய்தல்) அவசியம் என்பதை அறிவிக்கின்றது. எனினும் ஒவ்வொன்றிற்கும் அதன் நிலைக்கேற்பவே இஹ்ஸான் அமையும்.*

- *கடமைகளைச் திருந்தச் செய்தல் என்பது அது நிறைவேறுவதற்கு அவசியமான சகல விடயங்களையும் செய்வதாகும். இது அவசியமான அளவாகும். இதில் ஸுன்னத்தான விடயங்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலம் அழகாக்குவது அவசியமில்லை. (எனினும் விரும்பத்தக்கது).*

- *தடுக்கப்பட்டவற்றை விடுவதில் இஹ்ஸான் என்பது அக, புற ரீதியில் அதனை முழுமையாகத் தவிர்ந்து கொள்வதாகும். இது அவசியமான அளவாகும்.*

- *சோதனைகளின் போது செய்யும் பொறுமையில் இஹ்ஸான் என்பது இஸ்லாம் எதிர்பார்க்கும் அமைப்பில் வெறுக்காமல்,*

பொறுமையிழந்து ஏதும் பேசிவிடாமல் முழுமையாகப் பொறுமை காக்க வேண்டும்.

படைப்பினங்களுடன் நடந்து கொள்ளும் முறையில் இஹ்ஸான் என்பது அவற்றில் அல்லாஹ் கடமையாக்கியுள்ள உரிமைகளை முறையாக செலுத்துவதாகும்.

மரண தண்டனைக் குற்றவாளிகள் மற்றும் கொலை செய்ய அனுமதிக்கப்பட்ட பிராணிகளைக் கொல்வதில் இஹ்ஸான் என்பது இலகுவாகவும் மிக வேகமாகவும் அவற்றின் உயிர்களைப் போக்குவதாகும். இதனைத் தான் நபியவர்கள் இந்நபிமொழியில் கூறியுள்ளார்கள். இதனை நபியவர்கள் உதாரணத்திற்காக அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்த வேண்டிய தேவைக்காக கூறியிருக்கலாம்.

கொலை செய்யும் போதும், அறுக்கும் போதும் அதனை அழகாகச் செய்யுங்கள் என்பதே இந்நபிமொழியின் கருத்தாகும்.

அறுக்கும் பிராணிகளை அழகாகக் கையாள்வது கடமை என்பதில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துள்ளதாக இமாம் இப்னு ஹஸ்ம் கூறியுள்ளார்கள்.

பிராணிகளைத் தடுத்து வைத்து அவை மரணிக்கும் வரை அம்பு போன்றவற்றால் எரிவதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.(1)

இப்னு உமர் (ரலி) அவர்கள் அம்பெறிவதற்கான இலக்காக ஒரு கோழியை நட்டுவைத்திருந்த சில வாலிபர்களைக் கடந்து சென்ற போது "யார் இதனை செய்தது? இவ்வாறு செய்தவர்களை நபியவர்கள் சபித்துள்ளார்கள்" எனக் கூறினார்கள்.(2)

உயிருள்ள ஒரு பிராணியைத் தமது அம்பெறியும் பயிற்சிக்கான இலக்காக எடுப்பதை நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.(3) இதே கருத்தில் பல நபிமொழிகள் உள்ளன.

பிராணிகளை அறுக்கும் போது அதிலும் மென்மையைக் கடைபிடிக்குமாறு இஸ்லாம் ஏவியுள்ளது. ஓர் ஆட்டின் காதைப் பிடித்து இழுத்துச் செல்லும் ஒரு நபரைக் கடந்து சென்ற நபியவர்கள் : "அதை

1.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (5513), முஸ்லிம் (1956).

2.நூல் : புஹாரி (5515), முஸ்லிம் (1957, 1958) .

3.அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1957) .

விட்டுவிட்டு முன்கழுத்துப் பகுதியை பிடியுங்கள்” என அந்நபருக்குக் கூறினார்கள்.[1]

(மற்றுமொரு சந்தர்ப்பத்தில்) ஓர் ஆட்டின் பக்கவாட்டில் தனது காலை வைத்துக் கொண்டு கத்தியைத் தீட்டும் ஒரு நபரை நபியவர்கள் கடந்து சென்றார்கள். அந்த ஆடு அந்நபரையே ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தது. (அதனை அவதானித்த) நபியவர்கள் : “இதனை ஏற்கனவே தீட்டியிருக்கக் கூடாதா. இப்பிராணியை பல தடவைகள் கொல்லப் போகின்றீரா?” என வினவினார்கள்.[2]

பிராணியை அறுப்பதற்காக மென்மையாகவே இழுத்து வரப்படல் வேண்டும். அறுக்கும் கத்தி மறைக்கப்படல் வேண்டும். அறுக்கும் போதே தவிர அது வெளிப்படுத்தப்படல் கூடாது என இமாம் அஹ்மத் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் “நான் ஆட்டுக்கு கருணை காட்டுகின்றேன். அதனை அறுக்கவும் செய்கின்றேன் எனக் கூறினார்”. நபியவர்கள் : நீர் ஆட்டிற்கு கருணை காட்டினால் அல்லாஹ் உமக்குக் கருணை காட்டுவானாக! எனக் கூறினார்கள்.[3]

முத்தரிப் பின் அப்துல்லாஹ் (ரஹ்) கூறினார்கள் : “அல்லாஹ் குருவிக்கு இரக்கம் காட்டுவதன் மூலமாகவும் (மனிதனுக்கு) இரக்கம் காட்டுவான்.[4]

---

1.அறிவிப்பவர் : அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி), ஆதாரம் : இப்னு மாஜா (3171). இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான மூஸா பின் முஹம்மத் அத்தைமீ என்பவர் “முன்கருல் ஹதீஸ்” (மிகவும் பலவீனமானவர்) என இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) கூறியுள்ளார்கள். (தக்ரீபுத் தஹ்தீப் 7006) .

2. அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : தபரானீ (11916), ஹாகிம் (7563). அதன் இறுதியில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : இதனைப் பல தடவைகள் கொல்லப் போகின்றீரா? இதனைப் படுக்கவைக்க முன் கத்தியைத் தீட்டியிருக்கக் கூடாதா?” இது இமாம் புஹாரியின் நிபந்தனைக்கமைய ஸஹீஹானதென ஹாகிம் (ரஹ்) கூறியுள்ளதுடன், அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுத் தரகீபி வத்தர்ஹீப் 2265).

3.அறிவிப்பவர் : குர்ரா பின் இயாஸ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (15592). இதன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹானதென அஷ்ஷேக் அல்பானீ தனது ஸில்ஸிலா ஸஹீஹாவில் (26) கூறியுள்ளார்கள்.

4.ஜீவகாருண்யம் மனிதர்களையும் தாண்டி பிற உயிரினங்கள் விடயத்திலும் வலியுறுத்தப்பட்டிருப்பது இஸ்லாத்தின் விசாலத் தன்மையிலும், பூரண திட்டமிடலிலும் உள்ளது. **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ).**

## ஹதீஸ் –18

### இறையச்சமும் நற்குணமும்

عن أبي ذَرٍّ وَمُعاذِ بْنِ جبلٍ رضيَ الله عنهما، عنْ رسولِ اللهِ ﷺ، قَالَ:

"اتَّقِ اللهَ حَيْثُمَا كُنْتَ وأَتْبِعِ السَّيِّئَةَ الْحسنةَ تَمْحُهَا، وخَالِقِ النَّاسَ بخُلُقٍ حَسَنٍ"

رواهُ التِّرْمذيُّ وقال: "حديثٌ حسنٌ" وفي بعض النُّسخ: (حَسَنٌ صَحِيْحٌ)

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***நீர் எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்வீராக. தீமையைத் தொடர்ந்து அதனை அழிக்கும் நன்மை ஒன்றையும் செய்துகொள்வீராக. இன்னும் மக்களிடம் அழகிய குணத்துடன் பழகுவீராக.***

*அறிவிப்பவர் : அபூதர் (ரலி) மற்றும் முஆத் இப்னு ஜபல் (ரலி), ஆதாரம்: திர்மிதி (1987).*





**விரிவுரை :**

*தக்வாவின் அடிப்படை ஓர் அடியான் தனக்கும் தான் எச்சரிக்கையாக இருக்கும் ஒன்றுக்கும் இடையில் தடுப்பொன்றை ஏற்படுத்திக் கொள்வதாகும். எனவே இறையச்சம் என்பது ஓர் அடியான் தனக்கும் தனது இரட்சகனின் கோபம், தண்டனைகளுக்கும் மத்தியில் பாதுகாக்கும் ஒரு தடுப்பை ஏற்படுத்திக் கொள்வதாகும். அத்தடுப்புத்தான் அவனுக்குக் கட்டுப்பட்டு, மாறு செய்வதைத் தவிர்ந்து கொள்வதாகும்.*

*பயபக்தியாளர்கள் தமக்குத் தடுக்கப்பட்டதைப் பயந்து தவிர்ந்து கொள்வார்கள். விதியாக்கப்பட்டதை நிறைவேற்றுவார்கள் என இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) கூறினார்கள்.*

*தல்க் பின் ஹபீப் (ரஹ்) கூறினார்கள் : இறையச்சம் என்பது : அல்லாஹ்வின் நேர்வழியின் பிரகாரம் அவனது கூலியை எதிர்பார்த்து அவனுக்குக் கட்டுப்படுவதும், அல்லாஹ்வின் அதே நேர்வழியின் படி அவனது தண்டனையை அஞ்சி, அவனுக்கு மாறு செய்வதை விடுவதுமாகும்.*

*“நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சுங்கள்” (ஆல இம்ரான்: 102) எனும் வசனத்திற்கு விளக்கமளிக்கும் போது இப்னு*

மஸ்ஊத் (ரலி) பின்வருமாறு கூறுகின்றார்கள் : "மாறு செய்யப்படாமல் அவன் வழிப்படப்பட வேண்டும். மறக்கப்படாமல் நினைவு கூறப்பட வேண்டும். நன்றி மறுக்கப்படாமல் நன்றி செலுத்தப்பட வேண்டும்.

**"நீ எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்"**

உள்ளும் புறமும், இரகசியத்திலும் வெளிப்படையாகவும், மக்கள் அவனைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் அனைத்து நிலைகளிலும் அல்லாஹ்வை அஞ்சுவது இதன் நோக்கமாகும்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : மிக அரிதான விடயங்கள் மூன்று உள்ளன. ஏழ்மையிலும் தர்மம் செய்தல், தனிமையிலும் பேணுதலாக இருத்தல், அஞ்சி, எதிர்பார்க்கப்படும் (இறைவனிடத்தில்) உண்மை பேசுதல் என்பனவே அவையாகும்.

அபூ ஸுலைமான் (ரஹ்) கூறுகின்றார்கள் : மக்களுக்கு தனது நற்செயலைக் காட்டிவிட்டு, தனக்கு மிக நெருக்கமாக இருக்கும் அல்லாஹ்விடம் அசிங்கமானதை வெளிப்படுத்துபவன் நஷ்டவாளியாவான்.

கிராமப்புற அரேபியப் பெண்ணொருவருடன் ஒருவர் தவறாக நடக்க முனைந்து நட்சத்திரங்களைத் தவிர வேறு யாரும் எம்மைப் பார்க்க மாட்டார்கள் என அழைத்தார். அப்பெண் : அப்படியாயின் அந்நட்சத்திரங்களை இயக்கிக் கொண்டிருப்பவன் (இறைவன்) எங்கே? என வினவினாள்.

அந்நியப் பெண்ணொருவருடன் கதைத்துக் கொண்டிருக்கும் நபரொருவரைக் கண்ட முஹம்மது இப்னுல் முன்கதிர் (ரஹ்) "நிச்சயமாக அல்லாஹ் உங்களிருவரையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான்" எனக் கூறினார்கள்.

இமாம் அஹ்மத் அவர்கள் ஒரு கவிதையை உச்சரித்துக் கொண்டிருப்பார்கள். அதன் கருத்து வருமாறு :

காலத்தில் ஏதாவதொரு நாள் நீ தனித்திருந்தால் நான் தனித்து விட்டேன் எனக் கூறாதே. மாறாக என்னைக் கவனிக்கும் ஒருவன் இருக்கின்றான் என்று கூறு.

அல்லாஹ் ஒரு மணிநேரம் கூட அலட்சியமாக இருப்பதாகவோ, (அடியானுக்கு) மறைவதெல்லாம் அவனுக்கும் மறைவதாகவோ ஒரு போதும் நீ எண்ணி விடாதே.

*முஆத் (ரலி) அவர்கள் தனக்கு நபியவர்கள் (இந்நபிமொழியில்) செய்த உபதேசத்தை அப்படியே பின்பற்றியொழுகினார்கள். ஒரு தடவை உமர் (ரலி) அவர்கள் அன்னாரை ஒரு பணிக்காக அனுப்பினார்கள். (பணி முடிந்து) வெறும் கையுடனே திரும்பினார்கள். அதைப் பார்த்த மனைவி கண்டித்தார்கள். நான் ஒன்றும் எடுத்து விடாமல் என்னைக் கட்டுப்படுத்தும் ஒருவர் என்னுடனேயே இருந்தார் என முஆத் (ரலி) அவர்கள் தனது இறைவனை மனதில் எண்ணியவாறு கூறினார்கள். ஆனால் மனைவியோ உமர் (ரலி) அவர்கள் முஆத் (ரலி) அவர்களுடன் கண்காணிக்க ஒருவரை அனுப்பியதாக நினைத்துக் கொண்டார்கள்.*

*இந்நிலை யாரிடத்தில் தொடர்ச்சியாகவோ பெரும்பான்மையான நேரங்களிலோ இருக்கின்றதோ அவர் அல்லாஹ்வைக் காண்பது போன்று அவனை வணங்கும் உளத் தூய்மையாளர்களில் ஒருவராகி விடுகின்றார். மேலும் அற்பமான சிறு பாவங்களைத் தவிர பெரும்பாவங்கள், மானக்கேடான விடயங்களைத் தவிர்ந்து கொள்ளும் உளத் தூய்மையாளர்களில் ஒருவராகி விடுகின்றார்.*

**“தீமையைத் தொடர்ந்து அதனை அழிக்கும் நன்மை ஒன்றையும் செய்து கொள்வீராக”**

*இரகசியமாகவும், வெளிப்படையாகவும் அல்லாஹ்வை அஞ்சி நடக்குமாறு ஓர் அடியான் பணிக்கப்பட்டிருந்தாலும் சில சமயங்களில் இறையச்சத்தில் அசமந்தப் போக்கு ஏற்பட்டு, தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு நடக்கும் பட்சத்தில் அதனை அழிக்கும் காரியத்தில் ஈடுபடுமாறு நபியவர்கள் பணித்துள்ளார்கள். அதுதான் அத்தீமையைத் தொடர்ந்து நன்மை செய்வதாகும்.*

*இந்நபி மொழியில் நபியவர்கள் பயபக்தியாளர்களின் பண்புகளைக் கூறியது போல் அல்லாஹ்வும் தனது வேதத்தில் வர்ணித்துள்ளான்.*

*“உங்கள் இரட்சகனிடமிருந்துள்ள மன்னிப்பின் பக்கமும், வானங்கள் மற்றும் பூமியின் அளவு விசாலமான சுவர்க்கத்தின் பக்கமும் நீங்கள் விரைந்து செல்லுங்கள். அது பயபக்தியாளர்களுக்காகவே தயார் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் செல்வ நிலையிலும், வறிய நிலையிலும் (நல்லறங்களில்) செலவு செய்வார்கள். இன்னும் கோபத்தை மென்று, மனிதர்களை மன்னிப்பவர்களாகவும் இருப்பார்கள். நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கிறான். இன்னும் அவர்கள் மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டாலோ, அல்லது தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவு கூர்ந்து உடனே தங்களது பாவங்களுக்காக பாவமன்னிப்புத் தேடுவார்கள்.*

அல்லாஹ்வையன்றி பாவங்களை மன்னிப்பவன் யார்? அவர்கள் அறிந்து கொண்டே, தாம் செய்யும் தவறில் நிலைத்திருக்க மாட்டார்கள். அவர்களுக்குரிய கூலி அவர்களது இரட்சகனிடமிருந்துள்ள மன்னிப்பும் சுவனச்சோலைகளுமாகும். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். (நற்) செயல் புரிவோரின் கூலி நல்லதாகும்”. (ஆல இம்ரான் : 133 – 136).

செலவு செய்தல், கோபத்தைக் கட்டுப்படுத்தல், மன்னித்தல் போன்ற நற்குணங்களால் படைப்பினங்களுக்கு நலவு செய்வதையே அல்லாஹ் பயபக்தியாளர்களுடைய பண்பாக வர்ணித்துள்ளான். செலவளித்தல், நோவினையைத் தாங்கிக் கொள்ளல் ஆகிய இரு பண்புகளையும் ஒருங்கிணைத்துக் கூறியுள்ளான். இது தான் நபியவர்கள் உபதேசித்த உச்சகட்ட நற்குணமாகும். பின்னர் : மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டாலோ, அல்லது தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவுகூர்ந்து உடனே தங்களது பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள். அவர்கள் அறிந்து கொண்டே தாம் செய்யும் தவறில் நிலைத்திருக்க மாட்டார்கள்” என அல்லாஹ் அவர்களை வர்ணிக்கின்றான். இது பயபக்தியாளர்களிடம் இருந்து சிலவேளை பெரும்பாவங்களோ, சிறுபாவங்களோ நிகழலாம் என்பதை அறிவிக்கின்றது. எனினும் அதில் அவர்கள் நிலைத்திருக்காமல், உடனடியாக அல்லாஹ்வை நினைவுகூர்ந்து பாவமன்னிப்புக் கோரி, அவன்பால் மீண்டு தௌபாச் செய்வார்கள். தௌபா என்பது ஒரு பாவத்தில் நிலைத்திருப்பதை விடுவதாகும்.

அல்லாஹ்வை நினைவுகூர்வார்கள் என்பதன் கருத்து : அவனின் மகத்துவத்தையும், கடுமையான பிடி, பழிவாங்களையும், பாவங்களுக்காக அவன் எச்சரித்துள்ள தண்டனைகளையும் நினைவுகூர்வார்கள். அது அவர்களை உடனடியாக அப்பாவத்தை விட்டு மன்னிப்புத் தேடத் தூண்டுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் :

“நிச்சயமாக எவர்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடக்கின்றார்களோ அவர்களுக்கு ஷைத்தானிடமிருந்து ஏதேனும் ஒரு தீண்டுதல் ஏற்பட்டால் அவர்கள் (அல்லாஹ்வை) நினைவு கூர்ந்து, உடன் விழிப்படைந்து விடுவர்” (அல்அஃராப் : 201)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் அடியார் ஒரு பாவம் செய்து விட்டார். பிறகு 'இறைவா! நான் ஒரு பாவம் செய்து விட்டேன். எனவே, என்னை மன்னித்து விடுவாயாக” என்று பிரார்த்தித்தார். உடனே அவரின் இறைவன். 'என் அடியான் எனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை

*மன்னிப்பான்; (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (நன்று) நான் என் அடியானை மன்னித்து விட்டேன்'' என்று சொன்னான். பிறகு அந்த அடியார் (சிறிது காலம்) அல்லாஹ் நாடிய வரை அப்படியே இருந்தார். பிறகு மீண்டும் ஒரு பாவத்தைச் செய்தார். அப்போது அந்த மனிதர் (மீண்டும்) 'என் இறைவா! நான் மற்றொரு பாவம் செய்து விட்டேன். எனவே, என்னை மன்னித்து விடுவாயாக'' என்று பிரார்த்தித்தார். உடனே இறைவன் (இம் முறையும்) 'என் அடியான் தனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான்; (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (நல்லது.) நான் என் அடியானை மன்னித்து விட்டேன்'' என்று சொன்னான். பிறகு அல்லாஹ் நாடிய வரை அந்த மனிதர் அப்படியே (சிறிது காலம்) இருந்தார். பிறகும் (மற்றொரு) பாவம் செய்தார். (இப்போதும் முன்பு போன்றே) 'என் இறைவா! நான் இன்னொரு பாவம் செய்து விட்டேன். எனக்காக அதை மன்னித்து விடுவாயாக'' என்று பிரார்த்தித்தார். அதற்கு அல்லாஹ் 'என் அடியான் தனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான்; (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (அப்படியானால்) நான் என் அடியானை மூன்று முறையும் மன்னித்து விட்டேன். இனி அவன் நாடியதைச் செய்து கொள்ளட்டும்'' என்று சொன்னான்.[(1)]*

*அதாவது இந்நிலையில் இருக்கும் காலமெல்லாம் பாவம் செய்தவுடன் பாவமன்னிப்புத் தேடுவார்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு பாவத்தை ஒரே நாளில் 70 தடவைகள் செய்தாலும் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டிருப்பவன் அதில் நிலைத்திருப்பவனாக மாட்டான்.[(2)]*

*அலீ (ரலி) அவர்கள் கூறியதாக இமாம் இப்னு அபித் துன்யா (ரஹ்) பின்வரும் செய்தியை அறிவிக்கின்றார்கள் : ''பாவத்தில் வீழ்ந்து விட்டு மன்னிப்புக் கோருபவனே உங்களில் சிறந்தவராவார்''. மீண்டும் அதே பாவத்தை செய்தால்? என மூன்று தடவைகள் வினவப்பட்ட போதும் ''அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி மீள்வார்'' என பதிலளித்தார்கள். எதுவரை? என வினவப்பட்ட போது ''ஷைத்தான் தோற்றுக் கைசேதப்பட்டவனாகும் வரை'' என்றார்கள்.*

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (7507), முஸ்லிம் (2758).*

*2.அறிவிப்பவர் : அபூ பக்ர் (ரலி), ஆதாரம் : அபூதாவூத் (1514), திர்மிதி (3559), அவர்கள் : ''இது ஓர் அறிவிப்பாளர் தொடர் கொண்ட கரீப் எனும் செய்தியாகும். இதன் அறிவிப்பாளர் தொடர் அவ்வளவு பலமானதல்ல'' என்று கூறியுள்ளார்கள். அஷ்ஷேக் அல்பானீயும் இதனை பலவீனமானதாகக் கூறியுள்ளார்கள். (இந்நூலை சுருக்கியவர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : ஹாபிழ் இப்னு ஹஜர் இதனைத் தனது பத்ஹுல் பாரீ (1/137) எனும் நூலில் கூறிவிட்டு ஹஸன் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : பாவத்திலிருந்து தவ்பாச் செய்பவன் பாவமே செய்யாதவன் போலாவான்.*[1]

*எம்மில் ஒருவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டுவிட்டு, மீண்டும் பாவம் செய்து, மீண்டும் பாவமன்னிப்புக் கேட்டு, மீண்டும் பாவம் செய்கிறாரோ அவர் அல்லாஹ்விடம் வெட்கப்படக் கூடாதா? என ஹஸனுல் பஸரீ (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது “இதனை வைத்தே ஷைத்தான் உள்ளங்களை மிகைக்க அவாக் கொள்கிறான். எனவே இஸ்திஃபார் (பாவமன்னிப்புக் கோருதல்) செய்வதில் சோர்வடைய வேண்டாம்” என்றார்கள்.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறருக்கு நீங்கள் இரக்கம் காட்டுங்கள். நீங்கள் இரக்கம் காட்டப்படுவீர்கள். பிறரை மன்னியுங்கள். மன்னிக்கப்படுவீர்கள். வார்த்தை புனல்களுக்குக் கேடுதான். தாம் செய்யும் தவறுகளில் அறிந்து கொண்டே நிலைத்திருப்பவர்களுக்கும் கேடுதான்.*[2]

*வார்த்தைப் புனல்கள் என்பதன் அர்த்தம் : நன்மொழி, அழகிய உபதேசங்கள் கேட்கும் போது புனல்களைப் போன்று காதுள்ளவர்களாகும். அவர்கள் ஒரு காதினால் கேட்டு மறு காதினால் விட்டுவிடுவார்கள். எவ்வாறு புனல்களில் திரவங்கள் தங்கியிருப்பதில்லையோ அதே போன்று இவர்கள் தாம் கேட்டவற்றின் மூலம் பயன் பெற மாட்டார்கள்.*

### “தீமையைத் தொடர்ந்து நன்மை செய்வீராக”

*இங்கு நன்மை என்பது அப்பாவத்திலிருந்து தவ்பாச் செய்வதையும் குறிக்கலாம். சிலவேளை அதனைவிடப் பரந்த கருத்தும் நாடப்பட்டிருக்கலாம். அல்லாஹ் கூறுகின்றான் :*

*“பகலின் இரு ஓரங்களிலும், இரவின் ஒரு பகுதியிலும் தொழுகையை நிலைநாட்டுவீராக! நிச்சயமாக நல்லவைகள் தீயவைகளைப் போக்கிவிடும்” (ஹூத் : 114).*[3]

---

*1.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : இப்னு மாஜா (4250). இதன் அறிவிப்பாளர் வரிசை தொடர்பறுந்ததாகும். அபூ உபைதா (ரஹ்) தனது தந்தை இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் ஹதீஸைக் கற்கவில்லை. அதனால் இச்செய்தி பலவீனமாகின்றது. எனினும் பல அறிவிப்பாளர் வரிசைகள் மூலம் இச்செய்தி வலுப் பெற வாய்ப்புள்ளது. அதனால்தான் அஷ்ஷேக் அல்பானீ இதனை பல அறிவிப்பாளர் வரிசைகளை வைத்து ஹஸன் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். (ஸில்ஸிலா ளஈபா 615).*

*2.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (7041). அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸில்ஸிலா ஸஹீஹாவில் (482) கூறிவிட்டு, இதன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹானதெனக் கூறியுள்ளார்கள்.*

*3.நன்மை தீமையை அழிப்பதைப் போன்றே தீமையும் அதனை விடக் குறைந்த நன்மையை அழித்து விடுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : நீங்கள் உணராமலே உங்களது செயல்கள் அழிந்துவிடும் (அல் ஹுஜுராத் :02). மேலும் கூறுகின்றான் : உங்களது தர்மங்களை அழித்துக் கொள்ளாதீர்கள் (பகரா :264). ஸைத்*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எந்தவொரு மனிதனும் பாவம் செய்துவிட்டு வுழூச் செய்து, தொழுதுவிட்டு, பின்னர் இஸ்திஃபார் செய்தால் அல்லாஹ் அவரை மன்னிக்காமல் விடுவதில்லை. பின்பு பின்வரும் வசனத்தை ஓதினார்கள் :

"இன்னும் அவர்கள் மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டாலோ அல்லது தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவு கூர்ந்து உடனே தங்களது பாவங்களுக்காக பாவமன்னிப்புத் தேடுவார்கள்" (ஆல இம்ரான் : 135)[1]

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் அழகாக வுழூச் செய்கின்றாரோ அவருடைய நகங்கள் உட்பட உடலின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பாவங்கள் வெளியேறி விடுகின்றன.[2]

இதுபற்றி அதிகமான நபிமொழிகள் உள்ளன.

காற்று காய்ந்த இலைகளை உதிர்ப்பது போல பாவத்திற்காக அழுவது அதனை அழித்து விடும் என இமாம் மாலிக் பின் தீனார் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

இங்கு கருத்துவேறுபாடுள்ள இரண்டு விடயங்கள் உள்ளன.

**முதலாவது : நற்செயல்கள் பெரும்பாவங்கள், சிறுபாவங்கள் அனைத்திற்கும் பரிகாரமாக அமையுமா? அல்லது சிறுபாவங்களுக்கு மாத்திரமா?**

**முதலாவது கருத்து :** சிறுபாவங்களுக்கு மாத்திரமே பரிகாரமாக அமையும். பெரும் பாவங்களிலிருந்து தவ்பாச் செய்து மீள வேண்டும்.

---

பின் அர்கம் (ரலி) அவர்கள் "ஈனா" (இதன் விளக்கம் 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது) முறையில் பொருளீட்டல் செய்வதைக் கேள்விப்பட்ட அன்னை ஆஇஷா (ரலி) ஸைதின் தாயாரிடம் "நீர் நபியுடன் செய்த அறப்போர்களை அழித்து விட்டீர்" என்று மகனிடம் கூறுமாறு சொல்லி அனுப்பினார்கள். இது பொதுமக்கள் ஒருபுறமிருக்க நல்லடியார்களிலேயே பலர் அலட்சியமாக இருக்கும் விடயமாகும். நன்மையை செய்து விட்டு அதில் திருப்தியடைந்திருக்கும் நிலையில் பாவத்தில் வீழ்கிறான். ஏனெனில் அவன் ஒவ்வொரு நன்மை செய்யும் போதும் ஷைத்தான் அவனது இரு கண்களுக்கும் மத்தியில் நின்று கொண்டு திருப்தியடைய வைக்கிறான். அவரது நன்மைகள் தொடர்ந்திருக்கின்றன என நினைத்துக் கொண்டே பாவங்களை அதிகமாகச் செய்கின்றார். **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ).**

*1.அறிவிப்பவர் : அபூ பக்ர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (56), அபூ தாவூத் (1521), திர்மிதி (3006), ஸுனன் நஸாயீ அல்குப்ரா (6/315), இப்னு மாஜா (1395).*
*அஸ்மா பின் ஹகம் அல்பிஸாரி என்பவரைப் பற்றிக் குறிப்பிடும் போது இமாம் இப்னு ஹஜர் தனது தஹ்தீபுத் தஹ்தீபில் (1/167) இதனைக் கூறிவிட்டு 'அறிவிப்பாளர் தொடர் ஏற்க முடியுமானது' எனக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுத் தர்கீப் (680)).*

*2.அறிவிப்பவர் : உஸ்மான் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (245).*

ஏனெனில் அல்லாஹ் தனது அடியார்களுக்கு தவ்பாச் செய்யுமாறு ஏவியது மட்டுமன்றி செய்யாதவர்களை அநீதியிழைத்தவர்களாகவும் கூறியுள்ளான். தவ்பா கடமையான ஒன்று என்பதில் அனைவரும் ஏகோபித்துள்ளனர். கடமைகள் நிய்யத் இன்றி நிறைவேற்றப்பட மாட்டாது. பெரும்பாவங்கள் வுழூ, தொழுகை மற்றும் இஸ்லாத்தின் இதர கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் மன்னிக்கப்படுமாக இருந்தால் அங்கே தவ்பாவுக்கு அவசியம் இருக்காது. இது ஒருமித்த கருத்தின் படி தவறானதாகும்.

மேலும் பெரும்பாவங்கள் கடமைகளைச் செய்வதன் மூலம் மன்னிக்கப்படுமானால் அவ்வாறு கடமைகளைச் செய்தவர்களுக்கு நரகிற்குச் செல்ல எந்தப் பாவமும் இராது. இதுவும் முர்ஜிஆக்களின் கொள்கைக்கு ஒப்பாகும் தவறான கருத்தாகும்.

இந்த முதலாவது கருத்தையே இமாம் இப்னு அப்தில் பர் (ரஹ்) தனது தவ்ஹீத் எனும் நூலில் பதிவு செய்து, அனைத்து முஸ்லிம்களினதும் இஜ்மாவான (ஒருமித்த) கருத்தாகவும் கூறியுள்ளார்கள். இதற்கு ஆதாரமாகப் பல நபிமொழிகளைக் கூறியுள்ளார்கள். அதில் பின்வரும் செய்தியும் உள்ளடங்கும் :

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜுமுஆவிலிருந்து மறு ஜுமுஆ, ஒரு ரமழானிலிருந்து மறு ரமழான் ஆகியன அவற்றுக்கிடையே ஏற்படும் பாவங்களுக்கு- பெரும் பாவங்களில் ஈடுபடாமல் இருந்தால்- பரிகாரங்களாகும்.*[1]

இக்கடமைகள் பெரும்பாவங்களுக்குப் பரிகாரமாக அமையமாட்டாது என்பதையே இந்நபிமொழி அறிவிக்கின்றது.

இந்நபிமொழியின் கருத்துப் பற்றி இமாம் இப்னு அதிய்யா (ரஹ்) அவர்கள் தனது தப்ஸீரில் இரு கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்கள் :

**01.** இக்கடமைகள் சிறுபாவங்களுக்குப் பரிகாரமாக அமைய பெரும்பாவங்களை விடுவது ஒரு நிபந்தனையாகும். அவ்வாறு தவிர்ந்து கொள்ளாவிடின் இக்கடமைகள் எந்தவொன்றுக்கும் அறவே பரிகாரமாக அமையமாட்டாது. இதனைப் பெரும்பான்மையான அஹ்லுஸ் ஸுன்னாக்களின் கருத்தாக அறிவித்துள்ளார்கள்.

**02.** இக்கடமைகள் பொதுவாக சிறுபாவங்களுக்கு பரிகாரமாக அமையும். பெரும் பாவங்களுக்கல்ல. எனினும் சிறுபாவங்களில்

---

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (233) .

நிலைத்திருக்காமலும், அதிலிருந்து தவ்பாச் செய்தும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இடப்படுகின்றது. இமாம் இப்னு அதிய்யா அவர்கள் இக்கருத்தை வலுப்படுத்தியுள்ளதுடன் புத்திஜீவிகளுடைய கருத்தாகவும் அறிவித்துள்ளார்கள்.

"சிறுபாவங்களில் நிலைத்திருக்காமலும், அதிலிருந்து தவ்பாச் செய்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இடப்படுகின்றது" என்ற இமாமவர்களின் கூற்றின் கருத்து சிறுபாவங்களில் நிலைத்திருந்தால் அவை பெரும்பாவங்களாக மாறி விடுகின்றன. அவற்றுக்கு நற்செயல்கள் பரிகாரமாக மாட்டாது என்பதாகும்.

இமாம் (இப்னு அதிய்யா) அவர்கள் அறிவித்துள்ள முதலாவது கூற்றானது –அதுபோன்ற ஒரு கூற்று எமது மத்ஹபைச் சேர்ந்த அபூபக்ர் அப்துல் அஸீஸ் பின் ஜஃபர் (ரஹ்) அவர்களால் கூறப்பட்டிருந்தாலும்- அரிதான கூற்றாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு முஸ்லிமான மனிதர் கடமையாக்கப்பட்ட ஒரு தொழுகை(யின் நேரம்) வந்ததும், அதற்காக அழகிய முறையில் அங்கத் தூய்மை செய்து உள்ளச்சத்துடன் முறையோடு தொழுவாராயின், அந்தத் தொழுகை அதற்கு முந்தைய (சிறிய) பாவங்களுக்குப் பரிகாரம் ஆகாமலிருப்பதில்லை. அவர் பெரும் பாவம் ஏதும் செய்தால் தவிர. இது எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்.[1]

**இரண்டாவது கருத்து :** நற்செயல்கள் பெரும்பாவங்களுக்கும் பரிகாரமாக அமையும். இக்கருத்தை இமாம் இப்னு ஹஸ்ம் அழ்ழாஹிரி (ரஹ்) மற்றும் சில ஹதீஸ் கலை அறிஞர்கள் சிலரும் கொண்டுள்ளனர். இமாம் இப்னு ஹஸ்மிற்கு மறுப்பாகவே இமாம் இப்னு அப்தில் பர் (ரஹ்) தனது தம்ஹீத் எனும் நூலில் இதுபற்றி விரிவாகப் பேசியுள்ளார்கள் : "நான் இது பற்றி பேசுவதை விரும்பாமலிருந்தேன். இந்த நபருடைய (இமாம் இப்னு ஹஸ்ம்) கூற்று மாத்திரம் இல்லாவிடில் இதுபற்றி பேசியிருக்க மாட்டேன். அறிவீனர்கள் இதன் மூலம் ஏமாந்து, தொழுகைகள் பரிகாரமாக அமையும் என இக்கூற்றைச் சார்ந்து கவலைப்படாமல், தவ்பா, இஸ்திஃபார் ஏதுமின்றி பெரும்பாவங்களில் மூழ்கி விடுவார்களென்று அஞ்சினேன். அல்லாஹ்விடம் பாதுகாப்பையும் அனுகூலத்தையும் கேட்கிறோம்" என்று இமாம் இப்னு அப்தில் பர் (ரஹ்) குறிப்பிட்டுள்ளார்கள்.[2]

---

1.அறிவிப்பவர் : உஸ்மான் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (228) .

2.அத்தம்ஹீத் 4/49 .

(நூலாசிரியர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : இது போன்ற விடயங்களில் சில ஹதீஸ் கலை அறிஞர்களுடைய கூற்றுக்கள் இவ்விரண்டாவது கருத்தைப் போன்று கூறப்பட்டுள்ளது. லைலதுல் கத்ர் இரவிலே நின்று வணங்குவது பற்றி இமாம் இப்னுல் முன்திர் (ரஹ்) அவர்கள் கூறும் போதும் : “அவ்விரவை உயிர்ப்பிப்பவர்களுடைய சிறிய, பெரிய அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படலாம்” எனக் கூறியுள்ளார்கள்.

இவ் இரண்டாவது கருத்துடையவர்கள் தமது கருத்தின் மூலம் “பெரும்பாவங்களில் நிலைத்திருந்து கொண்டு, கடமைகளைச் செய்வதால் அவை பெரும்பாவங்களுக்குப் பரிகாரங்களாகும்” என்ற கருத்தை நாடினால் இது நிச்சயமாக தவறான கருத்தாகும். அதனை யாராலும் மறுக்க முடியாது. பெரும்பாவங்களில் நிலைத்திருக்காமலும், அவற்றுக்காக கவலைபட்டுத் தவ்பாச் செய்யாமலும் கடமைகளைச் செய்வதன் மூலம் அப்பாவங்கள் மன்னிக்கப்படும் என்ற கருத்தை நாடினால் அதனைப் பொதுவாக ஓரளவுக்கேனும் ஏற்கலாம்.

இவ்விரு கருத்துக்களில் வலுவானது பெரும்பாவங்கள் தவ்பா இன்றி மன்னிக்கப்பட மாட்டாது (முதலாவது கருத்து) என்பதாகும். ஏனெனில் தவ்பாஅடியார்களின் மீதுள்ள ஒரு கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் : எவர்கள் (தவ்பாச் செய்து) மீளவில்லையோ அவர்கள் தாம் அநியாயக்காரர்கள். (அல்ஹுஜுராத் : 11)

### இரண்டாவது விடயம் :

பெரும்பாவங்களைப் போன்றே சிறுபாவங்களுக்கும் தவ்பாச் செய்ய வேண்டுமா? அல்லது பெரும்பாவங்களைத் தவிர்ந்து கொண்டால் அவை மன்னிக்கப்படுமா? அல்லாஹ் கூறுகின்றான் :

உங்களுக்குத் தடுக்கப்பட்டவைகளில் பெரும் பாவங்களை விட்டும் நீங்கள் விலகிக் கொண்டால் உங்களை விட்டும் உங்கள் (சிறு) பாவங்களை நாம் அழித்து, உங்களை சங்கைமிக்க இடத்தில் நுழைவிப்போம். (அந்நிஸா : 31)

### இதுவும் கருத்து வேறுபாடுள்ள ஒரு விடயமாகும்.

1. சிறு பாவங்களிலிருந்தும் தவ்பாச் செய்வது அவசியமாகும். இது எமது (ஹன்பலி) மத்ஹப், மற்றும் மார்க்க சட்டக்கலை வல்லுனர்கள், அஷ்அரிய்யா, மாதுரீதிய்யா போன்ற அகீதா பிரிவினருடைய கூற்றாகும்.

2. தவ்பாச் செய்ய அவசியமில்லை.

**3.** தவ்பாச் செய்ய வேண்டும். அல்லது பரிகாரமாக நன்மைகளைச் செய்ய வேண்டும். இது பிற்கால அறிஞர்கள் சிலரின் கூற்றாகும்.

அல்லாஹ் சிறுபாவங்கள், பெரும்பாவங்கள் அனைத்திற்குப் பின்னாலும் தவ்பாச் செய்யுமாறு பணித்துள்ளான்.

*நம்பிக்கையாளர்களான ஆண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக்கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் (நபியே!) நீர் கூறுவீராக! இதுவே அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும். நிச்சயமாக அவர்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன். (நபியே!) நம்பிக்கையாளர்களான பெண்களிடம், அவர்கள் தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும், தமது கற்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும், அவர்களது அலங்காரத்தில் வெளிப்படுவதைத் தவிர வேறு எதையும் அவர்கள் வெளிப்படுத்தக் கூடாது என்றும், தமது முந்தானைகளை தமது மார்பகங்கள் மீது போட்டு கொள்ளுமாறும் (நபியே!) நீர் அவர்களுக்குக் கூறுவீராக! மேலும், அவர்கள் தமது அலங்காரத்தைத் தமது கணவன்மார்கள் அல்லது தமது தந்தையர், அல்லது தமது கணவன்மார்களின் தந்தையர், அல்லது தமது ஆண்மக்கள், அல்லது தமது கணவன்மார்களின் ஆண்மக்கள், அல்லது தமது சகோதரர்கள், அல்லது தமது சகோதரர்களின் ஆண்மக்கள், அல்லது தமது சகோதரிகளின் ஆண்மக்கள், அல்லது தமது பெண்கள், அல்லது தமது அடிமைகள், அல்லது பெண்கள் மீது நாட்டமில்லாத (அவர்களை) அண்டி வாழும் (வயோதிப) ஆண்கள், அல்லது பெண்களின் மறைவிடங்கள் பற்றி விளங்கிக் கொள்ளாத சிறுவர்கள் ஆகியோரைத் தவிர ஏனையவர்களிடம் வெளிப்படுத்த வேண்டாம். தாம் மறைத்திருக்கும் தமது அலங்காரம் அறியப்படுவதற்காக தமது கால்களால் தட்டவும் வேண்டாம். நம்பிக்கையாளர்களே! நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருங்கள். (அந்நூர் 30,31)*

குறிப்பாக சிறுபாவங்களை விட்டும் தவ்பாச் செய்யுமாறும் பணித்துள்ளான் :

*நம்பிக்கை கொண்டோரே! ஒரு கூட்டத்தினர், மற்றொரு கூட்டத்தினரை பரிகாசம் செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். எந்தப் பெண்களும் மற்ற எந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்.) இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். உங்களுக்கிடையே நீங்கள் குறை கூற வேண்டாம். மேலும், பட்டப் பெயர்களால்*

*அழைக்கவும் வேண்டாம். நம்பிக்கை கொண்ட பின் தீய பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும். எவர்கள் (இவற்றை விட்டும்) மீளவில்லையோ அவர்கள்தாம் அநியாயக்காரர்கள். (ஹுஜுராத் : 11) .*

**“மக்களிடம் அழகிய குணத்துடன் பழகுவீராக!”**

இதுவும் இறையச்சத்தின் ஒரு பகுதியாகும். இதுவன்றி இறையச்சம் முழுமையடைய மாட்டாது. இதனை விளக்கிக் கூறவே தனியாகக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் அநேகர் இறையச்சம் என்பது அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளின்றி அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டியது மாத்திரமே என எண்ணிக் கொண்டிருக்கின்றனர். எனவே மக்களுடனும் அழகான முறையில் சேர்ந்து நடக்குமாறு நபியவர்கள் குறித்துக் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வினுடையவும் அடியார்களினுடையவும் கடமைகளை ஒருங்கிணைத்து சரிவர நிறைவேற்றுவது மிகவும் அரிதானதாகும். நபிமார்கள், உண்மையாளர்களில் பூரணத்துவத்தை அடைந்தவர்களால் தான் இது சாத்தியமாகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : *அழகிய குணமுடையவரே விசுவாசிகளில் பரிபூரணமானவராவார்.*[(1)]

மேலும் கூறினார்கள் : *ஒரு விசுவாசி தனது அழகிய குணத்தினால் இரவில் நின்று வணங்கி, பகலில் நோன்பு நோற்பவனின் தரத்தை அடைந்துவிடுகிறான்.*[(2)]

மேலும் கூறினார்கள் : *(மறுமையில்) தராசில் அழகிய குணத்தைக் காண கனமான எப்பொருளும் வைக்கப்படுவதில்லை. நற்குணமுள்ளவன் அதன் மூலம் தொழுகையாளி, நோன்பாளியின் தரத்தை அடைகின்றான்.*[(3)]

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (7402), அபூ தாவூத் (4682), திர்மிதி (1162), அவர்கள் இது “ஹஸன் ஸஹீஹ்” எனும் தரத்திலுள்ளதாகவும் கூறியுள்ளார்கள். அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள் ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப் (2660).*

*2.அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (24595), அபூதாவூத் (4682) -சிறு மாற்றத்துடன்- ஹாகிம் (24355), இது புஹாரி, முஸ்லிம் இருவரினதும் நிபந்தனைக்குட்பட்ட ஸஹீஹானதென அவர்கள் கூறியுள்ளார்கள். அஷ்ஷேக் அல்பானீ கூறுகின்றார் : (இமாம் ஹாகிமின்) இக்கருத்துக்கு இமாம் தஹபியும் உடன்பட்டுள்ளார்கள். ஆஇஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பாளர் முத்தலிப் ஹதீஸ்களை கற்ற விடயத்தில் கருத்து வேறுபாடில்லாவிட்டால் இந்த நபிமொழி அவ்விருவரும் (ஹாகிம், தஹபி) கூறியது போன்று ஸஹீஹானது தான். எனினும் பொதுவாக இந்நபிமொழி ஸஹீஹானது தான். (ஸில்ஸிலா ஸஹீஹா 794).*

*3.அறிவிப்பவர் : அபுத் தர்தாஃ (ரலி), ஆதாரம் : அஹ்மத் (27496), அபூதாவூத் (4799), திர்மிதி (2002), அவர்கள் இது “ஹஸன், ஸஹீஹ்” எனும் தரத்திலுள்ளதாகவும் கூறியுள்ளார்கள். எனினும் இந்நபிமொழியின் இரண்டாம்*

மேலும் கூறினார்கள்: அல்லாஹ்விற்கு மிக விருப்பத்திற்குரியவரும், மறுமையில் எனக்கு மிக நெருக்கமாக அமருபவரையும் உங்களுக்கு நான் கூறட்டுமா? என்று வினவ, ஆம், கூறுங்கள் என தோழர்கள் பதிலளித்தார்கள். அவர்தான் உங்களில் நற்குணமுள்ளவர் என நபியவர்கள் பகர்ந்தார்கள்.[1]

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அழகிய குணமுடையவர்க்கு நான் சுவனத்தில் உயர்ந்த இடத்தில் ஒரு மாளிகைக்கு பொறுப்பாளனாவேன்.[2]

நற்குணத்திற்கான விளக்கம் ஸலப் அறிஞர்களில் சிலரால் கூறப்பட்டுள்ளது.

நற்குணம் : கொடை, செலவளித்தல், சகிப்புத்தன்மை என இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.

அது முகமலர்ச்சி, நலவு செய்தல், நோவினையைத் தடுத்துக் கொள்ளல் என இமாம் இப்னுல் முபாரக் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

மக்களிடமிருந்து ஏற்படும் நோவினைகளை சகித்துக் கொள்வதே நற்குணம் என இமாம் அஹ்மத் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

மற்றுமொரு அறிஞர் கூறியுள்ளார் : நற்குணம் என்பது: அல்லாஹ்விற்காக கோபத்தை மெல்லுதல், பித்அத்வாதி, தீயவர்களைத் தவிர ஏனையோருக்கு முகமலர்ச்சியை வெளிப்படுத்தல், ஒழுக்கமூட்டுவதற்காகவோ, இஸ்லாமியத் தண்டனை நிறைவேற்றுவதற்காகவோ அன்றி தவறிழைத்தவர்களை மன்னித்துவிடல், அத்துமீறாமல் அநீதியிழைக்கப்பட்டவனுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கவோ தவறுகளைத் திருத்தவோ அன்றி

---

பகுதி -நற்குணமுள்ளவன் அதன் மூலம் தொழுகையாளி, நோன்பாளியின் தரத்தை அடைகின்றான் எனும் வார்த்தை- திர்மிதியில் மாத்திரமே பின்வரும் அறிவிப்பாளர் தொடரில் உள்ளது : குபைஸா இப்னு லைஸ் - முதர்ரிப் - அதாஃ. இமாம் திர்மிதி அவர்கள் : இச்செய்தி இந்த அறிவிப்பாளர் தொடரில் மாத்திரம் வந்துள்ள “கரீப்” எனும் வகையைச் சேர்ந்த செய்தியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இதன் அறிவிப்பாளர் தொடர் நல்லதென அஷ்ஷேக் அல்பானி தனது ஸில்ஸிலா ஸஹீஹாவில் (876) கூறியுள்ளதுடன், இந்த நபிமொழி முழுதும் ஸஹீஹ் என ஸஹீஹுத் தர்கீபில் (2641) கூறியுள்ளார்கள்.

1.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (6735), இப்னு ஹிப்பான் (485). இதன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹ் என “முஸ்னத் அஹ்மத்” நூலிற்குக் கருத்துரை எழுதும் போது அஷ்ஷேக் அஹ்மத் ஷாகிர் கூறியுள்ளார் (7035).

2.அறிவிப்பவர் : அபூ உமாமா (ரலி), ஆதாரம் : அபூதாவுத் (4800), அஷ்ஷேக் அல்பானி இதனை “ஹஸன்” என ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப் எனும் நூலில் (648) கூறியுள்ளார்கள். இதன் முழுமையான ஆய்வை ஸில்ஸிலா ஸஹீஹாவில் (373) பார்க்கலாம்.

அனைத்து முஸ்லிம்கள் மற்றும் (காபிர்களில்) ஒப்பந்தம் செய்து கொண்டோருக்கு நோவினை செய்யாமல் இருத்தல் என்பனவாகும்.

## ஹதீஸ் –19

### அல்லாஹ்வின் உதவியும் பாதுகாப்பும்

عن ابنِ عبَّاسٍ، رضيَ الله عنهمَا، قَال:

"كُنْتُ خَلْفَ النَّبِيِّ ﷺ يوْماً فَقال لِي: يَا غُلامُ، إِنِّي أُعلِّمكَ كَلِمَاتٍ: احْفَظِ اللهَ يَحْفَظْكَ، احْفَظِ اللهَ تَجِدْهُ تُجَاهَكَ، إِذَا سَأَلْتَ فَاسْأَل اللَه، وَإِذَا اسْتَعَنْتَ فَاسْتَعِنْ بِاللهِ، واعلَمْ: أَنَّ الأُمَّةَ لَو اجتَمعتْ عَلَى أَنْ يَنْفعُوكَ بِشيْءٍ، لَمْ يَنْفعُوكَ إِلاَّ بِشَيْءٍ قَد كَتَبَهُ اللهُ لَكَ، وإِنِ اجْتَمَعُوا عَلَى أَنْ يَضُرُّوك بِشَيْءٍ، لَمْ يَضُرُّوكَ إِلاَّ بَشَيْءٍ قَدْ كَتَبَهُ الله عليْكَ، رُفِعَتِ الأَقْلامُ، وجَفَّتِ الصُّحُفُ."

رواهُ التِّرمذيُّ وقَال: ((حديثٌ حسنٌ صَحيحٌ.))

وفي رواية غيرِ التِّرْمِذيِّ :

"احفظَ اللهَ تَجِدْهُ أَمَامَكَ، تَعَرَّفْ إِلَى اللهِ في الرَّخَاءِ يعرِفْكَ في الشِّدةِ، واعْلَمْ أَنّ مَا أَخْطَأَكَ لَمْ يَكُنْ لِيُصيبَك، وَمَا أَصَابَكَ لمْ يَكُن لِيُخْطِئَكَ واعْلَمْ أنَّ النَّصْرَ مَعَ الصَّبْرِ، وأَنَّ الْفَرَجَ مَعَ الْكَرْب، وأَنَّ مَعَ الْعُسرِ يُسْراً.

*அபுல் அப்பாஸ் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு நாள் நான் நபி (ஸல்) அவர்களின் பின்னால் அமர்ந்திருந்தேன்.! அப்போது அவர்கள் என்னிடம் சிறுவனே! நான் சில அறிவுரைகளைக் கற்றுத் தருகின்றேன் என்று சொன்னார்கள்:*

***நீ அல்லாஹ்வை பாதுகாத்துக்கொள். அவன் உன்னைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை பாதுகாத்துக்கொள். அவனை உனக்கு முன் கண்டுகொள்வாய். நீ கேட்டால் அல்லாஹ்விடமே கேள். உதவி தேடினால் அல்லாஹ்விடமே தேடு. அறிந்து கொள்! ஒட்டுமொத்த சமூகமும் ஒன்று திரண்டு உனக்கு ஏதாவது நன்மை செய்திட முயன்றாலும் உனக்கு அல்லாஹ் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்துள்ளதைக் காட்டிலும் அதிகமாக எந்த நன்மையையும் அவர்களால் செய்திட முடியாது. இன்னும் ஒட்டுமொத்த சமூகமும் ஒன்று திரண்டு உனக்கு ஏதாவது தீங்கிழைக்க முயன்றாலும் அல்லாஹ் உனக்கு ஏற்கனவே குறித்து வைத்தவற்றைக் கொண்டல்லாமல்***

***எந்தக் தீங்கையும் அவர்களால் செய்திட முடியாது. பேனாக்கள் உயர்த்தப்பட்டு விட்டன. ஏடுகள் காய்ந்து விட்டன.***

**ஆதாரம் : திர்மிதி *(2516)* .**

**திர்மிதி அல்லாத பிறிதொரு நபிமொழித் தொகுப்பில் பின்வருமாறு இடம் பெற்றுள்ளது :**

***நீ அல்லாஹ்வை பாதுகாத்துக்கொள். அவனை உன் முன் கண்டுகொள்வாய். நீங்கள் செழிப்பாக இருக்கும் போது அல்லாஹ்வை நினைவு கூறு. கஷ்டத்தின் போது அவன் உன்னை நினைவுகூர்வான். அறிந்து கொள்: உனக்குக் கிட்டாமல் சென்றவைகள் உனக்கு விதிக்கப்படவில்லை. உனக்குக் கிட்டியவைகள் உன்னைக் கடந்து சென்று விடும்படி விதிக்கப்படவில்லை.***

***பொறுமையுடன்தான் வெற்றியுண்டு. துன்பத்துடன்தான் விடிவுண்டு. கஷ்டத்துடனே தான் இலகுமுண்டு என்பதை அறிந்து கொள்.***

**விரிவுரை :**

*இந்நபிமொழி மார்க்க விடயங்களில் மகத்தான உபதேசங்களையும், பல பொது விதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எதுவரையெனில், ஓர் அறிஞர் கூறுகின்றார் : இந்நபிமொழியை ஆய்வு செய்த போது நான் திடுக்கிட்டு விட்டேன். நிலை தடுமாறிப் போனேன். இந்நபிமொழியை அறியாமலும், குறைவாக விளங்கியதும் எனக்கேற்பட்ட கைசேதமே!*

*(நூலாசிரியர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : இந்நபிமொழிக்கு பாரிய விரிவுரை ஒன்று எழுதியுள்ளேன்.*[1]

***“நீ அல்லாஹ்வை பாதுகாத்துக் கொள்”***

*அதாவது அவன் நிர்ணயித்துள்ள எல்லைகள், கடமைகள், அவனது ஏவல், விலக்கல்கள் போன்றவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கொள். இவற்றை பாதுகாப்பதென்பது : அவனது ஏவல்களை எடுத்து நடப்பதும், விலக்கல்களைத் தவிர்ந்து கொள்வதும், அவன் ஏவிய, அனுமதித்ததைத் தாண்டி தடை செய்ததன் பக்கம் செல்லாமல் எல்லையிலேயே நின்று கொள்ளல் என்பதுமாகும்.*

*மேற்கண்டவற்றைச் சரிவரப் பேணினால் அல்லாஹ் அல்குர்ஆனில்*

*1.இந்த விரிவுரையின் பெயர் : “நூருல் இக்திபாஸ் பீ மிஷ்காதி வஸிய்யதிந் நபிய்யி (ஸல்) லிப்னி அப்பாஸ்”. இது அச்சிடப்பட்டு மக்கள் மத்தியில் பரவலாக உள்ளது.*

சிலாகித்துக் கூறிய அவனது எல்லைகளைப் பேணுவோரில் ஒருவராகி விடுகின்றான்.

இதுதான் நீங்கள் வாக்களிக்கப்பட்டதாகும். (இது பாவத்திலிருந்து தன்னைப்) பேணி நடந்து (அல்லாஹ்விடம்) மீளுகின்ற ஒவ்வொருவருக்கும் உரியதாகும். எவர் அர்ரஹ்மானை மறைவிலும் அஞ்சி (அவனிடமே) மீளும் இதயத்துடன் வந்தாரோ (அவருக்கும் உரியதாகும்). (காப் : 32,33)

மேற்கண்ட வசனத்தில் இடம்பெற்றுள்ள பேணி நடப்பவர் என்பவர் அல்லாஹ்வின் கட்டளையைப் பேணியும், பாவத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டும் இருப்பவர் என விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

**“அவன் உன்னைப் பாதுகாப்பான்”**

அதாவது அல்லாஹ்வின் எல்லைகளைப் பாதுகாத்து, கடமைகளைப் பேணியவரை அல்லாஹ் பாதுகாக்கின்றான். ஏனெனில் செயல்களுக்கேற்பவே கூலியும் வழங்கப்படுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : “நீங்கள் என் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். நான் உங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுவேன்”. (பகரா:40).

**அல்லாஹ் தனது அடியானைப் பாதுகாப்பதில் இரு வகைகள் உள்ளன :**

**01.** உலக நலன்களைப் பாதுகாத்தல். அவனது உடல், உடமைகள், மனைவி, குழந்தைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதை உதாரணமாகக் கூறலாம். அல்லாஹ் கூறுகின்றான் : “அவனுக்கு முன்னும் பின்னும் தொடர்ந்து வரக்கூடிய (வான)வர்கள் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவனைப் பாதுகாக்கின்றனர். (அர் ரஃஉத் :11). இப்னு அப்பாஸ் (ரலி) கூறுகின்றார் : அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவனைப் பாதுகாக்கும் வானவர்களாவர். அவனது நிர்ணயிக்கப்பட்ட காலம் (மரணம்) வந்ததும் அவனை அவர்கள் விட்டுவிடுவார்கள்.

இளமையில் பலமாக இருக்கும் போது அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணுவோரை அல்லாஹ் அவர்களது முதுமையிலும், பலவீனத்தின் போதும் அவர்களைப் பாதுகாப்பான். செவிப்புலன், பார்வை, பலம், அறிவுக்கூர்மை போன்றவற்றின் மூலம் சுகம் அனுபவிக்க வைப்பான்.

நூறு வயதைக் கடந்தும் திடகாத்திரமாகவும், அறிவுக் கூர்மையுடனும் ஓர் அறிஞர் இருந்தார். ஒருநாள் கடுமையாகப் பாய்ந்து சென்றார். (அவரது முதுமை காரணமாக) பலர் அவரை கண்டித்தனர். அப்போது அவர் :

எமது இந்த உறுப்புக்களை நாம் இளமையில் பாவங்களை விட்டும் பாதுகாத்தோம். முதுமையில் அல்லாஹ் அவற்றை எமக்குப் பாதுகாத்துத் தந்துள்ளான் என்றார்.[1]

மறுபுறம் ஒரு ஸலப் அறிஞர் மக்களிடம் யாசிக்கும் ஒரு வயோதிபரைக் கண்டார். அப்போது அவர் : இந்த மனிதர் இளமையில் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பாழாக்கினார். முதுமையில் அல்லாஹ் அவரைப் பாழாக்கி விட்டான் என்று கூறினார்.

சிலவேளை அல்லாஹ் ஓர் அடியானின் நல்லறங்கள் காரணமாக அவனது சந்ததியையும் பாதுகாக்கின்றான். "அதன் கீழ் அவ்விருவருக்கும் சொந்தமான ஒரு புதையல் இருந்தது. இன்னும் அவ்விருவரின் தந்தை நல்லவராக இருந்தார்" (அல்கஹ்ஃப் : 82) என்ற வசனத்தில் அவ்விருவரும் தமது தந்தையின் நல்லறங்களாலேயே பாதுகாக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஸஈத் பின் முஸய்யிப் (ரஹ்) தனது புதல்வரைப் பார்த்து : "உனக்காக நான் எனது தொழுகையை அதிகப்படுத்துவேன். உன்னிலே நான் பாதுகாக்கப்படலாம்" என்று கூறிவிட்டு மேற்கண்ட வசனத்தை ஓதினார்கள்.

எந்தவொரு முஃமினும் அவனது சந்ததியிலும், சந்ததியின் சந்ததியிலும் அவனை அல்லாஹ் பாதுகாக்காமல் மரணிப்பதில்லை என உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறினார்கள்.

அல்லாஹ் ஒரு நல்ல மனிதர் மூலம் அவனது பிள்ளை, பேரப்பிள்ளை, சூழவுள்ளசிறு வீடுகள்அனைத்தையும் பாதுகாக்கின்றான். அல்லாஹ்வின் பாதுகாப்பிலும், மறைவிலுமே அவர்கள் இருந்து கொண்டிருப்பார்கள் என இமாம் முஹம்மது இப்னுல் முன்கதிர் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

பேணுதலானவர்களுக்கு அல்லாஹ் வழங்கும் பாதுகாப்பில் ஆச்சரியமானது என்னவெனில் இயல்பாகவே தீங்கிழைக்கும் உயிரினங்களைக் கூட இந்த மனிதனைப் பாதுகாக்க ஏற்பாடு செய்கின்றான்.

நபி (ஸல்) அவர்களின் அடிமை ஸபீனா ஒரு தடவை கடலில் பயணிக்கும் போது படகு உடைந்து விட்டது. அவர் ஒரு தீவிற்குச் சென்றார். அங்கு ஒரு சிங்கத்தைக் கண்டு அதன் பின்னாலேயே அது

1.அவர் இமாம் அபுத் தய்யிப் தாஹிர் பின் அப்துல்லாஹ் தாஹிர் அத்தபரீ என்ற பிரபல அறிஞரும் நீதவானுமாவார். இவர் தனது 102 ஆவது வயதில் மரணிக்கும் வரை தீர்ப்பு வழங்கிக் கொண்டும், பத்வா வழங்கிக் கொண்டும், கற்பித்துக் கொண்டும், நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொண்டும் இருந்தார். இவருடைய செய்தி அல்பிதாயா வந்நிஹாயா எனும் நூலில் ஹி 450ல் மரணித்தவர்களின் பட்டியலில் கூறப்பட்டுள்ளது.

பாதையைக் காட்டும் வரை நடந்து சென்றார். சரியான பாதையைக் கண்டு அதனை நிறுத்தியதும் வழியனுப்பும் விதத்தில் கர்ச்சித்து விட்டு திரும்பிச் சென்றது.[1]

இப்ராஹீம் பின் அத்ஹம் என்பவர் ஒரு தோட்டத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் போது அருகில் நர்சிஸஸ் பூக் காம்புடன் ஒரு பாம்பு அவர் விழிக்கும் வரை (ஈக்கள் மொய்க்காமல்) தட்டிக் கொண்டிருந்ததை அவதானிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் அல்லாஹ்வின் கட்டளைகளை வீணடிப்பவனை அவன் வீணடித்து விடுவான். எனவே அவன் வீணாகிப் போகின்றான். எந்தளவுக்கெனில் உதவுவார்கள் என எதிர்பார்க்கும் நெருங்கிய உறவுக்காரர்களிடம் இருந்து கூட நோவினை, தீங்குதான் வரும். ஸலப் அறிஞர்களில் ஒருவர் கூறுகின்றார் : நான் அல்லாஹ்விற்கு மாறு செய்யும் போது அதனை எனது பணியாளரிடமும், வாகனத்திலும் அறிந்து கொள்வேன்.

**02.** அல்லாஹ் அடியார்களைப் பாதுகாக்கும் முறைகளில் இரண்டாவது அவனது ஈமான், மார்க்க விடயத்தில் பாதுகாப்பதாகும். இரு வகைகளில் இதுவே சிறந்ததாகும். வழிகெடுக்கும் சிந்தனைகள், தடுக்கப்பட்ட ஆசைகள் போன்றவற்றை விட்டும் அவனை பாதுகாக்கின்றான். மரணிக்கும் போதும் அவனது மார்க்கத்தைப் பாதுகாத்து ஈமானுடன் மரணிக்கச் செய்கின்றான். அல்லாஹ் அவனது மார்க்க வரையறைகளைப் பேணும் முஃமின்களைப் பல வகைகளில் பாதுகாக்கின்றான். மார்க்கத்தை சீர்குலைக்கும் அனைத்திற்கும் தடையாக அமைகின்றான். அவற்றில் சிலதை அடியான் உணராமலும், மற்றும் சில வெறுக்கவும் செய்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் :

''தீங்கையும், மானக்கேடானதையும் அவரை விட்டும் நாம் தடுத்து விடுவதற்காக இவ்வாறு செய்தோம். நிச்சயமாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது அடியார்களில் ஒருவராவார்'' (யூஸுப் : 24).

பாவிகளைப் பற்றி இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறும்போது : ''அல்லாஹ்வை இலகுவாகப் பார்த்தார்கள், மாறு செய்தார்கள். அவனை அவர்கள் கண்ணியப் படுத்தியிருந்தால் அவன் அவர்களைப் பாதுகாத்திருப்பான்'' என்று கூறினார்கள்.

இப்னு மஸ்ஊத் (ரலி) கூறுகின்றார் : ஓர் அடியான் வியாபாரம் அல்லது தலைமைத்துவத்தை நாடி, அதற்குரிய வழிகளையும் இலகுபடுத்திக்

---

1.நூல் : ஹாகிம் (4235), தபரானி (6432) .

கொள்கின்றான். அல்லாஹ் அவனைப் பார்த்து விட்டு இவ்விடயத்தை இந்த அடியானை விட்டும் திருப்பி விடுங்கள். அதனை நான் அவனுக்கு இலகுபடுத்திக் கொடுத்தால் அவனை நரகிற்குள் நுழைவிக்க நேரிடும் என வானவர்களிடம் கூறி, அதனை அவ் அடியானை விட்டும் திருப்பி விடுகின்றான். ஆனால் அடியானோ, இன்னார் என்னை முந்திவிட்டான், இன்னார் என்னை ஏமாற்றிவிட்டான் எனப் புலம்பி குறி, சாஸ்திரம் பார்த்துக் கொண்டிருக்கின்றான். உண்மையில் அது அவனுக்கு அல்லாஹ்வின் அருளாகவே உள்ளது.

**“நீ அல்லாஹ்வைப் பாதுகாத்துக் கொள். அவனை உனக்கு முன் கண்டு கொள்வாய்”.**

இதன் கருத்து : யார் அல்லாஹ்வின் வரையறைகளைப் பாதுகாத்து அவனது கடமைகளைப் பேணி வருகின்றாரோ அவர் தனது சகல நிலைகளிலும் அல்லாஹ்வின் உதவியைக் கண்டுகொள்வார். எங்கு சென்றாலும் அவரைச் சூழ்ந்து, உதவி செய்து, பாதுகாத்து, அனுகூலம் புரிந்து, நேர்வழிப் படுத்துகின்றான். ஏனெனில் “நிச்சயமாக அல்லாஹ் தன்னை அஞ்சி நடப்போருடனும், நன்மை செய்பவர்களுடனும் இருக்கின்றான்” (நஹ்ல்:128). இந்த “உடனிருத்தல்” என்பதுதான் பிறிதொரு வசனத்தில் நபிமார்களான மூஸா (அலை), ஹாரூன் (அலை) அவர்களைப் பார்த்தும் கூறப்பட்டுள்ளது. “நீங்கள் இருவரும் அஞ்ச வேண்டாம். நான் உங்களுடனேயே கேட்டுக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருக்கின்றேன் (தாஹா : 46). இந்த “உடனிருத்தல்” அல்லாஹ்வின் உதவி, பலப்படுத்தல், பாதுகாத்தல் என்பவற்றை வேண்டி நிற்கின்றது. ஆனால் பின்வரும் வசனத்தில் இடம்பெறும் “உடனிருத்தல்” என்பது அவனது அறிவு, மக்களுடைய செயற்பாடுகளைக் கண்காணித்தல் என்ற கருத்தையே சுட்டிக் காட்டுகின்றது. இது அடியார்கள் அவனை அஞ்சுவதையே வேண்டி நிற்கின்றது.

“மூவரின் இரகசியப் பேச்சில் அவன் அவர்களில் நான்காமவனாக இருக்கின்றான். இன்னும், ஐவரில் அவன் அவர்களில் ஆறாமவனாக இருக்கின்றான். இதைவிடக் குறைவாகவோ, அல்லது கூடுதலாகவோ இருந்தாலும் அவர்கள் எங்கிருந்த போதிலும் அவன் அவர்களுடனேயே இருக்கின்றான்” (முஜாதலா : 07).

**“நீ செழிப்பாக இருக்கும் போது அல்லாஹ்வை நினைவு கூறு. கஷ்டத்தின் போது அவன் உன்னை நினைவுகூர்வான்”.**

அதாவது ஓர் அடியான் வசதியுடன் இருக்கும் போது அல்லாஹ்வை அஞ்சி, அவனது வரையறைகளைப் பாதுகாத்து, கடமைகளைப் பேணி

வந்தால் அதன் மூலம் அவன் அல்லாஹ்வை அறிந்தவனாகின்றான். அவனுக்கும் இரட்சகனுக்கும் இடையில் குறிப்பிட்ட ஓர் அறிமுகம் உருவாகின்றது. எனவே அடியானுக்குக் கஷ்டம் வரும்போது அவனை கண்டு கொள்கின்றான். வசதியுடன் இருக்கும் போது அல்லாஹ்வை அறிந்து கொண்டதற்குப் பதிலாக இப்போது அவன் அடியானைக் கவனிக்கின்றான். அவனை சோதனைகள் இடர்களிலிருந்து காப்பாற்றுகின்றான். இது அடியான் தனது இரட்சகனை நெருங்கி, அவனை நேசித்து, இவனது துஆவிற்குப் பதிலளிப்பதை வேண்டி நிற்கும் குறிப்பிட்ட ஓர் அறிமுகமாகும்.

**அடியான் இறைவனை அறிவது இரு வகைப்படும் :**

**1.** பொதுவான அறிமுகம். அது அல்லாஹ்வை இரட்சகனாக ஏற்று, உண்மைப்படுத்தி, விசுவாசிப்பதாகும். இது அனைத்து முஃமின்களுக்கும் பொதுவானது.

**2.** பிரத்தியேகமான அறிமுகம். இது அல்லாஹ்வின் பால் முழுமையாக சாய்தல், அவனின் பக்கம் ஒதுங்குதல், அவன் மூலம் தனிமையைப் போக்கி அமைதியடைதல், அவனை நினைவு கூர்வதன் மூலம் அமைதி பெறல், அவனுக்கு மாறு செய்வதையிட்டு வெட்கப்படல், மரியாதையுடன் அவனுக்கு அஞ்சுதல் ஆகியவற்றை வேண்டி நிற்கின்றது.

இந்த பிரத்தியேகமான அறிமுகத்தைச் சூழவே ஆரிபீன்கள் எனும் ஞானிகள் சுற்றி வருகின்றனர். ஓர் அறிஞர் கூறுகின்றார்: “உலக வறியவர்கள் இவ்வுலகிலுள்ள மிகச் சிறந்ததை சுவைக்காமலேயே பிரிந்து சென்று விட்டார்கள்”. அது என்ன? என வினவப்பட்ட போது அல்லாஹ்வை அறிதல் என்றார்.

**அல்லாஹ் தனது அடியானை அறிவதும் இரு வகைப்படும்.**

**01.** பொதுவான அறிமுகம் : இது அல்லாஹ் தனது அடியானை அறிந்து, அவர்கள் மறைத்திருப்பது, வெளிப்படுத்தியது அனைத்தையும் அறிவதாகும்.

**02.** பிரத்தியேகமான அறிமுகம் : இது அல்லாஹ் தனது அடியானை நேசித்து, தன் பக்கம் நெருக்கமாக்கி வைத்து, அவனது பிரார்த்தனைக்குப் பதிலளித்தல், இடர்களிலிருந்து அவனைக் காப்பாற்றுதல் போன்றவற்றை வேண்டி நிற்கும் அறிமுகமாகும். இதனைத் தான் பின்வரும் நபிமொழி சுட்டிக் காட்டுகின்றது :

“உபரியான வணக்கங்கள் மூலம் எனது அடியான் அவனை நான் நேசிக்கும் வரை என்னை நெருங்கிக் கொண்டே இருக்கின்றான். அவனை நான் நேசித்து விட்டால், நான் அவன் கேட்கும் செவிப்புலனாகவும், பார்க்கும் பார்வையாகவும், பிடிக்கும் கையாகவும், நடக்கும் காலாகவும் நான் ஆகிவிடுகின்றேன். அவன் என்னிடம் கேட்டால் அவனுக்கு நிச்சயமாகக் கொடுக்கின்றேன். அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினால் அதை நான் அவனுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்றேன்”. [(1)]

சுருக்கமாகக் கூறின் யார் வசதியுடன் இருக்கும் போது அல்லாஹ்வை அஞ்சி கட்டுப்பட்டு நடக்கிறாரோ அவருடைய கஷ்டத்தின் போது அல்லாஹ் உதவி செய்து மென்மையாக நடந்து கொள்வான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : கஷ்டங்களின் போது அல்லாஹ் பதிலளிப்பது யாருக்கு மகிழ்ச்சியாக உள்ளதோ அவர் வசதியுடன் இருக்கும் போது பிரார்த்தனையை அதிகப்படுத்தட்டும்.[(2)]

**“நீ கேட்டால் அல்லாஹ்விடமே கேள். உதவி தேடினால் அல்லாஹ்விடமே உதவி தேடு”**

இது “உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவியும் தேடுகிறோம்” (அல்பாத்திஹா :05) எனும் வசனத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

அல்லாஹ்விடம் கேட்பதென்பது அவனிடம் பிரார்த்திப்பதும் (பதிலை) அவனிடம் எதிர்பார்ப்பதுமாகும். பிரார்த்தனை என்பதே ஒரு வணக்கமாகும்.

**“பேனாக்கள் உயர்த்தப்பட்டு விட்டன. ஏடுகள் காய்ந்து விட்டன”**

மற்றுமொரு அறிவிப்பில் “நிகழக்கூடிய அனைத்தையும் எழுதியதும் பேனா காய்ந்து விட்டது” என இடம்பெற்றுள்ளது.

இது ஆதியிலேயே படைப்பினங்களின் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து விதிகளும் எழுதி முடிக்கப்பட்டதை சிலேடையாகக் கூறுவதாகும். ஏனெனில் ஏடுகளில் எழுதி முடிக்கப்பட்டு, அதன் காலமும் நீண்டால் அதிலிருந்து பேனாக்கள் உயர்த்தப்பட்டு விட்டன என்பதே அர்த்தமாகும்.

---

1.அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6502), இது இந்நூலின் 38ம் நபிமொழியாகும், இதன் விரிவுரை அங்கு கூறப்படும்- இன்ஷா அல்லாஹ்-.

2.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : திர்மிதீ (3382), அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸில்ஸிலா ஸஹீஹாவில் (593) பதிந்துள்ளார்கள்.

பேனாக்களும் காய்ந்து விட்டன. மையினால் எழுதப்பட்ட விடயங்களும் காய்ந்து விட்டன. பேனாவினால் மையைப் பயன்படுத்தி எழுதப்பட்ட ஏடுகளும் காய்ந்து விட்டன. இது மிக அழகான, மிகப் பொருத்தமான சிலேடைகளில் ஒன்றாகும்.

**"அறிந்து கொள்! ஒட்டுமொத்த சமூகமும் ஒன்று திரண்டு உனக்கு ஏதாவது நன்மை செய்திட முயன்றாலும் உனக்கு அல்லாஹ் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்துள்ளதைக் காட்டிலும் அதிகமாக எந்த நன்மையையும் அவர்களால் செய்திட முடியாது. இன்னும் ஒட்டுமொத்த சமூகமும் ஒன்று திரண்டு உனக்கு ஏதாவது தீங்கிழைக்க முயன்றாலும் அல்லாஹ் உனக்கு ஏற்கனவே குறித்து வைத்தவற்றைக் கொண்டல்லாமல் எந்தத் தீங்கையும் அவர்களால் செய்திட முடியாது."**

ஓர் அடியானுக்கு இவ்வுலகில் ஏற்படும் நலவு, கெடுதிகள் அனைத்தும் அவனுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டது என்பதே இதன் அர்த்தமாகும். *"அல்லாஹ் எமக்கு விதித்ததைத் தவிர வேறு எதுவும் எம்மைப் பீடிக்காது என (நபியே!) நீர் கூறுவீராக" (தவ்பா :51)*

*"பூமியிலோ, உங்களிலோ எந்தவோர் துன்பம் நேர்ந்தாலும் அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னர் பதிவேட்டில் இல்லாமலில்லை" (ஹதீத் : 22).*

*"நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்தாலும் கொலை எவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்ததோ அவர்கள் தமது களங்களுக்குச் சென்றிருப்பார்கள் என்று நீர் கூறுவீராக" (ஆல இம்ரான் : 154).*

**"நீர் வெறுப்பதில் பொறுமை காப்பதில் அதிக நலவுள்ளது என்பதை அறிந்துகொள்".**

அதாவது, ஓர் அடியானுக்கு விதிக்கப்பட்டுள்ள நோவினைகளும் சோதனைகள் ஏற்படும் போது அதற்காக பொறுத்தால் அப்பொறுமையில் அவனுக்கு நிறைய நலவுகள் உள்ளன.

சோதனைகளின் போது விதியை ஏற்றுக் கொள்வோருக்கு இரு படித்தரங்கள் உள்ளன.

**01.** அதனை மனப்பூர்வமாக ஏற்றுப் பொருந்திக் கொள்வதாகும். இதுதான் மிக மிக உயர்ந்த படித்தரமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : *"அல்லாஹ்வின் அனுமதியின்றி எத்துன்பமும் நிகழ்வதில்லை. யார் அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கின்றாரோ, அவரது உள்ளத்தை அவன் நேர்வழியில் செலுத்துவான். அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன்" (தகாபுன் : 11).*

அல்கமா (ரஹ்) கூறினார்கள் : இது ஒரு மனிதனுக்கு ஏற்படும் சோதனையாகும். அது அல்லாஹ்விடமிருந்து தான் வருகின்றது என்பதை அறிந்து, முழுமையாக அதற்கு சரணடைந்து, பொருந்திக் கொள்வதாகும்.

அல்லாஹ் ஒரு விதியைத் தீர்மானித்தால் அது பொருந்திக் கொள்ளப்படுவதை விரும்புகின்றான் என அபுத் தர்தாஃ (ரலி) கூறியுள்ளார்கள்.

நான் காலையில் கண் விழிக்கும் போது விதியுடைய நிலைகளைப் பொருந்திக் கொள்வதைத் தவிர வேறு மகிழ்ச்சி ஏதும் இல்லை என உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறுகின்றார்கள்.

இந்நிலையை அடைந்த அனைவரினது வாழ்வும் இன்பகரமானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் தான் இருக்கும்.

“ஆணோ அல்லது பெண்ணோ நம்பிக்கை கொண்ட நிலையில் நல்லறம் புரிந்தால் அவருக்கு நல்வாழ்வு அளிப்போம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றிற்காக அவர்களது கூலியை நாம் அவர்களுக்கு வழங்குவோம்” (நஹ்ல் : 97)

நல்வாழ்வு என்பது பொருந்திக் கொள்வதும், போதுமென்ற தன்மையுமாகும் என ஒரு ஸலப் அறிஞர் கூறியுள்ளார்.

விதியைப் பொருந்திக் கொள்வோர் சிலவேளை சோதிப்பவனின் மதிநுட்பத்தையும், சோதனையில் அடியானுக்கு அவன் வைத்திருக்கும் நலவையும், அவ்விதியில் (அல்லாஹ் நீதமானவன் என்பதில்) சற்றும் சந்தேகப்பட முடியாதவன் என்பதையும் கவனத்தில் எடுப்பார்கள். இன்னும் சிலவேளை விதியைப் பொருந்திக் கொள்வதன் கூலியை கவனத்தில் எடுப்பார்கள். அப்போது சோதனையின் வலிகளையெல்லாம் மறந்து விடுவார்கள். வேறு சிலவேளை சோதிப்பவனின் மகத்துவம், கண்ணியம், பூரணத்துவம் போன்றவற்றை கவனத்தில் எடுத்து, வலியை உணராதளவு அதிலேயே லயித்துப் போய்விடுவார்கள். அல்லாஹ்வை நன்கறிந்த நேசிக்கக் கூடியவர்களால் தான் இந்நிலையை அடைய முடியும். எந்தளவுக்கெனில் சோதனைகள் தமது நேசனிடமிருந்து தான் வருகின்றன என்பதை உணர்வதால் அதனை வைத்து சிலவேளை இன்பமுறவும் செய்வார்கள்.

**02.** சோதனைக்காக பொறுமையாக இருத்தல். இப்படித்தரம் விதியைப் பொருந்திக் கொள்ள முடியாதவர்களுக்காகும். பொருந்திக் கொள்வது மேலதிகமான விரும்பத்தக்க சிறப்பாகும். ஆனால் பொறுமை முஃமின்களுக்கு கடமையானதாகும்.

பொருத்தம் அரிதானதாகும். ஆனால் பொறுமை விசுவாசியின் கட்டாயத் தேர்வாகும் என ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறினார்கள்.

**இரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாடு :**

பொறுமை : துன்பம் ஏற்படும் போது கோபப்படாமல் மனதைக் கட்டுப்படுத்தல், அத்துன்பம் நீங்க வேண்டுமென எதிர்பார்த்தல், மற்றும் பொறுமையிழந்து செயற்படாமல் உறுப்புக்களைக் கட்டுப்படுத்தல்.

பொருத்தம் : விதியை ஏற்க மனது விரிவடைதல், அத்துன்பம் நீங்க வேண்டுமென எதிர்பார்ப்பதைத் தவிர்த்தல், நோவினையை உணர்ந்தாலும் மன உறுதியின் காரணத்தால் பொருத்தம் அதை இலகுவாக்கிவிடும். பொருந்திக் கொள்வது வலுவடைந்தால் முன்னர் கூறியது போல் வலியைக் கூட உணராமல் போகலாம்.

**"நிச்சயமாக கஷ்டத்துடனே தான் இலகும் இருக்கின்றது"**

இது "அல்லாஹ் கஷ்டத்தின் பின் இலகுவை விரைவில் ஏற்படுத்துவான்" (தலாக்:07) எனும் வசனத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

துன்பத்துடன் விடிவு, கஷ்டத்துடன் இலகு சேர்ந்திருப்பதன் இரகசியம் என்னவெனில் : துன்பம் கடுமையாகி, பெரிதாகி அதன் முடிவிற்கே சென்றுவிட்டால் படைப்பினங்கள் மூலம் அது நீங்குவதில் அடியானுக்கு நிராசை ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ்வுடன் மாத்திரமே அவனது உள்ளம் தொடர்பாகிறது. இதுதான் உண்மையாக அல்லாஹ்வின் மீது வைக்கும் தவக்குலாகும். இது தேவைகள் வேண்டப்படவும், நிறைவேற்றப்படவும் பிரதான காரணிகளில் ஒன்றாகும். ஏனெனில் அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுவோருக்கு (தவக்குல்) அவனே போதுமானவனாகும். "எவர் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அவனே போதுமானவன்" (தலாக் : 03).

மேலும் ஒரு விசுவாசி அவனது விடிவு தாமதிக்கும் போது, பல தடவை பிரார்த்தித்தும் அதற்குரிய பிரதிபலன் எந்தவொன்றும் தென்படாத போது தன்னைத் தானே நொந்து கொள்ள ஆரம்பிக்கின்றான். நீ செய்தவற்றின் காரணமாகத் தான் சோதிக்கப்படுகிறேன். உன்னில் நலவு இருந்திருந்தால் பதிலளிக்கப்பட்டிருப்பேன் என தனது ஆத்மாவையே கடிந்து கொள்வான். இது பல வணக்கங்களை விட அல்லாஹ்விற்கு மிக விருப்பமானது. ஏனெனில் இது ஓர் அடியான் தனது இரட்சகனிடம் மனமுடைந்து தான் சோதனைகள் இறங்குவதற்கும், பிரார்த்தனை ஏற்கப்படாமலிருப்பதற்கும் தகுதியானவன் தான் என்பதை ஏற்றுக் கொள்ள வைக்கின்றது. எனவே இதுபோன்ற நேரத்தில் பதிலளிப்பதும், துன்பங்களை நீக்குவதும் துரிதப்

படுத்தப்படுகின்றது. ஏனெனில் அல்லாஹ் மனமுடைந்தவர்களுக்காகவே அவர்களுடன் இருக்கின்றான்.

இது பற்றிய ஓர் அரபுக் கவிதையின் தமிழ் சுருக்கம் வருமாறு :

காலம் தொடர்ந்து தரும் துன்பங்கள் நீடிக்காமலிருக்கவும், அதிலிருந்து விடிவு கிடைக்கவும் நீர் எதிர்பார்க்கலாம்.

அல்லாஹ் விடிவைத் தரலாம். ஏனெனில் அவனது படைப்புக்களில் நாளாந்தம் அவனுக்கு ஒவ்வொரு விடயம் உள்ளது.

கஷ்டம் ஏற்பட்டால் இலகுவை எதிர்பார்த்திரு, ஏனெனில் கஷ்டத்தைத் தொடர்ந்து இலகு வரும் என்பதை அல்லாஹ் தீர்மானித்து விட்டான்.

# ஹதீஸ் –20

## வெட்கம் ஈமானின் ஒரு பகுதி

عَنْ أَبِي مَسْعُودٍ الْبَدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ:

«إِنَّ مِمَّا أَدْرَكَ النَّاسُ مِنْ كَلَامِ النُّبُوَّةِ الْأُولَى: إِذَا لَمْ تَسْتَحْيِ، فَاصْنَعْ مَا شِئْتَ» رَوَاهُ الْبُخَارِيُّ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***முந்திய இறைதூதர்களிடமிருந்து மக்கள் பெற்றுக் கொண்ட வார்த்தைகளுள் ஒன்று, 'நீ வெட்கப்படவில்லை என்றால் விரும்பியதைச் செய்து கொள்'.***

*அறிவிப்பவர் : அபூ மஸ்ஊத் அல்பத்ரீ (ரலி), ஆதாரம் : புஹாரி (3484).*

**விரிவுரை :**

***“முந்திய இறைத்தூதர்களிடமிருந்து மக்கள் பெற்றுக் கொண்ட வார்த்தைகளுள் ஒன்று”***

இது முந்திய நபிமார்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டு, மக்கள் மத்தியில் காணப்பட்டு, வாழையடி வாழையாக அறிவிக்கப்பட்டு வந்துள்ள ஒரு செய்தி என்பதையே மேற்கண்ட வாசகம் சுட்டிக் காட்டுகின்றது. முந்திய நபித்துவங்களும்[1] இச்செய்தியை எடுத்து வந்து, இச்சமூகத்திற்குக் கிடைக்கும் வரை மக்கள் மத்தியில் பரவலாக இருந்துள்ளது என்பதை அறிவிக்கின்றது.

*1.நுபுவ்வத், தனப்புஆத் போன்ற வார்த்தைகள் வஹியிற்கு மாத்திரம் பொருந்தும் மார்க்க ரீதியான பரிபாசையாகும். எதிர்காலத்தில் நடைபெற இருப்பதை முன்கூட்டியே கூறும் தீர்க்க தரிசனத்திற்கு பல பொதுமக்களும் புத்திஜீவிகளும் இவ்வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர். இது தவறாகும். தீர்க்கதரிசனத்திற்கு “ஊகம்” (எதிர்வுகூறல்) போன்ற வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தலாம்.* ***(அப்துல் அஸீஸ் அத்தரீபீ).***

**“நீ வெட்கப்படவில்லை என்றால் விரும்பியதை செய்”**

இதனை இரு வகையாக விளங்கலாம் :

**01.** இது ஓர் ஏவலல்ல. மாறாக தூற்றக்கூடிய ஒரு தடை. இக்கருத்துடையோர் இரு வழிகளில் இதனை விளங்குகின்றனர் :

**1.** இது எச்சரிக்கைக்காகக் கூறப்பட்டது. அதாவது உனக்கு வெட்கம் இல்லையென்றால் நீ விரும்பியதை செய்து கொள். அதற்கு அல்லாஹ் கூலி தருவான் என்பதே இதன் அர்த்தமாகும். உதாரணமாக: *“நீங்கள் விரும்பியதைச் செய்து கொண்டிருங்கள். நிச்சயமாக அவன் நீங்கள் செய்பவற்றைப் பார்ப்பவன்” (புஸ்ஸிலத் : 40), “எனவே அவனையன்றி நீங்கள் விரும்புபவற்றை வணங்குங்கள்” (ஸுமர் : 15)* போன்ற வசனங்களைக் குறிப்பிடலாம். இக்கருத்தை அபுல் அப்பாஸ் ஸஃலப் போன்ற சிலர் தெரிவித்துள்ளனர்.

**2.** வசன அமைப்பில் ஏவலாகவும் கருத்தில் தகவலாகவும் உள்ளது. வெட்கப்படாதவன் தான் நினைத்ததை செய்வான் என்பதே இதன் அர்த்தமாகும். அருவறுக்கத்தக்க விடயங்களைச் செய்யத் தடையாக இருப்பது வெட்கம் தான். அதனை இழந்தவன் அனைத்து மானக்கேடான, பாவச் செயல்களிலும் மூழ்கி விடுவான். இது அபூ உபைத் அல் காஸிம் பின் ஸல்லாம் (ரஹ்), இப்னு குதைபா (ரஹ்), முஹம்மத் பின் நஸ்ர் அல்மர்வஸீ (ரஹ்) போன்றோரின் தெரிவாகும். இதே கருத்தை அறிவிக்கும் ஒரு வார்த்தையை இமாம் அஹ்மத் கூறியதாக இமாம் அபூதாவூத் அறிவித்துள்ளார்கள்.

**02.** இது வெளிப்படையான ஏவலாகும். அதாவது நீ செய்ய விரும்பும் செயலைப் பார்த்து அல்லாஹ்வோ, மக்களோ வெட்கப்படக் கூடியதாக இல்லாவிட்டால் அதில் விரும்பியதை செய்து கொள் என்பதே இதன் அர்த்தமாகும்.

நபி (ஸல்) அவர்கள் வெட்கத்தை ஈமானின் ஒரு கிளையாக ஆக்கியுள்ளார்கள்.

*'அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒருவர் தம் சகோதரர் (அதிகம்) வெட்கப்படுவதைக் கண்டித்துக் கொண்டிருந்த போது அவ்வழியே நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். உடனே, 'அவரை(க் கண்டிக்காதீர்கள்;) விட்டு விடுங்கள். ஏனெனில், நிச்சயமாக வெட்கம் ஈமான் எனும் இறைநம்பிக்கையின் ஓரம்சமாகும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்”.*[1]

---

*1.அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (24), முஸ்லிம் (36).*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வெட்கம் நன்மையே தரும். மற்றுமொரு அறிவிப்பில் வெட்கம் அனைத்தும் நன்மையே எனக் கூறினார்கள்.[1]

**வெட்கம் இரு வகைப்படும் :**

**01.** மனித முயற்சியின்றி இயல்பாகவே அவனிடம் இருக்கும் வெட்கக் குணம். இது அல்லாஹ் ஓர் அடியாருக்கு வழங்கும் மிக மகத்தான குணங்களில் ஒன்றாகும்.

**02.** அல்லாஹ்வையும், அவனது மகத்துவத்தையும் அறிவதாலும் அவன் தனது அடியார்களிடம் நெருங்கி அவர்களை அறிந்திருப்பதாலும் பெற்றுக் கொள்ளக்கூடிய வெட்க சுபாவம். இது ஈமானின் உயர்ந்த விடயங்களில் ஒன்றாகும். மாறாக இது இஹ்ஸான் எனும் உளத் தூய்மையிலேயே உயர்ந்த தர்மமாகும்.

சிலவேளை அல்லாஹ்வின் அருட்கொடைகளை மீட்டிப்பார்த்து, அவற்றுக்கு நன்றி செலுத்துவதில் ஏற்பட்டுள்ள கவனயீனத்தை மீட்டிப்பார்க்கும் போது அல்லாஹ்விடம் வெட்கப்பட வேண்டிய நிலை உருவாகலாம்.

ஓர் அடியானிடத்திலிருந்து இயற்கையான, அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட வெட்கம் உறுவப்பட்டுவிட்டால் மானக்கேடான விடயங்களைச் செய்வதை விட்டும் தடுக்கக் கூடிய எந்த சக்தியும் அவனிடம் இருக்கமாட்டாது. எனவே அவன் ஈமானே அற்றவனைப் போலாகி விடுவான். அல்லாஹ்வே மிக்க அறிந்தவன்.

1. அறிவிப்பவர் : இம்ரான் பின் ஹுஸைன் (ரலி), ஆதாரம் : புஹாரி (6117), முஸ்லிம் (33)

# ஹதீஸ் –21

## ஈமானில் உறுதி

عَنْ سُفْيَانَ بْنِ عَبْدِ اللهِ رَضِيَ اللهُ عَنْهُ، قَالَ: قُلْتُ:

يَا رَسُولَ اللهِ، قُلْ لِي فِي الْإِسْلَامِ قَوْلًا، لَا أَسْأَلُ عَنْهُ أَحَدًا غَيْرَكَ، قَالَ: قُلْ آمَنْتُ بِاللهِ، ثُمَّ اسْتَقِمْ» رَوَاهُ مُسْلِمٌ.

*ஸுஃப்யான் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :* ***"அல்லாஹ்வின் தூதரவர்களே! இஸ்லாத்தில் உங்களைத் தவிர வேறு யாரிடமும் கேட்டிராத ஒரு வார்த்தை எனக்குக் கூறுங்கள்" என்று நான் கேட்டேன். 'நான் அல்லாஹ்வை விசுவாசித்து விட்டேன்' என்று கூறி அதில் உறுதியாயிருங்கள்!" என அவர்கள் கூறினார்கள்.***

*ஆதாரம் : முஸ்லிம் (38).*

**விரிவுரை :**

***"இஸ்லாத்தில் உங்களைத் தவிர வேறு யாரிடமும் கேட்டிராத ஒரு வார்த்தை எனக்குக் கூறுங்கள்"*** *என்ற ஸுஃப்யான் (ரலி) அவர்களின் கூற்று.*

வேறொருவரை நாடிச் செல்லும் தேவையேற்படாதவாறு இஸ்லாத்தைப் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வார்த்தையை நபியவர்களிடம் அந்நபித்தோழர் வேண்டி நின்றார். நபியவர்கள் : "நான் அல்லாஹ்வை விசுவாசித்து விட்டேன்" என்று கூறி, "அதில் உறுதியாக இருங்கள்" என பதிலளித்தார்கள். மற்றுமொரு அறிவிப்பில் "எனது இரட்சகன் அல்லாஹ் என்று கூறி, அதில் உறுதியாயிருங்கள்" எனவுள்ளது. இது பின்வரும் வசனத்தினூடாக பெறப்பட்டதாகும்.

*"நிச்சயமாக எவர்கள் "எங்கள் இரட்சகன் அல்லாஹ்வே" எனக் கூறி, பின்னர் (அதில்) உறுதியாக இருக்கிறார்களோ, அவர்கள் மீது வானவர்கள் இறங்கி, "நீங்கள் அச்சப்பட வேண்டாம். துக்கப்படவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் பெறுங்கள்" (என்று கூறுவர்)". (புஸ்ஸிலத் : 30)*

“அதில் உறுதியாக இருப்பவர்கள்” என்பதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள் “அல்லாஹ்விற்கு எந்தவொன்றையும் இணையாக்காதவர்கள்” என விளக்கமளித்துள்ளார்கள். அல்லாஹ்வையன்றி வேறு இறைவனைத் திரும்பிப் பார்க்காதவர்கள், தமது இரட்சகன் அல்லாஹ்தான் என்பதில் உறுதியாக இருந்தவர்கள் என வேறு இரு கருத்துக்களும் அன்னாரைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.[1]

ஓரிறைக் கொள்கையில் உறுதியாக இருத்தல் என விளக்கமளித்தோரின் நோக்கம் நரகத்தில் (நிரந்தரமாக) இருப்பதைத் தடுக்கும் பரிபூரண தவ்ஹீதாக இருக்கலாம். அது தான் லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் கலிமாவின் கருத்தை வேரூன்றச் செய்தலாகும். இக்கலிமாவில் வரும் “இலாஹ்” என்பதன் விளக்கம் என்னவெனில் அச்சம், கண்ணியம், மரியாதை, நேசம், ஆதரவு, பொறுப்புச் சாட்டல், பிரார்த்தனை என அனைத்திலும் மாறு செய்யப்படாமல் கட்டுப்படக் கூடியவனாகும். அனைத்துப் பாவங்களும் தவ்ஹீதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையே. ஏனெனில் அவை மனோ இச்சைக்குக் கட்டுப்பட அழைக்கும் ஷைத்தானுக்கு பதிலளிப்பதாகும். “தனது மனோ இச்சையைத் தனது கடவுளாக எடுத்தவனைப் பார்த்தீரா?” (ஜாஸியா:23). அவன்தான் எதை ஆசைப்பட்டாலும் அதை செய்யக் கூடியவன் என இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறியுள்ளார்கள். இது தவ்ஹீதில் உறுதியாக இருப்பதற்கு முரண்படுகின்றது.

**“அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்”** என்ற அறிவிப்பின் பிரகாரம் கருத்து தெளிவாகவே இருக்கின்றது. ஏனெனில் ஸலப் அறிஞர்கள், ஹதீஸ் அறிஞர்கள் அனைவரிடத்திலும் ஈமானிற்குள் நற்செயல்களும் அடங்குகின்றன.

“(நபியே!) நீரும், (ஷிர்க்கிலிருந்து) மீண்டு உம்முடன் இருப்போரும் உமக்கு ஏவப்பட்டவாறு நிலைத்து நிற்பீர்களாக! இன்னும் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அவன் நீங்கள் செய்பவற்றைப் பார்ப்பவனாவான்”. (ஹூத் : 112).

எனவே அல்லாஹ் நபிக்கும் அவருடன் சேர்த்து (ஷிர்க்கிலிருந்து) மீண்டு வந்தவர்களுக்கும் உறுதியாக நிலைத்திருக்குமாறும், அதனைத் தாண்டி பாவத்தின் பால் செல்ல வேண்டாமெனவும் பணித்துள்ளான். மேலும் அவர்களுடைய செயற்பாடுகளை அவன் பார்த்துக் கொண்டும், அறிந்து கொண்டும் இருக்கிறான் எனவும் அறிவித்துள்ளான்.

1.மன உறுதியின் மூலம்தான் மரணத்தின் இடையூறுகளில் இருந்து அபயமடைந்து, அதற்காக எந்நேரமும் தயாராக இருப்பான். தனது மறுமை எப்போது நிகழும் என எந்தவொரு அடியானுக்கும் தெரியாது. **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ).**

இமாம் குஷைரீ உட்பட மற்றும் சிலர் கூறுகின்றனர் : ஓர் அறிஞர் கூறுகின்றார்: நான் நபி (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு: “அல்லாஹ்வின் தூதரே தாங்களை ஹூத் மற்றும் அதன் உடன்பிறப்பு அத்தியாயங்களும் நரைக்கச் செய்து விட்டதாகக் கூறினீரே, அது என்ன வசனம்?” என்று கேட்டதற்கு, நபியவர்கள் : “உமக்கு ஏவப்பட்டவாறு நிலைத்திருப்பீராக என்ற வசனமாகும்” என்றார்கள்.[1]

இஸ்திகாமத் (நிலைத்திருத்தல் / உறுதியாயிருத்தல்) என்பது நேரான சரியான பாதையில் -வேறு திசைகளுக்குச் செல்லாமல்- செல்லுதல் ஆகும்.

உள்ரங்க, வெளிப்படையான அனைத்து கட்டளைகளையும் செயற்படுத்தல், அனைத்துத் தடைகளையும் தவிர்ந்து கொள்ளல் போன்றவையும் இஸ்திகாமத்தில் உள்ளடங்குகின்றன. எனவே மார்க்கத்தின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாகவே இவ் உபதேசம் மாறியிருக்கின்றது.

1. “ஹூத், வாகிஆ, முர்ஸலாத், அந்நபஃ, அத்தக்வீர் ஆகிய அத்தியாயங்கள் என்னை நரைக்கச் செய்துவிட்டன” எனும் நபிமொழி திர்மிதி (3297), ஹாகிம் (3314) போன்ற நூட்களில் உள்ளன. இமாம் புஹாரியின் நிபந்தனைப்படி இது ஸஹீஹ் என இமாம் ஹாகிம் கூறியுள்ளார். ஆனால் இக்கனவு இமாம் பைஹகியின் “ஷுஅபுல் ஈமான்” எனும் நூலில் இடம்பெறுவதாக இமாம் ஸுயூதி தனது துர்ருல் மன்ஸூர் எனும் நூலில் ஸூரா ஹூதின் விளக்கத்தில் கூறியுள்ளார்கள். இதனை இச்சந்தர்ப்பத்தில் கூறுவதில் பலனேதும் இல்லையென்றே நினைக்கிறேன். ஏனெனில் மார்க்க ரீதியாக உறுதியான, அல்லது ஐயத்திற்கிடமான தகவலை இக்கனவுகள் தரப்போவதில்லை.

# ஹதீஸ் –22

## சுவனத்தில் நுழையும் வழிகள்

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ رَضِيَ اللهُ عَنْهُمَا :

"أَنَّ رَجُلًا سَأَلَ رَسُولَ اللهِ ﷺ فَقَالَ: أَرَأَيْتَ إِذَا صَلَّيْتُ الْمَكْتُوبَاتِ، وَصُمْتُ رَمَضَانَ، وَأَحْلَلْتُ الْحَلَالَ، وَحَرَّمْتُ الْحَرَامَ، وَلَمْ أَزِدْ عَلَى ذَلِكَ شَيْئًا، أَأَدْخُلُ الْجَنَّةَ؟ قَالَ: "نَعَمْ" رَوَاهُ مُسْلِمٌ.

*ஒரு மனிதர் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கேட்டார்.* **“நான் கடமையாக்கப்பட்ட தொழுகைகளை நிறைவேற்றுகின்றேன், ரமழானில் நோன்பு நோற்கின்றேன், ஹலாலை ஹலாலாக்கி, ஹராத்தை ஹராமாக்குகின்றேன். இதற்குமேல் நான் எதுவும் செய்யவில்லை. இந்த நிலையில் நான் சுவர்க்கத்தில் நுழைவேனா? என்று எனக்குக் கூறுங்கள்”. நபியவர்கள் “ஆம்!” என்று பதில் தந்தார்கள்.**

*அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (15).*

**விரிவுரை :**

*இந்நபிமொழியை இமாம் முஸ்லிம் ஜாபிர் (ரலி) அவர்களிடமிருந்து அபுஸ் ஸுபைர் ஊடாக அறிவித்துள்ளார்கள். அதன் இறுதியில் ‘‘அல்லாஹ்வின் மீது ஆணையாக இதனை விட நான் எதையும் அதிகரிக்க மாட்டேன்’’ என மேலதிக வார்த்தை இடம் பெற்றுள்ளது.*

**“ஹலாலை ஹலாலாக்குதல்”** *என்றால் அது ஹலால் என நம்பிக்கை கொள்வதாகும் எனவும்,* **“ஹராத்தை ஹராமாக்குதல்”** *என்றால் அது ஹராம் என நம்பிக்கை கொள்வதுடன் தவிர்ந்து கொள்ளல் எனவும் விளக்கமளித்துள்ளனர்.*

*‘‘ஹலாலை ஹலாலாக்குதல்’’ என்பதன் மூலம் அதனைச் செய்வதையும் இங்கு நாடப்பட்டிருக்கலாம். அதனடிப்படையில் ஹராம் அல்லாத அனைத்தும் ஹலாலின் மூலம் நாடப்படலாம். அதில் கடமையானது, விரும்பத்தக்கது (ஸுன்னத்), அனுமதிக்கப்பட்டது ஆகிய மூன்றும் உள்ளடங்கும். எனவே இதன் கருத்து : ஹராமல்லாதவற்றை செய்தல், அதனைத் தாண்டி ஹராத்தின் பால் செல்லாமல் தவிர்ந்து கொள்ளல் ஆகும்.*

அனுமதிக்கப்பட்டதுடன் நின்று கொள்ளாமல் ஹராத்தில் ஈடுபடுவோருக்கு அதனை ஹராம் என ஏற்றிருந்தாலும் அவர் ஹலால், ஹராம் பார்க்காதவர் என உதாரணத்திற்குக் கூறப்படுகின்றது. ஹராத்தை ஹலாலாக நம்பிக்கை கொள்ளாவிட்டாலும் தொடர்ச்சியாக ஹராத்தில் ஈடுபடுவோரை இவ்வாறு ஹலாலாக்கியவராக ஆக்கிவிடுகின்றனர்.

எவ்வாறாயினும் ஹராத்தைத் தவிர்ந்து, கடமையைச் செய்தவர்கள் சுவனம் நுழைவார்கள்.

இதே கருத்தில் அல்லது இதற்கு நெருக்கமான கருத்தில் பல நபிமொழிகள் நபியவர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஐவேளையும் தொழுது, ரமழானில் நோன்பு நோற்று, ஸகாத்தையும் வழங்கி, ஏழு பெரும்பாவங்களைத் தவிர்ந்து கொள்ளும் எந்தவொரு அடியானுக்கும் சுவனத்தில் அனைத்து வாயில்களும் திறக்கப்படாமலில்லை. விரும்பிய வாயிலில் நுழைவார். பின்பு, “உங்களுக்குத் தடுக்கப்பட்டவைகளில் பெரும்பாவங்களை விட்டும் நீங்கள் தவிர்ந்து கொண்டால் உங்களை விட்டும் (சிறு) பாவங்களை நாம் அழித்து விடுவோம். (நிஸா : 31) எனும் வசனத்தை ஓதினார்கள்.([1])

கிராமவாசி ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'நான் சுவர்க்கம் செல்வதற்கேற்ற ஒரு காரியத்தை எனக்குக் கூறுங்கள்” என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நீர் அல்லாஹ்வை வணங்க வேண்டும்; அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது, கடமையான தொழுகையையும் கடமையான ஸகாத்தையும் நிறைவேற்ற வேண்டும்; ரமழானில் நோன்பு நோற்கவேண்டும்” என்றார்கள். அதற்கவர், 'என் உயிர் எவன் கைவசத்தில் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! இதைவிட அதிகமாக எதையும் செய்ய மாட்டேன்” என்றார். அவர் திரும்பிச் சென்றதும் நபி (ஸல்) அவர்கள், 'சுவர்க்கவாசிகளில் ஒருவரைப் பார்க்க விரும்புவோர் இவரைப் பார்க்கட்டும்” என்றார்கள்.([2])

ஒரு கிராமவாசி பரட்டைத் தலையுடன் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்; 'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் என் மீது கடமையாக்கிய

---

1.அறிவிப்பவர்கள் : அபூ ஹுரைரா (ரலி), அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) ஆகியோர், ஆதாரம் : நஸாஈ (2438), இப்னு ஹிப்பான் (1748), ஹாகிம் (719) அவர் இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள். எனினும் அஷ்ஷேக் அல்பானீ தனது ளஈபுத் தர்கீபி வத்தர்ஹீப் எனும் நூலில் (452) இதனை பலவீனமெனக் கூறியுள்ளார்கள்.

2.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் புஹாரி (1397), முஸ்லிம் (14) .

*தொழுகை எது? என்று சொல்லுங்கள்! என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ஐந்து நேரத் தொழுகைகள்! அவற்றைத் தவிர! (கடமையான தொழுகை வேறெதுவுமில்லை உபரியாக) நீயாக விரும்பித் தொழுதால் மட்டுமே உண்டு!'' என்று பதிலளித்தார்கள். அவர் அல்லாஹ் என் மீது கடமையாக்கிய நோன்பு எது? என்று சொல்லுங்கள்! என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ரமழான் மாத நோன்பு! அவற்றைத் தவிர! (கடமையான நோன்பு வேறெதுவுமில்லை உபரியாக) நீயாக விரும்பி நோற்றால் மட்டுமே உண்டு!'' என்று பதிலளித்தார்கள். அவர் 'அல்லாஹ் என் மீது கடமையாக்கிய ஸகாத் எது? என்று எனக்குக் கூறுங்கள்!'' என்றார். நபி (ஸல்) அவர்கள், இஸ்லாத்தின் சட்டதிட்டங்களை அவருக்குக் கூறினார்கள். அப்போது அவர், 'சத்தியத்தின் வாயிலாக உங்களை கண்ணியப்படுத்திய இறைவன் மேல் ஆணையாக! நான் உபரியாக எதையும் செய்ய மாட்டேன்; அல்லாஹ் என் மீது கடமையாக்கியதில் எதையும் குறைக்கவும் மாட்டேன்!'' என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள். 'இவர் கூறுவது உண்மையானால் வெற்றி பெற்றுவிட்டார்!'' என்றோ 'இவர் கூறுவது உண்மையானால் இவர் சொர்க்கத்தில் நுழைவார்!'' என்றோ கூறினார்கள்.*[(1)]

*கிராமவாசியின் நோக்கம் என்னவெனில் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் ஆகிவற்றில் எதனையும் உபரியாகச் செய்ய மாட்டேன் என்பதே தவிர இஸ்லாத்தின் பிற கடமைகள், போதனைகளைக் கடைபிடிக்க மாட்டேன் என்பதல்ல.*

*இந்நபிமொழிகளில் தடை செய்யப்பட்டவைகள் கூறப்படாமைக்குக் காரணம், கேள்வி கேட்டவர் சுவனத்தில் நுழைவிக்கும் செயல்களை மாத்திரமே கேட்டார்.*

*மேற்கண்ட நற்செயல்கள் சுவனத்தில் நுழையக் காரணங்களாக இருக்கின்றன. எனினும் சில பாவங்களில் ஈடுபடுவது இதற்குத் தடைக்கற்களாக அமையலாம். நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை எனவும், தாங்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் நான் சாட்சி பகர்ந்து, ஐவேளையும் தொழுது, எனது சொத்திற்கான ஸகாத்தையும் கொடுத்து, ரமழானில் நோன்பும் பிடித்தேன் எனக் கூறினார். அதற்கு நபியவர்கள் : தனது இரு விரல்களை நீட்டி "பெற்றோரைத் துன்புறுத்தாமல் யார் இந்நற்செயல்களுடன் மரணிக்கின்றாரோ அவர் மறுமையில்*

*1.அறிவிப்பவர் : தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி), ஆதாரம் புஹாரி (46), முஸ்லிம் (11).*

நபிமார்கள், உண்மையாளர்கள், வீரத் தியாகிகளுடன் இருப்பார்'' எனக் கூறினார்கள்.(1)

தொழுகை போன்ற சில நற்செயல்களை மேற்கொள்வதன் மூலம் சுவனம் நுழையலாம் எனவும் இடம்பெற்றுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : பஜ்ர் மற்றும் அஸ்ர் தொழுதவர்கள் சுவனம் நுழைவார்கள்.(2)

மேற்கண்டவை அனைத்தும் சுவனம் நுழைவதற்கான காரணிகளில் சிலவாகும். எனவே உரிய நிபந்தனைகளுடன் செய்யப்படுவதுடன் (சுவனம்) நுழைவதற்கான தடைகளும் நீங்கியிருக்க வேண்டும்.

பஷீர் இப்னுல் கஸாஸியா (ரலி) கூறுகின்றார் : நான் நபி (ஸல்) அவர்களிடம் உறுதிப்பிரமாணம் (பைஅத்) செய்ய வந்தேன். அப்போது நபியவர்கள் இரு சாட்சியங்கள், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் வழங்கல், இஸ்லாமிய ஹஜ் செய்தல், ரமழானில் நோன்பு நோற்றல், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிதல் ஆகியவற்றை நான் மேற்கொள்ள வேண்டுமென நிபந்தனையிட்டார்கள். நான் நபியவர்களிடம் : அல்லாஹ்வின் மீது ஆணையாக அறப்போர், ஸகாத் ஆகிய இரண்டும் என்னால் முடியாது எனக் கூறினேன். நபியவர்கள் தனது கையை மடித்து விட்டு திறந்துவிட்டுக் கூறினார்கள் : அறப்போரும் ஸகாதும் இல்லையெனில் எதை வைத்து நீ சுவனம் நுழையப் போகிறாய்? என வினவினார்கள். அல்லாஹ்வின் தூதரே! நான் உங்களுக்கு பைஅத் செய்கின்றேன் என்று கூறிவிட்டு (நபியவர்கள் இட்ட) அந்த நிபந்தனைகள் அனைத்தின் அடிப்படையில் நான் பைஅத் செய்தேன்.(3)

ஸகாதும், அறப்போரும் இன்றி இந்நற்செயல்கள் மாத்திரம் சுவனம் நுழையப் போதாது என்பதையே இந்நபிமொழி அறிவிக்கின்றது.

சில பெரும்பாவங்களைச் செய்வதும் சுவனத்தில் நுழைவதைத் தடுக்குமென சில நபிமொழிகளில் இடம்பெற்றுள்ளது. நபி (ஸல்)

---

1.நூலாசிரியர் கூறுவதைப் போன்று முஸ்னத் அஹ்மதில் இந்நபிமொழி கிடைக்கவில்லை. எனினும் இது இப்னு ஹிப்பானில் (3438) உள்ளது. இமாம் ஹைஸமீ மஜ்மஉஸ் ஸவாஇதில் இதனைக் கூறிவிட்டு (1/46) இதனை "இமாம் பஸ்ஸார் அறிவித்துள்ளார். அவரின் இரு ஆசிரியர்களைத் தவிர ஏனையோர் புஹாரியில் இடம்பெறும் அறிவிப்பாளர்களாவர். இதன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹ், அல்லது ஹஸன் எனும் தரத்தில் இருக்குமென நான் எதிர்பார்க்கின்றேன்'' என்று கூறியுள்ளார்கள்.

2.அறிவிப்பவர் : அபூ மூஸா அல்அஷ்அரீ (ரலி), ஆதாரம் : புஹாரி (547), முஸ்லிம் (635) .

3.நூல் : அஹ்மத் (21952), இதன் அறிவிப்பாளர் தொடரில் அபுல் முஸன்னா அல்அப்தீ என்பவரைத் தவிர ஏனையோர் நம்பகமானவர்களாகும். இவரது பெயர் முஃஸிர் பின் அபாரா அஷ்ஷைபானீ ஆகும். இவரைப் பற்றி இமாம் இஜ்லீ : "அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்களுடைய சிஷ்யர்களில் ஒருவர், நம்பகமானவர்'' என்று கூறியுள்ளார். இமாம் இப்னு ஹஜர் இவரைப் பற்றி தக்ரீபுத் தஹ்தீபில் "மக்பூல்'' (ஏற்க முடியுமானவர் தான்) எனக் கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறினார்கள் : "(உறவினர்களைத்) துண்டித்து நடப்பவன் சுவனம் நுழைய மாட்டான்".[1] மேலும் கூறினார்கள் : "யாருடைய உள்ளத்தில் அணுவளவாயினும் பெருமை உள்ளதோ அவர் சுவனம் நுழையமாட்டார்".[2]

ஒரு மனிதன் உலகில் செய்த ஒரு பாவத்தின் விளைவாக சிலவேளை சுவனத்தில் நுழைய முடியாமல் நூறு வருடங்கள் கூட தடுக்கப்படலாம் என ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

இவையனைத்தும் தடைக்கற்களாகும். இதிலிருந்து ஓரிறைக் கொள்கையால் மாத்திரம் சுவனம் நுழைவதைப் பற்றி வந்துள்ள நபிமொழிகளின் கருத்து தெளிவாகின்றது. இதே கருத்தில் பல நபிமொழிகள் உள்ளன. மற்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர் : ஏகத்துவக் கலிமாவானது சுவனம் நுழையவும், நரகிலிருந்து பாதுகாப்புப் பெறவும் காரணமாக உள்ளது. எனினும் அதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. அதுதான் கடமையானவற்றைச் செய்தல். இன்னும் சில தடைக்கற்களும் உள்ளன. அதுதான் பெரும்பாவங்களில் ஈடுபடல் ஆகும்.

இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறுகின்றார்கள் : இதோ கூடாரத்தின் தூண் உள்ளது. கயிறு எங்கே? அதாவது ஏகத்துவக் கலிமாதான் கூடாரத்தின் தூணாகும். சுற்றிவரக் கட்டி வைக்கும் கயிறுகள் இல்லாவிடில் கூடாரம் நிலைக்காது. அதுதான் கடமைகளைச் செய்வதும், தடுக்கப்பட்டதை விடுவதுமாகும்.

லாஇலாஹ இல்லல்லாஹ் சுவனத்தின் திறவுகோல் தானே? என வஹ்ப் பின் முனப்பிஹ் (ரஹ்) இடம் கேட்கப்பட்ட போது, ஆம் எனினும் பற்களில்லாத சாவியில்லை. எனவே பற்களுள்ள சாவியை நீர் எடுத்து வந்தால் திறக்கப்படும். இல்லாவிடில் திறக்கப்பட மாட்டாது என பதிலளித்தார்கள்.

இந்நபிமொழியில் கூறப்பட்டிருப்பது ஏனைய கடமைகள், வரையறைகள் போடப்படுவதற்கு முன்னதாகும் என சிலர் கூறுகின்றனர். இமாம் ஸுப்யான் அஸ்ஸௌரீ (ரஹ்) கூறுகின்றார் : இ(ந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள)தை கடமைகளும், வரையறைகளும் மாற்றிவிட்டன.

மற்றுமொரு சாரார் : உண்மையாகவும், உளத்தூய்மையுடனும் கலிமாவை மொழிந்தவர்களுக்கே மேற்கண்ட செய்திகள் வந்துள்ளன. அதில் உளத்தூய்மையுடன் செயற்படுவது பாவத்தில் நிலைத்திருப்பதை

1.அறிவிப்பவர் : ஜுபைர் பின் முத்இம் (ரலி), ஆதாரம் : புஹாரி (5984), முஸ்லிம் (2556).

2.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (91).

விட்டும் தடுத்து விடுகின்றது எனக் கூறியுள்ளனர். நபி (ஸல்) கூறியதாக இமாம் ஹஸனுல் பஸரீ(ரஹ்) அவர்கள் அறிவிக்கும் “முர்ஸல்” வகையைச் சார்ந்த ஒரு செய்தியில் பின்வருமாறு உள்ளது : “யார் உளத்தூய்மையுடன் இக்கலிமாவை மொழிகின்றாரோ அவர் சுவனம் புகுவார்” அதன் உளத்தூய்மை ஏது என வினவப்பட்ட போது : அல்லாஹ் தடுத்ததை விட்டும் அக்கலிமா உன்னைத் தடுப்பதாகும் என்றார்கள். வேறுசில பலவீனமான வழிகளாலும் முழு அறிவிப்பாளர் தொடருடன் இச்செய்தி அறிவிக்கப்பட்டும் உள்ளது.

எனவே “லாஇலாஹ இல்லல்லாஹ்” எனும் கலிமாவை உள்ளத்தால் உண்மையாளராகக் கூறினால் அவருக்கு அல்லாஹ் நரகை ஹராமாக்கி விடுவான்[1] என்ற நபியவர்களின் கூற்றின் விளக்கம் தெளிவாகிவிட்டது. இக்கலிமாவை கூறியவர்களில் யார் நரகில் நுழைகின்றாரோ அது அவரது உண்மைத் தன்மையில் ஏற்பட்ட குறையின் காரணமாகவே. ஏனெனில் இக்கலிமா உண்மையாக இருந்தால் அது அல்லாஹ் அல்லாத அனைத்து கடவுள்களையும் விட்டு உள்ளத்தைப் பரிசுத்தப் படுத்திவிடும். அக்கலிமாவில் உண்மையாக இருப்பவர் வேறு யாரையும் நேசிக்கவோ, ஆதரவு வைக்கவோ, அஞ்சவோ, பொறுப்புச் சாட்டவோ மாட்டார். அவரது உள்ளத்தில் மனோ இச்சைகளுடைய தடங்களே இருக்க மாட்டாது. அல்லாஹ் அல்லாத ஒன்றைப் பற்றிய தாக்கம் உள்ளத்தில் இருந்தால் அக்கலிமாவின் உண்மைத் தன்மையில் ஏற்பட்ட குறைபாடே அதற்குக் காரணமாகும்.

நபியவர்களின் மற்றுமொரு செய்தி இதனைப் பலப்படுத்துகின்றது. அன்னார் கூறினார்கள் : “யாருடைய உலக வாழ்வின் இறுதி வார்த்தை லாஇலாஹ இல்லல்லாஹ் என்று இருக்கின்றதோ அவர் சுவனம் நுழைவார்”.[2] ஏனெனில் மரணத் தருவாயில் இருப்பவர் உளத்தூய்மையுடனும், பச்சாதாபத்துடனும், நடந்த தவறுகளை நினைத்து வருத்தத்துடனும் இதன் பின் அப்பாவங்கள் பால் மீளவே கூடாது என்ற உறுதியுடனும்தான் அக்கலிமாவைக் கூறுவார்.

1. அறிவிப்பவர் : முஆத் பின் ஜபல் (ரலி), ஆதாரம் : புஹாரி (128), முஸ்லிம் (32).

2.அறிவிப்பவர் : முஆத் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (22034), அபூ தாவூத் (3116), அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹுல் ஜாமிஃவில் (6479) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்.

# ஹதீஸ் –23

## அனைத்து நற்காரியங்களும் தர்மமாகும்

عَنْ أَبِي مَالِكٍ الْأَشْعَرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ:

«الطُّهُورُ شَطْرُ الْإِيمَانِ، وَالْحَمْدُ لِلهِ تَمْلَأُ الْمِيزَانَ، وَسُبْحَانَ اللهِ، وَالْحَمْدُ لِلهِ تَمْلَآنِ أَوْ تَمْلَأُ مَا بَيْنَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ، وَالصَّلَاةُ نُورٌ، وَالصَّدَقَةُ بُرْهَانٌ، وَالصَّبْرُ ضِيَاءٌ، وَالْقُرْآنُ حُجَّةٌ لَكَ أَوْ عَلَيْكَ، كُلُّ النَّاسِ يَغْدُو، فَبَائِعٌ نَفْسَهُ، فَمُعْتِقُهَا أَوْ مُوبِقُهَا» رَوَاهُ مُسْلِمٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***சுத்தம் ஈமானின் பாதியாகும். 'الحمد லி" (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்பது மீஸானின் நன்மையின் தட்டை நிரப்புகின்றது. 'سبحان الله" (அல்லாஹ் மிகத்தூய்மையானவன்) 'الحمد لله" ஆகிய இரண்டுமோ அல்லது ஒவ்வொன்றோ, வானத்திற்கும் பூமிக்கும் இடையே இருப்பதை நிரப்பி விடுகின்றது. தொழுகை ஒளியாகும். தர்மம் அத்தாட்சியாகும், பொறுமை பிரகாசமாகும். திருக்குர்ஆன் உனக்கு சாதகமான அல்லது எதிரான ஒரு நிரூபணமாகும். தனது நாளைத் துவங்கும் ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்மாவை பேரத்தில் விடுகின்றான். ஒன்று அதற்கு விடுதலையைத் தேடித் தந்திருக்கின்றான். அல்லது அதற்கு அழிவைத் தேடித் தருகின்றான்.***

*அறிவிப்பவர் : அபூமாலிக் அல்அஷ்அரீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (223).*

**விரிவுரை :**

***"சுத்தம் ஈமானின் பாதியாகும்"***

*இந்த நபிமொழியில் இடம்பெறும் சுத்தம் எனும் வார்த்தைக்கு பாவத்தைத் தவிர்ந்து கொள்ளல் எனவும் விளக்கமளித்துள்ளனர். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்புத் தேடுபவர்களை நேசிக்கின்றான். மேலும் தூய்மையானவர்களையும் நேசிக்கின்றான்". (பகரா : 222).*

*தொடக்குகளை நீக்க தண்ணீரால் சுத்தம் செய்வதே இந்நபிமொழியின் அர்த்தம் என்பது தான் அநேக அறிஞர்களின் சரியான தெரிவாகும். இதனால் தான் இமாம்களான முஸ்லிம், நஸாஈ, இப்னுமாஜாஃ ஆகியோர்*

வுழூவுடைய பாடத்தை இந்நபிமொழியை வைத்து ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இதனடிப்படையில் தண்ணீரால் சுத்தம் செய்வது எவ்வாறு ஈமானின் பாதியாகும் என்பதில் கருத்து வேறுபாடுள்ளது.

(நூலாசிரியர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : இரு வகைகளைக் கொண்ட ஒவ்வொன்றிலும் அதன் ஒரு வகை அதன் பாதிதான். இரு வகைகளும் சரிசமமாக இருந்தாலும், அல்லது ஒன்றை விட மற்றது அதிகமாக இருந்தாலும் சரி. பின்வரும் நபிமொழியும் இதற்கு சான்றாகவுள்ளது : “எனக்கும் எனது அடியானுக்கும் மத்தியில் தொழுகையை இரண்டாகப் பிரித்துள்ளேன்” என அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்.[1] அதாவது தொழுகையில் ஓதுவதே இதன் நாட்டமாகும். இதனால் தான் பாத்திஹா என நபியவர்கள் இதற்கு விளக்கமளித்துள்ளார்கள். அதாவது வணக்கம், வேண்டுதல் என இது இரண்டாக வகுக்கப்பட்டுள்ளது. வணக்கம் அல்லாஹ்வின் உரிமை. வேண்டுதல் அடியானின் உரிமை. இதன் அர்த்தம் ஸூரா பாத்திஹாவை சொற்கள் அடிப்படையில் சரிசமமாகப் பகிர்வதல்ல.

இக்கருத்தை இமாம் கத்தாபீ (ரஹ்) கூறிவிட்டு “வருடத்தில் பாதி பயணத்திலும், பாதி ஊரிலும் கழிகின்றது” எனும் அரேபியர்களின் முதுமொழியை உதாரணமாகக் கூறியுள்ளார்கள். மேலும் கூறினார்கள் : “இது சரிசமமாக ஆறு மாதங்களாகப் பிரிவதல்ல, மாறாக அளவு வேறுபட்டாலும் பொதுவாகக் காலம் பயணத்திலும், ஊரிலும் கழிவதை பிரித்துக் காட்டுவதே நோக்கமாகும்”. நீதியரசர் ஷுரைஹ் (ரலி) அவர்களிடம் உங்கள் காலைப் பொழுது எவ்வாறு? என வினவப்பட்டால் “மக்களில் பாதிப்பேர் என்னுடன் கோபித்த நிலையிலேயே விழித்தேன்” என்பார்கள். அதாவது தன்னிடம் விசாரணைக்கு வரும் மக்களுக்கு நீதி வழங்கும் போது ஒருவருக்கு சார்பாகவும் மற்றவருக்கு எதிராகவும் தான் அமையும். எனவே வழக்கில் வெற்றி பெற்றவர் பொருந்திக் கொள்வார். தோற்றவர் கோபத்துடன்தான் இருப்பார் என்பதையே நீதியரசர் ஷுரைஹ் (ரலி) சுட்டிக்காட்ட விரும்புகின்றார்கள்.

இது பற்றி ஓர் அரபுக் கவிஞர் கூறும் கவிதையின் தமிழாக்கம் வருமாறு :

நான் மரணித்தால் மக்கள் இரண்டு வகையிலிருப்பர். எனது மரணத்தைப் பார்த்து மகிழ்வோராகவும் நான் செய்தவற்றை மெச்சுவோராகவும் இரு பிரிவினர் இருப்பர்.

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (395).

கவிஞருடைய நோக்கமும் எண்ணிக்கை அடிப்படையில் மக்கள் பிரிவதன்றி பொதுவாக இப்பண்புகளில் இரண்டாகப் பிரிவதாகும்.

“வ ஸமவி” **(எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்பது மீஸானின் நன்மையின் தட்டை நிரப்புகின்றது.** 'வலி ஸுப்ஹா” **(அல்லாஹ் மிகத்தூய்மையானவன்)** 'வ ஸமவி” **ஆகிய இரண்டுமோ அல்லது ஒவ்வொன்றோ, வானத்திற்கும் பூமிக்கும் இடையே இருப்பதை நிரப்பி விடுகின்றது”.**

மேற்கண்ட கருத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அரபு வார்த்தையில் இலக்கண ரீதியாக அறிவிப்பாளர் சந்தேகத்துடன் அறிவித்துள்ளார்.

நஸாஈ, மற்றும் இப்னு மாஜாஃவின் அறிவிப்பில் “தஸ்பீஹும், தஹ்மீதும் வானங்கள், பூமியை நிரப்பக்கூடியது” என இடம்பெற்றுள்ளது. இமாம் பிர்யாபீ (ரஹ்) இதனைப் பின்வருமாறு அறிவித்துள்ளார் : இரு வார்த்தைகள் உள்ளன. அதில் ஒன்றைக் கூறினால் அவர் அர்ஷின் நிழல் பெறுவதைத்தடுக்கும் சக்தி ஏதுமிருக்காது. மற்றது வானம், பூமிக்கிடையில் நிரப்பும். அவை : “லாஇலாஹ இல்லல்லாஹ்”, மற்றும் “அல்லாஹு அக்பர்” ஆகியனவாகும்.

ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகிய இந்நான்கு வார்த்தைகளினதும் சிறப்புக்களை இந்நபிமொழிகள் உள்ளடக்கியுள்ளன.

“அல்ஹம்துலில்லாஹ்” தராசை நிரப்பும் என்பதில் அனைத்து நபிமொழிகளும் ஒருமித்துள்ளன. “ஸுபஹானல்லாஹ்” என்ற வார்த்தை தனியே வானம், பூமிக்கிடையில் நிரப்புமா? அல்லது “அல்ஹம்துலில்லாஹ்” எனும் வார்த்தையுடன் இணைந்து நிரப்புமா? என்பதில் ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாளர் ஒருவருக்கு சந்தேகம் உள்ளது.

எவ்வாறாயினும் தஸ்பீஹை விட தஹ்மீதே சிறந்தது என்பதற்கான சான்று அலி (ரலி), அபூ ஹுரைரா (ரலி), இப்னு உமர் (ரலி), பனூ ஸுலைம் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபித்தோழர் ஆகியோரின் வாயிலாக பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : “தஸ்பீஹ் தராசின் பாதியாகும். “அல்ஹம்துலில்லாஹ்” அதனை முழுமையாக நிரப்பும்”.[1]

1.இதனால் தான் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் “அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்” என பாதிஹா அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகின்றது. பாத்திஹாவின்றி தொழுகையே இல்லை. **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ .**

இதற்குக் காரணம் என்னவெனில் : தஹ்மீத் என்பது அனைத்து விதப் புகழாரங்களையும் அல்லாஹ்விற்கு தரிபடுத்துவதாகும். எனவே பரிபூரணமான, கண்ணியமான அனைத்துப் பண்புகளையும் தரிபடுத்துவது இதற்குள் அடங்கி விடுகின்றது. தஸ்பீஹ் என்பது அல்லாஹ்வின் மகத்துவத்திற்குப் பொருத்தமற்ற அனைத்துக் குறைகள், ஆபத்துக்களை விட்டும் அவனைத் தூய்மைப்படுத்துவதாகும். (தரிபடுத்தல் எனும்) நேர்மறை (தூய்மைப்படுத்தல் எனும்) எதிர்மறையை விடச் சிறந்தது. இதனால் தான் அல்லாஹ்வின் பரிபூரணத்துவத்தைப் பறைசாற்றும் வார்த்தைகளுடன் சேர்ந்தே அல்லாமல் தஸ்பீஹ் மாத்திரம் தனியாக இடம்பெறுவது மிக அரிதானதாகும். சிலவேளை புகழாரத்துடன் இணைக்கப்பட்டு “ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி”, “ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹ்” எனவும் வேறுசில சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் மகத்துவத்தை அறிவிக்கும் அவனது பெயர்களுடன் இணைக்கப்பட்டு “ஸுபஹானல்லாஹில் அழீம்” எனவும் இடம்பெறுவதைக் காணலாம்.

அபூ மாலிக் (ரலி) அவர்களுடைய இந்நபிமொழி வானம், பூமிக்கிடையில் நிரப்புவது இரு கலிமாக்களும் சேர்த்துதான் என்பதை அறிவிக்குமானால் அது தெளிவாகவே இருக்கின்றது. மாறாக ஒவ்வொன்றும் ஒவ்வொன்றை நிரப்புமாக இருந்தால் தராசு வானம், பூமிக்கிடையிலிருப்பதை விட விசாலமானதாகும். எனவே தராசை நிரப்பக்கூடியது வானம், பூமிக்கிடையிலிப்பதை நிரப்பக்கூடியதை விடப் பெரிதாகும். ஸல்மான் அல்பாரிஸீ (ரலி) அவர்களின் பின்வரும் வார்த்தை இதற்கு சான்று பகர்கின்றது : “மறுமையில் தராசு வைக்கப்படும். அதில் வானங்கள், பூமியை நிறுக்கப்பட்டாலும் அதற்கும் அத்தராசு இடம் கொடுக்கும்”. இதனை இமாம் ஹாகிம் நபியவர்களின் கூற்றாக அறிவித்து ஸஹீஹ் எனவும் கூறியுள்ளார்கள். எனினும் இது ஸல்மான் (ரலி) அவர்களுடைய மவ்கூஃபான கூற்று என்பதே பிரபலமானதாகும்.(1)

“**அல்ஹம்துலில்லாஹ்**”, “**லாஇலாஹ இல்லல்லாஹ்**” ஆகிய இவ்விரு வார்த்தைகளில் எது சிறந்தது? என்பதில் கருத்து வேறுபாடுள்ளது. அக்கருத்துக்களை இமாம் இப்னு அப்தில் பர் (ரஹ்) போன்றோர் தமது நூட்களில் பதிவு செய்துள்ளனர். இமாம் இப்றாஹீம் அந்நஃகஈ (ரஹ்) கூறுகின்றார் : ஹம்து தான் நன்மைகளைப் பன்மடங்காக்குவதில் அதிக பங்காற்றக் கூடியது என மக்கள் கருதுகின்றனர். “வார்த்தைகளில் ஹம்தைப் போன்று பன்மடங்காக்கப்படும் வார்த்தை ஏதுமில்லை” என இமாம் ஸுப்யான் அஸ்ஸௌரீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.

---

1. நூல்: ஹாகிம் (8739), நூலாசிரியர் இச்செய்திக்கு மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கியுள்ளதை நீர் கவனித்திருப்பீர்.

ஹம்து அல்லாஹ்வுடைய அனைத்துப் பரிபூரணத்துவங்களையும் தரிபடுத்துவதை வேண்டி நிற்கின்றது. அதில் (முதன்மையாக) தவ்ஹீத் நுழைகின்றது.

**“தொழுகை ஒளியாகும், தர்மம் அத்தாட்சியாகும், பொறுமை பிரகாசமாகும்”.**

வணக்கத்தின் இம்மூன்று வகைகளுமே வெளிச்சமானது தான்;. எனினும் அளவுகளில் வேறுபடுகின்றன.

தொழுகை பொதுவாகவே ஒளியாகும். அது விசுவாசிகளின் உள்ளங்கள், பார்வைகள் அனைத்திலும் ஒளிமயமானதாகும். இதனால் தான் பயபக்தியாளர்களுக்குக் கண் குளிர்ச்சியாக தொழுகையுள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எனது கண் குளிர்ச்சி தொழுகையில் வைக்கப்பட்டுள்ளது.[1] மேலும் இது -குறிப்பாக இரவுத் தொழுகை- அவர்களுடைய மண்ணறைகளிலும் ஒளியாக இருக்கும். ‘‘மண்ணறைகளின் இருளுக்காக இரவின் இருளில் இரண்டு ரக்அத்கள் தொழுது கொள்ளுங்கள்’’ என அபுத்தர்தாஃ (ரலி) கூறுகின்றார்கள். மறுமையின் இருள்களிலும் ஸிராத்திலும் அது விசுவாசிகளுக்கு ஒளியாகும். நபி (ஸல்) அவர்கள் தொழுகையைப் பற்றிக் கூறிவிட்டு ‘‘யார் இதனைப் பேணி வருகிறாரோ அவருக்கு அது மறுமையில் ஒளியாகவும், ஆதாரமாகவும், பாதுகாப்பாகவும் அமையும். யார் இதனைப் பேணவில்லையோ அவருக்கு அது ஒளியாகவோ, பாதுகாப்பாகவோ, ஆதாரமாகவோ அமையமாட்டாது.[2],[3]

தர்மம் அத்தாட்சியாக உள்ளது. அடிப்படையில் “புர்ஹான்” எனும் வார்த்தை (சூரியன் இருப்பதற்கான அடையாளமாகிய) சூரியக் கதிருக்கே பயன்படுத்தப்படுகின்றது. இதனால் தான் உறுதியான ஆதாரங்களுக்கு இப்பெயர் பயன்படுத்தப்படுகின்றது.

அதேபோன்றுதான் தர்மமும் சரியான ஈமானுக்குரிய ஆதாரமாகும். அது எவ்வாறெனில் மனிதன் இயற்கையிலேயே விரும்பி, கஞ்சத்தனம் காட்டும் ஒரு பொருள் பணமாகும். அல்லாஹ்வுக்காக அதனை செலவளிக்க உள்ளம் இணங்கினால் அல்லாஹ்வின் மீதும் அவனது

1.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (12293), அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுல் ஜாமிஃ 3124).

2.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (6576), இப்னு ஹிப்பான் (1467). இமாம் முன்திரீ தனது “அத்தர்கீப் வத்தர்ஹீப்” நூலில் இதன் அறிவிப்பாளர் தொடர் நல்லதெனக் கூறியுள்ளார். அஷ்ஷேக் இப்னு பாஸ் இதன் அறிவிப்பாளர் தொடர் நல்லதென அடிக்கடி கூறுவதைக் கேட்டுள்ளேன்.

3.தொழுகையின் சிறப்புக்கள், விடுவதன் விபரீதம் பற்றி நூலின் ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ளது.

வாக்குறுதிகள், எச்சரிக்கைகள் மீதும் உள்ளம் நம்பிக்கை கொண்டுள்ளதற்கு இது ஆதாரமாகின்றது.

பொறுமை பிரகாசமாகும். அரபு மொழியில் “ضياء” எனும் வார்த்தை உஷ்ணமும், எரிக்கும் இயல்புமுடைய பிரகாசத்திற்குப் பயன்படுத்தப் படுகின்றது. அதனால்தான் சுட்டெரிக்கும் சூரிய ஒளிக்கு இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சந்திரனுக்கு “نور” எனும் சாந்தமான ஒளிக்குரிய சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்: “அவனே சூரியனைப் பிரகாசமாகவும், சந்திரனை ஒளியாகவும் ஆக்கினான்” (யூனுஸ் : 05). இதனடிப்படையில் தான் மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட மார்க்கத்தை பிரகாசம் (ضياء) என வர்ணித்துள்ளான். “நிச்சயமாக நாம் மூஸாவுக்கும், ஹாரூனுக்கும் (நன்மை, தீமையைப்) பிரித்தறிவிக்கக் கூடியதையும், பிரகாசத்தையும், பயபக்தியாளர்களுக்குரிய நல்லுபதேசத்தையும் வழங்கினோம்” (அல்அன்பியாஃ : 48). அதேவேளை “نور” என்ற சொல்லையும் தௌராத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. “நாம் தௌராத்தை அருளினோம். அதில் நேர்வழியும் ஒளியும் உள்ளன” (மாஇதாஃ : 44). எனினும் கடுமையான, சுமையான சட்டதிட்டங்கள் இருந்ததால் அவர்களின் ஷரீஅத்தின் பெரும்பகுதி சிரமமாகவே இருந்தது. அதனால் “ضياء” எனும் சொல்லே மிகையானதாகும். தெளிவான, இலகுவான சட்டங்களைக் கொண்டதாக இறுதித்தூதர் (ஸல்) அவர்களின் ஷரீஅத் இருப்பதால் அதற்கு “نور” எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

“வேதத்தையுடையோரே! வேதத்தில் நீங்கள் மறைத்துக் கொண்டிருந்தவற்றில் அதிகமானவற்றை உங்களுக்குத் தெளிவுபடுத்தும் எமது தூதர் உங்களிடம் வந்தார். எனினும், பலவற்றை அவர் விட்டு விடுவார். அல்லாஹ்விடமிருந்து ஒளியும் தெளிவான வேதமும் நிச்சயமாக உங்களிடம் வந்து விட்டது” (மாஇதாஃ : 15).

பொறுமை செய்வது உள்ளத்திற்குக் கடினமானதாகவும், அதனுடன் போராட்டம் செய்து, அது ஆசைப்படுபவற்றை விட்டும் தடுப்பதற்கும் தேவையுமிருப்பதால் அதற்கு “ضِيَاء” (பிரகாசம்) எனக் கூறப்பட்டுள்ளது. பொறுமை என்பது தடுப்பதாகும்.

**சிலாகித்துக் கூறப்பட்டுள்ள பொறுமை மூன்று வகைப்படும்.**

**01.** நன்மைகள் செய்யும் போது மேற்கொள்ளும் பொறுமை.

**02.** பாவங்களைத் தவிர்ந்து கொள்ளும் போது செய்யும் பொறுமை.

**O3.** அல்லாஹ்வின் விதியை ஏற்றுக் கொண்டு பொறுத்தல்.

அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டு, பாவங்களைத் தவிர்ந்து கொள்ளும் போது செய்யும் பொறுமை துன்பங்களின் போது செய்யும் பொறுமையை விடச் சிறந்ததென ஸஈத் பின் ஜுபைர் (ரஹ்), மய்மூன் பின் மிஹ்ரான் (ரஹ்) போன்றோர் கூறியுள்ளனர்.

**"அல்குர்ஆன் உனக்கு சாதகமான அல்லது எதிரான ஒரு நிரூபணமாகும்"**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மறுமையில் அல்குர்ஆனுக்கு மனிதத் தோற்றம் கொடுக்கப்பட்டு அதனைக் கற்று அதற்கு மாறு செய்த ஒரு மனிதனைக் கொண்டு வரப்பட்டு அவனுக்கு எதிரான பிரதிவாதியாக உருவெடுத்துக் கூறும் : இறைவா! இவனது உள்ளத்தில் என்னை சுமக்க வைத்தாய். என்னை சுமந்தவர்களில் மிக மோசமானவன் இவன் தான். எனது வரையறைகளைத் தாண்டினான். எனது கடமைகளைப் பாழ்ப்படுத்தினான். எனக்குக் கட்டப்படுவதை விட்டு, எனக்கு மாறு செய்தான். இவ்வாறு "அவனை நீயே பார்த்துக்கொள்" எனக் கூறப்படும் வரை தொடர்ந்து குற்றச் சாட்டுகளை அடுக்கிக் கொண்டே செல்லும். நரகில் அவன் முகம் குப்புறத் தள்ளப்படும் வரை அவனது கையை விடாமல் பிடித்துக் கொண்டே இருக்கும்.

(மறுபுறம்) அல்குர்ஆனைக் கற்று மனனமிட்ட நல்லடியாரைக் கொண்டு வரப்படும். (மனித தோற்றத்திலிருக்கும்) அல்குர்ஆன் இவருக்கு சார்பான வாதியாக தோற்றமெடுத்துக் கூறும் : இறைவா! என்னை இவரிடம் சுமக்க வைத்தாய். என்னைச் சுமந்தவர்களில் மிகச் சிறந்தவர். எனது வரையறைகளைப் பேணினார். கடமைகளைச் செய்தார். எனக்கு மாறு செய்வதைத் தவிர்த்து, எனக்கு வழிப்பட்டார். இவ்வாறு "அவரை நீயே கவனித்துக் கொள்" எனக் கூறப்படும் வரை அவருக்கு சார்பான ஆதாரங்களை முன்வைத்துக் கொண்டே இருக்கும். அவருக்குப் பட்டாடை அணிவித்து, அரசு கிரீடத்தை சூட்டி, மதுபானக் கிண்ணத்திலிருந்து புகட்டாமல் அவரது கையை அல்குர்ஆன் விடாமல் பிடித்துக் கொண்டே இருக்கும்.[1]

**"தனது நாளைத் துவங்கும் ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்மாவை பேரத்தில் விடுகிறான். ஒன்று அதற்கு விடுதலையைத் தேடித் தந்திருக்கின்றான். அல்லது அதற்கு அழிவைத் தேடித் தருகின்றான்"**

---

1.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அமர் (ரலி), ஆதாரம் : இப்னு அபீ ஷைபாஃ (30044), இதன் அறிவிப்பாளர் தொடர் பலவீனமானது.

ஒவ்வொரு மனிதனும் தனது ஆன்மாவை அழிப்பதிலோ, விடுவிப்பதிலோ முயற்சிக்கின்றான் என்பதை இந்நபிமொழி சுட்டிக் காட்டுகின்றது. அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதில் முயற்சிப்பவர் தனது ஆன்மாவை அவனுக்காக விற்று அவனது தண்டனையிலிருந்து விடுவித்துக் கொண்டு விட்டான். அல்லாஹ்வுக்கு மாறு செய்வதில் முயற்சிப்பவன் தனது ஆன்மாவை அற்பத் தொகைக்கு விற்று, அல்லாஹ்வின் கோபத்தையும், தண்டனையையும் ஏற்படுத்தும் பாவங்களின் மூலம் அழித்துக் கொண்டு விட்டான்.

“நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடமிருந்து அவர்களது உயிர்களையும், அவர்களது செல்வங்களையும் அவர்களுக்கு சுவர்க்கம் உண்டென விலைக்கு வாங்கிக் கொண்டான். அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள். அவர்கள் (எதிரிகளைக்) கொல்வார்கள். (எதிரிகளால்) கொல்லப்படுவார்கள். (இது) தவ்ராத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் (அல்லாஹ்) தன்மீது கடமையாக்கிக் கொண்ட வாக்குறுதியாகும். அல்லாஹ்வை விட, தனது வாக்குறுதியை நிறைவேற்றுபவன் வேறு யார்? எனவே, நீங்கள் செய்த உங்களது இவ்வியாபாரம் குறித்து மகிழ்ச்சியடையுங்கள். இதுதான் மகத்தான வெற்றியாகும்” (தௌபா 111).

ஸலப் அறிஞர்களில் சிலர் தமது சொத்துக்களைக் கொடுத்து அல்லாஹ்விடமிருந்து தம்மை வாங்கிக் கொண்டு விட்டார்கள். அவர்களில் ஹபீப் அபு முஹம்மத் (ரஹ்) போன்ற தமது முழுச் சொத்தையும் தானம் செய்தவர்களும் உண்டு. காலித் அத்தஹ்ஹான் போன்ற தனது இடைக்கேற்ப மூன்று, நான்கு தடவைகள் வெள்ளிக்காசு தானம் செய்தவர்களும் உள்ளனர். நற்செயல்களில் கடுமையாக முயற்சி செய்து, “நான் ஒரு சிறைக்கைதி, என்னை விடுவிக்கப் போராடுகிறேன்” என்று கூறுவோரும் உளர். வேறுசிலரோ தமது காலத்தில் கொலைக் குற்றத்திற்கான தண்டப்பணமாக இருந்த 12000 காசளவு நாளாந்தம் 12000 தஸ்பீஹ் செய்து கொண்டு, நாளாந்தம் தன்னைத் தானே அழித்து தண்டப்பணம் செலுத்துவது போன்று செயற்படுகின்றனர்.

உண்மை விசுவாசி இவ்வுலகில் கைதியாவான். நாளாந்தம் தன்னை விடுவிக்கப் போராடுகின்றான். அல்லாஹ்வை சந்திக்கும் வரை எதிலும் அச்சமற்று இருக்கமாட்டான் என இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறுகின்றார்கள்.

## ஹதீஸ் –24

# இறைவனின் வல்லமையும், தயாளகுணமும்

عَنْ أَبِي ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُ ، عَنِ النَّبِيِّ ﷺ فِيمَا يَرْوِي عَنْ رَبِّهِ عَزَّ وَجَلَّ أَنَّهُ قَالَ :

"يَا عِبَادِي إِنِّي حَرَّمْتُ الظُّلْمَ عَلَى نَفْسِي وَجَعَلْتُهُ بَيْنَكُمْ مُحَرَّمًا فَلَا تَظَالَمُوا، يَا عِبَادِي كُلُّكُمْ ضَالٌّ إِلَّا مَنْ هَدَيْتُهُ فَاسْتَهْدُونِي أَهْدِكُمْ، يَا عِبَادِي كُلُّكُمْ جَائِعٌ إِلَّا مَنْ أَطْعَمْتُهُ فَاسْتَطْعِمُونِي أُطْعِمْكُمْ، يَا عِبَادِي كُلُّكُمْ عَارٍ إِلَّا مَنْ كَسَوْتُهُ فَاسْتَكْسُونِي أَكْسُكُمْ، يَا عِبَادِي إِنَّكُمْ تُخْطِئُونَ بِاللَّيْلِ وَالنَّهَارِ وَأَنَا أَغْفِرُ لَكُمْ ذُنُوبَكُمْ جَمِيعًا فَاسْتَغْفِرُونِي أَغْفِرْ لَكُمْ، يَا عِبَادِي إِنَّكُمْ لَنْ تَبْلُغُوا ضَرِّي فَتَضُرُّونِي وَلَنْ تَبْلُغُوا نَفْعِي فَتَنْفَعُونِي.

يَا عِبَادِي لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوا عَلَى أَتْقَى قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ مَا زَادَ ذَلِكَ فِي مُلْكِي شَيْئًا، يَا عِبَادِي لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ كَانُوا عَلَى أَفْجَرِ قَلْبِ رَجُلٍ وَاحِدٍ مِنْكُمْ مَا نَقَصَ ذَلِكَ مِنْ مُلْكِي شَيْئًا.

يَا عِبَادِي لَوْ أَنَّ أَوَّلَكُمْ وَآخِرَكُمْ وَإِنْسَكُمْ وَجِنَّكُمْ قَامُوا فِي صَعِيدٍ وَاحِدٍ فَسَأَلُونِي فَأَعْطَيْتُ كُلَّ إِنْسَانٍ مِنْهُمْ مَسْأَلَتَهُ مَا نَقَصَ ذَلِكَ عِنْدِي إِلَّا كَمَا يَنْقُصُ الْمِخْيَطُ إِذَا دَخَلَ الْبَحْرَ.

يَا عِبَادِي إِنَّمَا هِيَ أَعْمَالُكُمْ : أُحْصِيهَا لَكُمْ ثُمَّ أُوَفِّيكُمْ إِيَّاهَا ، فَمَنْ وَجَدَ خَيْرًا فَلْيَحْمَدِ اللهَ. وَمَنْ وَجَدَ غَيْرَ ذَلِكَ فَلَا يَلُومَنَّ إِلَّا نَفْسَهُ." رَوَاهُ مُسْلِمٌ.

*கண்ணியமிக்க இறைவனிடமிருந்து அறியப் பெற்றதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது அடியார்களே, மக்களுக்கு அநீதி இழைப்பதை எனக்கு நானே தடை செய்திருக்கின்றேன். (அதுபோலவே) அதை உங்களுக்கும் தடை செய்திருக்கின்றேன். எனவே நீங்கள் அநீதி இழைத்துக் கொள்ளாதீர்.*

*எனது அடியார்களே, நான் நேர்வழி காட்டியவர்களைத் தவிர, நீங்கள் அனைவரும் வழி தவறியவர்கள். எனவே, என்னிடம் நேர்வழிகாட்டக் கோருங்கள், நான் நேர்வழி காட்டுவேன். எனது அடியார்களே, நான்*

உணவளித்தவர்களைத்தவிர நீங்கள் எல்லோரும் பசியால் வாடியிருப்பீர்கள். ஆகவே என்னிடம் வேண்டுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கின்றேன். எனது அடியார்களே! நான் ஆடை அளித்தவர்களைத் தவிர நீங்கள் எல்லோரும் ஆடையற்றவர்களே. ஆகவே என்னிடம் கேளுங்கள், நான் உங்களுக்கு ஆடை அளிக்கின்றேன். எனது அடியார்களே! நீங்கள் இரவும் பகலும் பாவம் செய்கின்றீர்கள். நானோ பாவங்களை மிகவும் மன்னிப்பவன். ஆகவே என்னிடம் மன்னிப்புத் தேடுங்கள், நான் உங்களை மன்னிக்கின்றேன்.

எனது அடியார்களே! நீங்கள் எவ்வளவு முயன்றாலும் எனக்குத் தீங்கு செய்கின்ற நிலையை நீங்கள் அடைய முடியாது. இன்னும் நீங்கள் எவ்வளவு முயன்றாலும் எனக்கு எந்த நன்மையையும் செய்து விட முடியாது.

எனது அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும், உங்களுக்குப் பின்னால் வருபவர்களும் உங்களுள் மனிதர்கள், ஜின்கள் ஆகிய நீங்கள் அனைவரும் என்னை வணங்குவதில் மிகவும் இறையச்சம் மிக்கவர்களாகவும், பக்திமிக்கவர்களாகவும் இருந்து என்னை வணங்கினாலும், அது எந்த விதத்திலும் என்னுடைய ஆட்சியின் எல்லையை விரிவடையச் செய்வதில்லை. எனது அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும் உங்களுக்குப் பின்னால் வருபவர்களும், உங்களுள் மனிதர்கள் ஜின்கள் ஆகிய அனைவரும் எத்தனை தான் கெட்டவர்களாக இருந்து குழப்பங்களை விளைவித்தாலும், அது என்னுடைய ஆட்சியின் எல்லையை எள்ளளவும் குறைத்து விடாது.

என்னுடைய அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும், உங்களுக்கு பின்னால் வருபவர்களும் மனிதர்களும், ஜின்களும் ஒரே இடத்தில் கூடி நின்று என்னிடத்தில் வேண்டியதெல்லாம் கேட்டு, அவ்வாறு நீங்கள் கேட்பதையெல்லாம் நான் தந்தாலும் அது என்னிடமிருப்பதை, ஓர் ஊசி முனையைக் கடலில் முக்கி எடுப்பதால் குறையும் அளவிற்குக் கூட குறைத்து விடுவதில்லை.

எனது அடியார்களே! இவைதான் உங்களுடைய செயல்கள். அவற்றைக் கொண்டே நான் உங்களை கணிக்கின்றேன். அவைகளை வைத்துக் கொண்டு தான் நான் உங்களுக்கு பின்னர் கூலி தருகின்றேன். ஆகவே உங்களில் நலவைப் பெற்றுக் கொண்டவர் அல்லாஹ்வைப் புகழட்டும். நலவு அல்லாதவற்றைக் காண்பவர்கள் தங்களைத் தவிர வேறு எவரையும் குறைகூற வேண்டாம்.

*அறிவிப்பவர் : அபூதர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2577).*

**விரிவுரை :**

இந்நபிமொழி ஸஹீஹ் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

ஸிரியா மக்கள் அறிவித்த நபிமொழிகளில் இது மிகச் சிறந்தது என இமாம் அஹ்மத் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

**“எனது அடியார்களே! மக்களுக்கு அநீதி இழைப்பதை எனக்கு நானே தடை செய்திருக்கின்றேன்”**

அதாவது அடியார்களுக்கு அநீதியிழைப்பதைத் அல்லாஹ் தனக்குத்தானே தடுத்துக் கொண்டுள்ளான். அவனால் அநீதியிழைக்க முடியும். எனினும் தயாளகுணம் பெருந்தன்மையின் காரணமாக அதனை அவன் செய்யமாட்டான்.[1]

**“அதை உங்களுக்கும் தடை செய்துள்ளேன். எனவே நீங்களும் அநீதியிழைத்துக் கொள்ளாதீர்”.**

அநீதி இரு வகைப்படும்.

**01.** தனக்குத் தானே அநீதியிழைத்துக் கொள்ளல். அதில் இணை வைத்தல் மிக விபரீதமானது. அடுத்து பெரிய பாவங்களும், பின் சிறிய பாவங்களுமாகும்.

**02.** பிறருக்கு அநீதியிழைத்தல். இது தான் இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அநீதி மறுமையின் இருள்களில் ஒன்றாகும்.[2]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒருவர், தன் சகோதரனுக்கு அவனுடைய மானத்திலோ, வேறு (பணம், சொத்து போன்ற) விடயத்திலோ, இழைத்த அநீதி (ஏதும் பரிகாரம் காணப்படாமல்) இருக்குமாயின், அவர் அவனிடமிருந்து அதற்கு இன்றே மன்னிப்புப் பெறட்டும். தீனாரோ, திர்ஹமோ (பொற்காசுகளோ வெள்ளிக் காசுகளோ) பயன்தரும் வாய்ப்பில்லாத நிலை (ஏற்படும் மறுமைநாள்) வருவதற்கு முன்னால் (மன்னிப்புப் பெறட்டும்.). (ஏனெனில், மறுமைநாளில்) அவரிடம் நற்செயல் ஏதும் இருக்குமாயின் அவனுடைய அநீதியின்

1.அல்லாஹ் பரிபூரண நீதியாளனும் பரோபகாரியுமாக இருப்பதால் அவனிடமிருந்து அநீதி ஏற்படுவதை கற்பனை பண்ணிப் பார்க்கலாகாது. **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ)**

2.அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (2447), முஸ்லிம் (2579).

அளவுக்கு அவரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு (அநீதிக்குள்ளானவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு) விடும். அநீதியிழைத்தவரிடம் நற்செயல்கள் எதுவும் இல்லையென்றால் அவரின் தோழரின் (அநீதிக்குள்ளானவரின்) தீய செயல்கள் (அவர் கணக்கிலிருந்து) எடுக்கப்பட்டு அநீதியிழைத்தவரின் மீது சுமத்தப்பட்டு விடும்.[1]

**எனது அடியார்களே, நான் நேர்வழி காட்டியவர்களைத் தவிர, நீங்கள் அனைவரும் வழி தவறியவர்கள். எனவே, என்னிடம் நேர்வழிகாட்டக் கோருங்கள், நான் நேர்வழி காட்டுவேன். எனது அடியார்களே, நான் உணவளித்தவர்களைத்தவிரநீங்கள்எல்லோரும்பசியால்வாடியிருப்பீர்கள். ஆகவே என்னிடம் வேண்டுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கின்றேன். எனது அடியார்களே! நான் ஆடை அளித்தவர்களைத் தவிர நீங்கள் எல்லோரும் ஆடையற்றவர்களே. ஆகவே என்னிடம் கேளுங்கள், நான் உங்களுக்கு ஆடை அளிக்கின்றேன். எனது அடியார்களே! நீங்கள் இரவும் பகலும் பாவம் செய்கின்றீர்கள். நானோ பாவங்களை மிகவும் மன்னிப்பவன். ஆகவே என்னிடம் மன்னிப்புத் தேடுங்கள், நான் உங்களை மன்னிக்கின்றேன்.**

உலக, மறுமை வாழ்வில் நலவு கொண்டு வருதல், கெடுதியைத் தடுத்தல் என அனைத்திலும் எல்லாப் படைப்பினங்களும் அல்லாஹ்விடம் தேவையுள்ள வர்கள் என்பதையே இந்நபிமொழி வேண்டி நிற்கின்றது.

*"அல்லாஹ் யாரை நேர்வழியில் செலுத்துகின்றானோ அவரே நேர்வழி பெற்றவர். அவன் யாரை வழிகேட்டில் விட்டு விடுகின்றானோ அவனுக்கு நேர்வழி காட்டும் எந்த உதவியாளனையும் நீர் பெற்றுக் கொள்ளமாட்டீர்" (கஹ்ஃபு 17).*

அடியார்கள் அல்லாஹ்விடம் எவ்வாறு தமது நேர்வழி, பாவமன்னிப்பு என்பவற்றைக் கேட்கின்றனரோ அதேபோன்று உணவு, பானம், ஆகாரம் மற்றும் இதர உலக, மறுமை நலவுகள் அனைத்தையும் அவனிடம் கேட்பதையே அல்லாஹ் விரும்புகின்றான் என்பதை இந்நபிமொழி சுட்டிக் காட்டுகின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் ஒருவர் தனது செருப்பு நார் துண்டிக்கப்பட்டால் அதை சீர்செய்வது உட்பட தமது தேவைகள் அனைத்தையுமே அல்லாஹ்விடமே கேட்கட்டும்.[2]

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (2449).*

*2.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : திர்மிதீ (3604), அஷ்ஷேக் அல்பானீ இதனை ஸில்ஸிலா ழஈபாவில் (1392) கூறிவிட்டு, இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) தனது ஸவாஇதுல் பஸ்ஸார் (பக். 305) எனும் நூலில் இதனை*

ஸலப் அறிஞர்களில் ஒருவர் தனது பிணைந்த மாவிற்கான உப்பு, ஆட்டிற்கான தீனி உட்பட அனைத்தையுமே அல்லாஹ்விடத்தில் கேட்கக் கூடியவ ராக இருந்தார். ஏனெனில் ஓர் அடியான் தனது தேவைகள் அனைத்தையும் அல்லாஹ்விடம் கேட்கும் போது அவனிடமுள்ள தனது தேவையை வெளிப்படுத்துகின்றான். அதனை அல்லாஹ்வும் விரும்புகின்றான்.

மற்றும் சில ஸலப் அறிஞர்கள் தனது உலகத் தேவைகளை அல்லாஹ்விடம் கேட்பதற்கு வெட்கப்படக் கூடியவர்களாக இருந்தனர். எனினும் ஸுன்னாவைப் பின்பற்றுவது தான் ஏற்றமானதாகும்.[1]

**"நான் நேர்வழி காட்டியவர்களைத் தவிர நீங்கள் அனைவரும் வழிதவறியவர்கள்"**

இயாழ் பின் ஹிமார் (ரலி) அவர்கள் அறிவிக்கும் "(இறைவன் கூறினான்:) நான் என் அடியார்கள் அனைவரையும் (இயற்கையிலேயே) உண்மை வழி நின்றவர்களாகவே படைத்தேன். (ஆயினும்) அவர்களிடம் ஷைத்தான் வந்து அவர்களது இயற்கை நெறியிலிருந்து அவர்களைப் பிறழச்செய்துவிட்டான்"[2] என்ற நபிமொழிக்கு மேற்கண்ட வார்த்தை முரண்படுவதாக சிலர் எண்ணுகின்றனர். ஆனால் அவ்வாறல்ல. ஏனெனில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தான். இஸ்லாத்தை ஏற்று, அதன்பால் மாத்திரம் சார்ந்திருக்கவும், அதற்காக பலத்தால் தயாராகும் சுபாவத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளான். எனினும் செயல் ரீதியாக இஸ்லாத்தைக் கற்பது அடியானின் மீது கடமையாகும். ஏனெனில் கற்பதற்கு முன் அறிவீனராகவே இருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் அறியாதவர்களாக இருந்த நிலையில் உங்கள் தாய்மார்களின் வயிறுகளிலிருந்து அல்லாஹ்வே உங்களை வெளியேற்றினான்" (நஹ்ல் 78). அல்லாஹ் தனது நபியைப் பார்த்து "உம்மை அவன் வழிதவறியவராகக் கண்டு நேர்வழியில் செலுத்தவில்லையா?" (அழ்ழுஹா : 07) என்று கூறுகின்றான். அதாவது வேதத்திலும் ஞானத்திலும் அவன் உமக்குக் கற்றுத் தந்ததை ஏற்கனவே அறியாதிருந்தீர். மேலும் கூறுகின்றான் : "மேலும் இவ்வாறே நமது கட்டளையில் உயிரான (குர்ஆனாகிய இ)தை

---

"ஹஸன்" எனும் தரத்திலுள்ளதாகும் எனக் கூறியுள்ளதைப் பதிந்துள்ளார்கள்.

1.ஈருலக விடயங்களையும் அவனிடமே கேட்க வேண்டும் என்பதற்கான தெளிவான சான்று அவ்வாறு அவனிடம் கேட்பவர்களை அவன் சிலாகித்துக் கூறியுள்ளான். "எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இவ்வுலகில் நல்லதையும், மறுமையில் நல்லதையும் தந்தருள்வாயாக! மேலும், நரக வேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக! என்று பிரார்த்திப்போரும் அவர்களில் உள்ளனர்" (பகரா : 201) .

2. நூல் : முஸ்லிம் (2865).

உமக்கு வஹியாக அறிவித்தோம். வேதம் என்றால் என்ன? ஈமான் என்றால் என்ன? என்பதை (நபியே!) நீர் அறிந்தவராக இருக்கவில்லை" (அஷ்ஷூ ரா : 52).

எனவே மனிதன் சத்தியத்தை ஏற்கும் சுபாவத்திலேயே பிறக்கின்றான். அல்லாஹ் அவனுக்கு நேர்வழியை நாடினால் அதனைக் கற்றுக் கொடுப்பதற்குரிய ஏற்பாடு செய்கின்றான். எனவே நேர்வழி பெறும் பலத்திலிருந்தவன் யதார்த்தமாகவே நேர்வழி பெற்றவனாகி விடுகின்றான். நேர்வழி நாடாவிட்டால் நேர்வழி பெறும் சுபாவத்தை விட்டும் திசைதிருப்பும் ஏற்பாட்டை செய்து விடுகின்றான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)திலேயே பிறக்கின்றன. பெற்றோர்கள்தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தைவிட்டுத் திருப்பி) யூதர்களாகவோ கிறித்தவர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.[(1)]

ஒரு முஃமின் அல்லாஹ்விடம் கேட்கும் நேர்வழி இரு வகைப்படும்.

**01.** பொதுவான நேர்வழி. இது பொதுவாக அனைத்து முஃமினுக்கும் கிடைக்கக்கூடிய ஈமான் மற்றும் இஸ்லாத்தின் பால் காட்டும் நேர்வழி.

**02.** விரிவான நேர்வழி. இது ஈமான், இஸ்லாத்தின் விரிவான பகுதிகளை அறிந்து, அதனைப் பின்பற்றுவதற்கு காட்டப்படும் நேர்வழியாகும். இது அனைத்து முஃமினுக்கும் தினமும் தேவைப்படும் நேர்வழியாகும். அதனால் தான் முஃமின்களுக்கு தனது தொழுகையில் "நீ எமக்கு நேரான வழியைக் காட்டுவாயாக!" (பாத்திஹா : 06) என்று பிரார்த்திக்குமாறு பணித்துள்ளான். நபியவர்களும் தனது இரவுப் பிரார்த்தனையில் "(பிற மக்களால்) மாற்றுக் கருத்து கொள்ளப்பட்ட விடயத்தில் உன் தயவால் எனக்கு நேர்வழி காட்டுவாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்"[(2)] என்று பிரார்த்திப்பார்கள்.

மேலும் இதனால்தான் தும்மியவர் அல்லாஹ்வைப் புகழ்ந்ததும் அவருக்கு யர்ஹமுகல்லாஹ் (அல்லாஹ் உனக்கு அருள் புரியட்டும்) எனக் கூறப்படும். அப்போது தும்மியவர் இவரைப் பார்த்து "யஹ்தீகுமுல்லாஹ்" (அல்லாஹ் உமக்கு நேர்வழி காட்டுவானாக!) எனக் கூற வேண்டுமென

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (1385), முஸ்லிம் (2658).

2.அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (770).

நபிமொழிகளில் வந்துள்ளது.[1] முஸ்லிமிற்கு நேர்வழிக்காகப் பிரார்த்தனை செய்யும் தேவையில்லை என்று எண்ணிய இராக் நாட்டைச் சேர்ந்த சில மார்க்க சட்ட வல்லுனர்கள் மேற்கண்ட பிரார்த்தனைக்கு முரண்பட்டாலும் ஸுன்னாவைப் பின்பற்றும் முகமாக பெரும்பான்மை அறிஞர்கள் இவர்களுக்கு மாறுபட்டுள்ளனர்.

மேலும் நபியவர்கள் அலி (ரலி) அவர்களிடம் தடம்புரளாமையும் நேர்வழியையும் அல்லாஹ்விடம் கேட்குமாறு ஏவினார்கள்.[2]

பாவமன்னிப்புத் தேடல் ஓர் அடியானுக்கு மிக அவசியமானது. ஏனெனில் அவன் இரவு பகலாகத் தவறிழைக்கின்றான். பாவமீட்சி (தவ்பா), பாவமன்னிப்பு (இஸ்திஃபார்) ஆகிய இரண்டும் அல்குர்ஆனில் பல இடங்களில் கூறப்பட்டு, அவற்றைக் கேட்குமாறு ஏவப்பட்டும், தூண்டப்பட்டும் உள்ளன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் தினமும் 70 தடவைகளுக்கு மேல் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடி மீள்கிறேன்".[3] இதே செய்தி நஸாஈ, இப்னு மாஜாஃ போன்ற நூட்களில் 100 தடவை என இடம் பெற்றுள்ளது.[4]

மேலும் கூறினார்கள் : மக்களே! நீங்கள் உங்கள் இரட்சகனிடம் பாவமீட்சி பெறுங்கள். நான் தினமும் 100 தடவைகள் பாவமீட்சி பெறுகிறேன்.[5] இதே செய்தி நஸாஈயில் பாவமீட்சி, பாவமன்னிப்பு ஆகிய இரண்டையும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.[6]

**"எனது அடியார்களே! நீங்கள் எவ்வளவு முயன்றாலும் எனக்குத் தீங்கு செய்கின்ற நிலையை நீங்கள் அடைய முடியாது. இன்னும் நீங்கள் எவ்வளவு முயன்றாலும் எனக்கு எந்த நன்மையையும் செய்து விட முடியாது."**

அதாவது அடியார்களால் ஒருபோதும் அல்லாஹ்வுக்கு நலவோ, கெடுதியோ செய்திட முடியாது. ஏனெனில் அல்லாஹ் யாரிடமும் தேவையற்றவன், புகழுக்குரியவன். அடியார்களின் வணக்கங்களில்

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6224).

2.அறிவிப்பவர் : அலீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2725).

3.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6307).

4.நூல் : இப்னுமாஜா (3815), ஸுனன் நஸாஈ அல்குப்ரா (6/114).

5.அறிவிப்பவர் : அகர்ர் அல்முஸனீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2702).

6.நூல் : ஸுனன் நஸாஈ அல்குப்ரா (6/116).

அவனுக்கு எவ்விதத் தேவையும் கிடையாது. அதன் பயன்கள் ஏதும் அவனுக்கு வந்திடாது. மாறாக அவர்கள் தாம் பயனடைவார்கள். அவர்கள் மாறு செய்வதால் அவனுக்கு கெடுதி ஏதும் ஏற்பட்டிடாது. அவர்கள் தான் அவதிப்படுவார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: "நிராகரிப்பில் விரைந்து செல்வோர் உம்மைக் கவலையில் ஆழ்த்தி விட வேண்டாம். நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்குமிழைத்து விட முடியாது" (ஆல இம்ரான் : 176).

"எவர் தாம் வந்த வழியே புறமுதுகிட்டுச் சென்று விடுகின்றாரோ, அவர் அல்லாஹ்வுக்கு எந்தத் தீங்கும் செய்துவிட முடியாது" (ஆல இம்ரான் : 144).

"யார் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் மாறு செய்கின்றாரோ அவர் அழிந்து விடுவார். தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொள்வார். அல்லாஹ்விற்கு எவ்விதத் தீங்கும் இழைக்க முடியாது" என நபியவர்கள் தனது பிரசங்கத்தில் கூறுவார்கள்.[1]

அல்லாஹ் கூறுகின்றான் : "நீங்கள் நிராகரித்தால் நிச்சயமாக வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும் அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் (பிறரை விட்டும்) தேவையற்றவனாகவும், புகழுக்குரியவனாகவும் இருக்கின்றான்" (நிஸா : 131).

மூஸா (அலை) அவர்கள் கூறியதாக "நீங்களும், பூமியில் இருக்கும் அனைவரும் நிராகரித்தாலும் நிச்சயமாக அல்லாஹ் யாதொரு தேவையற்றவனும் புகழுக்குரியவனுமாவான் என்று மூஸா கூறினார்" (இப்றாஹீம் : 08) என்று கூறுகின்றான்.

"இன்னும் எவன் நிராகரிக்கின்றானோ (அவன் தன்னையே நட்டப்படுத்திக் கொள்கிறான்). நிச்சயமாக அல்லாஹ் (எவரிடத்திலும்) தேவையற்றவன், புகழப்படுபவன்" (லுக்மான் : 12).

"அவற்றின் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வைச் சென்றடையாது. எனினும் உங்களிடமிருந்து பயபக்தியே அவனைச் சென்றடையும்" (அல்ஹஜ் : 37).

சுருக்கம் என்னவெனில் : அல்லாஹ் தனது அடியார்கள் தன்னை அஞ்சி, கட்டுப்படுவதை விரும்புகின்ற, அதேவேளை தனக்கு மாறு செய்வதை வெறுக்கின்றான். இதனால் தான் தன்னிடம் பாவமீட்சி பெறுவோரைப்

1.அறிவிப்பவர் : இப்னு மஸஊத் (ரலி), ஆதாரம் : அபூதாவுத் (1097, 2119), இதன் அறிவிப்பாளர் தொடர் பலவீனமானது.

பார்த்து மிக்க மகிழ்ச்சியடைகின்றான். எந்தளவுக்கெனில், ஓர் அடியான் பாலைவனத்தில் தனது பயணப் பொதிகளுடனிருந்த ஒட்டகம் தவறிவிட்டது. அதைத் தேடித் தேடி இறுதியில் களைப்படைந்து, நிராசையடைந்து, இனி வாழ்க்கை முடிந்துவிட்டதென மரணத்தை எதிர்பார்த்தவனாக சற்று கண்ணயர்கின்றான். பின்னர் விழித்துப் பார்த்ததும் அவ் ஒட்டகம் பயணப் பொதிகளுடன் நின்றிருப்பதைக் காண்கிறான். இதுதான் ஒரு மனிதன் அதிக பட்சமாக சந்தோசப்படும் தருணமாகும். இதுபோன்ற மனிதனை விட படைத்தவன் தனது அடியானின் தவ்பாவைப் பார்த்து சந்தோசப்படுகின்றான். இவையனைத்தும் அடியார்களின் வணக்கங்கள், தவ்பாக்களில் எவ்விதத் தேவையுமற்றவனாகத்தான் மகிழ்ச்சியடைகின்றான். அதன் பயன்பாடுகள் எல்லாம் அவனையன்றி அவர்களையே போய்ச் சேருகின்றன. எனினும் இது அவன் தனது அடியார்கள் மீது சொறியும் பரோபகாரம், கொடை நலவு நாடி, கெடுதியைத் தடுத்தல் என்பவற்றின் பூரணத்துவமாகும். எனவே அவன் தனது அடியார்கள் தன்னை அறிந்து, நேசித்து, அஞ்சி, கட்டுப்பட்டு, தன்னிடம் நெருங்குவதை விரும்புகின்றான். மேலும் அவனையன்றி பாவங்களை மன்னிப்பவன் யாருமில்லை. அவன்தான் தனது அடியார்களின் பாவங்களை மன்னிக்க முழுமையான சக்தி பெற்றவன் என்பதைத் தனது அடியார்கள் அறிவதையும் அவன் விரும்புகின்றான். அபூ தர் (ரலி) அவர்களின் இதே நபிமொழியில் மற்றுமொரு அறிவிப்பில் அப்துர்ரஹ்மான் பின் கன்ம் (ரஹ்) வாயிலாக பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : நான் பாவங்களை மன்னிக்கும் சக்தி பெற்றவன் என உங்களில் யாராவது அறிந்து, பின் என்னிடம் பாவமன்னிப்புக் கேட்டால் நான் ஏதும் பொருட்படுத்தாமல் அவனை மன்னிப்பேன்.

பின்வரும் வசனத்தை சிந்தித்துப் பாருங்கள் : “இன்னும் அவர்கள் மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டாலோ அல்லது தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவு கூர்ந்து உடனே தங்களது பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வையன்றி பாவங்களை மன்னிப்பவன் யார்?” (ஆல இம்ரான் : 135). பாவிகளுக்கு தமது பாவங்களுக்கு மன்னிப்புப் பெறவும், ஒதுங்கவும் அவனையன்றி வேறுயாருமில்லை என்பதற்கான சான்று இவ்வசனத்தில் உள்ளது. அதேபோன்று தான் (தபூக் போரிலிருந்து) பின்வாங்கிய அந்த மூன்று நபர்கள் விடயத்திலும் : “பூமி விசாலமாக இருந்தும் அது அவர்களுக்கு நெருக்கடியாகி, அவர்களுக்கு எதிராக அவர்களது உள்ளங்களும் நெருக்கடியாகி விட்டன. அல்லாஹ்விடமிருந்து (தப்புவதற்கு) அவனிடமேயன்றி புகலிடமில்லை என்பதை அவர்கள்

உறுதியாக அறிந்தனர். பின்னர் அவர்கள் மீண்டு வருவதற்காக அவன் அவர்களைமன்னித்தான். நிச்சயமாகஅல்லாஹ் மிக்க மன்னிப்பளிப்பவன். நிகரற்ற அன்புடையவன்" (தவ்பா : 118). அவனையன்றி ஒதுங்க யாருமில்லையென அடியார்கள் எண்ணுவதிலேயே அவனுடைய பாவமன்னிப்பை ஏற்படுத்தி வைத்துள்ளான். ஏனெனில் ஓர் அடியான் மற்றுமொரு படைப்பினத்திற்கு அஞ்சினால் அதனை விட்டும் இன்னொன்றின் பக்கம் ஓடுவான். ஆனால் அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு ஒதுங்கவோ, தப்பியோடவோ அவனையன்றி வேறுயாருமில்லை. அவனிடமிருந்து மீண்டும் அவனிடமே தப்பியோடுகின்றான். நபி (ஸல்) அவர்கள் தனது பிரார்த்தனையில் "உன்னை விட்டு ஒதுங்குமிடமோ, விரண்டோடும் இடமோ உன்னிடமே தவிர வேறில்லை".[1] என்று கூறுவார்கள். மேலும் கூறுவார்கள் : உனது பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்திலிருந்தும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையிலிருந்தும், உன்னைக் கொண்டே உன்னிடமிருந்தும் நான் பாதுகாவல் தேடுகிறேன்.[2]

**"எனது அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும், உங்களுக்குப் பின்னால் வருபவர்களும் உங்களுள் மனிதர்கள், ஜின்கள் ஆகிய நீங்கள் அனைவரும் என்னை வணங்குவதில் மிகவும் இறையச்சம் மிக்கவர்களாகவும், பக்திமிக்கவர்களாகவும் இருந்து என்னை வணங்கினாலும், அது எந்த விதத்திலும் என்னுடைய ஆட்சியின் எல்லையை விரிவடையச் செய்வதில்லை. எனது அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும் உங்களுக்குப் பின்னால் வருபவர்களும், உங்களுள் மனிதர்கள் ஜின்கள் ஆகிய அனைவரும் எத்தனை தான் கெட்டவர்களாக இருந்து குழப்பங்களை விளைவித்தாலும், அது என்னுடைய ஆட்சியின் எல்லையை எள்ளளவும் குறைத்து விடாது."**

அனைவரும் இறையச்சமுள்ளவர்களாக, நல்லவர்களாக, அதிக இறையச்சமுள்ள உள்ளத்தைப் போன்றிருந்தாலும் படைப்பினங்களுடைய வணக்கங்கள் அல்லாஹ்வின் ஆட்சியதிகாரத்தில் எதையும் அதிகரிக்க மாட்டாது. மனிதர்கள், ஜின்கள் அனைவரும் மிக மோசமான ஒருவனின் உள்ளத்தைப் போன்றிருந்தாலும் அவர்களது பாவங்கள் ஒருபோதும் அவனது ஆட்சியதிகாரத்தில் எதையும் குறைக்க மாட்டாது என்பதையே இந்நபிமொழி சுட்டிக்காட்டுகின்றது. ஏனெனில் அல்லாஹ் பிறரை விட்டும் எவ்விதத்திலும் தேவையற்றவன். அவனது

---

*1. அறிவிப்பவர் : பர்ராஃ பின் ஆஸிப் (ரலி), ஆதாரம் : புஹாரி (6311), முஸ்லிம் (2710).*

*2.அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (486).*

யதார்த்தம், பண்புகள், செயல்கள் அனைத்திலும் அவனுக்கு பரிபூரணத்துவமுண்டு. அவனது ஆட்சியதிகாரம் பரிபூரணமானது. எவ்விதத்திலும் அதில் எக்குறையும் இல்லை.

**“என்னுடைய அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும், உங்களுக்கு பின்னால் வருபவர்களும் மனிதர்களும், ஜின்களும் ஒரே இடத்தில் கூடி நின்று என்னிடத்தில் வேண்டியதெல்லாம் கேட்டகவும், அவ்வாறு நீங்கள் கேட்பதையெல்லாம் நான் தந்தாலும் அது என்னிடமிருப்பதை, ஓர் ஊசி முனையைக் கடலில் முக்கி எடுப்பதால் குறையும் அளவிற்குக் கூட குறைத்து விடுவதில்லை.”**

அல்லாஹ்வின் பரிபூரண ஆற்றலையும், பரிபூரண ஆட்சியதிகாரத்தையும் கூறுவதே இதன் நோக்கமாகும். மனிதர்கள், ஜின்களில் முன் சென்றோர் பின் வருவோர் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து கேட்ட அனைத்தையும் கொடுத்தாலும் அவ்வாறு கொடுப்பதால் அவனது ஆட்சியோ, பொக்கிஷமோ அழியவும் மாட்டாது. குறைந்திடவும் மாட்டாது. அப்படைப்பினங்கள் அல்லாஹ்விடம் கேட்பதையும், தமது தேவைகளை அவனிடம் இறக்கி வைப்பதையும் இச்செய்தி ஊக்குவிக்கின்றது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வின் கரம் நிரம்பியுள்ளது. இரவும் பகலும் (மழை மேகத்தைப் போல்) வாரி வழங்குவதால் அது வற்றிப் போய்விடுவதில்லை. வானங்களையும் பூமியையும் அவன் படைத்தது முதல் அவன் வழங்கியவை அவனுடைய கரத்திலுள்ள (செல்வத்)தை வற்றச் செய்து விடவில்லை என்பதைப் பார்த்தீர்களா?.[1]

**“அது என்னிடமிருப்பதை ஓர் ஊசி முனையைக் கடலில் முக்கி எடுப்பதால் குறையும் அளவிற்குக் கூட குறைத்து விடுவதில்லை”** என்ற உதாரணம் அல்லாஹ்விடமிருப்பது அறவே குறைய மாட்டாது என்பதை உறுதிப்படுத்தவே கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான் : “உங்களிடமிருப்பது அழிந்துவிடும். அல்லாஹ்விடமிருப்பதோ நிலைத்திருக்கக் கூடியது” (நஹ்ல் : 96). கடலில் ஓர் ஊசி முக்கியெடுக்கப் படுவதால் கடல்நீர் ஒருபோதும் குறையப் போவதில்லை. இதற்குக் காரணம் கடலுடன் ஆற்று நீர் மற்றும் உலக நீர் நிலைகள் அனைத்தும் கலந்து கொண்டே இருக்கின்றன. அதிலிருந்து எவ்வளவு எடுத்தாலும் குறையவே மாட்டாது. ஏனெனில் எடுப்பதன் பன்மடங்கு அதில் சேர்ந்து நீண்டு கொண்டே போகின்றது. அதேபோன்று தான் சுவனத்தின் உணவுகளும்

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (7411), முஸ்லிம் (993).

*இதர இன்பங்களும். அல்லாஹ் கூறுகின்றான் : “இன்னும் (எக்காலத்திலும்) அற்றுப் போகாத, (உண்ணத்) தடுக்கப்படாத அதிகமான கனிகளுக்கு மத்தியில் இருப்பார்கள்” (வாகிஆ : 23,24).*

*அல்லாஹ்விடமுள்ளது அள்ளி வழங்குவதால் ஏன் குறையமாட்டாது? என்பதை ஒரு நபிமொழியில் தெளிவுபடுத்தியுள்ளான். “அது ஏனெனில் நிச்சயமாக நான் கொடை வள்ளலும், செல்வந்தனும், கண்ணியமானவனுமாவேன். நான் நினைத்ததை செய்பவன். எனது கொடையும் ஒரு பேச்சு தான். எனது தண்டனையும் ஒரு பேச்சு தான். நான் ஒரு பொருளை உருவாக்க நாடினால் “நீ ஆகிவிடு” என்றதும் அது ஆகிவிடும்.[1]*

*இது பற்றிய ஓர் அரபுக் கவிதையின் தமிழ்ச் சுருக்கம் வருமாறு :*

*பேராசையினால் எந்த ஒரு படைப்பினத்திற்கும் பணியாதே. அது உனது மார்க்கத்தைப் பாதிக்கும்.*

*அல்லாஹ்விடம் அவனது பொக்கிஷத்திலிருந்து வாழ்வாதாரத்தைக்கேள். அது “குன்” (ஆகிவிடு) என்ற சொல்லிலுள்ள காப், நூன் ஆகிய எழுத்துக்கு மத்தியிலேயே உள்ளது.*

***“எனது அடியார்களே! இவைதான் உங்களுடைய செயல்கள். அவற்றைக் கொண்டே நான் உங்களை கணிக்கின்றேன். அவைகளை வைத்துக் கொண்டு தான் நான் உங்களுக்கு பின்னர் கூலி தருகின்றேன்.”***

*அதாவது அல்லாஹ் தனது அடியார்களின் செயற்பாடுகளைக் கணித்து பின்பு அதற்குரிய கூலியை வழங்குகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்: “நிராகரித்தோரே! இன்றைய தினம் போலிக் காரணம் கூறாதீர்கள். நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்கே கூலி வழங்கப்படுவீர்கள். நம்பிக்கை கொண்டோரே! தூய முறையில் பாவமன்னிப்புக் கோரி அல்லாஹ்வின் பக்கம் மீளுங்கள். உங்கள் இரட்சகன் உங்களை விட்டும் உங்கள் தீமைகளைப் போக்கி, உங்களைச் சுவனச் சோலைகளில் நுழைவிப்பான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். இந்நபியையும் அவருடன் நம்பிக்கை கொண்டோரையும் அல்லாஹ் இழிவுபடுத்தாத ஒருநாளில் அவர்களது ஒளி அவர்களுக்கு முன்னாலும் அவர்களுக்கு வலப் புறத்தாலும் சென்று கொண்டிருக்கும். எங்கள் இரட்சகனே! எங்கள் ஒளியை எங்களுக்குப் பூரணப்படுத்துவாயாக! மேலும், எங்களை*

---

*1.அறிவிப்பவர் : அபூதர் (ரலி), ஆதாரம் : திர்மிதீ (2495), இப்னு மாஜாஃ (4257) இமாம் திர்மிதி இதனை ஹஸன் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.*

மன்னிப்பாயாக! நிச்சயமாக நீ யாவற்றின் மீதும் பேராற்றலுடையவன் என்றும் கூறுவார்கள் (அத்தஹ்ரீம் : 7,8).

மேலும் கூறுகின்றான் : "மேலும் தாம் செய்தவற்றை தம் முன்னாள் கண்டு கொள்வர். இன்னும் உமது இரட்சகன் எவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்" (கஹ்ஃப் :49).

**"ஆகவே உங்களில் நலவைப் பெற்றுக் கொண்டவர் அல்லாஹ்வைப் புகழட்டும். நலவு அல்லாதவற்றைக் காண்பவர்கள் தங்களைத் தவிர வேறு எவரையும் குறைகூற வேண்டாம்."**

அனைத்து நலவுகளும் அல்லாஹ்விடமே உள்ளன. அவை அவனது பெருந்தன்மையால்தகுதியில்லாவிடினும்அடியானுக்குக்கிடைக்கின்றது. கெடுதிகள்அனைத்தும் மனிதன்தனது மனோஇச்சையைப் பின்பற்றியதன் விளைவாகவே உருவாகின்றன என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது.

"உமக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால் அது அல்லாஹ்விடமிருந்து உள்ளதே. உமக்கு ஏதெனும் தீங்கு நேர்ந்தால் அது உம்மால் தான் நேர்ந்தது" (நிஸாஃ : 79).

அல்லாஹ் ஓர் அடியானுக்கு அனுகூலம் புரிந்து நேர்வழிகாட்ட விரும்பினால் அவனுக்கு உதவி செய்து, கட்டுப்படும் சந்தர்ப்பத்தை வழங்குகின்றான். அது அவனிடத்தில் இருந்து கிடைக்கும் சிறப்பாக இருக்கின்றது. (மறுபுறம்) ஒருவனை வழிகெடுக்க நாடினால் அவனை அவனிடமே சாட்டி, அல்லாஹ் பொறுப்புத் துறந்து விடுகின்றான். அவன் அல்லாஹ்வை நினைவு கூர்வதை விட்டும் அலட்சியமாக இருப்பதால் அவனை ஷைத்தான் வழிகெடுத்து விடுகின்றான். "எவன் தனது மனோ இச்சையைப் பின்பற்றினானோ (அவனை நீர் பின்பற்றாதீர்). மேலும் அவனது காரியம் வரம்பு மீறியதாகவே உள்ளது" (கஹ்ஃப் : 28). அது அவனுடைய நீதியாக இருக்கின்றது. ஏனெனில் வேதங்கள் இறக்கப்படுவதன் மூலமும் தூதர்கள் அனுப்பப்படுவதன் மூலமும் அடியானுக்கு எதிராக ஆதாரம் நிரூபணமாகிவிட்டது. எனவே தூதர்களுக்குப் பின்னால், தப்புவதற்கான ஆதாரங்களை அல்லாஹ்வுக்கு எதிராக யாரும் முன்வைக்க முடியாது.

சுவனவாதிகள் அல்லாஹ் தமக்களித்த நன்கொடைகளுக்காக வேண்டி அவனைப் புகழ்வார்கள் என திருமறையில் அல்லாஹ் கூறியுள்ளான்.

"மேலும் அவர்களின் உள்ளங்களில் இருந்து குரோதத்தை நாம் கழற்றி விடுவோம். அவர்களுக்குக் கீழால் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். இதன் பால் எமக்கு வழிகாட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்லாஹ்

*எமக்கு நேர்வழி காட்டியிருக்காவிட்டால் நாம் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம்" (அஃராப் : 43).*

*"தனது வாக்குறுதியை எங்களுக்கு உண்மைப்படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். சுவர்க்கத்தில் நாம் நாடியவாறு வாழ்வதற்காக (அதன்) பூமியை எங்களுக்கு அவன் உரித்தாக்கினான்" (ஸுமர் : 74).*

*"எம்மை விட்டும் கவலையை நீக்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். நிச்சயமாக எங்கள் இரட்சகன் மிக்க மன்னிப்பவன். நன்றி பாராட்டுபவன் எனக் கூறுவர். அவன் தனது அருளால் நிலையான வீட்டில் எங்களைத் தங்க வைத்தான். இதில் எங்களுக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படமாட்டாது. இன்னும் இதில் எங்களுக்கு எவ்வித சோர்வும் ஏற்படமாட்டாது (என்றும் கூறுவர்)" (பாதிர் : 34,35).*

நரகவாதிகள் தம்மைத்தாமே பழித்துக் கொள்வார்கள். கடுமையாகக் கோபித்துக் கொள்வார்கள் எனவும் அல்லாஹ் கூறுகின்றான் :

*"தீர்ப்பு வழங்கப்பட்டதும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உண்மையையே வாக்களித்தான். நானும் உங்களுக்கு வாக்களித்தேன். ஆனால், உங்களுக்கு மாறு செய்தேன். நான் உங்களை அழைத்து எனக்கு நீங்கள் பதிலளித்ததைத் தவிர எனக்கு உங்கள் மீது எந்த அதிகாரமும் இருந்திருக்கவில்லை. ஆகவே, நீங்கள் என்னைப் பழிக்காதீர்கள். உங்களை நீங்களே பழித்துக் கொள்ளுங்கள்" (இப்றாஹீம் : 22).*

## ஹதீஸ் –25

### அல்லாஹ்வின் விசாலமான அருள்

عَنْ أَبِي ذَرٍّ رَضِيَ اللهُ عَنْهُ:

"أَنَّ نَاسًا مِنْ أَصْحَابِ رَسُولِ اللهِ ﷺ قَالُوا لِلنَّبِيِّ ﷺ: يَا رَسُولَ اللهِ ذَهَبَ أَهْلُ الدُّثُورِ بِالْأُجُورِ، يُصَلُّونَ كَمَا نُصَلِّي، وَيَصُومُونَ كَمَا نَصُومُ، وَيَتَصَدَّقُونَ بِفُضُولِ أَمْوَالِهِمْ." قَالَ: "أَوَلَيْسَ قَدْ جَعَلَ اللهُ لَكُمْ مَا تَصَّدَّقُونَ؟ إِنَّ بِكُلِّ تَسْبِيحَةٍ صَدَقَةً، وَكُلِّ تَكْبِيرَةٍ صَدَقَةً، وَكُلِّ تَحْمِيدَةٍ صَدَقَةً، وَكُلِّ تَهْلِيلَةٍ صَدَقَةً، وَأَمْرٌ بِالْمَعْرُوفِ صَدَقَةٌ، وَنَهْيٌ عَنْ مُنْكَرٍ صَدَقَةٌ، وَفِي بُضْعِ أَحَدِكُمْ صَدَقَةٌ." قَالُوا: يَا رَسُولَ اللهِ أَيَأْتِي أَحَدُنَا شَهْوَتَهُ وَيَكُونُ لَهُ فِيهَا أَجْرٌ؟ قَالَ: "أَرَأَيْتُمْ لَوْ وَضَعَهَا فِي حَرَامٍ، أَكَانَ عَلَيْهِ وِزْرٌ؟ فَكَذَلِكَ إِذَا وَضَعَهَا فِي الْحَلَالِ كَانَ لَهُ أَجْرٌ." رَوَاهُ مُسْلِمٌ.

*நபித்தோழர்களில் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார்கள் :* ***'இறைவனின் தூதரவர்களே! செல்வச் செழிப்புள்ளவர்கள் இறைவனிடம் மிகுந்த நற்கூலியை சம்பாதித்துக் கொண்டார்கள். அவர்கள் நாங்கள் தொழுவது போலவே தொழுகிறார்கள். நாங்கள் நோன்பிருப்பது போலவே நோன்பிருக்கின்றார்கள். தங்களது தேவைக்குப் போக மிகுதியாயுள்ள செல்வத்திலிருந்து தர்மம் செய்கிறார்கள்".***

***நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் உங்களுக்கும், தானதர்மங்கள் செய்திட தேவையானவைகளைத் தரவில்லையா? எனக் கேட்டார்கள். உண்மையிலேயே ஒவ்வொரு 'தஸ்பீஹும்" (ஸுப்ஹானல்லாஹ்) ஒரு தர்மமேயாகும். ஒவ்வொரு தக்பீரும் (அல்லாஹு அக்பர்) ஒரு தர்மமேயாகும். ஒவ்வொரு தஹ்மீதும் (அல்ஹம்து லில்லாஹ்) ஒரு தர்மமேயாகும். ஒவ்வொரு தஹ்லீலும் (லாஇலாஹ இல்லல்லாஹ்) ஒரு தர்மமேயாகும். நன்மையை ஏவுவதும் தர்மமேயாகும். தீமையைத் தடுப்பதும் தர்மமேயாகும். நீங்கள் உங்கள் மனைவியரோடு ஒன்று கூடுவதும் ஓர் அறச் செயலே ஆகும்.***

***தோழர்கள், 'இறைவனின் தூதர் அவர்களே, எங்களில் ஒருவர் தன் மனைவியிடம் தன் இச்சையை நிறைவு செய்து கொள்ளும்போது அதற்காகவும் அவருக்கு நற்கூலி உண்டா?" எனக் கேட்டார்கள். நபி (ஸல்)***

**அவர்கள் கூறினார்கள் : 'இதில் தடுக்கப்பட்டதை செய்பவர்கள் பாவம் செய்கிறார்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? அதுபோலவே இதில் ஆகுமான முறையில் நடந்து கொள்பவர்களுக்கு நற்கூலியும் உண்டு".**

*அறிவிப்பவர் : அபூதர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1006).*

**விரிவுரை :**

நபித்தோழர்கள் பிறரால் செய்ய முடியுமான நன்மைகளைத் தம்மால் செய்ய முடியாத போது கவலைப்படக் கூடியவர்களாக இருந்தார்கள் என்பதற்கு இந்நபிமொழி சான்றாக உள்ளது.[1]

செல்வந்தர்கள் தர்மத்தின் மூலம் பெறும் நன்மைகளைப் பார்த்து வறிய நபித்தோழர்கள் தமக்கும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என ஆசைப் பட்டார்கள். நபியவர்களும் அவர்களுக்குத் தகுந்த தர்ம முறைகளைக் காட்டிக் கொடுத்தார்கள்.

"ஏழை மக்கள் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து 'செல்வந்தர்கள் உயர்வான பதவிகளையும் நிலையான பாக்கியத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். நாங்கள் தொழுவது போன்றே அவர்களும் தொழுகிறார்கள். மேலும் நாங்கள் நோன்பு வைப்பது போன்றே அவர்களும் நோன்பு நோற்கின்றனர். ஆயினும் அவர்களுக்குச் செல்வம் இருப்பதனால் தங்கள் பொருளாதாரத்தின் மூலம் ஹஜ் செய்கின்றனர்;. உம்ராச் செய்கின்றனர்;. அறப்போரிடுகின்றனர்; தர்மமும் செய்கின்றனர். (ஏழைகளாகிய நாங்கள் இவற்றைச் செய்ய முடிவதில்லை)" என்று முறையிட்டனர்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'நான் உங்களுக்கு ஒரு காரியத்தைக் கற்றுத் தருகிறேன். அதை நீங்கள் செய்து வந்தால் உங்களை முந்திவிட்டவர்களை நீங்களும் பிடித்து விடுவீர்கள். உங்களுக்குப் பிந்தி வருபவர்கள் உங்களைப் பிடிக்க இயலாது. நீங்கள் எந்த மக்களுடன் வாழ்கிறீர்களோ அவர்களும் அந்தக் காரியத்தைச் செய்தால் தவிர அவர்களில் நீங்கள் மிகச் சிறந்தவராவீர்கள். (அந்த காரியமாவது) ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் 33 முறை سبحان الله என இறைவனைத் துதியுங்கள். 33 முறை الحمد لله என இறைவனைப் புகழுங்கள். 33 முறை الله أكبر என இறைவனைப் பெருமைப் படுத்துங்கள்." என்று கூறினார்கள். இதனை அறிவிக்கும் அபூஸாலிஹ்

---

1.மார்க்க விடயத்தில் அதிகரிப்பதற்காக தனக்கு மேலுள்ளவர்களையும், உலக விடயங்களில் போதுமென்ற எண்ணம் உருவாக தனக்குக் கீழுள்ளவர்களைப் பார்ப்பவனே பாக்கியம் பெற்றவனாகும். **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ) .**

கூறுகின்றார் : மக்காவாசிகளில் ஏழை மக்கள் சிலர் மீண்டும் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, எமது சகோதர செல்வந்தர்களும் நாம் செய்வதைக் கேள்விப்பட்டு, அதே போன்று அவர்களும் செய்கிறார்களே என முறைப்பட்டார்கள். அதற்கு நபியவர்கள் : அது அல்லாஹ்வுடைய சிறப்பாகும். அதனைத் தான் நாடியவர்களுக்கு வழங்குகின்றான் என்றார்கள்''.[1]

வறியவர்கள் தர்மம் என்பது பொருளாதாரத்தால் மாத்திரம் தான் செய்ய முடியும். அது தங்களால் முடியாத காரியம் என எண்ணிக் கொண்டிருந்தார்கள். நபியவர்கள் அவர்களிடம் அனைத்துவித நற்செயல்கள், உபகாரங்களும் தர்மம்தான் எனத் தெரிவித்தார்கள் என்பதே இந்நபிமொழியின் அர்த்தமாகும்.

**பணமின்றி வேறு வழிகளில் செய்யும் தர்மம் இரு வகைப்படும் :**

**01.** பிறருக்கு உபகாரம் செய்தல். அது இவர்களுக்கு தர்மமாக மாறிவிடும். சிலவேளை பணத்தால் செய்யும் தர்மத்தைக் காண மேம்பட்டு விடும். உதாரணமாக : நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல். ஏனெனில் இது அல்லாஹ்வை வழிபடவும், அவனுக்கு மாறு செய்வதைத் தடுப்பதற்குமான அழைப்பாகும். இது பொருளால் செய்யும் பயன்பாட்டை விடச் சிறந்ததாகும். அதேபோன்றுதான் பயனுள்ள கல்வியைக் கற்பித்தல். அல்குர்ஆன் ஓதக் கற்பித்தல், பாதையிலிருந்து நோவினை தருபவற்றை அகற்றுதல், மக்களுக்கு நல்லது செய்வதிலும் கெடுதியைத் தடுப்பதிலும் பாடுபடல், முஸ்லிம்களுக்காகப் பிரார்த்தனை புரிந்து, அவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடுதல் போன்றனவும் பணமின்றி தர்மம் செய்யும் முறைகளாகும்.

**மக்களுக்கு தீங்கு செய்யாமலிருப்பதும் தர்மமாகும்.**

அபூ தர் (ரலி) கூறினார்கள் : நான் நபி (ஸல்) அவர்களிடம், 'எந்த நற்செயல் சிறந்தது?'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'அல்லாஹ்வின் மீது ஈமான் எனும் நம்பிக்கை கொள்வதும் அவனுடைய பாதையில் ஜிஹாத் எனும் போராடுவதுமாகும்'' என்று பதிலளித்தார்கள். நான், 'எந்த அடிமை(யை விடுதலை செய்வது) சிறந்தது'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'அவர்களில் அதிக விலை கொண்ட அடிமையும் தன் எஜமானர்களிடம் பெறுமதி மிக்க அடிமையும் (தான் சிறந்தவர்கள்)'' என்று பதிலளித்தார்கள். நான், 'என்னால் அது (அடிமையை விடுதலை செய்வது) இயலவில்லையென்றால்?'' என்று கேட்டேன். நபி (ஸல்)

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (843), முஸ்லிம் (595).

அவர்கள், 'பலவீனருக்கு உதவு, அல்லது உழைத்துச் சம்பாதிக்க இயலாதவனுக்கு நன்மை செய்'' என்று கூறினார்கள். நான், 'இதுவும் என்னால் இயலாவில்லையென்றால்...? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், 'மக்களுக்குத் தீங்கு செய்யாமல் இரு. ஏனெனில், அதுவும் நீ உனக்கு செய்து கொள்ளும் ஒரு தர்மமாகும்'' என்று கூறினார்கள்.[1]

ஒரு மனிதன் தனது குடும்பத்திற்கு செலவளித்தலும் தர்மம் என ஸஹீஹான நபிமொழிகளில் இடம்பெற்றுள்ளது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் செலவிட்ட பொற்காசு, ஓர் அடிமைக்காகச் செலவிட்ட ஒரு பொற்காசு, ஓர் ஏழைக்குத் தர்மம் செய்த பொற்காசு, உங்கள் குடும்பத்தாருக்காகச் செலவிட்ட பொற்காசு - அனைத்திலும் குடும்பத்தாருக்காகச் செலவிட்ட ஒரு பொற்காசே அதிக நற்பலனை உடையதாகும்''.[2]

இதே கருத்தில் பல நபிமொழிகள் உள்ளன. அனைத்தையும் இங்கு கூற முடியாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : முஸ்லிம் ஒருவர் ஒரு மரத்தை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்கும்.[3]

**02.** பணமின்றி செய்யும் தர்மங்களில் திக்ரின் வகைகளைப் போன்று பிறர் தொடர்புபடாமல் தன்னுடன் மாத்திரம் சுருங்கிக் கொள்பவையும் உண்டு.

தொழுகை, நோன்பு, ஹஜ், ஜிஹாத் போன்றவற்றை இங்கு நபியவர்கள் தர்மமாகக் கூறவில்லை. ஏனெனில் செல்வந்தர்கள் செய்யும் தர்மத்திற்கு ஈடாக வறியவர்கள் கேட்டதனால்தான் நபியவர்கள் அவற்றைக் கூறினார்கள். ஆனால் மேற்கண்டது போன்ற கடமையானவற்றில் செல்வந்தர்கள், வறியவர்கள் அனைவரும் பங்கெடுத்து மேற்கொள்ளக் கூடியவர்களாகவே இருந்தார்கள்.

தர்மம் மற்றும் வேறுபல அமல்களை விட அல்லாஹ்வை நினைவு கூர்வதை மேம்படுத்தி பல ஆதாரங்கள் உள்ளன. நபி (ஸல்) அவர்கள்

---

1.அறிவிப்பவர் : அபூதர் (ரலி), ஆதாரம் : புஹாரி (2518), முஸ்லிம் (84).

2.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (995).

3.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (2320), முஸ்லிம் (1553).

*கூறினார்கள் : உங்கள் அமல்களில் மிகச் சிறந்த, உங்கள் எஜமானிடத்தில் மிகத் தூய்மையான, அந்தஸ்துக்களை மிக உயர்த்தக்கூடிய, தங்கம் வெள்ளிகளை செலவளிப்பதை விடச் சிறந்த, எதிரிகளைப் போர்க்களத்தில் சந்திப்பதை விடச் சிறந்த ஓர் அமலை உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா? ஆம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனத் தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் "அல்லாஹ்வை நினைவு கூர்தல்" எனக் கூறினார்கள்.*(1)

இக்கருத்தில் மேலும் பல நபிமொழிகள் உள்ளன.

*1.அறிவிப்பவர் : அபுத்தர்தாஃ (ரலி), ஆதாரம் : அஹ்மத் (21702), திர்மிதி (3377), "முஆத் பின் ஜபல் (ரலி) கூறினார்கள் : அல்லாஹ்வை நினைவு கூர்வதை விட நரகிலிருந்து பாதுகாக்கக்கூடிய ஏதும் இல்லை" எனும் வார்த்தையை இமாம் திர்மிதி அதிகரித்துள்ளார்கள். அவர்கள் இதன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹ் எனவும், இமாம் அல்முன்திரி (ரஹ்) "ஹஸன்" எனவும் கூறியுள்ளார்கள். அஷ்ஷேக் அல்பானியும் தனது ஸஹீஹுத் தர்கீபில் (1493) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.*

# ஹதீஸ் –26

## மனித மூட்டுக்களுக்கான தர்மம்

عَنْ أَبِي هُرَيْرَةَ، رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ:

"كُلُّ سُلَامَى مِنَ النَّاسِ عَلَيْهِ صَدَقَةٌ، كُلَّ يَوْمٍ تَطْلُعُ فِيهِ الشَّمْسُ: تَعْدِلُ بَيْنَ اثْنَيْنِ صَدَقَةٌ، وَتُعِينُ الرَّجُلَ فِي دَابَّتِهِ، فَتَحْمِلُهُ عَلَيْهَا، أَوْ تَرْفَعُ لَهُ عَلَيْهَا مَتَاعَهُ صَدَقَةٌ، وَالْكَلِمَةُ الطَّيِّبَةُ صَدَقَةٌ، وَبِكُلِّ خُطْوَةٍ تَمْشِيهَا إِلَى الصَّلَاةِ صَدَقَةٌ، وَتُمِيطُ الْأَذَى عَنِ الطَّرِيقِ صَدَقَةٌ." رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***மனிதர்களின் ஒவ்வொரு மூட்டுக்கும் தினமும் ஏதாவது ஒரு தர்மம் செய்தாக வேண்டும். இரு மனிதர்களுக்கிடையில் நியாயமாக நடந்து கொள்வது ஒரு தர்மமாகும். வாகனத்தின் மீது ஏறுகின்ற ஒருவரை அதன் மீது ஏற்றி விடுவது ஒரு தர்மமாகும். அதுபோலவே அதன் மீது அவருடைய சுமைகளை ஏற்றி விடுவதும் ஒரு தர்மமாகும். ஒரு நல்ல வார்த்தை பேசுவதும் ஒரு தர்மமாகும். தொழுகைக்காக நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஒரு தர்மமாகும். ஊறு விளைவிக்கக் கூடிய பொருளொன்றை பாதையிலிருந்து அப்புறப்படுத்துவதும் ஒரு தர்மமாகும்.***

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (2989), முஸ்லிம் (1009).*

**விரிவுரை :**

***“மனிதர்களின் ஒவ்வொரு மூட்டுக்கும் தினமும் ஏதாவது ஒரு தர்மம் செய்தாக வேண்டும்”***

*இந்நபிமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள “ஸுலாமா” எனும் வார்த்தை அடிப்படையில் ஒட்டகத்தின் காலில் உள்ள எலும்புக்கே பயன்படுத்தப் படுவதாக இமாம் அபூ உபைத் (ரஹ்) கூறியுள்ளார்கள். மனிதனின் அனைத்து எலும்புகளுக்கும் தர்மம் கொடுப்பது கடமை என்பதே இந்நபிமொழியின் அர்த்தமாகும்.*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஆதமின் மக்களில் ஒவ்வொரு மனிதரும் முன்னூற்று அறுபது மூட்டுக்களுடன் படைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, யார் அந்த முன்னூற்று அறுபது மூட்டுக்களின் எண்ணிக்கை அளவிற்கு அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தி (தக்பீர்), அல்லாஹ்வைப் புகழ்ந்து (தஹ்மீத்), அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று (ஏகத்துவ உறுதி) கூறி, அல்லாஹ்வைத் துதித்து (தஸ்பீஹ்), அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி (இஸ்திஃக்ஃபார்), மக்களின் பாதையில் (இடையூறாகக்) கிடந்த ஒரு கல்லையோ அல்லது முள்ளையோ அல்லது எலும்பையோ அகற்றி, நல்லதை ஏவி, அல்லது தீமையைத் தடுத்(து நல்லறங்கள் புரிந்)தாரோ அவர் அன்றைய தினத்தில் தம்மை நரக நெருப்பிலிருந்து அப்புறப்படுத்திவிட்ட நிலையிலேயே நடமாடுகிறார்.[1]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மனிதனில் 360 மூட்டுக்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் பதிலாக தர்மம் செய்வது அவனுக்குக் கடமையாகும். அல்லாஹ்வின் தூதரே இதற்கு யார் தான் சக்தி பெறுவார்கள்? என தோழர்கள் வினவ, நபி (ஸல்) அவர்கள் : "பள்ளியினுள் விழுந்துள்ள உமிழ்நீரை அப்புறப்படுத்துதல், பாதையில் நோவினை தருவதை அகற்றுதல், முடியாவிட்டால் ளுஹாத் தொழுகை இரண்டு ரக்அத்கள் தொழுவது அனைத்திற்கும் செல்லுபடியாகும்" என்றார்கள்.[2]

நபி (ஸல்) அவர்கள் "**தர்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்**" என்று கூறினார்கள். அப்போது "(தர்மம்செய்ய ஏதும்) அவருக்குக் கிடைக்கவில்லையானால் (என்ன செய்வது), சொல்லுங்கள்?" என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள், "அவர் தம் கைகளால் உழைத்துத் தாமும் பயனடைவார்; பிறருக்கும் தர்மம் செய்வார்" என்று சொன்னார்கள். "அவருக்கு (உழைக்க உடலில்) தெம்பு இல்லையானால் (என்ன செய்வார்), சொல்லுங்கள்?" என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் "பாதிக்கப்பட்ட தேவையாளிக்கு அவர் உதவட்டும்" என்றார்கள். "(இதற்கும் அவர்) சக்தி பெறாவிட்டால் (என்ன செய்வது), சொல்லுங்கள்?" என்று கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் "அவர் "நல்லதை" அல்லது "நற்செயலை"(ச் செய்யும்படி பிறரை) ஏவட்டும்" என்றார்கள். "(இயலாமையால் இதையும்) அவர் செய்யாவிட்டால் (என்ன செய்வது),

1. அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1007).

2. அறிவிப்பவர் : புரைதா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (22998) அஷ்ஷேக் அல்பானி இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுத் தர்கீப் (666)).

சொல்லுங்கள்?" என்று கேட்டதற்கு, நபி (ஸல்) அவர்கள், “அவர் தீங்கு செய்யாமல் இருக்கட்டும். அதுவே தர்மம்தான்" என்றார்கள்.[1]

இந்த நபிமொழியின் கருத்து என்னவெனில் : இந்த எலும்புகளை சரியான முறையில் பொருத்தியிருப்பதும், அவை ஆரோக்கியமாக இருப்பதும் அல்லாஹ் தனது அடியானுக்குச் செய்துள்ள மிகப் பெரும் அருட் கொடையாகும். எனவே இம்மூட்டுக்கள் அனைத்திற்கும் பதிலாக மனிதன் தர்மம் செய்யும் தேவையுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான் :“மனிதனே! கண்ணியமான உன் இரட்சகன் விடயத்தில் உன்னை ஏமாற்றியது எது? அவனே உன்னைப் படைத்து, உன்னை ஒழுங்குற அமைத்து, உன்னைச் செம்மைப் படுத்தினான். தான் விரும்பிய வடிவமைப்பில் அவன் உன்னைப் பொருத்தினான்” (இன்பிதார் 6-8).

“அவனே உங்களைப் படைத்து, உங்களுக்கு செவிப்புலனையும், பார்வைகளையும், உள்ளங்களையும் ஏற்படுத்தினான். குறைவாகவே நீங்கள் நன்றி செலுத்துகின்றீர்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக!” (முல்க் 23).

“**நீங்கள் எதையும் அறியாதவர்களாக இருந்த நிலையில் உங்கள் தாய்மார்களின் வயிறுகளிலிருந்து அல்லாஹ்வே உங்களை வெளியேற்றினான். மேலும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு உங்களுக்கு செவிப்புலனையும், பார்வைகளையும், உள்ளங்களையும் அவனே அமைத்தான்**” (நஹ்ல் 78).

“இரு கண்களையும், ஒரு நாவையும், இரு உதடுகளையும் அவனுக்கு நாம் ஆக்கவில்லையா?” (பலத் 8,9).

**நன்றி செலுத்துதல் இரு வகைப்படுகின்றது :**

**01. கடமையானது** : இது கடமையானதைச் செய்வதும், தடை செய்யப்பட்டதை தவிர்ந்து கொள்வதுமாகும். இது அவசியமானதாகும். இவ்அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த இதுவே போதுமாகும்.

**02. விரும்பத்தக்கது** : இது கடமைகளைச் செய்து, தடை செய்யப்பட்டவற்றைத் தவிர்த்து கொண்டதன் பின், உபரியான வணக்கங்களில் ஈடுபடுதலாகும். இது இறைவனுக்கு மிக நெருக்கமான முந்திக் கொண்டவர்களின் தரமாகும். இவ்வாறுதான் நபியவர்கள் தனது

1. அறிவிப்பவர் : அபூமூஸா அல்அஷ்அரீ (ரலி), ஆதாரம் : புஹாரி (5676), முஸ்லிம் (1008).

இரு பாதங்களும் வீங்குமளவு தொழக் கூடியவர்களாக இருந்துள்ளார்கள். தங்களது முன், பின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டும் தாங்கள் இவ்வாறு செய்கின்றீரா? என வினவப்பட்டால், "நான் ஒரு நன்றியுள்ள அடியானாக இருக்கக் கூடாதா?" எனக் கேட்பார்கள்.[1]

**நபியவர்கள் தர்மமாக சுட்டிக்காட்டிய இந்த வணக்க வழிபாடுகளை இரு வகையாக நோக்கலாம் :**

அதன் பயன்பாடு பிறருக்கும் சென்றடையக் கூடியவை. உதாரணம் : சமாதானப்படுத்தல், நல்வார்த்தை, பாதையிலிருந்து தீங்கை அகற்றல், நலவை ஏவுதல், தீமையைத் தடுத்தல்.

அதன் பயன்பாடு செய்பவருடன் மாத்திரம் சுருங்கக் கூடியவை. உதாரணம் : தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர், லாஇலாஹ இல்லல்லாஹு போன்ற திக்ருகள், தொழுகைக்கு நடந்து செல்லல், ளுஹாத் தொழுகை இரு ரக்அத்கள். அனைத்து மூட்டுக்களுக்குமான தர்மமாக இவ்விரு ரக்அத்களும் ஈடாகுவதன் காரணம் தொழுகையின் போது அனைத்து உறுப்புக்களும் செயற்படுகின்றன. எனவே அது அனைத்து மூட்டுக்களுக்கும் தர்மமாக மாறிவிடுகின்றது. ஏனைய செயல்களில் சில உறுப்புக்கள் தான் செயற்படுகின்றன. எனவே ஆஇஷா (ரலி) அவர்களுடைய நபிமொழியில் கூறப்பட்ட பிரகாரம் 360 மூட்டுக்களுக்குமான தர்மமாக இந்த சில உறுப்புக்களின் செயற்பாடு ஈடாகமாட்டாது.

அல்லாஹ்வை நினைவு கூர்தல், நபியின் மீது ஸலவாத்துக் கூறல், அல்குர்ஆன் ஓதுதல் போன்றவற்றின் பயன்பாடும் செய்தவருடன் மாத்திரம் சுருங்கிக் கொள்ளக் கூடியவையாகும்.

செய்த காரியங்களில் சுய விசாரணை செய்தல், தவறுகளுக்காக வருந்தி பாவமீட்சி பெறுதல், அதற்காக கவலைப்பட்டு, செய்த தவறுக்காக தன்னைத் தானே தாழ்த்திக் கொள்ளுதல், அல்லாஹ்வின் அச்சத்தினால் கண்ணீர் வடித்தல், வானம், பூமியிலுள்ள ஆட்சியதிகாரம், மறுமை நிகழ்வுகளை சிந்தித்தல் போன்ற உள்ளத்தில் ஈமானை அதிகரிக்கும் செயற்களும் செய்தவருடன் மாத்திரம் சுருங்கிக் கொள்ளக் கூடிய தர்மங்களில் உள்ளதாகும். இவற்றின் விளைவாக அச்சம், நேசம்,

1.அறிவிப்பவர் : முஃகீரா பின் ஷுஃபா (ரலி), ஆதாரம் : புஹாரி (1130), முஸ்லிம் (2819).

எதிர்பார்ப்பு, பொறுப்புச் சாட்டல் போன்ற உள்ளத்துடன் சம்பந்தப்படும் பல வணக்கங்கள் உருவாகின்றன.

உடல் ரீதியாக செய்யக்கூடிய உபரியான வணக்கங்களை விட சிந்தனா ரீதியான இந்த வணக்கம் சிறந்ததென தாபிஈன்களில் ஸஈத் பின் முஸய்யப் (ரஹ்), ஹஸனுல் பஸரீ (ரஹ்), உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) போன்ற பலர் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இமாம் அஹ்மதின் வார்த்தைகளிலும் இதற்கு சான்றுள்ளது. எனது இடையளவு தங்கத்தால் தர்மம் செய்வதை விட அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவது எனக்கு மிக விருப்பமானது என கஃபுல் அஹ்பார் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

# ஹதீஸ் –27

## நன்மை, தீமைகளுக்கான வரையறை

عَنِ النَّوَّاسِ بْنِ سَمْعَانَ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ:

"الْبِرُّ: حُسْنُ الْخُلُقِ، وَالْإِثْمُ: مَا حَاكَ فِي صَدْرِكَ، وَكَرِهْتَ أَنْ يَطَّلِعَ عَلَيْهِ النَّاسُ"رَوَاهُ مُسْلِمٌ.

وَعَنْ وَابِصَةَ بْنِ مَعْبَدٍ قَالَ: "أَتَيْتُ رَسُولَ اللهِ ﷺ

فَقَالَ: "جِئْتَ تَسْأَلُ عَنِ الْبِرِّ وَالْإِثْمِ؟" قُلْتُ: نَعَمْ، قَالَ: "اسْتَفْتِ قَلْبَكَ، الْبَرُّ: مَا اطْمَأَنَّتْ إِلَيْهِ النَّفْسُ، وَاطْمَأَنَّ إِلَيْهِ الْقَلْبُ، وَالْإِثْمُ: مَا حَاكَ فِي النَّفْسِ، وَتَرَدَّدَ فِي الصَّدْرِ، وَإِنْ أَفْتَاكَ النَّاسُ وَأَفْتَوْكَ."

قَالَ الشَّيْخُ رحمه الله حدِيثٌ حَسَنٌ، رويناه في مُسنَد الإمامين أحمد والدارمي، بإسناد حسنٍ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***நன்மை என்பது நற்பண்பாகும். பாவம் என்பது உன் உள்ளத்தை உறுத்தக் கூடியதும், மக்கள் கவனித்துவிடுவார்களோ என்று நீ வெறுப்பதுமாகும்.***

*அறிவிப்பவர் : அந்நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2553).*

*வாபிஸா இப்னு மஃபது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் :* ***நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்தேன். அப்போது அவர்கள் நன்மையைப் பற்றி கேட்பதற்காகவா வந்தீர்? எனக் கேட்டார்கள். நான் ஆம் என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் உன் உள்ளத்தை கேட்டு பாரும். நன்மை என்பது ஆத்மா திருப்தியடைவதும், உள்ளம் அமைதியடைவதுமாகும். பாவம் என்பது -(அது குறித்து) மக்கள் உனக்கு எவ்வாறுதான் தீர்ப்பளிப்பளித்தாலும்- ஆத்மாவை உறுத்தக் கூடியதும், உள்ளத்தில் தடுமாற்றம் ஏற்படக் கூடியதுமாகும் எனக் கூறினார்கள்.*** *(நூல் : அஹ்மத் (18001), தாரிமீ (2575)).*

இமாம் நவவீ (ரஹ்) கூறுகின்றார்கள்: இது ஹஸன் எனும் தரத்திலுள்ளது. ஹஸன் தரத்திலுள்ள அறிவிப்பாளர் தொடருடன் முஸ்னத் அஹ்மத், முஸ்னத் அத்தாரமீ ஆகிய நூற்களில் அறிவிக்கப்பட்டுள்ளது.[1]

**விரிவுரை :**

நன்மை என்பதற்கு நவ்வாஸ் (ரலி) அவர்களுடைய நபிமொழியில் நற்குணம் என்றும், வாபிஸா (ரலி) அவர்களுடைய நபிமொழியில் உள்ளம் திருப்தியடைவது என்றும் நபி (ஸல்) அவர்கள் விளக்கமளித்துள்ளார்கள். இவ்வாறு கருத்து வேறுபாடு உருவாகக் காரணம் இந்நபிமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ள "الْبِرّ" எனும் வார்த்தை இரண்டு கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

**01.** பண்பாடு மற்றும் உபகாரம். இமாம் இப்னுல் முபாரக் (ரஹ்) "கிதாபுல் பிர்ரி வஸ் ஸிலா" எனும் பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளதுடன் இமாம்களான புஹாரி, திர்மிதீ ஆகியோரின் ஹதீஸ் தொகுப்பில் இதே பெயரில் ஒரு பாடம் உள்ளது. இது பொதுவாக அனைத்துப் படைப்பினங்களுக்கும் உபகாரம் செய்வதைக் குறிக்கின்றது.

நன்மை என்பது : "**இலகுவான காரியம், மலர்ந்த முகம், மென்மையான பேச்சு**" என இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**02.** உள்ரங்க, வெளிரங்க அனைத்து வணக்கங்களையும் இச்சொல் குறிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "மாறாக அல்லாஹ்வையும் இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும், நம்புவோரும், தான் விரும்பும் செல்வத்தை (அல்லாஹ்வுக்காக) நெருங்கிய உறவினர், அநாதைகள், வறியோர், வழிப்போக்கர், யாசிப்போர் (ஆகியோருக்கும்) அடிமைகளை விடுதலை செய்வதற்கும் வழங்கி, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தை கொடுப்போரும், வாக்குறுதி அளித்தால் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவோரும், வறுமை, துன்பம், போர் என்பவற்றின் போது சகித்துக் கொள்வோருமே நன்மை செய்பவர்கள். அவர்கள்தாம் உண்மை உரைத்தவர்கள். அவர்களே பயபக்தியாளர்கள்" (பகரா : 177).

எனவே இக்கருத்தின் அடிப்படையில் "البِرّ" என்பதில் பின்வரும் அனைத்தும் உள்ளடங்கும்.

---

1. இந்நபிமொழியில் தரம் குறித்து விமர்சனங்கள் உள்ளன. **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ)** .

உள்ரங்கமான அமல்கள். உதாரணம் : அல்லாஹ்வை விசுவாசித்தல், வானவர்கள், அவனது வேதங்கள், தூதர்கள் ஆகியோரை விசுவாசித்தல்.

வெளிரங்கமான அமல்கள். உதாரணம் : செலவளித்தல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸகாத் வழங்கல், வாக்குறுதிகளை நிறைவேற்றல், நோய், வறுமை போன்ற அல்லாஹ்வின் விதி, மற்றும் எதிரிகளை சந்தித்தல் போன்ற நற்காரியங்களின் போது பொறுமை காத்தல்.

சிலவேளை நவ்வாஸ் (ரலி) அவர்களுடைய நபிமொழியில் நபியுடைய பதில் மேற்கண்ட அனைத்தையும் உள்ளடக்கலாம். ஏனெனில் நற்குணத்தின் மூலம் மார்க்க விழுமியங்களும், அல்லாஹ் தனது வேதத்தில் அடியார்களுக்குப் போதித்துள்ள ஒழுக்கங்களைக் கடைபிடிப்பதும் நாடப்படுகின்றது.

நவ்வாஸ் (ரலி) அவர்களுடைய நபிமொழியில் உள்ள **"பாவம் என்பது உள்ளத்தை உறுத்தக் கூடியதும், மக்கள் காண்பதை நீ வெறுக்கக் கூடியதுமான செயற்பாடுகளாகும்"** எனும் வார்த்தையானது பாவம் என்பது உள்ளத்தில் குற்ற உணர்வு, நெருக்கடி, கலக்கம், பதற்றம் என்பவற்றை ஏற்படுத்தக் கூடியவை என்பதை சுட்டிக் காட்டுகின்றது. உள்ளம் அதற்கு இடம்கொடுக்க மாட்டாது. மக்கள் அதைக் காணும் போது வெறுப்பார்கள். ஒரு விடயம் பாவமா? என்பதில் ஐயம் ஏற்படும் போது அதனை அறிந்து கொள்வதில் உயர்ந்த படித்தரமாக இது திகழ்கின்றது. அதாவது : பாவம் என்பது அதனைச் செய்தவன் செய்யாதவன் அனைவரும் வெறுக்கக் கூடியதாகும்.

**"மக்கள் உனக்கு எவ்வாறுதான் தீர்ப்பளித்தாலும்"**

அதாவது மக்கள் ஒன்றைத் தவறில்லையென தீர்ப்பு வழங்கினாலும் அது உள்ளத்தை உறுத்தினால் அச்செயல் பாவமாகவே இருக்கின்றது. இது இரண்டாவது நிலையாகும். அதுதான் ஒரு செயல் அதனைச் செய்பவனிடம் வெறுக்கப்பட்டதாக இருத்தல். மக்களிடம் அவ்வாறு இல்லாவிடினும் சரி. அதனையும் நபியவர்கள் பாவமாகவே ஆகியுள்ளார்கள். இது எப்போதெனில் அச்செயலைச் செய்தவர் விசுவாசியாக இருப்பதுடன், அவருக்குத் தீர்ப்பு (பத்வா) வழங்குபவர் வெறும் ஊகங்களை வைத்து, அல்லது பக்கசார்பாக, அல்லது ஆதாரமின்றி தீர்ப்பு வழங்குபவராக இருந்தால் மாத்திரமே. அவ்வாறில்லாமல் தீர்ப்பு வழங்குபவரிடம்

ஆதாரம் இருந்தால் தீர்ப்புக் கேட்டுச் செல்பவர் அதனை ஏற்றாக வேண்டும். உள்ளம் அதற்கு இடம் கொடுக்கா விட்டாலும் சரி. இது மார்க்க சலுகைகளைப் போன்றதாகும். உதாரணமாக : பிரயாணம், நோய் போன்ற சந்தர்ப்பங்களில் நோன்பை விடுதல், பிரயாணத்தில் தொழுகையை சுருக்குதல் போன்ற சில அறிவீனர்களின் மனங்கள் ஏற்க இடம் கொடுக்காத சலுகைகளைக் கூறலாம். இவை கணக்கில் எடுக்கப்பட மாட்டாது.

சுருக்கமாகக் கூறின் எவற்றில் தெளிவான ஆதாரமுள்ளதோ அவற்றில் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவதன்றி வேறு வழியேதும் கிடையாது. அதனை மனப்பூர்வமாக ஏற்பது அவசியமாகும். ஏனெனில் அல்லாஹ்வும் அவனது தூதரும் மார்க்கமாக்கிய ஒன்றை ஏற்று, பொருந்திக் கொண்டு, சரணடைவது அவசியமாகும்.

தெளிவான ஆதாரமோ, அல்லது பின்பற்றத் தகுந்த நபித்தோழர்கள், ஸலபுகளுடைய கூற்றுகளோ இல்லாத ஒரு விடயத்தில் நம்பிக்கையால் உள்ளம் அமைதிபெற்ற, மனப்பூர்வமாக ஈமானையும் உறுதியையும் ஏற்றுக்கொண்ட ஒரு முஃமினுக்கு சந்தேகம் ஏற்பட்டால் அதில் சலுகையளிக்கக் கூடிய நம்பத்தகுந்த, மார்க்கப்பற்றுள்ள ஒருவரும் கிடைக்காத பட்சத்தில் தனது உள்ளத்திடம் கேட்டுப் பார்ப்பார். அது உறுத்தினால் ஏனைய மக்கள் தீர்ப்பளித்தாலும் இச்சந்தர்ப்பத்தில் அதனைப் பாவமாகவே எடுத்துக் கொள்வார்.

## ஹதீஸ் –28

### ஸுன்னாவைப் பற்றிப்பிடித்தல், பித்அத்தை தவிர்த்தல்

عَنِ الْعِرْبَاضِ بْنِ سَارِيَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَال:

«وَعَظَنَا رَسُولُ اللهِ ﷺ مَوْعِظَةً، وَجِلَتْ مِنْهَا الْقُلُوبُ، وَذَرَفَتْ مِنْهَا الْعُيُونُ، فَقُلْنَا: يَا رَسُولَ اللهِ، كَأَنَّهَا مَوْعِظَةُ مُوَدِّعٍ، فَأَوْصِنَا! قَال: "أُوصِيكُمْ بِتَقْوَى اللهِ، وَالسَّمْعِ وَالطَّاعَةِ، وَإِنْ تَأَمَّرَ عَلَيْكُمْ عَبْدٌ، فَإِنَّهُ مَنْ يَعِشْ مِنْكُمْ بَعْدِي فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا، فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ، عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ، وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ، فَإِنَّ كُلَّ بِدْعَةٍ ضَلَالَةٌ" رَوَاهُ أَبُو دَاوُدَ وَالتِّرْمِذِيُّ، وَقَال حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ.

***நபி (ஸல்) அவர்கள் எமக்கு பிரசங்கமொன்றை நிகழ்த்தினார்கள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த எங்களது உள்ளங்கள் அஞ்சத் தொடங்கின. எங்களது கண்களில் கண்ணீர் ததும்பியது. நாங்கள், அல்லாஹ்வின் தூதரே, இது நீங்கள் செய்யும் இறுதி பிரசங்கத்தைப் போன்றிருக்கின்றதே. ஆகவே எங்களுக்கு உபதேசம் செய்யுங்கள்" என்று கூறினோம். நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் :***

***அல்லாஹ்வை அஞ்சுமாறும். ஓர் அடிமையே உங்களது தலைவராக வந்தாலும் அவருக்கு முழுமையாகக் கட்டுப்படுமாறும் உங்களுக்கு உபதேசிக்கின்றேன். நிச்சயமாக உங்களில் அதிக நாட்கள் வாழ்பவர்கள் அதிக கருத்து வேறுபாடுகளைக் காண்பார். அப்போது நீங்கள் எனது வழி முறையையும், எனக்குப் பின்னால் (ஆளும்) நேர்வழிபெற்ற கலீபாக்களினது வழிமுறையையும் பின்பற்றுங்கள். அவைகளை உங்கள் கடைவாய்ப் பற்களால் பற்றிப்பிடியுங்கள். (மார்க்கத்தில்) புதிதாக உருவாக்கப் பட்டவற்றை உங்களுக்கு நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில் நூதனங்கள் அனைத்தும் வழிகேடாகும்.***

*அறிவிப்பவர் : அபூ நஜீஹ் இர்பாழ் இப்னு ஸாரியா (ரலி), ஆதாரம் : அபூதாவூத் (4607), திர்மிதீ (2871).*

**விரிவுரை :**

இந்நபிமொழியை இமாம்களான அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா ஆகியோர் அறிவித்துள்ளனர். இமாம் திர்மிதி இதனை "ஹஸன் ஸஹீஹ்" எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளதுடன் இமாம் அபூ நுஐம் : ஸிரியா மக்கள் அறிவித்த சிறந்த நபிமொழிகளில் இதுவும் ஒன்றெனக் கூறியுள்ளார்கள்.

**"இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எமக்கு பிரசங்கமொன்றை நிகழ்த்தினார்கள்"**

நபியவர்கள் வழமையான ஜும்ஆ, பெருநாள் குத்பாக்கள் அல்லாமலும் மக்களுக்கு உரை நிகழ்த்துவார்கள். எனினும் அதனைத் தொடராகச் செய்யாமல் விட்டுவிட்டே நிகழ்த்துவார்கள்.

அபூ வாஇல் (ரஹ்) கூறுகின்றார் : 'அப்துல்லாஹ் (இப்னு மஸ்ஊத்) (ரலி) ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் மக்களுக்கு அறிவுரை கூறும் வழக்கம் உடையவர்களாய் இருந்தார். அப்போது (ஒரு நாள்) ஒருவர் அவர்களிடம் 'அபூ அப்துர் ரஹ்மானே! தாங்கள் ஒவ்வொரு நாளும் எங்களுக்கு அறிவுரை பகர்ந்திட வேண்டும் என பெரிதும் விரும்புகிறேன்" என்றார். அதற்கு உங்களைச் சலிப்படையச் செய்து விடுவேனோ என்று அஞ்சுவதுதான் இதைவிட்டும் என்னைத் தடுக்கிறது. நான் உங்களுக்குச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளைக் கவனித்து அறிவுரை கூறுகிறேன். அவ்வாறுதான் நபி (ஸல்) அவர்களும் நாங்கள் சலிப்படைவதை அஞ்சி எங்களுக்கு அறிவுரை கூறி வந்தார்கள்" என்றார்".[1]

உபதேசத்தில் அணி இலக்கணத்தைக் கடைபிடிப்பது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் அது உள்ளங்களைக் கவர்ந்திழுக்கவும், பேச்சை ஏற்றுக் கொள்ளவும் மிக நெருக்கமானதாக இருக்கின்றுது. ஒரு விடயத்தின் இயல்பை உள்ளது உள்ளவாறே அழகு தோன்றக் கூறுவதும், பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி கேட்க இனிமையாக அழகான முறையில், இடத்திற்கேற்றவாறு பேசுவதுமே அணி இலக்கணமாகும். நபி (ஸல்) அவர்கள் தனது உரைகளை நீட்டாமல் சுருக்கிக் கொள்வார்கள். எனினும் அணி இலக்கணத்துடன் சுருக்கமாக பொருத்தமான தலைப்பில் உரையாற்றுவார்கள்.

---

1.அறிவிப்பவர் : அபூ வாஇல் (ரஹ்), ஆதாரம் : புஹாரி (70), முஸ்லிம் (2821).

**"கண்களில் கண்ணீர் ததும்பியது, உள்ளங்கள் அஞ்சத் தொடங்கின"**

அல்லாஹ்வின் வசனங்களைக் கேட்கும் போது இவ்விரு பண்புகளும்தான் முஃமின்களிடத்தில் இருப்பதாக அல்லாஹ் மெச்சியுள்ளான்.

*"நம்பிக்கையாளர்கள் யாரெனில், அல்லாஹ்வைப் பற்றி ஞாபகமூட்டப்பட்டால் அவர்களது உள்ளங்கள் நடுங்கும்" (அன்பால் : 02).*

*"பணிந்து நடப்பவர்களுக்கு (நபியே!) நீர் நன்மாராயம் கூறுவீராக! அல்லாஹ்வைப் பற்றி ஞாபகமூட்டப்பட்டால் அவர்களின் உள்ளங்கள் நடுங்கும்" (ஹஜ் : 34,35).*

*"நம்பிக்கை கொண்டோருக்கு அவர்களது உள்ளங்கள், அல்லாஹ்வை நினைவு கூர்வதற்கும், சத்தியத்திலிருந்து இறங்கியதற்கும் அஞ்சி நடுங்கும் நேரம் வரவில்லையா?" (ஹதீத் : 16).*

*"அல்லாஹ் மிக அழகான செய்தியை வேதமாக இறக்கி வைத்துள்ளான். அவை ஒன்றையொன்று ஒத்ததாகவும், திரும்பத் திரும்ப ஓதப்படுபவையாகவும் இருக்கின்றன. தமது இரட்சகனை அஞ்சுவோரின் தோல்கள் இதனால் சிலிர்த்து விடுகின்றன. பின்னர் அவர்களது தோல்களும், அவர்களது உள்ளங்களும் அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பால் மென்மையடைகின்றன" (ஸுமர் : 23).*

*"இத்தூதருக்கு இறக்கி வைக்கப்பட்டதை அவர்கள் செவியேற்கும் போது, சத்தியத்தை அறிந்து கொண்ட காரணத்தால் அவர்களது கண்கள் கண்ணீர் சிந்துவதை நீர் காண்பீர்" (மாஇதா : 83).*

**"இது நீங்கள் செய்யும் இறுதிப் பிரசங்கத்தைப் போன்று இருக்கின்றதே, எமக்கு உபதேசம் செய்யுங்கள்"**

நபியவர்கள் இவ்வுரையில் ஒருபோதுமில்லாதவாறு உணர்ச்சிவசப்பட்டு பேசியுள்ளார்கள். அதனால் தான் இது (இவ்வுலக வாழ்வை விட்டு) பிரியாவிடை பெறும் ஒருவரின் உரையாக அவர்கள் விளங்கினார்கள். ஏனெனில் பிரியாவிடை பெறும் ஒருவர் பிறரை விட சொல், செயலில் தீர்க்கமாகப் பேசுவார். இதனால் தான் நபியவர்கள் தொழும் போது இறுதித் தொழுகை போன்று தொழும்படி

ஏவியுள்ளார்கள்.[1] ஏனெனில் இத்தொழுகை மூலம் பிரியாவிடை பெறப் போவதாக உணர்பவர் அதைத் திறம்பட பரிபூரணமாகச் செய்வார். சிலவேளை நபியவர்கள் மறைமுகமாக தனது இறுதி ஹஜ்ஜில் தனது மரணம் நெருங்குவதை உணர்த்தியது போன்று இவ்வுரையிலும் அதனை மறைமுகமாக உணர்த்தியிருக்கலாம்.

**“எமக்கு உபதேசியுங்கள்”**

போதியளவு அனைத்தையும் ஒருங்கிணைத்த ஓர் உபதேசத்தையே அவர்கள் நாடுகின்றார்கள். ஏனெனில் அம்மக்கள் இதனை இறுதி உரையாகக் கருதிய போது அன்னாரின் மரணத்திற்குப் பின் பற்றிப் பிடிக்க உகந்த, போதுமான, ஈருலகிலும் வெற்றியைத் தரக்கூடிய ஓர் உபதேசத்தை வேண்டி நின்றார்கள்.

**“அல்லாஹ்வை அஞ்சி நடக்குமாறும், தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுமாறும் உங்களுக்கு உபதேசிக்கிறேன்”**

இவ்விரு பதங்களும் ஈருலக வெற்றியையும் ஒருங்கிணைக்கின்றன.

இறையச்சம் மறுமை வெற்றிக்கு வழிவகுக்கின்றது. முஸ்லிம் தலைவர்களுக்குக் கட்டுப்படுவதில் இவ்வுலக வெற்றி தங்கியுள்ளது. தலைமைத்துவத்தின் மூலம்தான் முஸ்லிம்களது வாழ்க்கை சீராக இயங்குகிறது. தமது மார்க்கத்தை மிகைக்கச் செய்யவும், இறைவனுக்குக் கட்டுப்படவும் தலைமைத்துவத்தின் மூலமே உதவி பெறுகின்றனர்.

**“நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஓர் அடிமையே உங்களது தலைவராக வந்தாலும் சரி”**

இது பற்றி நபியவர்களிடமிருந்து பல அறிவிப்புக்கள் வந்துள்ளன. இது எதிர்காலத்தில் இந்த சமூகத்தைப் பற்றியும், அதை அடிமைகளும் ஆள்வார்கள் என்பதையும் அல்லாஹ் தனது நபிக்கு முன்னறிவிப்புச் செய்த விடயமாகும்.

---

*1.நூல் : தபரானியின் முஃஜமுல் அவ்ஸத் (4424), அதன் வார்த்தை பின்வருமாறு : இப்னு உமர் (ரலி) கூறுகின்றார் : ஒரு மனிதர் நபியவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே! எனக்கு சுருக்கமாக ஒரு செய்தி கூறுங்கள் எனக் கேட்டார். நபியவர்கள் : நீ (பிரியாவிடை பெறுபவர் தொழும்) இறுதித் தொழுகை தொழுவது போன்று தொழுவீராக, ஏனெனில் நீர் அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்க்கிறான். மக்களிடம் இருப்பதை விட்டும் நிராசையடைந்து விடு. மக்களில் தேவையற்ற (செல்வந்தராக) வாழ்வாய். (பிறரிடம்) மன்னிப்புக் கேட்குமளவு நடப்பதை எச்சரிக்கிறேன்”. இந்நபிமொழியை அஷ்ஷேக் அல்பானீ ஸில்ஸிலா ஸஹீஹாவில் (1914) கூறிவிட்டு “என்னிடம் இது ஹஸன் அல்லது ஸஹீஹுடைய தரத்திலுள்ளது. ஏனெனில் இதனை வலுப்படுத்தும் வேறுபல செய்திகள் வந்துள்ளன” என்று கூறியுள்ளார்கள்.*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உலர்ந்த திராட்சை போன்ற (சுருங்கிய) தலையுடைய அபிசீனிய (கறுப்பு நிற) அடிமையொருவர் உங்களுக்குத் தலைவராக ஆக்கப்பட்டாலும் (அவரின் சொல்லைக்) கேளுங்கள்; (அவருக்குக்) கீழ்ப்படியுங்கள்.[1]

அபூதர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்: என் உற்ற தோழர் (நபி -ஸல்) அவர்கள், "தலைவரின் சொல்லைச் செவியுற்றுக் கீழ்ப் படிந்து நடப்பாயாக! அவர் உடலுறுப்புகள் துண்டிக்கப்பட்ட அடிமையாக இருந்தாலும் சரியே!" என எனக்கு அறிவுறுத்தினார்கள்.[2]

இதே கருத்தில் பல நபிமொழிகள் இடம்பெற்றுள்ளன.

**எனது வழிமுறையையும் எனக்குப் பின்னால் (ஆளும்) நேர்வழி பெற்ற கலீபாக்களினதும் வழிமுறையைப் பின்பற்றுங்கள்.**

ஸுன்னா (வழிமுறை) என்பது பின்பற்றும் பாதையாகும். இதில் நபி (ஸல்) அவர்கள், நேர்வழி பெற்ற கலீபாக்கள் அனைவரும் கொண்டிருந்த நம்பிக்கைகள், செய்த சொல், செயல் ரீதியான நற்செயல்கள் அனைத்தும் உள்ளடங்குகின்றன.

இதுதான் பரிபூரணமான ஸுன்னாவாகும். இதனால்தான் மேற்கண்டவை அனைத்தையும் உள்ளடக்கியவற்றுக்கு ஸலப் அறிஞர்கள் "ஸுன்னா" எனப் பயன்படுத்துவார்கள். பிற்காலத்தில் வந்த பல அறிஞர்கள் நம்பிக்கை சார்ந்த விடயங்களுக்கு மாத்திரமே "ஸுன்னா" எனும் பதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். ஏனெனில் இது தான் மார்க்கத்தின் ஆணிவேர். இதற்கு முரண்படுவோர் பாரிய ஆபத்தில் சிக்கிவிடுவார்கள்.[3]

**பின்பற்றும்படி ஏவப்பட்ட நேர்வழி பெற்ற அந்த கலீபாக்கள்:** அபூ பக்ர் (ரலி), உமர் (ரலி), உஸ்மான் (ரலி), அலி (ரலி) ஆகியோராகும். அவர்கள் சத்தியத்தை அறிந்து அதன்படி தீர்ப்புச் செய்ததாலேயே அவர்களை நேர்வழி பெற்றவர்கள் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டு நபியவர்கள்

1. அறிவிப்பவர்: அனஸ் (ரலி), ஆதாரம்: புகாரி (7142).

2. அறிவிப்பவர்: அபூ தர் (ரலி), ஆதாரம்: முஸ்லிம் (1837).

3. இமாம் அப்துல்லாஹ் பின் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்), இமாம் இப்னு அபீ ஆஸிம் (ரஹ்) போன்றோர் தமது அகீதா (அடிப்படைக் கொள்கை சார்ந்த) நூலிற்கு "அஸ்ஸுன்னா" எனப் பெயரிட்டிருப்பதும் இவ்வகையைச் சாரும்.

வர்ணித்தார்கள். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள “ரஷித்” எனும் பதம் “ஃவை” எனும் பதத்தின் எதிர்ச் சொல்லாகும். “ஃவை” என்பது சத்தியத்தை அறிந்து அதற்கு மாற்றமாகச் செயற்படுபவனையே குறிக்கின்றது.

**“அவைகளை உங்கள் கடைவாய்ப் பற்களால் பற்றிப் பிடியுங்கள்”**

பலமாகப் பின்பற்றுவதையே இங்கு சிலேடையாகக் கூறப்பட்டுள்ளது.

**“(மார்க்கத்தில்) புதிதாக உருவாக்கப்பட்டவற்றை உங்களுக்கு நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில் நூதனங்கள் அனைத்தும் வழிகேடாகும்”**

மார்க்கத்தின் பெயரால் அதில் புதிதாக உருவாக்கப்பட்டவற்றைப் பின்பற்றுவது பற்றிய ஓர் எச்சரிக்கையாக இச்செய்தி உள்ளது.

நூதனம் என்பது ஆதாரமின்றி மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவையாகும். ஆதாரமுள்ள ஒரு செயல் பிற்காலத்தில் செய்யப் பட்டால் அதற்கு மொழி ரீதியாக நூதனம் எனக் கூறப்பட்டாலும் மார்க்க ரீதியாக நூதனமாக மாட்டாது.

நல்ல பித்அத்கள் (நூதனங்கள்) என முன் சென்ற அறிஞர்களின் கூற்றுக்களில் இடம்பெற்றிருப்பது மொழி ரீதியாகவே தவிர மார்க்க ரீதியாக அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் சில :

**01.** உமர் (ரலி) அவர்கள் ரமழானில் மக்களை இரவுத் தொழுகைக்காக பள்ளியில் ஒரே இமாமின் கீழ் ஒன்று சேர்ந்தார்கள். வெளியே சென்றுவிட்டு மீண்டும் வந்த போது மக்கள் ஒன்றாகத் தொழுவதைக் கண்டு “இது நல்ல பித்அத்தாக இருக்கின்றதே” என்றார்கள்.[1] அப்போது உபை பின் கஃப் (ரலி) இது ஏற்கனவே இருக்கவில்லையே? எனக் கூற “ஆமாம், நானும் அறிந்தேன், என்றாலும் (சிறுசிறு குழுக்களாகத் தொழுவதை விட அனைவரும் ஒன்றாகத் தொழும்) இந்த முறை அழகாக இருக்கின்றது எனக் கூறியதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. உமர் (ரலி) அவர்களது நோக்கம் என்னவெனில் : இந்த முறையில் தொழுகை அண்மைக் காலமாக இதற்கு முன்னர் இருக்கவில்லை. எனினும் மார்க்கத்தில் இதற்கு சில அடிப்படைகள் உள்ளன. நபி (ஸல்) அவர்கள் ரமழானில் இரவுத் தொழுகையை மக்களுக்குத் தூண்டியுள்ளார்கள். பல இரவுகள் மக்களை வைத்து அத்தொழுகையை நடத்தியும் உள்ளார்கள். பின்பு இது

---

1.நூல் : புஹாரி (2010).

கடமையாக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் கூட்டாகத் தொழுவதை விட்டு விட்டார்கள்.[1] நபியவர்களின் மரணத்திற்குப் பின்னால் அவ் அச்சம் நீங்கி விட்டது.

**02.** இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள் : ''பித்அத் இரு வகைப்படும். நல்லது, தீயது. ஸுன்னாவிற்கு உடன்பாடானது நல்ல பித்அத் ஆகும். முரணானது தீய பித்அத் ஆகும்''. உமர் (ரலி) அவர்களின் மேற்கண்ட வார்த்தையை இதற்கு ஆதாரமாகக் கூறியுள்ளார்கள். இதனை இமாம் அபூ நுஐம் (ரஹ்) அறிவிப்பாளர் தொடருடன் அறிவித்துள்ளார்கள்.

இமாம் ஷாபிஈயின் நோக்கமும் மேலே கூறியது போன்று தான். தீய பித்அத் என்பது மார்க்க அடிப்படைகள் ஏதுமற்றது. அதுவே மார்க்க ரீதியில் (வழிகேடெனக் கூறப்பட்டுள்ள) பித்இஅத்தாகும். நல்ல பித்அத் என்பது ஸுன்னாவிற்கு உடன்பாடானது. அதாவது மார்க்கத்தில் அடிப்படையொன்று உள்ள விடயமாகும். ஸுன்னாவிற்கு நேர்படுவதால் அது மொழி ரீதியான பித்அத்தே தவிர மார்க்க ரீதியாக அல்ல.[2]

இதனைத் தெளிவுபடுத்தும் விதத்தில் இமாம் ஷாபிஈ உடையவே மற்றுமொரு வார்த்தை அறிவிக்கப்பட்டுள்ளது. மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டவை இரு வகைப்படும். அல்குர்ஆன், ஸுன்னா,





---

*1.நூல் : புஹாரி (2012) .*

*2.இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் மேற்கண்ட வார்த்தை தவறாகப் புரியப்பட்டு, பித்அத் வாதிகள் தமது பிதஅத்தை நியாயப்படுத்த இக்கூற்றைப் பற்றிக் கொண்டு விட்டார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தில் புதிதாக ஏதும் உருவாக்கிட வேண்டாம் என அவர்களிடம் கூறப்பட்டால் இது ''நல்ல பித்அத்'', ''ஆகுமான பித்அத்'' எனக் கூறி விடுவார்கள். இது பற்றி எமது ஆசான் அஷ்ஷேக் அப்துர் ரஹ்மான் பின் நாஸிர் அல்பர்ராக் அவர்கள் பின்வருமாறு மொழியக் கேட்டேன் : இமாம் ஷாபிஈயின் இக்கூற்றானது வழிகெட்ட பித்அத் வாதிகள் தொங்க வாய்ப்புள்ள சர்ச்சைக்குரிய கூற்றாகும். அதிலே அவர்கள் தொங்குவதற்கு ஏதுமில்லை. ஏனெனில் ''ஸுன்னாவிற்கு உடன்பாடானது நல்ல பித்அத் ஆகும். முரண்பாடானது தீய பித்அத்தாகும்'' எனும் இறுதியில் வரும் கூற்று இமாமவர்களின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அதேபோன்று தான் மேற்கூறப்பட்ட உமர் (ரலி) அவர்களுடைய ரமழான் இரவுத் தொழுகை பற்றிய செய்தியும். அவர்கள் மொழி ரீதியான பித்அத்தையே நாடியுள்ளார். ஏனெனில் ஸுன்னாவிற்கும் ஷரீஅத்தின் அடிப்படைகளுக்கும் உடன்பட்டு தேவை நிமித்தம் உருவாக்கப்படுபவை மார்க்கத்திலுள்ளவை தான். ஆனால் பித்அத்தோ ''யார் எமது இம்மார்க்கத்தில் அதிலில்லாத ஒன்றை உருவாக்குகின்றாரோ அது தட்டப்பட்டதாகும்'' என்ற நபிமொழிக்கமைய மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்குவதாகும். இதன்படி முன்னர் பிரித்தவர்களுடைய நோக்கம் சரியாக இருந்தாலும் (தற்காலத்தில்) பித்அத்தை நல்லது, கெட்டது எனப் பிரிக்க முடியாது. ஏனெனில் இதன் வெளிப்படையான வார்த்தை ''மார்க்க விடயங்களில் மிகவும் கெட்டது அதன் பெயரில் புதிதாக உருவாக்கப்பட்டதாகும். அனைத்து நூதனங்களும் வழிகேடாகும்'' என்ற இப்பாடத்திலுள்ள நபிமொழியுடன் மோதுகின்றது. மேலும் அறிவீனர்களும், வழிகேடர்களும் தாம் உருவாக்கிய பித்அத்தை நல்லதாகக் கண்டு, மார்க்கமாக்க இது வழிவகுக்கும். இது அல்லாஹ் தனது மார்க்கத்தில் அனுமதிக்காத ஒன்றாகும்''. அஷ்ஷேக் பர்ராக் அவர்கள் அழகாகவும், திறமையாகவும் இதனைத் தெளிவு படுத்தியுள்ளார்கள். அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்குவானாக!*

நபித்தோழர்களின் கூற்று, இஜ்மாஃ போன்றவற்றுக்கு முரணாக உருவாக்கப்பட்டவை. இதுவே வழிகேடான பித்அத்தாகும். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது நலன்கள். இது நூதனமாகும்.

## ஹதீஸ் –29

### நன்மையின் வாயில்கள்

عَنْ مُعَاذٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قُلْتُ: يَا رَسُولَ اللَّهِ أَخْبِرْنِي بِعَمَلٍ يُدْخِلُنِي الْجَنَّةَ وَيُبَاعِدُنِي مِنَ النَّارِ:

قَالَ :لَقَدْ سَأَلْتَ عَنْ عَظِيمٍ وَإِنَّهُ لَيَسِيرٌ عَلَى مَنْ يَسَّرَهُ اللَّهُ عَلَيْهِ: تَعْبُدُ اللَّهَ لَا تُشْرِكُ بِهِ شَيْئًا، وَتُقِيمُ الصَّلَاةَ، وَتُؤْتِي الزَّكَاةَ، وَتَصُومُ رَمَضَانَ، وَتَحُجُّ الْبَيْتَ .ثُمَّ قَالَ :أَلَا أَدُلُّكَ عَلَى أَبْوَابِ الْخَيْرِ؟ الصَّوْمُ جُنَّةٌ، وَالصَّدَقَةُ تُطْفِئُ الْخَطِيئَةَ كَمَا يُطْفِئُ الْمَاءُ النَّارَ، وَصَلَاةُ الرَّجُلِ فِي جَوْفِ اللَّيْلِ، ثُمَّ تَلَا[تَتَجَافَى جُنُوبُهُمْ عَنِ الْمَضَاجِعِ] {السجدة: ١٦ } حَتَّى بَلَغَ[: يَعْلَمُونَ] {السَّجْدَةِ: ١٦ - ١٧}، ثُمَّ قَالَ :أَلَا أُخْبِرُكَ بِرَأْسِ الْأَمْرِ وَعَمُودِهِ وَذِرْوَةِ سَنَامِهِ؟ قُلْتُ :بَلَى يَا رَسُولَ اللَّهِ، قَالَ :رَأْسُ الْأَمْرِ الْإِسْلَامُ، وَعَمُودُهُ الصَّلَاةُ، وَذِرْوَةُ سَنَامِهِ الْجِهَادُ، ثُمَّ قَالَ :أَلَا أُخْبِرُكَ بِمِلَاكِ ذَلِكَ كُلِّهِ؟ قُلْتُ :بَلَى يَا رَسُولَ اللَّهِ، فَأَخَذَ بِلِسَانِهِ، قَالَ :كُفَّ عَلَيْكَ هَذَا قُلْتُ: يَا نَبِيَّ اللَّهِ، وَإِنَّا لَمُؤَاخَذُونَ بِمَا نَتَكَلَّمُ بِهِ؟ فَقَالَ :ثَكِلَتْكَ أُمُّكَ، وَهَلْ يَكُبُّ النَّاسَ فِي النَّارِ عَلَى وُجُوهِهِمْ، أَوْ قَالَ عَلَى مَنَاخِرِهِمْ إِلَّا حَصَائِدُ أَلْسِنَتِهِمْ . رَوَاهُ التِّرْمِذِيُّ، وَقَالَ :حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ.

*முஆது இப்னு ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:* ***அல்லாஹ்வின் தூதரவர்களே, என்னை நரக நெருப்பலிருந்து காப்பாற்றி, சுவர்க்கத்தின் பால் இட்டுச் செல்லும் ஒரு செயல்பற்றி சொல்லித் தாருங்கள் என நான் கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பதில் தந்தார்கள் : நீங்கள் மிகவும் பெரிய விடயம் ஒன்று குறித்து வினவி இருக்கின்றீர்கள். இருந்தாலும் அது அல்லாஹ் யாருக்கு எளிதாக ஆக்கி வைத்திருக்கின்றானோ அவர்களுக்கு மிகவும் எளியதாகும். நீங்கள் அல்லாஹ்வுக்கு இணை எதுவும் வைக்காமல் அவனை மாத்திரம் வணங்குங்கள். கடமையாக்கப்பட்ட தொழுகைகளை நீங்கள் நிலைநாட்ட வேண்டும். நீங்கள் 'ஸகாத்” கொடுக்க வேண்டும். ரமழான் மாதத்தில் நோன்பிருக்க வேண்டும். நீங்கள் ஹஜ் செய்ய வேண்டும்.***

*பின்னர் நபி (ஸல்) அவர்கள், நன்மையின் வாயில்களை உமக்கு அறிவிக்கட்டுமா? என வினவி விட்டுச் சொன்னார்கள். நோன்பு ஒரு கேடயமாகும், தண்ணீர் நெருப்பை அணைப்பது போல்; தர்மம் பாவங்களை அழித்துவிடும். அதுபோலவே நடுநிசியில் ஒருவரின் தொழுகையும், பின்னர் பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வரும் இறைவசனத்தை ஓதினார்கள். 'அவர்கள் (இரவில்) படுக்கையிலிருந்து தங்கள் விலாக்களை உயர்த்தி, (எழுந்து அப்புறப்பட்டு) தங்கள் இறைவனிடம் நம்பிக்கை வைத்தும், பயந்தும், (அவனைப்) பிரார்த்தனை செய்வார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்தவற்றிலிருந்து அவர்கள் (தானமாகச்) செலவு செய்வார்கள்". அவர்கள் செய்த (நற்)காரியங்களுக்குக் கூலியாக, அவர்களுக்காக(ச் சித்தப்படுத்தி) மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கண் குளிரக் கூடிய (சன்மானத்)தை எவராலும் அறிந்து கொள்ள முடியாது" (அவ்வளவு மேலான சன்மானங்கள் அவர்களுக்காகச் சித்தப்படுத்தப் பட்டுள்ளன.) (ஸஜ்தா :16-17)*

*பின் நபி (ஸல்) அவர்கள் "நான் உங்களுக்கு இந்த விடயத்தின் (மார்க்கத்தின்) தலையாயது பற்றியும், தூண் பற்றியும், உயர்வானது பற்றியும் சொல்லட்டுமா?" என்றார்கள். 'இறை தூதரவர்களே, ஆம்! சொல்லுங்கள் என்றேன். நபி (ஸல்) அவர்கள், இந்த விடயத்தின் தலையாயது இஸ்லாம், அதன் தூண் தொழுகை, அதன் உயர்வு ஜிஹாத் ஆகும் என்றார்கள். பிறகு அவர்கள், இவையனைத்தையும் ஒன்று சேர்க்கக்கூடியதை அறிவிக்கட்டுமா? என வினவினார்கள். நான் 'இறைவனின் தூதரவர்களே, ஆமாம் சொல்லுங்கள்" என்றேன். நபி (ஸல்) அவர்கள் தங்களது நாவை கரத்தால் பற்றிக் கொண்டு, 'இதைக் கட்டுப் படுத்துங்கள்" என்று சொன்னார்கள்*

*இறைவனின் தூதரவர்களே, நாம் பேசுவது நமக்கு எதிராகத் திருப்பப்படுமா? என்று நான் கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'உம் தாய் உம்மை இழக்கட்டும். மனிதர்கள் தங்கள் நாவால் அறுவடை செய்தவைகளைத் தவிர அவர்களை நரக நெருப்பில் முகங்குப்புற தள்ளக் கூடியது வெறெதுவும் உண்டா?" என்று கேட்டார்கள்.*

*அறிவிப்பவர் : முஆத் (ரலி), ஆதாரம் : திர்மிதீ (2616).*

**விரிவுரை :**

**“நன்மையின் வாயில்களை உமக்கு அறிவிக்கட்டுமா”**

சுவனம் நுழைவதை இஸ்லாத்தின் கடமைகளில் வைத்த நபியவர்கள் பின்னர் உபரியான நன்மையின் வாயில்களை அறிவித்துக் கொடுத்தார்கள். ஏனெனில் கடமைகளுக்குப் பின் மேலதிகமான வணக்கங்களைக் கொண்டு அல்லாஹ்வை நெருங்குபவர்களே இறைநேசர்களில் மிகச் சிறந்தவர்களாகும்.

**“நோன்பு ஒரு கேடயமாகும்”**

போரின் போது எதிரிகளின் தாக்குதலில் இருந்து தற்காத்துக் கொள்ளப் பயன்படுவதே கேடயமாகும். அதேபோன்று தான் நோன்பும் நோன்பாளிகள் உலகில் பாவச் செயல்களில் ஈடுபடாமல் காக்கின்றது. “நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் (அல்லாஹ்வை) அஞ்சி நடப்பதற்காக உங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது” (பகரா : 183). இவ்வுலகில் நோன்பாளியை பாவத்தை விட்டும் தடுக்கும் கேடயமாக நோன்பிருந்தால் மறுமையில் நரகை விட்டும் காக்கும் கேடயமாகவும் அது இருக்கும்.

**“தண்ணீர் நெருப்பை அணைப்பது போல் தர்மம் பாவங்களை அழித்துவிடும். அதுபோலவே நடுநிசியில் ஒருவரின் தொழுகையும்”**

அதாவது இரவுத் தொழுகையும் தர்மத்தைப் போன்று தவறுகளை அழித்து விடுகின்றது. முஅத் (ரலி) அவர்கள் கூறியதாக உர்வா பின் நஸ்ஸால் என்பவர் கூறுகின்றார் : நாங்கள் நபியவர்களுடன் தபூக் போரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தோம். அதன் தொடரில் பின்வருமாறு உள்ளது : நோன்பு ஒரு கேடயமாகும். தர்மமும் அடியானின் இரவுத் தொழுகையும் தவறுகளுக்குப் பரிகாரமாக அமைகின்றது.(1)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் இரவுத் தொழுகையைக் கடைபிடியுங்கள். ஏனெனில் அதுதான் உங்களுக்கு முன்சென்ற நல்லோரின் வழிமுறையாகும். மேலும் நிச்சயமாக இரவுத் தொழுகை அல்லாஹ்விடம் நெருக்கமாக்கி வைக்கின்றது. பாவத்தை விட்டும்

1.நூலாசிரியர் இதன் அறிவிப்பாளர் தொடர்களைக் கூறும் போது உர்வா பின் நஸ்ஸால் முஆத் (ரலி) அவர்களிடம் நபிமொழிகளைக் கற்கவில்லை என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

தடுக்கின்றது. குற்றங்களுக்குப் பரிகாரமாகின்றது. உடலில் நோய் ஏற்படாமல் தடுக்கின்றது".

பிலால் (ரலி) அவர்களின் இந்நபிமொழி போன்றே அபூ உமாமா (ரலி) அவர்கள் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது முன்னையதைக் காண வலுவானதாகும்.(1)

இரகசியமாகக் கொடுக்கும் தர்மம் தவறுகளையும், இரட்சகனின் கோபத்தையும் அணைப்பதாக ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. அதுபோன்று தான் இரவுத் தொழுகையும்.

**"பின்பு பின்வரும் வசனங்களை ஓதிக் காண்பித்தார்கள். ஸஜ்தா : 16, 17"**

அதாவது இரவுத் தொழுகை பற்றிக் கூறும் போது அதன் சிறப்பைத் தெளிவுபடுத்த மேற்கண்ட இரு வசனங்களையும் ஓதிக் காண்பித்தார்கள்.

**"ஒரு மனிதனின் தொழுகை நடுநிசியிலாகும்"**

இரவுத் தொழுகை தொழுவதற்கு உகந்த நேரத்தைக் கூறியுள்ளார்கள்.

இதுபற்றி மற்றுமொரு கருத்தும் உள்ளது. நடுநிசி என பொதுவாகக் கூறப்பட்டால் அது நள்ளிரவையே குறிக்கும். நடுநிசியின் இறுதிப் பகுதி எனக் கூறப்பட்டால் இரவின் இரண்டாவது பாதியாகும். அது இரவை ஆறாக வகுத்தால் ஐந்தாவது நேரமாகும். அந்நேரம் தான் இறைவன் கீழ் வானிற்கு இறங்குவதாக வந்துள்ள நேரமாகும்.

**"நான் உங்களுக்கு இந்த விடயத்தின் (மார்க்கத்தின்) தலையாயது பற்றியும், தூண் பற்றியும், உயர்வானது பற்றியும் சொல்லட்டுமா?" என்றார்கள். 'இறை தூதரவர்களே, ஆம்! சொல்லுங்கள் என்றேன். நபி (ஸல்) அவர்கள், இந்த விடயத்தின் தலையாயது இஸ்லாம், அதன் தூண்**

---

1. அறிவிப்பவர் : பிலால் (ரலி), ஆதாரம் : திர்மிதீ (3549), மேலும் அவர்கள்: "இது ஒரேயொரு அறிவிப்பாளர் தொடரைக் கொண்ட செய்தியாகும். பிலால் (ரலி) அவர்களைத் தொட்டும் இந்த வழியால் மாத்திரம் தான் எமக்கு இந்நபிமொழி தெரியும்" எனக் கூறிவிட்டு, இது மிகவும் பலவீனமானது என்பதற்குரிய சான்றுகளையும் முன்வைத்துள்ளார்கள். பின்பு அபூ உமாமா (ரலி) அவர்களுடைய செய்தியை மேற்கண்ட அதே வார்த்தைகளில் சிறு மாற்றங்களுடன் அறிவிக்கின்றார்கள். பின் : "இது பிலால் (ரலி) அவர்களுடைய செய்தியை விட மிகப் பலமானதாகும்" என்று கூறியுள்ளார்கள்.
(இந்நூலைச் சுருக்கியவர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : இதே கருத்தை அஷ்ஷேக் அல்பானியும் துயர்ந்துள்ளார்கள். பிலால் (ரலி) அவர்களின் செய்தியை மிகவும் பலவீனமெனவும் (ளஈபுத் தர்கீப் 357), அபூ உமாமா(ரலி) அவர்களின் செய்தியை "ஹஸன் லிகைரிஹீ" (ஸில்ஸிஹா ஸஹீஹா624) எனவும் கூறியுள்ளார்கள். சுருக்கம் என்னவெனில் அபூ உமாமா (ரலி) அவர்களுடைய செய்தி ஆதாரபூர்வ மானதாகும். எனினும் அதில் "நோயை விரட்டக் கூடியது" என்ற பகுதி இடம் பெறவில்லை.

**தொழுகை, அதன் உயர்வு ஜிஹாத் ஆகும் என்றார்கள்.”**

நபியவர்கள் இதில் மூன்று விடயங்களைக் கூறியுள்ளார்கள். மார்க்கத்தின் தலையாயது, அதன் தூண், அதில் உயர்ந்தது ஆகியனவே அவை. மற்றுமொரு அறிவிப்பில் இதன் விளக்கம் இரு ஷஹாதாக்கள் என இடம்பெற்றுள்ளது. உள்ரங்கத்திலும், வெளிப்படையாகவும் அதனை ஏற்காதவர்களுக்கு இஸ்லாத்தில் பங்கேதுமில்லை.

மார்க்கத்தின் தூண் தொழுகையாகும். தூண்களின் மூலம் கூடாரங்கள் நிலைத்திருப்பது போன்று தொழுகை மூலம் மார்க்கம் நிலைத்திருக்கின்றது.

மார்க்கத்தில் உயர்ந்தது (ஒட்டகத்தின் திமில்ச் சதையைப் போன்றது) ஜிஹாதாகும். இமாம் அஹ்மத் மற்றும் பல அறிஞர்கள் கூறியதைப் போன்று கடமையானவற்றுக்குப் பிறகு அமல்களில் மேன்மையானது ஜிஹாதாகும்.

**“இவையனைத்தையும் ஒன்று சேர்க்கக் கூடியதை அறிவிக்கட்டுமா?’**

நாவைக் கட்டுப்படுத்தி தடுத்துக் கொள்வது தான் அனைத்து நலவுகளினதும் அடிப்படை என்பதையே இது அறிவிக்கின்றது. தனது நாவை ஆள்பவன் தனது மார்க்கத்தை ஆண்டு, அதனைத் திறன்படச் செய்தவனாகின்றான்.

நாவின் அறுவடைகள் என்பது தடுக்கப்பட்ட வார்த்தைகளால் ஏற்படும் விபரீதமும், தண்டனைகளுமாகும். ஏனெனில் மனிதன் தனது சொல், செயலால் நன்மை, தீமைகளை விதைக்கின்றான். பின்பு தான் விதைத்ததை மறுமையில் அறுவடை செய்கின்றான். நல்லதை விதைத்தவர் கண்ணியத்தை அறுவடை செய்வார். தீயதை விதைத்தவன் கைசேதத்தை அறுவடை செய்வான்.

உமர் (ரலி) அவர்கள் ஒரு தடவை அபூ பக்ர் (ரலி) அவர்களை சந்திக்கச் சென்ற வேளை அன்னார் தனது நாவை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, “போதும் (நிறுத்துங்கள்), அல்லாஹ் உங்களை மன்னிக்கட்டும், (என்ன இது?) என வினவினார்கள். அதற்கு அன்னார் இந்த நாவு தான் என்னை இந்த நிலைக்குத் தள்ளி விட்டது என்றார்கள். இதனை உமர் (ரலி) அவர்களின் அடிமை அஸ்லம் என்பவர் வாயிலாக அவருடைய மகன் ஸைத் கூறியதை இமாம் மாலிக் (ரஹ்) அறிவித்துள்ளார்கள்.

*நாவை விட நீண்ட கால சிறைத்தண்டனை தேவையான வேறேதுமில்லை என இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டுக் கூறுவார்கள்.*

*யூனுஸ் பின் உபைத் (ரஹ்) கூறுகின்றார் : நாவைக் கவனித்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் யாரையும் அவர்களுடைய ஏனைய செயல்களும் சீராக இருந்ததையே தவிர நான் காணவில்லை.*[1]




*1.நாவு தொடர்பாக விரிவாக அறிய விரும்புவோர் இந்நூலின் 15வது நபிமொழியின் விரிவுரைக்குச் செல்லுங்கள்.*

# ஹதீஸ் –30

## அல்லாஹ்வின் வரம்புகள்

عَنْ أَبِي ثَعْلَبَةَ الْخُشَنِيِّ رَضِيَ اللهُ عَنْهُ، عَنِ النَّبِيِّ ﷺ، قَالَ:

"إِنَّ اللهَ فَرَضَ فَرَائِضَ، فَلَا تُضَيِّعُوهَا، وَحَدَّ حُدُودًا فَلَا تَعْتَدُوهَا، وَحَرَّمَ أَشْيَاءَ، فَلَا تَنْتَهِكُوهَا، وَسَكَتَ عَنْ أَشْيَاءَ رَحْمَةً لَكُمْ غَيْرَ نِسْيَانٍ، فَلَا تَبْحَثُوا عَنْهَا".

حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ الدَّارَقُطْنِيُّ وَغَيْرُهُ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* **எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா மார்க்கக் கடமைகளை விதித்திருக்கின்றான். அவற்றை வீணாக்காதீர்கள். அவன் நமக்கு வரம்புகளை வகுத்துள்ளான். அவற்றைத் தாண்டிச் செல்லாதீர்கள். அவன் நமக்கு சிலவற்றை தடை செய்திருக்கின்றான். அவற்றை மீறாதீர்கள். அவன் நம் பால் கொண்ட அன்பினால் மறதியின்றி சில விஷயங்களில் அவன் மௌனமாக இருக்கின்றான். அவற்றைத் துருவி ஆராயாதீர்கள்.**

*அறிவிப்பவர் : அபூஸஃலபா அல் குஷனீ (ரலி), ஆதாரம் : தாரகுத்னீ (4396).*

### விரிவுரை :

*இமாம் அபூபக்ர் இப்னுஸ் ஸம்ஆன் (ரஹ்) கூறுகிறார் : இந்நபிமொழி மார்க்க அடிப்படைகளில் பிரதானமான ஒன்றாகும். இதனை அமுல்படுத்தியவர் நன்மையை அடைந்து கொள்வார். தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வார். ஏனெனில், கடமைகளைச் செய்து, தடைகளைத் தவிர்ந்து, வரம்புகளைத் தாண்டாது நின்று கொண்டு, மறைவானவற்றைத் துருவாமலிருந்தால் இச்சிறப்பின் அனைத்துப் பகுதிகளையும் முழுமைப்படுத்தியவராகவும் மார்க்கக் கடமைகளை சரிவர நிறைவேற்றியவராகவும் ஆகிவிடுவார். ஷரீஅத் சட்டங்கள் இந்நபிமொழியில் கூறப்பட்டவற்றைத் தாண்டி வெளியே செல்ல மாட்டாது.*

கடமைகள் என்பது அல்லாஹ் தனது அடியார்களுக்கு விதித்து, அதனைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தியவையாகும். உதாரணம் : தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ்.

தடைகள் என்பது அல்லாஹ் பாதுகாத்தவைகளாகும். மேலும் அதன்பால் நெருங்குவதையும், அதில் ஈடுபடுவதையும், அதனை மீறுவதையும் தடை செய்துள்ள விடயங்களே தடுக்கப்பட்டவைகளாகும்.

தாண்ட வேண்டாமெனத் தடை செய்துள்ள அல்லாஹ்வின் வரம்புகள் என்பது அவசியமாகவோ, ஸுன்னத்தாகவோ, அனுமதியுடனோ செய்யுமாறு கூறிய விடயங்களாகும்.

அதனைத் தாண்டுதல் என்றால் அந்த செயற்களைத் தாண்டி தடுக்கப் பட்டவற்றை செய்யத் துணிவதாகும்.

சிலவேளை வரம்புகள் மூலம் மேற்கூறப்பட்ட தடைகளும் நாடப்படலாம். அல்லாஹ்வின் வரம்புகள் பால் நெருங்க வேண்டாம் என்பதே இதன் அர்த்தமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் : “இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். நீங்கள் இவற்றை நெருங்க வேண்டாம்” (பகரா : 187).

இன்னும் சிலவேளை பெரும் பாவங்களுக்குரிய தண்டனைச் சட்டங்களுக்கும் வரம்புகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள “حد” எனும் வாசகம் பயன்படுத்தப்படும். உதாரணமாக விபச்சாரத்தின் தண்டனை, திருட்டுக் குற்றத்தின் தண்டனை, மது அருந்துதலுக்குரிய தண்டனை. மார்க்க சட்டக்கலை அறிஞர்களிடம் “حد” என்பது இக்கருத்திலேயே அறியப்படுகின்றது.

மௌனம் காத்த விடயம் என்பது ஹலால் என்றோ, ஹராம் என்றோ, கடமை என்றோ ஏதும் கூறப்படாமல் விடப்பட்டுள்ள விடயங்களாகும். அவை மன்னிக்கப்பட்டதாகும். அதனைச் செய்பவருக்கு குற்றமேதும் கிடையாது.

### “அவற்றைத் துருவி ஆராயாதீர்கள்”

நாம் ஈமான் கொள்ள வேண்டுமெனப் பணித்து, அதன் அமைப்புக்களைப் பற்றித் தெளிவுபடுத்தாத மறைவான விடயங்களைப் பற்றித் துருவுவதும் இந்தத் தடையில் உள்ளடங்குகின்றது. இவ்வாறு

மறைவான விடயங்களைத் துருவுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன் அது சந்தேகத்தையும், தடுமாற்றத்தையும் ஏற்படுத்தி பொய்ப்பிக்கும் நிலைக்கே கொண்டு சென்றுவிடும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மக்கள் (இதைப் படைத்தவர் யார்? இதைப் படைத்தவர் யார்? என்று ஒவ்வொன்றாகக்) கேட்டுக் கொண்டே வந்து இறுதியில், “அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்தான். அல்லாஹ்வைப் படைத்தவன் யார்?" என்று கேட்கும் நிலைக்கு உள்ளாவார்கள். இத்தகைய எண்ணம் ஒருவருக்கு ஏற்பட்டால் அவர் உடனே, “அல்லாஹ்வை நான் நம்பிக்கை கொண்டேன்" (ஆமன்த்து பில்லாஹ்) என்று சொல்லட்டும்.[(1)]

இமாம் இஸ்ஹாக் பின் ராஹவைஹி (ரஹ்) கூறுகின்றார் : படைத்தவனின் விடயத்தில் சிந்திக்கலாகாது, படைப்பினங்களில் அவர்கள் பற்றி வஹியின் மூலம் கேள்விப்பட்டதை வைத்து சிந்திக்கலாம். அதைக் காண அதிகரிக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் தடுமாற்றத்தில் சிக்கி விடுவார்கள்.

மேலும் கூறினார்கள் : அல்லாஹ் கூறியுள்ளான் : “ஒவ்வொன்றும் அவனது புகழைக் கொண்டு துதித்த வண்ணமே இருக்கின்றன” (அல்இஸ்ராஃ : 44). இதனை வைத்து பாத்திரங்கள், உரொட்டிகள், துணிகள் எவ்வாறு அவனைத் துதிக்கின்றன? எனக் கேட்க முடியாது. இவையனைத்தும் தஸ்பீஹ் செய்ததாக வந்துள்ளது. அது பற்றிய அறிவு அல்லாஹ்விடமே உள்ளது. அவன் நாடியவாறு, நாடிய விதத்தில் அவற்றைத் தஸ்பீஹ் செய்ய வைப்பான். இது போன்றவற்றில் வஹியின் மூலம் தாம் அறிந்ததைத் தாண்டி மனிதர்கள் குதர்க்கத்தில் ஈடுபடலாகாது.

---

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (134). ஷைத்தானின் ஊசலாட்டத்தின் போது ஒரு முஸ்லிம் கூறவேண்டிய வார்த்தைகளில் இதுவும் ஒன்றாகும்.
இது போன்ற சந்தர்ப்பங்களில் ஒரு முஸ்லிம் கூற வேண்டிய, செய்ய வேண்டிய விடயங்களை ஆதார அடிப்படையில் சுருக்கமாக முன்வைக்கிறேன் :

**1.** “அல்லாஹ்வை ஈமான் கொண்டு விட்டேன்”.

2.“அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டு விட்டேன்”. (இது முஸ்லிமின் மற்றுமொரு அறிவிப்பில் உள்ளது)

**3.**அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடி விட்டு அதைப் பற்றி சிந்திப்பதைத் தவிர்ந்து கொள்ளல்.

4.அல்லாஹ்வும் அவனது தூதரும் உண்மையுரைத்து விட்டார்கள்.

**5.**“அல்லாஹ் ஒருவன், அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன், அவன் யாரையும் பெறவுமில்லை, யாருக்கும் பிறக்கவுமில்லை, அவனுக்கு நிகராக எவருமில்லை என்று கூறி விட்டு இடது பக்கமாக மூன்று தடவை உமிழ்ந்து, ஷைத்தானை விட்டும் பாதுகாப்புத் தேட வேண்டும். (இது ஹஸன் எனும் தரத்திலுள்ள அறிவிப்பாளர் தொடருடன் அபூ தாவூதில் (4722) இடம்பெற்றுள்ளது.)

இது போன்றவற்றில் அல்லாஹ் அறிவித்ததைத் தாண்டி பேசலாகாது. எனவே நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். இது போன்ற தெளிவற்ற விடயங்களில் குதர்க்கத்தில் ஈடுபடாதீர்கள். ஏனெனில் அது உங்களை சத்திய வழியை விட்டும் தடம்புரளச் செய்துவிடும்.

மேற்கண்ட அனைத்தையும் இமாம் இஸ்ஹாக் கூறியதாக ஹர்பு பின் இஸ்மாஈல் கூறுகின்றார். [1]





---

*1.உள்ளத்தில் சந்தேகங்கள், ஊசலாட்டங்கள் ஏற்படுவோருக்கு அஷ்ஷேக் முஹம்மது பின் ஸாலிஹ் அல்உஸைமீன் (ரஹ்) அவர்களுடைய பயனுள்ள ஒரு மார்க்கத் தீர்ப்பு உள்ளது.*

*அவர்களிடம் ஷைத்தான் அல்லாஹ் தொடர்பான பாரிய சந்தேகங்களை ஏற்படுத்துவதன் விளைவாக அது பற்றி கடுமையாக அஞ்சக்கூடிய ஒரு நபரைப் பற்றி வினவப்பட்ட போது பின்வருமாறு பதிலளித்தார்கள் :*

*கேள்வி கேட்பவரின் தரப்பில் முடிவுகளை நினைத்து அஞ்சப்படுவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் பிரச்சினை குறித்து நான் அவருக்குக் கூறுகின்றேன் : இதில் நல்ல முடிவுகள் தான் கிட்டும் என மகிழ்வுறுங்கள். ஏனெனில் இவை விசுவாசிகளின் தூய்மையான அடிப்படைக் கொள்கையை ஆட்டங்காண வைக்கவும், தெளிவான விசுவாசத்தைக் கலங்கடிக்க உளவியல் மற்றும் சிந்தனா ரீதியாக அவர்களை தடுமாற்றத்தில் வீழ்த்தவும் ஷைத்தான் அவர்கள் மீது அத்துமீறி உண்டாக்கும் ஊசலாட்டங்களாகும். இது விசுவாசிகளுக்கு ஏற்படும் முதல் சம்பவமோ, இறுதிச் சம்பவமோ அல்ல. நபித்தோழர் களுக்கும் இதுபோன்ற நிலை ஏற்பட்டுள்ளது.*

*நபி (ஸல்) அவர்களுடைய தோழர்களில் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "எங்கள் உள்ளத்தில் சில (குழப்பமான) விடயங்கள் எழுகின்றன. அவற்றை (வெளிப்படுத்திப்) பேசுவதைக்கூட நாங்கள் மிகப்பெரும் (பாவ) காரியமாகக் கருதுகிறோம் (இது பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?)" என்று கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "உண்மையிலேயே நீங்கள் அத்தகைய உணர்வுகளுக்கு உள்ளாகின்றீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு நபித் தோழர்கள், "ஆம்" என்று பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள், "அதுதான் ஒளிவுமறைவற்ற இறைநம்பிக்கை" என்று கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (132).*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் ஒருவரிடம் (அவர் மனத்திற்குள்) ஷைத்தான் வந்து, 'இதைப் படைத்தவர் யார்? இதைப் படைத்தவர் யார்?" என்று கேட்டுக் கொண்டே வந்து, இறுதியில், 'உன் இறைவனைப் படைத்தவர் யார்?" என்று கேட்கிறான். இந்தக் (கேள்வி கேட்கும்) கட்டத்தை அவன் அடையும் போது அவர் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடட்டும். (இத்தகைய சிந்தனையிலிருந்து) விலகிக் கொள்ளட்டும். (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி 3276, முஸ்லிம் 134).*

*இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒரு மனிதர் வந்து, "என் மனதில் சில எண்ணங்கள் உருவாகின்றன. அதனை வெளியே பேசுவதை விட நான் ஒரு எறித்த விறகுக் கட்டையாக இருப்பதை விரும்புகிறேன்" என்றார். "இவருடைய விடயத்தை சந்தேகத்துடனேயே திருப்பி விட்ட அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என நபியவர்கள் கூறினார்கள். (அஹ்மத் (3161)).*

*கேள்வி கேட்ட இந்நபருக்கு நான் கூறுகின்றேன் : இந்த ஊசலாட்டங்கள் ஷைத்தானிடமிருந்து தான் என்பது உமக்குத் தெளிவானால் அதனை நீக்கப் போராடி, சிரமத்தை சகித்துக் கொள்ளுங்கள். அதனை எதிர்த்துப் போராடி, புறக்கணித்து, அதன்பின் தொடர்ந்து செல்வதைத் தவிர்த்தால் நிச்சயம் அவை உமக்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ் எனது சமூகத்தவரின் உள்ளங்களில் ஊசலாடுபவற்றை வெளியில் மொழியாமலும் அமுல்படுத்தாமலும் இருக்கும் வரை அவற்றை மன்னித்து விட்டான். (புஹாரி 2528, முஸ்லிம் 127). உமது உள்ளத்தில் ஏற்படும் அந்த ஊசலாட்டங்களை நீ நம்புகிறாயா? உண்மையெனக் கருதுகிறாயா? அல்லாஹ்வை நீ அவ்வாறு வர்ணிக்கலாமா? என உன்னிடம் வினவப்பட்டால் நீ "இது குறித்துப் பேசுவதற்கு எமக்கு எந்தத் தகுதியும் இல்லை. "(எங்கள் இரட்சகனே) நீ தூய்மையானவன், இது பாரிய அவதூறாகும்" (நூர் :16) என்று தான் கூறியிருப்பீர். உள்ளத்தாலும் நாவினாலும் அதை மறுத்திருப்பீர். இவ்வூசலாட்டங்களிலிருந்து மிகத் தூரத்தில் தான் இருந்திருப்பீர். அப்படியாயின் இது உம்மை வீழ்த்தவும், உமது மார்க்கத்தைக் குழப்பவும் ஷைத்தானிடமிருந்து உமது உள்ளத்தில் போடப்படும் வெறும் ஐயங்களும் ஊசலாட்டங்களும் தான். இதனால் தான் அற்பமான விடயங்களில் ஷைத்தான் உமது உள்ளத்தில் சந்தேகங்களை உருவாக்க மாட்டான். உதாரணமாக மக்கள் நிரம்பி வழியும் பெரிய ஊர்களைப்*

பற்றி கேள்விப்படுவீர். அதில் உமக்கு சந்தேகம் ஏற்பட மாட்டாது. ஏனெனில் இது போன்றவற்றில் சந்தேகத்தை உருவாக்குவது ஷைத்தானுடைய நோக்கமில்லை. ஆனால் ஒரு விசுவாசியுடைய ஈமானைக் குழப்புவது தான் அவனது பாரிய இலக்காகும். உள்ளத்திலிருக்கும் அறிவு, நேர்வழியின் ஜோதியை அணைப்பதற்கும், அவனை சந்தேகத்திலும் தடுமாற்றத்திலும் தள்ளவுமே அவன் முழு முயற்சி செய்கின்றான். நபியவர்கள் எமக்குப் பயனுள்ள மருந்தைத் தெளிவாகக் கூறியுள்ளார்கள். அதுதான் “அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிவிட்டு, அதனைத் தவிர்ந்து கொள்ளட்டும்” என்பதாகும். எனவே மனிதன் அதனைத் தவிர்ந்து கொண்டு, அல்லாஹ்விடமுள்ளதை வேண்டி, ஆர்வத்துடன் வணக்கத்தில் நிலைத்திருந்தால் அவனது உதவியால் இவ்வாறான எண்ணங்கள் நீங்கி விடும்.

உள்ளத்தில் தோன்றும் அனைத்து ஊகங்களையும் புறக்கணித்து விடு. நீயோ அல்லாஹ்வை வணங்கி, அவனை அழைத்து, மகத்துவப்படுத்துகின்றாய். உமது உள்ளத்தில் தோன்றும் ஊசலாட்டங்களை வைத்து யாராவது அல்லாஹ்வை வர்ணிப்பதைக் கேட்டால் நீர் அவனை முடியுமாயிருந்தால் கொன்று விடுவீர். அப்படியாயின் உன்னில் தோன்றும் சந்தேகங்கள் நடைமுறைக்கப்பபாற்பட்ட, யதார்த்தமற்றவை. மாறாக அவை அடிப்படையற்ற போலி சந்தேகங்களும், ஊசலாட்டங்களுமே தவிர வேறில்லை.

எனது உபதேசத்தின் சுருக்கம் வருமாறு :

**1.**நபியவர்கள் ஏவியது போன்று அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடி அவ்வெண்ணங்களைத் தவிர்ந்து கொள்ளல்.

**2.**அல்லாஹ்வை நினைவுகூர்ந்து இதுபோன்ற சந்தேகங்களில் தொடர்ந்து நிலைத்திருக் காமல் உள்ளத்தைக் கட்டுப்படுத்தல்.

**3.**அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டும், அவனது பொருத்தத்தை நாடியும் வணக்கம், நற்செயலில் தீவிர ஆர்வம் காட்டல். தீவிரமாக, முழுமையாக வணக்க வழிபாடுகளில் திளைத்திருந்தால் அல்லாஹ்வின் நாட்டத்தைக் கொண்டு இதுபோன்ற சந்தேகங்களை மறந்துவிடுவீர்.

**4.**அல்லாஹ்வின் பால் அதிகமாக ஒதுங்கி, இதிலிருந்து ஆரோக்கியத்தைத் தருமாறு அவனிடம் வேண்டுதல்.

**5.**அல்லாஹ்விடம் உமக்கு ஆரோக்கியத்தையும் அனைத்துவிதக் கெடுதிகளை விட்டும் பாதுகாப்பையும் கேட்கிறேன்.

நூல் : மஜ்மூஃ பதாவா இப்னு உஸைமீன். தொகுப்பு : பஹ்த் அஸ்ஸுலைமான் (1/56).

# ஹதீஸ் 31

## உலகப் பற்றற்ற தன்மை

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ السَّاعِدِيِّ قَالَ:

جَاءَ رَجُلٌ إِلَى النَّبِيِّ ﷺ فَقَالَ: يَا رَسُولَ اللهِ دُلَّنِي عَلَى عَمَلٍ إِذَا عَمِلْتُهُ أَحَبَّنِي اللهُ، وَأَحَبَّنِي النَّاسُ. فَقَالَ: "ازْهَدْ فِي الدُّنْيَا يُحِبَّكَ اللهُ، وَازْهَدْ فِيمَا فِي أَيْدِي النَّاسِ، يُحِبَّكَ النَّاسُ".

حَدِيثٌ حَسَنٌ رَوَاهُ ابْنُ مَاجَهْ وَغَيْرُهُ بِأَسَانِيدَ حَسَنَةٍ.

*நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒருவர் வந்து 'இறைவனின் தூதரவர்களே, அல்லாஹ்வும், மனிதர்களும் என்னை நேசிக்கும் ஒரு செயலை எனக்கு அறிவித்துத் தாருங்கள்'' என்று கூறினார். **நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு பதில் தந்தார்கள் : நீ உலகமோகமற்றிரு. அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களிடமுள்ளதில் தேவையற்றிரு. மக்கள் உன்னை நேசிப்பார்கள்.***

*அறிவிப்பவர் : ஸஹ்லு இப்னு ஸஃதுஸ் ஸாஇதீ (ரலி), ஆதாரம் : இப்னு மாஜாஃ (4102).*

**விரிவுரை :**

*இந்நபிமொழி பிரதானமான இரு உபதேசங்களை உள்ளடக்கியுள்ளது :*

**1.** *உலக மோகமற்றிருத்தல். அது அல்லாஹ்வின் நேசத்தைப் பெற்றுக் கொடுக்கும்.*

**2.** *மக்களிடமுள்ளதில் தேவையற்றிருத்தல். அது மக்கள் நேசத்தைப் பெற்றுக் கொடுக்கும்.*

*உலக மோகமற்றிருத்தலை சிலாகித்தும், அதில் பேராசை கொள்வதை இகழ்ந்தும் பல அல்குர்ஆன் வசனங்கள் உள்ளன.*

*''எனினும், நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறீர்கள். மறுமையோ மிகச் சிறந்ததும் நிலையானதுமாகும்'' (அஃலா : 16,17).*

*"நீங்கள் இவ்வுலகப் பொருளை விரும்புகின்றீர்கள். அல்லாஹ்வோ (உங்களுக்கு) மறுமையை விரும்புகின்றான்" (அன்ஃபால் : 67).*

*காரூனின் சம்பவத்தில் பின்வருமாறு கூறுகின்றான் :*

*"பின்னர் அவன் தனது அலங்காரத்துடன் தன் சமூகத்தாரின் பக்கம் புறப்பட்டான். 'காரூனுக்கு வழங்கப்பட்டது போன்று எமக்கும் வழங்கப்பட்டிருக்கக் கூடாதா? நிச்சயமாக அவன் பெரும் பாக்கியமுடையவன்' என்று இவ்வுலக வாழ்வை விரும்பியோர் கூறினர். அவர்களில் அறிவு வழங்கப்பட்டோர், 'உங்களுக்குக் கேடு உண்டாகட்டும்! நம்பிக்கை கொண்டு, நல்லறம் புரிந்தோருக்கு அல்லாஹ்வின் கூலியே மிகச் சிறந்ததாகும். பொறுமையாளர்களுக்கே அது வழங்கப்படும்' என்று கூறினர்" (அல்கஸஸ் : 79,80).*

*"அவர்கள் இவ்வுலக வாழ்க்கை மூலம் மகிழ்ச்சியடைகின்றனர். இவ்வுலக வாழ்க்கை மறுமை(யுடன் ஒப்பிடுகை)யில் மிக அற்பமேயன்றி வேறில்லை" (அர்ரஃத் : 26).*

*"இவ்வுலக இன்பம் மிக அற்பமானதே! ஆனால், (அல்லாஹ்வை) அஞ்சி நடப்போருக்கு மறுமையே சிறந்தது. இன்னும் நீங்கள் சிறிதளவும் அநியாயம் செய்யப்பட மாட்டீர்கள் என்று (நபியே!) நீர் கூறுவீராக!" (நிஸாஃ : 77).*

*பிர்அவ்னின் கூட்டத்திலிருந்து (அல்லாஹ்வை) விசுவாசித்த அந்த நபர் தனது கூட்டத்தைப் பார்த்து பின்வருமாறு கூறுகின்றார் : "நம்பிக்கை கொண்டிருந்தாரே! அவர், 'எனது சமூகத்தினரே! நீங்கள் என்னையே பின்பற்றுங்கள். நான் உங்களுக்கு நேரான வழியைக் காண்பிக்கின்றேன்' என்று கூறினார். எனது சமூகத்தினரே! இவ்வுல வாழ்க்கை அற்ப இன்பமே! நிச்சயமாக மறுமையோ நிலையான வீடாகும் (என்றும் கூறினார்)" (காபிர் : 38,39).*

*தனது செயல், முயற்சி, எண்ணம் போன்றவற்றின் மூலம் உலகாதாயங்களை நாடுவோரை அல்லாஹ் இகழ்ந்து கூறியுள்ளான். அது பற்றி முதலாம் நபிமொழியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.*

*உலக வாழ்வை இகழ்ந்தும், அல்லாஹ்விடத்தில் இது அற்பமானது என்பது பற்றியும் அதிகமாக நபிமொழிகள் இடம்பெற்றுள்ளன.*

*(ஒருமுறை) நபி (ஸல்) அவர்கள், (புறநகர் மதீனாவை ஒட்டியுள்ள) "ஆலியா"வின் ஒரு பகுதி வழியாக ஒரு கடைத் தெருவைக் கடந்து*

சென்றார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் மக்களும் இருந்தார்கள். அப்போது அவர்கள், செத்துக் கிடந்த, காதுகள் சிறுத்த ஓர் ஆட்டைக் கடந்து சென்றார்கள். நபி (ஸல்) அவர்கள், அந்த ஆட்டை எடுத்து, அதன் (சிறிய) காதைப் பிடித்துக் கொண்டு, “உங்களில் யார் இதை ஒரு வெள்ளிக் காசுக்குப் பகரமாக வாங்கிக் கொள்ள விரும்புவார்?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், “எதற்குப் பகரமாகவும் அதை வாங்க நாங்கள் விரும்பமாட்டோம்; அதை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்வோம்?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், “இது உங்களுக்குரியதாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புவீர்களா?" என்று கேட்டார்கள். மக்கள், “அல்லாஹ்வின் மீதாணையாக! இது உயிரோடு இருந்தாலும் இது குறையுள்ளதாகும். ஏனெனில், இதன் காது சிறுத்துக் காணப்படுகிறது. அவ்வாறிருக்க, இது செத்துப் போயிருக்கும் போது எப்படி (இதற்கு மதிப்பிருக்கும்)?" என்று கேட்டனர். நபி (ஸல்) அவர்கள், “அவ்வாறாயின், அல்லாஹ்வின் மீதாணையாக! இந்தச் செத்த ஆட்டைவிட இவ்வுலகம் அல்லாஹ்வின் கணிப்பில் உங்களுக்கு அற்பமானதாகும்" என்று சொன்னார்கள்.(1)

மேலும் நபியவர்கள் கூறினார்கள் : இவ்வுலகை மறுமையுடன் ஒப்பிடும் போது உங்களில் ஒருவர் தனது விரலை கடலில் விட்டு எடுப்பது போன்றாகும். கடல் நீரிலிருந்து அவ்விரலில் எந்தளவு திரும்பி வருகின்றதைப் பார்த்துக் கொள்ளட்டும்.(2)

ஒரு பொருளில் மோகமற்றிருத்தல் என்பது உள்ளத்தில் அதற்கு அதிக மதிப்பளிக்காமல், அதை அற்பமாகக் கருதுவதாகும்.

“زُهْد” என இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள வார்த்தைக்குப் பல விதமான விளக்கங்களை அறிஞர்கள் கூறியுள்ளனர். அவற்றில் சிலதைப் பார்ப்போம்.

**01.** அபூ முஸ்லிம் அல்கவ்லானீ (ரஹ்) கூறுகின்றார் : ஹலாலானதை ஹராமாக்கிக் கொள்வதோ, பணத்தை வீணடிப்பதோ உலக மோகமற்ற நிலையல்ல. மாறாக உன்னிடமிருப்பதை விட அல்லாஹ்விடமிருப்பதில் உன்னிடம் பலத்த நம்பிக்கை ஏற்படுவதே உண்மையான ஸுஹ்தாகும். உனக்கு ஓர் இழப்பு ஏற்பட்டால் அது உன்னிடம் தொடர்ந்து இருப்பதை

---

*1.அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2957).*

*2.அறிவிப்பவர் : முஸதவ்ரித் அல்பிஹ்ரீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2858).*

விட அல்லாஹ்விடம் அவ்விழப்பிற்கான கூலியையும் பிரதிபலனையும் நீ எதிர்பார்த்தல் வேண்டும். இச்செய்தி இமாம் அஹ்மதின் "அஸ்ஸுஹத்" எனும் நூலிலுள்ளது.

**02.** யூனுஸ் பின் மைஸரா (ரஹ்) கூறுகின்றார் : ஹலாலானதை ஹராமாக்கிக் கொள்வதோ, பணத்தை வீணடிப்பதோ உலக மோகமற்ற நிலையல்ல. மாறாக உன்னிடமிருப்பதை விட அல்லாஹ்விடமிருப்பதில் உன்னிடம் பலத்த நம்பிக்கை ஏற்படுவதே உண்மையான ஸுஹ்தாகும். மேலும் துன்பம் ஏற்படும் போதும், ஏற்படாத போதும் நீ ஒரே நிலையில்தான் இருக்க வேண்டும். சத்தியத்தில் உன்னைப் புகழ்வோரும், இகழ்வோரும் உன்னிடம் சமமான நிலையில் இருக்க வேண்டும். இச்செய்தியை இமாம் இப்னு அபித் துன்யா (ரஹ்) அறிவித்துள்ளார்கள்.

மூன்று விடயங்களைக் கொண்டு ஸுஹ்தை விபரித்துள்ளார்கள். அனைத்துமே உறுப்புக்களால் செய்யும் அமல்களன்றி உள்ளத்தால் செய்யும் அமல்களே.

**1.** தன்னிடம் உள்ளதை விட அல்லாஹ்விடம் உள்ளவற்றில் பலத்த நம்பிக்கையுடன் இருத்தல். இது சமமான மற்றும் பலமான மன உறுதியாலையே ஏற்படுகின்றது. ஏனெனில் அல்லாஹ் தனது அடியார்களின் வாழ்வாதாரங்களைப் பொறுப்பேற்றுள்ளான். "பூமியில் உள்ள எந்த உயிரினமாயினும் அதற்கு உணவளிக்கும் பொறுப்பு அல்லாஹ்வின் மீதே உள்ளது" (ஹூத் : 06).

எனவே மன உறுதியை ஸ்திரப்படுத்தியவர் தனது அனைத்துக் காரியங்களிலும் அல்லாஹ்வை நம்பியிருப்பார். அவனது ஏற்பாடுகளைப் பொருந்திக் கொள்வார். அச்சமோ, ஆதரவோ எதுவாயினும் படைப்பினங்களுடன் தொடர்புபடுவதைத் துண்டித்துக் கொள்வார். தடுக்கப்பட்ட வழிகளில் உலகாதாயங்களைத் தேடுவதை விட்டும் அம்மனஉறுதி அவனைத் தடுத்து விடும். இந்நிலையில் யார் இருக்கின்றாரோ அவர் உண்மையிலேயே உலகமோகம் அற்றவராகவே இருப்பார். அவரிடம் ஏதும் இல்லாவிடினும் மக்களில் அதிக தேவையற்றவராக அவர்தான் திகழ்வார்.

**2.** பொருளாதார, அல்லது குழந்தை இழப்பு போன்ற உலகத் துன்பங்கள் ஓர் அடியானுக்கு நேரும் போது அவை உலகில் இருந்திருந்தால்

கிடைக்கும் பலனை விட அல்லாஹ்வின் நற்கூலியில் அதிக ஆசை கொண்டவனாக இருத்தல். இதுவும் பரிபூரண மன உறுதியிலிருந்து உருவாக்கக் கூடியதாகும்.

நபி (ஸல்) அவர்கள் தனது பிரார்த்தனையில் பின்வருமாறு கூறுவார்கள்: "இறைவா! உனக்கு மாறு செய்வதிலிருந்து தடுக்குமளவு இறையச்சத்தையும், எம்மை சுவனத்திற்குக் கொண்டு சேர்க்குமளவு உனக்கு வழிப்படுவதையும், உலகத் துன்பங்களை இலகுபடுத்துமளவு மன உறுதியையும் எமக்குப் பகிர்ந் தளிப்பாயாக!"(1)

இது உலகத் தேவையற்ற, அதில் ஆர்வம் குறைந்த நிலையின் அடையாளங்களில் ஒன்றாகும். அலி (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள் : "உலகத் தேவையற்றிருப்பவருக்குத் துன்பங்கள் எல்லாம் இலகுவாகிவிடும்"

**3.** சத்தியத்தில் ஓர் அடியானிடம் தன்னைப் புகழ்பவனும், இகழ்பவனும் ஒரே தரத்தில் இருத்தல். இதுவும் உலகத் தேவையற்று, அதனைத் துச்சமாக மதித்து, ஆர்வம் குறைந்த நிலையின் அடையாளங்களில் ஒன்றாகும். உலகம் பற்றிய மதிப்பு யாரிடம் மிகைத்து விடுகின்றதோ அவர் புகழை விரும்பி, இகழ்ச்சியை வெறுப்பார். தன்னை புகழ்பவரும், இகழ்பவரும் ஒருவருடைய உள்ளத்தில் சமமாகின்ற போது, அது அவரது உள்ளத்திலிருந்து படைப்பினங்களின் மதிப்பு நீங்கி, சத்தியத்தின் நேசம் மற்றும் அதிலிருந்து பெறும் இறைப்பொருத்தம் ஆகியன நிரம்பியிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

زهد (ஸுஹ்த்) என்ற சொல்லிற்கான விளக்கங்கள் வேறுசில அறிஞர்களாலும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மேற்கண்ட கருத்தைச் சுற்றியே உள்ளன.

**மீண்டும் ஹதீஸ் விளக்கத்திற்குச் செல்வோம் :**

**"நீ உலக மோகமற்றிரு, அல்லாஹ் உன்னை நேசிப்பான்"**

உலக மோகமற்றவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான் என்பதை இந்நபிமொழி சுட்டிக் காட்டுகின்றது. ஓர் அறிஞர் கூறுகின்றார் : ஈஸா (அலை) அவர்களின் தோழர்களாகிய ஹவாரிய்யூன்கள் அன்னாரிடம் :

1. அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), ஆதாரம்: திர்மிதீ (3502). அவர்கள் இது ஹஸன் கரீப் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளதுடன் அஷ்ஷேக் அல்பானி இதனை ஹஸன் எனக் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுல் ஜாமிஃ 1268).

அல்லாஹ் எம்மை நேசிக்கக் கூடிய ஒரேயொரு அமலை எமக்குக் காட்டித் தாருங்கள் எனக் கேட்க, நீங்கள் இவ்வுலகை வெறுத்து நடவுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான் எனக் கூறினார்கள்.

உலகை நேசித்து மறுமையை விட அதைத் தேர்ந்தெடுப்போரை அல்லாஹ் தூற்றியுள்ளான் : "அவ்வாறன்று, நீங்கள் இவ்வுலகையே விரும்புகிறீர்கள். மறுமையை விட்டு விடுகின்றீர்கள்" (அல்கியாமா : 20,21). "இன்னும் செல்வத்தை அளவுக்கதிகமாக விரும்புகின்றீர்கள்" (அல்ஃபஜ்ர் :20). "இன்னும் நிச்சயமாக அவன் செல்வத்தைக் கடுமையாக நேசிக்கின்றான்" (அல்ஆதியாத்:08). அதாவது பொருளாதாரத்தை நேசிப்பதையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. உலகாதாயத்தை நேசிப்பவனை அல்லாஹ் தூற்றியதன் மூலம் அதனை நேசிக்காமல் விட்டுவிடுவோரை அவன் நேசிக்கிறான் என்பதை அறியலாம்.

"உலகை நேசித்து அதில் மகிழ்வோருடைய உள்ளத்திலிருந்து மறுமை பற்றிய நேசம் வெளியேறி விடுகின்றது" என இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

"இம்மையும் மறுமையும் தராசின் இரு தட்டுக்களைப் போன்றாகும். ஒன்று கணத்தால் மற்றது குறைந்து விடுகின்றது" என அப்துல்லாஹ் பின் அவ்ன் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

இம்மையும் மறுமையும் இரு மனைவிகளுடைய ஒரு மனிதரைப் போன்றாகும். ஒரு மனைவியைத் திருப்திப்படுத்தினால் மற்றவளைக் கோபமூட்டுகின்றான்" என வஹ்ப் (ரஹ்) கூறியுள்ளார்.

அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் இவ்வுலகைக் குறைத்து மதிப்பிட்டிருப்பது மறுமை வரை தொடர்ந்து வரக்கூடிய அதன் காலங்களான இரவு, பகலைக் கருதியல்ல. ஏனெனில் அல்லாஹ் அவ்விரண்டையும் நல்லுபதேசம் பெற விரும்புகிறவனுக்கும் நன்றி செலுத்த விரும்புகின்ற வனுக்கும் அவ்விரண்டையும் ஒன்றன்பின் ஒன்றாக வரக்கூடியதாக ஆக்கியுள்ளான் என்பதை நீர் அறிந்து கொள்ளும்.

மேலும் மனிதர்களின் வசிப்பிடமாகவும், விரிப்பாகவும் அல்லாஹ் ஆக்கி வைத்துள்ள பூமியையோ, அதில் அவன் ஏற்படுத்தியுள்ள மலைகள், கடல்கள், ஆறுகள், கனிய வளங்கள் போன்றவற்றையோ, அவன் முளைப்பித்துள்ள மரங்கள், பயிர்களையோ, அதில் வாழும் ஏனைய

உயிரினங்களையோ இகழவில்லை. ஏனெனில் இவையனைத்தும் அல்லாஹ் தனது அடியார்களுக்கு அளித்திருக்கும் அருட்கொடைகளில் உள்ளவையே. அவற்றிலே அவர்களுக்குப் பயன்பாடுகள், படிப்பினைகள், அவற்றை சிருஷ்டிக்க அல்லாஹ் ஒருவனால் மாத்திரம் தான் முடியும் என்பதற்கும், அவனது சக்தி, மகத்துவம் ஆகியவற்றுக்கும் ஆதாரம் உள்ளது.

மாறாக இவ் இகழ்ச்சி இவ்வுலகில் நிகழக்கூடிய மனித செயற்பாடுகளை நோக்கியே கூறப்பட்டுள்ளன. ஏனெனில் அவற்றில் பல மெச்சும் விதத்தில் நிகழ்வதில்லை. மாறாக ஒன்றோ தீய முடிவாக அல்லது பயனற்றதாகத் தான் அவை முடிவுறுகின்றன.

“இவ்வுலக வாழ்க்கை என்பது விளையாட்டும், வீணும், அலங்காரமும், உங்களுக்கிடையே பெருமையடித்தலும், செல்வங்களையும், குழந்தைகளையும் அதிகரித்துக் கொள்வதுமேயாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (இது) மழையின் உதாரணத்தை ஒத்ததாகும். அதன் பயிர்கள் விவசாயிகளை மகிழ்வடையச் செய்கின்றன. பின்னர் அது காய்ந்து மஞ்சள் நிறமாக மாறுவதை நீர் காண்கிறீர். பின்னர் அது சருகுகளாகி விடுகின்றது. மேலும், மறுமையில் (தீயவர்களுக்கு) கடும் வேதனையுண்டு. (நல்லவர்களுக்கு) அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பும், பொருத்தமும் உண்டு. இன்னும் இவ்வுலக வாழ்வு ஏமாற்றம் தரும் (வெறும்) இன்பமேயன்றி வேறில்லை” *(ஹதீத் : 20)*[(1)]

**இரண்டாவது உபதேசம் : மக்களிடமுள்ளதில் தேவையற்றிருத்தல். அது மக்கள் நேசத்தை உருவாக்கும்.**

மக்கள் கரங்களில் உள்ளதை நீ பயன்படுத்தாமலிருக்கும் வரை அவர்கள் உன்னை மதித்துக் கொண்டே இருப்பார்கள். அதை நீ செய்து விட்டால் உன்னை அவர்கள் குறைத்து மதிப்பிட்டு விடுவார்கள். மேலும் உன்னுடன் கதைப்பதை வெறுத்து உன்னையே பகைத்து விடுவார்கள் என இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

மக்களிடமிருப்பதைக் கேட்காமல் தேவையற்றிருப்பதை வலியுறுத்தி

---

1.அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ நேரடியாக அல்லது சிலேடையாக மறுமை விடயங்களில் ஆர்வமூட்டுவதுடன் சேர்த்துத் தான் இவ்வுலக வாழ்வு பற்றி இகழ்ந்து கூறப்பட்டுள்ளது. மறுமைக்குத் தயாராகுவதற்காக வேண்டியே தவிர வெறுமனே உலக வாழ்க்கையை விடுவது பற்றி தூண்டப்படவில்லை. எனவே மறுமைக்கான நற்செயல்களில் அதிகம் ஈடுபடுவதுடன் உலகிற்காக முயற்சி செய்வது இகழப்பட மாட்டாது. **(அப்துல் அஸீஸ் அத்தரீபி)**

பல நபிமொழிகள் உள்ளன. மக்கள் கரங்களிலுள்ளதைக் கேட்பவரை அவர்கள் வெறுத்து, பகைத்து விடுவார்கள். ஏனெனில் பணம் அதிக மக்களால் நேசிக்கப்படும் ஒன்று. அவர்கள் நேசிப்பதை யாராவது கேட்டால் அவர்களை வெறுத்து விடுவார்கள். ஆனால் மக்களிடமிருப்பதில் தேவையற்று பத்தினித்தனத்துடன் நடந்து கொண்டால் அவனை அவர்கள் நேசிப்பார்கள். அதற்காக மதிப்பார்கள். அவர்களை அவன் ஆளவும் செய்வான். ஒரு கிராமவாசி பஸரா மக்களிடம் இக்கிராமத்தின் தலைவர் யார்? என வினவ, இமாம் ஹஸனுல் பஸரி எனக் கூறினார்கள். எவ்வாறு தலைவரானார்? எனக் கேட்க, மக்கள் அன்னாரது அறிவின்பால் தேவையுடனிருக்க அவர்களோ மக்களிடமிருந்து தேவையற்றிருந்தார் என பதிலளித்தனர்.

ஒரு கவிஞர் உலகையும் அதில் மூழ்கியிருப்போரையும் எவ்வளவு அழகாக கவிதையில் வடித்துள்ளார்! அதன் தமிழ்ச் சுருக்கம் வருமாறு :

இவ்வுலகமோ நாய்கள் இழுக்கக் காத்திருக்கும் சிதைந்த அழுகிய பிணமாகவே அன்றி வேறில்லை.

நீ அதைத் தவிர்ந்து கொண்டால் பாதுகாப்பாக இருப்பாய். அதை இழுக்கச் சென்றால் சுற்றியிருக்கும் நாய்களும் உன்னுடன் சண்டையிட வரும்.

# ஹதீஸ் 32

## இஸ்லாத்தில் தீங்கிழைத்தலில்லை

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ رَضِيَ اللهُ عَنْهُ، أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ:

"لَا ضَرَرَ وَلَا ضِرَارَ"

حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ ابْنُ مَاجَهْ وَالدَّارَقُطْنِيُّ وَغَيْرُهُمَا مُسْنَدًا، وَرَوَاهُ مَالِكٌ فِي " الْمُوَطَّإِ " عَنْ عَمْرِو بْنِ يَحْيَى، عَنْ أَبِيهِ، عَنِ النَّبِيِّ ﷺ مُرْسَلًا، فَأَسْقَطَ أَبَا سَعِيدٍ، وَلَهُ طُرُقٌ يَقْوَى بَعْضُهَا بِبَعْضٍ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : **'தீங்கிழைக்கவும் கூடாது. தீங்கிற்குப் பழி வாங்கவும் கூடாது”.***

*அறிவிப்பவர் : அபூஸஈத் அல் குத்ரீ (ரலி), ஆதாரம் : தாரகுத்னீ (3079).*

*இந்த நபிமொழி ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகும். இதனை இப்னு மாஜா, அத்தாரகுத்னீ மற்றும் பலர் முழுமையான அறிவிப்பாளர் தொடருடன் (முஸ்னத்) அறிவித்துள்ளனர். இது மாலிக் அவர்களின் 'அல்முவத்தா’’வில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக, அம்ரு இப்னு யஹ்யா, தம் தந்தை வாயிலாக அபூ ஸஈதின் பெயரை விட்டுவிட்டு 'முர்ஸல்’’ ஆன நபிமொழியாக அறிவித்துள்ளார். எனினும் இந்நபிமொழிக்கு ஒன்றுக்கொன்று பலப்படுத்தும் பல அறிவிப்பாளர் தொடர்கள் உள்ளன.*

**விரிவுரை :**

*அபூ ஸஈத் (ரலி) அவர்களது இந்நபிமொழி இப்னுமாஜாவில் இடம் பெறவில்லை. மாறாக தாரகுத்னீ, ஹாகிம், பைஹகீ ஆகிய நூல்களிலேயே உள்ளது. இமாம் நவவீ கூறியது போன்று இதன் அறிவிப்பாளர் தொடர்கள் சிலது சிலதைப் பலப்படுத்துகின்றன.*

*இமாம் இப்னுஸ் ஸலாஹ் கூறுகின்றார் : இந்நபிமொழியை இமாம் தாரகுத்னீ அவர்கள் பல அறிவிப்பாளர் தொடர்கள் மூலம் அறிவித்துள்ளார்.*

அவையனைத்தையும் சேர்த்து இச்செய்தியை பலப்படுத்தி “ஹஸன்” எனும் தரத்திற்கு ஏற்றிச் செல்கின்றது. பெரும்பான்மை அறிஞர்கள் இதனை ஏற்றுக் கொண்டு, ஆதாரமாக எடுத்துள்ளார்கள்.

இமாம் அஹ்மத் அவர்களும் இந்நபிமொழியை ஆதாரமாக எடுத்து, நபியவர்கள் கூறியதாகவே இதனைக் கூறியுள்ளார்கள்.

இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் ளர்ம், ளிறம் ஆகிய இரண்டும் ஒன்றா? அல்லது வேறு கருத்துக்களைக் கொண்டதா? என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். இரண்டும் ஒன்றுதான், உறுதிப்படுத்தவே இரு தடவை கூறப்பட்டுள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

இரண்டும் வேறு கருத்துக்களைக் கொண்டது என்பதே பிரபலமான கருத்தாகும். இரண்டினதும் கருத்தில் இரு கருத்துக்கள் உள்ளன :

**1.** ளர்ம் என்பது, தான் பயனடைவதற்காகப் பிறருக்குத் தீங்கிழைத்தல். ளிறம் என்பது தான் பயனடையாவிட்டாலும் பிறருக்குத் தீங்கிழைத்தல். உதாரணமாக: தனக்குப் பாதிப்பில்லாத ஒன்றை பிறருக்குத் தடுப்பதன் மூலம் அவனுக்குத் தீங்கிழைத்தல் ஆகும். இக்கருத்தை இமாம்களான இப்னு அப்தில் பர், இப்னுஸ் ஸலாஹ் போன்றோர் வலுப்படுத்தியுள்ளனர்.

**2.** ளர்ம் என்பது தனக்குத் தீங்கிழைக்காதவனுக்குத் தீங்கிழைத்தல். ளிறம் என்பது தனக்கு இழைத்த தீங்கிற்கு அத்துமீறிப் பழிவாங்குதலாகும்.

எவ்வாறாயினும் தகுந்த காரணமின்றி ஒருவனுக்குத் தீங்கிழைப்பதையே நபியவர்கள் தடுத்துள்ளார்கள். ஆனால் அல்லாஹ்வின் வரம்பை மீறியதற்காகவோ, பிறருக்கு அநீதியிழைத்ததற்காகவோ தண்டனை முறையில் தீங்கிழைப்பது இந்நபிமொழியில் ஒருபோதும் நாடப்படவில்லை. மாறாக தகுந்த காரணமின்றி தீங்கிழைப்பதே தடுக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் அடியார்களுக்குத் தீங்கிழைக்கும் எதனையும் ஒருபோதும் அவர்களுக்குக் கடமையாக்கவில்லை என்பதும் இந்நபிமொழியில் உள்ளடங்கு கின்றது. அவன் ஏவுவதெல்லாம் அவர்களுடைய ஈருலக நலன்களை மாத்திரம் தான். அதேபோன்று தடுப்பதெல்லாம் ஈருலகத் தீங்குகளைத் தான். எனினும் அடியார்களுடைய உடலுக்குத் தீங்கேற்படுத்தும் விடயத்தைக் கூட அவன் கடமையாக்கவில்லை. இதனால் தான் நோயாளிக்கு தண்ணீரால் சுத்தம் செய்யும் சட்டத்தையும்,

நோயாளி, பிரயாணி ஆகியோருக்கு நோன்பையும் தளர்த்தி உள்ளான்.

நபி (ஸல்) அவர்களிடம் மார்க்கத்தில் எந்த வழிமுறை அல்லாஹ்விற்கு மிக விருப்பமானது? எனக் கேட்கப்பட்டது. சகிப்புத் தன்மையுள்ள நேரிய வழியாகும் எனக் கூறினார்கள். மற்றுமொரு நபிமொழியில் "நான் நேரிய சகிப்புத்தன்மை கொண்ட மார்க்கத்தைக் கொடுத்து அனுப்பப்பட்டுள்ளேன்" என இடம்பெற்றுள்ளது.[1]

ஒரு முதியவர் தம் இரண்டு புதல்வர்(கள் தம்மைத் தோள்களில் தாங்கிக் கொண்டிருக்க, அவர்)களிடையே தொங்கியபடி கால்கள் பூமியில் இழுபட வந்து கொண்டிருந்ததைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், 'இவருக்கு என்ன நேர்ந்தது?" என்று கேட்டார்கள். '(கஃபா வரை) நடந்து செல்வதாக இவர் நேர்ச்சை செய்திருக்கிறார்!" என்று மக்கள் கூறினார்கள், நபி(ஸல்) அவர்கள் 'இவர்தம்மை இவ்விதம் வேதனைப்படுத்திக்கொள்வது அல்லாஹ்வுக்குத் தேவையற்றது!" என்று கூறிவிட்டு, அவரை வாகனத்தில் ஏறிச் செல்லுமாறும் உத்தரவிட்டார்கள்.[2]

1. அறிவிப்பவர் : அஇஷா (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (2107). இதே செய்தி ஜாபிர் (ரலி), அபூ உமாமா (ரலி) போன்றோர் வாயிலாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது. அதன் அறிவிப்பாளர் தொடர்கள் பலவீனமானவை. பலதரப்பட்ட அறிவிப்புக்களால் ஹஸன் எனும் தரத்தில் வைக்க முடியும்.

2.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (1865), முஸ்லிம் (1642).

## ஹதீஸ் 33

### இஸ்லாத்தில் நீதித்துறை

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ:

"لَوْ يُعْطَى النَّاسُ بِدَعْوَاهُمْ، لَادَّعَى رِجَالٌ أَمْوَالَ قَوْمٍ وَدِمَاءَهُمْ لَكِنَّ الْبَيِّنَةَ عَلَى الْمُدَّعِي وَالْيَمِينَ عَلَى مَنْ أَنْكَرَ".

حَدِيثٌ حَسَنٌ، رَوَاهُ الْبَيْهَقِيُّ وَغَيْرُهُ هَكَذَا. وَبَعْضُهُ فِي "الصَّحِيحَيْنِ "

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* **மக்கள், தம்முடையவை என உரிமை கொண்டாடுவதையெல்லாம் வழங்குவதாக இருந்தால் அவர்கள் அடுத்தவர்களின் செல்வத்தையும் உயிரையும் (இரத்தத்தையும்) கோருவார்கள். உரிமை கொண்டாடியவர் அதற்கான சான்றை நிரூபிக்க வேண்டும். அதனை மறுப்பவர் மீது சத்தியம் செய்வது கடமையாகும்.**

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : பைஹகீ (21243), இதன் சில பகுதி புஹாரி (4552), முஸ்லிமில் (1711) இடம்பெற்றுள்ளது.*

**விரிவுரை :**

*இந்நபிமொழியின் மூல வார்த்தை : இப்னு ஜுரைஜ் - இப்னு அபீ முலைக்கா - இப்னு அப்பாஸ் (ரலி) எனும் அறிவிப்பாளர் தொடருடன் புஹாரி, முஸ்லிமில் பின்வரும் வார்த்தையில் இடம்பெற்றுள்ளது : "மக்கள் தம்முடையவை என உரிமை கொண்டாடுவதையெல்லாம் வழங்குவதாக இருந்தால் அவர்கள் அடுத்தவர்களின் செல்வத்தையும் உயிரையும் கோருவார்கள். எனினும் பிரதிவாதி (மறுப்பதாயின்) சத்தியம் செய்வது அவசியமாகும்" (புஹாரி (4552), முஸ்லிம் (1711).)*

*இமாம் நவவீ இங்கு கொண்டுவந்துள்ள வார்த்தைப் பிரயோகம் ஏற்கனவே இமாம் இப்னுஸ் ஸலாஹ் அவர்கள் தனது "அல்அஹாதீஸுல் குல்லியாத்" எனும் நூலில் கூறிவிட்டு "இமாம் பைஹகி இதனை ஹஸன் தரத்திலுள்ள அறிவிப்பாளர் தொடருடன் அறிவித்துள்ளார்" எனக் கூறியுள்ளார்கள்.*

நபி (ஸல்) அவர்கள் "உரிமை கோருபவருக்கு சாட்சியும், மறுக்கும் பிரதிவாதிக்கு சத்தியமும் அவசியமாகும்" எனக் கூறியதாக இமாம்களான அஹ்மத், அபூ உபைத் ஆகியோர் ஆதாரமாகக் காட்டியுள்ளனர். இவ்வார்த்தை ஸஹீஹான, ஆதாரமாகக் கொள்ள முடியுமானது என்பதையே இது உணர்த்துகின்றது.

**இதே கருத்தில் பல நபிமொழிகள் உள்ளன :**

அஷ்அஸ் இப்னு கைஸ் (ரலி) கூறினார்கள் : எனக்கும் இன்னொரு மனிதருக்குமிடையே ஒரு கிணற்றின் விடயத்தில் தகராறு இருந்து வந்தது. எனவே, நாங்கள் அல்லாஹ்வின் தூதரிடம் (எங்கள்) வழக்கைத் தாக்கல் செய்தோம். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'நீ இரண்டு சாட்சிகளைக் கொண்டு வர வேண்டும்; அல்லது (பிரதிவாதியான) அவர் (குற்றத்தை மறுத்து) சத்தியம் செய்ய வேண்டும்" என்று கூறினார்கள். அதற்கு நான், 'அப்படியென்றால் அவர் (பொய்) சத்தியம் செய்வாரே, (பொய் சத்தியம் செய்கிறோமே என்று) கவலைப்பட மாட்டாரே" என்று கூறினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஒரு செல்வத்தை அடைந்து கொள்வதற்காகப் பொய்சத்தியம் செய்கிறவர் (மறுமையில்) தன் மீது அல்லாஹ் கோபம் கொண்டிருக்கும் நிலையில் அவனைச் சந்திப்பார்" என்று கூறினார்கள். பிறகு, இந்த நபிவாக்கை உறுதிப்படுத்தி அல்லாஹ் (தன் வேதத்தில்) வசனம் ஒன்றை அருளினான்" என்று கூறிவிட்டு, "நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் உடன்படிக்கையையும், அவர்களது சத்தியங்களையும் அற்ப விலைக்கு விற்கின்றார்களோ, அவர்களுக்கு மறுமையில் யாதொரு பங்குமில்லை, மறுமை நாளில் அல்லாஹ் அவர்களுடன் பேசவோ, அவர்களைப் பார்க்கவோ மாட்டான், அவர்களைப் பரிசுத்தப் படுத்தவும் மாட்டான். இன்னும் அவர்களுக்கு நோவினை தரும் வேதனையும் உண்டு" (ஆல இம்ரான் : 77) என்ற வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.[1]

இமாம் இப்னுல் முன்திர் கூறுகின்றார் : வாதிடுவோருக்கு சாட்சியமும், (பிரதிவாதியாக) மறுப்பவருற்கு சத்தியமும் அவசியம் என்ற விடயத்தில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துள்ளனர். வாதிடுபவர் தனது உரிமையைப் பெற சாட்சியம் அவசியமாகும். அதனை வைத்தே தீர்ப்பளிக்கப்படும். அதேபோன்று குற்றம் சுமத்தப்பட்ட பிரதிவாதி

1.நூல் : புஹாரி (2515), முஸ்லிம் (138).

சத்தியம் செய்வதன் மூலமே நிரபராதி ஆகலாம் என்பதே மேற்கண்ட வசனங்களினதும் அர்த்தமாகும் எனவும் இமாம் இப்னுல் முன்திர் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

**"உரிமை கொண்டாடியவர் அதற்கான சான்றை நிரூபிக்க வேண்டும். அதனை மறுப்பவர் மீது சத்தியம் செய்வது கடமையாகும்"**

உரிமை கோருபவருக்கு ஆதாரமும், மறுப்பவருக்கு சத்தியமும் எனும் சட்டம் தான் வாதாடிய உரிமையை மறுக்கும் ஒருவர் இருந்தால் தான் அவசியமாகும். அவ்வாறில்லாமல் தனது உரிமையை மறுக்கும் பிரதிவாதி யாரும் இல்லாவிடில் தகுந்த ஆதாரத்துடன் தனது உரிமையை வாதிட்டால் அவருக்கே அது வழங்கப்பட்டு விடும். அங்கு சத்தியத்திற்கு அவசியமிருக்காது. அதனால்தான் இந்நபிமொழியில் ஆரம்பத்தில் "மக்கள், தம்முடையவை என உரிமை கொண்டாடுவதையெல்லாம் வழங்குவதாக இருந்தால் அவர்கள் அடுத்தவர்களின் செல்வத்தையும் உயிரையும் (இரத்தத்தையும்) கோருவார்கள்." எனக் கூறியுள்ளார்கள். இதற்கு சில உதாரணங்கள் சான்று பகர்கின்றன :

**1.** கண்டெடுக்கப்பட்ட பொருள் : உரிமையாளர் உரிய அடையாளத்தைக் கூறினால் சாட்சியமின்றியே அவரிடம் அது ஒப்படைக்கப்பட்டு விடும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் அவ்வாறு கொடுப்பது கடமையா? இல்லையா? என்பதில் இரு கருத்துக்கள் உள்ளன. பெரும்பாலும் உண்மைதான் கூறுகின்றான் என்றிருந்தால் கொடுக்கலாம். ஆனால் கடமையில்லை என இமாம்களான அபூ ஹனீபா மற்றும் ஷாபிஈ ஆகியோரும், உரிய அடையாளத்தைக் கூறினால் கொடுப்பது கடமை என இமாம்களான மாலிக், அஹ்மத் ஆகியோரும் கூறியுள்ளனர்.

**2.** அறப்போரில் கிடைக்கும் பொருட்கள் : ஒருவர் அதில் ஒரு பகுதி தன்னுடையது என்றும், காபிர்கள் அதனை அபகரித்து விட்டார்கள் என்றும் வாதாடினால் உரிய ஆதாரத்தை நிரூபிக்கும் பட்சத்தில் (மறுதரப்புச் சத்தியமின்றி) அவரிடமே அதனை ஒப்படைக்கப்படும். இது பற்றி இமாம் அஹ்மதிடம் : அதற்கு ஆதாரம் அவசியமா? என வினவப்பட்ட போது : "ஆம், அது தன்னுடையதுதான் என்பதற்கான ஆதாரம் அவசியமாகும். அதைத் தலைவர் அறிந்து கொண்டால் உரியவரிடமே அதை ஒப்படைத்து விட வேண்டும்" எனக் கூறினார்கள்.

ரபீஃ பின் அமீலா (ரஹ்) கூறுகின்றார் : “ஐனுத் தம்ரு” எனும் இடத்தில் எனது சகோதரரின் குதிரையொன்று தப்பிச் சென்றது. அதனை ஸஃத் (ரலி) அவர்களுடைய குதிரைத் தொழுவத்தில் நிற்கக் கண்டு இது எனது குதிரை என்றார். அப்போது ஸஃத் (ரலி) உன்னிடம் ஆதாரம் உண்டா? எனக் கேட்க, (எனது சகோதரர் :) “இல்லை, எனினும் நான் அதை அழைக்கும் போது அது கனைக்கும்” என்றார். அவ்வாறே அவர் அழைத்ததும் அதுவும் கனைத்தது. ஸஃத் (ரலி) அவர்கள் அக்குதிரையை அவரிடமே ஒப்படைத்து விட்டார்கள்.

இச்சம்பவத்தில் அக்குதிரை ஒன்றோ எதிரிகளிடமிருந்து முஸ்லிம்கள் கைப்பற்றி (கவர்னர் ஸஃத் (ரலி) அவர்களிடம்) ஒப்படைத்திருக்கலாம். அல்லது வழிதவறிய குதிரையாக அறியப்பட்டு அதுபோன்ற குதிரைகள் அடைக்கப் படும் இடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம். அதனடிப்படையில் இது கண்டெடுக்கப்பட்ட பொருளாகப் பார்க்கப்படும்.

**3.** அபகரிக்கப்பட்ட பொருள் : ஆட்சியாளர்கள் அநீதமிழைத்து அபகரித்த பொருளை பொதுநிதியிலிருந்து மீட்டுக் கேட்டால் ஆதாரம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் (சத்தியமின்றி) வழங்கப்படும். உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அநீதியாக அபகரிக்கப்பட்ட பொருட்களை உரிமையாளர்களுக்கு உறுதியான சாட்சியின்றியே திருப்பிக் கொடுத்து விடுவார்கள். இலகுவான சாட்சியுடனே போதுமாக்கிக் கொள்வார்கள். அநீதியிழைக்கப்பட்டவரின் முகத்தைப் பார்த்து அறிந்து கொண்டால் கொடுத்து விடுவார்கள். சாட்சியை உறுதிப்படுத்துமாறு சிரமப்படுத்த மாட்டார்கள். ஏனெனில் தனக்கு முன்னால் வந்த ஆட்சியாளர் களின் கடுமையான அநீதியை அறிந்து வைத்திருந்தார்கள். அபகரிக்கப்பட்ட உடைமைகளை மீளக் கொடுப்பதிலேயே இராக் நாட்டின் செல்வங்களைக் கரைத்து, தலைநகர் ஷாமில் இருந்தும் எடுத்து வரப்பட்டது.

கொள்ளையர், திருடர்களிடம் இருக்கும் அபகரிக்கப்பட்ட சொத்துக்களை கண்டெடுக்கப்பட்ட பொருளைப் போன்றே உரியவர்கள் அடையாளத்தைக் கூறினாலே போதுமானதென எமது மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் கூறியுள்ளனர். இதனை இமாம் அஹ்மதின் கருத்திலிருந்து வெளிப்படையாக விளங்குவதாக காழீ அபூ யஃலா தனது கருத்து வேற்றுமை பற்றிய நூலில் கூறியுள்ளார்.

# ஹதீஸ் 34

## தீமையைத் தடுத்தல்

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ:

"مَنْ رَأَى مِنْكُمْ مُنْكَرًا فَلْيُغَيِّرْهُ بِيَدِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِلِسَانِهِ، فَإِنْ لَمْ يَسْتَطِعْ فَبِقَلْبِهِ، وَذَلِكَ أَضْعَفُ الْإِيمَانِ." رَوَاهُ مُسْلِمٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***உங்களில் எவர் ஒரு தீங்கைக் காண்கிறாரோ அவர் அதைத் தனது கரங்களால் தடுக்கட்டும். அவரால் அது முடியவில்லையென்றால் அதை அவர் தனது நாவால் தடுக்கட்டும். அதையும் அவரால் செய்ய முடியவில்லையென்றால் அதை அவர் தனது மனதால் வெறுக்கட்டும். இதுதான் நம்பிக்கையின் (ஈமானின்) மிகவும் பலவீனமான நிலையாகும்.***

*அறிவிப்பவர் : அபூஸஈத் அல் குத்ரீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (49).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி அபூ ஸஈத் அல்குத்ரி (ரலி) அவர்களிடமிருந்து தாரிக் பின் ஷிஹாப், ரஜாஃ பின் ரபீஆ ஆகிய இருவர் வாயிலாக இமாம் முஸ்லிம் பதிவு செய்துள்ளார்கள். அதில் தாரிக் என்பவருடைய அறிவிப்பில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : பெருநாள் தினத்தில் தொழுகைக்கு முன்னர் குத்பாவை முதலில் ஆரம்பித்தவர் மர்வான் பின் ஹகம் ஆவார். ஒரு மனிதர் எழுந்து குத்பாவிற்கு முன் தொழுகை நடத்தப்பட வேண்டும் எனக் கூறினார். அதற்கு மர்வான் : அப்படியானால் இங்கு உபதேசம் விடப்பட வேண்டியேற்படும் எனக் கூறினார். (மர்வானின் அச்செயலைத் தடுத்த அம்மனிதரைப் பார்த்து) அபூ ஸஈத் (ரலி) : “இந்த நபரோ தனக்குரிய கடமையைச் செய்து விட்டார்” என்று கூறி விட்டு, பின்பு இந்த நபிமொழியை அறிவித்தார்கள்.*

**இதன் கருத்தில் வேறு நபிமொழிகளும் உள்ளன :**

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :** எனக்கு முந்தைய சமுதாயத்தார் மத்தியில் அல்லாஹ் அனுப்பிய ஒவ்வோர் இறைத் தூதருக்கும் அவருடைய சமுதாயத்திலேயே சிறப்பு உதவியாளர்களும் நண்பர்களும் இல்லாமல் இருந்ததில்லை. அவர்கள் அந்த இறைத்தூதரின் வழிமுறையைக் கடைப் பிடிப்பார்கள்; அவரது உத்தரவைப் பின்பற்றி நடப்பார்கள். அந்தத் தோழர்களுக்கு பிறகு சிலர் வருவார்கள். அவர்கள் தாம் செய்யாதவற்றைச் சொல்வார்கள். தமக்கு கட்டளையிடப்படாதவற்றைச் செய்வார்கள். ஆகவே, யார் இ(த்தகைய) வர்களுடன் தமது கரத்தால் போராடுவாரோ அவர் இறைநம்பிக்கையாளர் ஆவார். யார் இவர்களுடன் தமது உள்ளத்தால் போராடுவாரோ அவரும் இறைநம்பிகையாளர்தாம். இவற்றுக்கப்பால் இறை நம்பிக்கை என்பது கடுகளவு கூட கிடையாது.[1]

தீமைகளை சக்திக்குட்பட்டவாறு தடுக்க வேண்டும். அவற்றை உள்ளத்தால் வெறுப்பது அவசியமாகும். அவ்வாறு வெறுக்காதவரின் ஈமான் உள்ளத்திலிருந்து நீங்கி விட்டதென்பதையே இந்நபிமொழிகள் அறிவிக்கின்றன.

நன்மையை ஏவித் தீமையைத் தடுக்காதவன் அழிந்து விட்டான் என ஒரு நபர் கூறிக் கொண்டிருப்பதை இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் செவிமடுத்தார்கள். அப்போது நன்மை, தீமைகளை உள்ளத்தால் அறியாதவனும் அழிந்த விட்டான் எனக் கூறினார்கள். நன்மை, தீமைகளை அறிவது அனைவர் மீதும் கடமையாகும். அவ்வாறு அறியாதவர் அழிந்து விட்டார் என்பதையே சுட்டிக் காட்டுகின்றார்கள்.

நாவினாலும், கையினாலும் தடுப்பது சக்திக்கேற்றவாறே கடமையாகும். “ஒரு தீமையைக் கண்டு அதனைத் தான் உள்ளத்தால் வெறுப்பதாக அல்லாஹ்விடம் அறிவிப்பதைத் தவிர்த்து வேறேதும் செய்ய முடியாத ஒரு காலத்தை நீங்கள் நெருங்கின்றீர்கள்” என இப்னு மஸ்ஊத் (ரலி) கூறுகின்றார்கள்.

ஒரு பாவத்தைக் கண்டு அதனைத் தனது கரத்தினாலும், நாவினாலும் தடுக்க முடியாத பட்சத்தில் உள்ளத்தால் வெறுத்தால் அவர் அத்தீமையில்

1.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (50).

பங்கெடுக் காதவரைப் போன்றவராவார். அதனைப் பொருந்திய நிலையில் அதற்கு சமூகமளிக்காவிட்டால் (பொருந்தியதன் காரணமாக) அதற்கு சமூகமளித்து, தடுக்க சக்தியிருந்தும் தடுக்காதவரைப் போன்றாவார். ஏனெனில் பாவங்களைப் பொருந்திக் கொள்வது மிக மோசமான ஹராமாகும். அதன் விளைவாக உள்ளதால் பாவத்தை வெறுக்கும் நிலையும் தவறிவிடுகின்றது. அது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் கடமையாகும். எச்சந்தர்ப்பத்திலும் அது தளர மாட்டாது.

எனவே உள்ளத்தால் வெறுப்பது ஒரு முஸ்லிமுக்கு அனைத்து நிலைகளிலும் கடமையானது. ஆனால் கரத்தினால், நாவினால் தடுப்பதானது சக்திக்குட் பட்டவாறாகும்.[1]

**"இதுதான் ஈமானின் அடிநிலை"**

என உள்ளத்தால் வெறுப்பவரைப் பார்த்து நபியவர்கள் கூறியிருப்பது நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதும் ஈமானின் ஒரு பகுதி என்பதை உணர்த்துகின்றது. மேலும் ஈமானின் ஒரு விடயத்தை செய்ய சக்தி பெற்று அதைச் செய்தவர் முடியாமல் விட்டவரை விடச் சிறந்தவர் என்பதையும் அறிவிக்கின்றது. பின்வரும் நபிமொழியும் இதற்கு சான்றாகவுள்ளது : "பெண்கள் விடயத்தில் அவளுடைய மார்க்கக் குறைபாடு என்னவெனில் அவள் சில நாட்கள் தொழாமல் இருப்பதாகும்".[2] அதாவது அவளுடைய மாதவிடாய்க்காலத்தில் தொழுகையை விட்டும் தடுக்கப்பட்டிருந்தாலும் அதனையும் நபியவர்கள் அவளது மார்க்கத்தில் ஒரு குறையாகவே ஆக்கியுள்ளார்கள். எனவே ஒரு கடமையைச் செய்ய சக்தி பெற்று அதைச் செய்தவர் சலுகை இருந்து, சக்தியில்லாததால் விட்டவரை விடச்

---

*1.இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) கூறுகின்றார் : உள்ளத்தால் வெறுப்பதானது இது பாவம் என்பதை ஏற்று அதனை வெறுப்பதாகும். இது ஏற்பட்டால் அவனது உள்ளத்தில் ஈமான் உருவாகி விடுகின்றது. நன்மையை நன்மையாக ஏற்று, பாவத்தை வெறுக்கும் நிலையை உள்ளம் இழந்தால் ஈமான் நீங்கி விடுகின்றது" (இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம் 1/272).*

*(இந்நூலை சுருக்கியவர் கூறுகின்றார் :) நான் கூறுகின்றேன் : இது பாவங்கள் அதிகரித்து தடுப்போர் குறைந்துள்ள தற்காலத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டிய மிக முக்கியமான ஓர் அம்சமாகும். ஏனெனில் கரத்தால், நாவால் தடுப்பதிலிருந்து சிலவேளை மனிதன் விடுவிக்கப்படலாம். ஆனால் உள்ளத்தால் வெறுப்பதில் எந்த முஸ்லிமுக்கும் விடுவதற்கான சலுகையில்லை. அதனை விட்டவருடைய ஈமான் உள்ளத்திலிருந்து பிரியும் அபாயம் உள்ளது. எனவே ஒரு முஸ்லிம் தற்செயலாகத் தீமையில் விழுந்தாலும், அல்லது அதில் ஈடுபடுபவர்களுடன் பங்கெடுத்தாலும் உள்ளத்தால் அதனை வெறுப்பது கடமையாகும்.*

*2.அறிவிப்பவர்கள் : இப்னு உமர் (ரலி), அபூ ஹுரைரா (ரலி), அபூ ஸஈத் அல்குத்ரி (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (7980).*

சிறந்தவர் என்பதையே இது அறிவிக்கின்றது. அல்லாஹ் மிக்க அறிந்தவன்.

**“உங்களில் ஒருவர் தீங்கைக் கண்டால்”**

எனும் வார்த்தை கண்களால் கண்டால் தடுப்பதையே குறிக்கின்றது. தான் காணாமல் வேறு விதத்தில் அறிந்து கொண்டால் அப்போது அதில் தலையிட மாட்டார். சந்தேகத்திற்கிடமான, மறைவாக இருப்பதைத் துருவி ஆராய மாட்டார் என்பதே இமாம் அஹ்மத் அவர்களது அதிக அறிவிப்புக்களில் உள்ளது.

மற்றுமொரு அறிவிப்பில் ''உறுதியாக இருந்தால் மறைக்கப்பட்டிருப் பதையும் வெளிப்படுத்துவார்'' என இமாமவர்கள் கூறியுள்ளார்கள். தடுக்கப்பட்ட இசைக் கருவிகளின், பாடல்களின் ஓசை கேட்டால் அதனைத் தடுக்க வேண்டும். ஏனெனில் அவர் அத்தீமை நடப்பதை உறுதிப்படுத்தியதுடன் இடத்தையும் அறிந்து கொண்டார். எனவே அவர் அத்தீமையைக் கண்டவரைப் போன்றாவார். இதனை இமாம் அஹ்மத் குறித்துக் காட்டிவிட்டு ''அவ்விடத்தை அறியாதிருந்தால் குற்றமேதும் இல்லை'' என்றும் கூறியுள்ளார்கள்.

கூட்டாகக் குற்றம் நடக்கும் இடத்தை அறிந்து, அங்கு சுவரேறிக் குதித்துச் செல்வதை இமாம் ஸௌரீ போன்ற அறிஞர்கள் தடுத்துள்ளார்கள். அதனை தடை செய்யப்பட்டுள்ள உளவு பார்த்தலில் இணைத்துள்ளனர். இன்ன நபருடைய தாடியிலிருந்து மதுச் சொட்டு வடிகின்றது என இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் கூறப்பட்ட போது வேவு பார்ப்பதை அல்லாஹ் எமக்குத் தடுத்துள்ளான் எனக் கூறினார்கள்.

காழீ அபூ யஃலா (ரஹ்) தனது ''அல்அஹ்காமுஸ் ஸுல்தானியா'' எனும் நூலில் பின்வருமாறு கூறுகின்றார்கள்: நம்பகமான ஒருவரின் தகவலின்படி ஓரிடத்தில் விபச்சாரம், கொலை போன்ற அத்துமீறும் குற்றச் செயல் இரகசியமாக நடக்கப் போவதாக இருந்தால் அல்லாஹ்வின் தடைகளை மீறும் அச்செயல் நடக்காதிருக்க அங்கு உளவு பார்க்கச் சென்று, அதனைத் தடுக்கும் நோக்கத்தில் மாத்திரமே உளவு பார்க்க அனுமதியுண்டு. அவ்வாறில்லாவிடில் உளவு பார்ப்பதோ, குற்றச் செயல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதோ ஆகாது.

நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதில் பல நோக்கங்கள் உள்ளன.

அதற்குரிய கூலியைப் பெற்றுக் கொள்ளுதல், விடுவதால் கிடைக்கும் தண்டனையை அஞ்சுதல், அல்லாஹ்வின் தடைகள் மீறப்படுவதையிட்டு கோபப்படல், விசுவாசிகளுக்கு நலவு நாடி, இரக்கம் காட்டி, தவறு செய்வதன் காரணமாக ஈருலகிலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவுள்ள தண்டனை மற்றும் அல்லாஹ்வின் கோபத்தில் வீழ்தல் போன்றவற்றை விட்டும் அவர்களைப் பாதுகாத்தல், மற்றும் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தி, மகத்துவப்படுத்தல், நேசித்தல் என பல நோக்கங்களுக்காக நன்மையை ஏவித் தீமையை தடுக்கும் பணி செய்யப்படுகின்றது.

எந்நிலையிலும் குற்றத்தைத் தடுக்கும் போது மென்மையைக் கடைபிடிப்பது அவசியமாகும். இமாம் அஹ்மத் கூறுகின்றார்: நன்மையை ஏவும் விடயத்தில் மக்களுக்கு உகந்தது மென்மையே தவிர கடினப் போக்கல்ல. பகிரங்கமாகப் பாவம் செய்பவனைத் தவிர. அவனுக்கு எவ்வித கண்ணியமும் இல்லை. இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களின் மாணவர்கள் தாம் வெறுக்கும் செயலைச் செய்யும் ஒரு கூட்டத்தைக் கடந்து செல்லும் போது “சற்றுப் பொறுங்கள், அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும், சற்றுப் பொறுங்கள், அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும்” எனக் கூறுவார்கள் என இமாம் அஹ்மத் கூறினார்கள்.

மேலும் கூறினார்கள் : மென்மையாகவும், பணிவுடனும் நன்மையை ஏவ வேண்டும். அப்போது தகாத வார்த்தை செவிமடுக்க நேர்ந்தால் கோபப் படலாகாது. அவ்வாறு கோபப்பட்டால் மார்க்கத்திற்காகவன்றி தான் மிகைக்க வேண்டும் என்பதற்காக கோபப்பட்டது போன்றாகிவிடும்.

# ஹதீஸ் 35

## இஸ்லாமிய சகோதரத்துவம்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ :

"لَا تَحَاسَدُوا، وَلَا تَنَاجَشُوا، وَلَا تَبَاغَضُوا، وَلَا تَدَابَرُوا، وَلَا يَبِعْ بَعْضُكُمْ عَلَى بَيْعِ بَعْضٍ، وَكُونُوا عِبَادَ اللهِ إِخْوَانًا. الْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ، لَا يَظْلِمُهُ، وَلَا يَخْذُلُهُ، وَلَا يَكْذِبُهُ، وَلَا يَحْقِرُهُ. التَّقْوَى هَاهُنَا - وَيُشِيرُ إِلَى صَدْرِهِ ثَلَاثَ مَرَّاتٍ. بِحَسْبِ امْرِئٍ مِنَ الشَّرِّ أَنْ يَحْقِرَ أَخَاهُ الْمُسْلِمَ. كُلُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ حَرَامٌ: دَمُهُ وَمَالُهُ وَعِرْضُهُ" رَوَاهُ مُسْلِمٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள். ஒருவருக்கொருவர் விலைகளை உயர்த்திக் கொள்ளாதீர்கள். ஒருவரையொருவர் வெறுக்காதீர்கள். ஒருவருக்கொருவர் துண்டித்துக் கொள்ளாதீர்கள். தனது சகோதரர்களுக்கு எதிராக வியாபாரம் செய்யவும் வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் சகோதரர்களாகி விடுங்கள். ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் சகோதரனாவான். ஆகவே அவருக்கு அநீதி இழைக்க மாட்டார். உதவி மறுக்க மாட்டார். ஒருவர் மற்றவரிடம் பொய்யுரைக்க மாட்டார். ஒருவரை ஒருவர் இழிவாகக் கருத மாட்டார். இறையச்சம் இங்குதான் எனத் தனது இதயத்தை மூன்று முறை தொட்டுக் காட்டினார்கள். தனது முஸ்லிம் சகோதரனை இழிவாகப் பார்ப்பதே ஒரு மனிதனுக்குப் பாவத்தால் போதுமானதாகும். ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அடுத்த முஸ்லிமின் உயிர், உடமை, மானம் அனைத்தும் ஹராமாகும்.***

*அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2564).*

**விரிவுரை :**

***“நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்”***

பொறாமை மனித இயல்புடன் பிணைக்கப்பட்டுள்ளது. அதாவது

மனிதன் எப்போதும் தன்னை யாராவது மிகைத்துவிடுவதை வெறுக்கின்றான்.[1]

**பொறாமை விடயத்தில் மக்கள் மூன்று வகைப்படுகின்றனர் :**

**01.** சொல், செயல் ரீதியாக அத்துமீறுவதன் மூலம், தான் பொறாமைப்படுபவனின் அருட்கொடை நீங்க முயற்சி செய்பவன். இது தான் மார்க்கத்தில் தடை செய்யப்பட்டு, வஞ்சிக்கப்பட்ட பொறாமையாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களுக்கு முன்னுள்ள சமுதாயத்தினரின் நோய் உங்கள் மத்தியிலும் ஊடுருவியுள்ளது : பொறாமை, குரோதமே அவையாகும். குரோதம்தான் அழிக்கக் கூடியது. அது அழிப்பது முடியையல்ல, மார்க்கத்தையாகும்.[2]

மேலும் நபியவர்கள் கூறினார்கள் : பொறாமையை உங்களுக்கு எச்சரிக்கிறேன். ஏனெனில் நெருப்பு விறகை உண்பது போன்று பொறாமை நன்மைகளை உண்டுவிடும். மற்றுமொரு அறிவிப்பில் விறகுக்குப் பதிலாக பயிர்கள் என இடம்பெற்றுள்ளது.[3]

**02.** பொறாமையின் படி செயற்படவோ, சொல், செயலால் தீங்கிழைக்கவோ நினைக்காதவர்கள். இவர்களுக்கு பாவம் ஏற்படமாட்டாதென ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறினார்கள்.

---

1. பொறாமை மனித உள்ளத்தில் விதைக்கப்பட்டுள்ள ஒன்றாகும். விசுவாசி அதனை மறைக்கின்றான். நயவஞ்சகன் வெளிப்படுத்துகின்றான். **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ)**

2. அறிவிப்பவர் : ஸுபைர் பின் அவ்வாம் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (1412), திர்மிதி (2510), இச்செய்தி பற்றி பல கருத்துக்கள் உள்ளன. இமாம் திர்மிதி அதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். எனினும் இதே செய்தி அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி) வாயிலாக தரமான அறிவிப்பாளர் வரிசையுடன் இடம்பெற்றுள்ளதாக இமாம் அல்முன்திரீ (ரஹ்) தனது “தர்கீப்” எனும் நூலில் கூறியுள்ளார்கள். “பிணங்கிக் கொள்வது தான் அழிக்கக் கூடியது” எனும் வார்த்தை வேறொரு நபிமொழியில் இடம்பெறும் ஆதாரப்பூர்வமான செய்தியாகும். அது பற்றி இந்நபிமொழியின் விரிவுரையில் கூறப்படும்.

3.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : அபூ தாவூத் (4903), இமாம் இராகீ தனது “தஃரீஜுல் இஹ்யா” நூலில் (1/149) : அபூ ஹுரைரா (ரலி) வாயிலாக அபூ தாவூத் இதனை அறிவித்துள்ளார்கள். இமாம் புஹாரி இதனை பலவீனமானது எனக் கூறியுள்ளார்கள். இதே செய்தி இப்னு மாஜாவில் அனஸ் (ரலி) வாயிலாக பலவீனமான அறிவிப்பாளர் தொடருடனும், தாரீஃகு பக்தாதில் “ஹஸன்” தரத்திலுள்ள அறிவிப்பாளர் தொடருடனும் இடம் பெற்றுள்ளது.

**இது இரு வகைப்படுகின்றது :**

*1.* தனது உள்ளத்தால் பொறாமையை அகற்ற முடியாத நிலை. இதன் மூலமாக அவருக்குப் பாவம் ஏற்படமாட்டாது.

*2.* சுய விருப்பத்துடன் உள்ளத்தில் எண்ணி, மீட்டிப் பார்த்து, தனது சகோதரனுக்குக் கிடைத்திருக்கும் அந்த அருட்கொடை நீங்க வேண்டுமென முழு மனதுடன் எதிர்பார்த்திருத்தல். இது அப்பாவத்தைச் செய்ய உறுதி கொள்வதற்கு ஒப்பானதாகும். இதற்காகத் தண்டனை வழங்கப்படுவதில் கருத்து வேறுபாடுள்ளது. எனினும் இதுபோன்ற நிலையில் இருப்பவன் வார்த்தை மூலமாவது தான் பொறாமைப்படுபவனுக்கு தீங்கு ஏற்படுத்தாமல் இருப்பது கடினமாகும். அப்போது அவன் பாவியாகின்றான்.

*03.* பிறருடைய அருட்கொடைகள் நீங்க பொறாமைப்படாமல் அதுபோன்று தனக்கும் கிடைக்க வேண்டுமென ஆசைப்படல். இது உலக விடயங்களாக இருந்தால் அதில் நலவேதுமில்லை. மார்க்க விடயமாக இருந்தால் வரவேற் கத்தக்கது. நபி (ஸல்) அவர்கள் அறப்போரில் உயிர்த் தியாகம் செய்வதை ஆசை வைத்துள்ளார்கள்.

'ஒருவருக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்தை அவர் நல்ல வழியில் செலவு செய்தல்; இன்னொருவருக்கு அல்லாஹ் அறிவு ஞானத்தை வழங்கி, அதற்கேற்ப அவர் தீர்ப்பு வழங்குபவராகவும் கற்றுக் கொடுப்பவராகவும் இருப்பது ஆகிய இரண்டு விடயங்களைத் தவிர வேறு எதிலும் பேராசை கொள்ளக் கூடாது''[1]

இதற்கு நபியவர்கள் உருவகத்திலே பொறாமை எனப் பெயரிட்டாலும் யதார்த்தத்தில் இது ஒரு ஆரோக்கியமான போட்டியாகவே உள்ளது.

*04.* உள்ளத்தில் பொறாமை ஏற்பட்டால் அதை நீக்க முயற்சிப்பதுடன், தான் பொறாமைப்பட்ட மனிதனுக்கு உபகாரம் செய்து, அவருக்காகப் பிரார்த்திப்பது, அவரது கீர்த்திகளை மக்கள் மத்தியில் பரவச் செய்து தனது பொறாமையை நீக்க முழு முயற்சி செய்தல். எந்தளவுக்கெனில் நிலைமை தலைகீழாக மாறி தன்னை விடச் சிறந்தவராக அந்த நபர் ஆகிவிடுகின்றார். இது ஈமானின் அதிஉயர் அந்தஸ்தில் உள்ளதாகும். இத்தகையவர் தான் விரும்புவதைத் தனது சகோதரனுக்கும் விரும்பக்கூடிய பரிபூரண முஃமினாவார்.

---

1 அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : புஹாரி (73), முஸ்லிம் (816) .

**"ஒருவருக்கொருவர் விலைகளை உயர்த்திக் கொள்ளாதீர்கள்."**

விலையுயர்த்துவதன் மூலம் விற்பனையாளருக்கு பயனளிக்கவோ, வாடிக்கையாளருக்கு தீங்கிழைக்கவோ ஒரு பொருளை வாங்க விரும்பாத மூன்றாம்தரப்பொருவர்அதன்விலையைஉயர்த்துவதேஇந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள "ப்ழ்ஸ்" என அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர்.

மேற்கண்டதை விட பரந்த ஓர் அர்த்தத்தையும் இங்கு தடை செய்யப்பட்ட "ப்ழ்ஸ்" என்பதற்கு வழங்கலாம். ஏனெனில் மொழி ரீதியாக "ப்ழ்ஸ்" என்பது தந்திரோபாயமாக ஒன்றைத் தூண்டுவதாகும். வேட்டைக்காரனுக்கு அரபு மொழியில் ناصب என்பது போல ناجش என்றும் கூறப்படுகின்றது. ஏனெனில் அவன் பல தந்திரங்களைக் கையாண்டே வேட்டையாடுகின்றான். அதன்படி "நீங்கள் ஒருவருக்கொருவர் தந்திரம், மோசடியில் ஈடுபட வேண்டாம்" எனும் கருத்தே பொருத்தமானது.

இக்கருத்தின் படி "ப்ழ்ஸ்" என்பதில் அனைத்துவித மோசடி வியாபாரங்களும் உள்ளடங்குகின்றன.

**"ஒருவரையொருவர் வெறுக்காதீர்கள்"**

அல்லாஹ்வுக்காக அன்றி மனோஇச்சைப் பிரகாரம் முஸ்லிம்கள் தமக்கு மத்தியில் வெறுத்துக் கொள்ள வேண்டாமெனத் தடுத்துள்ளார்கள். ஏனெனில் முஸ்லிம்களை அல்லாஹ் சகோதரர்களாகவே ஆக்கியுள்ளான். சகோதரர்கள் தமக்கு மத்தியில் வெறுக்காமல் நேசமாகவே இருப்பார்கள். அடியார்களுடைய உள்ளங்களில் இணைப்பை ஏற்படுத்தியதை அல்லாஹ் ஓர் அருட்கொடையாகக் கூறுகின்றான் : "நீங்கள் பகைவர்களாக இருந்த போது உங்களது உள்ளங்களுக் கிடையில் இணைப்பை ஏற்படுத்தி, அவனது அருளினால் நீங்கள் சகோதரர்களாக மாறியதையும் நினைவு கூருங்கள்" (ஆல இம்ரான் : 103).

இதனால் தான் குரோதத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் கோல் சொல்வதைத் தடுத்து, மக்களுக்கு மத்தியில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதை அல்லாஹ் வலியுறுத்துகின்றான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தொழுகை, நோன்பு, ஸகாத் ஆகியவற்றை விட சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? என நபியவர்கள் வினவ, நபித்தோழர்களும் "ஆம்" எனக் கூறினார்கள். அப்போது நபியவர்கள் : பிணங்கிக் கொள்வோரை

இணக்கப்படுத்துவதாகும். ஏனெனில் பிணங்கிக் கொள்வோரை மேலும் குழப்புவது தான் (நன்மைகளை) அழிக்கக் கூடியதாகும் என்றார்கள்.[1]

அல்லாஹ்வுக்காகப் பகைப்பது இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள தடையில் உள்ளடங்கமாட்டாது. மாறாக அது ஈமானின் அறுந்து போகாத பலமான கயிறாகும்.

மார்க்க விடயங்களில் அதிக கருத்து வேறுபாடுகளும், பிரிவினைகளும் தோன்றியதன் விளைவாக மக்களுக்கு மத்தியில் பகைமையும், தூற்றிக் கொள்வதும் அதிகரித்து விட்டது. ஒவ்வொருவரும் தாம் அல்லாஹ்வுக்காக பகைத்துக் கொள்வதாகவே காட்டிக் கொள்வார்கள். உண்மையில் சிலவேளை பகைப்பதற்கான தகுந்த காரணமிருக்கும். சிலவேளை தகுந்த காரணமின்றி எதற்காகப் பகைக்கிறோம் என்ற காரணத்தை கண்டறிவதில் அலட்சியமாகவும், மனோ இச்சைப்படியும் நடக்கக் கூடியவராக இருக்கலாம். எனவே ஒரு முஃமின் இவ்விடயத்தில் தனக்குத் தானே உபதேசித்து, மிகவும் பேணுதல் எடுத்துக் கொள்வது அவசியமாகும். தடுக்கப்பட்ட பகையில் வீழ்ந்திடாமலிருக்க தெளிவில்லாத சிக்கலான விடயத்தில் தலையிடாமல் இருப்பது சிறந்ததாகும்.

**“ஒருவருக்கொருவர் துண்டித்துக் கொள்ளாதீர்கள்.”**

இமாம் அபூ உபைத் கூறுகின்றார் : تدابر என்பது துண்டித்து வெறுத்து நடப்பதாகும். ஒரு மனிதன் தனது தோழனுக்கு முகம் காட்டாமல் புறமுதுகிட்டுச் செல்வதிலிருந்து எடுக்கப்பட்ட கருத்தே இதுவாகும். இது துண்டித்து நடப்பதைக் குறிக்கின்றது.

நபி (ஸல்) கூறினார்கள் : “ஒரு முஸ்லிம் தனது சகோதரனை மூன்று நாட்களுக்கு மேல் வெறுப்பது ஹலாலாகமாட்டாது. இருவரும் சந்திக்கும் போது இருவருமே புறக்கணித்துச் செல்கின்றனர். முதலில் ஸலாத்தை ஆரம்பிப்பவரே இருவரில் சிறந்தவராவார்”.[2]

மேலும் கூறினார்கள் : தனது சகோதரனை ஒரு வருடம் வெறுப்பவன் அவனது இரத்தத்தை ஓட்டியதற்குச் சமனாகும்.[3]

---

*1.அறிவிப்பவர் : அபுத் தர்தாஃ (ரலி), ஆதாரம் : அஹ்மத் (27508), அபூ தாவூத் (4919), திர்மிதி (509), இது ஸஹீஹ் என திர்மிதீ கூறியுள்ளார்கள்.*

*2.அறிவிப்பவர் : அபூ அய்யூப் (ரலி), ஆதாரம் : புஹாரி (6077), முஸ்லிம் (2560).*

*3.அறிவிப்பவர் : அபூ கிராஷ் அஸ்ஸுலமீ (ரலி), ஆதாரம் : அபூ தாவூத் (4915), இமாம் இராகீ தனது “தஃரீஜுல்*

உலக விடயங்களுக்காக இவ்வாறு துண்டிப்பதே கூடாத செயலாகும். ஆனால் மார்க்கத்திற்காக மூன்று நாட்களுக்கு மேல் வெறுக்கலாம். இதனை இமாம் அஹ்மத் குறித்துக்காட்டி தபூக் போரின் போது பின்வாங்கிய அந்த மூவருடைய சம்பவத்தை இதற்கு ஆதாரமாகக் கூறியுள்ளார்கள்.(1)

ஒழுக்கமூட்டவும் நெறிப்படுத்தவும் தந்தை மகனையும், கணவன் மனைவியையும் பகைத்துக் கொள்வதில் மூன்று நாட்களை விட அதிகப்படுத்தலாம். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் தனது மனைவியரை ஒரு மாதம் வெறுத்துள்ளார்கள் என இமாம் கத்தாபி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

**“தனது சகோதரர்களுக்கு எதிராக வியாபாரம் செய்யவும் வேண்டாம்”**

அதாவது ஒரு பொருளை விற்றதன் பின் அவ்வியாபாரத்தை இரத்துச் செய்வதற்காக வாடிக்கையாளரிடம் மூன்றாம் நபர் தனது பொருளைக் குறைத்து விற்பனை செய்ய முற்படுவதே இதன் அர்த்தமாகும்.

***“அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் சகோதரர்களாகி விடுங்கள்”***

இது மேற்கூறப்பட்ட விடயங்களுக்கான காரணமாக நபியவர்கள் கூறியதாகும். பொறாமை, தந்திரோபாயம், பகைமை, துண்டித்து நடத்தல், பிற சகோதரனுக்கெதிராக வியாபாரம் செய்தல் போன்றவற்றைத் தவிர்ந்தால் சகோதரர்களாகி விடுவார்கள் என்பதை மேற்கண்ட செய்தி சுட்டிக் காட்டுகின்றது.

பொதுவாக இஸ்லாமிய சகோதரத்துவம் உருவாகும் வழிகளைக் கையாளுமாறு இந்நபிமொழியில் ஏவப்பட்டுள்ளது. ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளான ஸலாத்திற்குப் பதிலளித்தல், தும்மியவருக்காகப் பிரார்த்தித்தல், நோயாளியை நலம் விசாரித்தல், ஜனாஸாவை பின் தொடர்தல், அழைப்பிற்குப் பதிலளித்தல், சந்திக்கும் போது ஸலாத்தைக் கொண்டு ஆரம்பித்தல், மறைவிலும் நலவு நாடுதல் போன்றனவும் மேற்கண்ட வழிகளில் உள்ளடங்குகின்றன.

---

இஹ்யா” நூலில் (3/1265) : இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.

1. நூலாசிரியர் இதன் மூலம் நாடுவது என்னவெனில் பிணக்குகள், ஏச்சுக்கள் போன்ற உலகக் காரணங்களுக்காக மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்தலாகாது. பாவி, அல்லது பித்அத்வாதிகளை அவர்களது பாவம், பித்அத்திற்காக வெறுப்பவர்கள் மார்க்க நலனிற்காக மூன்று நாட்களுக்கு மேலும் வெறுக்கலாம், ஏனெனில் நபியவர்கள் தபூக் போரிலிருந்து பின்வாங்கிய அம்மூவருடன் 50 நாட்கள் பகைத்திருந்தார்கள்.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நீங்கள் அன்பளிப்புக்களை பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனெனில் அது உள்ளத்தில் இருக்கும் குரோதத்தைப் போக்கிவிடும்”.*[1] மற்றுமொரு அறிவிப்பில் : “அன்பளிப்புப் பரிமாறிக் கொள்ளுங்கள், நேசமுள்ளவர்கள் ஆகிவிடுவீர்கள்”. [2]

***“ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் சகோதரனாவான். ஆகவே அவருக்கு அநீதி இழைக்க மாட்டார். உதவி மறுக்க மாட்டார். ஒருவர் மற்றவரிடம் பொய்யுரைக்க மாட்டார். ஒருவரை ஒருவர் இழிவாகக் கருத மாட்டார்.”***

இது “விசுவாசிகள் அனைவரும் சகோதரர்களே. எனவே உங்கள் சகோதரர்களுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துங்கள்” (ஹுஜுராத்:10) எனும் இறைவசனத்திலிருந்து எடுக்கப்பட்ட செய்தியாகும். எனவே முஃமின்கள் சகோதரர்களாக இருந்தால் தமக்கு மத்தியில் உள்ளம் ஒன்றுபடக் கூடிய, இணக்கப்பாடு ஏற்படக்கூடிய விடயங்கள் ஏவப்பட்டுள்ளதுடன் உள்ளங்கள் பிரிந்து, கருத்து வேறுபடுவதைத் தடுக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் ஒரு சகோதரன் எப்போதும் தனது சகோதரனுக்கு நலவையே செய்வான். தீங்கைத் தடுப்பான். அவ்வாறான தீங்குகளில் பாரியது :

- அநீதி இழைத்தல்.
- ஒரு முஸ்லிம் தனது சகோதரனுக்கு உதவ மறுத்தல். ஏனெனில் முஸ்லிம் எப்போதும் தனது சகோதரனுக்கு உதவவே ஏவப்பட்டுள்ளான்.
- தனது சகோதரனிடம் பொய்யுரைத்தல். அவனிடம் உண்மை மாத்திரமே பேச வேண்டும். பொய்யுரைப்பது கூடாத செயலாகும்.
- தனது சகோதரனை இழிவாகக் கருதுதல். இது பெருமையால் உருவாகின்றது. தற்பெருமையுள்ளவன் தன்னைப் பூரணமானவனாகவும், பிறரைக் குறையாகவும் பார்த்து, அவர்களை இழிவாகவும், கீழ்த்தரமாகவும் கருதுவான். அவர்கள் உரிமைகளைப் பெறத்

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுுரைரா (ரலி), ஆதாரம் : திர்மிதி (2130), இதன் அறிவிப்பாளர் தொடரில் அபூ மஃஷர் அல்மதனீ என்பவர் இடம் பெறுகிறார். அவர் பலவீனமாதலால், அவர் தனித்து அறிவிக்கும் இச்செய்தியும் பலவீனமானதென இமாம் இப்னு ஹஜர் “அத்தல்கீஸுுல் ஹபீர்” எனும் நூலில் கூறியுள்ளார்கள் (3/80).*

*2.நூல் : இமாம் புஹாரியின் அல்அதபுல் முப்ரத் (594), இமாம் இப்னு ஹஜர் தனது அத்தல்கீஸில் (3/80) ஹஸன் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அதனை அஷ்ஷேக் அல்பானீ தனது “இர்வாஉல் கலீலில்” (1601) அதே கருத்தைக் கூறியுள்ளார்கள்.*

*தகுதியானவர்களாகவோ, அவர்களிடமிருந்து சத்தியம் வெளிப்பட்டால் ஏற்கத் தகுதியானவர்களா கவோ பெருமையுள்ளவன் கருத மாட்டான்.*

**“இறையச்சம் இங்குதான் என தனது இதயத்தை மூன்று முறை தொட்டுக் காட்டினார்கள்”**

*அல்லாஹ்விடத்தில் படைப்பினங்களின் மதிப்பு இறையச்சத்தை வைத்துத் தான் என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது. பலவீனம், வறுமை காரணமாக மக்கள் இழிவாகக் கருதும் எத்தனையோ மனிதர்கள் பெரும் செல்வந்தர்களை விட அல்லாஹ்விடம் அதிக மதிப்புள்ளவர்களாக உள்ளனர். ஏனெனில் மனிதர்களிடையே உள்ள தராதரம் இறையச்சத்தை வைத்துத்தான். அல்லாஹ் கூறுகின்றான் : “உங்களில் மிக பயபக்தியுடையோரே அல்லாஹ்விடத்தில் உங்களில் கண்ணியத்திற்குரியவராவார்” (ஹுஜுராத் :13).*

*ஒரு (பணக்கார) மனிதர் நபி (ஸல்) அவர்கள் அருகில் சென்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள் (தம் தோழர்களிடம்), 'இவரைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?” என்று கேட்டார்கள். தோழர்கள், 'இவர் பெண் கேட்டால் இவருக்கு மணமுடித்து வைக்கவும், இவர் பரிந்துரைத்தால் அதனை ஏற்கவும், இவர் பேசினால் செவிசாய்க்கப்படவும் தகுதியான மனிதர்” என்று கூறினர். பிறகு நபி (ஸல்) அவர்கள் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள். பிறகு, நபி (ஸல்) அவர்கள் அருகில் முஸ்லிம்களில் ஓர் ஏழை மனிதர் சென்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'இவரைக் குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?” என்று கேட்டார்கள். தோழர்கள், 'இவர் பெண் கேட்டால் இவருக்கு மணமுடித்து வைக்காமலும், இவர் பரிந்துரைத்தால் அது ஏற்கப்படாமலும், இவர் பேசினால் செவிதாழ்த்தப்படாமலும் இருக்கும் நிலையிலுள்ளவர்” என்று கூறினர். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'அவரைப் போன்ற (வசதி படைத்த)வர்கள் இந்தப் பூமி நிரம்ப இருந்தாலும் (அவர்கள் அனைவரையும் விட) இந்த ஏழையே மேலானவர்” எனக் கூறினார்கள்.[1]*

**“தனது முஸ்லிம் சகோதரனை இழிவாகப் பார்ப்பதே ஒரு மனிதனுக்கு பாவத்தால் போதுமானதாகும்”**

*ஏனெனில் தன்னிடமுள்ள பெருமையின் காரணமாகவே தனது சகோதரனை ஒருவன் இழிவாகப் பார்க்கிறான். பெருமை மிகத் தீய குணங்களில் ஒன்றாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “தனது*

*1.அறிவிப்பவர் : ஸஹ்ல் பின் ஸஃத் (ரலி), ஆதாரம் : புஹாரி (5091).*

உள்ளத்தில் அனுவளவேனும் பெருமையுள்ளவன் சுவனம் நுழைய மாட்டான்”.[1] மேலும் கூறினார்கள் : “கண்ணியம் எனது வேட்டியாகும். பெருமை எனது மேலங்கியாகும். அதில் யார் என்னுடன் மோத வருகின்றானோ அவனைத் தண்டிப்பேன்”.[2] படைப்பினங்களுக்குப் பொருந்தாத அல்லாஹ்வுக்கு மாத்திரமுள்ள பண்புகளில் அவனுடன் மோதுவதே பாவத்தால் அவனுக்குப் போதுமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “மக்கள் அழிந்து விட்டார்கள்” என யாராவது கூறினால் அவனே மிகப் பெரும் அழிவுக்குள்ளாகுபவன்”.[3] மக்களின் மார்க்கத்திலுள்ள மந்த நிலையை எண்ணிக் கவலைப்பட்டு இவ்வாறு கூறினால் பரவாயில்லை. தற்பெருமையுடனும், மக்களைத் தாழ்த்தியும் இவ்வாறு கூறுவதே தடுக்கப்பட்டுள்ளது என இமாம் மாலிக் (ரஹ்) கூறிய செய்தியை இமாம் அபூதாவூத் (ரஹ்) தனது ஸுனனில் பதிந்துள்ளார்கள்.

**“ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அடுத்த முஸ்லிமின் உயிர், உடமை, மானம் அனைத்தும் ஹராமாகும்”**

இது நபியவர்கள் பாரிய சபைகளில் உபதேசிக்கும் விடயங்களில் உள்ளவையாகும். இப்போதனையை நபியவர்கள் தனது இறுதி ஹஜ்ஜில் அரபா தினம், பெருநாள் தினம், அய்யாமுத் தஷ்ரீகின் இரண்டாம் நாள் (துல்ஹஜ் 12) ஆகிய மூன்று தினங்களிலும் நிகழ்த்தியுள்ளார்.

நபி (ஸல்) அவர்களுடன் தோழர்கள் ஒரு பயணத்தில் சென்று கொண்டிருக்கும் போது ஒருவர் தூங்கி விட்டார். அப்போது ஒரு நபர் தன்னுடன் ஒரு கயிற்றை எடுத்துச் சென்று அம்மனிதருக்கு அருகாமையில் சென்றார். அவர் இக்கயிற்றை எடுத்ததும் (பாம்பெனக் கருதி) திடுக்கிட்டார். உடனே நபி (ஸல்) அவர்கள் “எந்தவொரு முஸ்லிமும் இன்னொரு முஸ்லிமை அச்சுறுத்தலாகாது” எனக் கூறினார்கள்.[4]

மேலும் கூறினார்கள் : “நீங்கள் மூவர் இருந்தால் ஒருவரை விட்டுவிட்டு

1.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (91).

2. அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), அபூ ஸஈத் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2620).

3.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2623).

4.அறிவிப்பவர் : ஒரு நபித்தோழர் வாயிலாக அப்துர் ரஹ்மான் பின் அபீ லைலா (ரஹ்), ஆதாரம் : அபூதாவூத் (5004), அஷ்ஷேக் அல்பானி இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள் (ஸஹீஹுல் ஜாமிஃ 7658).

மற்றிருவரும் இரகசியம் பேச வேண்டாம். ஏனெனில் அது அந்த மூன்றாம் நபரைப் பாதித்து கவலைக்குள்ளாக்கும்''.[1]

மேற்கண்ட செய்திகள் ஒரு முஸ்லிமுக்கு தகுந்த காரணமின்றி சொல், செயல் எந்த விதத்திலும் எந்த நோவினையும் செய்ய முடியாதென்பதை உணர்த்துகின்றன.

''எவர்கள் நம்பிக்கையாளர்களான ஆண்களையும், நம்பிக்கையாளர்களான பெண்களையும் அவர்கள் செய்யாதவற்றிற்காக நோவினை செய்கின்றனரோ, நிச்சயமாக அவர்கள் அவதூற்றையும் தெளிவான பாவத்தையுமே சுமந்துள்ளனர்'' (அஹ்ஸாப் : 58).

அல்லாஹ் விசுவாசிகளை தமக்கு மத்தியில் இரக்கம் காட்டி கருணையுடன் இருப்பதற்காகவே சகோதரர்களாக ஆக்கியுள்ளான்.

உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) கூறினார்கள் : முஸ்லிம்களில் பெரியோரை தந்தையாகவும், சிறியோரை பிள்ளையாகவும், நடுத்தரமானவர்களை சகோதரனாகவும் நீ ஆக்கிக் கொள்;. இப்போது இந்த உறவுகளில் யாருக்கு நீ தீங்கிழைக்கப் போகிறாய்?

யஹ்யா பின் முஆத் அர்ராஸீ (ரஹ்) கூறினார்கள் : முஃமினைப் பற்றி உன்னிடம் மூன்று விடயங்கள் இருக்கட்டும்.

- நீ அவனுக்குப் பயனளிக்காவிட்டாலும் பரவாயில்லை. தீங்கிழைத்து விடாதே.
- நீ அவனை மகிழ்விக்காவிட்டாலும் பரவாயில்லை. கவலைப்படுத்தி விடாதே.
- நீ அவனைப் புகழா விட்டாலும் பரவாயில்லை. தூற்றி விடாதே.

1. அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : புஹாரி (6290), முஸ்லிம் (2184).

# ஹதீஸ் 36

## ஒருங்கிணைந்த நலவுகள்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ، عَنْ رَسُولِ اللهِ ﷺ، قَالَ:

"مَنْ نَفَّسَ عَنْ مُؤْمِنٍ كُرْبَةً مِنْ كُرَبِ الدُّنْيَا، نَفَّسَ اللهُ عَنْهُ كُرْبَةً مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ، وَمَنْ يَسَّرَ عَلَى مُعْسِرٍ، يَسَّرَ اللهُ عَلَيْهِ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، وَمَنْ سَتَرَ مُسْلِمًا، سَتَرَهُ اللهُ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، وَاللهُ فِي عَوْنِ الْعَبْدِ، مَا كَانَ الْعَبْدُ فِي عَوْنِ أَخِيهِ. وَمَنْ سَلَكَ طَرِيقًا يَلْتَمِسُ فِيهِ عِلْمًا، سَهَّلَ اللهُ لَهُ بِهِ طَرِيقًا إِلَى الْجَنَّةِ، وَمَا جَلَسَ قَوْمٌ فِي بَيْتٍ مِنْ بُيُوتِ اللهِ، يَتْلُونَ كِتَابَ اللهِ، وَيَتَدَارَسُونَهُ بَيْنَهُمْ، إِلَّا نَزَلَتْ عَلَيْهِمِ السَّكِينَةُ، وَغَشِيَتْهُمُ الرَّحْمَةُ، وَحَفَّتْهُمُ الْمَلَائِكَةُ، وَذَكَرَهُمُ اللهُ فِيمَنْ عِنْدَهُ.وَمَنْ بَطَّأَ بِهِ عَمَلُهُ، لَمْ يُسْرِعْ بِهِ نَسَبُهُ" رَوَاهُ مُسْلِم.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***யார் ஒரு முஃமினின் இவ்வுலகத் துன்பங்களில் ஒன்றை இலகு படுத்துகின்றாரோ அல்லாஹ் அவருடைய மறுமைத் துன்பங்களில் ஒன்றை இலகுபடுத்துவான். சிரமப்படுவோரின் சிரமத்தை யார் இலகுபடுத்து கின்றாரோ அவருடைய ஈருலக சிரமத்தையும் அல்லாஹ் இலகுபடுத்துவான். யார் ஒரு முஸ்லிமுடைய குறையை மறைக்கின்றாரோ அவருடைய குறையை அல்லாஹ் ஈருலகிலும் மறைப்பான். அடியான் தனது சகோதரனுக்கு உதவும் காலமெல்லாம் அல்லாஹ் அவனுக்கு உதவிக் கொண்டிருப்பான். அறிவைத் தேடி யார் ஒரு பாதையில் செல்கிறாரோ அதன்மூலம்அல்லாஹ்அவருக்குசுவனத்தின்பாதையைஇலகுபடுத்துகின்றான். அல்லாஹ்வுடைய வீடுகளில் ஏதாவதொன்றில் ஒரு கூட்டம் ஒன்று கூடி அல்குர்ஆனை ஓதவும், ஒருவருக்கொருவர் கற்றுக் கொடுக்கவும் செய்தால், அவர்கள் மீது அமைதி இறங்கும், இறையருள் சூழ்ந்து கொள்ளும், வானவர்கள் நெருங்குவார்கள். அல்லாஹ் தன்னிடமுள்ளவர்களிடம் இவர்களை நினைவு கூர்கின்றான். யாருடைய நற்செயல் (சுவனம் செல்வதைத்) தாமதப்படுத்துகின்றதோ அவருடைய வம்சம் அவரை வேகப்படுத்த மாட்டாது.***

*அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2699).*

**விரிவுரை :**

*இந்நபிமொழியை இமாம் முஸ்லிம் அபூ ஹுரைரா (ரலி) வாயிலாக அறிவித்துள்ளார்கள்.*

*இதே செய்தி சிறு வேறுபாடுகளுடன் புஹாரி, முஸ்லிம் ஆகிய இரு நூட்களிலும் இப்னு உமர் (ரலி) வாயிலாக இடம்பெற்றுள்ளது.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதியிழைக்கவும் மாட்டான்; அவனை (பிறரின் அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கிறவனின் தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கிறான். ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகிறவரை விட்டு அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தை நீக்குகிறான். ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கிறவரின் குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான்.*[(1)]

***“யார் ஒரு முஃமினின் இவ்வுலகத் துன்பங்களில் ஒன்றை இலகு படுத்துகின்றாரோ அல்லாஹ் அவருடைய மறுமைத் துன்பங்களில் ஒன்றை இலகுபடுத்துவான்”***

*இது செயலுக்கேற்ற கூலி என்ற விதி முறையின் பிரகாரமாகும்.*

*இந்நபி மொழியில் கூறப்பட்டுள்ள “نَفَّسَ” என்பது இலகுபடுத்தலைக் குறிக்கின்றது. “كُرْبَة” என்பது இக்கட்டில் தள்ளிவிடக் கூடிய பாரிய சிரமமாகும். கழுத்து நெறிக்கப்பட்டவன் மூச்சு விடுவதற்காக கயிற்றை சற்று தளர்த்துவது போன்று பாரிய சிரமத்தைக் குறைப்பதற்கு இவ்வார்த்தை பயன் படுத்தப்பட்டுள்ளது.*

*இதனை விடக் கருத்துச் செறிவுள்ள வார்த்தை இப்னு உமர் (ரலி) அவர்களின் நபிமொழியில் உள்ள “فَرَّجَ” என்பதாகும். அதன் அர்த்தம் துன்பத்தை முழுமையாக நீக்குவதாகும். அதன் மூலம் அந்த நபருடைய கவலை, துக்கம் அனைத்தும் நீங்கி விடுகின்றது.*

*எனவே அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் நபிமொழிப் பிரகாரம் இலகு*

---

*1. அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (2442), முஸ்லிம் (2580).*

படுத்தலுக்குரிய கூலி இலகுபடுத்தலாகும். இப்னு உமர் (ரலி) அவர்களின் நபிமொழிப் பிரகாரம் துன்பத்தை நீக்குவதற்குரிய கூலி துன்பத்தை நீக்குவதாகும்.

**“சிரமப்படுவோரின் சிரமத்தை யார் இலகுபடுத்துகின்றாரோ அவருடைய ஈருலக சிரமத்தையும் அல்லாஹ் இலகு படுத்துகின்றான்”**

மறுமையிலும் கடினம், சிரமம் இருக்கும் என்பதற்கு இந்நபிமொழியும் ஒரு சான்றாகவுள்ளது. மறுமைநாளை அல்லாஹ் அல்குர்ஆனில் கடினமான தினமாக வர்ணித்துள்ளான் : “அது நிராகரிப்பாளர்களுக்கு கடினமான தினமாக இருக்கும்” (புர்கான் : 26).

உலகில் சிரமப்படுவோருக்கு பொருளாதாரம் மூலம் இலகுபடுத்தல் இரு முறைகளில் நிகழும் :

**01.** கடனாளிகளிடம் வசதி வரும் வரை வாய்ப்பளித்தல். இது கடமையாகும். “(கடன்பட்ட) அவன் கஷ்டமுடையவனாக இருந்தால் வசதி வரும் வரை வாய்ப்பளிக்க வேண்டும்” (பகரா : 280).

**02.** அவன் கடனாளியாக இருந்தால் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்தல், அல்லது வசதியற்ற வறியவனாக இருந்தால் வறுமையை நீக்க உதவுதல். இரண்டுமே அவனுக்கு பாரிய சிறப்பாக அமைகின்றன.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மக்களுக்குக் கடனுதவி செய்யும் ஒரு வியாபாரி இருந்தார். வறியவரைக் கண்டால் தனது பணியாட்களிடம் “அவரை விட்டு விடுங்கள், அல்லாஹ் எங்களை மன்னித்து விடப் போதுமானவன்” எனக் கூறுவார். எனவே அல்லாஹ்வும் அவரை மன்னித்து விட்டான்.[1]

மேலும் கூறினார்கள் : மறுமையின் துன்பங்களிலிருந்து அல்லாஹ் காப்பாற்ற வேண்டுமென யார் விரும்புகின்றாரோ அவர் கஷ்டவாளிக்கு இலகுபடுத்தட்டும். அல்லது (கடனைத்) தள்ளுபடி செய்யட்டும்.[2]

**“யார் ஒரு முஸ்லிமுடைய குறையை மறைக்கின்றாரோ அவருடைய குறையை அல்லாஹ் ஈருலகிலும் மறைப்பான்”**

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (2078), முஸ்லிம் (1562).*

*2. அறிவிப்பவர் : அபூ கதாதா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1563).*

**இக்கருத்திலும் அதிகமான இறைச் செய்திகள் வந்துள்ளன.**

*ஓர் அறிஞர் கூறுகின்றார் : குறைகளில்லாத ஒரு சமூகத்தைக் கண்டேன். அவர்களோ மக்களுடைய குறைகளைப் பேசித் திரிந்தார்கள். எனவே மக்களும் அவர்களுடைய குறைகளைப் பேச ஆரம்பித்து விட்டார்கள். குறைகளுடைய மற்றும் சில கூட்டத்தினரைக் கண்டேன். அவர்களோ மக்களுடைய குறைகளைப் பேசாமல் தடுத்துக் கொண்டார்கள். எனவே அவர்களுடைய குறைகளும் மறக்கடிக்கப்பட்டன.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உள்ளத்தில் விசுவாசம் நுழையாமல் நாவினால் மாத்திரம் விசுவாசித்த மக்களே! நீங்கள் முஸ்லிம்களைப் பற்றிப் புறம் பேசாதீர்கள். அவர்களது குறைகளைத் துருவாதீர்கள். யார் முஸ்லிம்களுடைய குறைகளைத் துருவுகின்றாரோ அவருடைய குறையை அல்லாஹ் துருவ ஆரம்பித்து விடுவான். அல்லாஹ் யாருடைய குறையைத் துருவ ஆரம்பித்தானோ அவன் தனது வீட்டிலிருந்தாலும் அவனை மானபங்கப்படுத்தாமல் விடமாட்டான்.*[1]

**“அடியான் தனது சகோதரனுக்கு உதவும் காலமெல்லாம் அல்லாஹ் அவனுக்கு உதவிக் கொண்டிருப்பான்”**

ஒரு மனிதனின் தேவையை நிறைவேற்ற இமாம் ஹஸனுல் பஸரீ (ரஹ்) தனது மாணவர்களில் சிலரை அனுப்பி வைத்தார்கள். அவர்களிடம் நீங்கள் செல்லும் போது ஸாபித் அல்புனானீயையும் அழைத்துச் செல்லுங்கள் என்றார். ஸாபிதிடம் அவர்கள் சென்றதும் தான் பள்ளியில் இஃதிகாப் (அல்லாஹ்வுக்காகத் தரித்தல்) இருப்பதாகக் கூறினார்கள். அவர்கள் ஹஸனுல் பஸரி அவர்களிடம் விடயத்தைக் கூறிய போது ஸாபிதிடம் பின்வருமாறு கூறுமாறு பணித்தார்கள் : பார்வை யற்றவரே! உமது முஸ்லிம் சகோதரர் ஒருவருடைய தேவையை நிறைவேற்றச் செல்வது தொடர்ந்து அடுத்தடுத்து ஹஜ் செய்வதை விடச் சிறந்ததென உமக்குத் தெரியாதா? அவர்கள் மீண்டும் ஸாபிதிடம் சென்று மேற்கண்டவாறு கூறியதும் இஃதிகாபை விட்டுவிட்டு அம்மாணவர்களுடன் சென்றார்கள்.

*1. அறிவிப்பவர் : அபூ பர்ஸா (ரலி), ஆதாரம் : அஹ்மத் (19776), அபூ தாவூத் (4880). அஷ்ஷேக் அல்பானி இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள். (ஸஹீஹுல் ஜாமிஃ (7984).*
*இச்செய்தி திர்மிதியில் (2032) இப்னு உமர் (ரலி) வாயிலாக இடம்பெற்றுள்ளது. இதே விடயத்தில் ஸவ்பான் (ரலி), பர்ராஃ (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி) ஆகியோர் வாயிலாகவும் நபிமொழிகள் உள்ளன.*

அபூ பக்ர் (ரலி) அவர்கள் தனது அக்கம்பக்கத்தார்களுக்கு அவர்களது ஆடுகளிலிருந்து பால் கறந்து கொடுப்பார்கள். அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டதும் இதற்குப் பின் பால் கறக்க மாட்டார்கள் என அப்பகுதிப் பெண் ஒருவர் கூறினார். இதனைக் கேள்விப்பட்டதும் அபூபக்ர் (ரலி) அவர்கள் : “இல்லை, நான் வழமையாகச் செய்து வந்தவற்றை இந்த தலைமைத்துவம் மாற்றிவிடக் கூடாது என எதிர்பார்க்கிறேன்” என்று கூறினார்கள்.

ஆண்கள் பால் கறப்பது ஏனெனில், அரேபியரிடத்தில் பெண்கள் பால் கறக்க மாட்டார்கள். அதனை வெறுப்பார்கள். ஆண்கள் வெளியில் சென்றால் அப்பெண்களுக்கு மிருகங்களில் இருந்து பால் கறக்கும் ஆண்கள் தேவைப் படுகின்றனர்.

உமர் (ரலி) அவர்கள் விதவைகளைக் கவனித்து, இரவில் அவர்களுக்கு நீரிரைத்துக் கொடுப்பார்கள். ஒரு தடவை இவ்வாறு ஒரு பெண்ணின் வீட்டினுள் இரவு வேளையில் நுழைவதைக் கண்ட தல்ஹா (ரலி), மறுதினம் பகல் வேளை அதே வீட்டிற்குச் சென்று பார்த்த போது அங்கு கண் குருடான, கால் முடமான ஒரு வயோதிபப் பெண் இருந்தாள். இந்த மனிதர் இங்கு உம்மிடம் என்ன செய்கின்றார்? என தல்ஹா (ரலி) வினவ, “அவர் எத்தனையோ வருடமாக என்னைக் கவனித்து வருகிறார். எனக்குத் தேவையானதைக் கொண்டு வருகிறார். என்னைச் சுத்தப்படுத்தி விடுகிறார்” என அப்பெண் கூறினாள்.

அபூ வாஇல்[1] (ரஹ்) தனது அக்கம்பக்கத்து பெண்கள், வயோதிபர்களுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுப்பார்கள்.

முஜாஹித் (ரஹ்) கூறினார்கள் : நான் இப்னு உமர் (ரலி) அவர்களுடன் பிரயாணத்தில் அவர்களுக்குப் பணிவிடை செய்யக் கூட்டாகச் சென்றேன். அவர்களோ எனக்குப் பணிவிடை செய்தார்கள்.

நல்லடியார்களில் பலர் பிரயாணிக்கும் போது தமது தோழர்களுக்குத் தாம் பணிவிடை செய்வதாக நிபந்தனையிட்டுத் தான் செல்வார்கள்.

---

*1.அபூ வாஇல் : ஷகீக் பின் ஸலமா எனும் பெயர் கொண்ட இவர் மூத்த தாபிஈன்களில் ஒருவராவார். நபியவர்களுடைய காலத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்களைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அபூ பக்ர்(ரலி) அவர்களைத் தவிர ஏனைய கலீபாக்களிடம் ஹதீஸ் கற்றுள்ளார்கள். அபூ பக்ர்(ரலி) அவர்களிடமிருந்து கற்றதாகவும் கூறப்படுகின்றது. இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களுடைய நபிமொழிகளை மிக அறிந்தவர்களில் இவரும் ஒருவராவார். ஹிஜ்ரி 100 க்கு முன்னர் மரணித்து விட்டார்கள். இமாம் தஹபீ கூறுகின்றார் : “அறிவு, அமல் இரண்டிலும் இந்தத் தலைவர் முன்னிலையில் இருந்தார். (ஸியரு அஃலாமிந் நுபலாஃ 4/161).*

***“அறிவைத் தேடி யார் ஒரு பாதையில் சொல்கிறாரோ அதன் மூலம் அல்லாஹ் சுவனத்தின் பாதையை இலகு படுத்துகின்றான்”***

*அறிவைத் தேடிச் செல்வதில் இரண்டு விடயங்கள் உள்ளடங்குகின்றன:*

**01.** *அறிஞர்களின் சபைகளுக்கு நடந்து செல்லல் மூலம் யதார்த்தமான பாதையில் செல்லல்.*

**02.** *மனனமிடல், கற்றல், மீட்டிப் பார்த்தல், எழுதுதல், விளங்குதல் போன்ற அறிவை அடையத் துணை புரியும் தார்மீகப் பாதைகளைக் கையாளுதல்.*

***“சுவனத்தின் பாதையை இலகு படுத்துகின்றான்”***

***இதில் பல அர்த்தங்கள் உள்ளன :***

**01.** *அல்லாஹ் அறிவின் பாதைகளை இலகுபடுத்திக் கொடுக்கின்றான். ஏனெனில் மார்க்க அறிவைக் கற்பது சுவர்க்கத்திற்கு இட்டுச் செல்லும் பாதையாகும்.*

**02.** *அறிவைத் தேடுபவன் அதன் மூலம் அல்லாஹ்வின் திருமுகத்தை நாடினால் அவன் அந்த அடியானுக்கு அறிவின் மூலம் பயனடையவும், அதன்படி செயல்படவும் இலகுபடுத்திக் கொடுக்கின்றான். அது அவனது நேர்வழிக்கும், சுவனம் நுழையவும் காரணமாகின்றது.*

**03.** *சிலவேளை பயனுள்ள வேறு கல்விகளையும் அவனுக்கு அல்லாஹ் இலகுபடுத்திக் கொடுக்கின்றான். அக்கல்விகள் அவனை சுவனத்திற்கு இட்டுச் செல்லும்.*

**04.** *சிலவேளை மறுமையில் சுவனம் செல்லும் உண்மையான பாதையாகிய ஸிராத் மற்றும் அதற்கு முன், பின்னுள்ள சிரமங்களை இலகுபடுத்திக் கொடுப்பதும் இதில் உள்ளடங்கலாம்.*

*அல்லாஹ்வை அறிதல், அவனது பொருத்தத்தை அடைதல், அவனது நெருக்கத்தைப் பெறல், மறுமையில் அவனுக்கருகாமையில் நிற்றல் ஆகிய அனைத்திற்கும் ஒரே வழி பயனுள்ள கல்வியே. அதைக் கொடுத்தே அல்லாஹ் தூதர்களை அனுப்பினான். வேதங்களை இறக்கினான்.*

***“அல்லாஹ்வுடைய வீடுகளில் ஏதாவதொன்றில் ஒரு கூட்டம் ஒன்று கூடி அல்குர்ஆனை ஓதவும், ஒருவருக்கொருவர் கற்றுக் கொடுக்கவும் செய்தால், அவர்கள் மீது அமைதி இறங்கும், இறையருள் சூழ்ந்து கொள்ளும், வானவர்கள் நெருங்குவார்கள். அல்லாஹ் தன்னிடமுள்ளவர்களிடம் இவர்களை நினைவு கூர்கின்றான்.”***

அல்குர்ஆன் ஓதுவதற்கும், கற்பதற்கும் பள்ளிகளில் உட்கார்வது விரும்பத்தக்கது என்பதற்கு இது ஆதாரமாகின்றது.

இவ்வாறு அல்லாஹ்வின் வேதத்தைத் தமக்குள் கற்றுக் கொள்வதற்காக அவனது மாளிகையில் உட்காருவோருக்குரிய கூலி நான்கு உள்ளதாக நபியவர்கள் கூறியுள்ளார்கள் :

**01.** அமைதி இறங்குகின்றது.

**02.** அல்லாஹ்வின் அருள் மூடிக் கொள்ளும். “நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் நல்லவர்களுக்கு நெருக்கமாகவே உள்ளது” *(அல்குர்ஆன் 07:56).*

**03.** வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

**04.** அல்லாஹ் தன்னிடமுள்ளவர்களிடம் இவர்களை நினைவு கூர்கின்றான். அல்லாஹ் தனது அடியானை நினைவுகூர்வதென்பது தனது உயர்ந்த படைப்பாகிய வானவர்களிடம் இவர்களைப் புகழ்ந்து, பெருமையாகப் பேசுவதாகும்.

இந்த நான்கு விடயங்களும் அல்லாஹ்வை நினைவுகூர்வதற்காக ஒன்றுகூடும் அனைவருக்கும் உரிய சிறப்பாகும்.

***“யாருடைய நற்செயல் (சுவனம் செல்வதைத்) தாமதப்படுத்துகின்றதோ அவருடைய வம்சம் அவரை வேகப்படுத்த மாட்டாது”***

இதன் அர்த்தம் என்னவெனில் மறுமையின் படித்தரங்களை அடைய வைப்பது ஓர் அடியானின் செயல்களே. அல்லாஹ்விடம் உயர் பதவிகளை அடையும் அளவிற்கு யாருடைய நற்செயல்கள் பற்றவில்லையோ அவர் சார்ந்திருந்த குடும்பம் அவரை அப்பதவிகளுக்கு கொண்டு சேர்க்காது. ஏனெனில் நற்கூலியை அல்லாஹ் நற்செயல்களில் தான் ஏற்படுத்தியுள்ளான். குடும்பத் தரங்களில் அல்ல.

*''ஸூர் ஊதப்பட்டால் அந்நாளில் அவர்களுக்கிடையே உறவுமுறைகள் இருக்காது. அவர்கள் தமக்கிடையில் விசாரித்துக் கொள்ளவும் மாட்டார்கள்'' (முஃமினூன் : 101).*

*அல்லாஹ் '(நபியே!) உங்களுடைய நெருங்கிய உறவினர்களை எச்சரியுங்கள்'' எனும் (ஷுஅரா : 214 வது) வசனத்தை அருளியபோது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று, 'குறைஷிக் கூட்டத்தாரே!'' அல்லது 'இது போன்ற ஒரு வார்த்தையைக் கூறியழைத்து, 'உங்கள் உயிர்களை (இஸ்லாத்தை ஏற்பதன் மூலம்) விலைக்கு வாங்கிக் (காப்பாற்றிக்) கொள்ளுங்கள். உங்களை அல்லாஹ்விடமிருந்து ஒரு சிறிதும் என்னால் காப்பாற்ற இயலாது. அப்து மனாஃபின் மக்களே! உங்களை அல்லாஹ்விடமிருந்து ஒரு சிறிதும் என்னால் காப்பாற்ற முடியாது. அப்துல் முத்தலிபின் புதல்வரான (என் சிறிய தந்தை) அப்பாஸ் அவர்களே! உங்களை அல்லாஹ்விடமிருந்து ஒரு சிறிதும் என்னால் காப்பாற்ற இயலாது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அத்தையான ஸஃபியாவே! உங்களை அல்லாஹ்விடமிருந்து ஒரு சிறிதும் என்னால் காப்பாற்ற முடியாது. முஹம்மதின் புதல்வியான ஃபாத்திமாவே! என் செல்வத்திலிருந்து நீ விரும்பியதை என்னிடம் கேள்! (தருகிறேன்). ஆனால், அல்லாஹ்விடமிருந்து, உன்னை என்னால் ஒரு சிறிதும் காப்பாற்ற முடியாது'' என்று கூறினார்கள்.[1]*

மற்றுமொரு நபிமொழி இதனை இன்னும் வலுப்படுத்துகின்றது.

*இன்னாரின் தந்தையின் குடும்பத்தார் என் நேசர்கள் அல்லர்; என் நேசர்கள் யாரெனில், அல்லாஹ்வும் நல்ல இறை நம்பிக்கையாளர்களும் தாம்'' என்று நபி (ஸல்) அவர்கள் ஒளிவு மறைவின்றி பகிரங்கமாகவே கூறினார்கள்.[2]*

தனது நேசத்தை உறவு முறையின் மூலம் -அது நெருங்கியதாக இருந்தாலும்- பெற முடியாது. மாறாக ஈமான், நற்செயல்கள் மூலமே தனது நேசத்தை அடையலாம் என்பதையே சுட்டிக் காட்டுகின்றார்கள். பரிபூரண முஃமினாகவும், நற்செயல் புரிபவராகவும் இருந்தால் அவர் தான் மிக நேசத்திற்குரியவராவார். அவர் நெருங்கிய உறவினராக இருந்தாலும் இல்லாவிடினும் சரியே.

---

*1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (477), முஸ்லிம் (206).*

*2. அறிவிப்பவர் : அம்ர் பின் ஆஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (5990), முஸ்லிம் (215).*

**இதே கருத்தில் ஒரு கவிதையுண்டு. அதன் தமிழ்ச் சுருக்கம் வருமாறு :**

*உமது வாழ்நாள் மீது சத்தியமாக மனிதனின் நிலை அவனது மார்க்கத்தை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது. குடும்பத்தைச் சார்ந்து இறையச்சத்தை விட்டு விடாதே.*

*பாரசீகத்தைச் சேர்ந்த ஸல்மானை உயர்த்தியது இஸ்லாம் தான். தீயவன் அபூ லஹபைத் தாழ்த்தியது இணைவைப்புத் தான்.*

## ஹதீஸ் 37

### அல்லாஹ்வின் நீதம்

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا عَنْ رَسُولِ اللهِ ﷺ فِيمَا يَرْوِي عَنْ رَبِّهِ تَبَارَكَ وَتَعَالَى قَالَ:

"إِنَّ اللهَ كَتَبَ الْحَسَنَاتِ وَالسَّيِّئَاتِ ثُمَّ بَيَّنَ ذَلِكَ، فَمَنْ هَمَّ بِحَسَنَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً، وَإِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللهُ عَزَّ وَجَلَّ عِنْدَهُ عَشْرَ حَسَنَاتٍ إِلَى سَبْعِمِائَةِ ضِعْفٍ إِلَى أَضْعَافٍ كَثِيرَةٍ، وَإِنْ هَمَّ بِسَيِّئَةٍ فَلَمْ يَعْمَلْهَا كَتَبَهَا اللهُ عِنْدَهُ حَسَنَةً كَامِلَةً، وَإِنْ هَمَّ بِهَا فَعَمِلَهَا كَتَبَهَا اللهُ سَيِّئَةً وَاحِدَةً" رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ

*அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* **அல்லாஹ் (ஒருவர் செய்யும்) நல்ல செயல்களையும், தீய செயல்களையும் எழுதிக் கொள்கிறான். அதற்கு மேல் அவன் அதனை விளக்கியும் இருக்கிறான். ஒருவர் நல்ல செயலை செய்ய நினைத்து அதை செய்து முடிக்க முடியாவிட்டாலும் அல்லாஹ் அதை ஒரு முழுமையான நல்ல செயலாக எழுதிக் கொள்கின்றான். ஒருவர் ஒரு நல்ல செயலைச் செய்ய நினைத்து, அதைச் செய்தும் முடிப்பாரேயானால் அல்லாஹ் அதை பத்து முதல் எழுநூறு தடவை அல்லது அதற்கும் பன்மடங்கு அதிகமானதாக குறித்துக் கொள்கிறான். ஒருவர் ஒருதீய செயலைச் செய்ய நினைத்து, அதை அவர் செய்யவில்லை என்றால் அல்லாஹ் அதை ஒரு நல்ல செயலாகவே எழுதிக் கொள்கின்றான். ஒருவர் ஒரு தீய செயலைச் செய்ய நினைத்து, அதை செய்தும் முடித்தால் அல்லாஹ் அதை ஒரு தீய செயலாக மட்டுமே எழுதிக் கொள்கின்றான்.**

*அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம்: புஹாரி (6491), முஸ்லிம் (131).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வாயிலாக இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகிய இருவரும் அறிவித்துள்ளனர்.*

முஸ்லிமின் அறிவிப்பில் இறுதியில் "அல்லது அதனை அழித்து விடுவான், அல்லாஹ்வின் திட்டப்படி அழியக் கூடியவர் தான் அழிந்து போவார்" என இடம்பெற்றுள்ளது.

**இதே கருத்தில் பல நபிமொழிகள் உள்ளன.**

இந்த இறைச் செய்திகள் நன்மை, தீமைகளை எழுதுதல், அவற்றைச் செய்ய முனைதல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. அவை நான்கு வகைப்படுகின்றன.

**1.** நன்மை செய்தல். இந்த நன்மை, 10 முதல் 700 மடங்கையும் தாண்டி பன்மடங்காக வழங்கப்படும்.

**2.** தீமை செய்தல். இது பன்மடங்காகப்படாமல் தீமைக்கேற்றவாறே பதியப்படும்.

அல்லாஹ் கூறுகின்றான் : "எவர் ஒரு நன்மையைக் கொண்டு வருகின்றாரோ அவருக்கு அதுபோன்ற பத்து(மடங்கு)ண்டு. எவன் ஒரு தீமையைக் கொண்டு வருகின்றானோ அவன் அது போன்றதையே தவிர கூலி வழங்கப்பட மாட்டான். அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள்" (அன்ஆம் : 160).

என்றாலும் கால, இடங்களின் சிறப்பைப் பொருத்து தீமைகளும் பெரிதாகும். இப்னு அப்பாஸ் (ரலி), அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி), கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) போன்றோர் மக்காவில் பாவங்கள் நிகழும் அச்சம் காரணமாக அங்கு வசிப்பதைத் தவிர்ப்பவர்களாக இருந்தார்கள்.

இஸ்ஹாக் பின் மன்ஸூர் (ரஹ்) கூறுகின்றார் : ஒரு நபிமொழி பற்றி இமாம் அஹ்மதிடம் நான் கேட்கும் போது : தீமை பன்மடங்காக எழுதப்படுமா? எனக் கேட்டேன். "இல்லை, மக்கா நகரின் புனிதத்துவம் கருதி அங்கு தவிர நாம் அவ்வாறு கேள்விப்படவில்லை" என பதிலளித்தார்கள்.

**3.** நன்மை செய்ய எண்ணுதல். அதைச் செய்யும் சந்தர்ப்பம் கிட்டாவிடினும் எடுத்த முனைப்பிற்காக ஒரு நன்மை பதியப்படும். இவ்வாறு தான் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் மேற்கண்ட நபிமொழியில் உள்ளது. குரைம் பின் பாதிக் (ரலி) அவர்களுடைய

நபிமொழியில் “யார் நன்மை செய்ய முனைந்து அதைச் செய்யாமல் இருந்து, அதைத் தனது உள்ளத்திற்கு உணர்த்தி செய்ய ஆசை கொண்டதாக அல்லாஹ்வும் அறிந்தால் அவனுக்கு ஒரு நன்மை எழுதப்படுகின்றது”[1] என இடம்பெற்றுள்ளது. நன்மை செய்யும் எண்ணம் என்பது அதைச் செய்வதற்கான ஆசையை உண்டாக்கும் வலுவான மன உறுதியையே நாடப்பட்டுள்ளது. மாறாக உள்ளத்தில் தோன்றி மறையும் வெறும் எண்ணமல்ல என்பதையே இந்நபிமொழி சுட்டிக்காட்டுகின்றது.

எப்போது எண்ணத்துடன் சொல் அல்லது முயற்சி சேருமோ அப்போது கூலி உறுதியாகி விடுகின்றது. நன்மை செய்ய எண்ணியவர் செய்தவருடன் சேர்ந்து விடுகின்றார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உலகம் நான்கு நபர்களுக்குத் தான். முதலாமவர்: அல்லாஹ்வால் கல்வி, செல்வம் ஆகியன வழங்கப்பட்டு, அவற்றில் தனது இரட்சகனை அஞ்சி, உறவினர்களுடன் சேர்ந்து நடந்து அல்லாஹ்வுக்குரிய கடமைகளை அறிந்து செயற்படக் கூடியவராவார். இவர் மிகச் சிறந்த பதவியில் இருப்பார். இரண்டாமவர் : செல்வம் கொடுக்கப்படாது, கல்வி மாத்திரம் கொடுக் கப்பட்டவர். எனினும் அவர் உண்மையான எண்ணமுள்ளவர். என்னிடம் செல்வ மிருந்தால் இன்னாரைப் போன்று செய்திருப்பேன் என்று கூறுவார். இது அவருடைய எண்ணத்தைப்பொருத்தாகும். இருவருக்குமானகூலிசமமானதாகும். மூன்றாமவர் : கல்வியின்றி செல்வம் மாத்திரம் கொடுக்கப்பட்டவர். இவர் தனது செல்வத்தில் அறிவின்றித் தான்தோன்றித் தனமாக செயற்படுகின்றார். தனது இரட்சகனை அஞ்சுவதுமில்லை. உறவினர்களுடன் சேர்ந்து நடப்பதுமில்லை. அல்லாஹ்வுக்குரிய கடமைகளை அறிந்து செயற்படுவதுமில்லை. இவர் மிக மோசமான இடத்திலிருப்பார். நான்காமவர் : கல்வி, செல்வம் இரண்டும் கொடுக்கப்படாதவர். என்னிடம் செல்வம் இருந்தால் இன்னாரைப் போன்று (மூன்றாமவர்) செய்திருப்பேன் என்பார். இது இவருடைய எண்ணத்தைப் பொருத்தாகும். இருவருடைய பாவமும் சமமாகும்”.[2]

1.அறிவிப்பவர் : குரைம் பின் பாதிக் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (19035), இப்னு ஹிப்பான் (6171), இது பற்றிய மேலதிக விபரங்களை இப்னுஹிப்பானில் உள்ள குறித்த இந்நபிமொழியின் அடிக்குறிப்பைப் பார்வையிடவும்.

2.அறிவிப்பவர் : அபூ கப்ஷ் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (18031), திர்மிதி (2325), இப்னுமாஜாஃ (4228). இது ஹஸன்

“கூலியில் இருவரும் சமம்” என்பது கூலி கிடைக்கின்ற விடயத்தில் இருவரும் சமம் என்பதே தவிர அது பன்மடங்காவதிலில்லை. அந்த செயலைச் செய்தவருக்கு மாத்திரம் தான் நன்மை பன்மடங்காக்கப்படுகின்றது. அவ்வாறில்லாமல் அனைத்து விதங்களில் இருவரும் சமம் என்றிருந்தால் ஒரு நன்மையை செய்ய முனைந்து, செய்யாமல் விட்டாலும் அவருக்கு பத்து நன்மைகள் எழுதப்படும் நிலை ஏற்படும். இது அனைத்து இறைச் செய்திகளுக்கும் முரணானதாகும்.

**04.** பாவம் செய்ய எத்தனித்து விட்டு செய்யாமல் விடுதல். மேற்கண்ட இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களுடைய நபிமொழியில் ஒரு நன்மை பதியப்படுவதாக உள்ளது. அபூ ஹுரைரா (ரலி) அவர்களுடைய நபிமொழியில் “அதை எனக்காகத் தான் அவன் விட்டான்” என அல்லாஹ் கூறுவதாக உள்ளது. இது பாவம் செய்ய வாய்ப்பிருந்தும் அல்லாஹ்வுக்காக அதை விடுவது தான் இந்நபிமொழியில் நாடப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. இவருக்கு ஒரு நன்மை பதியப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில் இவ்வாறு பாவத்தை விடுவது கூட ஒரு நற் செயலாகும்.

ஒரு பாவத்தைச் செய்ய எத்தனித்து பின் பிறருக்கு அஞ்சியோ, முகஸ்துதிக்காகவோ அதனை விட்டால் இந்த எண்ணத்துடன் பாவத்தை விட்டதற்காக தண்டிக்கப்படுவதாக ஒரு கருத்துள்ளது. ஏனெனில் அல்லாஹ்வின் அச்சத்தைக்கான படைப்பினங்களின் அச்சத்தை முற்படுத்துவது ஹராமாகும். அவ்வாறே முகஸ்துதியும் ஹராமாகும். மேற்கண்ட காரணத்திற்காக பாவத்தை விட்டால் அதற்காகவும் தண்டிக்கப்படுவார்.

ஒரு பாவத்தைச் செய்ய முழுமையாக முயற்சித்தும் விதியின்படி அதைச் செய்ய முடியாவிட்டால் இதற்காக வேண்டியும் அவர் தண்டிக்கப்படுவார் என சில அறிஞர்கள் கூறியுள்ளனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் சமுதாயத்தாரின் உள்ளங்களில் எழும் தீய எண்ணங்களை அவர்கள் அதன் படி செயல்படாத வரை அல்லது அதை (வெளிப்படுத்திப்) பேசாத வரை அல்லாஹ் மன்னித்துவிட்டான்.[1]

---

ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாக இமாம் திர்மிதி கூறியுள்ளார்.

1.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (5269), முஸ்லிம் (127).

ஒரு பாவத்தைச் செய்ய முயற்சித்து பின்பு அது கைகூடாமல் போனால் அவரும் அதனைச் செய்தவராகவே கருதப்படுவார்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இரண்டு முஸ்லிம்கள் தம் வாட்களால் சண்டையிட்டால் அதில் கொன்றவர், கொல்லப்பட்டவர் இருவருமே நரகத்திற்குத்தான் செல்வார்கள்''. அப்போது, 'இறைத்தூதர் அவர்களே! இவரோ கொலை செய்தவர்; (நரகத்திற்குச் செல்வது சரி) கொல்லப்பட்டவரின் நிலை என்ன? (அவர் ஏன் நரகம் செல்ல வேண்டும்?) என்று கேட்டதற்கு, 'அவர் இவரைக் கொல்ல வேண்டுமென்று பேராசை கொண்டிருந்தார்'' என்று கூறினார்கள்.[1]

எவ்விதக் காரணமுமின்றி இயல்பாகவே பாவம் செய்யும் எண்ணம் நீங்கி, மன உறுதியும் தளர்ந்து விட்ட ஒருவர் ஏற்கனவே பாவம் செய்ய எண்ணியதற்காகத் தண்டிக்கப்படுவார? இல்லையா? என்பதில் அவ் எண்ணங்களை இரு வகையாக வகுக்கலாம் :

**முதல் வகை :** உள்ளத்தில் நீண்ட நேரம் நிலைக்காமல் உள்ளம் அதைச் செய்ய உறுதி கொள்ளாமல் வெறும் ஊசலாட்டமாக மாத்திரம் வந்து விட்டுப்போகும் எண்ணங்கள். இதனை (உள்ளம் உறுதி கொள்வதற்குப் பதிலாக) வெறுத்து தூரமாக்கும் விடயமாக இருக்கும் பட்சத்தில் இவை மன்னிக்கப்பட்டு விடுகின்றன. இவை நபியவர்களிடம் கேட்கப்பட்ட போது "ஒளிவு மறைவற்ற ஈமான்"[2] என பதிலளித்த அந்த மோசமான ஊசலாட்டங்களைப் போன்றாகும்.

**இரண்டாம் வகை :** உள்ளத்தில் எப்போதும் நிலைத்திருக்கும் வலுவான மன உறுதிகள். இதுவும் இரு வகைப்படும் :

**1.** ஓரிறைக் கொள்கை, நபித்துவம், மறுமை போன்றவற்றில் சந்தேகம் கொள்ளல், அல்லது இறை நிராகரிப்பு, நயவஞ்சகம் போன்ற முழுமையாக உள்ளத்துடன் மாத்திரம் தொடர்பான எண்ணங்கள். இவற்றுக்காக அவ் அடியான் தண்டிக்கப்படுவான். சிலவேளை இதன் மூலம் காபிராக அல்லது (பெரிய) நயவஞ்சகனாகக் கூட மாறலாம்.

உள்ளத்துடன் தொடர்பான ஏனைய பாவங்களும் இதனுடன் சேர்க்கப்படுகின்றன. உதாரணமாக : அல்லாஹ் வெறுப்பதை நேசித்தல்,

1.அறிவிப்பவர் : அபூ பக்ரா (ரலி), ஆதாரம் : புஹாரி (31), முஸ்லிம் (2881).

2.நூல் : முஸ்லிம் (126).

அல்லாஹ் நேசிப்பதை வெறுத்தல், கர்வம், தற்பெருமை போன்றவற்றைக் கூறலாம்.

**2.** உறுப்புக்களுடன் தொடர்புபடும் பாவச் செயல்களைப் பற்றிய எண்ணங்கள். உதாரணமாக : விபச்சாரம், திருட்டு, மது அருந்துதல், கொலை, அவதூறு போன்றன. இவற்றைச் செய்வதன் எண்ணத்திலேயே தொடர்ந்திருக்கும் போது (செய்யா விடினும்) குற்றம் பிடிக்கப்படுமா? என்பதில் இரு கருத்துக்கள் உள்ளன.

**1.** அவன் இதற்காகக் குற்றம் பிடிக்கப்படுவான். இதுவே அநேகமான மார்க்க சட்டக்கலை, ஹதீஸ் கலை அறிஞர்கள், அகீதா அறிஞர்கள் வலுப்படுத்திய கருத்தாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள், நபிமொழிகளை இதற்கு ஆதாரமாகக் கொண்டுள்ளனர் : "எனினும் உங்கள் உள்ளங்கள் செய்பவற்றிற்காக அவன் உங்களைக் குற்றம் பிடிப்பான்" (பகரா: 225). "நிச்சயமாக உங்கள் உள்ளங்களில் இருப்பவற்றை அல்லாஹ் நன்கறிகின்றான்" (பகரா : 235). "பாவம் என்பது உனது உள்ளத்தை உறுத்தக் கூடியதும், மக்கள் அதை அறிவதை நீ வெறுக்கக் கூடியதுமாகும்".(1)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் சமுதாயத்தாரின் உள்ளங்களில் எழும் தீய எண்ணங்களை அவர்கள் அதன் படி செயல்படாத வரை அல்லது அதை (வெளிப்படுத்திப்) பேசாத வரை அல்லாஹ் மன்னித்துவிட்டான்.(2) எனும் நபிமொழி ஊசலாட்டங்களைப் பற்றியது என முதல் கருத்திலுள்ளவர்கள் கூறியுள்ளார்கள். தீமை செய்யும் எண்ணம் உள்ளத்தில் தொடர்ந்திருப்பதானது அவனுடைய முயற்சி, மற்றும் செயல்களில் அடங்குகின்றது. எனவே அவற்றை (செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கா விட்டாலும்) மன்னிக்கப்பட மாட்டாது.

இவ்வுலகில் கவலை, துக்கங்களைக் கொண்டு தண்டிக்கப்படுவதாகவும், மறுமையில் அல்லாஹ் அவனை நிறுத்தி அதுபற்றி விசாரணை செய்துவிட்டு மன்னிப்பான். அந்த விசாரணை தான் அவனுக்குரிய தண்டனை என வேறு இரு கருத்துக்களும் குற்றம் பிடிக்கப்படுவான் என்ற கருத்திலுள்ளோரிடம் காணப்படுகின்றன. இதனையே இமாம் இப்னு ஜரீர் (ரஹ்) தெரிவு செய்துள்ளார்கள்.

---

1. இது இந்நூலின் 26ம் நபிமொழியின் ஒரு பகுதியாகும்.

2. நூல் : புஹாரி (5269), முஸ்லிம் (127).

**2.** வெறும் எண்ணத்தினால் மாத்திரம் குற்றம் பிடிக்கப்படமாட்டான். இமாம் ஷாபிஈ (ரஹ்) இக்கருத்தைக் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஹன்பலி மத்ஹப் அறிஞர்களில் இமாம் இப்னு ஹாமித் பொதுவான ஆதாரங்களின் அடிப்படையில் இக்கருத்தைக் கொண்டுள்ளார்.

முஸ்லிமின் அறிவிப்பில் உள்ள “**அல்லது அல்லாஹ் அதனை அழித்து விடுவான்**”

அதாவது தீமை செய்யும் போது அவனுக்கு ஒரு பாவம் எழுதப்படுகின்றது. அல்லது தவ்பா, இஸ்திஃபார், நற்செயல்களில் அல்லாஹ் நாடியதன் மூலம் அவை அழிக்கப்படுகின்றது.

“**அல்லாஹ்வின் திட்டப்படி அழியக் கூடியவர் தான் அழிந்து போவார்**”

அதாவது நன்மைகளைப் பன்மடங்காக்கி, பாவங்களை மன்னிப்பதன் மூலம் அல்லாஹ்வின் விசாலமான கருணையும், மகத்தான அவனது சிறப்பும் கிடைத்ததற்குப் பின்னாலும் ஒருவன் அழிவதாக இருந்தால் அல்லாஹ்வால் எழுதப்பட்டு பாவங்களைத் துணிந்து செய்து, நன்மைகளை புறக்கணித்தவன் மாத்திரமே அழிவான்.

இதனால்தான் இப்னு மஸ்ஊத் (ரலி) கூறினார்கள் : “யாருடைய பத்தை விட ஒன்று மிகைத்து விடுகிறதோ அவருக்குக் கேடுதான்”.[1]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இரு விடயங்கள் உள்ளன. ஒரு முஸ்லிம் அதனைப் பேணினால் சுவனம் செல்லாமலிருக்க மாட்டான். அவ்விரண்டும் மிக இலகுவானதாகும். அதனைச் செய்வோரும் குறைவானோரே. ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகியவற்றை முறையே பத்து தடவைகள் கூறினால் அவை நாவினால் 150 தான், மறுமையில் தராசில் 1500 ஆகும். தூங்கும் போது நீ இம்மூன்றையும் 100 தடவைகள் ஓதினால் அவை நாவினால் 100 தான். தராசில் 1000 ஆகும். உங்களில் யார் தான் ஒரு நாளில் 2500 பாவங்கள் செய்யப் போகின்றீர்?”[2]

---

1. அதாவது யாருடைய பாவங்கள் (ஒன்று) நன்மைகளை (பத்து) மிகைத்து விடுகின்றதோ அவர் நஷ்டவாளியாவார். அவருக்குக் கேடுதான். பாவங்கள் “ஒன்று” எனக் குறிப்பிட்டது ஒரு பாவம் செய்தால் அது ஒன்றாகத் தான் எழுதப்படுகின்றது. அதேபோன்று தான் ஒரு நன்மை செய்தால் அது பத்தாக எழுதப்படுவதால் நன்மைகளை “பத்து” எனக் கூறியுள்ளார்கள்.

2.அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (6910), அபூ தாவூத் (5065), திர்மிதி (3410), நஸாஈ (1348). இமாம் திர்மிதி இதனை ஹஸன் ஸஹீஹ் என்றும், அஷ்ஷேக் அல்பானி இதனை

# ஹதீஸ் 38

## அல்லாஹ்வை நெருங்கும் வழிகள்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ:

"إِنَّ اللهَ تَعَالَى قَالَ: مَنْ عَادَى لِي وَلِيًّا، فَقَدْ آذَنْتُهُ بِالْحَرْبِ وَمَا تَقَرَّبَ إِلَيَّ عَبْدِي بِشَيْءٍ أَحَبَّ إِلَيَّ مِمَّا افْتَرَضْتُ عَلَيْهِ، وَلَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّى أُحِبَّهُ، فَإِذَا أَحْبَبْتُهُ، كُنْتُ سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ، وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ، وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا، وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا، وَلَئِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ، وَلَئِنِ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ." رَوَاهُ الْبُخَارِيُّ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***எல்லாம் வல்ல அல்லாஹ் சொல்கின்றான். யார் எனது நேசரை பகைக்கின்றானோ அவனுடன் நான் போர்ப் பிரகடனம் செய்வேன். எனது அடியானுக்கு நான் கடமையாக்கியதை விட எனக்கு மிக விருப்பமான எந்தவொன்றின் மூலமும் அவன் என்னை நெருங்கவில்லை. உபரியான வணக்கங்கள் மூலம் எனது அடியான் அவனை நான் நேசிக்கும் வரை என்னை நெருங்கிக் கொண்டே இருக்கின்றான்.*** *அவனை நான் நேசித்து விட்டால், நான் அவன் கேட்கும் செவிப்புலனாகவும், பார்க்கும் பார்வையாகவும், பிடிக்கும் கையாகவும், நடக்கும் காலாகவும் நான் ஆகிவிடுகின்றேன். அவன் என்னிடம் கேட்டால் அதை நான் அவனுக்கு நிச்சயமாகக் கொடுக்கின்றேன். அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினால் அவனுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்றேன்.*

*அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6502).*

---

*ஸஹீஹ் என்றும் கூறியுள்ளனர். (ஸஹீஹுத் தர்ஹீப் 606).*
*நபித்தோழர்கள் நபியிடம் : அவ்விரண்டும் இலகுவாயிருக்கும் போது அவற்றைச் செய்வோரும் எவ்வாறு குறைவானோராக இருப்பது? என வினவினார்கள். “உங்களில் ஒருவர் தொழுகையில் இருக்கும் போது ஷைத்தான் வந்து இன்னின்ன வேலைகள் இருப்பதாக நினைவூட்டுவான். எனவே அவன் அவற்றைக் கூறாமலே சென்று விடுவான். அவன் தூங்கும் போதும் வந்து தூக்கம் மிகைக்கச் செய்து விடுவான். எனவே அப்போதும் அதைக் கூறாமல் தூங்கி விடுவான். நபி (ஸல்) அவர்கள் அவற்றை எண்ணி ஓதுவதைக் கண்டேன் என அறிவிப்பாளர் கூறுகின்றார்.*

**விரிவுரை :**

இந்த நபிமொழி பிரபலமான நபிமொழித் தொகுப்புக்களில் புஹாரியில் மாத்திரமே இடம்பெறுகின்றது. இறைநேசர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள நபிமொழிகளில் இதுவே சிறந்த நபிமொழியெனக் கூறப்பட்டுள்ளது.

**"யார் எனது நேசரைப் பகைக்கின்றானோ அவனுடன் நான் போர்ப் பிரகடனம் செய்வேன்"**

அதாவது எனது நேசர்களை எதிர்ப்பது என்னுடன் போர்த் தொடுப்பதைப் போன்றதலால் நானும் அவனுடன் போர்ப் பிரகடனம் செய்கின்றேன் என அல்லாஹ் கூறுகின்றான். எனவே இறை நேசர்களை நேசிப்பது கடமையாகும், பகைப்பது ஹராமாகும். அதேபோன்று இறை எதிர்ப்பாளர்களைப் பகைப்பது கடமையாகும், நேசிப்பது ஹராமாகும்.

அனைத்துப் பாவங்களும் அல்லாஹ்வுடன் போரிடுவதைப் போன்றாகும். யார் அல்லாஹ்வுக்கு மாறு செய்கின்றானோ அவன் அல்லாஹ்வுடன் போரிடுகின்றான் என்பதை அறிந்து கொள். என்றாலும் பாவத்தின் வீரியத்தின் அளவு அல்லாஹ்வுடனான போரும் கடுமையாக இருக்கும். இதனால் தான் அல்லாஹ் வட்டி உண்போரையும், வழிப்பறிக் கொள்ளையர்களையும் அல்லாஹ்வுக்கு எதிரான போராளிகளாகக் கூறியுள்ளான். ஏனெனில் அவர்கள் அவனது அடியார்களுக்குச் செய்யும் அநீதியும், பூமியில் குழப்பங்களை உருவாக்க முயற்சிப்பதும் பாரிய குற்றமாகும். அதேபோன்று தான் அவனது நேசர்களைப் பகைப்பதும். ஏனெனில் அல்லாஹ் தனது நேசர்களுக்கு உதவுவதைப் பொறுப் பேற்றுள்ளான். அவர்களை நேசிக்கின்றான், பலப்படுத்துகின்றான். எனவே அத்தகையோரை எதிர்ப்பவர்கள் அல்லாஹ்வை எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்பவராவார்.

**"எனது அடியானுக்கு நான் கடமையாக்கியதை விட எனக்கு விருப்பமான எந்தவொன்றின் மூலமும் அவன் என்னை நெருங்கவில்லை. உபரியான வணக்கங்கள் மூலம் எனது அடியான் அவனை நான் நேசிக்கும் வரை என்னை நெருங்கிக் கொண்டே இருக்கின்றான்"**

தனது நேசர்களைப் பகைப்பது தன்னுடன் போரிடுவதாகும் எனக் கூறிய அல்லாஹ், அவ்வாறு நேசிப்பது கடமையான, பகைப்பது ஹராமான அந்த நேசர்களின் பண்புகளைக் கூறுகின்றான். அத்துடன் அவனிடம் நெருங்கும் வழிகளையும் கூறுகின்றான்.

நேசத்தின் அடிப்படை நெருக்கமாகும். பகையின் அடிப்படை தூரமாகும். எனவே இறைநேசர்கள் என்போர் அல்லாஹ்வை நெருங்கும் வழிகளைக் கையாண்டு அவனை நெருங்குவோராகும். அவனின் எதிரிகள் அவனை விட்டும் தூரமாக்கும் செயற்களை மேற்கொண்டு அவனை விட்டும் தூரமானவர்களாவர்.

**அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள் இரு வகைப்படுகின்றனர் :**

**01.** கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவனை நெருங்கியோர். இது கடமைகளைச் செய்வதையும், தடைகளைத் தவிர்ப்பதையும் உள்ளடக்குகின்றது. ஏனெனில் இவையனைத்துமே அல்லாஹ் தனது அடியார்களுக்கு விதித்துள்ள கட்டளைகளில் உள்ளவையாகும்.

**02.** கடமைகளைச் செய்த பின் மேலதிக வணக்கங்களால் அவனை நெருங்கியவர்கள்.

எனவே அல்லாஹ்வை நெருங்கவும், அவனது நேசம், நெருக்கத்தைப் பெறவும் ஒரே வழி அல்லாஹ்வின் தூதர் காட்டிய வழியில் அவனுக்குக் கட்டுப்படுவது மாத்திரம்தான் என்பது புலனாகின்றது. இந்த வழியின்றி அல்லாஹ்வின் நெருக்கத்தையும் நேசத்தையும் யார் வாதாடுகிறாரோ அவர் தனது வாதத்தில் பொய்யர் என்பது நிரூபணமாகி விடும். இவ்வாறு தான் இணைவைப்பாளர்களும் அல்லாஹ்வன்றி தாம் வணங்கும் சிலைகள் மூலம் அல்லாஹ்வை நெருங்க முயற்சித்தார்கள். “இவர்கள் அல்லாஹ்விடம் எமக்கு மிகவும் நெருக்கத்தை ஏற்படுத்தி வைப்பதற்காகவே நாம் இவர்களை வணங்குகின்றோம் (எனக் கூறுகின்றனர்)” (ஸுமர் :03).[1] அதேபோன்று தான் யூத, கிறிஸ்தவர்களும் அல்லாஹ்வின் தூதர்களைப் பொய்ப்பித்து, அவனது விலக்கல்களைச் செய்து ஏவல்களை விட்டுவிட்டு தாம் “அல்லாஹ்வின் பிள்ளைகள், அவனது நேசர்கள்” (மாஇதா : 18) என்று கூறிக் கொண்டார்கள்.

---

1.இதுபோன்று தான் மண்ணறைகளில் உள்ள இறைநேசர்கள் தமக்குப் பயனளிப்பார்கள், தீங்கிழைப்பார்கள் என சில அறிவீனர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவர்களை அழைக்கின்றனர். அவர்கள் மூலம் பாதுகாப்புத் தேடுகின்றனர். பிராணிகளை அறுத்துப் பலியிடுகின்றனர். பரிந்துரை மற்றும் இதர தேவைகளை வேண்டுகின்றனர். இது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி சிலை வணக்கத்தின் பால் இட்டுச் செல்லும் பெரிய இணைவைப் பாகும். இதற்கான ஆதாரங்கள் மட்டிட முடியாதவை. குறிப்பிட்டுக் கூற வேண்டிய அவசியமற்றளவு பிரபலமானவை. அல்லாஹ்வை மகத்துவப்படுத்துபவரின் உள்ளத்திலிருந்து அனைத்து வித இணைவைப்புத் தொடர்புகளும் அறுந்து விடுகின்றது. அல்குர்ஆனை ஆராய்ந்தவர் அதனை உறுதியாகக் கண்டு கொள்வார். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனிடமே நேர்வழியையும், சத்தியத்தில் உறுதியையும் கேட்கின்றோம்.

**இதனால் தான் இறை நேசர்கள் இரு தரங்களில் உள்ளனர் என இந்நபிமொழியில் கூறியுள்ளார்கள் :**

**01.** கடமைகளைச் செய்வதன் மூலம் அல்லாஹ்வை நெருங்கியவர்கள். இது ஸூரா பாதிரில் கூறப்பட்டுள்ள "முக்தஸித்" (நடுநிலையாக நடப்போர்) மற்றும் ஸூரா வாகிஆவில் கூறப்பட்டுள்ள "வலது புறத்தவர்கள்" ஆகியோரின் தரமாகும்.

**02.** முந்திக் கொண்ட நெருக்கமானவர்களின் தரம் : இவர்கள் தாம் கடமைகளுக்கு அப்பால் மேலதிக வணக்கங்களில் முயற்சிப்பதன் மூலமும், பேணுதலுக்காக வெறுக்கப்பட்ட அற்பமானவற்றையும் விடுவதன் மூலமும் அல்லாஹ்வை நெருங்குவோராகும். இது அடியானைப் பற்றிய நேசத்தை அல்லாஹ்விடம் ஏற்படுத்தும். "உபரியான வணக்கங்கள் மூலம் எனது அடியான் அவனை நான் நேசிக்கும் வரை என்னை நெருங்கிக் கொண்டே இருக்கின்றான்" எனக் கூறியுள்ளான். யாரை அல்லாஹ் நேசிக்கிறானோ அவனிடம் அல்லாஹ்வின் நேசத்தையும் கட்டுப்படுதலையும், அவனை நினைவுகூர்வதையும் அல்லாஹ் வழங்குகின்றான். எனவே அவை அல்லாஹ்விடம் நெருக்கத்தையும், நேசத்தையும், பாரிய இடத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றான்.

**"அவனை நான் நேசித்து விட்டால், நான் அவன் கேட்கும் செவிப்புலனாகவும், பார்க்கும் பார்வையாகவும், பிடிக்கும் கையாகவும், நடக்கும் காலாகவும் நான் ஆகிவிடுகின்றேன்"**

மேற்கண்ட வார்த்தையின் நோக்கம் என்னவெனில் : கடமைகளைச் செய்வதுடன், மேலதிக வணக்கங்கள் மூலம் அல்லாஹ்வை நெருங்க முயற்சிப்பவரை அல்லாஹ் தன் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்கின்றான். ஈமான் எனும் தரத்திலிருந்து அவனை இஹ்ஸான் எனும் தரத்திற்கு உயர்த்துகின்றான். எனவே அல்லாஹ்வைக் காண்பது போன்று அவனை வணங்கக் கூடியவனாக மாறிவிடுகின்றான். அல்லாஹ்வைப் பற்றிய அறிவு, அவனது நேசம், மகத்துவம், அச்சம், மரியாதை, கண்ணியம், அவனின் மூலம் அமைதியடைதல், அவனைச் சந்திக்க ஆசை கொள்ளல் போன்றவற்றால் அவனது உள்ளம் நிரம்புகின்றது. எதுவரையெனில் இவனது உள்ளத்தில் இருக்கும் அல்லாஹ்வைப் பற்றிய அறிவு அவனை நேரடியாகப் பார்ப்பது போன்ற நிலைக்கு மாற்றி விடுகின்றது.

அல்லாஹ்வின் மகத்துவம் எப்போது உள்ளத்தில் நிரம்புகின்றதோ அப்போது அல்லாஹ்வைப் பற்றிய எண்ணத்தைத் தவிர ஏனைய அனைத்தையும் அது அழித்து விடும். அந்த அடியானிடம் எந்த மனோ இச்சைக்கும் இடமிருக்க மாட்டாது. தனது எஜமான் விரும்புவதைத் தவிர வேறு விருப்பமேதும் இருக்காது. அப்போது அவ் அடியான் அல்லாஹ்வைப் பற்றி மாத்திரம் தான் பேசுவான். அவனது கட்டளைப் பிரகாரம் தான் செயற்படுவான். பேசினால் அல்லாஹ்வைக் கொண்டே பேசுவான். செவிமடுத்தால் அவனைக் கொண்டே செவிமடுப்பான். பார்த்தால் அவனைக் கொண்டே பார்ப்பான். பிடித்தால் அவனைக் கொண்டே பிடிப்பான். இதுவே “அவன் கேட்கும் செவிப்புலனாக நான் மாறிவிடுகின்றேன்” என்ற வார்த்தையின் அர்த்தமாகும்.[(1)]

**“அவன் என்னிடம் கேட்டால் நான் கொடுப்பேன். பாதுகாப்புத் தேடினால் நான் பாதுகாப்பு வழங்குவேன்”**

அதாவது அல்லாஹ்வால் நேசிக்கப்படும் அந்த அடியானுக்கு அவனிடத்தில் தனி இடமுண்டு. அதன் பயனாக அவன் அல்லாஹ்விடம் கேட்டால் அவன் கொடுப்பான். பாதுகாப்புத் தேடினால் பாதுகாப்பு வழங்குவான். பிரார்த்தித்தால் பதிலளிப்பான். அல்லாஹ்விடத்தில் அவனுக்கிருக்கும் மதிப்பின் காரணமாக பிரார்த்தனை ஏற்கப்படுவோரில் ஒருவனாக மாறிவிடுகின்றான்.

ஸலப் அறிஞர்களில் பலர் பிரார்த்தனை ஏற்கப்படுவோராக அறியப்பட்டுள்ளனர். ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களும் இதில் ஒருவராவார். அவருக்கெதிராக ஒரு மனிதர் பொய்யுரைத்த போது பின்வருமாறு பிரார்த்தித்தார்கள் “இறைவா! இவன் பொய்யனாக இருந்தால் அவனைக் குருடாக்கி, வாழ்நாளை நீடித்து குழப்ப நிலைகளுக்கு உட்படுத்துவாயாக”. இவையனைத்தும் அம்மனிதனைத் தாக்கியது. பிற்காலத்தில் ஒடுக்கமான பாதைகளில் பெண்களை சீண்டிக் கொண்டிருந்தான். கேட்டால், “நான் பித்னாவுக்குள்ளாக்கப்பட்ட ஒரு வயோதி பனாவேன். ஸஃதின் பிரார்த்தனை என்னில் பலித்து விட்டது” என்பான்.[(2)] மற்றுமொரு தடவை அலி (ரலி) அவர்களைத் தூற்றிக்

---

*1.இதே செய்தியின் வேறு சில அறிவிப்புக்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றது : “என் மூலமே செவிமடுப்பான், என்மூலமே பார்ப்பான்” அதாவது எனது அனுகூலம், உதவி, நேரியவழி மூலமே கேட்பான், பார்ப்பான்... **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ)**.*

*2.அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா (ரலி), ஆதாரம் : புஹாரி (755).*

*கொண்டிருந்த மனிதனைக் கண்டு அவனுக்கெதிராகப் பிரார்த்தித்தார்கள். அம்மனிதன் அவ்விடத்தில் இருக்கும் போதே அப்பகுதியால் தப்பியோடி வந்த ஓர் ஒட்டகம் தனது கால்களால் அம்மனிதனை இறக்கும் வரை பலமாக மிதித்தது.*

*ஸஃத் பின் ஸைத் (ரலி) அவர்களுடன் தனது காணி விடயத்தில் ஒரு பெண் பிணங்கிக் கொண்டாள். தனது காணியை இவர் அபகரித்து விட்டதாக வாதாடினாள். அப்போது ஸஃத் (ரலி) அவர்கள் : "இறைவா! அவள் பொய் கூறியிருந்தால் இவளைக் குருடாக்கி, இவளது காணியிலேயே அழித்து விடுவாயாக!" எனப் பிரார்த்தித்தார்கள். அவ்வாறே அவள் குருடாகி, ஓர் இரவில் தனது காணியில் நடந்து செல்லும் போது அதிலுள்ள ஒரு கிணற்றில் வீழ்ந்து இறந்தாள்.*[1]

*1. அறிவிப்பவர் : உர்வா பின் ஸுபைர் (ரஹ்), ஆதாரம் : முஸ்லிம் (1610).*

# ஹதீஸ் 39

## இஸ்லாத்தில் சிரமத்தை நீக்குதல்

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا، أَنَّ رَسُولَ ﷺ قَالَ:

"إِنَّ اللهَ تَجَاوَزَ لِي عَنْ أُمَّتِي الْخَطَأَ وَالنِّسْيَانَ، وَمَا اسْتُكْرِهُوا عَلَيْهِ." حَدِيثٌ حَسَنٌ رَوَاهُ ابْنُ مَاجَهْ وَالْبَيْهَقِيُّ وَغَيْرُهُمَا.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***நிச்சயமாக அல்லாஹ் எனக்காக எனது சமூகத்தவர்களிடமிருந்து தவறு, மறதி, நிர்ப்பந்தம் ஆகியவற்றை மன்னித்து விட்டான்.***

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : இப்னுமாஜாஃ (2045) பைஹகீ (15195).*

***விரிவுரை :***

***“நிச்சயமாக அல்லாஹ் எனக்காக எனது சமூகத்தவர்களிடமிருந்து தவறு, மறதி, நிர்ப்பந்தம் ஆகியவற்றை மன்னித்து விட்டான்”***

*அதாவது எனக்காக வேண்டி மேற்கண்டவற்றை எனது சமூகத்திடமிருந்து நீக்கி விட்டான். அல்லது குற்றம் பிடிக்காமல் விட்டு விட்டான் என்பதே இதன் அர்த்தமாகும்.*

**தவறு, மறதி, நிர்ப்பந்தம் :**

*தவறு மற்றும் மறதி மன்னிக்கப்படுவதாக அல்குர்ஆனில் நேரடியாகக் கூறப்பட்டுள்ளது.*

*“எங்கள் இரட்சகனே! நாம் மறந்து விட்டாலோ அல்லது தவறிழைத்து விட்டாலோ எம்மைக் குற்றம் பிடித்து விடாதிருப்பாயாக!” (பகரா : 286).*

*“நீங்கள் எதில் தவறு செய்தீர்களோ, அதில் உங்கள் மீது குற்றமில்லை. எனினும், உங்களது உள்ளங்கள் வேண்டுமென்றே கூறுவது (உங்கள் மீது குற்றமாகும்.)” (அஹ்ஸாப் : 05).*

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஒரு நீதிபதி தீர்ப்பளிக்கும் போது, அவர் ஆய்வு செய்து அது சரியாக இருந்தால் அவருக்கு இரு கூலிகள் உள்ளன. அவர் தீர்ப்பளிக்கும் போது ஆய்வு செய்து தவறிழைத்தால் (ஆய்வுக்காக) ஒரு கூலி உள்ளது”.[1]

நிர்ப்பந்தம் பற்றியும் அதை மன்னிப்பதாக அல்குர்ஆன் நேரடியாகக் கூறியுள்ளது.[2]

*“எவர் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பின் அவரின் உள்ளம் நம்பிக்கையால் அமைதி பெற்ற நிலையில், அவர் நிர்ப்பந்திக்கப்பட்டதின் காரணமாக அவனை (வாயளவில்) நிராகரிக்கிறாரோ (அவர் மீது குற்றமில்லை.)” (நஹ்ல் : 106).*

*“நம்பிக்கையாளர்கள், நம்பிக்கையாளர்களை விட்டுவிட்டு நிராகரிப்பாளர்களை நேசத்திற்குரியவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம். அவர்களிடமிருந்து உங்களைத் தற்காத்துக் கொள்வதற்கே தவிர யாரும் அவ்வாறு செய்தால் அவருக்கு அல்லாஹ்விடமிருந்து (பாதுகாப்பு) எதுவுமில்லை” (ஆல இம்ரான் : 28).*

**தவறு :** ஒன்றை செய்ய நாடி, தான் நாடாதது எதிர்பாராமல் நடப்பதே தவறாகும். உதாரணமாக : இறை நிராகரிப்பாளனை கொல்ல முயற்சித்து தவறுதலாக முஸ்லிம் கொல்லப்படுவதைப் போன்றாகும்.

**மறதி** : ஒன்றை செய்ய நினைவில் இருத்திக் கொண்டிருந்து செய்யும் நேரத்தில் அதனை மறப்பதாகும்.

இரண்டுமே பாவமில்லை என்ற அர்த்தத்தில் மன்னிக்கப்பட்டவையாகும். எனினும் மறதியுடன் வேறு சட்டங்கள் தொடர்புபடுதல் இந்த மன்னிப்பிற்கு முரணாக மாட்டாது. உதாரணமாக : வுழுவின்றி தான் சுத்தமாகத்தான் இருப்பதாக நினைத்துக் கொண்டு

1.அறிவிப்பவர் : அம்ர் பின் ஆஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (7352), முஸ்லிம் (1716).

2.இறை நிராகரிப்பை நிர்ப்பந்தத்தினால் செய்வதில் கருத்து வேற்றுமையுள்ளது. அவர் மன்னிக்கப்படுவார் என்பதே வலுவான கருத்தாகும். நிர்ப்பந்தத்தில் இறை நிராகரிப்பை மொழிவதற்கு சலுகையுள்ளது என்பது அனைவரினதும் கருத்தாகும்.

தொழுதால் அவருக்குக் குற்றமேதுமில்லை. எனினும் வுழுவின்றித் தான் தொழுததாக அவருக்கு பின்னர் தெளிவானால் அவர் அதனை மீட்ட வேண்டும். மறதியாக தொழுகையை விட்டால் நினைவு வந்ததும் அதனை நிறைவேற்ற வேண்டும். நபி *(ஸல்)* அவர்கள் கூறினார்கள் : யாராவது தொழாமல் தூங்கினால், அல்லது அதை மறந்தால் நினைவு வந்ததும் அதனைத் தொழுது கொள்ளட்டும். இதைத் தவிர வேறு பரிகாரம் அதற்கில்லை. பின்பு "என்னை நினைவு கூர்வதற்காக நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள்" *(அல்குர்ஆன் தாஹா :14)* எனும் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.[1]





*1.அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (597), முஸ்லிம் (684).*

# ஹதீஸ் 40

## மறுமைக்குத் தயாராகுதல்

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ:

أَخَذَ رَسُولُ اللهِ ﷺ بِمَنْكِبِي، فَقَالَ: "كُنْ فِي الدُّنْيَا كَأَنَّكَ غَرِيبٌ أَوْ عَابِرُ سَبِيلٍ."

وَكَانَ ابْنُ عُمَرَ يَقُولُ: "إِذَا أَمْسَيْتَ، فَلَا تَنْتَظِرِ الصَّبَاحَ، وَإِذَا أَصْبَحْتَ فَلَا تَنْتَظِرِ الْمَسَاءَ، وَخُذْ مِنْ صِحَّتِكَ لِمَرَضِكَ، وَمِنْ حَيَاتِكَ لِمَوْتِكَ" رَوَاهُ الْبُخَارِيُّ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***இந்த உலகில் ஒரு அன்னியனைப் போல அல்லது ஒரு வழிப்போக்கனைப் போல இருப்பீராக!***

*இப்னு உமர் (ரலி) அவர்கள் அடிக்கடி பின்வருமாறு சொல்வார்கள் :*

***மாலை நேரமாகும் போது அடுத்த நாள் காலை வரை இறக்காமல் இருப்போம் என எதிர்பார்க்க வேண்டாம். காலையில், மாலை வரையில் உயிருடன் இருப்போம் என எதிர்பார்க்க வேண்டாம். நீர் ஆரோக்கியமாக இருக்கும் போது நோய்க்காகவும், வாழ்வின் போது மரணித்திற்காகவும் நேரத்தை எடுத்துக் கொள்வீராக.***

*அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி), ஆதாரம் : புஹாரி (6416).*

**விரிவுரை :**

*உலக ஆசைகளைக் குறைப்பதற்கான ஓர் அடிப்படையாக இந்நபிமொழி உள்ளது. உண்மையான ஒரு விசுவாசி இவ்வுலகை நிரந்தரமான தங்குமிடமாக எடுத்து, அதில் நிம்மதியாக இருக்க முயற்சிக்கலாகாது. மாறாக பயணத்தை விரும்பும் ஒருவர் தனது பயணப் பொதிகளைத் தயார் செய்வதைப் போன்றே இருக்க வேண்டும்.*

*இதே கருத்தை முன்னைய நபிமார்களும் உபதேசித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.*

ஃபிர்அவ்னுடைய கூட்டத்திலிருந்த விசுவாசி கூறியதாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

"எனது சமூகத்தினரே! இவ்வுலக வாழ்க்கை அற்ப இன்பமே! நிச்சயமாக மறுமையோ நிலையான வீடாகும் (என்றும் கூறினார்.)" (ஃகாபிர் : 39).

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எனக்கும் உலகிற்கும் என்ன தொடர்பு? எனக்கும் உலகிற்குமான உதாரணமாகிறது : மரநிழலில் பகல் வேளையில் சற்று ஓய்வெடுத்து விட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்ட ஒரு பயணியைப் போன்றதாகும்.(1)

ஒரு ஞானி பின்வருமாறு கூறுகின்றார் : உலகம் கடந்து சென்று கொண்டிருக்க, மறுமை முன்னோக்கி வந்து கொண்டிருக்க அதனைப் புறக்கணித்து விட்டு, கடந்து செல்லும் உலகில் அதிக ஈடுபாடு காட்டுவோரைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக உள்ளது.

ஒரு விசுவாசிக்கு இவ்வுலகம் நிரந்தர வீடாகவோ, தாய் பூமியாகவோ இல்லாவிடின் இவ்வுலகில் அவனது நிலை பின்வரும் இரு நிலைகளில் ஒன்றாகத் தான் இருக்கும் :

**01.** வேறு ஓர் ஊரில் வசிக்கும் வெளியூர் வாசியாக இருப்பார்.

**02.**அல்லது எங்கும் தங்காது தொடர்ந்து பயணிப்பவரைப் போன்றிருப்பார்.

இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் இப்னு உமர் (ரலி) அவர்களுக்கு பின்வரும் இரு நிலைகளில் ஒன்றாக இருக்கும் படி கூறினார்கள் :

**01.** தன்னை இவ்வுலகில் வேற்றாள் போல் நினைத்துக் கொள்ளுதல். வேற்றூரில் தரிப்பதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டும். எனவே அவனது உள்ளம் வேற்றூருடன் ஒன்றியிருக்க மாட்டாது. தான் திரும்பவிருக்கின்ற தாய்ப் பூமியுடன் தான் ஒன்றியிருக்கும். அவன் இவ்வுலகில் இருப்பது தனது தாய்நாட்டுக்கு (மறுமை) எடுத்துச் செல்லத் தேவையான பொருட்களைத் தயார்படுத்துவதற்காகத் தான்.

இந்த நிலையிலுள்ளவர்களுக்கு தனது தாய் நாட்டிற்குத் திரும்பும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பயனுள்ளவற்றின் மீதே முழுக் கவனமும் இருக்கும். அவ்வூர் வாசிகளுடன் சம அந்தஸ்தைப் பெற போட்டியிடவும்

1.அறிவிப்பவர் : இப்னு மஸ்ஊத் (ரலி), ஆதாரம் : திர்மிதி (2377), அவர்கள் இதனை ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

மாட்டான், அவர்களிடம் இழிவடைவதைப் பார்த்து பொறுமையிழக்கவும் மாட்டான்.

**02.** தன்னை இவ்வுலகில் எங்கும் தங்காமல் தொடர்ந்து பயணிப்பவரைப் போல் நினைத்துக் கொள்ளுதல். அவர் தனது இறுதிமூச்சு வரை (மரணம்) தொடர்ந்து பல ஊர்களுக்குப் பயணித்துக் கொண்டே இருப்பார்.

இந்நிலையில் இருக்கும் ஒருவருடைய முழு நோக்கமும் தனது பயணத்திற்குத் தேவையான பொருட்களைத் தயார்படுத்துவதே தவிர உலக செல்வங்களை அதிகரிக்கும் நோக்கமிருக்காது.

இப்னு உமர் (ரலி) அவர்களது உபதேசமானது அவர்கள் அறிவித்த இதே நபிமொழியில் இருந்து பெறப்பட்டதாகும். இது பேராசைகளை சுருக்கிக் கொள்வதை உள்ளடக்கியுள்ளது. ஒரு மனிதன் மாலையை அடைந்தால் காலையை எதிர்பார்க்க மாட்டான், காலையை அடைந்தால் மாலையை எதிர்பார்க்க மாட்டான். அதற்கு முன்னரே அவனது மரணம் வந்துவிடும் என்பதாகத்தான் எண்ணிக் கொண்டிருப்பான்.

**“நீ ஆரோக்கியமாக இருக்கும் போது நோய்க்காவும், வாழ்வின் போது மரணத்திற்காகவும் நேரத்தை எடுத்துக் கொள்”**

அதாவது நோய் ஏற்பட முன்னர் ஆரோக்கியமாக இருக்கும் போதும், மரணம் வருமுன் வாழ்நாளிலும் நன்மை செய்ய நேரத்தைப் பயன்படுத்திக் கொள்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதனுக்கு உபதேசிக்கும் போது பின்வருமாறு கூறினார்கள்: ஐந்து விடயங்கள் நிகழ முன் ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள் :

- வயோதிபத்துக்கு முன் வாலிபத்தை,
- நோய்க்கு முன் ஆரோக்கியத்தை,
- வறுமைக்கு முன் செல்வத்தை,
- வேலைப்பளுவுக்கு முன் ஓய்வு நேரத்தை,
- மரணத்திற்கு முன் வாழ்நாளை (நன்மையில் பயன்படுத்திக் கொள்).[1]

1.அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : ஹாகிம் : (7846). இது புஹாரி, முஸ்லிமின்

நற்செயல்கள் செய்யத் தடைகள் ஏற்பட்டு, சக்தியற்ற நிலை வருமுன் அதன்பால் விரைவது ஒவ்வொரு விசுவாசிக்கும் அவசியமாகும். எப்போது நற்செயல் செய்ய முடியாமல் மனிதனுக்குத் தடை ஏற்பட்டு விடுகிறதோ அதன் பின் மீதமாவது கவலையும், கைசேதமும்தான். நற்செயல் செய்யும் வாய்ப்புள்ள சந்தர்ப்பத்தின் பால் மீள அவாக் கொள்வான். அவனது அவா பயனளிக்காது.

“வேதனை உங்களிடம் வருவதற்கு முன்னர் உங்களது இரட்சகனிடம் மீண்டு, அவனுக்கே கட்டுப்பட்டு விடுங்கள். பின்னர் நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள். நீங்கள் உணராத நிலையில் திடீரென வேதனை உங்களிடம் வருவதற்கு முன்னர் உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்கு இறக்கபட்டவற்றில் மிக அழகானதைப் பின்பற்றுங்கள். அல்லாஹ்வின் கடமையில் நான் குறைவு செய்து விட்டதற்காக எனது கைசேதமே! நான் கேலி செய்வோரில் ஆகி விட்டேனே என்று எந்த ஆன்மாவும் கூறாமல் இருப்பதற்காகவும், அல்லது அல்லாஹ் என்னை நேர்வழியில் செலுத்தியிருந்தால் நான் பயபக்தியாளர்களில் இருந்திருப்பேனே என்று கூறாமல் இருப்பதற்காகவும், அல்லது வேதனையைக் காணும் போது நிச்சயமாக (உலகிற்குத்) திரும்பிச் செல்லுதல் எனக்கு இருக்குமாயின் நான் நன்மை செய்வோரில் ஆகிவிடுவேனே என்று கூறாமல் இருப்பதற்காகவும் *(உங்களுக்கு இறக்கப்பட்டதைப் பின்பற்றுங்கள்)” (ஸுமர் : 54-58).*

“முடிவாக, அவர்களில் ஒருவனுக்கு மரணம் வந்துவிட்டால், அவன் ‘எனது இரட்சகனே! என்னை நீ (உலகிற்கு) திருப்பி அனுப்புவாயாக!’ எனக் கூறுவான். நான் விட்டு வந்ததில் நல்லறம் புரிவதற்காக (திருப்பி அனுப்புவாயாக!) அவ்வாறன்று, நிச்சயமாக அது அவன் கூறும் வெற்று வார்த்தையேயாகும். அவர்கள் எழுப்பப் படும் நாள் வரை அவர்களுக்கு முன்னால் ஒரு திரை இருக்கின்றது” *(முஃமினூன் : 99,100).*

உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு முன் நாம் உங்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (நல்லறங்களில்) நீங்கள் செலவு செய்யுங்கள். (இல்லையெனில் மரண வேளையில்) ‘என் இரட்சகனே! சிறிது காலம் என்னை நீ பிற்படுத்த வேண்டாமா? நான் தர்மம் செய்து நல்லவர்களில் ஆகிவிடுவேன்’ என்று அவன் கூறுவான். எந்தவோர் ஆன்மாவுக்கும் அதன்

---

*நிபந்தனைக்குட்பட்ட ஸஹீஹாகும் எனவும் கூறியுள்ளார்கள். அஷ்ஷேக் அல்பானி தனது ஸஹீஹுத் தர்கீபி வத்தர்ஹீப் நூலில் (3355) இதனை ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.*

தவணை வந்து விட்டால் அல்லாஹ் பிற்படுத்தவே மாட்டான். மேலும், நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந்தவன்" (முனாபிகூன் : 10,11).

ஒரு கவிஞரின் இது பற்றிய கவிதையின் தமிழ்ச் சுருக்கம் வருமாறு :

ஓய்வு நேரத்தில் மேலதிக ருகூஃவை செய்து கொள், உனது மரணம் திடீரென வர வாய்ப்புள்ளது.

எவ்வித நோயுமற்ற ஆரோக்கியமான எத்தனை பேருடைய ஆரோக்கியமான மூச்சு எதிர்பாராத விதமாக சென்றதை நீ கண்டிருப்பாய்.[1]



1. இவ்விரு கவிதை அடிகளையும் இமாம் ஸுபுகி (ரஹ்) தனது "தபகாதுஷ் ஷாபிஇய்யா" எனும் நூலில் (2/235) இமாம் புஹாரியுடைய கவிதையாகக் கூறியுள்ளார்கள்.

# ஹதீஸ் 41

## அல்லாஹ்வின் சட்டங்களைப் பின்பற்றல்

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرِو بْنِ الْعَاصِ رَضِيَ اللهُ عَنْهُمَا، قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ :

"لَا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى يَكُونَ هَوَاهُ تَبَعًا لِمَا جِئْتُ بِهِ"

قَالَ الشَّيْخُ رحمه الله (حديثٌ حسنٌ صحِيحٌ، رويناه في "كتاب الحُجَّةِ) بإسْنَادٍ صَحِيحٍ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***தனது ஆசைகள் நான் கொண்டு வந்த(இம் மார்க்கத்)தைத் துயர்ந்ததாக இருக்கும் வரை உங்களில் ஒருவர் முழுமையான நம்பிக்கையாளராக மாட்டார்.***

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி), ஆதாரம் : இமாம் இப்னு அபீ ஆஸிமின் அஸ்ஸுன்னா (15), இமாம் பகவீயின் ஷரஹ் அஸ்ஸுன்னா (104), இமாம் அபுல் காஸிம் அல்அஸ்பஹானீயின் அல்ஹுஜ்ஜா (103).*

*இமாம் நவவீ (ரஹ்) கூறுகின்றார்கள் : இது ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ள நபிமொழியாகும். “கிதாபுல் ஹுஜ்ஜா” எனும் நூலில் இதனை ஸஹீஹான அறிவிப்பாளர் தொடருடன் அறிவித்துள்ளோம்.*[(1)]

**விரிவுரை :**

*இந்நபிமொழியின் அர்த்தம் என்னவெனில் ஒரு மனிதனுடைய விருப்பம் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இந்த மார்க்கத்தைத் துயர்ந்ததாக இருக்கும் வரை அவன் பரிபூரணமான முஃமினாக முடியாது. எனவே அவன் நபியவர்கள் ஏவியதை நேசிக்க வேண்டும். தடுத்ததை வெறுக்க வேண்டும்.*

*இது பற்றி அல்குர்ஆனில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.*

*1. இந்த நபிமொழியின் தரம் பற்றி விமர்சனம் உள்ளது.* ***(அப்துல் அஸீஸ் அத்தரீபீ).***

*"(நபியே!) உமது இரட்சகன் மீது சத்தியமாக அவர்கள் தமக்கிடையில் ஏற்பட்ட சர்ச்சையில் உம்மை நீதிபதியாக்கி, பின்னர் நீர் வழங்கும் தீர்ப்பை தம் மனங்களில் எத்தகைய அதிருப்தியும் கொள்ளாது ஏற்று, அதற்கு முற்றிலும் கட்டுப்படும் வரை நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள்" (நிஸா : 65).*

*"அல்லாஹ்வும், அவனது தூதரும் ஒரு காரியத்தில் முடிவு செய்து விட்டால் தமது காரியத்தில் சுய அபிப்பிராயம் கொள்வதற்கு முஃமினான எந்த ஆணுக்கும் முஃமினான எந்தப் பெண்ணுக்கும் உரிமை இல்லை" (அஹ்ஸாப் : 36).*

தான் நேசிப்பதை வெறுப்போரையும், தான் வெறுப்பதை நேசிப்போரையும் அல்லாஹ் கண்டித்துள்ளான்.

*"நிச்சயமாக அவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததை வெறுத்ததே இதற்குக் காரணமாகும். எனவே, அவன் அவர்களது செயல்களை அழித்துவிட்டான்" (முஹம்மத் : 09).*

*"நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வுக்குக் கோபமூட்டக் கூடியதைப் பின்பற்றிய தும், அவனது பொருத்தத்தை வெறுத்ததுமே இதற்குக் காரணமாகும். ஆகவே, இவர்களின் செயல்களை அவன் அழித்து விட்டான்" (முஹ்மமத் : 28).*

**ஒவ்வொரு விசுவாசியும் செய்ய வேண்டிய கடமை :**

- அல்லாஹ் நேசித்ததை நேசித்தல், அந்த நேசம் அவன் கடமையாக்கியவற்றை செய்ய தூண்டக் கூடியதாக இருத்தல் வேண்டும். நேசம் அதிகரித்து மேலதிகமான ஸுன்னத்துக்களை செய்தால் அது மென்மேலும் சிறப்புக்குரியதாகும்.

- அல்லாஹ் வெறுத்ததை வெறுத்தல். அந்த வெறுப்பு அவன் தடை செய்ததைத் தவிர்ந்து கொள்ளத் தூண்டக் கூடியதாக இருத்தல் வேண்டும். வெறுப்பு அதிகரித்து ஹராமல்லாத வெறுக்கப்பட்டதையும் தவிர்ந்து கொண்டால் அது மென்மேலும் சிறப்புக்குரியதாகும்.

சரியான நேசம் என்னவெனில் தனது நேசனின் விருப்பு தன்னுடைய விருப்பாகவும், அவனின் வெறுப்பு தன்னுடைய வெறுப்பாகவும் இருத்தல் வேண்டும்.

*"உங்கள் பெற்றோர்கள், உங்களது பிள்ளைகள், உங்களது சகோதரர்கள், உங்களது மனைவியர்கள், உங்களது நெருங்கிய உறவினர்கள், நீங்கள்*

சம்பாதித்துள்ள செல்வங்கள், நஷ்டமடைந்து விடுமென நீங்கள் அஞ்சும் வியாபாரம், நீங்கள் திருப்தி கொள்ளும் இல்லங்கள் என்பன அல்லாஹ்வையும், அவனது தூதரையும் அவனது பாதையில் அறப்போர் புரிவதையும் விட, உங்களுக்கு மிக விருப்பமுடை யவைகளாக இருந்தால் அல்லாஹ் தனது (தண்டனையான) கட்டளையைக் கொண்டு வரும்வரை நீங்கள் எதிர்பார்த்திருங்கள் என (நபியே!) நீர் கூறுவீராக! அல்லாஹ் பாவிகளான இக்கூட்டத்தினரை நேர்வழியில் செலுத்தமாட்டான்'' (தவ்பா: 24).

அல்லாஹ்வையும், தூதரையும் உண்மையாக உள்ளத்தால் நேசித்தால் அது அவனை அவ்விருவரும் நேசித்ததை நேசிக்கவும், வெறுத்ததை உள்ளத்தால் வெறுக்கவும், பொருந்திக் கொண்டதை பொருந்திக் கொள்ளவும், பகைத்ததைப் பகைக்கவும் தூண்டும். அத்துடன் இந்த விருப்பு வெறுப்புக்கேற்ப தனது உறுப்புக்களால் செயற்படவும் தூண்டும். இதற்கு மாற்றமாக அவ்விருவரும் வெறுக்கும் ஒரு செயலைச் செய்தால், அல்லது அவர்கள் நேசித்துக் கடமையாக்கிய ஒன்றை சக்தியிருந்தும் செய்யாமல் விட்டால் அவருடைய கடமையான நேசத்தில் குறை ஏற்பட்டுள்ளது என்பதையே உணர்த்துகின்றது. அவர் அல்லாஹ்விடம் தவ்பாச் செய்து கடமையான நேசத்தைப் பரிபூரணப்படுத்த வேண்டும்.

அல்லாஹ்வின் வரம்புகளைப் பேணாமல் அவனது நேசத்தை வாதாடுபவன் உண்மையாளனல்ல என யஹ்யா பின் முஆத் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

**ஆரம்பகால ஒரு கவிஞரின் இரு கவிதைகளின் தமிழ்ச் சுருக்கம் வருமாறு :**

- நீ இறைவனை நேசிப்பதாக வாதாடிக் கொண்டே அவனுக்கு மாறு செய்கின்றாய். இது -எனது வாழ்நாள் மீது சத்தியமாக- மிக மோசமான ஒப்பீட்டு முறையாகும்.

- உனது நேசம் உண்மையாக இருந்தால் நீ அவனுக்குக் கட்டுப்பட்டிருப்பாய். நிச்சயமாக நேசிப்பவன் தனது நேசனுக்குக் கட்டுப்படுபவனாகும்.

அல்லாஹ்வினதும், அவனது தூதரினதும் நேசத்தை விட மனோ இச்சைகளை முற்படுத்துவதால் தான் அனைத்துப் பாவங்களும் உருவாகின்றன. இணைவைப் பாளர்கள் மனோ இச்சையைப் பின்பற்றுவதாக அல்குர்ஆனின் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

*"அவர்கள் உமக்குப் பதிலளிக்கவில்லையென்றால் அவர்கள் தமது மனோ இச்சைகளையே பின்பற்றுகின்றனர் என்பதை அறிந்து கொள்வீராக! அல்லாஹ்விட மிருந்து எவ்வித வழிகாட்டலுமின்றி தனது மனோ இச்சையைப் பின்பற்றுபவனை விட மிகப் பெரிய வழிகேடன் யார்?" (கஸஸ் : 50).*

அதேபோன்று தான் மனோ இச்சையை முற்படுத்துவதால் தான் மார்க்கத்தின் பெயரால் நூதனங்கள் (பித்அத்) உருவாகின்றன. அதனால் தான் பித்அத்வாதிகள் மனோ இச்சைக்காரர்கள் என பெயரிடப்பட்டுள்ளனர்.

அதேபோன்றுதான் பிற மனிதர்களை நேசிப்பதும் நபியவர்கள் கொண்டு வந்த மார்க்கத்திற்கேற்பத்தான் அமைய வேண்டும். எனவே ஒரு விசுவாசி அல்லாஹ்வை நேசிப்பதுடன், அவன் நேசிக்கும் வானவர்கள், இறைத்தூதர்கள், நபிமார்கள், உண்மையாளர்கள் போன்றோரைப் பொதுவாக நேசிப்பது கடமையாகும். இதனால் தான் ஈமானின் சுவை இருப்பதற்கான அடையாளங்களுள் ஒன்றாக அல்லாஹ்வுக் காகவே ஒரு மனிதனை நேசிப்பதும் அடங்குகின்றது. அல்லாஹ்வின் எதிரிகளையும், அவன் வெறுப்போரையும் நேசிப்பது பொதுவாக ஹராமாகும். இதற்கு முன்னால் இது பற்றிக் கூறப்பட்டு விட்டது. இதன் மூலம் இந்த மார்க்கம் அனைத்தும் அல்லாஹ்விற்குரியதாகின்றது.

## ஹதீஸ் 42

### அல்லாஹ்வின் பாவமன்னிப்பு

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ الله عَنْهُ، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ:

"قَالَ اللهُ تَعَالَى: يَابْنَ آدَمَ، إِنَّكَ مَا دَعَوْتَنِي وَرَجَوْتَنِي غَفَرْتُ لَكَ عَلَى مَا كَانَ مِنْكَ وَلَا أُبَالِي.يَا ابْنَ آدَمَ، لَوْ بَلَغَتْ ذُنُوبُكَ عَنَانَ السَّمَاءِ، ثُمَّ اسْتَغْفَرْتَنِي، غَفَرْتُ لَكَ. يَا ابْنَ آدَمَ، إِنَّكَ لَوْ أَتَيْتَنِي بِقُرَابِ الْأَرْضِ خَطَايَا، ثُمَّ لَقِيتَنِي لَا تُشْرِكْ بِي شَيْئًا، لَأَتَيْتُكَ بِقُرَابِهَا مَغْفِرَةً." رَوَاهُ التِّرْمِذِيُّ وَقَالَ: حَدِيثٌ حَسَنٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***எல்லாம் வல்ல இறைவன் சொல்கிறான் : 'ஆதமின் மகனே, நீ என்னை எதிர்பார்த்து, அழைக்கும் போதெல்லாம் உன்னிடமுள்ள பாவங்களை நான் மன்னிப்பேன். அதனைப் பொருட்படுத்த மாட்டேன். ஆதமின் மகனே, உன்னுடைய பாவங்கள் வானத்தை எட்டும் அளவிற்கு உயர்ந்து விட்டாலும் பின்னரும், நீ என்னிடம் மீண்டு மன்னிப்புக் கோருவாயானால், நான் உன்னை மன்னிக்கவே செய்வேன். ஆதமின் மகனே, நீ பூமியை நிறைத்திடும் அளவிற்கு பாவங்கள் செய்து விட்ட பிறகும் கூட, எனக்கு இணை வைக்காத நிலையில் என்னிடம் மீளுவாயானால் அப்போதும் உன்னுடைய அந்த அளவிற்கான பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கவே செய்வேன்.***

*அறிவிப்பவர் : அனஸ் (ரலி), ஆதாரம் : திர்மிதி (3540).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி திர்மிதியில் மாத்திரம் இடம்பெறுகின்றது. இதன் அறிவிப்பாளர் தொடர் ஏற்றுக் கொள்ள முடியுமானதாகும்.*

*இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள மூன்று விடயங்களும் பாவ மன்னிப்பைப் பெற்றுத் தரும் வழிகளாகும்.*

**01. எதிர்பார்ப்புடன் கேட்கும் பிரார்த்தனை :** பிரார்த்திக்கும் படி நாம் பணிக்கப் பட்டுள்ளதுடன், பதிலளிக்கப்படுவதாக வாக்களிக்கவும் பட்டுள்ளோம். “என்னை அழையுங்கள், நான் உங்களுக்கு பதிலளிப்பேன் என உமது இரட்சகன் கூறுகின்றான்” (ஃகாபிர் : 60). நபி (ஸல்) அவர்கள் “பிரார்த்தனை என்பதே ஒரு வணக்கம் தான்” என்று கூறிவிட்டு மேற்கண்ட வசனத்தை ஓதினார்கள்.[1]

எனினும் பிரார்த்தனையின் நிபந்தனைகள் பூர்த்தியாகி, ஏற்கப்படுவதற்கான தடைகளும் நீங்குவதன் மூலமே அது ஏற்கப்படுகின்றது. உள்ளத்தினால் இறைஞ்சுவதும் பதிலை எதிர்பார்ப்பதும் பிரார்த்தனையின் பிரதான நிபந்தனைகளில் உள்ளதாகும். நபி (ஸல்) கூறினார்கள் : “பதில் கிடைக்குமென்ற முழு நம்பிக்கையுடன் நீங்கள் அல்லாஹ்வை அழையுங்கள். ஏனெனில் அல்லாஹ் வீண் பராக்குடன், அலட்சியமான உள்ளத்துடன் கேட்கும் பிரார்த்தனையை ஏற்கமாட்டான்”.[2] இதனால் தான் ஓர் அடியான் தனது பிரார்த்தனையில் “இறைவா! நீ நாடினால் என்னை மன்னித்து விடு” என்று கேட்கத் தடை செய்யப்பட்டுள்ளான். எனினும் உறுதியுடன் வலியுறுத்திக் கேட்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ்வை நிர்ப்பந்திப்பவன் யாருமில்லை.[3]

**“நீ என்னை எதிர்பார்த்து அழைக்கும் போதெல்லாம் உன்னிடமுள்ள பாவங்களை நான் மன்னிப்பேன். பொருட்படுத்த மாட்டேன்”**

அதாவது உன்னுடைய பாவங்கள், தவறுகள் அதிகமாக இருந்தாலும் அது என்னிடம் பெரிதாக இருக்கமாட்டாது. அதிகமாக கணிக்கவும் மாட்டேன்.

---

*1.அறிவிப்பவர் : நுஃமான் பின் பஷீர் (ரலி), ஆதாரம் : அபூதாவூத் (1479), திர்மிதி (3247), ஸுனன் நஸாஈ அல்குப்ரா (6/450), இப்னுமாஜாஃ (3828). இமாம் திர்மிதி இது “ஹஸன் ஸஹீஹ்” எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுறுள்ளார்கள்.*

*2. அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : திர்மிதி (3479), இதன் அறிவிப்பாளர் தொடரில் ஸாலிஹ் அல்முர்ரீ என்ற விமர்சனத்திற்குரிவர் உள்ளார். எனினும் அஷ்ஷேக் அல்பானீ தனது ஸஹீஹுத் தர்கீபில் (1653) ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.*

*3.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6339), முஸ்லிம் (2678, 2679).*
*மக்கள் மத்தியில் பரவலாக உள்ள ஒரு தவறை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். சிலர் தமது சகோதரர்களுக்கு முன்னிலையில் பிரார்த்திக்க விரும்பினால் “அல்லாஹ் நாடினால் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!, அல்லாஹ் நாடினால் உங்களுக்கு அனுகூலும் புரிவானாக!” எனப் பிரார்த்திக்கின்றனர். இதுவும் தடை செய்யப்பட்டதாகும். இந்நபிமொழியை அமுல்படுத்துமுகமாக அல்லாஹ்வின் நாட்டம் (إِنْ شَاءَ اللهُ) எனும் வார்த்தையை பிரார்த்தனையில் சேர்க்காமலிருத்தல் வேண்டும்.*

**02. பாவமன்னிப்புத் தேடுதல் (இஸ்திஃபார்) :** பாவங்கள் பெரிதாக மேகத்தை முட்டுமளவு அல்லது பார்வைக்கெட்டும் தூரம் வரை இருந்தாலும் (அவன் மன்னிப்பான்).

இஸ்திஃபார் என்பது பாவமன்னிப்புத் தேடுவதாகும். مَغْفِرَة என்பது அப்பாவத்தை மறைப்பதுடன் அதன் தீங்கை விட்டும் பாதுகாத்தலாகும்.

இஸ்திஃபாரில் சிறந்த முறை : முதலில் அல்லாஹ்வைப் புகழ்ந்து விட்டு, இரண்டாவதாக தனது பாவங்களை ஏற்றுக் கொண்டு, பின்னர் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவதாகும்.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'அல்லாஹும்ம! அன்த்த ரப்பீ. லா இலாஹ இல்லா அன்த்த. கலக்த்தனீ. வ அன அப்துக்க. வ அன அலா அஹ்திக, வ வஃதிக மஸ்ததஃத்து. அஊது பிக்க மின் ஷர்ரி மா ஸனஃத்து. அபூஉ லக்க பி நிஃமத்திக்க அலய்ய, வ அபூஉ லக்க பி தன்பீ. ஃபஃக்பிர்லீ. ஃபஇன்னஹு லா யஃக்பிருத் துனூப இல்லா அன்த்த" என்று ஒருவர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.*

*(பொருள்: அல்லாஹ்வே! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை. நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்) ஒப்புக் கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.)*[1]

**இஸ்திஃபாரின் மற்றுமொரு வார்த்தை :**

*"அஸ்தஃபிருல்லாஹல்லதீ லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம் அவதூபு இலைஹி"*

*பொருள் : என்றும் உயிருடன் நிலைத்திருக்கும், உண்மையாக வணங்கப்படத் தகுதியான அந்த அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி மீள்கின்றேன்.*

*1.அறிவிப்பவர் : ஷத்தாத் பின் அவ்ஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி (6306).*

போரிலிருந்து தப்பியோடினாலும் இவ்வார்த்தையைக் கூறியவருக்கு மன்னப்பளிக்கப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.[1]

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “அல்லாஹ்வின் மீதாணையாக நான் தினமும் எழுபது தடவைக்கு மேல் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி மீள்கிறேன்”.[2]

மேலும் கூறினார்கள் : “எனது உள்ளத்தில் (அல்லாஹ்வையன்றி) வேறு சிந்தனை ஏற்படுகின்றது. நான் தினமும் நூறு தடவைகள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகின்றேன்”.[3]

**03.** ஓரிறைக் கொள்கை : இதுதான் பிரதான காரணமாகும். அதை இழந்தவன் பாவமன்னிப்பை இழக்கின்றான். அதனுடன் வந்தவர் பாவமன்னிப்பிற்கான பிரதான காரணியுடன் வந்தவராவார்.

ஓரிறைக் கொள்கையுடன் பூமி நிரம்ப பாவங்களைச் சுமந்து வந்தாலும் அதே அளவு பாவமன்னிப்புடன் அல்லாஹ் அவனைச் சந்திக்கின்றான். எனினும் இது அவனின் நாட்டத்திற்குட்பட்டதாகும். அவன் நாடினால் மன்னிப்பான், நாடினால் குற்றம் பிடிப்பான், பின் அவன் நரகில் நிரந்தரமாக இருக்க மாட்டான். தண்டனைக் காலம் முடிந்த பின் அங்கிருந்து வெளியேறி சுவனம் நுழைவான்.

இது தான் இமாம் நவவீ (ரஹ) அவர்கள் இந்நூலில் கூறியுள்ள இறுதி நபிமொழியாகும். நாங்கள் அல்லாஹ்வின் நாட்டத்துடனும், உதவியுடனும் பல தகவல்கள், தத்துவங்கள், ஒழுக்கங்களை உள்ளடக்கிய மற்றும் சில நபிமொழிகளைக் கூறி ஐம்பது நபிமொழிகளாகப் பூர்த்தி செய்வோம். அல்லாஹ்வே சரியான பாதைக்குப் பாக்கியமளிப்பவன்.

1.அறிவிப்பவர் : அபூ யஸார் (ரலி), ஆதாரம் : அபூ தாவூத் (1517), திர்மிதி (3577), இதன் அறிவிப்பாளர் வரிசை தொடரானதும் ஸஹீஹானதும் என இமாம் முன்திரீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.

2.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (6307).

3.அறிவிப்பவர் : அபூ தர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2702).

# ஹதீஸ் 43

## வாரிசுரிமைச் சட்டம்

عَنِ ابْنِ عَبَّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ :
"أَلْحِقُوا الْفَرَائِضَ بِأَهْلِهَا، فَمَا أَبْقَتِ الْفَرَائِضُ، فَلِأَوْلَى رَجُلٍ ذَكَرٍ" . خَرَّجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (பாகப் பிரிவினை தொடர்பாகக் குர்ஆன் நிர்ணயித்துள்ள) பாகங்களை (முதலில்) அவற்றுக்கு உரியவர்களிடம் சேர்த்து விடுங்கள். பாகம் நிர்ணயிக்கப்பட்டவர்கள் எடுத்தது போக எஞ்சியிருப்பது (இறந்தவரின்) மிக நெருக்கமான (உறவினரான) ஆணுக்கு உரியதாகும்.*

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி 6746, முஸ்லிம் 1615).*

**விரிவுரை :**

இந்நபிமொழி மரணித்தவரின் குடும்பத்தவர்களுக்கு மத்தியில் அவர் விட்டுச் சென்ற சொத்துக்களை அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள பிரகாரம் பங்கீடு செய்வதை விளக்குகின்றது. மேலும் மீதமுள்ளதை அல்குர்ஆன் வெளிப்படையாகக் கூறாத அநந்தரக்காரர்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பது, மீதமுள்ள சொத்துக்களை பங்கீடு செய்யும் முறை பற்றியும் விவரிக்கின்றது.

அல்குர்ஆன் வசனங்களுடன் இதுபோன்ற நபிமொழிகளையும் இணைத்தால் பங்கு நிர்ணயிக்கப்பட்டவர்கள் எஞ்சியதைப் பெறுவோர் அனைவருடைய பங்குகளையும் சரியான முறையில் அறியலாம்.(1)

1.வாரிசுரிமைக் கலையைக் கற்பதை இந்நபிமொழி தூண்டுகின்றது. அதன் மூலம் உயிரோடிருப்பவர்கள், மரணித்தவர்கள் அனைவருடைய உரிமைகளும் பாதுகாக்கப் படுகின்றன. முதலில் அழிந்து போகும் கலையும் இதுதான் என சில அறிவிப்புக்களில் உள்ளன. **(அப்துல் அஸீஸ் அத்தரீபீ)**

# ஹதீஸ் 44

## பால்குடி உறவு

عَنْ عَائِشَةَ رَضِيَ اللهُ عَنْهَا عَنِ النَّبِيِّ ﷺ قَالَ:

"الرَّضَاعَةُ تُحَرِّمُ مَا تُحَرِّمُ الْوِلَادَةُ." خَرَّجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***இரத்த உறவின் காரணத்தால் ஹராமாகின்ற அனைத்துமே பால்குடி உறவின் காரணத்தாலும் ஹராமாகி விடும்.***

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : புஹாரி 2646, முஸ்லிம் 1444).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி ஆஇஷா (ரலி) அவர்களைத் தொட்டும் அம்ரா (ரஹ்) வாயிலாக இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகிய இருவரும் அறிவித்துள்ளதுடன் உர்வா பின் ஸுபைர் (ரஹ்) வாயிலாக இமாம் முஸ்லிம் மாத்திரம் பின்வருமாறு அறிவித்துள் ளனர் : "இரத்த உறவின் மூலம் ஹராமாகக் கூடியவை பால்குடி உறவின் மூலமும் ஹராமாகும்".*

*இதே செய்தியை இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைத் தொட்டும் இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோர் அறிவித்துள்ளனர்.*

*இந்நபிமொழியை அமுல்படுத்துவதிலும், பால்குடி உறவின் மூலம் மஹ்ரமிய்யத் (திருமணம் செய்யத் தடை செய்யப்பட்ட உறவினர்) உருவாகும் என்பதிலும் அனைத்து அறிஞர்களும் ஒருமித்துள்ளனர்.*[1]

---

*1. பால்குடி உறவின் மூலம் மஹ்ரமிய்யத் மாத்திரமே உருவாகும். எனினும் அந்த உறவுமுறை அவசியம் சேர்ந்து நடக்க ஏவப்பட்டுள்ள இரத்த உறவாக மாறமாட்டாது. என்றாலும் அந்த உறவையும் சேர்ந்து நடப்பது பரிபூரணமான உபகாரமாகவும், அழகிய தொடர்பாகவும், சிறந்த பிரதியுபகாரமாகவும் உள்ளது. நபி (ஸல்) அவர்களுக்குப் பாலூட்டிய பெண்ணை அபூலஹப் உரிமையிட்டதற்காக அவனுக்காக அல்லாஹ்விடம் நபியவர்கள் செய்த பரிந்துரையை அவன் ஏற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.*

*எனவே பாலூட்டுதல் ஒரு சிறப்பாகவும் நல்லுபகாரமாகவும் உள்ளது. அதற்காக நன்றி செலுத்துவதும் பிரதியுபகாரம் செய்வதும் அவசியமாகும்.*

# ஹதீஸ் 45

## தடை செய்யப்பட்ட பொருளீட்டல்

عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ أَنَّهُ سَمِعَ النَّبِيَّ ﷺ عَامَ الْفَتْحِ وَهُوَ بِمَكَّةَ يَقُولُ:

"إِنَّ اللهَ وَرَسُولَهُ حَرَّمَ بَيْعَ الْخَمْرِ وَالْمَيْتَةِ وَالْخِنْزِيرِ وَالْأَصْنَامِ" فَقِيلَ: يَا رَسُولَ اللهِ، أَرَأَيْتَ شُحُومَ الْمَيْتَةِ، فَإِنَّهُ يُطْلَى بِهَا السُّفُنُ، وَيُدْهَنُ بِهَا الْجُلُودُ، وَيَسْتَصْبِحُ بِهَا النَّاسُ؟ قَالَ: "لَا، هُوَ حَرَامٌ" ثُمَّ قَالَ رَسُولُ اللهِ ﷺ عِنْدَ ذَلِكَ: "قَاتَلَ اللهُ الْيَهُودَ، إِنَّ اللهَ حَرَّمَ عَلَيْهِمِ الشُّحُومَ، فَأَجْمَلُوهُ، ثُمَّ بَاعُوهُ، فَأَكَلُوا ثَمَنَهُ." خَرَّجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِم

*நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது, நிச்சயமாக அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் மதுபானம், செத்தவை, பன்றி, உருவச் சிலைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதைத் தடை செய்துள்ளனர்!” என்று கூறினார்கள். அப்போது அவர்களிடம், 'இறைத்தூதர் அவர்களே! செத்தவற்றின் கொழுப்புகள் கப்பல்களுக்குப் பூசப்படுகின்றன. தோல்களுக்கு அவற்றின் மூலம் மெருகேற்றப் படுகிறது. மக்கள் விளக்கேற்ற அவற்றைப் பயன்படுத்துகின்றனர்;. எனவே, அதைப் பற்றிக் கூறுங்கள்!” எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'கூடாது! அது விலக்கப்பட்டது!” எனக் கூறினார்கள். அப்போது தொடர்ந்து, 'அல்லாஹ் யூதர்களை சபிப்பானாக! அல்லாஹ் யூதர்களுக்குக் கொழுப்பை தடைசெய்த போது, அவர்கள் அதை உருக்கி விற்று, அதன் கிரயத்தை சாப்பிட்டார்கள்!” என்று கூறினார்கள்.*

*அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி), ஆதாரம் : புஹாரி 2236, முஸ்லிம் 1581).*

**விரிவுரை :**

*இந்த நபிமொழி புஹாரி, முஸ்லிம் ஆகிய இரு நூட்களிலும் இடம் பெற்றுள்ளது. இதே செய்தியை இமாம் அபூதாவூத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வாயிலாக பின்வரும் வார்த்தையுடன் அறிவித்துள்ளார்:*

*“அல்லாஹ் ஒரு பொருளை உண்பதைத் தடை செய்தால் அதன் பெறுமதியையும் தடை செய்வான்”.*[(1)]

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “அல்லாஹ் யூதர்களை சபிப்பானாக! (மிருகங்களின்) கொழுப்பு அவர்களுக்கு தடுக்கப்பட்ட போது அதனை விற்றுப் பணத்தைப் பயன்படுத்தினார்கள்”.*[(2)]

*'பகரா' அத்தியாயத்தில் வட்டி (விலக்கப்பட்டது என்பது) பற்றிய வசனங்கள் இறங்கிய போது நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்குச் சென்று மக்களுக்கு அவ்வசனங்களை ஓதிக் காட்டினார்கள். மதுபானங்கள் விற்பதும் விலக்கப்பட்டுள்ளது என அறிவித்தார்கள்.*[(3)]

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “அல்லாஹ் மதுவைத் தடை செய்துவிட்டான். எனவே, தம்மிடம் மதுவில் ஏதேனும் வைத்திருப்பவரை இந்த வசனம் அடைந்தால், மதுவை அவர் அருந்தவும் வேண்டாம்; விற்கவும் வேண்டாம்" என்று சொன்னார்கள். உடனே, மக்கள் தங்களிடமிருந்த மதுவுடன் மதீனாவின் சாலையை நோக்கிச் சென்று அவற்றைக் கொட்டி விட்டனர்.*[(4)]

*நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு தோல்பை (நிரம்ப) மதுவை அன்பளிப்பாக வழங்கினார் ஒருவர். அவரிடம் நபி (ஸல்) அவர்கள், “அல்லாஹ் மதுவைத் தடை செய்துவிட்டது உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், “இல்லை" என்று கூறிவிட்டு, பிறகு (தம் அருகிலிருந்த) ஒரு மனிதரிடம் இரகசியமாக ஏதோ சொன்னார். உடனே நபி (ஸல்) அவர்கள், “அவரிடம் இரகசியமாக என்ன சொன்னீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர், “அதை விற்றுவிடச் சொன்னேன்" என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “மதுவை அருந்துவதற்குத் தடை விதித்த (இறை)வனே அதை விற்பதற்கும் தடை விதித்துள்ளான்" என்றார்கள். உடனே அம்மனிதர் தோல்பையைத் திறந்துவிட, அதிலுள்ளது (வழிந்தோடிப்) போனது.*[(5)]

---

*1.நூல் : அபூதாவூத் (3488), அஹ்மத் (2678). இதன் அறிவிப்பாளர் தொடர் வலுவானது என அஷ்ஷேக் அஹ்மத் ஷாகிர் கூறியுள்ளார்.*

*2. அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி (2224), முஸ்லிம் (1582).*

*3.அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி), ஆதாரம் : புஹாரி : (459), முஸ்லிம் (1580).*

*4.அறிவிப்பவர் : அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1578).*

*5.அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (1579).*

மேற்கண்ட நபிமொழிகளின் சுருக்கம் என்னவெனில் : அல்லாஹ் ஒரு பொருளிலிருந்து பயனடைவதைத் தடை செய்தால் அதை விற்பதும், அதன் மூலம் வரும் பணத்தைப் பயன்படுத்துவதும் சேர்த்தே ஹராமாகின்றது. ''அல்லாஹ் ஒரு பொருளைத் தடை செய்தால் அதன் பெறுமதியையும் தடை செய்வான்'' என்ற அறிவிப்பில் வெளிப்படையாகவே இடம் பெற்றுள்ளது. எதன் மூலமெல்லாம் பயனடைவது ஹராமாவதை நோக்காகக் கொண்டுள்ளதோ அவ் அனைத்து விடயங்களையும் ஒருங்கிணைக்கக் கூடிய பொதுவான வார்த்தையாக இது திகழ்கின்றது.

# ஹதீஸ் 46

### போதைப்பொருள் ஹராமாகும்

عَنْ أَبِي بُرْدَةَ، عَنْ أَبِيهِ، (أَبِي مُوسَى الْأَشْعَرِيِّ)

أَنَّ النَّبِيَّ ﷺ بَعَثَهُ إِلَى الْيَمَنِ، فَسَأَلَهُ عَنْ أَشْرِبَةٍ تُصْنَعُ بِهَا.فَقَالَ: وَمَا هِيَ؟ قَالَ: الْبِتْعُ وَالْمِزْرُ، فَقِيلَ لِأَبِي بُرْدَةَ: وَمَا الْبِتْعُ؟ قَالَ: نَبِيذُ الْعَسَلِ، وَالْمِزْرُ نَبِيذُ الشَّعِيرِ، فَقَالَ: "كُلُّ مُسْكِرٍ حَرَامٌ" خَرَّجَهُ الْبُخَارِيُّ

***நபி (ஸல்) அவர்கள் என்னை யமன் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது அங்கு தயாரிக்கப்படும் பானங்கள் குறித்து (அவற்றின் சட்டம் என்ன என்று) நான் அவர்களிடம் விசாரித்தேன். அதற்கு அவர்கள் 'அவை யாவை?" என்று கேட்டார்கள். நான் 'அல்பித்உ, அல் மிஸ்ர்" என்றேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் ஹராம் (விலக்கப்பட்டது) ஆகும்" என்று பதிலளித்தார்கள்.*** *இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான ஸயீத் இப்னு அபீ புர்தா (ரஹ்) கூறினார் :* ***நான் இதை எனக்கு அறிவித்த (என் தந்தை) அபூ புர்தா (ரஹ்) அவர்களிடம், 'بِتْعُ" என்றால் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், بِتْعُ என்பது தேனில் தயாரிக்கப்படும் பானம், 'مِزْرُ' என்பது வாற்கோதுமையில் தயாரிக்கப்படும் பானம்" என்று பதிலளித்தார்கள்.***

*அறிவிப்பவர் : அபூ மூஸா அல்அஷ்அரீ (ரலி), ஆதாரம் : புஹாரி 4343).*

**விரிவுரை :**

போதைவஸ்துப் பாவனை அனைத்தும் ஹராமானவை என்பதற்கு இந்நபிமொழி பிரதான அடிப்படையாக உள்ளது.

**புத்தி பேதலிக்கும் போதை இரு வகைப்படும் :**

**01.** இன்பமும் பரவசமும் உள்ள போதைப் பொருள். அதுதான் தடை செய்யப் பட்டுள்ள மதுபான வகைகளாகும். இது திண்மமோ, திரவமோ உண்ணக் கூடியதோ பருகக் கூடியதோ, தானியம், பழவகை, பால்

எதிலிருந்து செய்யப்பட்டிருந்தாலும் அனைத்துமே தடுக்கப்பட்ட மது வகையைச் சார்ந்ததென சில அறிஞர்கள் கூறியுள்ளனர். அத்துடன் போதைக்காகவும், இன்பத்திற்காகவும் உட்கொள்ளப்படக் கூடிய கஞ்சா செடி போன்றவற்றையும் இதனுடன் இணைத்துள்ளனர்.

நபி (ஸல்) அவர்கள் மதி மயக்குகின்ற, போதையூட்டுகின்ற அனைத்தையும் தடை செய்துள்ளார்கள்.[1]

*02.* இன்பமோ, பரவசமோ அற்ற புத்தியைப் பேதலித்து போதையூட்டக் கூடியவை. உதாரணமாக ஹென்பேன் எனும் மயக்க மருந்துச் செடி. பெரும்பாலும் போதையேற்படாத அளவு சிகிச்சைக்காகப் பயன்படுத்துவது கூடும் என ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்கள் கூறுகின்றனர். சிகிச்சைக்கல்லாமல் இவ் மயக்க மருந்தைப் பயன்படுத்துவது கூடாதென இமாம் அபூ யஃலா, இப்னு குதாமா போன்றோர் கூறியுள்ளனர். ஏனெனில் இது அவசியமின்றி மயக்கத்தை ஏற்படுத்துவதாகும். எனவே இதுவும் மதுவருந்தி மயக்க நிலை ஏற்படுவது போன்றாகும்.

பரவசமும் அதிக போதையுமுள்ள ஒன்றை உட்கொண்டால்தான் தண்டனை உண்டு. ஏனெனில் அதில்தான் உள்ளம் அதிக நாட்டம் கொள்கின்றது. எனவே அது தவிர்க்கப்பட வேண்டியதே.

இன்பமோ, பரவசமோ இல்லாத மதிமயக்கப் பொருட்களை உட்கொண்டவருக்கு நீதிபதி நிர்ணயிக்கும் தண்டனை வழங்கப்படும். மது அருந்தியவருக்கு வழங்கப்படும் தண்டனை இவருக்கு வழங்கப்படமாட்டாது. ஏனெனில் இன்பம், பரவசமற்ற பொருட்களில் உள்ளம் அதிக நாட்டம் கொள்ளமாட்டாது. எனவே இது இறந்த பிணம், பன்றி இறைச்சி, இரத்தம் போன்றவற்றை உட்கொள்வதைப் போன்றாகும்.

*1.அறிவிப்பவர் : உம்மு ஸலமா (ரலி), ஆதாரம் : அபூ தாவூத் (3686), இதன் அறிவிப்பாளர் வரிசை பலவீனமானதென அஷ்ஷேக் அல்பானீ தனது ழஈபு ஸனனி அபீதாவூத் (793) எனும் நூலில் கூறியுள்ளார்கள்.*

# ஹதீஸ் 47

## இஸ்லாத்தில் ஆரோக்கியம்

عَنِ الْمِقْدَامِ بْنِ مَعْدِي كَرِبَ قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ:

"مَا مَلَأَ آدَمِيٌّ وِعَاءً شَرًّا مِنْ بَطْنٍ، بِحَسْبِ ابْنِ آدَمَ أَكَلَاتٌ يُقِمْنَ صُلْبَهُ، فَإِنْ كَانَ لَا مَحَالَةَ، فَثُلُثٌ لِطَعَامِهِ، وَثُلُثٌ لِشَرَابِهِ، وَثُلُثٌ لِنَفَسِهِ» رَوَاهُ الْإِمَامُ أَحْمَدُ وَالتِّرْمِذِيُّ وَالنَّسَائِيُّ وَابْنُ مَاجَهْ، وَقَالَ التِّرْمِذِيُّ: حَدِيثٌ حَسَنٌ

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***மனிதன் வயிற்றை விட மோசமான எந்தப் பையையும் நிரப்பவில்லை. மனிதனுக்கு தனது முதுகெலும்பை நிமிர்த்துமளவு சில கவளங்கள் உணவு போதுமானது. அதை விட அவசியமென்றால் மூன்றிலொரு பகுதி உணவுக்கும், மூன்றிலொரு பகுதி பானத்திற்கும், மீதி மூன்றிலொரு பகுதி சுவாசிக்கவும் பிரித்துக் கொள்ளட்டும்;.***

*அறிவிப்பவர் : மிக்தாம் பின் மஃதீகரிப் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (17186), திர்மிதி (2380), நஸாஈ (6737), இப்னு மாஜாஃ (3349). இமாம் திர்மிதி இது ஹஸன் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.*

**விரிவுரை :**

*இது அனைத்து வைத்திய அடிப்படைகளையும் ஒருங்கிணைத்துள்ள ஒரு நபிமொழியாகும்.*

*இந்நபிமொழியை இமாம் அபூ கைஸமாவின் நூலில் வாசித்த வைத்தியர் இப்னு மாஸவைஹி என்பவர் : "இந்த வார்த்தைகளை மக்கள் சரியாகப் பயன்படுத்தினால் நோய்களிலிருந்து ஈடேற்றமடைந்து விடுவார்கள், வைத்தியசாலைகள், மருந்தகங்கள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்து விடும்" எனக் கூறியதாக அறிவிக்கப் பட்டுள்ளது.*

ஏனெனில் அனைத்து நோய்க்கும் அடிப்படை வயிறு நிரம்ப உண்ணுவதால் ஏற்படும் அஜீரணமாகும். இதே கருத்தை சில அறிஞர்களும் கூறியுள்ளனர். நபி (ஸல்) அவர்கள் கூறியதாகவும் இச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. எனினும் அது வலுவானதல்ல. ஹாரிஸ் பின் கலதா எனும் வைத்தியர் கூறுகின்றார் : குறைவாக உண்ணுவது பிரதான மருந்தாகும். வயிறு நிரம்ப உண்ணுவதுதான் தலையாய நோயாகும். இதனையும் சிலர் நபியுடைய வார்த்தையாக கூறியுள்ளனர். எனினும் அதுவும் வலுவானதல்ல.

இவை உணவைக் குறைத்து, வயிறு நிரம்பாமலிருப்பதால் உடலாரோக்கியம் மற்றும் அதன் சீரோட்டத்திற்கு ஏற்படும் சில பயன்களாகும்.

இதனால் இதயத்திற்கு ஏற்படும் பயன்கள் என்னவெனில் : உணவைக் குறைப்பதால் இதயம் மென்மையடைதல், புரிந்து கொள்ளும் சக்தி, இலகுவானசுவாசம் அதிகமாதல், கோபம், மனோஇச்சை பலவீனப்படுதல் போன்றன ஏற்படுகின்றன. அதிக உணவுப் பழக்கம் மேற்கண்டவற்றுக்குப் புறம்பானவற்றையே தோற்றுவிக்கின்றது.

“யாருடைய உணவு குறைகின்றதோ அவர் புரிந்து கொள்வார், புரிய வைப்பார், தெளிவாகவும், மென்மையாகவும் இருப்பார். மேலும் அதிக உணவுப் பழக்கமுடையவர்தான் விரும்புபவற்றை செய்ய சிரமப்படுவார்” என முஹம்மத் பின் வாஸில் (ரஹ்) கூறியதாக இமாம் இப்னு அபித் துன்யா தனது “அல்ஜூஃ” எனும் நூலில் அறிவித்துள்ளார்கள்.

“உனது உடல் ஆரோக்கியமாக இருந்து, உறக்கமும் குறைய வேண்டுமாக இருந்தால் உணவைக் குறைத்துக் கொள்” என ஸுஃப்யான் அஸ்ஸௌரீ (ரஹ்) தனக்கு எழுதியனுப்பியதாக உஸ்மான் பின் ஸாஇதா (ரஹ்) கூறியுள்ளார்கள்.

ஒரு விசுவாசியுடைய பிரதான நோக்கம் தனது வயிறாகவோ, அவனது ஆசைகள் அவனை மிகைக்கக் கூடியதாகவோ இருக்கக் கூடாது என இமாம் மாலிக் பின் தீனார் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

மேற்கொண்ட மிக்தாம் பின் மஃதீகரிப் (ரலி) அவர்களின் நபிமொழியில் உணவைக் குறைத்துக் கொள்ளுமாறு நபியவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள். “**மனிதனுக்கு தனது முதுகெலும்பை நிமிர்த்துமளவு**

*சில கவளங்கள் உணவு போதுமானது" எனக் கூறியுள்ளார்கள். ஒரு விசுவாசியின் உணவுப் பழக்கத்தில் மிக அழகானது வயிற்றில் மூன்றிலொரு பகுதியை உணவுக்கும், மூன்றிலொரு பகுதியை பானத்திற்கும் பயன்படுத்தி விட்டு மீதி மூன்றிலொரு பகுதியை சுவாசத்திற்காக விட்டு வைப்பதாகும். ஏனெனில் அதிக பானமும் உறக்கத்தை வரவழைத்து, உணவையும் (சமிபாடடைய விடாது) சீர்குலைத்து விடும்.*

*நபியவர்களும் தோழர்களும் அதிக நேரம் பசித்திருந்து, தாம் ஆசைப் படுவதையெல்லாம் உண்பதைக் குறைத்துக் கொள்வார்கள். அது உணவுப் பற்றாக்குறை காரணமாக இருந்தாலும் அல்லாஹ் தனது தூதருக்கு மிகப் பரிபூரணமான, சிறந்ததைத் தான் தெரிவு செய்கின்றான்.*

*நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை தொடர்ச்சியாக இரு நாட்கள் வாற்கோதுமை ரொட்டியால் வயிறு நிரம்பியதில்லை என அன்னை ஆஇஷா (ரலி) குறிப்பிடுகிறார்கள்.[1]*

*மக்களுக்குக் கிடைத்துள்ள செல்வங்களைப் பார்த்து விட்டு உமர் (ரலி) அவர்கள் நான் நபி (ஸல்) அவர்கள் அன்றைய தினம் உண்பதற்காகத் தரம் குறைந்த பேரீத்தம்பழம் கூட கிடைக்காமல் சிரமப்பட்டதை நான் கண்டிருக்கிறேன் எனக் கூறினார்கள்.[2]*

*1. நூல் : முஸ்லிம் (2970).*

*2.அறிவிப்பவர் : உமர் (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2978).*

# ஹதீஸ் 48

## நயவஞ்சகனின் பண்புகள்

عَنْ عَبْدِ اللهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ - ﷺ -، قَالَ:

"أَرْبَعٌ مَنْ كُنَّ فِيهِ كَانَ مُنَافِقًا، وَمَنْ كَانَتْ خَصْلَةٌ مِنْهُنَّ فِيهِ كَانَتْ فِيهِ خَصْلَةٌ مِنَ النِّفَاقِ حَتَّى يَدَعَهَا: مَنْ إِذَا حَدَّثَ كَذَبَ، وَإِذَا وَعَدَ أَخْلَفَ، وَإِذَا خَاصَمَ فَجَرَ، وَإِذَا عَاهَدَ غَدَرَ.» خَرَّجَهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'நான்கு பண்புகள் எவனிடம் உள்ளனவோ அவன் வடிகட்டிய முனாஃபிக் ஆவான். அவற்றில் ஏதேனும் ஒன்று யாரிடமேனும் இருந்தால் அதை விட்டொழிக்கும் வரை நயவஞ்சகத்தின் ஒரு பண்பு அவனிடம் இருந்து கொண்டே இருக்கும். நம்பினால் துரோகம் செய்வான்;. பேசினால் பொய்யே பேசுவான்.; ஒப்பந்தம் செய்தால் அதை மீறுவான்;. விவாதம் புரிந்தால் நேர்மை தவறிப் பேசுவான்''*

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி), ஆதாரம் : புஹாரி 34, முஸ்லிம் 58).*

**விரிவுரை :**

இந்நபிமொழி புஹாரி, முஸ்லிம் இரண்டிலும் இடம்பெற்றுள்ளது.

ஏற்கப்படக்கூடிய அறிஞர்களின் விளக்கத்தின் படி மொழி ரீதியாக நிஃபாக் (நயவஞ்சகம்) என்பது மோசடி, தந்திரம், கெடுதியை மறைத்து நலவை வெளிப்படுத்தல் போன்றவையாகும். மார்க்க ரீதியாக இது இரு வகைப்படும்.

**01. பெரிய நயவஞ்சகம் :** இது ஒரு மனிதன் அல்லாஹ்வையும், அவனது மலக்குகள், வேதங்கள், தூதர்கள், மறுமை நாள் போன்றவற்றை விசுவாசிப்பதாக வெளிப்படையாகக் காட்டிவிட்டு உள்ரங்கமாக

அதற்குப் புறம்பானதை மறைத்து வைப்பதாகும். இந்த வகை நயவஞ்சகம் தான் நபியவர்களின் காலத்தில் இருந்து, அவர்களைத் தூற்றியும், இறை நிராகரிப்பாளர்கள் என்று கூறியும் இறை வசனங்கள் இறங்கின. இத்தகையவர்கள் நரகின் அடித்தளத்தில் இருப்பார்கள் எனவும் அல்குர்ஆன் கூறியுள்ளது.

**02.சிறிய நயவஞ்சகம் :** இது செயல் ரீதியான நயவஞ்சகமாகும். வெளிப் படையாக நல்லவர் போன்று நடித்து உள்ரங்கத்தில் அதற்கு மாற்றமாக தீயவனாக இருத்தல்.

ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள செயல் ரீதியான இவ்வகை நயவஞ்சகம் ஐந்து வகையுள்ளன.[1]

**01.** தான் கூறுவதை நம்பக்கூடிய மக்களிடம் பொய்யுரைத்தல்.

**02.** வாக்களித்தால் மாறு செய்வான். இது இரு வகைப்படும் :

**1.** தான் நிறைவேற்றப் போவதில்லை என நினைத்துக் கொண்டே வாக்களித்தல். இது மிக மோசமான வகையாகும்.

**2.** நிறைவேற்றும் நோக்கத்துடன் வாக்களித்தல். பின் தகுந்த காரணமின்றி நிறைவேற்றாமல் மாறு செய்தல்.

**03.தர்க்கம் புரிந்தால் மோசமாக நடந்து கொள்வான்.** அதாவது உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும் மாறுவதற்காக வேண்டுமென்றே சத்தியத்திலிருந்து வெளியேறி விடுவான். வாதிடும் போது அசத்தியத்திற்காக வாதாடி மக்களுக்கு அதை சத்தியமாகக் காட்டும் ஆற்றல் அந்த மனிதனிடம் இருந்தால் அது மிக மோசமான ஹராமாகவும், மிகத் தீய நயவஞ்சகமாகவும் ஆகி விடுகின்றது.

**04.ஒப்பந்தம் செய்தால் மீறுவான்.**

**05.அமானித மோசடி செய்வான்.** ஒரு மனிதன் ஒரு பொருளை அமானிதமாக ஒப்படைத்தால் அதனை மீள ஒப்படைப்பதே கடமையாகும். அவ்வாறின்றி மோசடி செய்வது நயவஞ்சகத் தனமாகும்.

---

1. இது புஹாரி, முஸ்லிமில் இடம்பெறும் அபூ ஹுரைரா (ரலி) அவர்களுடைய செய்தியில் உள்ள "நம்பினால் மோசடி செய்வான்" எனும் வார்த்தையுடன் சேர்த்தாகும்.

சுருக்கம் என்னவெனில் அனைத்துவித நயவஞ்சகமும் உள்ளொன்று புறமொன்று என இரட்டை நிலைப்பாட்டையே குறிக்கின்றன.

இதனால் தான் நபித்தோழர்கள் தம்மிடம் நயவஞ்சகம் ஏற்பட்டு விடக்கூடாது என அஞ்சக் கூடியவர்களாக இருந்தனர்.

உமர் (ரலி) அவர்கள் ஹுதைபா (ரலி) அவர்களிடம் நபியவர்கள் தன்னுடைய பெயரையும் நயவஞ்சகர் பட்டியலில் கூறியுள்ளார்களா? என வினவுவார்கள்.

நபித்தோழர்களில் யாராவது நயவஞ்சகத்தை அஞ்சுவதைத் தாங்கள் கண்டுள்ளீரா? என அபூ ரஜாஃ அல்அதாரிதீ (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட போது "ஆம், அவர்களில் நல்லதொரு கூட்டத்தை நான் சந்தித்துள்ளேன். –எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே-, அவர்கள் அனைவரும் கடுமையாக நயவஞ்சகத்தை அஞ்சுவோராக இருந்தனர்" எனக் கூறினார்கள்.

இப்னு அபீ முலைகா (ரஹ்) கூறுகின்றார்கள் : தன்னிடம் நயவஞ்சகம் வந்திடக் கூடாதென அஞ்சக் கூடிய சுமார் முப்பது நபித்தோழர்களை நான் சந்தித்துள்ளேன். "நயவஞ்சகத்தைப் பற்றி முஃமின் மாத்திரமே அஞ்சுவான். நயவஞ்சகன் மாத்திரமே அதைப்பற்றிய அச்சமின்றி இருப்பான்" என ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.(1)

**இது பற்றிய ஸலப் அறிஞர்களின் கூற்று அதிகமுள்ளன.**

தன்னிடம் நயவஞ்சகம் வந்திடக் கூடாது என அஞ்சாமலிருப்பவரைப் பற்றி நீர் என்ன கூறுகின்றீர்? என இமாம் அஹ்மதிடம் வினவப்பட்ட போது "யார் தான் நயவஞ்சகத்தைப் பற்றி அச்சமுற்றிருக்க முடியும்?" என பதிலளித்தார்கள்.

செயல் ரீதியான நயவஞ்சகத்தில் மிக மோசமானது எதுவெனில் : தீய நோக்கத்தை அடைவதற்காக ஒரு மனிதன் ஒன்றை செய்து விட்டு மக்களிடம் நன்நோக்கத் திற்காக அதைச் செய்ததாகக் காட்டிக்

---

1.இதனை இமாம் புஹாரி தனது ஸஹீஹில் "ஈமான்" எனும் பாடத்தில் "ஒரு முஃமின் தான் உணராமலே தனது நன்மைகள் அழிவதைப் பற்றிய அச்சம்" எனும் பகுதியில் பதிவு செய்துள்ளார்கள்.
(இந்நூலை சுருக்கியவர் கூறுகின்றார் :) நான் கூறுகிறேன் : நூலாசிரியர் தனது புஹாரிக்கான விரிவுரை நூலில் இதுபற்றி அழகாகத் தெளிவு படுத்தியுள்ளார்கள். வேறெங்கும் இது போன்று காணக் கிடைக்காது.

கொள்வதாகும். அந்நோக்கம் அவனுக்கு நிறைவேறுகின்றது. இந்த தந்திரம் மூலம் தனது நோக்கத்தை அடைந்து கொள்கின்றான். தனது தந்திரம், சூழ்ச்சி, தனது நடிப்பைப் பார்த்து மக்கள் தன்னைப் புகழ்ந்தது போன்ற விடயங்களை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றான். தான் மறைத்திருந்த நோக்கத்தையும் அடைகின்றான்.

அல்லாஹ் தனது திருமறையில் நயவஞ்சகர்கள், யூதர்களைப் பற்றிக் கூறியுள்ளான்:

**நயவஞ்சகர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளான் :**

*“தீங்கிழைப்பதற்காகவும், நிராகரிப்பதற்காகவும், நம்பிக்கையாளர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவும், இதற்கு முன்னர் அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் போரிட்டோருக்குப் புகலிடமாக அமைவதற்காகவும் அவர்கள் ஒரு மஸ்ஜிதை உருவாக்கிக் கொண்டனர். ‘(இதன் மூலம்) நன்மையைத் தவிர வேறு எதனையும் நாடவில்லை’ என சத்தியமும் செய்கின்றனர். நிச்சயமாக இவர்கள் பொய்யர்கள் என அல்லாஹ் சாட்சி கூறுகின் றான்” (தவ்பா : 107).*

**யூதர்கள் விடயத்தில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

*“தாம் செய்தவற்றிற்காக மகிழ்வடைபவர்களையும், செய்யாதவற்றுக்காகப் புகழப்படுவதை விரும்புபவர்களையும் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து வெற்றி பெற்றவர்கள் என்று நீர் ஒருபோதும் நினைக்க வேண்டாம். அவர்களுக்கு நோவினை தரும் வேதனை உண்டு” (ஆல இம்ரான் : 188).*

உள்ளும் புறமும் மாறுபடுவது தான் நயவஞ்சகம் என நபித்தோழர்கள் உறுதியாக நம்பியதால், அல்குர்ஆன் உபதேசங்களைக் கேட்கும் போது இருந்த உள்ளச்சம், மென்மை போன்றன உலக விடயங்களில் ஈடுபட்டு, மனைவி, மக்களுடன் கலக்கும் போது போய் விடுவதைக் கண்ட அவர்கள் அதனைக் கூட நயவஞ்சகமாகக் கருதி சிலர் அஞ்சியுள்ளனர்.

ஹன்ழலா பின் அர்ரபீஉ அல்உஸைதீ (ரலி) அவர்கள் கூறினார்கள் : (ஒரு நாள்) அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னைச் சந்தித்து, “ஹன்ழலா, எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். நான், “ஹன்ழலா நயவஞ்சகனாகி விட்டான்" என்று சொன்னேன். அதற்கு “அல்லாஹ் தூயவன். என்ன

*சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "நாம் நபி (ஸல்) அவர்களுக்கருகில் இருக்கும் போது அவர்கள் சொர்க்கம், நரகம் ஆகியவற்றைப் பற்றி நாம் நேரடியாகப் பார்ப்பதைப் போன்று நினைவூட்டுகிறார்கள். அவர்களிடமிருந்து நாம் புறப்பட்டு (வீட்டுக்கு) வந்ததும் துணைவியருடனும் குழந்தை குட்டிகளுடனும் கலந்துறவாடுகிறோம்; பிழைப்புகளில் ஈடுபட்டுவிடுகிறோம். (நபி (ஸல்) அவர்கள் சொன்னவற்றில்) அதிகமானவற்றை மறந்துவிடுகிறோம்" என்று சொன்னேன். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் மீதாணையாக! இதே நிலையை நாமும் சந்திக்கிறோம்" என்று கூறினார்கள். பிறகு நானும் அபூபக்ர் (ரலி) அவர்களும் நபி (ஸல்) அவர்களிடம் சென்றோம்.*

*நான், "அல்லாஹ்வின் தூதரே! ஹன்ழலா நயவஞ்சனாகிவிட்டான்" என்று சொன்னேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "என்ன அது?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் உங்கள் அருகிலிருக்கும் போது தாங்கள் எங்களுக்கு நரகத்தையும் சொர்க்கத்தையும் நாங்கள் நேரடியாகப் பார்ப்பதைப் போன்று நினைவூட்டுகிறீர்கள். நாங்கள் உங்களிடமிருந்து புறப்பட்டுச் சென்றதும் துணைவியருடனும் குழந்தை குட்டிகளுடனும் கலந்துறவாடுகிறோம்; பிழைப்புகளில் ஈடுபட்டுவிடுகிறோம். அதிகமானவற்றை மறந்து விடுகிறோம்" என்று சொன்னேன்.*

*அதற்கு நபி (ஸல்) அவர்கள், "என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! நீங்கள் என்னிடம் இருக்கும் போதுள்ள நிலையிலும் இறை எண்ணத்திலும் எப்போதும் இருந்தால், உங்கள் படுக்கைகளிலும் நீங்கள் செல்லும் வழிகளிலும் வானவர்கள் (வந்து) உங்களுடன் கை குலுக்கியிருப்பார்கள். மாறாக, ஹன்ழலா! (இப்படிச்) சில நேரம் (அப்படிச்) சில நேரம்" என்று மூன்று முறை கூறினார்கள்.*[1]

---

*1.அறிவிப்பவர் : ஹன்ழலா அல் உஸைதீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2750).*

## ஹதீஸ் 49

### அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டல்

عَنْ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ - ﷺ - قَالَ:

"لَوْ أَنَّكُمْ تَوَكَّلُونَ عَلَى اللهِ حَقَّ تَوَكُّلِهِ، لَرَزَقَكُمْ كَمَا يَرْزُقُ الطَّيْرَ، تَغْدُو خِمَاصًا، وَتَرُوحُ بِطَانًا" رَوَاهُ الْإِمَامُ أَحْمَدُ وَالتِّرْمِذِيُّ وَالنَّسَائِيُّ وَابْنُ مَاجَهْ وَابْنُ حِبَّانَ فِي "صَحِيحِهِ" وَالْحَاكِمُ، وَقَالَ التِّرْمِذِيُّ: حَسَنٌ صَحِيحٌ.

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :* ***நீங்கள் உமது விடயங்களை அல்லாஹ்வின் மீது உண்மையாகவே பொறுப்புச் சாட்டினால் பறவைகளுக்கு உணவளிப்பதைப் போன்று உங்களுக்கும் உணவளிப்பான். அவை அதிகாலையில் வெறும் வயிற்றுடன் சென்று மாலையில் நிரம்பிய வயிற்றுடன் திரும்புகின்றன.***

*அறிவிப்பவர் : உமர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (205), திர்மிதி (2344), ஸுனன் நஸாஈ அல்குப்ரா (11805), இப்னுமாஜா (4164), இப்னு ஹிப்பான் (730), ஹாகிம் (7894). இமாம் திர்மிதி இதனை ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.*

**விரிவுரை :**

*இந்நபிமொழி அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுவதில் (தவக்குல்) பிரதானஅடிப்படையாகும். இது மனிதவாழ்வாதாரத்தை வரவழைப்பதில் பாரிய பங்காற்று கின்றது.*

*“எவர் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்கிறாரோ அவருக்கு அவன் ஒரு வழியை ஏற்படுத்துவான். மேலும், அவர் நினைத்துப் பார்க்காத விதத்தில் அவருக்கு உணவளிப்பான். மேலும், எவர் அல்லாஹ்வின் மீது முழுமையாக நம்பிக்கை வைக்கின்றாரோ, அவருக்கு அவனே போதுமானவன்” (தலாக் : 2,3).*

உண்மையான தவக்குல் என்பது ஈருலக அனைத்து நலவுகளைக் கொண்டு வருவதிலும், கெடுதிகளைத் தடுப்பதிலும் உள்ளம் அல்லாஹ்வைச் சார்ந்திருப்பதில் உண்மையாயிருத்தலுடன், அனைத்து விடயங்களையும் அவனிடமே பொறுப்புச் சாட்டுதல், கொடுப்பவன், தடுப்பவன், நலவு, கெடுதியைத் தடுப்பவன் அவன் மாத்திரமே என்ற நம்பிக்கையைப் பதியவைத்தல் என்பனவாகும்.

ஈமானின் ஒட்டுமொத்தமும் தவக்குல் தான் என ஸஈத் பின் ஜுபைர் (ரஹ்) கூறினார்கள்.

இறுதி இலக்கு தவக்குல் தான் என வஹ்ப் பின் முனப்பிஹ் (ரஹ்) கூறினார்கள்.

தனது முழு நம்பிக்கையும் அல்லாஹ்தான் என ஓர் அடியான் அறிந்து செயற்படுவதே அவன் வைக்கும் தவக்குலாகும் என ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறினார்கள்.

உண்மையாக தவக்குல் வைப்பது அல்லாஹ் இவ்வுலகில் தனது நியதியாக ஏற்பாடு செய்துள்ள காரண, காரியங்களை மேற்கொள்வதற்கு ஒரு போதும் முரண்பட மாட்டாது என்பதை நீர் அறிந்து கொள்வீராக. தவக்குல் வைப்பதை ஏவியதுடன் அல்லாஹ் முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் ஏவியுள்ளான். எனவே உடலுறுப்புக்களால் காரணிகளைச் செய்ய முயற்சிப்பது அல்லாஹ்வுக்கு வழிப்படுவதாகும். உள்ளத்தால் அவன் மீது பொறுப்புச் சாட்டுவது அவனை நம்புவதாகும்.

"நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் முன்னெச்சரிக்கையுடன் இருங்கள்" (நிஸாஃ : 71).

"மேலும், அவர்களுக்கு எதிராக உங்களால் முடியுமான அளவு பலத்தையும், போர்க் குதிரைகளையும் தயார்படுத்துங்கள்" (அன்ஃபால் : 60).

தவக்குல் மூலம் நாம் அடையும் பயன் விதியைப் பொருந்திக் கொள்வதாகும் என்பதையும் அறிந்து கொள்வீராக. அல்லாஹ்விடம் தனது விடயங்களைப் பொறுப்புச் சாட்டிவிட்டு, தனக்காக அல்லாஹ் தீர்ப்புச் செய்து தெரிவு செய்ததைப் பொருந்திக் கொள்பவர் அவன் மீது உண்மையாகவே பொறுப்புச் சாட்டியவராவார்.

*இதனால் தான் ஹஸனுல் பஸரீ (ரஹ்), புழைல் (ரஹ்) போன்றோர் தவக்குல் என்பது விதியைப் பொருந்திக் கொள்வதென விளக்கமளித்துள்ளனர்.*

# ஹதீஸ் 50

## அல்லாஹ்வை நினைவு கூர்தல்

عَنْ عَبْدِ اللهِ بْنِ بُسْرٍ قَال:

أَتَى النَّبِيَّ - ﷺ - رَجُلٌ، فَقَال: يَا رَسُولَ اللهِ إِنَّ شَرَائِعَ الْإِسْلَامِ قَدْ كَثُرَتْ عَلَيْنَا، فَبَابٌ نَتَمَسَّكُ بِهِ جَامِعٌ؟ قَال: «لَا يَزَالُ لِسَانُكَ رَطْبًا مِنْ ذِكْرِ اللهِ عَزَّ وَجَلَّ.» خَرَّجَهُ الْإِمَامُ أَحْمَدُ بِهَذَا اللَّفْظِ

***நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து “அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாமிய சட்டங்கள் எங்கள் மீது அதிகரித்து விட்டன. நாம் பற்றிப் பிடிக்கக் கூடிய அனைத்தையும் ஒருங்கிணைத்த ஒரு வழியைக் கூறுங்கள்” எனக் கேட்டார். அப்போது நபியவர்கள் : “அல்லாஹ்வை நினைவு கூர்வதால் உனது நாவு நனைந்து கொண்டே இருக்கட்டும்” என்றார்கள்.***

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் புஸ்ர் (ரலி), ஆதாரம் : அஹ்மத் (17680).*

***விரிவுரை :***

*அல்லாஹ் விசுவாசிகளுக்கு தன்னை அதிகமாக நினைவு கூறுமாறு ஏவியுள்ளதுடன் அவ்வாறு நினைவுகூர்வோரை சிலாகித்தும் கூறியுள்ளான் :*

*“நம்பிக்கைகொண்டோரே! அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவுகூருங்கள். மேலும், காலையிலும், மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள்” (அஹ்ஸாப் : 41,42).*

*“மேலும், வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருங்கள்” (ஜூம்ஆ : 10).*

*நபி (ஸல்) அவர்கள் மக்கா செல்லும் சாலையில் பயணம் மேற்கொண்ட போது “ஜூம்தான்” எனப்படும் மலையொன்றைக் கடந்து சென்றார்கள்.*

அப்போது, “செல்லுங்கள்: இது “ஜும்தான்" மலை ஆகும். தனித்து விட்டவர்கள் வெற்றி பெற்றனர்" என்று சொன்னார்கள். மக்கள், “தனித்து விட்டவர்கள் என்போர் யார்? அல்லாஹ்வின் தூதரே?" என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூரும் ஆண்களும் நினைவுகூரும் பெண்களும் ஆவர்" என்று பதிலளித்தார்கள்.(1)(2)

இக்கருத்தில் தான் உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அரபா தின மாலை வேளையில் புறப்படும் நேரம் நெருங்கும் போது பின்வருமாறு கூறினார்கள் : இன்றைய தினம் தனது ஒட்டகத்தில் வேகமாகப் பயணிப்பவரல்ல வெற்றியாளர். மாறாக பாவம் மன்னிக்கப்பட்டவரே உண்மையான வெற்றியாளர்.

நபி (ஸல்) அவர்கள் தனது அனைத்து நேரங்களிலும் அல்லாஹ்வை நினைவு கூர்பவராக இருந்தார்கள் என ஆஇஷா (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.(3)

அல்லாஹ்வை அதிகம் நினைவு கூர்பவர்களே அடியார்களில் அவனுக்கு மிக விருப்பமானவர்கள் என ஹஸனுல் பஸரீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.

கஃப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வை அதிகம் நினைவு கூர்பவர் நயவஞ்சகத்தை விட்டும் நீங்கியவராவார். நயவஞ்சகர்கள் அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவுகூர்வார்களென அல்குர்ஆனில் கூறப்பட்டிருப்பது இதற்கு சான்று பகர்கின்றது. எனவே அல்லாஹ்வை அதிகம் நினைவுகூர்பவர்கள் இப்பண்பில் அவர்களுக்கு மாறுபடுகின்றனர். இதனால் தான் “அல்முனாபிகூன்” எனும் நயவஞ்சகர்களைப் பற்றிக் கூறும் அத்தியாயம் அல்லாஹ்வை நினைவு கூர்தலை ஏவியும், சொத்துக்கள் மற்றும் பிள்ளைகள் அதனை விட்டும் பராக்காக்காமல் இருக்கவும், அவ்வாறு பராமுகமாக இருந்தவர்கள் நட்டமடைந்தவர்கள் என்றும் கூறியே முடிக்கப்பட்டுள்ளது.

ரபீஃ பின் அனஸ் (ரலி) கூறினார்கள் : “அல்லாஹ்வை நேசிப்பதன் அடையாளம் அவனை அதிகம் நினைவுகூர்வதாகும். ஏனெனில் நீ எதனை அதிகம் நேசிக்கின்றாயோ அதைப் பற்றியே அதிகம் நினைவுகூர்வாய்”.

1.ஜும்தான் என்பது மதீனாவிலிருந்து ஓரிரவு பயணிக்கும் தூரத்திலுள்ள ஒரு மலையாகும். (அந்நிஹாயா 1/292).

2.அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம் (2676).

3. நூல் : முஸ்லிம் (373).

நபியவர்கள் தனது அனைத்து நேரங்களிலும் அல்லாஹ்வை நினைவுகூர்பவராக இருந்தார்கள் என்ற ஆஇஷா (ரலி) அவர்களின் கூற்றானது அன்னார் நிற்கும் போது, நடக்கும் போது, உட்காரும் போது, தூங்கும் போது, வுழூவுடன் இருக்கும் நிலையிலும், வுழூ இல்லாத நிலையிலும் என அனைத்து நிலைகளிலும் அல்லாஹ்வை நினைவுகூர்வார்கள் என்பதே விளக்கமாகும்.

காலித் பின் மஃதான் (ரஹ்) அல்குர்ஆன் ஓதுவதை விட மேலதிகமாக தினமும் நாற்பதாயிரம் தஸ்பீஹ்க்கள் செய்வார்கள். அவர்கள் மரணித்ததும் குளிப்பாட்டுவதற்காக கட்டிலில் வைக்கப்பட்டதும் அவர்களது விரல் தஸ்பீஹ் செய்யும் விதத்தில் காணப்பட்டது.

உமது நாவு ஓய்ந்ததாகக் காணவில்லையே, நாளாந்தம் எத்தனை தஸ்பீஹ் செய்கின்றீர்? என உமைர் பின் ஹானிஃ (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்ட போது “எண்ணும் போது விரல் தவறிழைத்தாலே தவிர சுமார் ஒரு இலட்சம் தஸ்பீஹ்கள்” எனக் கூறினார்கள்.

இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்களிடம் ஒருவர் தூங்கினார். அவர் கூறுகின்றார் : இரவில் நான் விழித்துப் பார்க்கும் போதெல்லாம் அவர் அல்லாஹ்வை நினைவுகூர்வதைக் கண்டேன். அதனைப் பார்த்து நான் கவலைப்பட்டு, பின்பு “இது அல்லாஹ்வுடைய சிறப்பு, தான் நாடியோருக்கு அவன் வழங்குவான்” (மாஇதாஃ : 54) எனும் வசனத்தைக் கொண்டு என்னையே நான் ஆறுதல் படுத்திக் கொண்டேன்.

அல்லாஹ்வைப் பற்றிய அறிவு எந்தளவு வலுவடைகின்றதோ அந்தளவு அவனை நினைவுகூர்வோரின் நாவுகளில் அவை இலகுவாக மாறிவிடும். இதனால் தான் சுவனவாதிகளுக்கு மூச்சு விடுவதைப் போன்று தஸ்பீஹ் உதிப்படைய வைக்கப்படுகின்றது. உலக மக்களுக்கு குளிர் நீரைப் போல் அவர்களுக்கு லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா இதமாக மாறிவிடுகின்றது.

எந்த ஒரு நிழலுமில்லாத மறுமை நாளில் அல்லாஹ் நிழல் வழங்கும் அந்த எழுவரில் தனிமையில் அல்லாஹ்வை நினைத்து கண்ணீர் வடித்தவரும் ஒருவராவார்.

திக்ர் அல்லாஹ்வை அறிந்த நல்லடியார்களின் உள்ளத்தின் இன்பமாகும்.

“நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வை நினைவுகூர்வதன் மூலம் அமைதி பெறுகின்றன. அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வை

நினைவுகூர்வதன் மூலம்தான் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன" *(ரஃத் : 28).*

அல்லாஹ்வை நினைவுகூர்வதைப் போன்று எதனாலும் யாரும் இன்பமடைய முடியாது என இமாம் மாலிக் பின் தீனார் (ரஹ்) கூறியுள்ளார்கள்.

# தினமும் ஓத வேண்டிய திக்ருகள்

ஐவேளைத் தொழுகைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதன் மூலம் முஸ்லிம்களுக்கு அல்லாஹ் தினமும் ஐந்து தடவைகள் அவனை நினைவு கூர்வதைக் கடமையாக்கியுள்ளான். இவற்றுடன் உபரியாக அவனை நினைவு கூர்வதையும் அவர்களுக்கு மார்க்கமாக்கியுள்ளான். கடமையான தொழுகைகளுக்கு மேலதிகமாக முன், பின் ஸுன்னத்துக்களை மார்க்கமாக்கியுள்ளான். கடமையான தொழுகையில் குறைபாடிருந்தால் மேலதிகமான இந்த ஸுன்னத் தொழுகை மூலம் அக்குறை நிவர்த்தி செய்யப்படுகின்றது. அவ்வாறில்லாவிடின் கடமைக்கு மேலதிகமான தொழுகைகளாக இவை பதியப்படுகின்றன.

இரு கடமையான தொழுகைகளுக்கிடையில் அதிக நேர இடைவெளி, இஷா – பஜ்ர் ஆகிய தொழுகைகளுக்கு இடையிலும், பஜர் - ளுஹ்ர் தொழுகைகளுக்கு இடையிலும்தான் உள்ளது. எனவே அல்லாஹ்வை நினைவுகூராமலிருக்கும் நேரம் நீளாமாகாமலிருக்க இஷா - பஜ்ருக்கிடையில் வித்ரு, இரவுத் தொழுகைகளையும், பஜர் - ளுஹ்ருக்கிடையில் ளுஹாத் தொழுகையையும் வைத்துள்ளான்.

நாவினால் திக்ர் செய்வதானது அனைத்து வேளைகளிலும் உள்ளது. சில நேரங்களில் அதிகளவு வலியுறுத்தப்படுகின்றது.

ஐவேளை கடமையான தொழுகைகளுக்குப் பின் செய்யப்படும் திக்ர்கள் இவற்றில் மிக வலியுறுத்தப்பட்டவையாகும்.

குறிப்பாக பின் ஸுன்னத் இல்லாத பஜ்ர், அஸ்ர் ஆகிய தொழுகைகளுக்குப் பின் திக்ரு செய்வது ஸுன்னாவாகும். பஜ்ருக்குப் பின் சூரியன் உதயமாகும் வரையிலும் அஸருக்குப் பின் சூரியன் மறையும் வரையிலும் திக்ரு செய்வது விரும்பத்தக்கது. இவ்விரு நேரங்களும் திக்ரு செய்ய மிகவும் உகந்தவை. “நீங்கள் அவனை காலையிலும், மாலையிலும் துதியுங்கள்” (அஹ்ஸாப் : 42).

தூங்கச் சென்றாலும் வுழூச்செய்து கொண்டும்[1] திக்ரு செய்து கொண்டும்

1. நபி (ஸல்) அவர்கள் பர்ராஃ பின் ஆஸிப் (ரலி) அவர்களுக்கு நீர் தூங்கச் சென்றால் தொழுகைக்கு வுழூச்

தூங்குவதே ஸுன்னாவாகும். நபி (ஸல்) அவர்கள் அலி (ரலி), பாத்திமா (ரலி) தம்பதிகளுக்கு கற்றுக் கொடுத்தது போன்று ஸுப்ஹானல்லாஹ் 33, அல்ஹம்துலில்லாஹ் 33, அல்லாஹு அக்பர் 34 என 100 தடவைகள் திக்ரு செய்வது சிறந்தது. சில குர்ஆன் வசனங்கள், திக்ருகள் உள்ளடக்கிய நபியவர்கள் காட்டித் தந்தவற்றை ஓதி விட்டுத் தூங்க வேண்டும். இரவில் விழித்து புரளும் போதும் அல்லாஹ்வை நினைவுகூர்தல் சிறந்தது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் இரவில் விழித்து வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. அவன் ஏகன்; அவனுக்கு நிகரானவர் இல்லை ஆட்சியும் அவனுக்குரியது. புகழும் அவனுக்குரியது. அவன் அனைத்தப் பொருட்களின் மீதும் ஆற்றலுள்ளவன். அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவன் தூயவன்; அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை. அவன் மிகப் பெரியவன். நன்மை செய்யும் ஆற்றலும் தீமையில் இருந்து விடுபடுவதும் அவனைக் கொண்டே இருக்கிறது என்று கூறிவிட்டு இறைவா! என்னை மன்னித்துவிடு என்றோ, வேறு பிரார்த்தனைகளையோ செய்தால் அவை அங்கீகரிக்கப்படும். வுழூச் செய்து தொழுதால் அத்தொழுகை ஒப்புக் கொள்ளப் படும்.[1]

நபியவர்கள் தூக்கத்தில் இருந்து எழுந்ததும் பின்வரும் துஆவை ஓதுவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் (உறக்கத்திலிருந்து) விழிக்கும் போது, 'அல்ஹம்து லில்லாஹில் லதீ அஹ்யானா பஃத மா அமாதனா வ இலைஹிந் நுஷூ ர் (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்து பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும், (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்ல வேண்டியுள்ளது.) என்று கூறுவார்கள்.[2]

செய்வதைப் போல் வுழூச் செய்து கொள் எனக் கூறினார்கள். (புஹாரி : 247, முஸ்லிம் : 2710) . நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இவ்வுடல்களை நீங்கள் தூய்மைப்படுத்திக் கொள்ளுங்கள். -அல்லாஹ் உங்களைத் தூய்மைப் படுத்துவானாக- ஏனெனில் எவர் இரவில் வுழூவுடன் தூங்குகிறாரோ அவரது விரிப்புக்கருகில் ஒரு வானவர் நின்று கொண்டு அவர் எப்பக்கம் புரளும் போதும் : இறைவா! உமது அடியானை நீ மன்னித்துவிடு. ஏனெனில் அவன் வுழூவுடன் தான் உறங்கினான் என சொல்லிக் கொண்டிருப்பார். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி) ஆதாரம் : தபரானியின் முஃஜமுல் அவ்ஸத் 5083). இமாம் முன்திரீ இதன் அறிவிப்பாளர் தொடர் நல்லதெனவும், அஷ்ஷேக் அல்பானி தனது ஸஹீஹுத் தர்கீபில் (595) ஹஸன் தரத்திலுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

1.அறிவிப்பவர் : உபாதத் பின் ஸாமித் (ரலி), ஆதாரம் : புஹாரி (1154).

2.அறிவிப்பவர் : அபூ தர் (ரலி), ஆதாரம் : புஹாரி (6325), முஸ்லிம் (2711).

பின்னர் வுழூச் செய்து தஹஜ்ஜுத் தொழும் போதும் அவற்றை நபியவர்கள் செய்த பிரகாரமே செய்ய வேண்டும். ஸஹர் வேளையில் பாவமன்னிப்புத் தேடுவோரை அல்லாஹ் புகழ்ந்திருப்பதால் தஹஜ்ஜுத் தொழுகையை இஸ்திஃபாருடன் முடிக்க வேண்டும். பஜ்ர் உதயமாகியதும் அதன் முன் ஸுன்னத் இரண்டு ரக்அத்கள் தொழுது விட்டு பஜ்ர் தொழ வேண்டும். பின்னர் சூரியன் உதயமாகும் வரை அல்லாஹ்வை நினைவுகூர்தல் வேண்டும்.

இது பற்றிக் கூறப்பட்ட ஒரு கவிதையின் தமிழ்ச் சுருக்கம் வருமாறு :

எனது ஒவ்வொரு உறக்கத்திலும் இறுதியாக நினைப்பது உன்னைத் தான். விழிக்கும் போதும் முதலில் நினைப்பதும் உன்னைத் தான்.

அல்லாஹ்விடம் சிறிய, பெரிய பாவங்கள் அனைத்தையும் விட்டு தவ்பாச் செய்து, மன்னிப்புக் கோருவது அவசியமாகும்.

“இன்னும் அவர்கள் மானக்கேடான ஒரு காரியத்தைச் செய்து விட்டாலோ அல்லது தங்களுக்குத் தாங்களே அநீதி இழைத்துக் கொண்டாலோ அல்லாஹ்வை நினைவுகூர்ந்து உடனே தங்களது பாவங்களுக்காக பாவ மன்னிப்புத் தேடுவார்கள்” (ஆல இம்ரான் : 135).

மேற்கூறியவற்றை பேணி நடப்பவரின் நாவு எந்நேரமும் அல்லாஹ்வை நினைவுகூர்வதிலேயே திளைத்திருக்கும்.

# உள்ளே.....

*01.* அணிந்துரை.....04
*02.* முன்னுரை.....10
*03.* இமாம் இப்னு ரஜப் (ரஹ்) அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்.....12
*04.* ஹதீஸ் *01 :* செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொருத்தே.....14
*05.* ஹதீஸ் *02 :* இஸ்லாம், ஈமான், இஹ்ஸான்.....25
*06.* ஹதீஸ் *03 :* இஸ்லாத்தின் தூண்கள்.....34
*07.* ஹதீஸ் *04 :* மனித படைப்பின் படித்தரமும் இறுதி முடிவும்.....37
*08.* ஹதீஸ் *05 :* நூதனம் பற்றிய எச்சரிக்கை.....44
*09.* ஹதீஸ் *06 :* ஹராமும் ஹலாலும்.....47
*10.* ஹதீஸ் *07 :* மார்க்கம் என்பது நலவு நாடுதல்.....56
*11.* ஹதீஸ் *08 :* ஒரு முஸ்லிமின் கண்ணியம்.....60
*12.* ஹதீஸ் *09 :* இலகுவை எடுத்து, சிரமத்தை விடுதல்.....64
*13.* ஹதீஸ் *10 :* ஹலாலான சம்பாத்தியம் அவசியமானது.....69
*14.* ஹதீஸ் *11 :* உறுதியை எடுத்து, சந்தேகத்தை விடுதல்.....76
*15.* ஹதீஸ் *12 :* பயனுள்ளவற்றில் ஈடுபடல்.....80
*16.* ஹதீஸ் *13 :* ஈமானிய சகோதரத்துவம்.....83
*17.* ஹதீஸ் *14 :* முஸ்லிமின் உயிர் கண்ணியமானது.....87
*18.* ஹதீஸ் *15 :* நல்ல வார்த்தை மற்றும் விருந்தாளி, அயலவரின் உரிமைகள்.....90
*19.* ஹதீஸ் *16 :* கோபப்படாதே! சுவனம் உண்டு.....101
*20.* ஹதீஸ் *17 :* உபகாரம் செய்தல்.....108
*21.* ஹதீஸ் *18 :* இறையச்சமும் நற்குணமும்.....111
*22.* ஹதீஸ் *19 :* அல்லாஹ்வின் உதவியும் பாதுகாப்பும்.....125

*23. ஹதீஸ் 20 :* வெட்கம் ஈமானின் ஒரு பகுதி...........................................................................*137*

*24. ஹதீஸ் 21 :* ஈமானும் தடம்புரளாமையும்...........................................................................*140*

*25. ஹதீஸ் 22 :* சுவனத்தின் பாதை...........................................................................*142*

*26. ஹதீஸ் 23 :* அனைத்து நற்காரியங்களும் தர்மமாகும்...........................................................................*149*

*27. ஹதீஸ் 24 :* அநியாயம் ஹராமாகும்...........................................................................*157*

*28. ஹதீஸ் 25 :* அல்லாஹ்வின் விசாலமான அருள்...........................................................................*171*

*29. ஹதீஸ் 26 :* மூட்டுக்களுக்கான தர்மம்...........................................................................*176*

*30. ஹதீஸ் 27 :* நன்மையும் தீமையும்...........................................................................*180*

*31. ஹதீஸ் 28 :* ஸுன்னாவைப் பற்றிப்பிடித்தல், பித்அத்தை தவிர்த்தல்....................*184*

*32. ஹதீஸ் 29 :* நன்மையின் வாயில்கள்...........................................................................*193*

*33. ஹதீஸ் 30 :* அல்லாஹ்வின் வரம்புகள்...........................................................................*199*

*34. ஹதீஸ் 31 :* உலகப் பற்றற்ற தன்மை...........................................................................*204*

*35. ஹதீஸ் 32 :* இஸ்லாத்தில் தீங்கில்லை...........................................................................*212*

*36. ஹதீஸ் 33 :* இஸ்லாத்தில் நீதித்துறை...........................................................................*214*

*37 ஹதீஸ் 34 :* தீமையைத் தடுத்தல்...........................................................................*218*

*38. ஹதீஸ் 35 :* இஸ்லாமிய சகோதரத்துவம்...........................................................................*224*

*39. ஹதீஸ் 36 :* ஒருங்கிணைந்த நலவுகள்...........................................................................*234*

*40. ஹதீஸ் 37 :* அல்லாஹ்வின் நீதம்...........................................................................*243*

*41. ஹதீஸ் 38 :* அல்லாஹ்வை நெருங்கும் வழிகள்...........................................................................*250*

*42. ஹதீஸ் 39 :* இஸ்லாத்தில் சிரமத்தை நீக்குதல்...........................................................................*256*

*43. ஹதீஸ் 40 :* மறுமைக்குத் தயாராகுதல்...........................................................................*259*

*44. ஹதீஸ் 41 :* அல்லாஹ்வின் சட்டங்களைப் பின்பற்றல்............................................*264*

*45. ஹதீஸ் 42 :* அல்லாஹ்வின் பாவமன்னிப்பு...........................................................................*268*

*46. ஹதீஸ் 43 :* வாரிசுரிமைச் சட்டம்...........................................................................*272*

*47. ஹதீஸ் 44 :* பால்குடி உறவு...........................................................................*273*

*48. ஹதீஸ் 45 :* தடை செய்யப்பட்ட பொருளீட்டல்...........................................................................*274*

*49. ஹதீஸ் 46 :* போதைப்பொருள் ஹராமாகும்.......*277*

*50. ஹதீஸ் 47 :* இஸ்லாத்தில் ஆரோக்கியம்.......*279*

*51. ஹதீஸ் 48 :* நயவஞ்சகனின் பண்புகள்.......*282*

*52. ஹதீஸ் 49 :* அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டல்.......*287*

*53. ஹதீஸ் 50 :* அல்லாஹ்வை நினைவுகூர்தல்.......*290*

*54.* தினமும் ஓத வேண்டிய திக்ருகள்.......*294*

*55.* உள்ளே.......*297*

# நபிவழியைப் பின்பற்றுவதன் மூலம் உமது நபிக்கு உதவிடுவீர்

## இந்நூல் பற்றி....

*கருத்துச் செறிவுள்ள இரத்தினச் சுருக்கமான வார்த்தைகளைக் கொண்ட நபிமொழிகளைத் தனியாக நூலுருப்படுத்துவது பழங்காலத்திலிருந்து காணப்படும் ஒரு முறையாகும். இமாம் இப்னுஸ் ஸலாஹ் (ரஹ்) அவர்கள் தொகுத்த 26 நபிமொழிகளை உள்ளடக்கிய "அல்அஹாதீஸுல் குல்லிய்யா" எனும் நூல் இவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. பின்னால் வந்த இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் மேலும் 16 நபிமொழிகளை இணைத்து 42 ஆக அதிகரித்து "அல்அர்பஊன பீ மபானில் இஸ்லாமி வகவாஇதில் அஹ்காம்" எனும் பெயரில் தொகுத்தார்கள். "அல்அர்பஊனந் நவவிய்யா" எனும் பெயரில் மக்கள் மத்தியில் பிரபலமடைந்த இந்நூலிற்கு எழுதப்பட்ட 100க்கு மேற்பட்ட விரிவுரைகளில் பெறுமதி வாய்ந்த நூலாக இமாம் இப்னு ரஜப் அல்ஹன்பலீ (ரஹ்) அவர்கள் எழுதிய "ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்" எனும் நூல் திகழ்கின்றது. அதில் மேலும் 8 நபிமொழிகள் இணைக்கப்பட்டு 50க ஆக்கப்பட்டுள்ளன. பெறுமதி மிக்க இந்நூலின் சுருக்கமே உங்கள் கைகளில் தவழும் இந்நூலாகும்.*

*அஷ்ஷேக் முஹம்மத் பின் ஸுலைமான் அல்முஹன்னா அவர்களால் சுருக்கப் பட்ட இந்நூலை அஷ்ஷேக் அப்துல் அஸீஸ் பின் மர்ஸூக் அத்தரீபீ அவர்கள் மீளாய்வு செய்து அணிந்துரை வழங்கியுள்ளார்கள். இந்நூலை ஆக்கியோர், மீளாய்வு செய்தோர், மொழிபெயர்த்தோர், வாசிப்போர் அனைவருக்கும் அருள்புரிவானாக!*